சித்தர்கள் முனிவர்கள் அருளிய

நம் நாட்டு வைத்தியம்



திருவள்ளுவர் அருள் வாக்கு

(1) மருத்துவ நூலோர் வாதம் பித்தம் சிலேத்துமம் என எண்ணிய மூன்று அளவிற்கு மிகுந்தாலும் குறைந்தாலும் நோய் உண்டாக்கும்.

(2) முன் உண்ட உணவு செரித்த தன்மையை ஆராய்ந்து போற்றிப் பிறகு தக்க அளவை உண்டால் உடம்பிற்கு மருந்து என ஒன்று வேண்டியதில்லை.

(3) முன் உண்ட உணவு செரித்து விட்டால் பின் வேண்டிய அளவு அறிந்து உண்ண வேண்டும் அதுவே உடம்பு பெற்றவன் அதை நெடுங்காலம் செலுத்தும் வழியாகும்.

(4) முன் உண்ட உணவை செரித்த தன்மையை அறிந்து மாறுபாடில்லாத உணவுகளைக் கடைப்பிடித்து அவற்றையும் நன்றாகப் பசித்த பிறகு உண்ண வேண்டும்.

(5) மாறுபாடில்லாத உணவை அளவு மீறாமல் குறித்து அளவோடு உண்டால் உயிர் உடம்பில் வாழ்வதற்கு இடையூறான நோய் இல்லை.

(6) குறைந்த அளவு இன்னதென்று அறிந்து உண்பவனிடத்தில் இன்பம் நிலை நிற்பது போல மிகப்பெரிதும் உண்பவனிடத்தில் நோய் நிற்கும்.

(7) பசித்தீயின் அளவின்படி அல்லாமல் அதை ஆராயாமல் மிகுதியாக உண்டால் அதனால் நோய்கள் அளவில்லாமல் ஏற்பட்டு விடும்.

(8) நோய் இன்னதென்று ஆராய்ந்து நோயின் காரணம் ஆராய்ந்து அதை தணிக்கும் வழியையும் ஆராய்ந்த உடலுக்குப் பொருந்தும் படியாகச் செய்ய வேண்டும்.

(9) மருத்துவ நூலைக் கற்றவன் நோயுற்றவனுடைய வயது முதலியவற்றையும் நோயின் அளவையும் காலத்தையும் ஆராய்ந்து செய்யவேண்டும்.

(10) நோயற்றவன் நோய் தீர்க்கும் மருத்துவன் மருந்தை அருகிருந்து கொடுப்பவன் என்று மருத்துவமுறை அந்த நான்கு வகை பாகுபாடு உடையது.

உ

கடவுள் துணை

நம் நாட்டு வைத்தியம்

அட்டவணை

முதற்பாகம்

நெ.	பொருள்	பக்கம்
1	திருமூலர் அருள் வாக்கு	
2	கற்ப உற்பத்தி	3
3	கருவளர்ச்சியில் பஞ்ச பூதம்	
4	கற்பகத்தில் பிண்ட நீலை	4
5	கற்பகாலக் கணக்கு	6
6	கருவில் அமையும் மூன்று தேகம்	6
7	ஒரு தேகத்தில் மூன்று தேகம்	6
8	எலும்புக்கூடும் அதன் விபரங்களும்	7
9	முதுகு எலும்பு	8
10	தசை நார்கள்	10
11	விபரம்	10
12	சரீரத்தை பாதுகாக்கும் சப்த தாதுகள்	15
13	திரிதோஷம்	15
14	மனித உடலில் 96 தத்துவ கருவிகள்	15
15	பொறிகள் 5ம் அதன் செயலும்	17
16	வாயுக்கள் பத்து	18
17	பிராண வாயுவின் லட்சணம் செய்கைகளும்	18
18	அபான வாயுவின் லட்ணமும் செய்கைகளும்	18
19	உதாண வாயுவின் லட்சணமும் செய்கைகளும்	19
20	சமான வாயுவின் லட்சணமும் செய்கைகளும்	19
21	வியான வாயுவின் லட்சணமும் செய்கைகளும்	19
22	கூர்மன் என்ற வாயுவின் நிறமும் செய்கைகளும்	20
23	நாகன் என்ற வாயுவின் நிறமும் செய்கைகளும்	20

நெ.	பொருள்	பக்கம்
24	கரிகரன் என்ற வாயுவின் நிறமும் செய்கைகளும்	20
25	தேவதத்தன் என்ற வாயுவின் நிறமும் செய்கைகளும்	21
26	தனஞ்சயன் என்ற வாயுவின் நிறமும் அதன் செய்கைகளும்	21
27	தசநாடியின் பெயர்	21
28	தசநாடிகளின் இருப்பிடம்	22
29	தசநாடிகளின் தொழில்	22
30	தேகத்தைச் சூழும் நாடிகள்	23
31	நரம்பு மண்டலம்	23
32	முள்ளந்தண்டு கொடி	24
33	சிரந்நரம்புக்கள்	24
34	முள்ளந்தண்டு நரம்புகள்	25
35	ஐக்கிய நரம்பு	25
36	நரம்பு மண்டலத்தில் மூளையின் தொழில்	25
37	சிறு நரம்புகளின் தொழில்	26
38	ஐக்கிய நரம்புகளின் தொழில்	26
39	சரீர அமைப்பு	27
40	தேகத்தில் எந்தெந்த இடத்தில் எத்தனை நாடி நரம்புகள் பரவியிருக்கிறது	27
41	மூன்று நாடிகள்	28
42	மூன்றின் இருப்பிடம்	28
43	தசவாயுவில் பிரதானம் மூன்று	28
44	வாத பித்த சிலேத்துமங்கள் நிலை	28
45	வாத பித்த சிலேத்துமங்கள் வியாபிக்கும் ஸ்தானங்கள்	29
46	மனிதர்களுக்கு இருக்க வேண்டிய மூன்று நாடியின் கிரம அளவுகள்	29
47	கைகளில் காணும் நாடி துடிப்பு எப்படி வந்தது	29
48	மூன்று நாடிகளின் தட்ப வெட்ப்ப நிலை	30
49	நாடி ஸ்தானங்கள்	30
50	கைநாடி	30
51	தொந்த நாடிகளின் கூறு	30
52	நாடிகள் ஒன்றோடொன்று இணையும் போது ஏற்படும் நோய்கள்	31
53	நாடிகள் ஒவ்வொன்றும் அதிகமாகும் போதுள்ள குறிகள்	32
54	நோய்களில் நாடிகள் நடக்கும் விதம்	33
55	அனுபவ நாடி	34

நெ.	பொருள்	பக்கம்
56	வாத நாடி	34
57	பித்த நாடி	36
58	நாடிகளின் சேர்க்கையால் உண்டாகும் ரோகங்களின் விவரம்	38
59	சிலேத்துமநாடி	39
60	வாதத்தின் குண்ங்கள்	40
61	பித்தத்தின் குணங்கள்	40
62	சிலேத்துமத்தின் குணங்கள்	41
63	மலப்பரீட்சை	41
64	சலப்பரீட்சை	41
65	நேத்திர பரீட்சை	42
66	நாக்கின் லட்சணம்	42
67	வைத்திய லட்சணம்	43
68	அசாத்திய குறிகள்	43
69	மரண லட்சணம்	44
70	அவஸ்தை பத்து	44
71	இன்னின்ன ரோகங்களில் இவைகள் சேருவதால் அசாந்தியம் என்பதை அறியவும்	44
72	சித்த மருந்துகளின் வயது (அயுள்)	53
73	மருந்து வகைகளின் ஆயுள் காலம்	53
74	புர மருந்துகள் 32ம்	54
75	புடமிடும் வரட்டியின் அளவு	54
76	புடங்களின் விபரம்	54
77	சுரம் சன்னி தோஷம் இவைகளை போக்கி குணம் செய்யும் சரக்குகள்	55
78	வாத நிவாரண சரக்குகள்	56
79	பித்த ரோக நிவாரண சரக்குகள்	56
80	சிலேத்தமரோக நிவாரணங்கள்	57
81	சரக்கின் சுத்தி முறைகள்	58
82	தீணிப்பை	61
83	மயில் துத்த பஸ்பம்	64
84	இடுமருந்து சோதனை	69
85	சிறுகுடல்	70
86	உஷ்ணபேதி	71
87	குடற்வாயு	75
88	ஹீல்டயோரியா	76
89	கீரிப்பூச்சி	78
90	மூத்திரப்பை	78
91	வெங்காரமாத்திரை	82
92	நமது உடம்பின் உறுப்புகள்	84
93	இருதயம்	84
94	வயதுக்கு ஏற்றபடி இரத்த அழுத்தங்கள் சாதாரணமாக இருக்க வேண்டிய கணக்கு	89

நெ.	பொருள்	பக்கம்
95	செம்பரத்தம் பூ சர்பத்	102
96	நரம்புத் தளர்ச்சி	104
97	பிராணாயமம்	111
98	கல்லீரல்	113
99	கல்லீரல் இரணம்	114
100	சிகிச்சை	114
101	பூநீர் உப்பு செய்யும் விதம்	121
102	குரு பஸ்பம்	123
103	முக்கிய கவனிப்பு	124
104	இந்துப்பு	125
105	தும்மட்டிக்காய் உப்பு செய்யும் விதம்	126
106	தாமரை உப்பு	126
107	கல் சுண்ணாம்பின் உப்பு	127
108	சோத்துப்பு பஸ்பம்	127
109	நவாச்சார உப்பு பதங்கள்	127
110	அன்னபேதி உப்பு	127
111	காடி நீர்	128
112	காடி நீர் செய்யும் விதம்	129
113	காடியால் தீரும் வியாதி	130
114	சோத்துப்புச் செந்தூரம்	130
115	கல்லீரலின் கருங்கல்	130
116	மண் ஈரல்	130
117	மருந்தின் விபரம்	134
118	பீளட்பிரஷர்	135
119	பட்டு கறுப்பு	140
120	தாம்பிர மெழுகு	140
121	சண்டமாருத செந்தூரம்	140
122	வேறுமுறை	141
123	மேல் பூசுமருந்து	141
124	சித்தாதிச்சூரணம்	141
125	வீரச்செந்தூரம்	142
126	ரசசெந்தூரம்	142
127	சண்டமாருதத்தில் பல மாறுதல்கள்	142
128	மேகநீர்	146
129	வெள்ளை வியாதி	147
130	வெட்டையை தடுத்து கொள்ள	147
131	ஆரம்ப வெள்ளை	147
132	எண்ணெய் செய்யும் விபரம்	148
133	கொருக்கு	149
134	அரையாப்பு	149
135	பித்தவாய்வு	150
136	மேவாய்வு	151
137	பாரிசவாய்வு	151
138	சூதக வாய்வு	152
139	கொப்பப்பை பிரளல்	153

நெ.	பொருள்	பக்கம்
140	பெரும்பாடு	154
141	கொப்பப்பை வீக்கம்	156
142	வெட்டை	156
143	வாத நோய்	156
144	சுரம் என்பது என்ன	157
145	இரசம்	159
146	கந்தகம்	160
147	தாளகம்	162
148	வெள்ளை பாஷாணம்	164
149	சங்கு பாஷாணம்	164
150	அப்பிரகம்	164
151	கௌரி பாஷாணம்	165
152	அயம் (இரும்பு)	166
153	மாஷிகம்	167
154	இலிங்கம்	167
155	வில்லை ரசச்செந் செந்தூரம்	168
156	வீரம்	168
157	பூரம்	168
158	மனோசீலை	168
159	மிருதார் சிங்கி	169
160	காந்தம்	169
161	மண்டூரம்	169
162	தங்கம்	169
163	வெள்ளி	170
164	வெள்ளிக்காடிக் காரம்	170
165	வெங்காரம்	170
166	சீனாகாரம் இதுவே கடிகாரம்	171
167	காவிக்கல் சுவர்ணக்காவி	172
168	நண்டுக்கல்	172
169	இருவி	172
170	நீர்விஷம்	173
171	நாபி	173
172	எட்டிக் கொட்டை	174
173	சேங்கொட்டை	174
174	நமது உடல் சில உண்மைகள்	175
175	நிலத்திலே உள்ளவை பயிரிலே ஏறி மனிதனுக்கு உதவுகின்றன உடலுக்கு வேண்டிய உப்புகள்	177

இரண்டாம் பாகம்

176	தீபாக்கினிசூரணம்	181
177	நிலாவாரைச் சூரணம்	181
178	பஞ்ச தீபாக்கினிச் சூரணம்	182
179	சிதோபலாதிச் சூரணம்	182
180	மும்மூர்த்தி சூரணம்	182
181	கடுக்காய் சூரணம்	183
182	ஆறுமுக சூரணம்	184
183	கட்டுவாதி சூரணம்	184

நெ.	பொருள்	பக்கம்
264	கஸ்தூரி மாத்திரை	228
265	மூசாம்பர மாத்திரை	228
266	நாபி மாத்திரை 1	229
267	நாபி மாத்திரை 2	229
268	எட்டிக் கொட்டை மாத்திரை	230
269	காஞ்சுரா மாத்திரை	230
270	வாதராஜக்குளிகை	231
271	காய மாத்திரை	232
272	சந்திரோதய மாத்திரை	232
273	பூர மாத்திரை	233
274	மாந்த மாத்திரை	233
275	சதுர்முக மாத்திரை	234
276	சர்மபடை மாத்திரை	234
277	சர்க்குண பேதி மாத்திரை	234
278	பேதி மாத்திரை	235
279	விஷ்ணு சக்கர மாத்திரை	235
280	ஆனந்த பைரவி மாத்திரை	236
281	வஜ்ஜிர கண்டி மாத்திரை	237
282	நவமூல நிர்மூல மாத்திரை	238
283	திரிலோக ரக்ஷாமணி	238
284	சஞ்சீவி மாத்திரை	239
285	அமூர்தாதி மாத்திரை	239
286	அஷ்டபயிரவ மாத்திரை	240
287	கபாட மாத்திரை	240
288	அர்த்த நாரீஸ்வர மாத்திரை	241
289	குழந்தைகளுக்கு கார மாத்திரை	241
290	குழந்தைகளுக்கு சளி மாத்திரை	242
291	வெள்ளை மாத்திரை	243
292	சாரவள்ளி மாத்திரை	243
293	சித்த மகரத்து ஜம் என்னும் சந்திரோதய மாத்திரை	243
294	நவமூலத்துக்கு மாத்திரை	244
295	மேகவாயு மாத்திரை	244
296	இரா மாத்திரை	245
297	சிரோரத்தின மாத்திரை 1	246
298	சிரோரத்தின மாத்திரை 2	246
299	பிராணயாம் மாத்திரை	247
300	காமகேசரி மாத்திரை	247
301	கெஜ கெம்பீர மாத்திரை	248
302	இந்திரியகட்டு மாத்திரை	248

நெ.	பொருள்	பக்கம்
303	தாது புஷ்டி மாத்திரை	249
304	தாது புஷ்டி சுவர்ண மாத்திரை	249
305	பஞ்சீகரண மாத்திரை	250
306	ஆமையோடு மாத்திரை	251
307	அதிமதுராதி மாத்திரை	252
308	மூத்துசிப்பி பற்பம்	253
309	முத்துசிற்பி பற்பம்	253
310	சிற்பி பற்பம்	254
311	நல் முத்துபற்பம்	254
312	கற்பூர சுண்ணம்	254
313	சங்கு பற்பம் 1	255
314	சங்கு பற்பம் 2	255
315	சங்கு பற்ப சுண்ணம்	256
316	ஆமையோட்டுப் பற்பம்	256
317	சர்வரோக சம்கார சங்கு சுண்ணம்	257
318	சங்கு கண்ணம்	257
319	ஆமையோட்டுப் பற்பம் சாப்பிட அனுபானமும் அதன் குணமும்	259
320	ஆமையோட்டு பற்பம்	259
321	சிங்கி பற்பம் 1	260
322	சிங்கி பற்பம் 2	260
323	சிங்கி பற்பம் 3	261
324	சிங்கி பற்பம் 4	261
325	சிங்கி பற்பம் 5	262
326	சிங்கி பற்பம் 6	263
327	கர்ப்பூர சிலாசத்து பற்பம்	263
328	வீரபற்பம்	263
329	சர்வசுத்திரசம்	263
330	நரசிம்மரசம்	264
331	இரசபற்பம்	264
332	இரசபற்பம் (வேறு முறை)	264
333	ஏமரசபற்பம்	265
334	பதிப்பிரிய பஸ்பம்	265
335	தங்கபஸ்பம்	266
336	தங்கபஸ்பம் (வேறு முறை)	266
337	பலகரை பற்பம் 1	266
338	பலகரை பற்பம் 2	267
339	பலகரை பற்பம் 3	268
340	பவள பற்பம்	268
341	வேறு முறை	268
342	பவள பற்பம்	269
343	பவளச் சுண்ணம்	269
344	பவழச் சுண்ணம்	270
345	பவள பற்பம்	270

நெ.	பொருள்	பக்கம்
346	கற்பூர சிலாசத்து சுண்ணம்	271
347	நண்டுக்கல் பற்பம்	271
348	வேறு முறை	271
349	அஞ்சணக்கல் பற்பம்	272
350	கல்மத பற்பம் 1	272
351	கல்மத பற்பம் 2	272
352	நாட்டுக்கல்நார் பற்பம்	273
353	சீமை கல்நார் பற்பம்	273
354	எருமை கொம்பு கல் நாற் பற்பம்	274
355	கற்பூர சிலாசத்து பற்பம்	274
356	வேறு முறை	275
357	கெருடகள் பற்பம்	275
358	வெடியுப்பு சுண்ணம்	276
359	துருசு பற்பம்	276
360	துருசு பற்பம்	276
361	யானைப்பல் பற்பம்	277
362	தாளக பற்பம்	277
363	தாளக பற்பம்	278
364	தங்கபஸ்பம்	278
365	வேறு முறை	278
366	தங்கபஸ்பம்	279
367	தங்கபஸ்பம்	279
368	வெள்ளிபஸ்பம்	280
369	வெள்ளைபாஷணா சுண்ணம்	280
370	உருக்கு பஸ்பம்	281
371	அயபஸ்பம்	281
372	கோமூத்திர சிலா சத்து பற்பம்	281
373	இளுப்பை அறப்பு பஸ்பம்	282
374	ஸ்வேத பற்பொடி பற்பம்	283
375	ரசபற்பம்	285
376	வீரபற்பம்	286
377	பூரபற்பம்	286
378	வெள்ளை பாஷாண பற்பம்	286
379	நவநீதபற்பம்	287
380	பஞ்ச சுண்ண பதங்கம்	287
381	பஞ்சமுகப்பிர்மாஸ்திரம் (செந்தூரம்)	288
382	பஞ்சமுகம் பிரமாஸ்ரத்துக்கு அனுபானங்கள்	289
383	சிவப்பதங்கம்	290
384	ரசபதங்கம்	291
385	ரசவீரபதங்கம்	291
386	பூரப்பதங்கம்	292
387	கௌரிபதங்கம்	292
388	காடிக்காரபதங்கம்	293
389	திருமூர்த்திபதங்கம்	294
390	இரச பதங்கம்	294
391	பூரக்கட்டு பற்பம்	295

நெ.	பொருள்	பக்கம்
392	காலாந்தகௌரி	295
393	சிந்தாமணிகுளிகை	296
394	கஸ்தூரி மெழுகு 1	299
395	கஸ்தூரி மெழுகு 2	300
396	கஸ்தூரி மெழுகு 3	300
397	கஸ்தூரி மெழுகு 4	301
398	குங்குமப்பூ மெழுகு	301
399	நந்திமெழுகு	302
400	வங்கரசச் செந்தூரம்	304
401	நாகபூபதி செந்தூரம்	305
402	பூரச் செந்தூரம்	306
403	வீரச் செந்தூரம்	307
404	அயமணி கலாப செந்தூரம்	307
405	உருக்கு செந்தூரம்	308
406	தங்க செந்தூரம	308
407	வெள்ளி செந்தூரம்	309
408	நாக செந்தூரம்	309
409	லிங்க செந்தூரம்	310
410	பலவகை லிங்க செந்தூரம்	310
411	சிவதாம்பிர செந்தூரம்	311
412	லிங்க செந்தூரம்	312
413	அன்னபேதி செந்தூரம்	312
414	கற்பூர அன்னபேதி செந்தூரம்	313
415	தாளக செந்தூரம்	314
416	திருமூர்த்தி செந்தூரம்	314
417	வல்லாதி செந்தூரம்	315
418	வீரபத்திர சிந்தாமணி செந்தூரம்	315
419	சுவர்ண செந்தூரம்	316
420	வீரவிக்கிரம ரசம்	316
421	படிகலிங்க செந்தூரம்	317
422	வெங்கார லிங்க செந்தூரம்	317
423	வெடியுப்பு அன்னபேதி செந்தூரம்	318
424	சதுர்முக செந்தூரம்	318
425	யூனானி செந்தூரம்	319
426	அன்னபேதி செந்தூரம்	319
427	சிங்கி செந்தூரம்	320
428	அயச் செந்தூரம்	320
429	அயக்கெந்தி செந்தூரம்	320
430	காடிக்கார செந்தூரம்	321
431	பஞ்சமுக செந்தூரம்	321
432	இரச செந்தூர்ம்	322
433	தாம்பர செந்தூரம்	322
434	வங்க செந்தூரம்	323
435	இராமபான செந்தூரம்	323
436	லிங்க செந்தூரம்	323
437	அஷ்டபைரவ செந்தூரம்	324
438	கரியுப்பு செந்தூரம்	324

நெ.	பொருள்	பக்கம்
439	மயிலத்துவஜ செந்தூரம்	324
440	துருசு செந்தூரம்	325
441	திரிலோச்சன செந்தூரம்	326
442	சுவாசகுடோரி செந்தூரம்	326
443	பாலசஞ்சீவி செந்தூரம்	327
444	மாதவச் செந்தூரம்	327
445	பசிதீபன செந்தூரம்	328
446	அயவீர செந்தூரம்	328
447	ஆறுமுகச் செந்தூரம்	329
448	கௌரி சிந்தாமணி செந்தூரம்	330
449	இரச செந்தூரம்	330
450	அயச் செந்தூரம்	331
451	கைலாச நாத செந்தூரம்	332
452	அயக்காந்த செந்தூரம்	332
453	சுவர்ண அப்ரேக செந்தூரம்	333
454	அப்ரேக செந்தூரம்	333
455	வீர செந்தூரம்	334
456	வீர செந்தூரம்	334
457	வீர செந்தூரம்	334
458	அயவீர செந்தூரம்	335
459	பூர்ண சந்திரோதய செந்தூரம்	335
460	பஞ்சமுக செந்தூரம்	336
461	இராஜ மண்டூர செந்தூரம்	336
462	இராச கருவங்க செந்தூரம்	336
463	நாக செந்தூரம்	337
464	பஞ்சாக்ஷரி செந்தூரம்	337
465	சட்ரச செந்தூரம்	338
466	கல்லுப்பு செந்தூரம்	338
467	தாளக செந்தூரம்	339
468	தாம்பிர செந்தூரம்	339
469	ரசவீரநாக செந்தூரம்	339
470	விஷம் தீர மாத்திரை	340
471	சித்திர மூல குலிகை	340
472	லிங்க செந்தூரம்	341
473	அபின் செந்தூரம்	342
474	சுவர்ண எஃகு செந்தூரம்	342
475	அயத்தங்க செந்தூரம்	343
476	மன்மதலோக செந்தூரம்	343
477	வீர செந்தூரம்	344
478	ரச செந்தூரம்	345
479	காந்தச் செந்தூரம்	346
480	மகாகாடிக்கார செந்தூரம்	346
481	சண்டமாருத செந்தூரம்	347
482	காந்த செந்தூரம்	347
483	சடாசர செந்தூரம்	347
484	நவகுன்மநவநீத செந்தூரம்	348

நெ.	பொருள்	பக்கம்
485	பஞ்சலவண மெழுகு	348
486	வீரமெழுகு	349
487	சர்பராஜமைன மெழுகு	349
488	இலிங்க மெழுகு	350
489	அய மெழுகு	351
490	கெந்தக மெழுகு	351
491	வேதாந்த குழம்பு	352
492	கௌசிகர் குழம்பு மை	353
493	கௌசிகர் குழம்புக்கு அனுபானம்	354
494	கனகரச கற்பூர மெழுகு	354
495	அகத்தியர் குழம்பு	355
496	கனகலிங்க கற்பூர மெழுகினால் தீரும் நோய்கள்	355
497	வான் மெழுகு என வழங்கி வரும் வான மெழுகு	356
498	ரச கெந்தி மெழுகு	357
499	மார்கண்டேயர் மெழுகு என்னும் அரக்குடோரி மெழுகு	358
500	வீர மெழுகு	359
501	திரிசூத மெழுகு	360
502	மேகநாதி மெழுகு	361
503	திரிவிக்கிரம மெழுகுமை	362
504	பஞ்சசூத மெழுகு	362
505	அக்கிரகார மெழுகு	363
506	இரச மெழுகு	364
507	கெந்தக மெழுகு	365
508	சார மெழுகு	365
509	மூசாம்பர மெழுகு	366
510	ஸ்ஞ்ஜியாமிர்த மெழுகு	367
511	மூசாம்பர மெழுகு	367
512	காய மெழுகு	368
513	சங்கு பாசாண மெழுகு	368
514	படிகார மெழுகு	369
515	லிங்க மெழுகு	369
516	பஞ்சபாண மெழுகு	370
517	கெந்தக மெழுகு	371
518	வாதமாருத மெழுகு	371
519	வாயுவுக்குலேகியம்	372
520	நெல்லிக்காய் லேகியம்	373
521	குளிர்ச்சி லேகியம் அல்லது பித்த வாயு லேகியம்	373
522	அஸ்வகெந்தி லேகியம்	374
523	தேத்தான் கொட்டை லேகியம்	374
524	கண்டங்கத்திரி லேகியம்	375
525	கண்டங்கத்திரி லேகியம்	375
526	பெருங்காய லேகியம்	376
527	சுகபேதி லேகியம்	377
528	தாதுபுஷ்டி லேகியம்	377

நெ.	பொருள்	பக்கம்
529	பெருங்காய லேகியம்	378
530	திரிதோஷ லேகியம்	378
531	திரிதோஷலேகியத்தின் குணம்	378
532	இத்திரிப்பால் லேகியம்	379
533	நரசிங்க லேகியம்	380
534	இஞ்சிகண்டங்கத்திரி லேகியம்	381
535	சிவசக்தி லேகியம்	382
536	பருத்திக் கொட்டை லேகியம்	383
537	சேங்கொட்டை லேகியம்	384
538	வில்வாதி லேகியம்	385
539	விரோசனத்திரிப லாதி லேகியம்	385
540	சன்மார்க்கி மதுபானம்	386
541	பல்லாதகிஜவாரிஷ்	387
542	பிரபலத் திரிபலாதி	388
543	சாம்பற் பூசனிகா லேகியம்	388
544	பூண்டு லேகியம்	389
545	சுகபேதி லேகியம்	390
546	கொழுஞ்சிபழ லேகியம்	390
547	எலுமிச்சப்பழ லேகியம்	390
548	தூதுபுஷ்டி லேகியம்	391
549	கபரோக லேகியம்	391
550	வல்லாரை லேகியம்	392
551	வெள்ளை தாமரை பூ லேகியம்	392
552	சுவாசகாசம் க்ஷயம் இருமல் முதலிய கப லேகியம்	393
553	வில்லாதி லேகியம்	393
554	புருஷரெத்தின லேகியம்	394
555	மதுமேக லேகியம்	394
556	லிங்க மாத்திரை	395
557	கொடி வேலிவேர் மாத்திரை	396
558	ஆகாச தாமரைத் தைலம்	396
559	அகத்திக் கீரை தைலம்	397
560	அறுகம் வேர் தைலம்	397
561	அரைக்கீரை விதை தைலம்	398
562	இஞ்சி தைலம்	398
563	கரசணாங்கண்ணி தைலம்	399
564	கீழ்வாய் நெல்லி தைலம்	399
565	குமரி எண்ணெய்	400
566	சவுரித் தைலம்	400
567	பிருங்காமலத் தைலம்	401
568	ஒருதலைவலிக்கு தைலம்	402
569	குமரி தைலம்	402

நெ.	பொருள்	பக்கம்
570	பொன்னாங்கன்னி தைலம்	403
571	பேயத்தி தைலம்	403
572	வெள்ளெருகு தைலம்	403
573	மிளகாய் தைலம்	404
574	சகாதேலித் தைலம்	404
575	நீர்முள்ளி எண்ணை	405
576	நீரடிமுத்து எண்ணெய்	405
577	நிலக்கடம்புத் தைலம்	406
578	குரூந்தொட்டு தைலம்	406
579	பினிசங்களுக்கு நெய்	406
580	சம்பீரத் தைலம்	407
581	சித்திரமூல நெய்	407
582	லவணகுணாதி எண்ணெய்	408
583	சிறுசந்தனாதி தைலம்	410
584	கபாலவலிக்குத்தைலம்	410
585	ஏகமூலித்தைலம்	411
586	பீனிசங்களுக்கு தைலம்	411
587	தலைவலி பிடரி வலிக்குத் தைலம்	411
588	கருஞ்செம்பைத் தைலம்	412
589	சொரி சிரங்கு புண்களுக்கு எண்ணை	412
590	கர்ணாசுரத் தைலம்	413
591	வேறுமுறை	413
592	வசந்தமாலதி தைலம்	413
593	குளிமை எண்ணை	415
594	பிரலி எண்ணெய்	415
595	முசுறு முட்டை தைலம	416
596	தலையிடிக்கு ஸ்தான தைலம்	416
597	வதனகாந்தி தைலம் முகப்பருவுக்கு	416
598	பிரம்மி ஹேர் ஆயில்	417
599	வேப்பம்பட்டைத் தைலம்	417
600	நீர் வெட்டிவேர் தைலம்	418
601	நீர் வெட்டித் தைலம் வேறுமுறை	418
602	வில்வவேர் தைலம்	419
603	சொரி சிரங்குத் தைலம்	419
604	பீநச நாச கணபதி தைலம்	419
605	காளித்தைலம்	420
606	சிரகத்தைலம்	420
607	புழுவெட்டுக்குத் தைலம்	420
608	புத்திரோற்பத்திக்கு எண்ணெய்	421
609	தலைவலிக்கு தைலம்	421

நெ.	பொருள்	பக்கம்
610	ஆனந்தசேகரித் தைலம்	422
611	வேம்பாடம் பட்டை எண்ணை	422
612	முகவாத சன்னிக்கு தைலம்	423
613	சன்னி எண்ணை	423
614	பிண்டத்தைலம்	424
615	மயணத்தைலம்	424
616	மயணத்தைலம் வேறுமுறை	425
617	பாஷாண அண்டத் தைலம்	426
618	நரம்பிசிவிற்கு லேபனத்தைலம்	426
619	சத்தி தைலம்	427
620	பச்சோந்தி தைலம்	427
621	ஓணான் தைலம்	428
622	அரனைவால் தைலம்	429
623	கருங்கோழி தைலம்	429
624	நவபாஷாணத் தைலம்	430
625	விரணசஞ்சீவி தைலம்	430
626	இரணத் தைலம்	431
627	நாரி கேளத்தைலம் அல்லது கொட்டாங் கச்சி தைலம்	431
628	அஞ்செண்ணை தைலம்	432
629	சித்தாதி எண்ணை	432
630	மார்க்கண்டன் நெய்	433
631	தேங்காய் நெய்	434
632	குரூசஞ்சீவி தைலம்	435
633	கருடன் கிழங்கு எண்ணை	435
634	சித்ர மூலநெய்	436
635	தூது வேளை கிருதம்	436
636	வல்லாரை கிருதம்	437
637	மேகராஜ எண்ணை	438
638	நரசிங்க எண்ணை	438
639	கரப்பான் எண்ணை	439
640	சந்திரா லேகியம்	440
641	நாரத்தை லேகியம்	440
642	மூலக்குடோரி	440
643	இருமலுக்கு லேகியம்	441
644	சித்தர் வல்லாரை லேகியம்	441
645	சுகபேதி லேகியம்	442
646	சுக்கு லேகியம்	442

நம் நாட்டு வைத்தியம் பொருளடக்கம் முற்றிற்று

உ

கணபதி துணை



நம் நாட்டு வைத்தியம்

திருமூலர் அருள் வாக்கு

"உடம்பினை முன்னம் இழுக்கென்றிருந்தேன்
உடம்பினுக்குள்ளே உறுபொருள் கண்டேன்
உடம்புளே உத்தமன் கோவில் கொண்டானென்று
உடம்பினையான் இருந்து ஓம்புகின்றேனே"

"உடம்பா ரழியின் உயிரா ரழிவர்
திடம்பட மெய்ஞானம் சேரவுமாட்டார்
உடம்பை வளர்க்கு முபாய மறிந்தே
உடம்பை வளர்த்தேன் உயிர்வளர்த்தேனே"

- திருமூலர் திருமந்திரம்

உயிர்த்தலைவன் துணை

அரு உருவாய் ரூபமுமாய் அடங்காத
பொருளாகி அடங்களாகி
அரு உருவாய் அண்ட பகிரண்டத்தும்
அகத்துமாகி புறத்துமாகி
ஓர் உருவாய் ஈயிர்க்குயிராய் உயிரில்
நிறைந்து இயங்கி நிற்கும் ஒப்பிலானே
கரு உருவாய் நம்நாட்டு வைத்தியத்தை
வழுத்தவும் நீ காப்பு செய்வாய்.

கற்ப உற்பத்தி

காப்பான சிவமுடனே சக்திகூடி-கருவான
வாய்வு இயங்கித் தனை யெழுப்பி
தாப்பான அனல்கூடி விளைந்து பொங்கிச்
சம்போக வேளையிலே சாடும் விந்து
நேர்ப்பான அருகுநுனி பனிபோல் வீழ்ந்து
நிறைந்தோங்கி உதானனங்கே காவலாகி
கோப்பாகத் தசமாதம் வரையில் நின்று
குவலயத்தில் வீழ்ந்தாற்போல் வீழுந்தானே

கற்ப உற்பத்தி

பெண்கள் பூப்பு ஆனது முதல் கருதரிப்பதற்கு தகுதி பெறுகிறார்கள்.

மாதா மாதம் வீட்டுக்கு விலக்காகும் நாள் முதல் பதினாறு தினங்கள் வரையில் கருக்குழிமொக்கு மலர்ந்திருக்கும். வீட்டுக்கு விலக்காகும் தினத்திலிருந்து நான்கு தினங்கள் வரை அசுத்த நாட்கள்ளாகும். அந்த நாட்களில் உடல் சேர்க்கை ஏற்பட்டால் தோஷத்தை உண்டாக்கும். எனவே அந்த நாட்களை நீக்கி 12-நாட்களைக் கருதரிக்கும் நாட்களாக கணித்துள்ளார்கள்.

இந்த காலத்தில் சேர்கை ஏற்படும்போது ஆணின் சுக்கிலமானது: வாயு. தேயுக்களின் இயக்கத்தினால், வெளியாகி கருக்குழி-வாயில் சென்றதும் சுரோணிதத்துடன் சம்மந்தப்பட்டு இரண்டும் கலந்து கருக்குழியின் உள்ளே சென்றதும், கருமலர் வாய் குவிந்து. கரு வளர்ச்சி அடையத் துணை புரிகிறது.

கரு வளர்ச்சியில் பஞ்சபூதம்

கரு உள்ளே சென்றது முதல் வாயுவானது:- உருவற்றக் கருவை தாது வேறாகவும். தோஷம் வேறாகவும் பிரிக்கும்.

தேயுவானது :- வாயுவினால் பிரிக்கப்பட்ட தாது. தோஷங்களை உருவாக்க செயல்படும்.

அப்பானது :- வாயுவினால் பிரிக்கப்பட்ட தாது தோஷங்களையும். வாயுதேயுவின் கூட்டுறவால் ஏற்பட்ட அதி உஷ்ணத்தையும் தணிக்கும் பொருட்டு ஈரத்தால் காக்கும்.

பிரிதிவி எனும் பூதம் :- அப்பு பூதத்தால் கலக்கப்பட்ட தாது. தோஷங்களுக்கு அந்த ஈரத்தால் கெடுதி வராமல் பாதுகாக்கும்.

ஆகாயமானது : - உருவாக்கப்பட்டு வளர்க்கப்பட்டு வரும் பிண்டத்தை நாளாவட்டத்தில் பெருத்து வளர இடங்கொடுக்கும்.

உதானன் என்ற வாயு : - உணவின் ரச சத்துக்களை அந்தந்த தாது ஸ்தானங்களுக்குச் சேர்ப்பித்து பிண்டம் வளர பாதுகாக்கும்.

கர்பத்தில் பிண்ட நிலை

கரு உதித்த மாதக் கடைசியில் பிண்டமானது புறாவின் முட்டை அளவு இருக்கும்.

இரண்டாம் மாதக் கருவானது :- சிறிது நீளமாக இருக்கும் என்றாலும் உருவம் ஒன்றும் தோன்றாது நெஞ்சின் மேல் எலும்பும், தாடை எலும்பும் ஏற்பட்டிருக்கும் சிரசானது உடலைவிடப் பெரியதாயிருக்கும்.

மூன்றாம் மாதம் பிண்டமானது :- ஒரு சுண்டெலியின் பருமனாகவும், சுமார் 6 தோலா எடையுள்ளதாகவும் கைகளிலும் கால்களிலும் விரல்கள் தோன்றும், ஆண் பெண் குறிகள் தோன்றிவிடும். ஆனால் மலத்துவாரமும் வாயும் திறக்கப்படாமல் இருக்கும், இம்மாத முடிவுக்குள் பிண்டத்துக்கு, கல்லீரல் நுரையீரல் மண்ணீரல் இரைப்பை குடல் முதலியவைகள் உற்பத்தியாகிவிடும் காதுகளும் மூக்கும் தோன்றும் இருதய கோசத்தின் அறைகள் திறக்கப்பட்டு இரத்த ஓட்டமும் ஏற்பட்டுவிடும். கர்ப்பத்தில் பிண்டம் புரளுவது தாய்க்கு நன்றாகத் தெரியும். இப்போது பிண்டத்தின் நீளம் சுமார் 4 முதல் 5 அங்குலம் இருக்கும். நான்காவது மாதம் பிண்டமானது:- ஒரு எலியின் அளவாகப் பெருத்துவிடும் ஆண் பெண் குறிகளின் வித்தியாசங்கள் தெளிவாக இருக்கும் மலத்துவாரமும் வாயும் சுத்தமாகத் திறக்கப்பட்டுவிடும் கை, கால் விரல்களில் நகங்கள் தோன்றும், பித்தப்பை உண்டாகி மேற்குடலில் மலம் இருக்கும் பிண்டம் சதை பிடித்து வளர்ந்து நிறமாக இருக்கும், தலையில்

ரோமம் காணப்படும் பிண்டம் சுமார் 6 அங்குல நீளமுள்ளதாக இருக்கும்.

ஐந்தாவது மாதம்:- சிசுவிற்கு தலை மயிரும் நகமும் நன்றாகத் தெரியும் இருதயம் மூத்திரக்காய் பெரிதாகயிருக்கும் தலையும் பெரிதாகி உடலுக்குத் தகுந்தாற்போல் அமைந்துவிடும் இம்மாதக் கடைசியில் சிசுவின் அங்கங்கள் யாவும் பூரணமாக வளர்ந்து விடும்.

ஆறாம் மாதத்தில் :- சிசுவிற்கு, கண்கள், இமைகள் தெரியும், ஆனால் புருவத்தின் சமீபம் ஒட்டிக் கொண்டிருக்கும் கால் விரல்கள் சிவந்து பெரிதாக இருக்கும் பீஜங்கள் குண்டிக்காய்க்குச் சமீபமிருக்கும் சிசுவின் பேரில் மாவு போன்ற வழுவழுப்பான ஒரு பொருள் படிந்திருக்கும் இம்மாதக் கடைசியில் சிசு இரண்டு இராத்தல் எடையுள்ளதாக யிருக்கும்.

ஏழாம் மாதத்தில் :- தலையின் மூளை அழுத்தமாகிவிடும் கண் இமைகள் திறந்து கொள்ளும், மூத்திரக் காய்கள் கெட்டியாகும் பீஜம் கீழே இறங்கி இருக்கும். எலும்புகள் வலுப்பெற்றுவிடும் இம்மாதக் கடைசியில் சிசு மூன்று இராத்தல் எடையுள்ளதாக இருக்கும்.

எட்டாம் மாதம் :- சிசுவின் தலையிலுள்ள மூளை வலுவடைந்து அதில் சிவப்பு நிறமான நரம்புகள் இரேகை போல் காணப்படும் உடல் சிவந்து மயிர் துவாரங்களும் அதன் குருத்துக்களும் நுண்ணிதமாகத் தெரியும். உடல் முழுவதும் மாவு அதிகமாக படிந்திருக்கும் பீஜங்கள் இன்னும் சற்று கீழே இறங்கும் அப்போது சிசு 15 அல்லது 16 அங்குல நீளத்துடன் நான்கு இராத்தல் எடையுள்ளதாக இருக்கும்.

ஒன்பதாம் மாதம் :- 'சிசு பூரண அமைப்பை அடைந்து விடுகிறது. கருப்பத்திலுள்ள பிண்டம் பெண் சிசுவைவிட ஆண் சிசுவினுடைய பீஜங்கள் எட்டாம் மாதத்தில் இருந்த இடத்திலிருந்து மெதுவாகக் கீழே இறங்கி, பீஜக் கொடித் துவாரங்கள் வழியாக வந்து அண்டப்பையில் சேர்ந்துவிடும்.

பெண் சிசுவானால் குறிகள் தெளிவாகத் திறந்து யோனி உள் உதடுக்ளை மேல் உதடுகள் மூடிக்கொண்டிருக்கும் இக்காலத்தில் சிசுவின் எடை 6 1/2 முதல் 6 3/4 இராத்தில் இருக்கும்.

பத்தாம் மாதம் :- இதன் ஆரம்பத்திலோ அல்லது மாத நடுவிலோ பிரசவம் ஏற்படும். இம் மாத ஆரம்பத்தில் சிசு ஏறக்குறைய 22 அங்குல நீள முள்ளதாகவும் ஏழரை ராத்தல் எடையுள்ளதாகவும் இருக்கும் இம்மாதத்தில் பிரசவவலி ஏற்பட்டுத் தாய் சுகமாகக் குழந்தையைப் பிரசவித்து விடுகிறாள்.

கற்பகாலக் கணக்கு

கற்பகாலம் அநேகமாக இருநூற்றி எண்பது நாட்களேயாகும் அதாவது ஒன்பது மாதமும் பத்து நாட்களுமாம் இதை சூல் கொண்ட பெண் கடைசியாகத் தீட்டான கடைசி நாள் முதல் கணக்கிட வேண்டும்.

கருவில் அமையும் மூன்று தேகம்

சுக்கில சுரோணிதம்—ஒன்றாகச் சேரும்போது வாதம், பித்தம், ஐய்யம் என்ற இந்த மூன்றில் ஒன்று எது அதிகமாக சுக்கில சுரோணிதத்தில் கலந்து விடுகிறதோ அதுவே கருவினுள் அமைந்து விடுகிறது அந்த வளரும் சிசுவிற்குப் பற்றியதுதான் வயதுவந்த பருவத்தில் வாத தேகம், பித்த தேகம், சிலேத்தும தேகம் என்று பெயர் வகுக்கப்படுகிறது.

ஒரு தேகத்தில் மூன்று தேகம்

தூல தேகம் என்பது ஏழு தாதுக்களை ஆதாரமாகக் கொண்டு பிண்டத்தத்தும் என்ற நிலையில் இருக்கும் சூடசமத்தேகம் என்பது பத்து வாயுக்களையும் பத்து ஜீவநாடிகளையும் ஆதாரமாகக் கொண்டு சராசரி நாடிகளையும் ஆதாரமாகக் கொண்டு சராசரி தத்துவ நிலையில் விளங்கும்.

காரண தேகம் :- ஐந்து பூதங்களை ஆதாரமாகக் கொண்டு அண்டதத்துவ நிலையில் விளங்கும்.

வெங்காயமானது எப்படி தோல்களைப் போர்த்தி கொண்டிருக்கிறதோ அது போலவே நம் தேகத்தை தூல சூட்சம காரண தேகங்கள் போர்த்தப்பட்டு விளங்குகிறது.

எலும்புக்கூடும் அதன் விபரங்களும்

உடலைதாங்கிநிற்பது எலும்புக்கூடு. இந்த எலும்புக்கூடு அனேக சிறிது பெரிதான துண்டு எலும்புக்களால் சேர்க்கப்பட்டிருக்கும்.

இந்த எலும்புக் கோர்வைக்கே கங்கானம் என்று பெயர். இவைகள் வெண்மையாகவும் உறுதியான சவ்வினால் மூடப்பட்டதாகவும். அதிக உறுதியைக் கொடுக்கும் சுண்ணாம்புச் சத்தும் ஒருவித பசையுள்ளதாகவும். மெதுவுள்ளதாயும் நடுவயது வரை வளரும் தன்மையுடையதாகவும் முதுமையில் எளிதில் முறிக்கத்தக்க வயிரமுள்ளதாகவும் இருக்கும்.

மண்டை எலும்புகள், காரை எலும்புகள் இரு பக்கத்து விலா எலும்புகள், புய எலும்புகள், ஆணி எலும்புகள், முதுகு எலும்பு அல்லது முள்ளந்தண்டு கூபகமும் குயில் மூக்கு எலும்பு துடை எலும்புகள் முழங்கால் எலும்புகள், பாத எலும்புகள் இவைகள் யாவும் கங்கானத்தில் முறையாக அமைக்கப் பட்டிருப்பதால். அவயவங்கள் அந்தத்தயிடங்களில் நிலைத்து இருப்பது மேலே காணப்படும் எலும்புக் கூட்டாலேதான் ஆகவே இந்த எலும்புக்கூடு இல்லாவிட்டால் மனித உடல் எவ்வித உருவுமின்றி ஒரே மாமிசப் பிண்டமாக இருக்கும்.

முதுகு எலும்பு அல்லது முள்ளந்தண்டில் 26 எலும்புகளும். மார்பிலும் மார்புக்கூட்டில் 25 எலும்புகளும், தோல்-மேல் கை முன் கை இவைகளில் (இரண்டு பக்கமும் சேர்ந்து) 64 எலும்புகளும். துடை-முழங்கால்-கால் பாதம் (இரண்டிலும்) இவைகளில் 62 எலும்புகளும், மண்டையில் 8-ம்

முகத்தில் 14 எலும்புகளுமாக மொத்த எலும்புகள் 199. எலும்புக் கூட்டில் தூலமாக அமைந்திருக்கிறது.

முதுகு எலும்பு

இது ஒரே எலும்பு போல காணப்பட்டாலும் 26 துண்டு எலும்புகளால் சேர்க்கப்பட்டிருக்கிறது.

இத் துண்டுகளுக்கே முள்ளெலும்பு என்று பெயர் ஒவ்வொரு முள்ளெலும்பும் மற்றொன்றைப் போல் இருப்பினும் அவைகளில் சில மாறுபாடுகள் உண்டு.

ஒரு தனிப்பட்ட முள்ளெலும்பைப் பார்த்தால் ஒருபுறம் வட்டமாகவும் பின்புறத்தில் மூன்று கிளைகளுமாக இருக்கும்.

வேறு ஒரு தனிப்பட்ட முள்ளெலும்பை பார்த்தால் ஒருபுறம் வட்டமாகவும் பின்புறத்தில் மூன்று கிளைகளும் இருக்கும்.

வளைவாக இருக்கும் பக்கம் முள்ளெலும்புக்கூடு பின்புறம் கிளைகளுக்குள் ஒன்று நேராக நீட்டியிருக்கும்.

இதற்கு முள்ளெலும்பு நடுமுனை என்றும், மற்ற இருபக்கத்திலுள்ள எலும்புக் கிளைகளுக்கு பக்கமுனைகள் என்று பெயர்.

இந்த முள்ளெலும்புகள் ஒன்றின் மீது ஒன்றாக அமைந்து ஒருநீண்ட குழல் கொண்ட முதுகுத் தண்டாகிறது.

முதுகுத்தண்டின் குழல்வழியாகத் தண்டுவடம் அல்லது முதுகு நடு நரம்பு செல்லுகிறது.

மேலே இருக்கும் முள்ளெலும்புகள் சிறியனவாக இருக்கும்.

கீழே இறங்க இறங்க அவை சற்று பருத்துக் கொண்டே வந்து அடி நுனியில் ஒன்றோடொன்று சேர்ந்து அதாவது ஐந்து

முள்ளெலும்புகள் சேர்ந்து ஒரு முக்கோண எலும்பு அல்லது குயில் மூக்கு எலும்பாகிறது.

இந்த எலும்புதான் தலையும் முண்டமும் சேர்ந்த பாகத்தை இரு கால்களின் மேல் தலைப்பில் இருக்கும் இடுப்பு என்ற பாகத்தில் காணப்படும் கூபகத்தில் இணைந்து நிற்கிறது.

இந்த முள்ளெலும்புகள் ஒவ்வொன்றிற்கும் இடையில் தக்கை போன்ற சவ்வு இருக்கிறது.

உடம்பு வளைந்து வேலை செய்யும்போது முதுகுத் தண்டின் மேற்கோடியிலுள்ள இரண்டு முள்ளெலும்புகளும் ஒன்று ஆணி போலவும் மற்றொன்று அதன் அரைபோலவும் (போல்ட் & நட்) அமைந்திருக்கிறது.

இவ்வாறு அமைக்கப்பட்டிருப்பதால் தான் எப்பக்கமும் வளைந்து கொடுக்கும் தன்மையைப் பெற்றிருக்கிறது.

முள்ளெலும்புகள் ஒவ்வொன்றிற்கும் இடையில் தக்கை போன்ற சதை இருக்கிறது.

ஒவ்வொரு முள் எலும்பும் மற்றொன்றோடு நடுவில் உள்ள தக்கைச் சதையும் சேர்ந்து இடம் பெயர்ந்து சீர் குலைந்து விடாமல் இருப்பதற்கு வெள்ளை நிறமான தசையால் கட்டப்பட்டிருக்கிறது.

மேலே சொல்லியிருக்கும் ஆணி எலும்பும் சுரை எலும்பும் சேர்ந்து பிடரி அச்சாகவும் பிடரி வளையமாகவும் அமைந்திருக்கிறது.

முள்ளெலும்பிற்கு பிடரி அச்சு பிடரி வளையம் என்று பெயர்.

இந்த இரண்டு எலும்புகளும் தலையைத் தாங்குகின்றன.

ஆணி அச்சு அமைப்பால் தலையை எப்பாகத்திலும் அசைப்பதற்கும் திருப்புவதற்கும் முடிகிறது.

இவ்விதம் அமைந்த எலும்புக் கூட்டின் வேலை தசை. ஊண். கொழுப்பு. நரம்பு. இரத்தம் இவைகள் ஒன்றோடொன்று பிணைந்து நிற்கவும் பிறர்பார்வைக்கு நல்ல தோற்றமாகக் காணப்படுவதற்கும் மேலே மிக்க அழகான தோல் கொண்டு மூடப்பட்டிருக்கும் இதற்கே மனித உடல் என்று பெயர் கூறப்பட்டு வருகிறது.

தசை நார்கள்

இந்தத் தசை நார்களே உடம்பிலுள்ள எலும்பு ரத்தக் குழாய்கள். தசைகள். பொருத்துக்கள் இவைகளை ஒன்றோடொன்று பிணைக்கின்றன. ஆகவே. எலும்பு முறிந்தாலும் தசைகள் வெட்டுப்பட்டாலும் இரத்தக் குழாய்கள் அறுபட்டாலும் ஏற்படும் ஆபத்தைவிட தசைநார்கள் அறுந்து போவதனால் ஏற்படும் ஆபத்து அதிகம்.

இத்தசை நார்களின் மொத்த எண்ணிக்கை தொள்ளாயிரம் இவைகள். கால் கைகளுள் 600-ம் உடம்பில் 230-ம் கழுத்திற்குமேல் 70-மாக வியாபித்திருக்கின்றன.

விபரம்

கால் கைகளில்:- ஒவ்வொரு காலிலும் விரல் ஒன்றுக்கு 6 வீதம் 30. குதிக்கால் உள்ளங்கால் கணுக்கால் இவைகளில் 30. முழங்கால் மூட்டு 10 தொடை 40. தொடை இடுக்கு 10 ஆகக் கால் ஒன்றுக்கு 150 வீதம் இரண்டு கால்களுக்கு 300. இரண்டு கைகளுக்கும் 300 ஆக தசை நார்கள் 600.

உடம்பில் :- இடுப்பு 60 முதுகு 80 விலாப் பக்கங்கள் 60 மார்பு 30 ஆக 230.

கழுத்திற்கு மேல்:- கழுத்து 26. தலை 34. ஆக 70 இந்த முக்கூறுகளும் சேர்ந்த தசை நார்கள் மொத்தம் 900.

1. மேலே கூறப்பட்ட தசை நார்கள் நான்கு இவை கால் கைகளில் பொருந்துகளிலும் உள்ளவை.

2. திரண்டு உருண்டையானவை இவை தொடையிலிருந்து கால் விரலின் நகம்வரையில் கால் ஒன்றிற்கு இரண்டு வீதம் இரண்டு கால்களிலும் நான்கு தோளிலிருந்து கை விரலின் நகம் வரையில் கை ஒவ்வொன்றிலும் இரண்டு வீதம் கைகளில் நான்கும். தலையிலிருந்து கழுத்து இருதயம் வழியாகக் குறிவரையில் நான்கும். மார்பிலிருந்து முதுகு வழியாய் பின்புறம் வரையில் நான்கும் ஆக பதினாறு உள்ளன.

3. ஒட்டையுள்ளன தொலையுள்ள தசை நார்கள் வயிற்றின் முடிவினும் குடல்களின் முடிவிலும் மூத்திரப்பையிலும் இருக்கின்றன.

4. பெருந்தனை :- இவை விலாபக்கத்திலிலும். மார்பிலும். தலையிலும் இருக்கின்றன.

உடம்பில் ஓடும் இரத்தக் குழாய்கள் இவைகளின் மொத்த எண்ணிக்கை 100. இவை நாபியிலிருந்து முதலில் நாற்பது பெரிய குழாய்களாகப் பிரிந்து கிளம்புகின்றன. அவை ஒவ்வொன்றிலும் இரத்தம் வாதம் பித்தம் கபம் இந்த நான்கும் சேர்ந்தே செல்லுகின்றன ஆனால் இவைகளுள் பத்தில் வாதம் அதிகமாகவும் பத்தில் பித்தம் அதிகமாகவும் பத்தில் கபம் அதிகமாகவும் மீதமுள்ள பத்தில் இரத்தம் அதிகமாகவும் செல்லுகின்றன. இந்த நால்வகை நாளங்களும் நால்வகை வர்ணங்களாக இருப்பதால் வித்தியாசம் எளிதில் கண்டுக்கொள்ளலாம். வாதக் குழாய்கள் அருணோதயகால சூரியன் வர்ணமாயும் வாயு நிறைந்துமிருக்கும் பித்தக் குழாய்கள் உஷ்ணமாயும் நீல நிறமாயும் இருக்கும் கபக் குழாய்கள் சீதமாயும். வெண்மை கலந்த மஞ்சள் நிறமாகவும் இருக்கும். இரத்தக்குழாய்கள் நல்ல சிவப்பாய் இருக்கும்.

நாபியிலிருந்து கிளம்பிய பிறகு ஒவ்வொரு பத்து நாடிகளும் 175 நாடிகளாய்ப் பிரிந்து உடல் முழுவதும் வியாபிக்கின்றன. இந்த 175ல். கால் கைகளில் 100 ம். உடம்பில் 34ம். கழுத்துக்கு மேல் 41 மாக பரவியுள்ளன.

ஆகையால் ஒவ்வொரு அங்கத்திலும் நான்கு விதக் குழாய்களும் சமமான எண்ணிக்கையுள்ளவைகளாகவே செல்லுகின்றன இதில் பித்தக் கிளைகளில் ஒரு விசேஷமுண்டு கழுத்துக்குமேல் செல்லுகின்ற பித்தநாடிகள் கண்களில் 8ம். காதுகளில் இரண்டும் செல்லுகின்றன. மற்றவை கண்களில் 8ம். காதுகளில் 4ம் செல்லுகின்றன இவற்றிற்குக் காரணம் கண்களில் ஒளி பித்தத்தின் சக்தியால் ஏற்படுகிறது என்பதேயாகும். இந்த 200 நாடிகளில் கத்திபடகூடாதவை 98. இவற்றுள் கால் கைகளில் 16ம். உடலில் 32ம். கழுத்துக்கு மேல் 50ம் இருக்கின்றன.

நரம்புகள் :- 200 இவைகளையே தொழில் நரம்புகள் என்று சொல்லுகிறோம். இவைகளும் நாபியிலிருந்து 24 மூல நரம்புகளாகக் கிளம்பி பத்து மேல் நோக்கியும் மற்றுமுள்ள நான்கு குறுக்காவும் செல்லுகின்றன. மேலே செல்லும் 10 நரம்புகளும் இருதயத்திற்குச் சென்றதும் ஒவ்வொன்றும் மூன்றாய்ப் பிரிந்து முப்பது ஆகின்றன.

இந்த 30 கிளைகளுள் சத்தம். கத்தம். ரூபம். ரசம் கெந்தகம் இவைகளை எடுத்துச் சென்று அவைகளை அறியும் பொறிகளுக்கு உதவிசெய்கின்றன. 12. கிளைகள் மூச்சு விடுதல். மூச்சு உள்ளிழுத்தல். பேசுதல். கத்துதல். தூக்கம் விழித்தல். கொட்டாவி விடுதல். தும்மல். சிரித்தல் கண்ணீர்விடுதல் பெண்களுக்கு பால் சுரத்தல். ஆண்களுக்கு சுக்கிலம் சுரத்தல் முதலிய வேலைகளைச் செய்கின்றன. மற்றுமுள்ள 10 கிளைகள் தொப்புள்களுக்கு மேலே உள்ள இடங்களில் வாதம். பித்தம். கபம். இரத்தம். இரசம். இவைகளை அதனதன் மார்க்கங்களில் செல்லும்படி செய்கின்றன.

கீழே செல்லும் 10 நரம்புகள் வயிற்றிற்கும் குடலுக்கும் இடையே ஒவ்வொன்றும் மூன்றாகப் பிரிந்து 30 ஆகின்றன. இவைபித்தாசயத்தை அடையும் போது அங்குள்ள அன்னபான ரசத்தை நன்றாகப் பக்குவம் செய்து இரசத்தை அதன் இடத்திற்கு அனுப்புகின்றன. மேலே சொல்லப்பட்ட 30 பிரிவுகளில்

2-பிரிவுகள் அங்குள்ள திரவமான கழிவுப்பொருள்களை மூத்திராசயத்திற்கு செலுத்துகின்றன 2 பிரிவுகள் சுக்கிலத்தை சேர்க்கின்றன 2 பிரிவுகள் சுக்கிலத்தை வெளிப்படுத்துகின்றன. இவ்விதம் வேலை செய்யும் 1 பிரிவுகள் போக மிகுதியுள்ள 18 பிரிவுகளுள் 8 பிரிவுகள் குறுக்கே செல்லும் 4 மூல நரம்புகளிடத்தில் வியர்வையைச் சேர்ப்பிக்கின்றன. மற்ற 10 பிரிவுகளுள் வாதம். பித்தம். கபம். இரத்தம். ரசம் ஆகியவற்றை தொப்புளுக்கு கீழே உள்ள பாகங்களின் மார்க்கங்களில் செல்லுகின்றன.

குறுக்காகச் செல்லும் 4 மூல நரம்புகள் ஒவ்வொன்றும் நூற்றுக் கணக்காவும் ஆயிரக்கணக்காகவும் பிரிந்து உடலில் வியாபிக்கின்றன. அவற்றின் நுனிகள் மயிர்க்காம்புகளோடு இணைக்கப்பட்டு இருக்கின்றன. அவைகள் உடலின் உள்ளும் புறமும் ரசம் பரவுவதற்கு உதவுகின்றன. முக்கியமாய் உடலிலி ருந்து வியர்வையை வெளிப்படுத்துகின்றன. இவைகளின் உதவியினாலேயே உடம்பின் மேலே தேய்க்கப்படும் எண்ணெய் முதலிய பசையுள்ள பொருள்கள் உடம்பிற்குள் செல்லுகின்றன. பரிச உணர்ச்சியை எடுத்து செல்பவையும் இவையே.

மேலே கண்டவைகள் நீங்கலாக மிக்க சூக்கமமான நரம்புள்-12 இவைகள் சாதனையுடையயோகிகளுக்கே வசமாகக் கூடியவை. இவற்றின் விபரங்கள் யோக நூற்களில் சொல்லப்பட்டிருக்கின்றன.

கால்வாய்கள் :- இதனை சுதோதஸ் என்று சொல்வதுண்டு இவை நமதுஉடலிலுள்ள இரசம். இரத்தம் மாமிசம் மேதஸ் எலும்பு முதலிய தாதுக்கள் ஒன்று மற்றொன்றாய் மாறும்போது அவற்றை எடுத்து செல்லும் கால்வாய்கள் உடம்பில் நாடிகள். நரம்புகள் தவிர மற்றக் குழாய்கள் யாவும் சுரோதஸ் என்றே கொள்ளலாம்.இவைகளுள் பதின்மூன்று வகையுண்டு :- 1. பிராணவாயுவை எடுத்து செல்வது: 2. உடலுக்கு வேண்டியநீரை எடுத்துச் செல்வது: 3. ஆகாரத்தை எடுத்துச் செல்லுவது: 4. ஆகார இரசத்தை எடுத்துச் செல்லுவது: 5. இரத்தத்தை எடுத்து

செல்வது: 6. மாமிசத்திற்கும். கொழுப்பிற்கும் இடையிலுள்ள குழாய்: 7. கொழுப்பிற்கும் எலும்புக்கும் இடையிலுள்ள குழாய்: 8. எலும்பிற்கும் மஞ்சைக்கும் இடையிலுள்ள குழாய்: 9. மஞ்சைக்கும் சுக்கிலத்திற்கும் இடையிலுள்ளது: 10. சுக்கிலத்தை எடுத்துச் செல்வது: 11. மூத்திரத்தை எடுத்துச் செல்லுவது: 12. மலத்தை எடுத்துச் செல்வது: 13. வியர்வையை எடுத்துச் செல்லுவது.

குறிப்பு:- ஆணகளுக்கு சுக்கிலத்தை எடுத்துச் செல்லும் குழாயே பெண்களுக்கு நாதாசயத்திலிருந்து சுரோணிதத்தைக் கொண்டு போகும் குழாய் நாதவாகி என்ற நரம்பு.

வாதம். பித்தம். கபம் என்ற இம்மூன்றும் இவைகள் எல்லாவற்றிலும் வியாபித்திருக்கின்றன.

மேலே சொல்லப்பட்ட கால்வாய்களில் சில திரண்டும் பெருத்தும் சில மிக மெலிந்தும் சில நீண்டும் அகன்றும் இருக்கின்றன. இவைகளின் நிறம் எந்தெந்தக் குழாய் எதை எதை எடுத்துச் செல்லுகிறதோ அத் தாதுவின் நிறமாகவே இருக்கும்.

உடலில் பஞ்ச பூதமும் அதன் செயலும்

இந்த உடலானது மண்-நீர்-நெருப்பு-காற்றுவெளி- என்ற ஐந்து பூதங்களால் அமைக்கப்பட்டிருக்கிறது. அதில் முதல் அங்கமான பிருதிவி (மண்) யானது எலும்பு மாமிசம்-தோல்-மயிர்-நாடி முதலியவைகள் அமைக்கப் பட்டிருக்கிறது.

இரண்டாவது கூறான அப்பு- (நீர்) உதிரம் பச்சை-சுக்கிலம்-நீர்-மூளை முதலியவைகளால் அமைக்கப் பட்டிருக்கிறது.

மூன்றாவதான தேயு (நெருப்பு) அகங்காரம் சோம்பல். புணர்ச்சி. பயம். நித்திரை முதலியவைகளின் தொழில்களாக அமைக்கப்பட்டிருக்கிறது.

நான்காவது:- வாயு (காற்று) ஓடல் இருத்தல் நடத்தல்-கிடத்தல்-நின்றல் முதலியவைகள் தொழில்களாக அமைந்துள்ளது.

ஐந்தாவது:- ஆகாயம்-வெளி-காமம் குரோதம். லோபம். மோகம். மதம் முதலியவற்றை நடத்தும் தன்மைகளாக இவ்வுடலில் அமைந்து செயல்பட்டு வருகிறது.

சரீரத்தைப் பாதுகாக்கும் சப்த தாதுக்கள்

இரசம். இரத்தம். மாமிசம். அஸ்தி. சுக்கிலம். மச்சை. மேதை ஆகிய ஏழு தாதுக்களை கருவியாகக் கொண்டு நம் சரீரம் விளங்குகின்றது.

இந்த தாதுக்கள் அதன் அதன் தொழிலைச் செய்து சரீரத்திற்கு தீங்கு நேராமல் உயிரை பாதுகாக்கும் கவசமாக அமைக்கப்பட்டிருக்கிறது.உண்ணும் உணவில் உள்ள சத்துக்களை பஞ்ச பூதங்கள் கவர்ந்து முதன் முதலாக ரச தாதுவில் ஏற்றும் இரண்டாம் நாள் உண்ட உணவின் சத்து ரச தாதுவில் ஏற. முன் ஊறிநின்ற உணவின் சத்து இரத்த தாதுவில் ஏறும். இவ்விதமே மூன்றாம் நாள் மாமிச தாதுவிலும். நான்காம் நாள் மேதோ தாதுவிலும் ஐந்தாம் நாள் அஸ்தி தாதுவிலும். ஆறாம் நாள் மச்ச தாதுவிலும். ஏழாம் நாள் சுக்கில தாதுவிலும் சென்று ஒவ்வொன்றையும் பலப்படுத்தி எட்டாம் நாள் தேகத்துக்கு குன்றாத வலிமையும் வனப்பையும் உண்டாக்கி பாதுகாக்கும் செயல் புரிகிறது.

இத்தகைய செயல்கள் எல்லாம் பஞ்சபூதங்களே முன் நின்று நடத்துகின்றன.

திரிதோஷம்

சரீரமானது சப்த தாதுக்காளல் ஆக்கப்பட்டதாக இருந்தாலும் இவை பெரும்பாலும் பிருதிவி என்னும் பூதத்தால் ஆக்கப்பட்டது.

இது மந்த குணமும் அசையாத தன்மையும் கனதியுமாக இருப்பதால் இதனை இயங்கவைக்க வேறு மூன்று பூதங்கள் தேவைப்படுகிறது. அது எப்படி என்றால்?

அப்பு என்ற பூதம் :- உண்ணும் உணவில் உண்டான சத்தில் உள்ள கபத்தை இரையாகக் கொண்டு தாதுக்களை போஷிக்கிறது.

தேயு என்ற பூதம் :- பித்தத்தை இரையாகக் கொண்டு தாதுக்களை போஷிக்கின்றது.

வாயு என்ற பூதம் :- வாதத்தை இரையாகக் கொண்டு தாதுக்களை போஷிக்கின்றது.

இந்த மூன்று பூதங்களின் குணங்கள் திரிதோஷம் என்னும். கப. பித்த. வாதம் என்பதாகும்.

இவை மூன்றும் சரீரத்தின் மிக முக்கிய மூன்று வித சக்திகளாக விளங்குகின்றது.

நல் ஒழுக்கத்தை மீறியும். சுகாதார விதிக்கு புறம்பாகவும் நடந்தால். சரீரத்திற்கு வேண்டப்படாத கப. பித்த வாதம் முதலி யவைகள் அளவுக்கு மீறி சரீரத்தின் உள்ளே சென்று இந்த மூன்றுவித சக்திகளில் ஒன்றோ அல்லது இரண்டோ அல்லது மூன்றுமோ போராடி அன்னியமான மிகுதியை வெளிப்படுத்த முயலுகின்றது.

இந்த போராட்டத்தில் எது பலவீனப்பட்டிருக்கிறதோ அதை வெளிப்படுத்தியும் மிகுந்து பலமடைந்திருந்தால் சப்த தாதுக்களின் தொழிலை. மாறுபடச் செய்கின்றது.

தேகத்தில் வாத. பித்த கபங்கள் இருக்க வேண்டிய கிரம அளவுகள் மிகுந்தும் குறைந்தும் போகும் தருணத்தில் உண்டாகும் குணங்களின் செயலே வியாதி எனப்படுகிறது.

உடலில் உண்டாகும் வியாதியின் காரணத்தை கொண்டு தான் இது வாத நோய் இது பித்த நோய் இது கப நோய் என்று நிர்ணயிக்கப்படும்.

வியாதியில் காணுகின்ற குணம் குறிகளையும் அதனால் உண்டாக்கப்பட்ட உடல் சீர்கேட்டையும் கொண்டு இது சுரம். அசீரணம். அதிசாரம். காசம். சுவாசம். சயம். குன்மம். மகோதரம். மற்றுமுள்ள ரோகங்களையும் தோலைப்பற்றிய நோய்களையும் நிச்சயிக்கப்படுகிறது.

மனித உடலில் 96 - தத்துவ கருவிகள்

பூதம் 5. பொறி 5. கன்மேந்திரியம் 5. ஞானேந்திரியம் 5. கரணம் 4. அறிவு 1. நாடி 10. வாயு 10. ஆசயம் 5. கோசம் 5. ஆதாரம் 6. மண்டலம் 8. தோஷம் 3. ஈசனை 3. குணங்கள் 3. வினை 2. விவகாரம் 8. அவத்தை 5. ஆக தத்துவம் தொண்ணூற்று ஆறாக அமைந்து உடல் சகல காரியங்களையும் செய்ய ஆதாரமாக இருக்கின்றன.

தத்துவம் 96-ல் பூதம் ஐந்தைப்பற்றி ஆரம்பத்தில் தெளிவாக விளக்கம் செய்யப்பட்டிருக்கிறது. இனி நமக்கு அவசியமான பொறி - 5. வாயு -10. நாடி - 10 ஆராய்வோம்.

பொறிகள் 5ம் அதன் செயலும் :

1. சுரோத்திரம் என்பது செவி
2. தொக்கு என்பது உடம்பு
3. சட்சு என்பது கண்கள்
4. சிங்குவை என்பது நாக்கு
5. ஆக்கிராணம் என்பது மூக்கு

இந்த பொறிகள் 5-ம் ஞானேந்திரியத்தின் காரியங்களாகிய சப்தத்தைக் காதால் கேட்பதும் ஸ்பரிசத்தை உடம்பால் உணர்வதும். ரூபத்தைக் கண்களால் பார்ப்பதும். இரசம் என்ற சுவையை நாக்கால் அறிவதும். கந்தம் என்ற வாசனையை மூக்கால் முகருவதுமான ஐம்பெருங் காரியங்களை உடலில் நடத்திக் கொண்டிருக்கிறது.

வாயுகள் பத்து இதில்

பிரதான வாயு 5	உப வாயுக்கள் 5
1. பிராணன்	6. நாகன்
2. அபானன்	7. கூர்மன்
3. உதானன்	8. கிரிகரன்
4. சமானன்	9. தேவதத்தன்
5. வியானன்	10. தனஞ்செயன்

பிராணன் என்ற வாயுவானது லலாட மத்தியிலே தோன்றி சித்திர நாடியில் விழுந்து மூலாதாரத்தில் ஓம் என்று உதித்து நாபிசக்கரத்திலே ரீம் என்று முட்டி இடகலை. பிங்கலைகளிலே ஓடி கபாலத்தைச் சுற்றி நாசியின் வழியாகப் புறப்பட்டு நான்கு விரற்கடைப் பிரமாணம் கழித்து எட்டு விரற்கடைப் பிரமாணம் மீண்டும் உள்சென்று பழைய இடத்திலேயே தங்குகின்றது.

பிராண வாயுவின் லட்சணமும் செய்கைகளும்

பிராண வாயு நீல வர்ணமாய் இருக்கும். நெஞ்சிலிருந்து கட்டை விரல் முடியும் வரை சஞ்சாரம் செய்யும் மயிர்கால்கள் தோறும் சஞ்சரிப்பதுடன் உள் மூச்சுக்கும். வெளி மூச்சுக்கும் ஆதாரமானது. தினமொன்றுக்கு 21600. சுவாசங்கள் வீதம் தேகத்தில் சென்று வியாபிக்க செய்யும். உண்ட உணவை சீரணிக்கச் செய்யும் இருதயம். புத்தி. மனது. இந்திரியங்கள் இவைகளுக்கு வலிமையைத் தரும்.

அபான வாயுவின் இலட்சணமும் செய்கைகளும்

அபான வாயுவின் நிறம் பச்சையாகும். கீழ் நோக்கி குதத்தையும். குய்யத்தையும் இருப்பிடமாக கொண்டது. மலம். சிறுநீர் முதலியவைகளை வெளிப்படுத்தும். ஆசனத்தை சுறுக்கும் மலத்தை சேர்க்கும் பின்புறம். மூத்திரப்பை. துடை. குறிகள் இவைகளில் சஞ்சரிக்கும் விந்து. கற்பம் முதலியவைகளை வெளிப்படுத்தும்.

உதான வாயுவின் லட்சணமும் செய்கைகளும்

உதான வாயுவின் நிறம் மண்ணின் நிறத்தை யொத்தது. இருதயத்தை இருப்பிடமாகக் கொண்டது. பசி தீபனத்தை எழுப்பி சீரணிக்க செய்வது. மூக்கு முதல் : தொப்புள் வரை சஞ்சரிக்கும் பேச்சு. முயற்சி காந்தி பலவர்ணம் (தேக நிறம்) ஞாபக சக்தி இவைகளை அளிக்க வல்லது. மற்றும் தும்மல். இருமல் கனவு முதலியவைகளுக்கு காரணமானது மேல் நோக்கிய போக்குடன். தும்மல். இருமல். ஏப்பம் முதலியவற்றை கட்டுப்படவும் செய்தல். மேலும் மேல் எழும்பச்செய்தல். தூக்குவிக்கும் வன்மை. நின்றல். அன்ன ரசத்தை அந்தந்த தாது ஸ்தானங்களுக்குச் சேர்த்தல் முதலியவைகளை உதான வாயு செய்யக் கூடியதாகும்.

சமான வாயுவின் இலட்சணமும் செய்கைகளும்

சமான வாயு நீல நிறத்தையுடையது. அது வயிற்றையே (நாபி) இருப்பிடமாகக் கொண்டது. சாப்பிட்ட ஆகாரத்தி லிருந்து ஏற்படும் ரச தாதுவை மயிர் கால்கள் தோறும் சேர்க்கும் தன்மை பெற்றது. மற்றும் வாயுக்களை அளவிற்கு மேல் அதிகப்படாமல் சமப்படுத்தி உட்கொள்ளும். ஆகாராதிகளில் உள்ள சகல குற்றங்களையும் நீக்கி சக்தியை உடம்பில் பரவ உதராக்கினியை எழுப்பி ஆகாரத்தின் சத்தை தேகமெங்கும் வியாபிக்கச் செய்து உடலைப் பாதுகாக்கிறது. இதன் இருப்பிடம் ஜடராக்கினிக்குச் சமீபம் குடலில் எப்போதும் சஞ்சரிக்கும் சாப்பிடும் ஆகாரத்தை ஏற்று பக்குவம் செய்து சத்தை தாதுக்களுக்கு ஏற்றி பாக்கியை வெளியே தள்ளுகிறது.

வியான வாயுவின் இலட்சணமும் செய்கைகளும்

வியான வாயு பசுவின் பால் நிறமுள்ளது. சரீரத்தில் ஏற்படும் எந்த அசைவுக்கும் முக்கிய காரணமானது. உடலில் இருக்கும் எல்லா துவாரங்களிலும் மூட்டுகளிலும் இருந்துக் கொண்டு உடலை நீட்டல் முடக்கி கொள்ளுதல் முதலான செய்கைகளையும் தோலின் நின்று ஸ்பரிசங்களை அறிவிக்கும்

தன்மையும் உண்ட ஆகாரங்களை உட்செலுத்தக் கூடிய தன்மையையும் உண்ணும் ஆகாரத்தை திப்பி வேறு ரசம் வேறாகச் செய்து கொண்டிருக்கும் சரீரத்தில் சர்வ பாகத்திலும் வியாபித்து ஸ்பரிசத்தைக் கிரகிக்கச் செய்யும் இருதயத்தை இருப்பிடமாக கொண்டது.

குறிப்பு :- மேற் கூறப்பட்ட பிராணன், அபானன், உதானன், சமானன், வியானன் என்ற இந்த வாயுக்கள் ஐந்தும் தேகத்தில் இருப்பதால்தான் ஒருவன் ஜீவித்திருக்க முடிகிறது. தச வாயுக்களில் பிரதானமான வாயுக்கள் ஐந்தும் கூறப்பட்டது. இனி கூறப்படுவது உபவாயுக்கள் - 5.

நாகன் என்ற வாயுவின் நிறமும் செய்கைகளும்

நாகன் என்ற வாயுவின் நிறம், தங்க நிறமாகும். ரோமக்கால் தோறும் தங்கி அசைவை அளிக்கிறது. சகல கலைகளை உணரவும், கண் விழிக்கவும், பார்க்கவும், ரோமம் சிலிர்க்கவும், கொட்டாவி விடவும் விக்கல் முதலியவைகள் செயல்படுகிறது.

கூர்மன் என்ற வாயுவின் நிறமும் செய்கைகளும்

கூர்மனின் நிறம் வெள்ளையாகும். இது வயிற்றில் வியாபித்து இவ்வுடலை சுமக்கச் செய்கிறது. உடம்புக்கு பலத்தையும் புஷ்டியையும் அளிக்க வல்லது. மனத்திடமாக நின்று கொட்டாவி, விக்கல், வாய் மூடல், சிரித்தல், கண்களை விழித்தல் மூடல் ஆகியவற்றைச் செய்கிறது.

கிரிகரன் என்ற வாயுவின் நிறமும் செய்கைகளும்

கிரிகரன் என்ற வாயுவின் நிறம் கருப்பு. புருவத்தின் மத்தியைப் பற்றி நின்று நீட்டல், முடக்கல், கோபித்தல் அழுகையை உண்டுபண்ணல் மூக்கு நாக்கு முதலிய உறுப்புகளில் நின்று கசிவுத் தொழிலைச் செய்வதுடன் தும்மல்

இருமல் முதலியவைகளை உண்டாக்கி பசியைத் தெரிவிக்கும். தன்ம நெறிகளைப் போதிக்கும் நடமாடும் சக்தியையும் அளிக்கிறது.

தேவதத்தன் என்ற வாயுவின் நிறமும் செய்கைகளும்

தேவதத்தன் நிறம் ஸ்படிக நிறமாகும். குதம் குய்யம் முதல் தொண்டை வரை சஞ்சரிக்கும் உடம்பை எழுப்புவிக்கும் பசியைத் தூண்டும் சோம்பலைப் போக்கும். கோபத்தை உண்டாக்கும். விழித்திருக்கையில் ஓடுதல், உலாவுதல், யுத்தம் செய்தல், சிரித்தல், மனமுடைதல் முதலியவைகளைச் செய்யும்.

தனஞ்செயன் என்ற வாயுவின் நிறமும் அதன் செய்கைகளும்

தனஞ்செயன் என்ற வாயுவின் நிறம் நீல நிறமாகும். இதன் செய்கை காதில் சமுத்திர கோஷம் போன்ற சத்தத்தை உண்டாக்கும். இது மரணம் சமீபித்துவிட்டது என்று கூறும் எச்சரிக்கையாகும். மந்திர கோஷம் போலவும் காதில் சப்தம் உண்டாகும். நாசி முதல் தேக மெங்கும் ஓடி வீங்கச் செய்யும். உடலை விட்டுப் பிராணன் சென்ற பின் மற்ற வாயுக்கள் உடலை விட்டுச் சென்றாலும் தான் மட்டும் பிரியாமல் 3 நாள் வரை உடலில் நின்று வீங்கச் செய்து விரிதல் அழுகுதல் செய்து தலை வெடித்து பின் உடலை விட்டு நீங்கும்.

குறிப்பு:- மேற் கூறப்பட்ட தச வாயுக்களில் செய்கைகளும் லட்சணமும் நிறங்களும் சித்த வைத்திய நூலான வைத்திய சதகத்திலிருந்தும் ஆயுர் வேத நூலான அஷ்டாங்க ஹ்ருதய நூலையும் தழுவி எழுதப்பட்டது.

தச நாடிகளின் பெயர்

இடகலை, பிங்கலை, சுழிமுனை, புருடன், காந்தாரி, அத்தி அலம்புடை, சங்கினி, குரு வைரவம் ஆக 10 நாடிகள்.

தச நாடிகளின் இருப்பிடம்

இடது நாசிப்புழை வரை - இடை - கலை

வலது நாசிப்புழை வரை - பிங்கலை

இவ்விரண்டிற்கும் மத்தியில் - சுழிமுனை

வலது கண்ணில் - புருடன்

இடது கண்ணில் - காந்தாரி

வலது காதில் - அத்தி

இடது காதில் - அலம்புடை

குய்யத்தில் - சங்கினி

குய்யத்தில் - குரு

நாபியில் - வைரவ நாடி மேற்கண்ட இந்நாடிகளே தேகத்தை சூழ்ந்திருக்கின்றன.

தச நாடிகளின் தொழில்

இடைகலை:- வலது கால் பெரு விரலிலிருந்து கத்தரிக்கோல் மாறலாக இடது நாசியைப் பற்றி நிற்பது.

பிங்கலை :- இடதுகால் பெரு விரலினின்று கத்தரிக்கோல் மாறலாகி வலது நாசியில் நிற்கும்.

சுழிமுனை:- மூலாதாரந் தொட்ங்கி எல்லா நாடிகளுக்கும் ஆதாரமாய் நடு நாடியாய்ச் சிரசளவு ஆஞ்ஞர் சக்கரம் வரை முட்டி நிற்கும்.

சிங்குவை:- மூலாதாரம் தொடங்கி உண்ணாக்கிலே நின்று. சோறு. தண்ணீர் முதலியவைகளை விழுங்கப் பண்ணுவது.

புருடன்:- மூலாதாரத்தைத் தொடங்கி இடது கண் வரை சென்று பார்வையைத் தருவது.

காந்தாரி:- மூலாதாரத்தைத் தொடங்கி இடது கண் வரை நின்று பார்வையை தருவது.

அஸ்தி:- (அசனை) மூலாதாரத்திலிருந்து வலது காது வரை நிற்கும்.

அலம்புடை:- மூலாதாரந் தொடங்கி இடது காதளவு நிற்பது.

சங்கினி:- மூலாதரத்திலிருந்து குறியின் அளவு நிற்கும் கொடி போல் சுற்றி கொண்டிருக்கும்.

குரு:- மூலாதாரத்திலிருந்து அபானத்தின் அளவில் நிற்கும்.

அகஸ்திய வல்லாதி 600 செய்யுள் 45-47.

தேகத்தைச் சூழும் நாடிகள்

தொப்புளுக்குக் கீழே மூலாதாரத்திலிருக்கும் ஓங்கார வடிவிலிருந்து. 72000 நாடிகள் தேகமெங்கும் வியாபிக்கின்றன. அவற்றுள் தச நாடிகள் அடங்கும். தச நாடிகளுக்குள்ளும் 7 நாடிகளை நீக்கி இடைகலை. பிங்கலை. சுழிமுனை என்ற மூன்று நாடிகளே மிக முக்கியம் என்று பெரியவர்கள் முடிவு எடுத்திருக்கிறார்கள்.

உந்தியிலிருந்து புறப்படும் நாடிகள். தாமரைத் தண்டில் காணப்படும் நூல் போல் மெல்லியதாக இருந்து கீழும் மேலும் வியாபிக்கும்.

நரம்பு மண்டலம்

மூளை, துணை மூளை. சிர நரம்புகள். முள்ளந்தண்டுக் கொடி முள்ளந்தண்டு நரம்புகள். ஐக்கிய நரம்புகள் என்பவை நரம்பு மண்டலமாகும்.

இவைகளில் மூளை என்பது தலை ஓட்டுக்குள்ளிருக்கும் அறைகள் நிறைந்த குழைவான உறுப்பாகும். இது வெண்மை நிறமுடையதாய் இதன் வெளிப்படை நரை நிற முள்ளதாய் நெற்றிக்கு நேரே பிடரி வரைக்கும் வலம் இடமாய் இரண்டு சமபாகங்களாகப் பிரிக்கப்பட்டு இருக்கிறது. துணை மூளை என்பது மூளையில் அரைக்கால் பங்கு கொண்ட அளவில் தலையின் பக்கத்தில் கீழ்ப் பிடரியைப்பற்றி பந்து வடிவமாய் இருக்கிறது. இந்த துணை மூளையில் நரை நிறப்பாகம் அதிகமாயும், வெண் நிறப்பாகம் குறைவாயும் இருக்கிறது. இவற்றில் நரை நிறப்பாகமானது வெண்நிறப்பாகத்திற்கு ஊடாக மரம் கொம்பு விட்டுப் படர்ந்தது போல் தோன்றும். மூன்று சவ்வுகள், மூளையை சுற்றிக் கொண்டிருக்கிறது இவற்றில் வெளிச்சவ்வு மிகத் தடிப்பும் வன்மை குறைவும் உள்ளது. இடைச் சவ்வு மின மெல்லியதாயும் உரு ஒளி உள்ளதாயும் இருக்கின்றது. உட்சவ்வோ மிக்க நுன்னிய இரத்தக் குழல்களால் பின்னப்பட்ட வலைக்கு ஒப்பாக இருக்கின்றது.

முள்ளந்தண்டுக் கொடி

இது மூளையைப் போல் வெண்மை நிறமாக ஒரு வஸ்துவாக இருக்கிறது. இதற்கு உறைவாக ஒரு சவ்வு சுற்றிக் கொண்டிருக்கிற்து. இக் கொடி விரற் பருமன் உள்ளதாய் மூளையிலிருந்து முள்ளந்தண்டிற்கு ஓடுவதாய் இருக்கிறது. இக் கொடியின் மேல் தலைப்பு குமிழ் வடிவமாக இருக்கும்.

சிர நரம்புகள்

இவை மூளையிலும், முள்ளந்தண்டுக் கொடியிலும், தொடுத்துச் செல்லுகின்றது. இது பலமான சிறிய வெள்ளைக் கொடிகளாக இருக்கிறது. இவைகள் உடலின் எப்பகுதிகளுக்கும் கொப்புக் கொப்பாக கூந்தல் போல் விட்டு செல்லுகிறது. இவைகளில் அடி மூளையிலே சேர்ந்திருக்கும் நரம்புகள் அந்த மூளையிலிருந்து கிளம்பி பன்னிரண்டு சோடுகளாகப் பிரிந்து

முகத்தின் எப்பகுதிகளுக்கும் செல்லும் அதாவது காது, கண், நாக்கு, மூக்கு இவைகளுக்கு சென்று இவைகளின் தொழிலுக்கு ஆதாரமாக இருக்கின்றது.

முள்ளந்தண்டு நரம்புகள்

முள்ளந்தண்டுகள் இருக்கும் கொடியிலிருந்து கிளம்பி முப்பத்திரண்டு சோடுகளாகப் பிரியும். இவை ஒவ்வொன்றிற்கும் இரண்டு மூலங்கள் உண்டு. இவைகளில் முன் மூலம் இயக்கத்தையும் பின் மூலம் உணர்ச்சியையும் கொடுக்க வல்லது. இவைகளில் கிளை நரம்புகளில் இவ்விரண்டு மூலங்கள் இருப்பதால் உடல் எங்கும் உணர்ச்சியையும் அசைவையும் உண்டாக்குகின்றது.

ஐக்கிய நரம்புகள்

இந்நரம்பு உடல் ஆதியந்தமும் ஓடி முள்ளந்தண்டை அணைந்து இடுப்பிலும் இரைப்பைக்குப் பின்னும், அடிக்கழுத்திலும் இருக்கிறது. இதை இன்னும் விவரிப்போமானால் இந் நரம்பு முள்ளந்தண்டிற்கு வலமிடமாகவும் முள்ளெலும்புக்கு இடையிலும் திரட்சி திரட்சியாகத் திரண்டு சங்கிலிக் கோர்வைப் போல் செல்லும். பின்னும் உடம்பிலுள்ள சகல முக்கிய பகுதிகளுக்கும் பரந்து போய் மூளையிலும் முள்ளந் தண்டுக் கொடியிலிருந்து கிளம்புகின்ற நரம்புகள் எல்லாவற்றோடும் பொருந்துகின்றன.

நரம்பு மண்டலத்தில் மூளையின் தொழில்

புத்தி, ஞானம் இவைகள் தோன்றுமிடமான மனதிற்கும், சகல உணர்ச்சிகளுக்கும் மூளையானது இருப்பிடமாகும்.

மூளையிலிருந்து உடம்பு முழுமைக்கும் செல்லும் உணர்ச்சி நரம்புகளின் வழியாய் உடலில் எப்பகுதியில் உணர்ச்சி ஏற்பட்டாலும் இவைகளை மனம் அறிகிறது.

உணர்ச்சியை உண்டாக்கும் உணர்வு நரம்புகளால் தான் உடம்பிலுள்ள உணர்ச்சிகளை மூளை அறியக்கூடிய தன்மையுடையதாக இருக்கிறதே அன்றி தனக்குத் தானே அறியக்கூடிய சக்தி மூளைக்கு இல்லை.

துணை மூளை அடங்கிய குமிழானது இவ்வித சுரணை அற்றது அல்ல. இதில் மிகச்சிறிய அடிப்பட்டாலும் வலிப்பு, இசிவு முதலியன உண்டாக்கும்.

அதிகமான அடிதாக்குதல் ஏதேனும் ஏற்பட்டால் மூச்சு நடப்பதே தடைப்பட்டு விடும்.

சிறு நரம்புகளின் தொழில்கள்

மூளையிலிருக்கும் இயக்க நரம்புகளின் மூலமாய் மூளையானது பேசி நரம்புகளை இயங்க இவைகள் உடனே இயங்கும். இவ்வித இயக்கத்தால் இவைகள் தொடுத்திருக்கும் அவயவங்கள் இயங்குதலாகும்.

ஐக்கிய நரம்புகளின் தொழில்கள்

உடலில் இருக்கும் விசேடமான பகுதிகளுக்குச் சீவ தத்துவத்தைக் கொடுக்கும். அதிலுள்ள கூந்தல் நரம்புகள் இரத்தக் குழாய்களுடன் கூடி உடல் ஆதியந்தமும் செல்வதினால் உடலின் எப்பகுதிகளையும் ஒருமித்திருக்கச் செய்யும். மற்ற நரம்பு மூளைக்கும் இரைப்பைக்கும் இவை சம்மந்தப்பட்டிருப்பதனாலே அயற்சி உண்டாக்கத்தக்க உணவுகளைப் புசித்தால் தலையில் வலியை உண்டாக்கும்.

நரம்பு மண்டலத்துக்கும் மனதிற்கும் மிக்க நெருங்கிய சம்பந்தம் இருப்பதால் நரம்பு மண்டலத்தில் எப்பகுதியில் நோய் கண்டாலும் அது மனதில் தாக்கி புத்தி மாறாட்டம். பயித்தியம். தூக்கமின்மை முதலிய குணங்களை உண்டாக்கும். மனதில் கிலேசம். பயம். கோபம் முதலியன ஏற்பட்டாலும் வியாதி உண்டாக்கும்.

நரம்பு மண்டலத்தை எப்போதும் மிக்க கவனத்துடன் ஜாக்கிரதையாக இருக்கும்படி செய்ய வேண்டும்.

இரத்தாசயத்திலிருந்து பத்தில் ஓர் பாகம் இரத்தம் செல்லுவதால் இது எப்போதும் சுத்தமாகவே இருக்க வேண்டும். எனவே உடற்பயிற்சி நல்ல காற்று இவைகள் மிக்க அத்தியாவசியமாகும்.

சரீர அமைப்பு

சரீரத்தில் காணும் எலும்புகளை முதலில் நரம்பினால் பிணைத்து பின்னர் அதன் மேல் சதையைச் சிருஷ்டித்துக் காந்தாரமாகச் செய்து தோலைப் போர்த்தியிருக்கிறது. பின்னர் நிணம் மூளை இரத்தம் வியாதிகளைத் தோற்றுவிக்கும் நாடிகள் முதலானவைகள் உண்டாகின்றன. வியாதிகளைத் தோற்றுவிக்கும் நாடிகள். உடல். கண் முதலான உறுப்புகளில் கலந்து நிற்கின்றது. எப்படி ஒரு கொடியானது மரத்தைச் சுற்றிப் பின்னிக் கொண்டிருக்கின்றனதோ அதே போல தேகத்திலுள்ள எலும்பை நாடிகள் சுற்றிப் பிணைந்து கொண்டிருக்கிறது.

தேகத்தில் எந்தெந்த இடத்தில் எத்தனை நாடி நரம்புகள் பரவியிருக்கிறது

தலையில் பதினையாயிரமும் செவிகளில் மூவாயிரத்து முந்நூறும். இரு கண்களிலும் நாலாயிரம். மூக்கில் 3380 தோல் பிடரி ஆறாயிரம். கண்டத்தில் ஐயாயிரம். கரம் இரண்டிலும் மூவாயிரம். கபந்தம். (முண்டம்) இரண்டாயிரத்து ஒரு நூற்றி எழுபது. இடையின் கீழ் எண்ணாயிரம். விரல்கள் மூவாயிரம். லிங்கம் ஏழாயிரம். மூலத்தில் (குதம்) ஐயாயிரம். சந்துகள் இரண்டாயிரம். பாதங்கள் ஐயாயிரத்து ஒரு நூற்றி ஐம்பதுமாக கூடுதல் நாடி நரம்புகள் எழுபத்து இரண்டாயிரமாகும்.

இவ்விதமாக நாடி நரம்புகளால் அமைக்கப்பட்ட உடலில் தச நாடிகளிலிருந்து மூன்று நாடிகளை மட்டும்

தனித்துப் பிரித்து அதை வாதம். பித்தம். கபம் என்று கூறப்பட்டிருக்கிறது. இந்த மூன்று நாடிகளைக் கொண்டு சரீரத்தில் காணுகின்ற ரோகங்களை கண்டறிவதற்கு உதவுகின்றது.

மூன்று நாடிகள்

வாதம் இடகலையின் மூலமாகவும். பித்தம் பிங்கலை நாடியின் வழியாகவும். கபம் சுழுமுனை நாடியின் மூலமாகவும் தேகத்தில் பரவுகின்றது.

மூன்றின் இருப்பிடம்

வாதம் மலத்திலும் பித்தம் நீரிலும் சிலேத்துமம் விந்துவிலும் இடம் பெறும்.

தச வாயுவில் பிரதானம் மூன்று

தச வாயுக்களில் பிரதானமான வாயுக்கள் அபாணன். பிராணன். சமானன் இவைகள் முறையே அபானன் வாதத்திலும். பிராணன் பித்தத்திலும். சமானன் சிலேத்துமத்திலும் நின்று செயல்படுகிறது.

வாத பித்த சிலேத்தும நிலைகள்

அபான முதல் உந்தி வரை வாத நிலை. உந்தி முதல் மார்பு மட்டும் பித்தநிலை. மார்பு முதல் உச்சி வரை சிலேத்துமத்தின் நிலை.

வாத பித்த சிலேத்துமங்கள் வியாபிக்கும் ஸ்தானங்கள்

வாதமானது அணுவின் ரூபமாக பாதம் முதல் நாபி வரையிலும். பித்தமானது அதி உஷ்ண ரூபமாக கண்டம் முதல் சிரசு வரையிலும் வியாபிக்கும்.

மனிதர்களுக்கு இருக்க வேண்டிய மூன்று நாடியின் கிரம அளவுகள்

நாழிகை ஒன்றுக்கு 360 சுவாசமாக நாள் ஒன்றுக்கு 21600 சுவாசம் இரேசக பூரக கும்பகமாகும்.

இடகலை 16 அங்குலப் பிரமாணம் ஓடும் இதுவே வாத நாடியாகும். இதன் அளவு ஒரு மாத்திரையாகும்.

பிங்கலை 12 அங்குலப் பிரமாணம் ஓடும். இதுவே பித்த நாடியாகும். இதன் அளவு அரை மாத்திரையாகும்.

சுழுமுனை இது இரண்டு நாசியிலும் உபாயமாக பகிர்ந்து ஓடும் அக்கினி அலி எனப்படும். இதுவே சிலேத்தும நாடியாகும். இதன் அளவு கால் மாத்திரையாகும்.

எவ்வித நோயும் இல்லாத சுக தேகியின் நாடியின் துடிப்பின் மாத்திரை அளவு இதுபோல் நடக்கும்.

அதாவது வாதத்தின் நாடித் துடிப்பு மாத்திரை 1.

பித்தத்தின் நாடித் துடிப்பின் மாத்திரை 1/2.

சிலேத்தும நாடியின் துடிப்பு மாத்திரை 1/4

இந்த அளவின்படி நாடி நடப்பவர்களுக்கு வியாதி என்பதே இல்லை என்று அறிவிக்கும் ஒலியாகும்.

இதில் மாற்றம் காணப்பட்டால் வியாதியைத் தெரிவிப்பதாகும்.

கைகளில் காணும் நாடித்துடிப்பு எப்படி வந்தது

இருதயம் விரியவும். சுருங்கவும் நாடி நரம்புகளும் விரியவும் சுருங்கவும் செய்யும் இருதய நடைக்கு நாடி நடை ஒத்திருப்பதால் தேகத்தில் இருக்கின்ற ரோகங்களை இருதயம் அறிந்து நாடிகளின் வழியாய் தெரிவிக்கிறது.

மூன்று நாடிகளின் தட்ப வெப்ப நிலை

வாத நாடி காற்றுக்கு சமானமானது.

பித்த நாடி நெருப்புக்கு சமானமானது.

சிலேத்தும நாடி தண்ணீருக்கு சமானமானது.

நாடி ஸ்தானங்கள்

நாடி ஸ்தானங்களான உந்தி, மார்பு, காது, மூக்கு, கண்டம், புருவம், உச்சி முதலான இடங்களில் நாடித்துடிப்பை உணரலாம். ஆனால் பிணியின் தன்மைகளை உணர முடியாது. ஆகவே பத்து இடங்களில் ஏழு இடங்களை நீக்கி கையின் ஆரை எலும்பின் மேல் வரும் இரத்தக் குழாயான நரம்பில் துடிக்கும் மூன்றுவிதமான துடிப்பாகிய வாத, பித்த, சிலேத்தும எனும் மூன்றாவது பிணியின் தன்மையை அறியவும் அதன் விபரங்களை கூறும் ஒலி பெருக்கியாக இரு கரத்தின் கீழ் மணிக்கட்டிற்கு மேல் ஒரு அங்குலத்தில் மூன்று விரலால் பார்க்கத் தெரியும்படி அமைக்கப்பட்டிருக்கிறது.

கை நாடி

வாதம் ஒரு பங்கும், பித்தம் அரையும், ஐயம் கால் பங்கு வீதமும் அதாவது ஒரு வால் கோதுமையின் பிரமாணம் வாதம் ஒரு மாத்திரை பித்தம் அரை ஐயம் கால் மாத்திரை வீதம் நாடிகள் நடந்தால் அவ்வுடலில் பிணியில்லை. இதன் மேலே சொல்லியிருக்கும் வாத, பித்த, சிலேத்தும்க் கூறுகள் ஒவ்வொன்றும் தன்னிலையில் மீறிய பருவத்தில் உடம்பில் ஏற்படும் மாறுதல்களேயாகும்.

தொந்த நாடிகளின் கூறு

வாதத்தில் வாதமாகில் உடல் நொந்து நெகிழ்ச்சியாய் சுருங்கும், உடல் பதறும் அன்னஞ் செல்லாது.

வாதத்தில் பித்தமாகில் வாய் குழறிப் பேசும் கால் குளிரும் வீக்கம் உண்டாகும்.

வாதத்தில் சிலேத்துமமாகில் உடல் வீங்கும், வலிக்கும் தலை பாரமாக இருக்கும் குணங்கள் வெவ்வேறாகத் தோன்றும். தேகம் வெளுக்கும். அன்னஞ் செல்லாது நாளுக்கு நாள் வீக்கம் அதிகப்படும்.

பித்தத்தில் பித்தமாகில் பிதற்றும். கிறுகிறுக்கும் இளைக்கும். உடல் அத்திப்போல் உலர்ந்து வற்றி வெளுக்கும். பின்பு வீக்க முண்டாகும்.

பித்தத்தில் வாதமாகில், பிடரி கால், கையில் துத்தம், மெய் குறுகும், பதறும், அத்திப் போல் உலரும், சுரங்காயும், புத்தி பேதலிக்கும், பொறுமை நீங்கிக் கோபம் உண்டாகும்.

பித்தத்தில் சிலேத்துமமாகில் வாய் குழறும், பிதற்றும், வாந்தியுண்டாகும், வாயில் நீரொழுகும், தலைச்சுற்றும், வயிற்றில் வலியுண்டாகும், பித்த வாந்தியுண்டாகும், பிடரி வலிக்கும்.

சிலேத்துமத்தில் வாதமாகில் நரம்பெல்லாம் வலித்து நிற்கும், பிடரியில் இசிவுண்டாகும், விழிகள் மேல் நோக்கி இருக்கும், வாய் குழறும்.

சிலேத்துமத்தில் பித்தமாகில் உண்பது கசப்பு உண்டாகும், நாக்கு கசப்பாகவும் தித்திப்பாகவும் இருக்கும், பேச்சுத் தடுமாறும், கபம் கட்டும், குரல் வேறுபடும், கண்களில் பீளை சாடும்.

சிலேத்துமத்தில் சிலேத்துமமாகில் விழிகள் வட்டங்கொள்ளும், உயிர் பிரியும்.

நாடிகள் ஒன்றோடொன்று இணையும் போது ஏற்படும் நோய்கள்

வாதத்தில் ஐயஞ்சேரில் சன்னி, தோஷம், மெய் மயக்கம், கோபம், மூர்ச்சை, சோகை, பாண்டு உண்டாகும்.

பித்தத்தில் வாதம் சேரில் பீனிசம், மண்டைக் குத்து வலி (தொளை வியாதி), அரையாப்பு, நவமூலங்களும் உண்டாகும்.

பித்தம் வாதத்தில் ஏறல்-பாண்டு, காமாலை, நீராம்பல், மகோதரம், கசிவு, மகவை, வெட்புப் பாவையுமுண்டாகும்.

ஐயம் பித்தத்தில் சேரில்-வாயூரல், சுரம், பேதி வாந்தி உண்டாகும்.

நாடிகள் ஒவ்வொன்றும் அதிகமாகும் போதுள்ள குறிகள்

வாதம் இரண்டு பங்கும், பித்தம் ஒரு பங்கும் ஓடில், வாத பித்த தொந்த ரோகம் எனப்பெயர். இதன் குறிகள் வாய்வு மிகுந்த உதிரமும் விம்மும் உடல் வலிக்கும், மாதர் மேல் இச்சைக் கொள்ளும், சிந்தனை அதிகரிக்கும்.

பித்தம் இரண்டு பங்கும், வாதம் ஒரு பங்கும் ஓடில் பித்த வாத தொந்தரோக மெனப்படும். உஷ்ண மிகுந்து உடல் கண்கள் எரியும், பசி, தாகம் உண்டாகும், வாய் கசக்கும் சிறிது புளிப்பான தண்ணீர் போன்ற பானங்கள் ஆகாரங்களை விரும்பும்.

வாதம் இரண்டு பங்கும், சிலேத்துமம் ஒரு பங்கும் ஓடில் வாத சிலேத்தும தொந்த ரோகம் எனப்படும். வயிறு பொருமி வலிக்கும் பசியாது.

பித்தம் இரண்டு பங்கும், சிலேத்துமம் ஒரு பங்கும் ஓடில், பித்தசிலேத்துமம் தொந்தரோகம் எனப்படும், தலை வறண்டு பிடரி நோகும், உடம்பெல்லாம் தினவு, உண்டாகும், வயிறெரியும் மந்தித்துப் பொருமும்.

சிலேத்துமம் இரண்டு பங்கும், வாதம் ஒரு பங்கும் ஓடினால் சிலேத்தும வாத தொந்தரோகம் மெனப்படும், சன்னியுண்டாகும், தலைவலிக்கும், வாய் தித்திக்கும் அன்னம் செரியாது.

சிலேத்துமம் இரண்டு பங்கும், பித்தம் ஒரு பங்கும் ஓடினால் சிலேத்தும பித்த தொந்தரோகம் எனப்படும் உடல் குளிர்ந்தும் கூசும், தகிக்கும்.

நோய்களில் நாடிகள் நடக்கும் விதம்

வாய்வுக்கும் மந்தத்திற்கும் மூன்று நாடிகளும் அமர்ந்து தளர்வாக ஓடும் பசியோடிருக்கும் போது மூன்று நாடிகளும் தூங்கியோடும், பாம்பு விஷத்திலும் மூன்று நாடிகளும் அடங்கி நிற்கும், வயிற்று வலிக்கு மூன்று நாடிகளும் உள்ளுறவால் வாங்கியோடும், கிரந்தி ரோகத்தில் கரையுடைந்த அருவி போலோடும், புண் புறைகளில் வாதமும், பித்தமும், பீனிசத்திற்கும் பித்தமும் சிலேத்துமசூலைக்குச் சிலேத்துமம், பித்தமும் சுழன்று காணும், கர்ப்பவதிக்கு வாதமும் பித்தமும் கலங்கி காணும்.

கிராணியத்தி சாரத்தில் வாதமும் பித்தமும் தளர்ந்து, காணும் நீர் மேகத்தில் நாடிகள் யாவும் மிக்க பலவீனமாகி எரியின்மேல் (கொள்ளி) புரண்டு விழும், புழுப் போல், புறட்டிக் காணும், சில சமயம் மூன்று நாடிகளும் சீறி நிற்கும் மேகம் அதிகப்பட்டால் வாதமும் பித்தமும் பின்னித் துடிக்கும், சன்னிக்கும் மூன்று நாடிகளும் படபடத்து ஓடும்.

விக்கலில் சிலேத்துமமும் வாதமும், சுரத்தில் வாதமும் பித்தமும், கணைக் காய்ச்சலில் பித்தமும், வாதமும் கலங்கி காணும் விஷ நீர் சோகை பாண்டுவில் மூன்று நாடிகளும் முக வீணைப்போல் மீட்டும், தலை வலியிலும் சய ரோகத்திலும் பித்தம் கலங்கிக்காணும்.

இளநீர், நெய், பால், இறைச்சி, கனிகளுக்கு வாதம் கதிக்கும் (அதிகமாகும்).

புணர்ச்சிக்கும் கோபத்திற்கும் கோழி மாமிசத்திற்கும் பித்தம் ககித்து நிற்கும்.

சுர தோஷத்தில் பித்தம் வாதத்தைத் தாண்டும், சீதள ரோகங்களில், பித்தத்தில் சிலேத்துமஞ்சேரும் புணர்ச்சிக்கு

நாடிகள் புழுப்போல் நிமிர்ந்து வலித்து நின்று வாங்கும். பித்த சன்னிக்கு வாதமும், சிலேத்துமமும் அமர்ந்து பித்தம் படப்படப்போடு மீறி நிற்கும். மரண சன்னி. உட்குத்து. புறவீச்சு. இசிவு முதலியவைகளில் வாதமும்சிலேத்துமமும் அழுத்தி காணும்.

அனுபவ நாடி

நாடிகளை மூன்று வகையாகச் சொல்லி எல்லா நாடிகளையும் அதனுள் அடக்கிவிட்டார்கள். அதாவது வாத நாடி. பித்த நாடி. சிலேத்தும நாடி எனக் காற்றை வாதமாகவும். நெருப்பை பித்தமாகவும். தண்ணீரை சிலேத்துமமாகவும் சொன்னார்கள்.

இந்த நாடியை இரு கைகளின் மணிக்கட்டுக்கு கீழ் அசுத்த இரத்தம் ஓடும் நரம்புக் குழாய்க்குப் பக்கத்தில் காணலாம்.

இந்நாடிகள் பலவிடத்தில் இருந்தாலும் நோயை தெரிந்துக்கொள்ள கை விரல்களிலும் மணிக்கட்டிலும் பார்த்து நோயைக் கணிக்கின்றனர். விரல்களில் ஆள் காட்டி விரலின் பக்கமாய் இருக்கும் நாடியை வாதம் என்றும். நடுவிரல் பக்கமாய் இருக்கும் நாடிய பித்தம் என்றும் மோதிர விரலின் பக்கமாய் இருக்கும் நாடியை சிலேத்துமம் என்றும் சொல்லியுள்ளார்கள்.

மணிக்கட்டில் மூன்று விரற்கடைக்குப் பின் மூன்று விரலை வைத்து அழுத்தி லேசாய் கவனித்தால் மூன்று விரல்களிலும் கடிகாரம் அடிப்பது போல் டக் டக் என்று அடித்தல் காணப்படும்.

வாத நாடி

கை பார்க்கும் போது முதல் விரலில் ஏற்படும் டக் என்ற உணர்ச்சியே வாத நாடி எனப்படும். முதல் நாடியினால் தெரிந்துக்கொள்ள வேண்டிய நோய்களைப் பற்றிய குறிப்புகள் பின்வருமாறு:

முதல் நாடி வேகமாகவும் உறப்பாகவும் அடித்து சரீரத்தில் சுரம் இல்லாமல் இருந்தால் அந் நாடியாளருக்கு மது மேகம் என்றும் சிறு நீரில் சர்க்கரை வியாதி இருப்பதாய் உணர வேண்டும். சுரம் இருப்பின் (சிங்கில் நிமோனியா) கப சுரம் எனலாம்.

முதல் நாடி வேகமாவும் அழுத்தமாகவும் அடித்து சுரமில்லாமல் இருந்தால் பீஜத்தில் காற்று தங்கியிருப்பதாக உணர வேண்டும். கைப்பார்க்கும் வைத்தியரின் புத்திசாவி தனத்தால் எத்தகைய நாடியானது மேற் சொன்னது போல் காணப்படுகிறதோ அந்தப் பக்கத்து பீஜத்தில் வீக்கம் இருப்பதாய் சொல்லி விடலாம். சுரம் இருப்பின் (டபிள் நிமோனியா) கப வாத சுரம் எனலாம்.

முதல் நாடி வேகமாவும் விட்டு விட்டும் அடித்துக் கொண்டிருந்தால் இரண்டு கைகளிலும் ஒரே மாதிரியாய் இருந்தாலும் மேக நீர் அதாவது வெட்டை பிடிப்பு வியாதி எனச் சொல்லிவிடலாம். கீல்களிலும் இடுப்பிலும் மேகநீர் தங்கி வலியைத் தரும். இதனை வெட்டைப் பிடிப்பு என்றும் (வெனீரியல் ரூமாடிசம்) என்றும் சொல்லாம். சுரமும் இருக்கும் நாடி வேகமாகி இரண்டு கைகளிலும் அடித்துக் கொண்டிருந்தால் விஷ சுரம் (மலேரியா) அதாவது மண்ணீரலைப் பற்றிய சுரம் எனச் செல்லி விடலாம்.

முதல் நாடியும் இரண்டாவது நாடியும் ஏக காலத்தில் வேகமாய் அடித்து மூன்றாவது நாடியும் லேசாக கலந்து அடித்து சுரமும் இருக்கில் கப வாத சுரம்-பிழைக்கமாட்டாது என்று சொல்லலாம். இவர்களுக்கு இருமலும் இராது. கபமும் வராது. சுரமும் அதிகமாய்க் காயும். பெண்களுக்கு முதல் நாடி வேகமாகவும் பலமாகவும் அடித்தால் கெர்ப்பபையில் இரணம் இருப்பதாய் உணர்தல் வேண்டும்.

பெண்களுக்கு முதல் நாடி மாத்திரம் வேகமாய் அடித்துக் கொண்டிருந்தால் வெட்டை என்னும் (லிக்கோரியா) வியாதி

எனலாம். முகத்தில் அடிக்கடி கொப்பளம் போல் உண்டாகும் (வீட்டுக்கு தூரம் வருவதற்கு முன்) முதல் நாடி நிமிடத்துக்கு 60 துடிப்புக்கு மேல் அடிக்குமானால் க்ஷய ரோகம் என சொல்லலாம். க்ஷய ரோகம் பலவாக இருப்பதால் நுரையீரலைப் பற்றிய க்ஷயம் எனல் வேண்டும். அதிலும் இரு நுரையீரலிலும் இரணம் இருப்பின் முதல் நாடியும் கடைசி நாடியாகிய சிலேத்தும நாடியும் வேகமாய் அடிக்கும். 60-க்கு மேல் நிமிடம் ஒன்றுக்கு துடிப்பு இருக்கும். இதனை கடினமான வியாதியாக சொல்லலாம். பிழைப்பது கஷ்டம் எனலாம்.

பித்த நாடி

இரண்டாவது நாடியை பித்த நாடி என்பது. இந்த நாடியானது விட்டுவிட்டு அழுத்தமாய் ஒரே நிதானமாய் அடித்துக் கொண்டிருந்தால். பெண்களுக்கு சூதக வாயு என்று அறியவும். அதுவே குறைந்த வேகத்திலும் மூன்றாவது நாடியை லேசாகத் தட்டும்படி அடித்தால் (ஆஸ்த்மா) என்னும் (சுவாச) காச ரோகம் என அறியவும். மூன்றாவது நாடியும் தெரியும்படி அடித்தால் ஈளை. இருமல் (பிரான் கைடிஸ்) என அறிதல் வேண்டும். முதல் நாடியும் மூன்றாவது நாடியும் கையில் தட்டுப்படாமல் இரண்டாவது நாடி மாத்திரம் வேகமாய் அடித்துக் கொண்டிருந்து சுரமும் இருக்குமானால் பித்த சுரமென உணர்தல் வேண்டும். சுரம் அடித்துக் கொண்டிருந்து மூன்றாவது நாடியும் வேகமாய் அடித்தால் பித்த சீதள சுரம் தலைவலி முதலானதுகள் இருக்கும் என்பதை அறியவும்.

வைத்திய மூலிகை விரிவகாரதி

இப்புத்தகம் வைத்தியர்களுக்கும் ஜாலம் செய்பவர் களுக்கும் மாந்திரீகம் செய்பவர்களுக்கும் மிக உபயோக முள்ளது. ரிஷிகள் முனிவர்கள் சித்தர்கள். தவசிகள் முதலி யோர் பச்சிலை மூலிகைகளின் பெயர்களை மர்மமாகவும் இரகசியமாகவும் பரிபாஷையில் பாடியுள்ளார்கள். அம்மர்மங் களை விளக்க மாகவும் எழுதியுள்ளது. ஒவ்வொருவருக்கும் உபயோகமுள்ளது.

நாடிகளின் சேர்க்கைகளால் உண்டாகும் ரோகங்களின் விபரம்

நாடிகளின் பெயர்	நாடிகளின் குணங்கள்
வாத பித்த நாடி	பாரம் சுமந்து நடப்பதுபோல் நடக்கும்
வாத சிலேத்தும நாடி	முறிந்த அரனைவால் துடிப்பது போல் நடக்கும்.
பித்த வாத நாடி	வீணை அடிப்பது போல் நடக்கும்.
பித்த சிலேத்தும நாடி	பிள்ளை தொட்டில் ஆடுவது போல் நடக்கும்.
சிலேதத்தும வாத நாடி	புணர்ச்சி போல் நடக்கும்
சிலேத்தும பித்த நாடி	வண்டி சக்கரம் சுழலுவது போல் நடக்கும்.
ஆதி வாத நாடி	வாத நாடி அதிகமாக நடக்கும்.
ஆதி பித்த நாடி	பித்த நாடி அதிகமாக நடக்கும்
ஆதி சிலேத்தும நாடி	சிலேத்தும நாடி அதிகமாய் நடக்கும்.
வாத பித்த சிலேத்தும நாடி	நாடி மூன்றும் பட படவென்று நடக்கும்.

நாடிகளின் சேர்க்கைகளால் உண்டாகும் ரோகங்களின் விபரம்

ரோகங்களின் குணங்கள்	ரோகங்களின் பெயர்கள்
வயிற்று வலி, உப்பிசம், தாகம்	பாண்டு காமாலை மகோதரம், நீராம்பல் முதலியவைகள்.
தலைவலி கைகால் திமிருதல், வயிற்று பொறுமல்	பீனிசம் மூலம் வலிப்பு, பவுத்திரம் அரையாப்பு.
தேகவலி எரிவு நாக்கு நெஞ்சுவறளல் நோவு	பீனிசம் மூலம் வலிப்பு பவுத்திரம், அரையாப்பு, முதலியவைகள்.
வயிறு உப்பல், பிதற்றல், கண் எரிவு, மஞ்சள் நிறமாயிருக்கும்.	தலைசுற்றல், வயிற்றுவலி, பிடரிவலி, முதலியவைகள்.
கபம் அதிகம்	ஜன்னி தலைவலி முதலி யவைகள்.
மண்டையிடி, காது கோளாறு, நாவு இனிப்பு	ஜன்னி முதலியவைகள்.
தேகநோவு, தேகப் பதற்றம் அன்னதுவேசம்	வாத ரோகங்கள்.
கிறுகிறுப்பு, பிதற்றல், சத்தி இளைப்பு, தேகம் உலர்ந்து விலங்கும்.	பித்த ரோகங்கள்.
உயிர் பிரியும்	ஜன்னி சயித்தியம்
ஜன்னிக்குறிய அறிகுறிகள்	ஜன்னி முதலியவைகள்.

சிலேத்தும நாடி

மூன்றாவது நாடி மாத்திரம் இரண்டு கையிலும் ஒரே மாதிரியாய் அடித்துக் கொண்டிருந்து முதல் நாடியும் இரண்டாவது கையில் தட்டாமல் இருந்தால் வெட்டை நாள் பட்டதென அறியவும். ஒரு கையில் மாத்திரம் மூன்றாவது நாடி வேகமாக அடித்தும் மற்றொரு கையில் அடிக்காமல் இரண்டாவது நாடியோ அல்லது முதல் நாடியோ அடித்துக் கொண்டிருந்தால் எந்தக் கையில் மூன்றாவது நாடி மாத்திரம் அடிக்கின்றதோ அதற்கு எதிர்பக்கம் கழுத்து நரம்பு வலியும் ஒரு தலை வலியும் இருக்கும். இதை முக சந்தி என்று சொல்ல வேண்டும்.

மூன்றாவது நாடி மாத்திரம் கையில் தென்பட்டு சுரமும் இருக்குமானால் அதோடு வயிறு உப்பிசமும் கல்லீரல் வீக்கமும் லேசாய் இருக்குமானால் சன்னி பாத சுரம் எனச் சொல்லலாம்.

மூன்றாவது நாடி மாத்திரம் அடித்து இரண்டாவது அடங்கி அடிக்கக் கண்டால் உள்ளே சுரமும் குடிக் கொண்டிருப்பதாய் அறிய வேண்டும். இவர்களின் நாடி சரியான நிலைமைக்கு வரும் வரையில் நீராடல் கூடாது. இவ்வகையில் அனுபவத்தால் எல்லா நோய்களையும் நாடியின் மூலம் தெரிந்துக் கொள்ளலாம். அநுபவத்தின் பேரில் சுரத்தின் அளவு "டிகிரி"யையும் சொல்லி விடலாம்.

வாத நாடியால் தெரிந்துக்கொள்ளும் முக்கிய வியாதிகளில் சில: ஆனைக்கால் சுரம், கல் பிடிப்பு, சூதக வாயு, அண்டவாயு, கபவாதசுரம், மதுமேகம், நீராம்பல் முதலான வியாதிகள்.

அண்ட வாய்வு என்பது பீஜத்தில் காணும் வீக்கம் (வலி யற்றது) இதனை முதல் நாடியில் அறிய வேண்டும். இரண்டு கையிலும் முதல் நாடி ஒரே மாதிரியாய் இல்லாமல் ஒரு கையில் மாத்திரம் வேகமாய் அடித்து மற்றொரு கையில் முதல் நாடி

தெரியாவிட்டால், தெரியாத நாடிப் பக்கமுள்ள பீஜத்தில் வீக்கம் இருப்பதாய் சொல்லி விடலாம். இது போலவே யானைக்காலுக்கும் என அறியவும்.

க்ஷய ரோகத்திலும் இரண்டு கையிலும் ஒரே மாதிரியாய் க்ஷய ரோகத்துக்குச் சொன்ன நாடியடித்தால் இரு பக்கமும், குரல்வளைப்புண் என்றும் ஒருமை மாத்திரமானால் ஒரு பக்கம் புண் என்றும் அறியவும். இதனால் (ஸ்டெதஸ் கோப்) வைத்து பார்க்காமலும் கோழை பரீட்சை செய்யாமலும் சொல்லிவிடலாம்.

வாதத்தின் குணங்கள்

வாத நாடியானது தன்னிலையிலிருந்து அதிகமானால், தேகமெல்லாம் குத்தும், கை-கால்-சந்து பொந்துகள், உளையும், கால்கை ஒரு பக்கமாய் முடங்கும். குனிந்தால் நிமிர வொட்டாது திமிருண்டாகும். உடல் பொருமும், குடல் புறட்டும், உணவு செல்லாது, வயிறு மந்திக்கும் பொருமும், மல மூத்திரத்தை கட்டும், அபானம் சுருங்கும், நாக்கு புளிக்கும், தாது நட்டமாகும், வயிற்றுப் போக்கை உண்டாக்கும்.

பித்தத்தின் குணங்கள்

பித்தம் தன்னிலையிலிருந்து அதிகமானால் உடலில் காந்தலும் வறட்சியும் உடல் எரிவும் நடுக்கமும் உண்டாகும், மண்டைக்குத்து, நாவறட்சி, கசப்பு அரோசிகம், தாகம், வாந்தி, விக்கல், மூர்ச்சை, கிறு கிறுப்பு, காதடைப்பு, அயர்ச்சி, கோபம், வயிற்றில் காந்தல், நெஞ்செரிவு அக்கினி மந்தம், (தீபனக் குறைதல்) குளிர்காய்ச்சல் விடா காய்ச்சல், அஸ்தி சுரம், (எலும்பில் காய்ச்சல்) பாண்டு, காமாலை, சோகை மயக்கம், பிரமேகம் பித்த வெட்டை இவைகள் உண்டாகும் மற்றும் விழிகள் சுழன்று குழி விழுந்து இருண்டு வரும். நீர் மஞ்சளாகவும், சிவப்பாயும் இறங்கும்.

சிலேத்துமத்தின் குணங்கள்

சிலேத்துமம் தன் நிலையை மீறினால் உடல் காயும், வற்றும், வெளுக்கும், குளிர்ந்து நடுங்கும், அன்னம் செல்லாது, விக்கலும், ஒருவித வாந்தியும், இருமலும் மேல் மூச்சும், திகைப்பும், வியர்வையும், சயமும் ஈழை முதலியன உண்டாகும், நெஞ்சு, விலாவு வலி காணல், இரத்தம் கக்குதல், நாவில் வழு வழுப்பும் தித்திப்பான சுவை, வாயில் நீர் ஊறுதல், நீர் சிவந்து இறங்குதல் முதலியன உண்டாக்கும்.

குறிப்பு:- முன் தெரிவித்துள்ளது போல் வாதம் ஒரு பங்கும், பித்தம் அரை பங்கும், ஐயம் கால் பங்கு வீதமும், அதாவது:- ஒரு வால் கோதுமையின் பிரமாணம் வாதம் ஒரு மாத்திரை, பித்தம் அரை ஐயம் கால் மாத்திரை வீதம் நாடிகள் நடந்தால் அவ்வுடலில் பிணியில்லை.

இதன் மேலே கூறியிருக்கும் வாத, பித்த, சிலேத்தும கூறுகள் ஒவ்வொன்றும் தன்னிலையில் மீறிய பருவத்தில் உடம்பில் ஏற்படும் மாறுதல்களேயாகும்.

மல பரீட்சை

வாதம் அதிகரித்தால் மலம் கருக்கும் பித்தம் அதிகரித்தால் பச்சை நிறமாகவோ அல்லது சிவப்பு நிறமாகவோ மலம் வெளியாகும். கபம் அதிகம்னால் மலம் வெண்ணிறமாகயிருக்கும். பலவித நிறமாக இருந்தால் அந்த தோஷங்களின் குறிகள் இருக்கும்.

சலப் பரீட்சை

வாதம் அதிகமானால் சிறுநீர் வெண்மையாக இறங்கும், பித்தம் மீறினால் மூத்திரம் சிவப்பு நிறத்துடன் குறைந்த அளவில் வெளியாகும். கபம் அதிகமானால் நுறையுடன் காணப்படும். தொந்தமானால் எல்லாவித குறிகளுடனும் இருக்கும்.

நேத்திரப் பரீட்சை

கண்கள் பசுமை நிறமடைந்து வெண்மையாகக் கண்ணீர் சொறிந்தால் அது வாதத்தினால் ஏற்பட்டது என்பதை தெரிவிப்பதாகும்.

கண்ணீர் பொன் நிறத்துடன் சொறிந்து விழியும் சிவந்து காணப்பட்டால் கண்களில் பித்தம் அதிகப் பட்டிருக்கிறது என்பதை தெரிவிப்பதாகும்.

கண் விழி வெண்மையாகயிருந்து சிவப்பாகவோ அல்லது மஞ்சள் நிறமாகவே கண்ணீர் பொழியும். அப்போது சன்னியின் அறிகுறியை தெரிவிப்பதாகும்.

சில சமயங்களில் கண்கள் காமாலையில் காண்பதைப் போல் நல்ல மஞ்சளாகவும் காணப்படும். இதுவும் சன்னியின் குறியேயாகும்.

அதிக சிவப்பாகில் கக்குவான் இருமல் என்று தெரிந்துக் கொள்ளவும்.

வாத ரோகத்தில் கண் சிவப்பாகவோ கருப்பாகவோ காணும் பித்தம் அதிகரித்தால் கண்களில் எரிச்சலும் சிவப்பும் ஏற்படும். கபம் அதிகமானால் நாற்றத்துடன் பீளை அதிகரிக்கும் பசுமை நிறமடைந்தால் சன்னி பாத சுரம் என்றும் அவை அதிகமானால் காமாலை என்றும் கண்டுக்கொள்ளவும்.

நாக்கின் லட்சணம்

நாக்கில் சொர சொரப்புடன் அரிப்பு ஏற்பட்டாலும் வாத தோஷம் அதிகரித்திருக்கிறது என்று அறிந்து கொள்ளவும்.

நாக்கு சிவந்த நிறமாகவோ, பசுமை நிறமாகவோ காணப்பட்டால் பித்தம் அதிகமாகி இருக்கிறது என்பதை தெரிவிப்பதாகும்.

நாக்கின் நிறம் வெண்மையாக இருந்தால் கபத்தின் தோஷம் அதிகரிக்கப்பட்டிருக்கிறது எனத் தெரிந்து கொள்ளவும்.

சன்னியால் நாக்கில் வறட்சியுண்டாகி முட்கள் போல் சதை வளர்ந்து கருமை நிறமாகும்.

வைத்திய லட்சணம்

மூச்சு உள்ள வரையில் நோயாளிக்கு (உயிர் தொண்டையிலிருக்குமளவு) சிகிச்சை செய்ய வேண்டும். பின் விதிப்படி நடக்க வேண்டியதுதான்.

வைத்தியன் என்பவர் நோய்க்கு தக்கப்பேரை தெரிந்துகொள்வதும் அந்த நோய்க்குத் தக்க மருந்தைக் கொடுத்து வேதனையை நீக்குவதுதான் வைத்தியர் கடமையே தவிர உயிருக்கு மருந்து கொடுப்பது முடியாத காரியம்.

அசாத்திய குறிகள்

நோயாளியின் முகம் முதலான அங்கங்களைச் சோதித்து, அவைகளுக்கு உண்டான குறிகளையும் மனதில் வைத்துக்கொண்டு, அறிவையும் உபயோகித்து இந்த நோய் சாத்தியமானது இது அசாத்தியமானது என்று தெரிந்து வைத்தியம் செய்ய வேண்டும்.

பகலில் குளிரும், இரவில் காய்ச்சலும், அடிக்கடி வந்தாலும் பித்தம், வாதம் இரண்டும் சேர்ந்து ஓடினாலும், முகம் சிவந்து நாக்கு கறுத்திருந்தாலும், கழுத்து, தலை இவைகளைத் தூக்க முடியாமல் களைப்புடன் தொங்கிவிட்டாலும் அந்நோயாளி பிழைப்பது துர்லபம்.

மரண லக்ஷணம்

மார்பு, கை, கால், வயிறு முதலான் அங்கங்களில் குளிர்ச்சி ஏற்படும், பெருமூச்சு உண்டாகும், உடலில் எரிச்சல் இருக்கும்.

நாடி மிகவும் மெல்லியதாக ஓடும். உடல் மிகவும் தளர்ச்சியுற்று நடக்கும் போது பெருமூச்சு அதிகமாகத் தூக்கம் வராமல் அவதியுற்றாலும். அந்நோயாளி பிழைப்பது அரிது.

அவஸ்தை பத்து

1. ஞாபக சக்தி மிகவும் குறைந்திருத்தல்.
2. முன் இறந்தவர்களைக் கண்ணில் கண்டு பேசுதல்.
3. சித்தப் பிரமையாகுதல்.
4. மேல் மூச்சு வாங்குதல்.
5. கண்கள் விழித்துக் கொண்டிருப்பது போல் இருத்தல்.
6. குரல் மாறுபடுதல். உடம்பு குளிருதல்.
7. உடல் முழுவதும் கடுமையான எரிச்சல். உணவில் வேட்கையைத் தருதல்.
8. தனது கைகளால் முகத்தைத் தடவிக் கொள்ளுதல். கண்கள் பஞ்சாடுதல்.
9. உடல் முழுவதும் குளிர்ந்த வியர்வை காணுதல்.
10. உடலை விட்டு ஆவி பிரிதல்.

இந்த பத்துவித நிலைகளும் நினைவிற்குரியவையாகும் இந்த பத்து நிலைகளில் மூன்று நிலைகள் வரை சிகிச்சைக்கு வசப்படும் என்று சில கர்த்தாக்கள் கூறுகிறார்கள். மற்றும் சிலர் ஒன்பது நிலை வரையிலும் சிகிச்சை செய்யலாமென்றும் கூறுகிறார்கள். நமது அனுபவத்திலும் இதையே காணுகிறோம்.

இன்னின்ன ரோகங்களில் இவைகள் சேருவதால் அசாத்தியம் என்பதை அறியவும்

பிரமேக ரோகங்கள். வாதசூலை ரோகம். நீரிழிவு குன்மம். சுக சன்னி. காமாலை பாண்டு. சோகை கபரோகங்கள் மஞ்சள்

காமாலை சூலை நோவு பைத்திய ரோகம் முதலிய வியாதிகள் அதிசார ரோகம் உண்டானால் அசாத்தியமானதாகும்.

வீச்சு ரோகங்களிலும் சன்னி தோஷங்களிலும் கடுமையான காய்ச்சல்களிலும் விஷ சோகைகளிலும் கிராணி அதிசார ரோகங்களிலும். குன்ம ரோகத்திலும் அத்தி சுரம் வயிற்றுளைவு பிரமேகங்கள் நீரிழிவு. சுவாச காசம். க்ஷயம் கணையிளைப்பு முதலிய ரோகங்களில் வீக்கம் வந்தால் அசாத்தியம் என்று அறியவும்.

நீரிழிவு மேகம் சூளை சுரம் வீச்சு ரோகங்கள் சன்னி வலி தோஷம் மாந்தம் கிராணி அதிசாரம் வாதம் மகோதரம் பாண்டு பெரும்பாடு மஞ்சள் நோவு வாயு இரத்தபித்தம் இவைகளில் இறைப்பு இருமல் சுவாச காசமும் விக்கலும் ஏற்பட்டால் அசாத்திய ரோகமாம்.

விஷ நோய்களிலும் வீக்கம் சோகை சூலை வாதம் நீரிழிவு மேகம் இளைப்பு இருமல் சுவாசகாசம் சன்னி விஷ மாந்தம் கப ரோகம் தீராத வியாதி குன்மம் அத்தி சுரம் காமாலை இந்த நோய்களில் வயிற்றுளைச்சல் ரோகம் ஏற்பட்டால் அசாத்தியம் என்று அறியவும்.

(வயிற்றுளைச்சல் - குடல் புண்) சீதபேதி என்றும் பாடம் உண்டு.

நீரிழிவு பிளவை ஈளை மந்தார காசம் சயம் இரத்தப்பித்தம் உளைச்சல் அதிசாரம் சன்னி நாள்பட்ட சுரம் தோஷம் இரத்த பிரமேகங்கள் வீக்கநீர் கெர்ப்ப சூளை வீச்சு வலி பெரும்பாடு மூல வாயு முதலிய நோய்களில் கொழுத்த வாயு தோன்றிவிட்டால் அசாத்தியமாகும்.

மேகத்தில் நீரிழிவும் நீரிழிவில் வாதமும் வாதத்தில் வயிற்றுளைச்சலும் வயிற்றுளைச்சலில் வாய்வும் வாய்வில் விக்கலும் விக்கலில் இளைப்பும் இளைப்பிலே சுவாசமும் இவைகள் ஒன்றில் ஒன்று இணைந்தால் அசாத்தியமாகும்.

வாதத்தில் சுரமும் சுரத்தில் மேகமும் மேகத்தில் வீக்கமும் வீக்கத்தில் வயிற்று பொருமலும் பொருமலிலே கப கோபமும் கபத்தில் இளைப்பும் இளைப்பிலே சுவாசமும் விக்கலும் ஆகாது இவை இணைந்தால் அசாத்தியமாகும்.

மேகத்தில் வாய்வும் வாய்வில் திரட்சியும் திரட்சியில் வீக்கமும் வீக்கத்தில் கபமும் சயத்தில் இரத்தம் வருதலும், இரத்தத்தில் சுவாசமும் விக்கலும் சேர்ந்தாலும் அசாத்தியமேயாகும்.

நீரிழிவில் பிளவை உண்டாகுதலும் பிளவையில் தாகமும், உடலில் அனல் காணுதலும் அனலிலே மயக்கமும், மயக்கத்தில் வியர்வையும் வியர்வையில் கபமும், கபத்தில் விக்கலும் சேர்ந்தால் அசாத்தியமாகும்.

உடற்கூட்டில் வாய்வும், வாய்விலே குன்மமும் குன்மத்திலே பேதியும், பேதியில் பொருமலும், பொருமலிலே கபமும், கபத்தில் விக்கலும், விக்கலிலே மயக்கமும் தோன்றுமாகில் அது அசாத்தியமே.

பித்தக்கதிப்பில் சோகையும், சோகையில் வாய்வு தொந்திப்பும், வாய்விலே பாண்டும், பாண்டுவில் வயிற்றுக்கடுப்பும், வயிற்றுக் கடுப்பில் சீதமும், சீதத்தில் கபமும், கபத்திலே மயக்கமும், வீக்கமும் ஏற்படில் அசாத்தியமே.

சுரத்தில் விஷமும், விஷத்தில் தோஷமும், தோஷத்தில் சன்னியும், சன்னியில் கபமும், கபத்தில் வாய்வும், வாய்வும் இளைப்பும், இளைப்பிலே சுவாசமும், விக்கலும் கலந்தால் அசாத்தியமாகும்.

இரத்தத்தில் (இரத்த சூடு) காச்சலும் காய்ச்சலில் வாயுவும், வாயுவிலே உளைச்சலும், உளைச்சலிலே வீக்கமும், வீக்கத்தில் சீதளமும், சீதளத்தில் கபமும், கபத்தில் மயக்கமும், விக்கலுமாகாது இவை கலந்திருப்பின் அசாத்தியமே.

சுரத்தில் இளைப்பும், கபத்தில் விஷதோஷமும் விஷத்தில் மயக்கமும், வாய்வும், மயக்கத்தில் சுவாசமும், சுவாசத்தில் வியர்வையும், வியர்வையிலே உடல் குளிர்ந்து போதலும், குளிர்ச்சியில் மயக்கமும் விக்கலும் கூடாது. இவை கலந்திருப்பின் அசாத்தியமே.

முறையாக நடக்கும் வாத-பித்த-சிலேத்மத்தில் பித்தம் தளர்ச்சியாக, வாதத்துடன் சிலேத்துமஞ் சேர்ந்து, இளைப்புடன் (கிசுமுசுசென்று சப்தத்துடன் இழுப்பது) உடலும் இரத்தமின்றி வெளுத்து கை காலும் குளிர்ந்து நெஞ்சு மேலும் கீழும் ஏற இறங்குதலும் கண் மூக்கில் நீர் கொட்டுதலும், நா வறண்டு பற்கள் கறுத்து வாந்தியும் உண்டாகில் மரணமென்றே சொல்லலாம்.

முத்தோஷங்களையும் நீக்கும் வழி

ஓதுகின்ற மலக்கட்டை யொழியவைத்தால்
உடலிலுள்ள வாதையெலா மொடுங்கிப் போகும்
தாதுற்ற சிறுநீரைத் தெளியவைத்தால்
சடத்திலுள்ள வேகமெலாந் தணிந்து போகும்
கோதுற்ற உமிழ் நீரை முரியவைத்தால்
கூடவுள்ள பகையெல்லாங் குலைந்து போகும்
கோதடர்ந்த இவைமூன்றும் களங்கமுற்றால்
கொல்லவந்த காலனையும் வெல்லலாமே.

சத்துரு மித்துரு

துருசுக்கு சத்துரு சரக்குகள்:- சீனம் சூடன் வெடிப்பு அப்பிரகம் கல்லுப்பு நாகம் இந்துப்பு வங்கம் லிங்கம் சவட்டுப்பு தொட்டி பாஷாணம் அஞ்சனப்பாசானம் வெள்ளை பாசானம் சிங்கி சவுக்காரம் காந்தம் இவைகளாம்.

துருசுக்கு மித்துரு சரக்குகள்

வீரம் சாரம் அரிதாரம் வெங்காரம் கெந்தி ரசம் பூரம் மனோசிலை கௌரி இவைகளாம்.

சாரத்துக்கு சத்துரு சரக்குகள்

வங்கம் காரீயம் இந்துப்பு வளையலுப்பு கல்லுப்பு சுக்கான்கல் சுண்ணாம்பு அப்பரகம் அண்டவோடு காந்தம், அயம், மனோசிலை கடல்நுரை, சவட்டுப்பு, கிளிஞ்சல் இவைகளாகும்.

சாரத்துக்கு மித்துரு சரக்குகள்

காரம், வெடியுப்பு, வீரம், கெந்தி, மனோசிலை, தாளகம், லிங்கம், காரீயம், கல்நார் நிமிளை, நாகம், கௌரி இவைகளாகும்.

தங்கத்துக்கு சத்துரு சரக்குகள்

நாகம், வெடியுப்பு, கௌரி, வெள்ளை, நிமிளை சவட்டுப்பு, சிங்கி லவங்கம், தாளகம், அப்ரகம், அண்டோடு சிலை குதிரைபல், இரசம் கெந்தகம், கோமுகம், காந்தம், பொன்னம்பர், சவ்வீரம் இவைகளாகும்.

தங்கத்துக்கு மித்துரு சரக்குகள்

தங்கமானது நவலோகங்களுக்கும் உயிராகயிருப்பதே மித்துருவாகும்.

கருவங்கத்துக்கு சத்துரு

அயம் காந்தம் கிளிஞ்சல் நிமிளை, அண்டோடு, நண்டோடு, நத்தை ஆமை, இவைகளின் ஓடு, கௌரி, காந்தம், அப்பிரகம், வெடியுப்பு, கல்லுப்பு, கல்நார், சாத்திரபேதி இவைகளாகும்.

கருவங்கத்தின் மித்துரு சரக்குகள்

நாகம், வெள்ளி, செம்பு, வெள்வெங்கம் பூநாகம் சூதம் இவைகளாகும்.

அயத்தின் சத்துரு சரக்குகள்

வெங்காரம், அண்டவோடு, வெண்கலம், அப்ரகம், நிமிளை, வங்கம், கிளிஞ்சள், கெந்தி, சாரம், சிலை சவ்வீரம், சிங்கு, கௌரி சிலாசத்து வெள்ளை, பூநீறு.

அயத்தின் மித்துரு சரக்குகள்

வெள்ளி, நாகம், பூரம், செம்பு, வங்கம், தங்கம், பூநாகம், பூரம், கெந்தகம், மயூரச்செம்பு.

நாகத்தின் சத்துரு சரக்குகள்

கல்லுப்பு, வெடியுப்பு, பம்கிரா காரம், கிழிஞ்சள், அண்டம், வங்கம், தங்கம், வெள்ளி, வெங்கலம், சிங்கி, வீரம், அபின், மிளகு, வெள்ளை, வளையலுப்பு, அன்னபேதி, தரா.

நாகத்தின் மித்துரு சரக்கு

அயம், காந்தம், சிலாசத்து, அப்பிரகம், கௌரி, செம்பு, நிமிளை சூதம், கெந்தகம் பூநாகம் செம்பு சாரம் கருநாகம்.

வெடியுப்புக்கு சத்துரு சரக்குகள்

சூடம், வெள்ளீயம், சவட்டுப்பு, காரியம், இரும்பு, செம்பு, துருசு வெள்ளை காந்தம் சிலை தொட்டி காரீயம் இரும்பு செம்பு துருசு வெள்ளை காந்தம் சிலை தொட்டி கெந்தகம் சிங்கி தீமுருகல் அண்டோடு.

வெடியுப்பிற்கு மித்துரு சரக்குகள்

இலிங்கம். வீரம். துத்தம். காரம். இந்துப்பு. கல்லுப்பு. நாகம். காந்தம். தாளகம். கடல்நுரை. நிமிளை. வெள்ளைக்கம்புளி. பழம் புளி. ரோமம்.

கல்லுப்பு சத்துரு சரக்குகள்

அயம். செம்பு. காரம். பூரம். கௌரி. நாகம். கெந்தி, தாளகம் நிமிளை. வெள்ளை அப்பிரகம் வங்கம்.

கார சத்துரு

சூடன் அண்டவோடு பூரம் சிலாசத்து புளி சுண்ணங்கள்.

காரசரக்கின் மித்துரு

உபரசங்கள் பாசாணங்கள் லோகங்கள்.

இரச சத்துரு

குதிரைப்பல். சிங்கி. கௌரி. வெள்ளை. சத்தி சாரம். வெடியுப்பு. அயம். காந்தம் சூடன் பூரம் நிமிள் பூநீறு சவட்டுப்பு பொன்னம்பர் நிமிளை.

இரச மித்துரு

நாகம் காரீயம் மனோசிலை கெந்தகம் வெள்ளீயம் வீரம் தாளகம் வெள்ளி செம்பு துருசு சாரம் வெங்காரம் அஞ்சனக்கல் துத்தம் தீமுருகு. துத்தம். பவளப்பத்து.

உப்புப் புளி சரக்கு

	உப்பு சரக்கு	புளிச்சரக்கு
1.	அமுரி (சிறு நீர்)	1. மலம்
2.	வெடியுப்பு	2. படிகாரம்
3.	கல்லுப்பு	3. பழம்புளி
4.	சூடன்	4. துருசு
5.	கடல்நுரை	5. கற்சுண்ணநீர்
6.	சூதம்	6. கெந்தகம்
7.	காந்தம்	7. காடி
8.	அயம்	8. எலுமிச்சம் பழச்சாறு
9.	தொட்டி	9. புளியானை
10.	வீரம்	10. புளியாரை
11.	கௌரி	11. புளிமாங்காய்
12.	வெள்ளை பாஷாணம்	12. பனங்கள்
13.	வைக்கிராந்தம்	13. நிமிலை
14.	தங்கம்	14. சிலை
15.	நாகம்	15. வீரம்
16.	சாரம்	16. வெங்காரம்
17.	பச்சை கற்பூரம்	17. இந்துப்பு

மேலே காணப்படும் உப்பு. புளி சரக்குகள் வகையொன்றுக்கு பதினேழாக இருக்கிறது.

உப்புச் சரக்கைப் புளிச்சரக்கினால் கட்டி நீற்றினங்களாகச் செய்யலாம்.

நாதவிந்து சரக்கு

நாதச்சரக்கு	விந்துசரக்கு
1. இலிங்கம்	1. கல்லுப்பு
2. நிமிளை	2. வெள்ளை
3. கெந்தகம்	3. இரசம்
4. பூநாகம்	4. வீரம்
5. பூநீறு	5. சூடன்
6. அயம்	6. எவாச்சாரம்
7. காந்தம்	7. கல்மதம்
8. செம்பு	8. சிலாசத்து
9. நாகவங்கம்	9. பூரம்

மேலே காணப்படும் வகை வகைக்கு ஒன்பது சரக்குகளும் நாத விந்து தத்துவமுடையவை. இவைகள் ஒன்றோடொன்று இணைந்து கட்டிக்கொள்ளும்.

கட்டு வகைகளின் பரீட்சை

முறைப்படி கட்டப்பட்ட பாஷாணம் இலிங்கம் தாளகம் இரசம் கெந்தகம் கௌரி நவாச்சாரம் வெடியுப்பு சீனம் வீரம் பூரம் முதலியவைகள் நெருப்பிலிட்டு உருக்கினால் புகையாமல் உருக வேண்டும்.

நாகம் வெள்ளீயம் காரீயம் இவைகள் உருக்கு முகத்தில் புகையாமல் உருகி கண்விட்டு ஆட வேண்டும்.

கரியுப்பு இந்துப்பு வெடியுப்பு முதலிய உப்பினங்களின் கட்டுகளை உருக்கினால் வெடிக்காமலும் எரிந்து போகாமலும் உருகி மணியாக நிற்பதேயாகும். மேலே காணப்படுபவைகள் சரியான பரீட்சையாகும்.

உலோக மாரணம்

சூதம் கெந்தி காரம் சாரம் வெடியுப்பு வெள்ளை பூரம் வீரம் இவைகளை சமனெடைக் கல்வத்திலிட்டு தேவையான எலுமிச்சம் பழச்சாற்றால் மெழுகு பதமாக அரைத்து உலோகத் தகடுகளின் மீது சமமாகப் பூசி சீலை மண் செய்து கெஜபுடமிட்டால் உலோகங்கள் நீறும்.

சித்த மருந்துகளின் வயது

சித்த மருந்துகள் இரு வகைப்படும். அக மருந்து என்றும் புற மருந்து என்றும் இதில் அக மருந்து உள்ளுக்கு அருந்துவது புற மருந்து வெளியே உபயோகிப்பது மருந்தின் எண்ணிக்கையால் அக மருந்து 32 வகைப்படும். புற மருந்து எண்ணிக்கையில் 32 ஆக பிரிக்கப்பட்டுள்ளது.

மருந்து வகைகளின் ஆயுள் காலம்

சுரசம் சாறு குடிநீர் கற்கம் உட்களி அடை ஆக ஆறு வகைப்படும். இவற்றுள் எதைச் செய்வதாகயிருந்தாலும் அப்போதைக்கப்போது புதிதாக தயாரித்து மூன்று மணி நேரத்துக்குள் உபயோகிக்க வேண்டும்.

சூரணம், பிட்டு, வடகம், வெண்ணெய் இந்த நான்கு வகை மருந்துகளை தயார் செய்து உபயோகித்தால் இந்த மருந்துகளின் ஆயுள் மூன்று மாதங்களாகும். இதற்கு மேல் கையிருப்பில் உள்ள மருந்துகள் உபயோகமற்றவையாகும்.

மணப்பாகு (சர்பத்) நெய் (கிருதம்) சுவைப்பு (ரசாயனம்) இலகம் (லேகியம்) இந்த நான்கும் ஆறு மாதங்களே மருந்தின் வீறு தன்மையுடன் இருக்கும். பின் இவைகள் கெட்டு விடும்.

எண்ணை மாத்திரை இனங்கள் சுடுகு பக்குவம் தேன் ஊரல் தீநீர் (வாலையில் வடிப்பது) இவைகளின் வயது பன்னிரெண்டு மாதங்களேயாகும். இதற்கு மேல் உபயோகிக்க லாயக்கற்றதாகும்.

மெழுகு குழம்பு இவ்விரண்டும் ஐந்தாண்டுகள் வயதுடையனவாகும். இதற்கு மேல் கெட்டுவிடும்.

இரசப் பதங்கம் இது பத்தாண்டு காலம் வயது உள்ளது. இப்பத்தாண்டுக்கு மேல் இம்மருந்து உபயோகமற்றதாகும்.

செந்தூரங்கள் எழுபத்தைந்தாண்டுகள் வயதுடையதாகும். இதற்கு மேல் உபயோகமற்றது.

நீற்றினங்கள் (பற்பம்) கட்டு. உருக்கு. களங்கு இவை நூறு ஆண்டுகள் வரை வன்மை பெற்றது.

சுண்ணம் ஐந்நூறு ஆண்டுகள் வன்மையுடையது.

கற்பம் சத்து குரு குளிகை (இரசமணி) இவைகள் வெகு காலம் வல்லமையுடையதாகயிருக்கும்.

ஆக அகமருந்துகள் முப்பத்து இரண்டாகிறது.

புற மருந்துகள் 32-ம்

கட்டுதல் பற்று ஒத்தடம் பூச்சு வேது பொட்டணம் தொக்கணம் புகை மை பொடி திமிர்தல் கலிக்கம் நசியம் ஊதல் நாசிகாபரணம் களிம்பு சீலை நீர் வர்த்தி சுட்டிகை சலாகை பசை களி பொடி முறிச்சல் கீறல் காரம் அட்டை விடுதல் அறுவை கொம்பு கட்டல் உறிஞ்சல் குருதிவாங்கல் பீச்சு ஆக முப்பத்திரண்டு புற மருந்துகளில் மை கலிக்கம் நசியம் பசை பீச்சு இவைகள் ஒரு வருடம் வன்மையுடையவையாகும்.

புடமிடும் வறட்டியின் அளவு

பன்னிரண்டு அங்குல அகலமும் அரை அங்குல கனமும் உள்ளதாக வட்ட வடிவமாகத் தட்டி காய் வைத்தது.

புடங்களின் விபரம்

காடைப்புடம் ஒரு விராட்டி கவுதாரிப்புடம் மூன்று விராட்டி குக்குடப்புடம் சேவல்புடம் பத்து விராட்டிகள் வராக

புடம் ஐம்பது விராட்டிகள் கெஜப்புடம் ஆயிரம் விராட்டிகள் மணல் மறைவில் புடம் 90 விராட்டிகள் என்பதாகும். இது தவிர உமிப்புடம் சூரியப்புடம் சந்திரப்புடம் அமாவாசைப் புடம் பருவப்புடம் பனிப்புடம் பட்டைப்புடம் தானியப்புடம் என்பது வழக்கில் உண்டு.

சுரம் சன்னி தோஷம் இவைகளை போக்கி குணம் செய்யும் சரக்குகள்

இஞ்சி நிலவேம்பு ஆடாதொடை மரமஞ்சள் வாய் விளங்கம் மாசிப்பத்திரி மாவிலம் பட்டை கருந்துளசி ஓமம் பேராமுட்டி சடாமாஞ்சில் வலம்புரிக்காய் பெருங்குமிழ் தும்பை செந்தட்டிவேர் கருஞ்சீரகம் சீந்தில் கோரைக்கிழங்கு கஞ்சாய் கோரை கருநாவி வெள்ளை பாஷாணம் லிங்கம் பூரம் கௌரி மனோசிலை அரிதாரம் இரசசெந்தூரம் தாம்பிரபற்பம் வெண்நாவி ஏலம் பேரரத்தை திருநூற்றுப்பச்சை கிராம்பு ஊமத்தம்பூ செண்பகப்பூ இலுப்பப்பூ குங்குமப்பூ வெள்ளெருக்கம்பூ தைவேளைப்பூ நொச்சிப்பூ தும்பைப்பூ கொடிவேலி சிறுகாஞ்சொறி சிறுதேக்கு வாகைவேர் விஷ்ணு காந்தி சிவனார் வேம்பு வில்வ வேர் பேய்பீர்க்கு சிற்றாமுட்டி அவுரிவேர் விலாமிச்சம் வேர் செவ்வீயம் வேலம்பட்டை சிற்றரத்தை லவங்க பத்திரி பற்பாடகம் திரிகடுகு வேப்பெண்ணெய் பூண்டு சிற்றாண்டம் முசுருமுட்டை கண்டங்கத்திரி முருங்கைவேர் தூதுளை மூக்காவேளை கோஷ்டம் கொம்பரக்கு மல்லி மிளகரணை வன்னிமரப்பட்டை வட்ட கிலுகிலுப்பை தாளிசப்பத்திரி அருகுவேர் பேய் பாச்சானைக் கொழுந்து கண்டத்திப்பிலி மெருகன் கிழங்கு கோரோசனை கஸ்தூரி இவை எண்பத்தொன்றும் சுரம் சன்னி இக்கொடிய ரோகங்களை நீக்க வல்லமையுள்ள மருந்தினங்களாகும்.

வாதரோக நிவாரண சரக்குகள்

வாய்விளங்கம் வெள்ளை பூண்டு பெருங்காயம் சீரகம் வாதமடக்கி சிவதைவேர் குக்கில் சுக்கு நீர் வாளம் கொம்பரக்கு செண்பகப்பூ ஓமம் ஆமணக்கு இலை அவுரி ஆடாதொடை சிறுதேக்கு சதகுப்பை கருஞ்சீரகம் மரமஞ்சள் சரக்கொன்றைப் பட்டை பிற்பங்கிழங்கு அமுக்கிறாங்கிழங்கு பறங்கிப் பட்டை சித்திர முலவேர்ப் பட்டை முருக்கன் பட்டை வேப்பம் பட்டை பரட்டைக்கீரை மாவிலங்கம் பட்டை தும்பை வெள்ளுகா எருக்கு சங்கு இலை வேளை வேர் குரோசானி ஓமம் கூத்தம் குதம்பை பாச்சரணை சாறடை திருகு கள்ளி உடும்பு நெய்கடம்பவித்து தேவதாரம் மிளகரணை மஞ்சள் பொடுதலை குப்பைமேனி வேர் குங்குமப்பூ கருங்கோழி மிளகு கண்டந்திப்பிலி ஐந்திலை நொச்சி கருநொச்சி முப்புறண்டி புங்கன்வேர் சங்கங்குப்பி கௌதாரி உள்ளான் கௌரிப்பாஷாணம் அக்கிராகாரம் கடுகு காக்கணம் இந்த அறுபத்தி நான்குடன் உப்பினங்கள் உபசரங்கள் பாஷாணங்கள் இவையாவும் வாதரோகங்களை நிவாரணம் தரும் சரக்குகளாகும்.

பித்த ரோக நிவாரண சரக்குகள்

பேய்புடல் கொத்தமல்லி செண்பகப்பூ லவங்கப்பட்டை தாளிசபத்திரி சீரகம் பெருஞ்சீரகம் காட்டுச் சீரகம் சிறுதேக்கு வால்மிளகு கோஷ்டம் சிவதை வேர் மொசு மொசுக்கை கழுதைப்பால் அதிமதுரம் அரிநெல்லி ஏலம் முந்திரிப்பழம் இலந்தைப் பழம் இம்பூரல் இளநீர் பச்சைக்கற்பூரம் ஈச்ச வெல்லம் குங்குமப்பூ நெல்லி முள்ளி தான்றிக்காய் அக்கிராகாரம் சடாமாஞ்சில் செவ்வியம் எலுமிச்சம்பழம் இஞ்சி கடாநாரத்தை அல்லிப்பூ வல்லாரை கரும்பு சக்கரை சிறுபயறு நன்னாரி கருவேப்பிலை வாலுளுவை பற்பாடகம் நீராரை பசலி மணலிக்கீரை பேய்கும்மட்டிப்பழம் களாவேர் கிரந்தி நாயகம் நெய்தார்கிழங்கு பொடுதலை பெருதும்பை பேய்முசுட்டை கீழ்க்காய் நெல்லி. சந்தணம் பேரீச்சம்பழம் கோரைக்கிழங்கு

குருவைக் காடி (குருவைக்காடி என்பது குருவை அரிசியால் சமைத்த சாதத்தில் வெந்நீர் விட்டு ஆறு மாதங்கள் வரைப்புளிப்பேற்றியது. அதை போகர் 7000-த்தில் காணலாம்) வில்வவேர் இந்த ஐம்பத்தாறு சரக்கும் பித்த ரோகங்களை நீக்கும் வல்லமையுடையது.

சிலேத்தும ரோக நிவாரண சரக்குகள்

சிற்றரத்தை வால்மிளகு நெல்லிமுள்ளி - திப்பிலி பேரரத்தை சிறுதேக்கு தேவதாரம் கோஷ்ட கடுக்காய் யானைத்திப்பிலி வெள்ளைப்பூண்டு மிளகு ஓமம் தேன் பிரமி வல்லாரை கற்கண்டு முள்ளிக்கீரை வாய்விளங்கம் இரண்டு செவியம் சடாமாஞ்சில் கருஞ்சீரகம் காக்கணம் கண்டங்கத்திரி கச்சாரத்தம் பழம் குப்பைமேனி வேர் அரிதாரம் இந்துப்பு வாளம் தேற்றான் விதை இம்பூரல் அத்திவிதை அரசன் விதை கொட்டைப்பாக்கு சிறு செறுப்படி கரிப்பான் அழிஞ்சி மரவேர் பெருங்காயம் கடுகு எருமைக் கிடாரியின் சாணியின் பால் அதிமதுரம் செண்பகப்பூ லவங்கப்பட்டை செந்தொட்டிவேர் நன்னாரி மொசு மொசுக்கை கஸ்தூரி லவுங்கப்பத்திரி தாளிசபத்திரி காட்டுச் சீரகம் நாக்கிளாம் பூச்சி வேப்பெண்ணெய் கஞ்சாங்கோரை முயல் முள்ளெலி சாதிக்காய் தான்றிக்காய் பழம் தின்னும் வெளவால் வில்வவேர் பச்சை மஞ்சள் சாரையின் நெய் இலுப்பைப் புண்ணாக்கு சிவதை ஏலம் நெல்லிக்காய் கடம்பை வித்து வெள்ளாட்டின் நெய் பால் குங்குமப்பூ விஷ்ணுகாந்தி பறங்கிப்பட்டை உகா இலை. உடும்பு நெய் உருக்கு செந்தூரம் முசுருமுட்டை முள்கத்திவேர் சிற்றண்டத்தின் நெய் வாலுளுவை சங்கம்பழம் அக்கிராகாரம் வெற்றிலை கோரைக்கிழங்கு ஆதண்டவேர் அமுக்கிரா கிழங்கு கஸ்தூரி மஞ்சள் வெளிச்சிபிசின் ஆகத்தொண்ணூற்று ஆறும் சிலேத்தும ரோக நிவாரணிகள்.

ச்ரக்கின் சுத்தி முறைகள்

இலிங்கம்:- மேனிச்சாறு பழச்சாறு முலைப்பால் இம் மூன்றும் சமன் கலந்த கலவை அல்லது செம்பரத்தம் பூச்சாறு நத்தச்சூரிச்சாறு இவைகளில் ஒன்றில் நான்கு சாமம் சுருக்கு கொடுக்கவும்.

வீரம்:- இளநீரில் மிளகையும் சூடனையும் பொடித்துக் கலக்கி குடுவையில் விட்டு அதில் படாமல் வீரத்தை கட்டித் தொங்கவிட்டு கலவை சுண்ட எரித்து எடுத்துக்கொள்ளவும்.

பூரம்:- முலைப்பாலில் மிளகு அரைத்துக் கலக்கி வெற்றிலை சார் இவைகளில் ஒன்றில் சுருக்குங் கொடுக்கவும்.

வெள்ளைப் பாஷாணம்:- ஒரு பலம் மிளகு அரைத்துக் கலக்கிய ஒரு படி அமுரி பூநீறும் சுண்ணாம்பும் கலந்த ஒரு அமுரி அல்லது மிதிபாகற்சாறு இவைகளில் ஒன்றில் கொதிக்க வைத்து எடுத்துக் கொள்ளவும்.

கௌரி:- பன்றி நெய்யில் ஒரு சாமம் சுருக்குக் கொடுக்கவும்.

மனோசிலை:- ஆட்டுக் கோமியம் காடி அல்லது எலுமிச்சம் பழச்சாறு இவைகளில் ஒன்றில் கொதிக்க வைத்து எடுக்கவும்.

பவளபத்து:- ஆவின் மோரில் ஒரு சாமம் கொதிக்க வைக்கவும்.

தாளகம்:- கழுதைக் கோமியத்தில் கல் சுண்ணாம்பும் உவர் மண்ணும் கலந்து அதில் தளாகத்தை துலாந்தரமாகத் தொங்கவிட்டு நீர் சுண்ட எரித்து வெந்நீரில் கழுவி காய வைக்கவும்.

கல்நார்:- ஆவின் கோமியத்தில் கொதிக்க வைக்கவும்.

கெருடப்பச்சை:- கற்றாழைச்சாற்றில் சிறு துண்டுகளாக உடைத்துப்போட்டு கொதிக்க வைக்கவும்.

பொரிகாரம்:- எருமை சாணிப்பாலில் கிளிகட்டி எரித்து எடுத்துக்கொள்ளவும்.

குக்கில்:- எருமை மோரில் ஒரு நாள் ஊரவைத்துக் கழுவி எடுத்துக்கொள்ளவும்.

குந்திருக்கம்:- சாராயத்தில் ஒரு நாள் ஊர சுத்தியாம்.

வெண்காரம்:- அமுரியில் ஒரு நாள் சுத்தி.

இரசசுத்தி:- இரசத்தின் எடைக்கு நான்கு பங்குகள் கொண்ட செங்கலத்தூள் வெற்றிலைச்சாறு இவற்றில் 4 மணி நேரம் அரைத்துக் கழுவி மண் நீக்கி இரசத்தை சுத்தமாக எடுத்துக் கொண்டு புகையூரல் மஞ்சள் பொடி உப்பு மேனிச்சார் பிரண்டைச்சார் இஞ்சிசார் முதலியவைகளில் தனித்தனியாக 4 மணி நேரம் அறைத்து அலம்பி காய வைத்துக் கொள்ளவும்.

மிருதார்சிங்கி:- வெள்ளாட்டு கோமியத்தில் வேகவைத்து எடுத்து சுத்தம் செய்து மறுவலும் பசும்பாலில் வேகவைக்க சுத்தி.

துருசு:- பசுவின் கோமியத்தில் கிளிக்கட்டி எரிக்க.

அஞ்சனக்கல்:- புளியாரைச் சாற்றில் ஒரு நாள் ஊர வைக்கவும்.

அயம்:- எலுமிச்சம் பழச்சாற்றில் நல்லெண்ணெய் வகைக்கு இரண்டு நாள் ஊறி அலம்ப சுத்தி.

தாம்பிரம்:- புளி நரளைக்கிழங்கை அறைத்து ஒரு தேங்காய்ப் பிரமாணம் தாம்பிரத்தகட்டில் பொதித்து சீலைமண் செய்து கனபுடமாகப் போட சுத்தியாம்.

நாகம்:- இலுப்ப எண்ணெயில் பத்து தடவையும் பசுவின் கோமயத்தில் பத்து தடவையும் உருக்கி சாய்க்கவும்.

காந்தம்:- கொள்ளு வேக வைத்த தண்ணீரில் காய்ச்சி தோய்க்க சுத்தி.

காரீயம். வெள்ளி:- இவைகளை நல்லெண்ணெய் விட்டு உருக்கி பிரண்டைச்சாறும் கோமூத்திரமும் சமன் கலந்த கலவையில் 10 தடவை உருக்கிச் சாய்க்கவும்.

பொன்னிமிளை:- காடியில் கொதிக்க வைக்க.

அப்பிரகம்:- காடியில் பத்து நாட்கள் ஊர சுத்தி.

நேர்வாளம்:- எருமைச் சாணியைக் கறைத்து அதில் வேக வைத்தெடுத்து தோடு மூளை இவைகளை நீக்கி எலுமிச்சம் பழச்சாற்றில் ஒரு நாள் ஊர வைத்து அலம்பி காய வைத்து மறுவலும் பசும்பாலில் சுண்ட வேக வைத்து எடுத்து அலம்பி காய வைத்து சிறிது விளக்கெண்ணெய் சேர்த்து வறுத்துக் கொள்க.

சேங் கொட்டை:- கால்படி கற்சுண்ணாம்பில் பத்துப்பலம் கொட்டைகளைச் சேர்த்து தண்ணீர் விட்டு சுண்ணாம்பு நீர்தபின் மறுபடியும் தண்ணீர் விட்டு யாவற்றையும் கலக்கி அடுப்பில் வைத்து நீர் சுண்டக்காய்ச்சி கொட்டைகளை எடுத்து அலம்பிக் காயவைத்தபின் எருமைச் சாணிப் பால் புங்கயிலை கசாயம் புளிய இலைக்கசாயம் இவற்றில் கொதிக்க வைத்துக் கொள்ள சுத்தி.

மூக்கரைச்சாரணைவேர் பறங்கிப்பட்டை அமுக்கிரா காட்டுக்கரணை புளியமடல் பிரண்டை வேர் தோன்றி இவைகளின் கிழங்குகளையும் பொதுவாக சூரண மருந்தாக தயார் செய்யும் சூரணங்களையும் சிறிது ஆவின் பால்விட்டுப் பிசரி அடிச்சட்டியில் அரைப்படி பசுவின் பால் கால்படி தண்ணீர் விட்டு மேலே ஏடுகட்டி அதில் அந்த சூரணத்தையும் வைத்து புட்டவியலில் செய்து எடுத்துக்கொள்ள சுத்தியாம்.

பொதுவாக சகல பாஷாணங்களையும் சுத்தி செய்ய ஒரே வழியாதெனில் சுத்தி செய்ய வேண்டியவற்றை பாக்குப் போல் உடைத்து ஒரு துணியில் அதை முடிந்துவைத்துக் கொண்டு ஒரு குண்டுச்சட்டியில் ஒருபடி சிறுகீரைச் சாற்றை விட்டு அதில்

ஒரு பலம் மிளகை பொடித்துப் போட்டிக் கலக்கி அதில் முடிந்து வைத்திருக்கும் பாசாண மூடியை அச்சட்டியில் படாமல் கட்டித் தொங்கவிட்டு சார் சுண்ட எரித்து முடிச்சை எடுத்து வெந்நீர் விட்டு அலம்பி காயவைத்து கொள்வது உயர்ந்த சுத்தி முறை இது ஒன்றே.

தீனிப்பை

தீனிப்பை கண்ணீரலுக்கும். கல்லீரலுக்கும் மத்தியில் ஆகாரம் தங்கும் இடமாக இருக்கின்றது.

இப்பையானது உண்ட ஆகாரத்தைச் சேர்த்து வைக்கும் இடமாக இருந்தாலும். கல்லீரலினின்றும் வெளிப்படும் பித்த நீரானது துளி துளியாக ஆகாரத்தின் மேல் விழ விழ கடின வஸ்துக்களாயிருக்கும். ஆகாரங்கள் கரைந்து பெருகுடல் சிறுகுடல்களில் காற்றின் சகாயத்தால் நுழைந்து மெள்ள மெள்ள மலப்பையை அடைகின்றது. இது சமயம் அதில் கலந்துள்ள நீரை நீர்ப்பைக்குச் செல்லச் செய்யும் ஒரு உறுப்பு இருந்து கொண்டு நீரைப் பிரித்து விடுகின்றது. இதுவே கிட்னி எனப்படும்.

தீனிப்பையில் வீக்கம் கண்டால் வாந்தியை உண்டு பண்ணும். தவிர. ஆயாசமும் நேரும். இதற்குத் தீனிப்பைக்கு மேல் பாகத்தில் கடுகு பத்து போடுவதுண்டு. கடுகு பத்தானது போட்ட சில நிமிடங்களுக்குள் எரிச்சல் காணும். அப்படி எரிச்சல் கண்டால் உடனே மேல் போட்டுள்ள பத்தை எடுத்துவிட வேண்டும். இல்லாவிடில் புண்ணாகிவிடும்.

தீனிப்பையில் இரணம் ஏற்படில் வலி காணும். வாந்தியும் ஏற்படும். அன்றியும் உண்ட ஆகாரம் ஜீரணிக்கமாட்டாது. எனவே பசிமந்தம் காணப்படும். மலம் சீர்கேட்டையும் நீரும் சரியாய் இரங்கமாட்டாது.

கல்லீரலுக்கும் தீனிப்பைக்கும் மத்தியில் இரணம் ஏற்படுமானால் குன்மம் என்று சொல்லப்பட்ட வயிற்றுவலி காணும். இதை எட்டு விதமாக பிரித்து பெயர்கள் கூறினாலும்

மூலக்காரணம் ஒன்றேயாகும். அதிலும் சில மாறுதல்கள் கூறலாம். அம் மாறுதலானது இரணம் உள்ள இட பேதத்தைக் காட்டும். இடபேதத்தால் குண வித்தியாசங்கள் நோயாளிகளுக்கு காணப்படும். இதனால் சிகிச்சை வேறுபடும். ஆகவே நோய் வித்தியாசத்தையும் இட் பேதத்தையும் மருந்தின் பேதத்தையும் கண்டே வியாதியை எட்டாகப் பிரித்தார்களேயொழிய வேறில்லை. ஆனால் யாவற்றிற்கும் காரணம் இரணமேயாகும்.

கல்லீரலிலிருந்து தீனிப்பைக்குப் போகும் வழியில் கீழ்ப்பாகத்தில் இரணம் ஏற்பட்டிருப்பின் அன்னவர்களுக்கு ஆகாரம் உண்ட உடனே வயிற்றுவலி காணும். சிலருக்கு வாந்தியும் ஏற்படும். மேல் பாகத்தில் இரணம் ஏற்படில் உண்ட ஆகாரம் ஜீரணிக்கும் காலத்தில் வயிற்றுவலி காணும். ஆக இவ்விரண்டு வகையில் குன்ம நோயைச் சுருக்கிக் கொண்டு அதன் சிகிச்சைகளைக் கூறலாம்.

ஆகாரம் உண்ட உடனே வயிற்றுவலி காணப்பட்டவர்களுக்கு சீக்கிரம் குணம் தரும் மருந்துகள் பல இருக்கின்றன. அவற்றில் சோடாமாவு. இந்துப்பு. அன்னபேதி. பிரண்டை உப்பு. பூநீர். காடி. நெல்லிக்காய் லேகியம் முதலான மருந்துகளைக் கொண்டு நோயை நிவர்த்தி செய்து கொள்ளலாம். முக்கியமாய் உஷ்ணத்தைக் குறைக்கும் எம்மருந்தினாலும் இந்நோய் நீங்கி விடும். சில சமயங்களில் விளக்கெண்ணெயினாலும் குணமாய்விடும்.

உண்டபின் நாலுமணி நேரம் கழித்து வயிற்றில் ஆகாரம் குறைந்த காலத்தில் ஏற்படும் வலியானது நீங்குவது கஷ்டமாகும். ஏனெனில் இத்தகையார்களுக்கு ஏற்பட்டுள்ள இரணமானது ஆறாத மேக இரணமாகும். இதை ஆங்கிலேயர் (கான்சர் ஆப் தி ஸ்டமக்) என்பர். சாதாரண மருந்துகளால் இந்த இரணம் ஆறிவிட மாட்டாது. எனவே இதைக் கஷ்டமானதாகவும் கர்ம வினை நோயாகவும் மதிக்கின்றார்கள். இந்த நோயானது உண்டாவதின் காரணத்தைக் கவனிப்போமானால் பெரும்பாலும் வேளைக்கு ஆகாரம் ஒழுங்காக உண்ணாமல் ஒரு நாளைக்கு

பத்து மணிக்கும் மற்றொரு நாளைக்கு நாலு மணிக்கும் பசி அடங்கிய பின்னும் ஆகாரம் கொள்ளல் ஆகிய இத்தகைய ஆகாரம் உண்ணும் கால பேதத்தால் சில ஆண்டுகளில் இரணம் ஏற்பட்டு இரணம் அதிகரித்த பின் வலி ஏற்படுகின்றது. இதைச் சுலபத்தில் நிவர்த்திக்க முடியாததால் பல சரக்குகளைச் சமாதானத்திற்காக எழுதி வைத்துள்ளார்கள்.

எனவே இத்தகைய நோயாளியின் வயிற்றில் ஏற்பட்டுள்ள மேக இரணத்தை ஆற்றக்கூடிய பெரிய மருந்துகளையோ அல்லது பச்சிலைகளையோ கொடுத்து இரணத்தை ஆற்றினாலொழிய நோய் குணமாவதில்லை.

இந்த நோய்க்கு ஆங்கிலேயர் சோடா பைகார்ப் மிக்சரும். மாக்சல்ப் மிக்சரும். டிங்சர் ஓடியம் மிக்சரும். பிஸ்மத் மிக்சரும். லிவர் எக்ஸ்டிராக்ட்டும். பெலடோனா நியூட் ரோலா என்னும் ஆகாரமும் கொடுத்து வருகின்றனர். அவற்றில் சிலருக்குக் குணமாகவும் காணப்படுகின்றது. எனினும் சிலர் மார்பியா என்னும் கொடிய மயக்க வஸ்துவை குறைந்த பாகமாக உபயோகித்து அவ்விரணத்தை மறக்கச் செய்கின்றனர். இதனால் சிலர் இரண்டு மூன்று ஆண்டுகள் நோயின்றி வாழ்கின்றனர்.

இந்தியர் எண்ணிறந்த மருந்துகளை இதன் நோய்க்காகக் கூறி வைத்தனர். அவற்றுள் முக்கியமானவை ஆராத இரணத்தை ஆற்றக்கூடிய மருந்துகளே சிறந்தவைகளாகும்.

அவை யாவையெனில் மயில் துத்தத்தால் செய்த மருந்து. செப்பால் செய்த மருந்து. தங்கம் அல்லது இரணத்தை சீக்கிரத்தில் ஆற்றக்கூடிய மூலிகைகள் ஆன இவைகளின் பாக மருந்துகளால் நோய் நீங்கும் அல்லது மோர் ஆகாரத்தையே உண்டு வாழ்வதாலும் இந்நோய் நீங்கும்.

இந்நோய்க்கு வாயுவை அதிகரிக்கச் செய்யும் எந்தக் கிழங்கு வகைகளையும். பருப்பு வகைகளையும் நீக்க வேண்டும். உப்பு சுண்ணங்களால் இந்நோய் நீங்கி விடும்.

உப்பு சுண்ணத்தை முன்னமேயே சொல்லியிருப்பதால் இங்கு அதை கூறவில்லை.

மயில்துத்த ப்ஸ்பம் செய்ய வேண்டுமானால் கீழ்க்குறித்தவாறு செய்து கொள்ளலாம்.

மயில் துத்த பஸ்பம்

மயில் துத்தம் 1 பலமும் 4 பலம் வேப்பிலையும் சேர்த்து அறைத்து பில்லைதட்டி உலரவைத்து குடுவையில் வைத்து 20 எரு மூட்டையில் புடம் போடக் கருப்பான பஸ்பமாய்க் காணும். மீண்டும் அப் பஸ்பத்துடன் 4 பலம் வேப்பிலையை மாத்திரம் சேர்த்து அரைத்து முன் போல காய வைத்து புடமிட்டபின் கருப்பாய் இருக்கும். பஸ்பத்தை புட்டியில் பதனம் செய்து காலை மாலைகளில் நெய் அல்லது தேனில் ஒரு அரிசி எடை கொடுத்துவர சில வாரங்களில் இரணம் ஆறி நோய்கள் நீங்கும். இப்பஸ்பத்தை எங்கு ஏற்பட்ட ஆராத இரணமாகயிருந்தாலும் உபயோகிக்கலாம்.

தீனிப்பை சுருங்கி விடுமானால் குடலும் சுருங்கி விடும். கல்லீரலும் சுருங்கிவிடும். கல்லீரல் சுருங்கினால் இருதயமும் சுருங்கும். இருதயமும் சுருங்கினால் கை, கால், வயிறு முதலானவை வீங்கிவிடும்.

பெரும்பாலும் இந்நோயானது அதிகமாக குடிப்பவர்களுக்கே உண்டாகின்றது.

மேற்சொன்ன வகையில் ஏற்பட்ட நோயானது சரீரத்தை அக்கினிப் பிரவேசம் செய்யவோ அல்லது மண்ணில் மறையவோ செய்துவிடும்

தீனிப்பைக்குச் செலுத்தும் ஆகாரமானது முக்கியமாய் கவனிக்கத்தக்கது. தீனிப்பையிலிருந்து ஏற்படக்கூடிய நன்மை தீமைகள் பலவுள.

முதலிலே தீனிப்பைக்குள் செலுத்தும் ஆகாரத்தை உமிழ்நீர் சேர்த்து செலுத்த வேண்டும்.

உமிழ் நீரைத் தீனிப்பைக்குள் ஆகாரத்துடன் செலுத்த வேண்டுமானால் நன்றாக மென்று தின்னக் கூடிய ஆகாரத்தை உட்கொள்ள வேண்டும்.

ஆகாரத்தை மென்று தின்றால்தான் உமிழ்நீரை என்னும் (சலைவா) ஒரு திரவம் ஆகாரத்துடன் கலந்து தீனிப்பைக்குள் வந்து கலக்கும். பித்தம் (ஐட்ரோ குளோரிக் ஆஸிட்) கலந்து ஆகாரம் குறைந்து மிருதுவாக்கப்பட்டு குடலில் நுழைகின்றது.

தீனிப்பையிலிருந்து இரத்தசாயபைக்குப் பதினாறில் ஒரு பங்கு இரத்தமானது உண்ட ஆகாரத்திலிருந்து போகக்கூடியதாதலால் உண்ணப்பட்ட ஆகாரத்தில் இரத்தத்தை அதிகப்படுத்தும் சக்தி வாய்ந்த வஸ்துக்களை உண்ணல் வேண்டும்.

நம்முடைய தேகத்தை பாதிக்கக்கூடிய ஆகாரத்தை உட் செல்ல வொட்டாதபடி இயற்கையில் நமது நாவிற்கு அமைக்கப்பட்டிருப்பதால் நாவானது நமக்குத் தீமையைச் செய்யும் ஆகாரத்தை உட்செல்ல வொட்டாதபடி தடுக்கும்.

நாம் நீண்ட நாள் உயிர் வாழ வேண்டுமானால் திரவ பதார்த்தங்களையும், கீரை வகைகளையும், பழ வகைகளையும் உண்டு வாழ வேண்டும். நாவின் ருசியைக் கருதி இனிப்பு, புளிப்பு, கசப்பு, உவர்ப்பு, காரம் இவைகளைக் கூட்டி உண்ணும் ஆகாரம் உசிதமன்று. எனினும் வழக்கத்தில் உண்டு பழகியதால் அதனைப் பாகுபடுத்தி உண்ணல் நலம்.

தீனிப்பைக்குள் செலுத்தும் ஆகாரம் நெய் அல்லது எண்ணெய்ப் பசை உள்ளதானாலும் சரி அல்லது திரவ மூலமானாலும் அதனையே முதலில் சாப்பிட வேண்டும்.

இரண்டாவதாக காரம், இனிப்பு வகைகளைச் சாப்பிட்டு மூன்றாவது புளிப்புள்ள வஸ்துவைச் சாப்பிட வேண்டும்.

புளிப்புள்ள வஸ்துக்கள் சீக்கிரம் ஜீரணிக்கச் செய்யும் வஸ்துக்களில் சேர்ந்தவை.

எனவே ஆகாரத்திற்கு பின் புளிப்புள்ள காடி நீரோ அல்லது மோரோ ஆக ஏதாவதொன்றை உண்ணல் வேண்டும். இம் முறையில் உண்ணும் போதும் சில நோய்கள் காணும். அதாவது தீனிப்பைக்குச் செல்லும் ஆகாரங்களில் புழுக்களை அதிகப்படுத்தச் செய்யும். ஆகாரங்கள் பல இருப்பதால் நாம் உண்ணும் ஆகாரத்தினால் புழுக்கள் அதிகப்படுகின்றது. புழுக்களை நாசம் செய்வதில் முதன்மை பெற்றது பித்தமாகும். இப்பித்தத்தினால் தான் புழுக்கள் அதிகப்படாமல் நாசமடைகின்றன. ஆனால் பித்தத்தினால் நாசமடையாத சில புழுக்களும் தீனிப்பயில் காணப்படுகின்றன. அப்புழுக்களை பூதக்கண்ணாடியால் மலத்தில் பார்க்கத் தெரிய வரும்.

பித்தத்தால் நாசமடையாத புழுக்கள் மோர். பால், தயிர் ஆகிய இவைகளால் உண்டாகும் புழுக்களுக்கு நிகரானவை. இப்புழுக்கள் மோர். பால் சாப்பிடுவதால் பெருகுகின்றன என்றாலும் அவை சரீரத்தை கெடுக்கும் புழுக்கள் வகையை சேர்ந்தவையன்று.

எனவே பால் மோரினால் ஏற்பட்ட புழுக்களோ அல்லது தானாக உண்டாகிப் பித்த நீரில் இறக்காத புழுக்களோ எப்படியும் நம் சரீரத்தில் பெருகி விடுகின்றமையால் அத்தகைய புழுக்களை நாசமடைய செய்யவே மாதம் ஒரு முறை பசுவின் சாணம். பசுவின் சிறுநீர் ஆக இவ்விரண்டையும் சாப்பிடச் சொன்னது: சாணத்தையும், நீரையும் ஒருவரும் உண்ண முடியாது. ஆதலால் பாலும். தயிரும் அதில் சேர்த்து மாதம் ஒருமுறை சாப்பிட வேண்டும். இவ்வாறு சாப்பிட்டால் அப் புழுக்களால் ஏற்படும் வயிற்றுவலி. பேதி முதலான வியாதிகள் உண்டாகமாட்டா.

இக்காரணம் பற்றியே சில வைத்தியர்கள் தங்களுக்குத் தெரிந்தோ தெரியாமலோ நேர்வாளத்தில் மிகுதியாகவோ அல்லது விஷபேதியாலோ உஷ்ணத்தாலோ ஏற்படும்

மலக்கழிச்சலை நிறுத்த வேண்டி சாணிப்பாலைப் பிழந்து தயிரில் கொடுத்து பேதியைப் போக்குகின்றனர்.

தீனிப்பையிலிருந்து குடலுக்குச் செல்லும் வழியில் டூடினம் என்னும் ஒரு கருவி இருக்கின்றது. இக்கருவியில் இரணம் ஏற்பட்டால் வயிற்றுவலி உண்டாகும். இதனையும் குன்ம நோய் என்று கூறலாம்.

சுவாசப்பை குவிந்து விரியும் போது தீனிப்பையும் குவிந்து விரியும். தீனிப்பை குவிந்து விரிவதால் தீனிப்பையில் காற்று உண்டாகி அங்கிருக்கும் வஸ்துக்களைத் தள்ளிக்கொண்டு குடல்களில் நுழைந்து மலப்பையில் வந்து ஆசனத் துவாரத்தின் வழியாக வெளிப்பட்டு விடுகின்றது.

இப்படித் தீனிப்பையில் உண்டாகும் காற்றானது நிமிடம் ஒன்றுக்கு ஒன்றின் பின் ஒன்றாக கடலில் வரும் அலைகளைப் போல் இருபது தரம் ஏற்படுவதினால் தீனிப்பையிலிருக்கும் ஆகார வகைகளோடு கலந்து புசித்த சிறுகற்களும் குடலில் நுழைந்து மலப்பையில் வந்து சேர்ந்து வெளிப்பட்டுவிடும். சில சமயங்களில் அக்கற்களானவை குடல் ஓரங்களில் பிடித்துக் கொள்ளுமானால் குடல் புண்ணாவதுண்டு. ஒவ்வொரு அலையாகிய காற்றின் பிரவேச காலத்தில் குடலுக்குள் செல்லும் மலம் கல்லின்மேல் உறைந்தால் வலிகாணும். இவ்வலியை அப்பெண்டிசிட்டிஸ் எனவும் பக்கசூலை எனவும் கூறுவர்.

இந்நோய் கண்டவர்கள் வலியைத் தாங்காமல் புரண்டு அழுவதைக் காணும் மக்கள் மனம் பரிதாபப்படும். இதன் விபரத்தைக் குடலைப் பற்றி எழுதும் போது விரிவாக எழுதலாம்.

தீனிப்பையில் உள்ள ஆகாரத்தின் மேல் உஷ்ணம் அதிகப்பட்டு பித்தம் அளவுக்கு மேல் வந்து சேருமானால் ஏப்பமும், வாந்தியும் காணும்.

இதனைப் பித்த உபரிநோய் என்றும் பித்த வாயு என்றும் கூறுவர். பித்த வாயு என்னும் நோயைப் பல பிரிவாக பிரிக்கலாம்.

இருதய வலியையும் வயிற்று வலியுடன் உப்பலையும் பித்தவாயு என்றே சொல்லுவர்.

தீனிப்பையில் போய்ச் சேரும் ஆகாரமானது அன்னக்குழல் மூலமாக அன்ன கோசத்திற் போய்ச் சேருகிறது. அங்கு ஜடராக்கினி (காஸ்டிரிக் ஜூஸ்) என்னும் திரவ பதார்த்தம் அதில் கலக்கிறது. அதனாலேயே உண்ட ஆகாரம் மிருதுவாகின்றது. அதன் பின் பித்தப் பையிலிருந்து பித்தம் துளித் துளியாக மாறி மாறி வந்து விழுந்து ஆகாரத்தை ஜீரணிக்கச் செய்கின்றது. ஜீரனித்த ஆகாரமானது திரவ பதார்த்தத்தை யொத்ததாகின்றது. ஜீரணத்திற்கு வராத சில ஆகாரங்களும் குடலுக்குள் பிரவேசிக்கும் ஆனால் அவை குடலிலும் ஜீரணமாகிவிடலாம்.

நாம் உட்கொள்ளும் ஆகாரங்களில் சதையை வளர்க்கக் கூடியதும், உஷ்ணத்தை தரக் கூடியதும் இரத்தத்தை பெருக்கக் கூடியதும், எலும்புக்கு உப்பு சத்தை உண்டுபண்ணக் கூடியதும், எண்ணெய்ச் சத்தைப் பெருக்கக் கூடியதுமான பல ஆகாரங்கள் உள.

ஆகவே மக்கள் இவைகளை உத்தேசித்தே வெண்ணெய், நெய், பால், தயிர் காய்கறிகள், முட்டை, கிழங்கு வகைகள் முதலானவைகளைச் சேர்த்து ஆகாரத்தோடு புசிக்கிறார்கள்.

நாம் உட்கொள்ளும் ஆகாரமானது தீனிப்பையில் கொஞ்சம் குறைவாகவே இருக்க வேண்டும்.

ஆகாரத்தை மென்று தின்பதால் உமிழ்நீர் கலந்து தீனிப்பைக்கு செல்லும். உமிழ்நீர் கலந்த ஆகாரம் சீக்கிரத்தில் ஜீரணமாகும். ஆகாரம் உண்டபின் 24 மணி நேரம் கழித்தால் உண்ட ஆகாரம் பூராவும் ஜீரணமாகிவிடும். எனவே நாள் ஒன்றுக்கு ஒருதரம் தான் ஆகாரத்தை புசிக்க வேண்டும். அதையறியாமல் 4 மணி நேரத்திற்கெல்லாம் போட்டடைத்து வருவதால் பழக்கத்திற்கு வந்து விடுகின்றது. அத்தகைய பழக்கமுள்ளவர்களுக்கு 4 மணிக்கு ஒரு தரம் பசியுண்டாகின்றது.

நாலு மணிக்கு ஒரு தரம் உண்பவர்கள் பலவித நோயால் வாடுகின்றனர். பலவீனமாகவும் காணப்படுவர். அத்தகையோர்களுக்கு அற்ப ஆயுசும் காணப்படும். எனவே 24 மணி நேரத்திற்கு ஒருமுறை சாப்பிடுவதே தேக ஆரோக்கியத்திற்கு மேலானது. இத்தகையோர்களுக்கு குறைந்த அளவில் மலம் தள்ளும். இவர்கள் பேதிக்குச் சாப்பிட வேண்டிய அவசியம் ஏற்படாது. இவர்களைப் பசிமந்தம், பித்தம், சோம்பல், வயிற்றுவலி முதலானவை பற்ற மாட்டா.

தீனிப்பையில் இரணமும் வீக்கமும் ஏற்படில் வாந்தியும் இருமலும் காணும் இதற்குக் காரணம் பலவிருப்பினும் சிலவற்றை இங்கு குறிப்பிடுகிறது.

இடுமருந்து சோதனை

சில அறிவிலிகள் வசியம் செய்துக் கொள்ளும் பொருட்டு இடு மருந்து எனும் விஷ வஸ்துக்களைப் பாலில் அல்லது காபியில் கலந்து கொடுப்பார்கள். அம்மருந்தானது தீனிப்பையில் கறையாமல் ஒதுங்கி நின்று பாசிப்படிந்து உருண்டையாய் தங்கி இருந்து கொண்டு தொந்தரவைக் கொடுக்கும்.

அன்னவர்களுக்கு எத்தகைய மருந்து கொடுப்பினும் குணப்படுவதில்லை.

மருந்து இருப்பதாய் கருதும் நோயாளியின் கையில் மிதிப்பாகல் இலையின் ரசத்தைப் பிழந்தால் அவ்விரசமானது உறைந்து கட்டியாய் விடும். அப்படியுள்ளவர்களின் தீனிப்பைப் பள்ளமாகக் காணப்படும்.

இவ்வியாதிக்கு முருங்க இலையை இடித்து ரசம் வாங்கி அதனுடன் முத்தின தேங்காய் பால் பிழிந்து சமனாகக் கலந்து வேளை ஒன்றுக்கு ஒரு அவுன்சு வீதம் நாள் ஒன்றுக்கு மூன்று தரம் கொடுத்துவர இடு மருந்து முறியும்.

கோழி மாமிசத்தை எலும்புகளுடன் சேர்த்து

முருங்கயிலையைச் சேர்த்து சூப்பு செய்து அச்சூப்பில் 4 மணி நேரத்திற்கு ஒரு முறை வேளை ஒன்றுக்கு இரண்டு அவுன்சு விகிதம் கொடுத்தால் மருந்து வெளிப்பட்டுவிடும்.

இரண்டு நாள் மேல் சொன்னபடி மருந்தை கொடுத்துவிட்டு மூன்றாவது நாள் ஏதாவது பேதி மருந்தை முருங்க இலை சாற்றில் கொடுக்க இடு மருந்து வெளிப்பட்டுவிடும்.

சிலருக்கு வாந்தி கண்டு அதன் மூலம் உருண்டையாய் இருந்து வெளிப்படும்.

மருந்து வெளிப்பட்ட பிறகு பவழ பஸ்பம் அல்லது அதிமதுரப்பால் முதலான இருமலுக்கும் கொடுக்கும் மருந்துக்களைக் கொடுத்து வர வேண்டும்.

சில சமயம் இரண்டாம் முறை பேதிக்குக் கொடுக்க வேண்டுமெனக் கருதினால் ஒரு மாதத்திற்கு பிறகே பேதி மருந்தைக் கொடுக்கவும்.

இடுமருந்தினால் பலர் இன்ன நோய் என்று தெரிந்து கொள்ள முடியாமல் பல மருந்துக்களைக் கொடுத்து நோய் நீங்காமல் மாண்டு விடுகின்றனர்.

சிறுகுடல்

சிறு குடலானது தீனிப்பையிலிருந்து ஆரம்பிக்கப் படுகிறது. குடற்குள் பிரவேசிக்கப்படும் ஆகாரமானது பையப் பைய தள்ளப்படுகின்றன. அதாவதுகடலலையைப் போல் காற்றின் விடுதல் விரிதலான ஆகாரத்தைத் தள்ளிக்கொண்டு சென்று பெருகுடலின் மூலம் மலப்பைக்குக் கொண்டு போய் சேர்க்கின்றது.

நாம் தினம் தினம் உட்கொள்ளும் ஆகாரத்தில் உள்ள சிறுகற்கள் குடலுக்குள் பிரவேசித்து மலப்பையை அடைந்து வெளிப்பட்டுவிடும்.

சில சமயம் குடற்குள் பிரவேசித்த கற்களானது குடலோரத்தில் பதிந்து விடுவது உண்டு. அப்படி படியுமானால் அவ்விடம் புண்படும் தவிர ஆகாரத்தைத் தள்ளும் காற்றின் மூலம் படிந்துள்ள கல்லின் மேல் ஆகாரம் தாக்குமானால் உடனே ஒரு ஈட்டியில் குத்தினது போலொத்த பாதை ஏற்படும். இதனை இந்தியர்கள் பக்க சூலைவியாதி என்றும் ஆங்கிலேயர்கள் அபெண்டிசிடிஸ் என்றும் கூறுவர்.

குடற் ஓரங்களில் உப்பு உரைந்து கல்லைப்போல் காரைகட்டி விடும். இதனாலும் பக்கசூலை ஏற்படும்.

இவற்றிற்கு ஆங்கில முறைப்படி ஆப்ரேஷன் செய்து கல் உள்ள இடத்திலிருந்து கல்லை அப்புறப்படுத்தி தைத்துவிடுவதும். அல்லது ஆபரேஷனை விரும்பாதவர்களுக்கு ஆலிவ் ஆயில் காலை. மாலைகளில் ஒரு அவுன்சோ அல்லது விக்குப்ட் பராபின் என்றும் கிருசனாயலை சுத்தம் செய்த மருந்தோ நாள் தோறும் மலம் தாராளமாய் கழியும் வண்ணம் கொடுத்து விடுவார்கள்.

இந்தியர்கள் விளக்கெண்ணெயையும் வாழைத் தண்டின் சாற்றையும் சமன் கலந்து காலையில் 2 அவுன்சு கொடுப்பார்கள். இதன்படி மூன்று நாள் கொடுப்பர். தவிர பட்சத்திற்கொரு முறை வாழைத் தண்டை பொரியல் செய்து உண்ணச் சொல்வர்

வாழைத்தண்டின் இரசம் வாங்கி உண்பதைக் காட்டிலும் வாழை மரத்தின் வேர் கட்டையில் பள்ளம் தோண்டி அதில் சுரக்கும் நீரை எடுத்து விளக்கெண்ணெயுடன் கூட்டிச் சாப்பிடுவது மேலானது. மேற்சொன்ன வியாதிக்கு ஆப்பரேஷன் செய்யாமல் வாழைத்தண்டின் இரசத்தை உபயோகத்தால் நீக்கிக் கொள்வதே சாலச்சிறந்த வகை.

உஷ்ண பேதி

சிறு குடலில் அதிகப்படியான காற்று பிரவேசிக்குமானால் பேதி காணும். இதனை உஷ்ண பேதி எனவும் அஜீரண பேதி எனவும் கூறுவர்.

இதற்குக் காரணம் காலநிலை மாறுதல், மலைகளின் மேல் ஏறுதல், அளவுக்கு மீறி நடத்தல், உஷ்ணமான ஆகாரத்தை உண்ணல், அமிதவேலை செய்தல் ஆகிய இவைகளால் உஷ்ண பேதி உண்டாகும்.

இரவில் கண் விழித்தால், ஜீரணிக்க முடியாத சில ஆகாரங்களை, உண்ணல், அழுகிய வஸ்துக்களையோ அல்லது வேகாத பதார்த்தங்களையோ புசித்தல் ஆகியவற்றால் அஜீரண பேதி உண்டாகின்றது.

உஷ்ண பேதிக்கும் அஜீரண பேதிக்கும் வித்தியாசம் உண்டு. உஷ்ண பேதியானது சில சமயங்களில் சீதபேதியாகவும் மாறும்.

உஷ்ண பேதி கண்டவர்களுக்கு ஓம நீர், மஞ்சள் கியாழம் கருவேப்பிலை கியாழம், நிமிளை பஸ்பம், படிகார பஸ்பம், சுக்குச் சூரணம், சிலாசத்துபஸ்பம், கட்டுவாதி மாத்திரைகள், கட்டுவாதி லேகியங்கள், மிளகு லேகியம் முதலானவைகளைக் கொடுத்துக் குணப்படுத்தலாம்.

ஆங்கிலேயர்கள் பிஸ்மத் மிக்சர், தனபினடையன், காம்பிரடைன், ஓமம் வாட்டர், டிங்சர் காம்பர், டிங்சர் அயோடின் மார்பியா, சோடா பைகார்ப்டோவர்ஸ் பவுடர் முதலான மருந்துகளைக் கொடுத்து நோயைக் குணப்படுத்துகின்றனர்.

இத்தகைய ஔடதங்கள் எல்லாம் பயன் தராத பேதி ஒன்று இருக்கின்றது.

அந்த பேதியானது குடற்குள் சிக்குண்டிருக்கும் தலை மயிரினால் ஏற்படும் பேதியேயாகும். அத்தகைய பேதியைப் போக்க மருந்து கொடுப்பதில் பயனில்லை. இதற்கு இந்தியர்கள் சிகிச்சையே மேலானதும், ஆராய்ச்சியில் தேர்ந்ததுமாகும்.

சொணையோடு கூடிய நெல்லை 4, 5 காணும்படி வாயில் போட்டுக் கொண்டு நீர் அருந்தினால் நெல்லின் சொணையில் குடற்குள்ளிருக்கும் மயிர் சிக்குண்டு நெல்லுடன் கலந்து

மலத்தில் வெளிப்பட்டுவிடும். மயிர் வெளிபட்டபின் பேதி நின்றுவிடும். இம் முறையை இந்தியர்கள் தவிர மற்ற எத்தேசத்தவரும் உணரவில்லை என்றும் நமது தமிழ்நாட்டு வைத்தியத்தின் பெருமையை என்னென்று கூறுவோம்.

குடற் குள்ளிருக்கும் மயிரை வெளிப்படுத்த நெல்லை உள்ளுக்குக் கொடுப்பது என்னும் பழக்கம் சர்வ சாதாரணமாகப் பாட்டிமார்களின் கை வைத்தியமாய் நம் நாட்டினர் கருதுகின்றனர். ஆனால் பிற நாட்டினர் இந் நோயால் குணமடையாமல் மாள்கின்றனர்.

நம் நாட்டில் கை வைத்தியம் எனக் கருதும் சாதாரண வைத்தியத்தில் தீரும் நோய்கள் ஆராய்ச்சியாளர்களால் கண்டுபிடிக்கப்பட்ட பெரிய மருந்துகளாலும் நிவர்த்திக்க சாத்தியமில்லை என்னும் வகையில் நமது வைத்தியம் சிறப்புற்றது என்பதற்கு இதைவிட போதிய சான்று வேண்டியதில்லை.

குடல் பிரண்டு விடுமானால் அதனாலும் பேதி காணும். இந்நோயும் மருந்தினால் குணப்படுவதில்லை. எனவே குடலேற்றம் தெரியாமல் கோடி பணம் செலவழிப்பினும் பிழைக்க மாட்டார்கள் என்னும் பழமொழி நமது பாட்டிமார்கள் கூறுவதை நீங்கள் உணர்ந்திருக்கலாம். ஆதலால் பேதியை நீக்குவதற்கு முதுகில் முள்ளந்தண்டுக்கு நேரில் சதையைப் பிடித்துத் தூக்கி விடுதலாகிய சிகிச்சை மேலாகக் காணப்படுகின்றது.

குடற்குள் அதிகப்படியான இரணம் ஏற்படில் அவ்விரணங்களில் சீழ்பிடிக்கும் போது சுரம் காணும் அந்த சுரம் இரணம் ஆறும் வரையில் இருக்கும் இரணத்தில் சீழ் பிடிக்க ஆரம்பிக்கும் காலத்தில் குறைந்த சுரமாகவும், சீழ் அதிகப்படில் அதிக சுரமாகவும் சீழ் வரளும் போது சுரம் குறைந்து வரும். இவற்றை இரண்டுவிதமாகப் பிரித்து வழங்கப்படுகின்றது. அவை யாவையெனில் சந்நிபாதம், அதிசார சந்நிபாதம் எனக் (டைபஸ் டைபாயட்) கூறுகின்றனர்.

சந்நிபாத சுரத்திலும் இரண்டு வகையுண்டு. ஒன்று 14 நாள் சுரம் அடித்தல். மற்றொன்று 22 நாள் சுரம் அடித்தல். இதை (டைபாய்ட். பாரடைபாய்ட்) என்பர். பாரடைபாய்ட் 14 நாளில் குணப்படுத்தும். டைபாய்ட் 22 நாளில் குணப்படுவதுமாகும். இதில் 7 நாள் சுரமும் உண்டு.

சந்நிபாத சுரத்திற்கு குடற்குள் ஏற்பட்டது இரணம் காரணம் என்றாலும் அவ்விரணத்தை ஆற்றுவதற்கு மருந்து பயன்படாது. ஆனால் மேற்கொண்டு இரணம் அதிகப்படாதபடி பாதுகாக்க வேண்டிய விதிகளை அனுசரிக்க வேண்டும்.

அவை யாவையெனில், நீர் மயமான ஆகாரத்தைக் கொடுத்தல். அசைவரப் படுக்க வைத்தல். மலசலத்தையும் படுக்கையிலே கழியுமாறு செய்வித்தல். பால். சோடா காய்ச்சி ஆறின நீர் இவைகளைக் கொடுத்தல் ஆகியவைகளால் நோயை அதிகரிக்கவொட்டாமல் தடுக்கலாம்.

சந்நிபாத சுரமுள்ளவர்களுக்கு எவ்வித அன்னமும். பழமும். காரமான வஸ்துக்களும் உள்ளுக்குத் தந்தால் கெடுதல் சம்பவிக்கும்.

ஆங்கில வைத்தியத்தில் ஆர்லிக்ஸ். மாவு கஞ்சியும். ஓவல்டின் கஞ்சியும். சோடா பாலும். பாலும் எலுமிச்சம் பழரசமும். சேர்த்து வடி கட்டிய (வே) கஞ்சியும் கொடுப்பர்.

அதிசார சந்நிபாதத்திற்கு ஆர்லிக்ஸ் மாவைத் தரலாகாது. ஏனெனில் ஆர்லிக்ஸ் கஞ்சி. பேதியாகும். சமயத்தில் கொடுத்தால் அதிகப்படியான பேதி ஆகும்.

குடற்குள் மேக இரணம் ஏற்படில் அதை அதிசார பேதி என்று சொல்லுவர். இதையே ஆங்கிலேயர்கள் (டியூபர்குலோசிஸ் ஆப் பவல்ஸ்) என்பார்கள். இவ் வியாதி கண்டவர்களுக்குப் பேதியாவதோடு சுரமும் காயும். இதற்குத் தேனும் தக்காளிப்பழரசமும். எலுமிச்சம் பழரசமும் சமனாய்க் கூட்டி ஆகாரமாகக் கொடுத்தல் நலம். எத்தகைய சிகிச்சையிலும் பெரும்பாலும் இந்நோய் குணப்படுவதில்லை.

குடற் வாயு

குடற்குள் வாயு அதிகரித்து விடுமானால் குடல் பை பளுவாகக் காணப்படும். அது சமயம் சரீரத்தில் குடலுக்கு கீழ்ப்பாகத்திலிருக்கும் ஜவ்வானது இலேசாக வழிவிடும்படியான துவாரம் காணும்.

அது சமயம் அதி நடையும் மலபந்தமும் ஏற்படில் குடலானது கீழே இறங்கும். மீண்டும் படுத்து உறங்கினால் மேலே ஏறிவிடும். குடலானது கீழே இறங்கும் போது சுரம் காணும். பீஜத்திற்கு மேல் வீக்கமும். வலியும் காணும். இதனைத் தமிழர் குடல் வாதம் என்றும் ஆங்கிலேயர் அர்னியா என்றும் கூறுவர். இது இரண்டு பக்கங்களிலும் உண்டாகலாம்.

இந்நோய் நாள்பட இருக்குமானால் குடற் இரங்கும் வழி பெருத்துவிடும். ஒரு சமயம் குடற் கீழே இறங்கிய போது துவார வளையமானது குடலைப் பற்றிக் கொண்டு மேலே போகவிடாமல் செய்து விடுமானால் பிடிபட்ட குடலானது புண்பட்டு விஷம் கண்டு 24 மணி நேரத்திற்குள் மரணத்தையுண்டுபண்ணும் அது சமயம் தாமதமின்றி ஆப்பரேஷன் செய்து விட்டால் பிழைப்பர். இதனையே ஸ்ட்ராங்கு லேடஸ்ட் அர்னியா என்பர். தமிழ் வைத்தியத்தில் இந்நோய் சுக மடையாது. இதனை அறுத்தே சிகிச்சை செய்தல் வேண்டும்.

குடல் வாதத்திற்குப் பேதியாகும் மருந்தையும் பிராந்தியையும் கொடுப்பர்.

ஆங்கில விதிப்படி அறுத்து குடல் இறங்கும் துவாரத்தைத் தைத்து விடுவது வழக்கம். இல்லையேல் (டிரஸ்) என்னும் ஒரு பெல்டால் குடல் கீழே இரங்க வொட்டாதபடி நடக்கும் போது கட்டிக்கொண்டு உறங்கும் போது அவிழ்த்து விடுவதும் ஆகிய சிகிச்சையைச் செய்வார்கள். இதிலும் சிங்கில் டிரஸ். டபுள் டிரஸ் என உண்டு.

தமிழ் முறையில் கச்சை கட்டுவர். அதாவது இரண்டு அங்குல அகலமும். 20 முழம் நீளமும் உள்ள நாடாவைக் கட்டிக்கொள்வதால். துவாரம் சுருங்கி குடல் கீழே இறங்காமல் காத்துக்கொள்ளலாம்.

குடற்குள் புண் ஏற்பட்டு சீத பேதியில் சிலருக்குச் சுரமும் இருக்கும். மலத்தில் சீதம் போவதும். மலத்தில் இரத்தம் போவதும் ஆக சீத பேதியில் இருவகை உண்டு.

சீதம் மாத்திரம் போகுமானால் வேலம் பிசினிப் பவுடரும். விளக்கெண்ணெயும். பாலும் சேர்த்து காலையில் கொடுக்க மலச்சிக்கலை நீக்கி இரணத்தை ஆற்றி சீத பேதியையும் குணமாக்கும் சிலருக்கு. இத்னைக் கொடுத்த பிறகு துவர்ப்புள்ள மருந்துகளைக் கொடுப்பார்கள்.

இரத்தம் விழும் கேசுகளில் எமடின் என்னும் மருந்தை இரத்தத்தில் குத்தி ஏற்றினால் குணமாகும். இரண்டு மூன்று ஊசி போட்டால் போதுமானது.

தமிழ் முறையில் சுக்குத் தூளும் மோடியும் சமனாய்ச் சேர்த்து நெய் விட்டு லேகியம் கிளரி காலை. மாலைகளில் கழற்சிக்காய் பிரமாணம் கொடுக்கலாம்.

பாதம் பிசினியை 12 மணி நேரம் வெந்நீரில் ஊற வைத்து ஊறிய பிசினியை எலுமிச்சம்பழ அளவு பாலும். சர்க்கரையும் கலந்து நாள் ஒன்றுக்கு மூன்று தரம் கொடுக்கலாம்.

ஆலம் விழுதின் முளையும்; ஆவாரம் பட்டையும் பாதம் கொட்டை பருப்பும் சேர்த்து நீர் விட்டரைத்து பிழிந்து வடிகட்டி பசும் பால் சேர்த்துக் காய்ச்சி கஞ்சி பதமாக்கி கற்கண்டு சேர்த்து காலை மாலைகளில் கொடுக்கலாம்.

ஹில்டயோரியா

நீலகிரி. கொடைக்கானல் முதலிய இடங்களுக்கு செல்லும் மக்களுக்கு மலைக்காற்றை சுவாசிப்பதால் குடற்குள் விஷக்காற்று

தங்கிவிடுமானால் அத்தகையோர்களுக்கு மலைப்பேதி என்னும் (ஹில்டயோரியா அல்லது ஸ்புரு) வியாதி காணும். அதற்கு எத்தகைய மருந்தும் பயன் தருவதில்லை.

இந்த பேதியானது நீர் நீராகவும். வயிறு இறைச்சலோடும். காற்றின் வேகத்தோடும் காணப்படும். இதனால் ஆகாரம் தள்ளாது. மனச்சோர்வு காணாது என்றாலும் சரீரம் இளைத்துவிடும். பலக்குறைவு உண்டாகும்.

இந் நோயானது மாதக் கணக்கில் இருந்து கொண்டு துன்பத்தை உண்டு பண்ணும்.

நல்ல பழுத்த மாம்பழம். மல்கோவா. பாதம் முதலான உயர்வகை மாம்பழத்தை தோல் போக்கி துண்டுகளாக்கிப் பசும் பாலுடன் கலந்து சாப்பிட வேண்டும். இதைத் தவிர வேறு ஆகாரம் கொள்ளலாகாது. இதன்படி இரண்டு நாள் சாப்பிட்டு. பிறகு அன்னம் புசிக்கலாம். இப்படிச் செய்ய பேதி நீங்குகின்றது. இது உயர்ந்த முறையாகும்.

பூங்காவியும். படிகாரத்தையும் சமபாகமாக அரைத்தெடுத்து கொள்வதே பூனானி செந்தூரம் என்பதாகும். இதனில் 1 அல்லது 2 குன்றி மணியளவு எடுத்து கசகசா 1/4 பலத்தை பால் விட்டு அரைத்தெடுத்த விழுதில் கலந்து பால் சேர்த்து சாப்பிட சீதபேதி குணமாகும் குடற்புண் ஆறும்.

அபினி ஒரு குண்டுமணியளவு எடுத்துக் கொண்டு அதைக் கம்பிபோல் நீளமாகச் செய்து ஒரு ரஸ்தாளி அல்லது மலைப்பழம் முதலான எந்த வாழைப்பழத்தையாவது எடுத்துத் தோலை நீக்காமல் கத்தியால் நீட்டுவசமாய்க் கீறி அதில் கம்பியான மருந்தை வைத்து நெருப்பில் சுட வேண்டும். தோல் கருகச் சுட்டு பிறகு ஆறினவுடன் தோலை நீக்கி மருந்துடன் பழத்தைக் கொடுக்க ஒரே வேளையில் சீதபேதி நீங்கிவிடும் வேண்டுமானால் மறு நாளும் கொடுக்கலாம்.

கீரிப்பூச்சி

சிலருக்கு அடங்காத பசி! என்ன சாப்பிட்டாலும் பசி ஆறாது! இதற்குக் காரணம் என்ன? குடலில் கீரிப்பூச்சி இருப்பது தான். இது வெள்ளையான சிறு பூச்சி. மலத்துடன் வெளிவரும்.

சாப்பிடும்பொழுது சுகாதார விதிகளைப் பின்பற்றினால் இந்த பூச்சி நம் உடம்புக்குள் வராது. கையை சோப்புப் போட்டு கழுவி சுத்தம் செய்த பிறகுதான், சாப்பிட ஆரம்பிக்க வேண்டும். தண்ணீரை கொதிக்கவைத்து ஆறவைத்துக் குடிக்க வேண்டும். குளத்து நீரை கண்டிப்பாகக் கொதிக்க வைத்துத்தான் குடிக்க வேண்டும். ஏனென்றால் குளத்து நீரில் கீரிப்பூச்சி இருக்க அதிக வாய்ப்பு உண்டு.

பெருங்குடலின் மேல்பாகத்தில் கீரிப்பூச்சி வாழும். முட்டையிடும் பருவம் வந்ததும் பெண் பூச்சிகள் வெளியே வந்து, ஆசன வாயை சுற்றி முட்டையிடும். அப்பொழுது மிகுந்த தினவு உண்டாகும். சொறிந்தால் நக இடுக்குகளில் புகுந்து கொள்ளும். பிறகு சாப்பிடும்பொழுது வயிற்றுக்குள் சென்றுவிடும்.

அதிகப்பசி, அஜீரணம், பசிமந்தம், ஆசனவாய் நமைச்சல், புண், உறக்கக் கேடு ஆகியவை இந்தப் பூச்சியினால் ஏற்படும்.

"எலிக்சர் ஆண்டிபார்" (Elixir Antepar) என்ற மருந்து வாங்கி, வேலை ஒன்றுக்கு ஒரு கரண்டி வீதம், தினம் மூன்று வேளையாக 8 நாள் தொடர்ந்து சாப்பிட இந்தப் பூச்சிகள் ஒழியும்.

மூத்திரப்பை

மூத்திரப் பையானது மலப்பையின் பக்கத்தில் உள்ளது! நாம் உட்கொள்ளும் ஆகாரத்திலிருக்கும் நீரையும் குடிக்கும் ஜலத்தையும் மலப்பைக்கு வேண்டியது போக மிகுதியைப் பிரித்துச் சேர்த்து வைத்து ஆசன துவார மூலம் வெளிப்படுத்தும் தொழிலை மூத்திரப்பை நடத்துகின்றது.

மூத்திரப்பை சம்பந்தமான வியாதிகள் பல. ஆங்கிலர் இதை கிட்னி என்பர். மூத்திரப்பை வீங்குவதால் உண்டாகும் வியாதிகளும் சுருங்குவதால் உண்டாகும் வியாதிகளும் இரணத்தால் ஏற்படும் வியாதிகளும் பலவாகக் காணப்படுகின்றன.

இதனால் உண்டாகும் நோய்களானவை: நீராம்பல் மகோதரம், மதுமேகம், மேகம், வெள்ளை, வெட்டை ரோகம், கொறுக்கு, அறையாப்பு கிரந்தி, பிளட் பிரஷர் என்னும் மூளை சம்பந்தமான வியாதி, மயக்கம், இராஜகட்டிகள், மேகப்புண்கள், யோனிப்புத்து லிங்கபுத்து முதலியன இவற்றுள் சில, உஷ்ண ஆகாரத்தாலும் சில அதிகபோகத்தாலும், சில வியாதியுள்ளவர்களோடு சேர்வதாலும் உண்டாகின்றன.

மூத்திரப்பையின் முடிவு சிசன வழியில் முடிந்தாலும் அதே சிசனத்துக்குப் பீஜத்திலிருந்தும் ஒரு வழியுண்டு. ஆதலால் மூத்திரரோகமானது பீஜத்தையும் அதன் சம்பந்தமான வழிகளையும் பாதித்து வியாதிகளை உண்டு பண்ணுகின்றது.

உஷ்ணத்தால் உண்டாகும் மூத்திர ரோகங்கள் நீர்சுருக்கு, நீராம்பல், மஞ்சக்காமாலை, ஊதுகாமாலை: பித்த சோகை, பித்த பாண்டு முதலியனவை.

மூத்திரப்பையில் சதை வீங்கினாலும், உஷ்ண நீர் சிவந்து அல்லது மஞ்சளாகிவிடுமானால் தாராளமாய் நீர் இறங்காது, அது சமயம் உடம்பு வீங்கும், கால்களில் வீக்கம் காணும்.

அத்தகைய வியாதிக்கு நீர் நன்றாய் இறங்கக் கூடிய பேதி மருந்தைக் கொடுத்தால் மலமும் நீரும் கழிய வீக்கம் குறையும்.

சில சமயம் பிராந்தி அதிகமாய் உபயோகித்து அதன் மூலம் கல்லீரல் கெட்டு நீர்ப்பை தோஷம் உண்டாய் இருக்குமானால் அத்தகையோர்களுக்குப் பேதி மருந்தைக் கொடுக்கக்கூடாது.

கல்லீரல் கெட்டு விடுமானால் இருதயமும் கெட்டுவிடும். இம்மூன்றும் அதாவது நீர்ப்பை, கல்லீரல், இருதயம் ஆகிய இவைகள் கெடுமானால் அதனால் வயிறு கால், கை முதலானவை வீங்கும். இதனை மகோதரம் என்பர். இவ்வியாதிக்கு ஆங்கிலர் நீரைப் பிரிக்கும். ஸ்பிருட்ஸ் ஈதர் சம்மந்தப்பட்ட மருந்துகளும் வயிற்றில் குற்றி நீரை எடுக்கும் சிகிச்சைகளும் செய்வர். இதனால் தற்கால சாந்தி போல குணம் கண்டாலும் நோய் நீங்காமல் கடைசியில் மரணத்தையே அடைவர்.

தமிழ் முறையிலும் இதை நிவர்த்திப்பது கடினம். எனினும் சில கேசுகள் குணப்பட்டிருக்கின்றன. எனவே அதனை இங்கு குறிக்கின்றேன்

பன்றியின் கொழுப்புள்ள மாமிசத்தை வாங்கி வந்து அதில் 2 பவுன் எடுத்துக்கொண்டு துண்டுகளாய் அறுத்து அடியில் சிறிய துளை 5 போட்ட சட்டியில் வைத்து 1 பலம் மிளகாயை அரைத்து அதனுடன் பிசைந்து மேலே சட்டி மூடி சீலைமண் செய்து பூமியில் குழி தோண்டி அக்குழியில் வெங்கலம், அல்லது பித்தளை பாத்திரம் வைத்து அதன் மேல் சட்டியை வைத்து வெங்கல பாத்திரம் மறையும் வரை மண்ணை மூடி ஜலம் தெளித்து அதற்கு மேல் 10 விரட்டியை அடுக்கிப் புடம் போடவும். நெருப்பு ஆறியபின் ஆறும் சமயத்தில் கலைத்து எடுத்து விடவும். அடியில் எண்ணெய் இறங்கியிருக்கும். அவ்வெண்ணெயில் ஒரு டீஸ்பூன் விகிதம் காலை மாலைகளில் கொடுத்துவர சரீரத்தில் இருக்கும் உஷ்ணத்தைக் குறைத்து கல்லீரலின் வீக்கத்தைத் தணித்து நீரைப் பிரித்துத் தாராளமாய் இறங்கச் செய்து வீக்கத்தைக் குறைத்துவிடுகின்றது. இம் மருந்துக்கு யாதொரு பத்தியமும் இல்லை. எத்தனையோ மருந்துகளை நான் உபயோகப்படுத்திக் கடைசியில் எனது ஆராய்ச்சியாலும் அனுபவத்திலும் இம் மருந்தை மேலானதாகக் கண்டு இதனை உபயோகித்து வருகிறேன்.

நீர்ப்பையில் கோளாறு ஏற்பட்டு வயிறு, கால் கை முதலானவை வீங்குமானால் ஆங்கில முறைப்படி டிங்சர்

டிஜிடலிங் 5 முதல் 15 துளியும் ஸ்பிரிட்ஸ் ஈதர் நைட்ரஸ் ஒன்று முதல் மூன்று டிராம் ஸ்பிரிட்ஸ் குளோராபாரம் 10 முதல் 30 துளியும் ஆடு வாகாசினி 1 அவுன்சு ஆக இவைகளைக் கூட்டி ஒரு வேளைக்குக் கொடுக்க வேண்டும். இதன்படி 3 மணி நேரத்திற்கு ஒரு தரம் சாப்பிட நீர் தாராளமாய் இரங்கி வீக்கம் வடியும்.

சித்தாமணக்கு இலையை 1 பலம் எடுத்துக் கொண்டு 4 அவுன்சு பசுவின் நீர் விட்டு இடித்து ரசம் வாங்கி காலையில் 2 அவுன்சு உள்ளுக்குக் கொடுத்து விட்டு உப்பில்லா பத்தியம் வைக்க வேண்டும். இதன்படி மூன்று நாள் கொடுக்க நோய் நீங்கும்.

வெள்ளை காட்டாமணக்கு இலையையும் மேல் சொன்னது போல் செய்யலாம்.

பிரமி இலையை அடக்கியாழும் வைத்து காலையில் 2 அவுன்சு விகிதம் கொடுக்க நோய் நீங்கும்.

தில்லைப்பால் ஒரு துளி பாலில் விட்டுக் காலையில் கொடுக்க நோய் நீங்கும்.

காசினி விரை அதிமதுரம், நன்னாரிவேர், விரை திராக்ஷி, ஆனைநெருஞ்சி ஆகிய இவைகளை வகைக்கு ஒரு விராகனிடை சேர்த்து கால்படி நீர் விட்டு அரைக்கால் படியாகக் காய்ச்சி 3 மணி நேரத்திற்கு ஒரு அவுன்சு விகிதம் கொடுத்துவர நோய் நீங்கும்.

நீராம்பல் நோய்க்கும் மகோதரத்திற்கும் உப்பு சேர்ந்த எந்த ஆகாரமும் உபயோகிக்கலாகாது.

அதிக உஷ்ணத்தால் நீர் மஞ்சள் நிறமாகுமானால் 36 வயதுக்கு மேல் பிளட்பிரஷர் என்னும் நோய் காணும்.

வெங்கார மாத்திரை

வெங்காரம், திப்பிலி, மிளகு, இந்துப்பு, சுக்கு, சுத்தி செய்து நேர்வாளம், காந்தம், காயம், கழாச்சி பருப்பு யாவும் சம எடையாக எடுத்து கல்வத்திலிட்டு அரைத்து உருட்டி எருக்கம் பருப்பினால் மூடி ஒரு பானையில் வைத்து மேல் மூடி சீலை செய்து கோழிப்புடம் போட்டு எடுத்து கடுக்காய் கியாழத்தில் அரைத்து எலந்தை விதை அளவாய் உருட்டி உலர்த்தவும்.

அனுபானம்:- விளக்கெண்ணெயில் தோய்த்து விழுங்க மலம் கழியும். ஒரு மாத்திரையை வாயிலிட்டு தண்ணீர் குடிக்க கால், வாய், முகம், இவ்விடங்களில் உண்டாகும் வீக்கங்களும், நோய்களும் எண் வகை குன்மமும் பலவகை சூலையும் வாதம் அண்ட வாதம் நீராம்பல் விப்புருதிக்கட்டி பாண்டு மகோதரம் இவைகள் குணமாகும்.

அகஸ்திய முனிவர் அருளிச் செய்த வைத்திய ரத்தினச் சுருக்கம் 360

மூலமும் உரையும்

சித்தர்களில் முதன்மையான அகஸ்தியரால் இயற்றப்பட்ட இந்த வைத்தியரத்தின சுருக்கம் ஒவ்வொரு வைத்தியர் இடத்திலும் முக்கியமாக இருக்க வேண்டிய நூலாகும். இது பெரும்பாலும் காவியமாய் இருந்ததால் யாவரும் எளிதில் அறியும் பொருட்டு தெளிபொருள் விளக்க உரையுடன் இயற்றியுள்ளது.

அகஸ்திய மாமுனிவர் பரிபூரணம் 400

மூலமும் உரையும்

ஸ்ரீமத் ஆர்.எம்.பி. திருமலை ஸ்வாமி அவர்களால் சுருதியுக்தி அனுபவ சம்மந்தமாக வாத ஞான வைத்தியம் இவைகளுக்கு தெளிபொருள் விளக்கமாக உரை எழுதப் பட்டிருக்கிறது. இது ஞானிகட்கும் வாதிகட்கும் வைத்தியர் கட்கும் மிகவும் அவசியமானது.

சித்த வைத்தியத் திரட்டு

ஆசிரியர்கள் :

டாக்டர் க.நா. குப்புசாமி முதலியார் H.I.M.P

டாக்டர் க.சு. உத்தமராயன் H.I.M.P

இயற்றியது

இந்த நூல் 18 சித்தர்களின் பாடல்களுடன் எளிய நடையில் உரைகளும் தெள்ளத் தெளிவாய் எழுதப் பெற்றுள்ளது.

இவற்றில் மாத்திரை, செந்தூரங்கள், பற்பங்கள், சுண்ணங்கள், கருப்புக்கள், பதக்கங்கள், மெழுகுகள் குழம்புகள், சூரணங்கள், வடகங்கள், கற்பங்கள், இரசாயணங்கள், இலேகியங்கள், நெய்கள், வெண்ணெய்கள், மனப்பாகுகள், தைலங்கள், குடிநீர்கள், தீ நீர்கள், புகைநீர்கள், கண்ணிலிடும் மருந்துகள் மூக்கிலிடும் மருந்துகள், வெளிப்பூச்சி மருந்துகள் செய்முறைகள் எளிய நடையில் எழுதபெற்றுள்ளன.

இந்த நூல் மருத்துவர்களுக்கும் சித்த மருத்துவம் படிக்கும் மாணவர்களுக்கும், பொது மக்களுக்கும் மிகவும் பயன்தரவல்லது இன்றே உங்கள் பிரதியைப் பெற்றிட முந்துங்கள்.

விலை ரூ. 50

வி.பி.பி. தபால் செலவு தனி

கிடைக்குமிடம் :

சண்முகானந்தா புக் டிப்போ

67, T.K, முதலி தெரு, சூளை, சென்னை - 600 112.

நமது உடம்பின் உறுப்புகள்!

கல்லீரல்	1
மண்ணீரல்	1
நுரையீரல்கள் பக்கத்திற்கு ஒன்றாக	2
சிறுநீரகங்கள்	2
பற்கள்	32
குடல்களின் நீளம்	33 அங்
எலும்புகள்	206
தசைகள்	555
மூளை விரிந்தால் பரப்பளவு	670 ச.அங்
நரம்புகள்	72,000
வேர்வைப் பைகள்	25,00,000

இதயத்தின் அளவு ஒரு கை முஷ்டிப்பிடி.

ஆக சரீரத்தின் அளவு அவரவர் கை விரலில் (எண்ஜான் உடம்பாகும்)

இருதயம்

உயிர் வாழ மிக முக்கியமானது. உடலின் ரத்தச் சுழற்சி, அந்த ரத்தச் சுற்சியை இயங்கி வைப்பது இருதயம்.

பிற உடலுறுப்பு அனைத்தும் ஓய்ந்திருக்க முடியும். இதயம் மட்டும் ஒரு கணமும் ஓய்ந்திருக்க முடியாது. இருதயம் ஓய்ந்தால் மரணந்தான். இத்தகைய உறுப்பை ஆரோக்கியமாகவும் உரம்பெறச் செய்தும் வாழ வகுத்துக் கொண்டால்தான் வாழ்க்கை எனும் ஓடம் வழி ஒழுங்காக

கரையைக் கடக்க முடியும். இல்லையானால் இமைப் பொழுதில் கடலில் ஆழ்த்திவிடும் என கவனத்தில் கொள்ள வேண்டும்.

இருதயத்தின் செயலும் அதன் பாதுகாப்பும்

மனிதன் சுதந்திர முள்ளவனாகவோ அடிமையாகவோ வாழ்வது அவனது மன நிலையைப் பொறுத்தே அமைவது. இதைப் போலவே ஒரு மனிதன் ஆரோக்கிய இன்பங்களை அனுபவித்துக் கொண்டு வாழ்வதோ. நோயாளியாக வாழ்ந்து உடல் நலம் நலிந்து குலைவதோ அவனைப் பொறுத்த விஷயமே. நோய்க்குக் காரணம் நம் மனத்தில் உறும் எண்ணங்களே மனத்தில் தைரியம் இல்லாமல் பலவிதமான வீண் கவலைகளும் பயமும் வாட்ட தம் வாழ்க்கையைப் பெருநரகமும் ஆக்கிக் கொண்டு தினமும் பலர் இறந்து கொண்டேயிருக்கிறார்கள். இதையே வீரனுக்கு ஒரே மரணம், கோழைகளுக்கு எத்தனையோ மரணம். என்ற வாக்கு குறிக்கின்றது.

டாக்டர் நமது இதயத்தைச் சோதித்துப் பார்த்து அதிலே 'நோய்' விருத்தியாகியிருக்கிறது என்று கூறினால். நாம் அதிர்ச்சி அடைவது இயல்பே. ஆயினும் விரைவில் மனத்தைத் திடப்படுத்திக்கொண்டு நோயின் நிலைமைக்குத் தக்கபடி வாழ்க்கை முறையிலும் பழக்க வழக்கங்களிலும் அலுவல்களிலும் அவசியமான மாறுதல்களைச் செய்து கொண்டு வேலையில் மீண்டும் ஈடுபட வேண்டும். எப்போதும் நோயைப் பற்றியே எண்ணிக் கொண்டிருப்பதும், பிழைப்போமோ இல்லையோ என்று கவலைப்படுவதும் மிகவும் கெடுதி செய்யும். நோய் குணமாவதைத் தாமதப்படுத்தும், மன அமைதியை அழிக்கும். இதயநோய் இருந்தாலும் தொழிலை அல்லது வேலையைத் தொடர்ந்து செய்து, சமுதாயத்துக்குப் பயன்படும் விதமும் பொருளாதார சுதந்திரத்துடனும் மன மகிழ்வுடனும் வாழ்ந்துவர இயலும். கடுமையான உடல் உழைப்பை மட்டுமே தவிர்க்க வேண்டும்.

இதய நோயாளிகளை இரு வகுப்புகளாகப் பிரிக்கலாம். நோய் பல ஆண்டுகளாக இருந்தும் ஊக்கமாக வாழ்ந்து வருபவர் முதல் வகுப்பினர். நோயினால் அவர்களுக்கு அடிக்கடி சங்கடம் ஏற்படலாம் ஆனாலும் அவர்கள் பீதி அடைய மாட்டார்கள். இரண்டாவது வகுப்பினரோ இதய நோய் இருக்கிறது என்று அறிந்தவுடனே இடிந்து போய் விடுவார்கள். பிறகு அவர்களால் ஒரு காரியமும் செய்ய முடியாது. மரணம் இன்று வருமோ என்று பயந்து சாவார்கள்.

இதய நோயுள்ளவர்கள் நிதானமாக வாழ வேண்டும். எக்காரணங் கொண்டும் பயப்படவே கூடாது. இளம் ருஷிய விஞ்ஞானி விளதிமிர் தெமிகோவ் என்பவர் இதயத்தின் சூட்சுமத்தைப் புரிந்து கொண்டு. அதை மனிதனின் சித்தத்துக்குக் கட்டுப்பட்டு நடக்கும்படி செய்வது எப்படி என்று ஓர் ஆராய்ச்சி செய்தார். பல ஆண்டுகள் பாடுபட்டார். இதயத்தைப் போல் இயங்கக் கூடிய ஒரு கருவியை உருவாக்கினார். இயற்கை படைப்பித்துள்ள கருவியே இதயமே சிறந்தது என்று இறுதியில் முடிவு செய்தார். எனவே. வேறொரு பிராணியிலிருந்து எடுத்த இதயத்தை உபயோகிக்கத் தீர்மானித்தார். பழுதாகிவிட்ட இதயத்தை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாக மற்றோர் இதயத்தைப் பொருத்தும் முயற்சிகளில் ஈடுபட்டார். முதலில் இரண்டாவது இதயத்தைப் பொருத்தி மூல இதயத்துக்குத் துணையாக இயங்கச் செய்வதென்றும். பிறகு அதையே மூல இதயம் ஆக்கி விடுவதென்றும் திட்டமிட்டார். இரண்டு இதயங்களை உடைய ஒரு நாயை இந்த முறையால் தோற்றுவித்தார். பல மாதங்களுக்கு அந்த நாய் உயிருடன் இருந்தது.

உயிருள்ள உடலில் ஒரு முக்கிய உறுப்பை மாற்றி பொருத்துவது சாத்தியமே. இது வரையில் பொதுவாக எல்லாரும் நம்பி வந்தது போல இதயம் அவ்வளவு பலவீனமான மெல்லிய உறுப்பல்ல என்பதை இது நிலை நாட்டியது.

நமக்கு இதய நோய் வந்துவிட்டதே என்று ஒருபோதும் கலங்க வேண்டாம். அதிர்ச்சி அடையவே வேண்டாம். இதய நோய் நீங்கக் கூடியதுதான்.

இதயத்தின் ரகசியங்கள். மனித இதயம் மிகவும் மிருதுவானது. இரக்கத்தின் பிறப்பிடமே இதயந்தான். இரக்கமற்ற செயல்களைச் செய்பவனை இதயமற்றவன் என்று நாம் துணிந்து சொல்லுகிறோம். ஆனால் விஞ்ஞான ரீதியாகப் பார்க்கும் போது இதயம் நம் எண்ணத்திலுள்ளபடி மிகவும் மென்மையானதாக இல்லை. உடலிலுள்ள மற்ற எல்லா உறுப்புக்களையும் விட உறுதி வாய்ந்த சதைப்பிண்டந்தான் இந்த இதயம் என்று பிரபல வைத்திய நிபுணரான ஹார்விடே கூறுகிறார்.

மனித உடலின் முக்கிய உறுப்பு இதயம். ஒரு கடிகாரம் வேலை செய்ய அதன் பெண்டுலத்தின் ஓட்டம் எவ்வளவு அவசியமோ. அதேபோல மனித உடலின் இயக்கத்துக்கு இதயத்தின் இயக்கம் இன்றியமையாதது.

உடலின் ரத்தக் களஞ்சியமான இதயத்தின் அளவு ஒவ்வொருவரின் இடக்கையை மூடியபோது எப்படிக் காட்சியளிக்கிறதோ அதே அளவு தான்! உறுதியான சதைப்பிண்டமான இதயம் எந்தவிதமான அற்பத் தாக்குதலாலும் பாதகம் அடைவதில்லை.

உடலுக்குள் ரத்தத்தைச் சுழல வைக்கும் யந்திரம் நமது கை முஷ்டி அளவு கொண்ட இதயந்தான் இது முழுவதும் தசையால் உருவானது.தாயின் வயிற்றினுள் இருக்கும் போதே சிசுவின் இதயம் .துடிக்க ஆரம்பித்துவிடுகிறது. சூழ்நிலையில் சரியாய் இருக்கும் என்றால் முடிவு இல்லாமல் துடித்துக் கொண்டே இருக்கும்.

உருவத்தில் ஒரு மாங்காய் போல் காட்சியளிக்கும் இதயம் ஒவ்வொரு நிமிஷமும் 70 முதல் 80 தடவை வரையில் துடித்து ரத்த உற்பத்தியைப் பெருக்கி உடலெங்கும் வியாபிக்கச் செய்கிறது. ஒரு சுக தேகியின் இதயம் நிமிஷத்துக்கு எழுபது முறை சுருங்கி விரிகிறது. இந்த இரண்டு செயல்களுக்கும் இடையில் வீசும் செகண்டி அசைவற்று இருந்து ஓய்வு எடுத்துக் கொள்கிறது.

இதயம் துடிக்கும் போதெல்லாம் சுமார் ஆறு கன அங்குல ரத்தத்தை உடலுக்குள் அது செலுத்துகிறது. கண்கள் மூடியிருக்கலாம். கை கால்கள் அசைவற்று கிடக்கலாம். ஆனால் இதயம் மட்டும் மனிதனின் வாழ்நாள் முழுவதும் ஓய்வில்லாமல் இயங்குகிறது.

நமது உடலில் 'இதயம்' எங்கே இருக்கிறது என்று சரியாய்ச் சொல்ல அநேகருக்கு இயலாது. நமது கவனம் இன்றியே இரவு பகலாக அது உழைத்துக் கொண்டேயிருக்கிறது. ஒரு நாளைக்குச் சுமார் 2,500 காலன் ரத்தத்தை அது இறைக்கிறது. இவ்வளவு காரியத்துக்கும் இடையே, இதயம் தன்னைத் தானே பழுதும் பார்த்துக்கொள்கிறது.

இதயம் நான்கு அறைகளைக் கொண்ட ஒரு சதைப் பெட்டி. நான்கு அறைகளும் நான்கு சிறுவாயில்களைக் கொண்ட ஒரு ரத்தக் களஞ்சியம். கீழ்த்தளத்திலுள்ள நீரை இறைத்து மேல் எழுப்பச் செய்யும் 'போரிங் பம்பு' போல ரத்தச் சுழற்சிக்கு இதயம் தன் வேலையச் செய்து வருகிறது. கணக்கற்ற நுண்ணிய ரத்தக் குழாய்களினாலேயே இந்த உறுப்பு உருவாகி இருக்கிறது.

மனித இதயத்தின் சராசரி அளவு நாலேகால் அங்குல நீளமும், மூன்றரை அங்குல அகலமும், இரண்டரை அங்குலப் பருமனும் ஆகும். ஆண்களை விடப் பெண்களுக்கு இதயம் அளவில் சிறிது குறைவு என்று ஆராய்ச்சியாளரான ஹார்வி கூறுகிறார்.

இதயம் நம் மார்பின் மத்தியில் இரு நுரையீரல்களுக்கிடையே இருக்கிறது. உடலிலே மிக முக்கியமான உறுப்பான இதயம் அவரவருடைய கைப்பிடி அளவு பருமனுள்ளது. இதயத்தின் அகன்ற பாகம் மேலும் குறுகிய பாகம் கீழும், குறுகிய கீழ்பக்கம் சிறிது இடப்பக்கமாகச் சாய்ந்தும் அமைந்திருக்கும். இதயத்தைச் சுற்றி மெல்லிய ஜவ்வினால் அமைந்த ஓர் உறை உண்டு. இது 'இதய உறவு' (Peric ordium)

இதயத்தின் உட்பாகத்தின் குறுக்காகத் தடித்த ஒரு தசைச் சுவர் அதை இரு பாகங்களாகப் பிரித்திருக்கிறது. வலதுபாகம் கார்பன்-டை-ஆக்ஸைடு சேர்ந்த கருஞ் சிவப்பு நிறமுள்ள அசுத்த ரத்தம் நிறைந்தது. இடது பாகத்தில் ஆக்ஸிஜன் அதிகமுள்ள சிவந்த சுத்த ரத்தம் நிறைந்திருக்கிறது. ஒவ்வொரு பாகத்திலும் மேலும், கீழுமாக இரண்டு அறைகள் இருக்கின்றன. மேல் அறைகளுக்கு 'அரிக்கிள்' (Auricle) என்றும், கீழ் அறைகளுக்கு 'வென்டிரிக்கிள்' (Ventricle) என்றும் பெயர். ஆகவே இதயத்தின் வலப்பக்கத்தில் வலது ஆரிக்கிள், வலது வென்டிரிக்கிள் என்று இரண்டு அறைகளும், இடப்பக்கத்தில் இடது ஆரிக்கிள், இடது வெண்ட்ரிக்கிள் என்று இரண்டு அறைகளும் ஆக நான்கு அறைகள் இருக்கின்றன. கீழ் அறைகளான வென்டிரிக்கிள் மேல் அறைகளைவிட அளவில் பெரியவை. சதைப்பற்றுடையவை. கீழ் அறைகளே 'பம்பு' வேலை செய்வது போல் சுருங்கி விரிந்து ரத்தத்தைத் தேகத்தின் பல பாகங்களுக்கும் அனுப்புகின்றன. மேல் அறைகளின் வேலையோ, உடலின் பல பகுதிகளிலிருந்தும் வரும் ரத்தத்தைப் பெற்றுக்கொள்வதே. இடது பக்கத்து அறைகளின் சுவர்கள் வலது பக்கத்து அறைகளின் சுவர்களிலும் வலிமையானவை. வலது ஆரிக்குகளுக்கும் வலது வென்டிரிக்கிளுக்கும் இடையேயுள்ள சுவரில் மூன்று மடிப்புள்ள மூவிதழ் வால்வு (Tricuspia Value) என்ற ஒரு கதவு அமைந்திருக்கிறது. இது கீழ் நோக்கியே திறக்கும். ஆகவே மேலறையிலுள்ள ரத்தம் கீழ் அறைக்கு வருமேயொழிய கீழ் அறையிலிருந்து ரத்தம் மேல் அறைக்குச் செல்ல முடியாது. இடது ஆரிக்கிளுக்கும் இடது வெண்ட்ரிக்குகளுக்கும் இடையே இரு மடிப்புகள் உள்ள 'இரிதழ் வால்வு' (Bisus Pia Valve) என்ற ஒரு கதவு இருக்கிறது. இதுவும் கீழ் நோக்கியே திறக்கக் கூடியது.

இதயத்தின் நான்கு அறைகளோடு சில ரத்தக் குழாய்களும் இணைந்திருக்கின்றன. இந்தக் குழாய்களும் தசைகளால் உருவானவையே. இவற்றில் ரத்தம் ஓடி வருகிறது.

இதயத்தின் வலது மேல் அறையுடன் இரண்டு பெரிய குழாய்கள் சேர்கின்றன. இவற்றின் மூலம் தேகத்திலுள்ள அசுத்த ரத்தம் இதயத்தில் வந்து சேர்கிறது. "மேல் பெருஞ்சிரை" (Anterior Vena Cava) என்றும், "கீழ்ப் பெருஞ்சிரை" (Interior Vena Cava) என்றும் இவற்றைக் குறிப்பிடுகிறார்கள்.

வலது வெண்டிரிக்கிளுடன் ஒரு பெரிய குழாய் இணைந்திருக்கிறது. இது சுத்த ரத்தத்தை இரு நுரையீரல்களுக்கு எடுத்துச் செல்கிறது. இந்தக் குழாய்க்கு நுரையீரல் தாமணி Pulmonary Artery என்று பெயர். இந்தக் குழாயின் ஆரம்பத்தில் அதாவது வெண்டிரிக்கிளிலிருந்து இந்தக் குழாய் பிரியும் இடத்தில் அரைச் சந்திர வடிவமுள்ள கதவு போன்ற ஓர் அமைப்பு இருக்கிறது. ரத்தத்தை இதயத்திலிருந்து நுரையீரல்களுக்கு மட்டுமே இந்தக் கதவு போகவிடும்: திரும்ப இதயத்துக்கு வரவிடாது. இந்தக் கதவுக்கு "அர்த்த சந்திர வால்வு" (Semilunar Valve) என்று பெயர்.

இடது ஆரிக்கிளுடன் நான்கு குழாய்கள் இணைந்திருக்கின்றன. ஒவ்வொரு நுரையீரலிலிருந்தும் இரண்டு இரண்டு குழாய்களாகக் கிளம்பிச் சுத்த ரத்தத்தை இதயத்துக்கு இதைக் கொண்டு வருகின்றன. நுரையீரல் சிரைகள் (Pulmonary Veins) என்று இவற்றிற்குப் பெயர் இடது வெண்ட்ரிக்கிள் மேல் பாகத்திலிருந்து மகாதமனி (Aorta) என்ற ஒரு பெரிய குழாய் கிளம்புகிறது. இதன் சுவர் தடிப்பானது. இதுவே சுத்த ரத்தத்தைத் தேகத்தின் எல்லா பாகங்களுக்கும் எடுத்துச் செல்கிறது.

இதயம் ஒரு பம்பு போல் ரத்தத்தை ரத்தக் குழாய்களின் வழியாக எப்போதும் அனுப்பிக்கொண்டே இருக்கிறது. இதயம் ஒழுங்காகச் சுருங்கி விரிவதாலேயே இந்த வேலை நடைபெறுகிறது. முதலில் ஆரிக்கிள்கள் ஒரே சமயத்தில் சுருங்குகின்றன. பிறது இரண்டு வெண்ட்ரிக்கிள்களும் சுருங்கும். இப்போது ஆரிக்கிள்கள் விரியும். இவ்விதமாக ஆரிக்கிள்களும் வெண்ட்ரிக்கிள்களும் மாறி மாறிச் சுருங்கி விரிவதைத்தான்

"இதயத்துடிப்பு" (Heart Beat) என்கிறோம். இதயத் துடிப்பே இதயத்திலிருந்து ரத்தக் குழாய்க்குள் ரத்தத்தைச் செலுத்துகிறது.

ஒவ்வொரு நிமிஷமும் ஆறு அவுன்ஸ் ரத்தத்தை இதயம் இறைக்கிறது ஒவ்வொரு இதயம் 3,000 கலன் ரத்தத்தை உடலி லுள்ள பல ஆயிரம் மைல் நீளமுள்ள ரத்தக் குழாய்களின் வழியாக அப்படி இறைத்துக் கொண்டிருக்கிறது.

இதயத்திலிருந்து உடலின் எல்லாப் பாகங்களுக்கும் சுத்த ரத்தத்தை எடுத்து செல்லும் குழாயின் அளவு கட்டைவிரல் பருமன். இதற்கு "மகாதமனி" (Aorta) என்று பெயர். ரத்தம் ஒரு நாளைக்குப் பதினாறு கோடியே எண்பது லட்சம்மைல் பிரயாணம் செய்கிறது. ஒவ்வொருவரின் சதையிலும் ஐந்து மைல் நீள அளவுக்கு ரத்தக்குழாய்கள் இருக்கின்றன. அதிகமாகப் பருத்துள்ள மனித உடலில் ரத்தக் குழாய்களின் நீளம் இன்னும் அதிகமாகவே இருக்கும் ஆகவே அப்படிப் பருத்தவர்களுடைய இதயமும் அதிக வேலை செய்கிறது. ஆண்களை விடப் பெண்களுக்குத்தான் இதயத்துடிப்பு அதிகம். கலைப்பு அடைந்தாலும், ஆகாரம் உட்கொண்டாலும், பீதி அடைந்தாலும் பரபரப்பு அடைந்தாலும், படுக்கையிலிருந்து திடீரென்று எழுந்து நின்றாலும், வேகமாக மாடிப்படி ஏறிச் சென்றாலும், மது வகையோ காபி டீயோ பருகினாலும் நோயிலிருந்து சுகம் அடையும்போதும், இதயத்துடிப்பு அதிகமாகவே இருக்கும்.

உடலுக்கு அதிகமான அல்லது தீவிரமான வேலை கொடுப்பதால் இதயமும் ஓய்வு இல்லாமல் அதிக வேலை செய்யவேண்டியிருக்கிறது.

இதனால் இதயம் நிரந்தரமாகப் பருத்துவிடும் உடலின் நிலைக்கு ஏற்றபடி இதயம் வேகமாகவோ மெதுவாகவோ, அழுத்தமாகவோ, பலவீனமாகவோ துடிக்கும். இதிலிருந்து மற்ற அவயவங்கள் எந்தநிலையில் இருக்கின்றன என்று கண்டுபிடித்து விடலாம்.

இதயம் பழுதடைவதற்குக் காரணங்கள் இரண்டு என்று ஹார்வி கூறுகிறார். அதிக வேலை செய்வது ஒன்று. ரத்தத்தின் மூலம் நோய்க்கிருமிகள் இதயத்தை அடைவது மற்றொன்று பல்லிலே சொத்தை ஏற்பட்டால் கூட நோய்க் கிருமிகள் உடலுக்குள்ளே மிகச் சுலபமாகப் புகுந்துவிடும்.

இதய அதிகத் துடிப்பு (Palpitation of the Heart) உயிர் வாழ்வதற்கு இன்றியமையாத உறுப்புகளில் முதன்மையானது இதயம். விரிவதும் குவிவதும் அதன் தொழில். அதைச் சுற்றி எலிப்பொறிகளையொத்த வாயிற் கதவுகள் (Valves) உடைய வழிகள் நான்கு இருக்கின்றன. அந்தத் தீனிப்பைக்குச் செல்லும் ஆகாரத்தினால் உண்டாகும் பதினாறில் ஒரு பங்கு ரத்தத்தை உள்ளே செலுத்தும் வாயிற்கதவு அவற்றுள் ஒன்று இதயத்தில் வலப்பக்கம் கீழ்ப்பாகத்தில் இது அமைந்திருக்கிறது. சுத்த ரத்தத்தைச் சுத்தம் செய்து. இதயத்துக்குள் செலுத்தும் வாயிற்கதவு மேல் பாகத்தில் அமைந்திருக்கிறது.

இதயத்துக்கு இடப்பக்கத்திலுள்ள வாயிற்கதவு வழியே ரத்தம் வெளிப்பட்டு ரத்த நாளத்தின் வழியே திரும்பி இதயத்துக்கு மீண்டும் வந்து சேரும் இதே வகையில் இருவாயிற் கதவுகளின் மூலம் ரத்தம் வெளிப்பட்டு வேறு இரு வாயிற் கதவுகளின் மூலம் உள்ளே பிரவேசிக்கிறது.

இந்த வாயிற் கதவுகளின் சீர் கேட்டாலும் இதயத்தின் சுருக்கம் வீக்கங்களினுலுந்தான் இதயநோய்கள் உண்டாகின்றன. அதிகத் துடிப்பு குறைந்த துடிப்பு. இதய வீக்கம். இதயச்சுருக்கம். இதயத்தில் ரணம் வாயற் கதவுகளின் உணர்ச்சியின்மை. காற்றின் குறைவு. வேகம். கபாட பந்தம். கபாடம் உடைபடுதல் முதலான பல காரணங்களால் பலபெயர்களுடன் கூடிய நோய் இதயத்துக்கு ஏற்படுகின்றன.

இதய அதிதுடிப்பு (Palpitation of the Heart) என்னும் நோய் பலவீனத்தாலும். அதிக உஷ்ணத்தாலும் ஏற்படுவது. தமிழ் முறையில் இதைக் கணச்சூடு என்று கூறுவார்கள்.

இந்தநோய் பெரும்பாலும் சிறுவர்களுக்கு உண்டாகிறது இதன் முதிர்ச்சியால் யுக்த வயதில் மேக ஜுரம் உண்டாகும்.

இதயம் வேகமாகத் துடிப்பதால் கைகளில் காணும் நாடியும் துரிதமாய்த துடிக்கும் இத்தகைய அதிகத்துடிப்பை உடையவர்களின் தேகம் எப்போதும் உஷ்ணமாகவே இருக்கும். உஷ்ணம் அறியும் கருவியைக் கொண்டு அவர்களுடைய தேக உஷ்ணத்தைச் சோதித்தால் 99-அல்லது 100 டிகிரி பாரன்ஹீட் உஷ்ணம் காட்டும் உடல் மெலிந்து விளங்கும் மார்க்கூட்டு எலும்புகளை எண்ணிப்பார்த்து விடலாம். மலச்சிக்கல் ஏற்பட்டிருக்கும். சுறுசுறுப்பாய் இருப்பார்கள். புத்தி தீட்சண்யத்துடன் விளங்குவார்கள்.

இந்த அறிகுறிகள் உள்ள சிலரக்குச் சிலசமயம் கழுத்தில் உரளை வடிவமான கரளைக்கட்டி காணும் இதை ஆங்கிலத்தில் டியூபிர் குளோஸிஸ் கிளாண்ட்ஸ் (T.B.Glands) என்று கூறுவார்கள்.

கணச்சூட்டில் ரத்தம் வேகமாய்ச் செல்லுகிறது மெலிந்து நீர்த்துக் காண்கிறது. அதன் விளைவாக இதயத்தின் இடது விசாச்சனமும். வலது விசாச்சனமும். துடிதுடித்து வேலைசெய்கிறது. ஆழ்ந்தசுவாசம் விட்டு வாங்கச் சாத்தியம் இல்லாமல் போய் விடுகிறது ரத்தத்தில் காணும் உஷ்ணத்தைக் குறைக்க ஆகார்த்தினாலும். மருந்தினாலும். முயற்சி செய்ய வேண்டும்.

இந்த நோயினால் அவதிப்படுகிறவர்கள் உஷ்ணமான ஆகார வகையைத் தவிர்க்க வேண்டும் காபி டீ கொக்கோ பானங்களையும் உப்புமா இட்டிலி முதலானவற்றையும் நீக்கித் தயிர் அன்னம். நீராகாரம். கேழ்வரகுக்கூழ் இவற்றைக் காலையில் முதல் ஆகாரமாகச் சாப்பிடவேண்டும் இரவில் பேயன் பழம். பனங்கற்கண்டு. திராட்சைப்பழம். மாதுளம் பழம் ஆப்பிள் ஆகியவற்றைச் சாப்பிடலாம். ரத்தத்திலுள்ள உஷ்ணத்தை இவை குறைக்கின்றன.

கணச்சூடு உள்ள குழந்தைகளுக்கு இரவில் படுக்க விடுமுன் ஒரு தேக்கரண்டி விளக்கெண்ணையில் சுற்கண்டு சேர்த்துக் கொடுக்கலாம்.

தங்க பஸ்பம், வங்க பஸ்பம், தாமிரபஸ்பம், வெள்ளிபஸ்பம் ஆகியவற்றைப்பணவசதி உள்ளவர்கள் செய்து சாப்பிடலாம். பணவசதி இல்லாதவர்கள் என்ன செய்வது? லேசான தங்கசத்து, தாமிரச்சத்து, வெள்ளிச்சத்து வங்கச்சத்து இவையுள்ள மூலிகைகளைப் பாகம் செய்து அவர்கள் சாப்பிடலாம் செம்பரத்தன் பூவில் தங்கச்சத்து இருக்கிறது. சாம்பல் பூசணிக்காயில் வங்கச்சத்து நிறைந்திருக்கிறது. கேழ்வரகுக் கஞ்சியிலும் தாமரை இலையிலும், தாமிரச்சத்து நிறைந்திருக்கிறது. பழைய அன்னம், நீராகாரம் இவற்றில் வெள்ளிச்சத்து இருக்கிறது. தங்கமும் தாமிரமும் இதயத்தையும் மூளையயும் பலப்படுத்தி உற்சாக மூட்டுபவை.

ரத்தக் கொதிப்பு: நாகரீகம் பெருகப் பெருக, வாழ்க்கைத்தரம் உயர உயர மனிதன் தன் மமதையால் இயற்கையைப் பகைத்துக் கொள்கிறான். இயற்கை விதிகளை மீறுகிறான் பலன் என்ன? அதிகமாக நோய்வாய்ப் படுவதுதான்.

உடல், மனம் இவற்றுக்கு உள்ள சகிப்புத் தன்மையைக் கெடுத்துக் கொள்வதால் ஏற்படும் நோய்களில் ஒன்றே ரத்தக்கொதிப்பு சுக துக்கங்களின் தாக்குதல் மனத்தையும் உடலையும் பாதிக்கம்போது அதற்கு ஈடு கொடுக்கும் சக்தி உடலில் குறைந்திருந்தால், இந்த நோய் ஏற்படுகிறது. இந்தச் சக்திக் குறைவே ரத்தக்கொதிப்பு என்பது. ரத்த அழுத்தத்தை அளந்து பார்க்கிறார்கள். அது இயற்கை அளவை மீறினால் அதை நோயென்று கூறுகிறார்கள். உடலில் இடை விடாமல் நிகழும் ஓர் இயற்கைச் செயல் ரத்த ஓட்டம். இதில் பங்கு கொள்ளும் உறுப்புக்கள். இதயமும் ரத்தக் குழாய்களும். பங்கு கொள்ளும் தாது ரத்தம் இந்தப் பணியை நிறைவேற்றி வைக்கும் பொறுப்பு ரத்த ஓட்டத்தை இயக்கி வைக்கும் வியானவாயுவைச் சேர்ந்தது.

ஒரே சீராக இந்தச் செயல் நடைபெற இந்த மூன்றும் சமநிலையில் இருந்து ஒத்துழைக்க வேண்டும்.

நடுவயதினருக்கு ஒரு நிமிஷத்துக்குச் சுமார் 70-தடவை இதயம் சுருங்கி விடுகிறது. ஒவ்வொரு தடவை விரியும்போதும் இதயத்தினுள் ரத்தம் நிரம்புகிறது. அசுத்தமான ரத்தத்தைச் சுத்தி செய்வதற்காகச் சுவாச கோசத்தினுள் அனுப்புவதும், சுத்தியான ரத்தத்தை உடலின் எல்லாபகுதிகளுக்கும் அனுப்புவதும் இதயம் விரிந்து சுருங்கும்போது நிகழும் செயல்கள் இந்த நிகழ்ச்சியின் பிரதிபலிப்பைக் கைநாடியிலே எளிதில் உணர்கிறோம் கைக்கட்டை விரலின் அடியில் உள்ள ரத்தக்குழாயில் காணும் துடிப்பைக் கைவிரலைக் கொண்டு உணர்வதை நாடி பார்ப்பது (Pulse Reading) என்று கூறுகிறோம்.

இதயம் சுருங்கும்போது துடிப்பும், இதயம் விரிந்து ஓய்வு பெறும்போது துடிப்பின்மையுமாக மாறி மாறி நம் கைகளுக்குப் புலப்படுகின்றன. இதில் காணும் அழுத்தம், துடிப்பு இவற்றின் தராதரத்தைக் கொண்டு இதயம் எந்த ரீதியில் வேலை செய்கிறது என்பதைக் கண்டு பிடிக்கலாம். நாடி பிடித்துப் பார்ப்பதற்குக் கவனமும் சிறந்த பயிற்சியும் தேவை.

ரத்தக்கொதிப்பு நோயைக் கண்டு பிடிப்பதற்கு ஒரு யந்திரம் உண்டு அதன் பெயர் ஸ்பிக்மோமானோ மீட்டர்" இதைப் புஜத்தில் கட்டி, புஜரத்தக் குழாயில் காணும் அழுத்தத்தின் தராதரத்தை அளக்கிறார்கள் இதயம் சுருங்கி ரத்தம் வேகமாக ரத்த குழாய்களில் பாயும்போது, ரத்த குழாய்களின் தசைச் சுவர்கள், விரிந்து ரத்த ஓட்டவேகம் தணிந்தும் ரத்தக்குழாய்களின் தசைச் சுவர்கள் சுருங்கித் தம் நிலையை அடைகின்றன இப்படி ரத்தக் குழாய்களுக்கு விரிந்து சுருங்க உள்ள தன்மையின் பிரதிபலிப்பையே நாடிப் பரீட்சை மூலமோ ஸ்பிக்மோமானோ மீட்டர் பரீட்சை மூலமோ அறிகிறோம்.

ரத்த அழுத்தத்தை இந்த மீட்டரில் இரண்டு நிலைகளில் அளக்கிறார்கள். ஒன்று, இதயம் சுருங்கி ரத்தத்தைக் குழாய்களில்

வேகமாகப் பாய்ச்சும் போது. இந்த அழுத்தம் "ஸிஸ்டாலிக் பிரஷர் (Sistolic Pressure) மற்றொன்று இதயம் விரியும் போது இந்த அழுத்தம் "டயஸ்டாலிக் பிரஷர்" (Diastolic Pressure) இரண்டிலும் ரத்தக் குழாய்ச் சுவர்களில் ரத்த அழுத்தம் பிரதிபலிக்கிறது.

ரத்த அழுத்தம் பார்க்கும் கருவியைப் புஜத்தில் கட்டிவைத்து காற்று அடிப்பார்கள் பலூனிலே காற்று ஏற ஏற அது பருத்துப் புஜநாடியைப் பலமாக அழுத்தும். அதன் வழியாக ரத்தம் ஓட முடியாதபடி செய்துவிடும். பிறகு காற்றைச் சிறிது சிறிதாக வெளியே விட்டுக் குலைச்சே தினியால் டாக்டர் கவனித்துக் கேட்பார். திடீரென்று ரத்தம் பாய்ந்து வரும் ஓசை கேட்கும். அப்போது பாதரஸம் காட்டும் எண்ணை டாக்டர் குறித்துக் கொள்வார். அது சாதாரணமாக 110-க்கும் 150-க்கும் இடையிலே இருக்கும். இது குலைச்சுருக்கு (ஸிஸ்டாலிக்) அழுத்தம் டாக்டர் தொடர்ந்து காற்றை விடவிடச் சிறிது நேரத்திலே ரத்தம் ஓடுகிற சப்தம் கேட்காது. அப்போது பாதரஸ மட்டம் அநேகமாக 80-க்கும் 95-க்கும் இடையிலே இறங்கியிருக்கும். இது குலைவிரிவு (டயஸ்டாலிக்) அழுத்தம்.

வயதுக்கேற்றபடி இந்த அழுத்தங்கள் சாதாரணமாக இருக்கவேண்டிய கணக்கு இது

வயது	இதயம் சுருங்கும்போது (ஸிஸ்டாலிக் பிரஷர்)	இதயம் விரியும்போது டயஸ்டாலிக் பிரஷர்
13 - 25	115 - 120	75
26 - 35	118 - 125	75 - 80
36 - 45	120 - 130	- 80
46 - 50	125 - 140	80 - 83
51 - 60	130 - 150	- 85

அறுபது வயதுக்கு மேல்பட்டுச் சிலருக்கு இந்த அளவுகுறையும். சிலருக்கு இதே சீரில் இருக்கும்.

பொதுவாக ரத்த அழுத்தம் குறைவாக இருப்பது நல்லது. ஏன் தெரியுமா? அது குறைவாகயிருந்தால் இதய நோயாலும் ரத்தக்குழாய் நோய்களாலும் அவதி ஏற்படாது யாருக்காவது சுருக்க அழுத்தம் தொடர்ச்சியாக 150-க்கு மேலே இருந்தால் அவருக்கு ரத்தக்கொதிப்பு என்ற உயர்வு நோய் விருத்தியாகிக் கொண்டிருப்பதையே அது குறிக்கும் குலைவிரிவு அழுத்தம் 85க்கு மேலே போவது கெடுதல். அப்போது இதயம் தன் துடிப்புகளுக்கு இடையில் தக்கபடி ஓய்ந்திருக்க முடியாது. மிகவும் வலிந்து வேலை செய்ய வேண்டியிருக்கும்.

இதயம் அதிக அழுத்தத்துக்கு உள்ளாகித் தொழில் செய்கிறபோது அந்த அளவுக்குத்தக்கபடி விரிந்து கொடுக்கவில்லை என்றால் அது நின்றுவிடும்.

ரத்தக் குழாய்களை ரத்தக்கொதிப்புத் தாக்கும் நம் ரத்தக் குழாய்கள் ரப்பரைப் போல் நெகிழ்ந்து சுருங்கக் கூடியவை ஆனால் நமக்கு வயதேற ஏற அவை சாதாரணமாக இந்தத் தன்மையை இழந்து சுலபமாகப் பிய்ந்துபோகும் தன்மையை அடைகின்றன. ரத்தக் குழாய்களுக்கு இந்த நெகிழ்ச்சித் தன்மை இருக்கும் வரையில் ரத்தக் கொதிப்பினால் கூட அவ்வளவாகக் கெடுதி ஏற்படாது. ஆனால் அந்தத் தன்மை கெட்டபிறகு ரத்தக் கொதிப்பின் அமுக்கத்தைத் தாங்க முடியாமல் அவை வெடித்தாலும் வெடிக்கலாம்.

நாற்பது வயதுக்கள் ரத்த அழுத்தம் அதிகமாக இருக்கிறதென்று கண்டால் உடனே அதற்குப் பரிகாரம் தேடிக்கொள்ள வேண்டும். 45-க்கு மேலே காணும் ரத்தக் கொதிப்பு நோயை நிவர்த்திக்கலாம் என்றாலும் அதிக முயற்சி தேவை.

ரத்தக் கொதிப்பு நோயினால் அவதிப்படுகிறவர் எப்பொழுதும் மகிழ்ச்சியோடு இருக்கப் பழக வேண்டும்.

தங்களுக்கு நேரும் அசௌகரியங்களையும் கஷ்டங்களையும் மறந்துவிட வேண்டும். மனக்கவலை. கலக்கம். பயம் பதற்றம் ஆகிய உணர்ச்சிகளுக்கு வசமாகக் கூடாது. மகிழ்ச்சி என்பது புற விஷயங்களைப் பொறுத்ததல்ல அது உள்ளிருந்தே வருவது போதிய அளவு ஓய்வு கொண்டு இளைப்பாற வேண்டும். அதிக நேரம் தூங்க வேண்டும்.

ஒழுங்காக வாழவேண்டும் சாப்பாட்டுக்கும் தூக்கத்துக்கும் மலக்கழிவுக்கும் குறித்த காலங்கள் இருக்க வேண்டும். மலச்சிக்கல் இல்லாமல் கவனித்துக் கொள்ள வேண்டும். தினம் ஒரு தடவையாவது மலம் கழிக்க வேண்டும். இரண்டு தடவை கழித்தாலும் நல்லதே. ஆனால் வயிற்றோட்டம் இருக்கக் கூடாது.

ரத்தக் கொதிப்பினால் அவதிப்படுகிறவர்களும் காபி. டீ. கோகோ போன்ற பானங்களை நீக்கிவிட வேண்டும். பசுவின் பாலில் தேன்விட்டுப் பருகலாம்.

40-வயது முதல் ஆகாரம். பழக்க வழக்கங்கள் அனைத்திலும் மிதமாகவே இருக்க வேண்டும். சத்துள்ள உணவே உட்கொள்ள வேண்டும் எக்காரணங்கொண்டும் கவலைபடவே கூடாது கவலைகளின் காரணமாகத்தான் நம்மில்பெரும்பாலோருக்கு உடல் சோர்வும் களைப்பு மிகுதியும் பயமும் ஏற்படுகின்றன. மனத்திலே தினமும் மகிழ்ச்சி வேண்டும். எண்ணத்திலும் செயலிலும் உறுதி இருக்க வேண்டும்.

ரத்தக் கொதிப்பைச் சமனப்படுத்தி இதயத்துக்குப் பயம் தரக்கூடியது மகா சித்தாதி லேகியம் நிலைப்பனைக்கிழங்கு. அழுக்கிராங்கிழங்கு இரண்டும் கொண்டு செய்வது இது கரரோபா என்னும் கஹரூபாபஸ்மமும் இதற்கு மிகச் சிறந்த மருந்தே. காரோபா என்பது ஒரு வகைக்கல். பவழத்தைப் போன்றது. ஆனால் மஞ்சள் நிறம் இந்தக் கல் மணிகளை கோத்துக் கழுத்திலே மாலையாக முஸ்லிம் பக்கீர்கள் பெரும்பாலும் அணிவார்கள். இந்தமணி உடைந்து விட்டால். மாலைக்கு பயன்படாது. அத்தகைய மணிகள் 35 கிராம் 5 ரூபாய்க்குக்

கிடைக்கும். இவற்றைப் பொடித்து மண்கலயத்திலிட்டு வாய்மூடிக் கரியடுப்பின்மீது 12மணி நேரம் வைத்துப் பிறகு கலவத்திலிட்டுப் பன்னீர் விட்டரைத்து வைத்து உலர்த்தி வைத்துக்கொள்ளலாம். இரண்டு அரிசியெடை சுத்தத்தேனில் 4 மணி நேரத்திற்கு ஒரு முறை இதைச் சாப்பிட்டு வந்தால். வெகுவிரைவில் குணம் தெரியும்.

இதய நாடி அடைப்பு (Coronary Turombosis) நமது இதயத்தின் இடப்பக்கம் கையை வைத்துக் கவனியுங்கள். டக் டக் என்று இரவு. பகல் கடிகாரம் அடிப்பது போல அடித்துக் கொண்டிருக்கும். இதுதான் இதயத்துடிப்பு இது நின்றால். அவ்வளவுதான்! இதயத்துக்கு ரத்தம் வரும் குழாய்மூலம் ரத்தம் வருவது தடைபட்டு நின்றால். இதயத் துடிப்பும் நிற்க வேண்டியதுதானே! இதுதான் "ஆட்கொல்லி"யான கரோனரித்ரோம் போஸிஸ் இது திடீரென்று ஆளைக் கொன்றுவிடும்.

சுறு சுறுப்பு வேண்டியதுதான். ஆனால் பரபரப்புக் கூடாது. கவலைகளால் உருகாதீர்கள் அப்போதைக்கப்போது ஓய்வு எடுத்துக் கொள்ள வேண்டும். ஓய்வு இல்லாமல் உழைத்தால் உடம்புகெடும்.

சாப்பிடும் போது நிதானமாக மென்று ருசித்துச் சாப்பிடுங்கள். வருத்தம். ஆத்திரம். கோபம் இவற்றுடன் கூடிய பேச்சுக்கு நடுவில் அமிர்த்தத்தைச் சாப்பிட்டாலும் விஷமாக மாறிவிடும். இரண்டாவது ஜாமத்தில் படுக்கையில் இருக்க வேண்டும். படுக்கையில் கண்ட கண்ட நினைப்புகள் வேண்டாம் வெகுநேரம் தூக்கம் விழிக்கும் பழக்கம் கெட்டது.

நீ உன் கடமையைச் செய்து கொண்டே போ! பலன் பற்றிக் கவனிக்காதே என்று பகவத் கீதை கூறுகிறது இந்தத் தத்துவம் எந்த உண்மையைப் போதிக்கிறது? பலனை எண்ணி எண்ணிப் பார்த்துக் கொண்டிருந்தால் உடன் செய்யவேண்டிய கடமையில் தவறிவிடுவோம்" பலனைப் பற்றிக் கவலை

கொள்ளாவிட்டால், தோல்வியுற்றாலும் மனங்கலங்க மாட்டோம். ஏமாற்றம் மனதைச் சரிய வைக்காது. இந்த மனப்பண்பு எவனுக்கு எற்படுகிறதோ அவனே கஷ்ட சுகங்களைச் சமநோக்குடன் பார்ப்பவனாவன். இந்த சமநோக்கு ஏற்பட்டவனுக்கே மனச்சாந்தி கிடைக்கும். மனச்சாந்தி இல்லையென்றால் நரம்புத் தளர்ச்சிதான். நரம்புத்தளர்ச்சி நமது சரீரத்துக்குப் பூகம்பமாகும் என்று காஞ்சி காமகோடி பீடாதிபதி ஜகத்குரு ஸ்ரீ சங்கராச்சாரிய சுவாமிகள் அருளியிருக்கிறார்கள்.

பாரத நாட்டின் ப்ரமசாரியர்களும், வள்ளுவர், ஔவை ஜோதிராமலிங்கம் போன்ற அநுபவ ஞானிகளும், வாழ்க்கை நெறிமுறைகளைப்பற்றி சொல்லியிருப்பதெல்லாம் செவிடன் காதில் ஊதிய சங்குமாதிரியே இருக்கிறது. பிரபல டாக்டர் டி.ஏ.ஸ்மித் கூறியிருப்பதைப் பாருங்கள்.

"ஓய்வில்லாமை" அவசரமாகச் சாப்பிடுவது, இரவுகளில் நீண்ட நேரம் கண்விழித்திருப்பது இவற்றால் நரம்புதளர்ச்சி, இதயநோய், இதயப் புண் இவை ஏற்பட்டு "ஆட்கொல்லி நோயாக மாறுகின்றன".

இதயத்துக்கு ரத்தத்தை அளிக்கும் ரத்தக்குழல் அடைத்துக் கொண்டால் திடீரென்று இதய இயக்கத்தை நிறுத்தி ஆளைக் கொன்றுவிடுகிறது. சாதாரணமாக ரத்தக்குழலில் அடைப்பு ஏற்படுகிறபோது பொறுக்க முடியாத வலியிருக்கும். இந்த அறிகுறி ஒரு வாரத்திற்கு முன்பே தெரியும் அப்போதே ஆபரேஷன் செய்து விடலாம். இந்தச் சிகிச்சை சுலபமானது இதயத் தசைகளுக்கு ரத்தம் ஊட்டும். நாடிதடைப்பட்டால் தானாகவே வேறு நாடிகள் மூலம் இதயத் தசைகளை ரத்தம் அடைகிறது. எனவே தான் இந்த ஆரரேஷன் சுலபம் என்று க்ளோபர் என்ற பிரபல டாக்டர் கூறுகிறார்.

நம் மூலிகைகளிலே தாமரையும் அருகும் இதயத்தையும் ரத்தக் குழாய்களையும் சுத்தப்படுத்திப்பலத்தைத் தருபவை. அருகைச் சமூலம் (வேறுடன்) இடித்துப் பிழிந்து சாரெடுத்து

ஆழாக்கு அளவு உட்கொள்ளவேண்டும். இதிலே இரண்டு தேக்கரண்டி "தேன்" விட்டுப் பருகுவது மேலும் நல்லது.

தாமரை இனத்தில் செந்தாமரையைவிட வெண்தாமரைப்பூ குணம் செய்வதில் மிகச் சிறப்புடையதாகும். வெண்தாமரைப்பூ இரண்டை, அரை லிட்டர் நீரிலிட்டுக் கால் லிட்டராகச் சுண்டக்காய்ச்சி வடிகட்டி 3 வேளையாகப்பருகலாம் முத்துப் பஸ்பமும் சாப்பிடலாம்.

இதயவலி :- உடலின் ரத்தக் களஞ்சியமான இதயம் பலவீனப்பட்டு, அதில் வாயு தங்கி, இதயவலி (மார்புவலி) ஏற்படுவதுண்டு. மேக உஷ்ணத்தால் மூளை சீர்கெட்டு அதனால் இதயம் பலவீனம்.

ஆங்கில வைத்தியத்தில் இதயத்துக்குப் பலம் தரும் மருந்தைக் கொடுப்பார்கள். தமிழ் முறைப்படி வாயுவைக்கலைக்க மருந்து உபயோகிப்பார்கள்.

இதயத்தை பலப்படுத்தவும், வாயுவைக் கலைத்து வலியை நீக்கவும் யூனானி முறையில் சந்தன ஜவாரிஷ் மிகவும் பயன் தருகிறது. செம்பரத்தின் கஷாயமும் நல்லதே மற்றும் ரோஜாப்பூ, கஹரூபா கடுக்காய், கமலாப்பழம், கல்தாமரை, கொத்தமல்லி, காவு ஸுபான், சந்தனம், சோப்புப்பழம், தித்திப்புமாதுளங்கனி, நல்முத்து பஸ்பம், மாணிக்க பஸ்பம், நெல்லிக்காய், பச்சைச்கற்பூரம், புளி, பூங்காவி மூங்கிலுப்பு, வெள்ளி ரேக்கு முதலிய இவைகள் குளிர்ச்சியான வகையில் இருதயத்துக்கு பலம் தருபவையாகும்.

அகிற்கட்டை, அம்பர், உஸ்து, குத்தூஸ், ஏலக்காய், காட்டுத்துளசி, குங்குமப்பூ, கோரைக்கிழங்கு, கடாமாஞ்சில், துரிஞ்சிப்பழத்தோல், நல்லபட்டு மஹமனே சுபேத்பஹமனே சுரும், பஸ்பயஸ், பொதினா, பொன்ரேக்கு, பெருலவங்கப்பட்டை முதலிய, சரக்குகள் கூடான வகையில் இருதயத்துக்கு பலத்தைத் தரும் சரக்குகளாகும்.

செம்பரத்தன்பூ இருதயத்துக்கு பலம் அளிப்பதில் சிறப்புடையதாகும்.

செம்பரத்தன் பூவானது உஷ்ண சம்ஹாரி கல்லீரலின் பேரிலும் இருதயதத்தின் நீர்பையின் பேரிலும் வேலை செய்யக்கூடியது. லேசான உஷ்ண சுரங்களுக்கு மிக உபயோகமானது. கணச்சூடு உள்ள குழந்தைகள் அதாவது இருதயம் துடிப்புள்ள பலவீனமான ழுழந்தைகளுக்குச் செம்பரத்தன்பூ கியாழம் அல்லது சர்பத் கொடுத்துவர இதயத்துடிப்பு நீங்கி கணச்சூடு குறைந்து விடுகின்றது. மற்றும் வயது வந்தவர்களுக்கு ஏற்படும் வியாதிக்கு இணையற்றதாகும்.

செம்பரத்தம்பூ சர்பத்

செம்பரத்தம்பூ 250பூ, எலுமிச்சம் பழம் 50 ஒரு பீங்கான் கோப்பையில் எலுமிச்சம் பழத்தை விதை நீக்கி சாற்றைப் பிழிந்து அதில் செம்பரத்தம்பூ இதழ்களைப் போட்டு அமுக்கி வைத்து 24 மணி நேரம் சென்றதின்பின் மேற்படி பூக்களை நன்றாகப் பிசைந்துவர பூக்கள் யாவும் சாற்றுடன் கலந்துவிடும். சாற்றின் அளவு சுத்தமான தேன் கலந்து மத்தால் கடைந்து அடுப்பேற்றி சர்பத் பதத்தில் எரித்து இரக்கவும். அதிகாலையில் ஒரு டீஸ்பூன் அளவும் இரவு உணவுக்குப்பின் ஒரு டீஸ்பூன் அளவு சர்பத்தை சாப்பிடலாம்.

இவ்வாறு சாப்பிட்டுவர இருதய சம்பந்தப்பட்ட சகல நோய்களையும் குணம் செய்யும். மற்றும் கஷயரோகம், வெள்ளை பாஷாணம், வெள்ளை வெட்டை வியாதி, நீர் எரிச்சல், சிறுநீர் எரிச்சல், பெரும்பாடு என்னும் உதிரப்பெருக்கு பெண்களுக்கு காண்பது உண்டு இந்நோயையும் அதிசயப்படும் வகையில் குணம் செய்யும்.

கல்லீரல் வீங்கியிருக்கும் சமயத்தில் சுரம் அடிப்பது உண்டு. அத்தகைய சுரங்களுக்கு எந்த ஔடதமும் பயன்படுவதில்லை. ஆனால் செம்பரத்தம்பூ சர்பத் குணம் செய்கிறது.

சிறுகுழந்தைகளுக்கு இருதய வியாதி ஏற்பட்டு இளைத்து வ்ரும் சமயத்தில் எம்மருந்தை கொடுப்பினும் பயன் தருவதில்லை. மேற்கொண்டு உஷ்ணம் அதிகரித்து வயிற்றுவலி வயிற்று உப்பல் முதலான தொந்தரவுகள் எற்படுகின்றன. அத்தகைய குழந்தைகளுக்கு இந்த சர்பத்தை வயதுக்கு தக்கவாறு காலை மாலை கொடுத்துவர பூரண குணத்தை காணலாம்.

என்னுடைய அனுபவத்தில் எத்தனையோ குழந்தைகளுக்கும். பெரியோர்களுக்கும் செம்பரத்தம் பூவை உபயோகித்தும் சர்பத்தை உபயோகித்தும் பல வியாதிகள் குணமாக்கப் பட்டிருக்கிறது. அடியில் கூறும் நோய்களுக்கும் இந்த சர்பத் பிரதானமானதாகும்.

இதயம் சுருங்குவது :- இதயம் சுருங்கி விடுமேயானால் கல்லீரல் வேலை செய்யாது. கால் வீங்கும். வயிறு புடைக்கும் நீர் தாராளமாக இறங்காது. ஆயாசம் அதிகப்படும். அதிகமாக மதுபானம் பருகுவதனாலும். அதிபோகத்தாலுந்ததான் இதயம் சுருங்கி அவதிப்படுகிறது.

ஆங்கில முறையில் வயிற்றில் குத்தி நீர் எடுப்பதுண்டு. நீர் எடுத்தவுடன் வயிறு குறைந்து தோன்றினாலும். மீண்டும் வயிறு பருத்து விட்டால் இப்படி மூன்று முறை பருத்துவிட்டால். இந்த நோய் குணமாவது அசாத்தியம்.

இதயத்தில் உண்டாகும் நோய் எதுவானாலும் கல்லீரலையும் மூளையையும் பாதிக்கக் கூடியதாகவே இருக்கும்.

கல்லீரலில் காணும் நோயினாலும் இதயம் கெட்டுவிடும் எனவே இதயத்துக்கும் கல்லீரலுக்கம் மூளைக்கும் தொடர்பு இருக்கிறது என்று உணரவேண்டும்.

சந்தனம், மாதுளை, புளிநீர், சீமைஇலந்தை, நல்முத்து, பச்சை கற்பூரம் இவை கொண்டு தயாரித்த லேகியம் இந்த நோயை நீக்கவல்லது.

இதயவீக்கம் :- இதய நோய்களில், இதயத்தில் மாங்காய் வடிவ அம்சம் வீக்கம் அடையும். இப்படி ஒரு நோய் இதில் ஜீரணம் குறைந்துவிடும் கல்லீரலில் சரியானபடி வேலை செய்யாது. சிறுநீர் இறங்குவது மட்டுப்படும் கால் வீங்கும். வயிறு வீங்கும். மார்புத்துடிப்பு அதிகமாய்க் காணும். சில சமயங்களில் இதயத்தில் ஒருவிதக் குத்தல் வலியும் காணும்.

அமிதக் குடியினாலும் தாம்பத்திய உடலுறவு அதிகரித்ததினாலும் இதய வீக்கம் ஏற்படுகிறது.

இந்த நோய்க்கு ஆங்கில்முறையில் ஸ்ட்ரிக்னைன் டிஜிடாலிஸ், டிங்சர், நக்ஸ்வாமிகா முதலிய மருந்துகளை உபயோகிக்கிறார்கள் பயன் அற்பமாகவே இருக்கிறது.

தமிழ் மருந்துகளின் வித்தக வில்வாதி லேகியமும் லோக பஸ்பமும், லோக செந்தூரமும் இதய வீக்கத்தைக் குணப்படுத்துகின்றன.

யூனானி வகையில் முத்து, காரோபா, பாபுசார், அம்ப முதலியவற்றின் பஸ்பங்களும் விதைத் தினுசுகளும் பழ மரப்பாக்களும், வெள்ளி தங்கரேக்குகளும் இதய வீக்கத்தைக் குணப்படுத்துகின்றன.

நரம்புத் தளர்ச்சி

மனித உடலுக்குச் சத்துருக்கள் அநேகம் வெளிப்புறமிருந்து நம்மைத் தாக்கும் சத்துருக்களைவிட உட்புறமிருந்து தாக்குபவை அதிகம். கிருமிகள் தோலைப்பாதிக்கின்றன. நாம் உட்பொள்ளுகிற உணவையும் குடிக்கும் நீரையும், சுவாசிக்கும் காற்றையுங் கூட இவை கெடுத்து விடுகின்றன. இவற்றைத் தடுக்க எதிப்புச்சக்தி நம்மிடம் சிறிதே இருக்கிறது. இந்தக் கிருமிகளையும் விடப்பெரிய ஆபத்தும் நமக்குள்ளேயே இருக்கிறது. அதுதான் மனப்பயம். நோயினால் கஷ்டப்படும்போது நோயாளிக்கு ஓரளவு பயமும் கவலையும்

உண்டாவது இயற்கை ஆனால் மிதமிஞ்சிய பயமும் கவலையுந்தான் நோயை அதிகரித்து அவதிப்படுத்துகின்றன.

ரத்தக் கொதிப்பிலும் பிற இதய நோய்களிலும் நோயாளியைப் பயமும் பிடித்துக் கொண்டால் அது மிகவும் அபாயமான அறிகுறி. நோய் பலப்படுவதுடன், சிலசமயம் நோயாளியின் உயிருக்கே ஆபத்து உண்டாகிவிடும். க்ஷயம், இதயவலி போன்ற நோய்களினால் சாகிறவர்களைவிட அவை தங்களுக்கு வந்து விட்டனவே என்ற பயத்தினால் சாகிறவர்கள் அதிகம் பேர் என்று வைத்திய ஆராய்ச்சியாளர்கள் கண்டு பிடித்திருக்கிறார்கள்.

அநேகருக்கு நாடித்துடிப்பு அதிகமாகவே இருக்கலாம், சிலருக்கு படபடப்பு இருக்கும்போது உண்மையிலே கொஞ்சம் சிரமமாக இருக்கும். இவை இருப்பதால் நோயாளிகளுக்குப் பயம்வேறு தோன்றலாம் இவையெல்லாம் இதயநோயின் அறிகுறிகள் என்று கூறிவிடமுடியாது. உடல்பலவீனம் இருப்பவர்களில் அநேகருக்கு இப்படிப்பட்ட இதயபடப்போ நாடி துடிப்போ சர்வ சாதாரணமாக இருக்கிறது.

சிலருக்கு வழக்கமாக அவர்களுடைய இதயம் துடிப்பதிலி ருந்து வித்தியாசமாகத் துடிப்பு உண்டு. அவர்களில் அநேகர் ஓய்வு ஒழிவில்லாமல் வேலைகளைச் செய்து வருகிற பழக்கம் உடையவர்களாக இருப்பார்கள்.

நரம்பு மண்டலத்துக்கும் இதயத்துக்கும் சம்பந்தம் இருக்கிறது. நரம்பு மண்டலத்தில் ஒருபகுதி இதயத்தை தூண்டி வேலை செய்ய வைக்கிறது. மற்றும் ஒருபகுதி அதை ஓய்வெடுக்கத்தூண்டி அதன் ஓட்டத்தை பலபடுத்தவும், இதய மூலபலத்தைப் பெருக்கவும் உதவி செய்கிறது.

ஓய்வி ஒழிவில்லாமல் வேலை செய்யப் பிரயாசைப் பட்டால், நரம்புச் சக்தியை முற்றும் நாம் விரயம் செய்துவிடுகிறோம் அதன் விளைவு என்ன? இதயத்தை ஓய்வெடுக்கத் தூண்டி ஓட்டத்தை லகுபடுத்தும் நரம்புகள் தங்கள்

கடமையைச் செய்ய முடியாமல் போவதுதான். இதனால் சோர்வு மயக்கம், பலவீனம், இதயத்துடிப்பு வேதனை, எல்லாம் தோன்றுகின்றன. இவற்றை இதயநோய் என்று நினைத்து பலர்பயந்து விடுகிறார்கள். அவர்கள் செய்ய வேண்டியது எல்லாம் அதிகக் களைப்பும் சோர்வும் ஏற்படாதபடியும் நரம்புகளின் சக்தி விரயமாகாதபடியும் வேலை, விளையாட்டு உணவுயாவற்றிலும் மிதமாக இருந்து வரவேண்டியதே இப்படி நடந்துகொண்டால் அவர்களில் அநேகருடைய நோய் மாயமாய் மறைந்து விடுகிறது.

நரம்பு தளர்ச்சியோ இதயபலவீமோ உள்ளவர்கள் நடந்துதான் போகவேண்டும். ஓடுவது கூடாது தர்க்கவாதங்களைத் தவிர்க்க வேண்டும். தேவைப்பட்டால், கொண்ட கொள்கைகளைத் தளர்த்திவிட்டுப் பிறரோடு ஒத்துப் போகவேண்டும் தேக எடைகூடுவதோ குறைவதோ இல்லாமல் சாதாரணமாக இருக்கும்படி பார்த்துக் கொள்ளவேண்டும் பலமான சாப்பாடு கொள்வதை மூன்று வேளையிலும் தவிர்க்க வேண்டும். இரவு உணவு மிகவும் லகுவாயிருக்கவேண்டும். காபி, புகையிலை, சாராயம் போன்ற கிளர்ச்சி ஊட்டும் பொருள்களை விலக்கவேண்டும் ஒரேயடியாக உடம்புகளைத்துப் போனபிறகு ஓய்வுகொள்வது என்பது இல்லாமல் களைக்க ஆரம்பபமாகிறது என்று தெரிந்ததுமே ஓய்வு எடுக்க வேண்டும். தினசரி அலுவல்களை முடித்துக் கொண்டு லேசான உடற்பயிற்சி செய்வது அல்லது திறந்த வெளியில் உலாவுவன முக்கியம். நேரம் தவறாமல் படுக்கச்சென்று விடவேண்டும் அப்போதுதான் சரீர உறுப்புகள் வேண்டிய ஓய்வுபெறும். இரவில் கண்விழித்திருக்கலாகாது எல்லாவற்றிலும் அளவோடு மிதமாக இருக்க வேண்டும். நரம்புத் தளர்ச்சியினால் அவதிப் படுகிறவர்கள் மனக் கோளாறுகளை நீக்கிக் கொண்டு ரத்த ஓட்டத்தைச் செம்மைபடுத்தச் சந்திரோதய லேகியம் சாப்பிட்டு வரவேண்டும். இஞ்சி, அதிமதுரம், கோஷ்டம் திப்பிலி மிளகு, சுக்கு, ஏலரிசி, வால்மிளகு, கிராம்பு, சாதிக்காய், சாதிப்பத்திரி

இவற்றை இளவறுவலாக வறுத்துச் சூரணித்துக் கற்கண்டு, பசும்பால், நெய், தேன் இவை கொண்டு தயாரிக்கும் இந்த லேகியம் நரம்புகளுக்கு வலுவைத்தரும். தினசரி நெல்லி க்காயளவு காலை மாலை சாப்பிட்டுப் பசுவின்பால் (காய்ச்சியது) பருகிவர வேண்டும். ஆகாரத்திலேயும் பசுவின்பால் திராட்சை தக்காளி மணத்தக்காளிக்கீரை பாதாம்பருப்பு, முந்திரிப்பருப்பு, ஆரஞ்சிபழம், வால் பேரிக்காய், மலைவாழைப்பழம் (இவற்றில் வைட்டமின் "பி" இருக்கிறது) முதலியவற்றைச் சேர்த்துக் கொள்ள வேண்டும்.

சுத்தத்தேன் 2 கரண்டி பசுவின் பாலில் விட்டு அல்லது சுத்தமான நீரில்விட்டுப் பருகிவரலாம்.

தாம்பத்திய உடலுறவிலும் மிதமாயிருக்க வேண்டும். உடலுறவு நரம்புச் சோர்வுக்குப் பெருமளவுக்கு காரணமாகிறது என்பது கவனிக்கத்தக்கது.

இதயவலி - பெண்களுக்கு மேக உஷ்ணத்தால் அதாவது வெட்டை நோயினால் கருப்பை சீர்கேடு அடைந்து மாதவிடாய் குறைந்து விடுமானால் அதை சூதகவாயு என்று கூறுவார்கள். சூதக வாயுவினால் உதயத்தில் வாயு அதிகரித்து மார்புவலி உண்டாக்கும் இந்த மார்புவலியை நீக்குவதற்கு இதயத்தில் வேலை செய்யக்கூடிய மருந்தைக் கொடுப்பதில் பயனில்லை.

ஜுரம் அதிகரித்து அவதிப் படுகிறவர்களுக்கு இதயம் பலவீனப்பட்டு விடுகிறது. அவர்களுக்கு முதலில் இதயமே முக்கியமானது. ஆனால் முதலில் இதயத்தை பயன்படுத்திக் கொண்டு ஜுரத்தை நீக்க முயலுவது எப்போதும் பொருத்தமாகாது முதலில் ஜுரத்தை குறைக்க வழித்தேடி பிறகு ஜுரத்தின் காரணத்தை அறிந்து மூலத்தைக்களைய மருந்தும் அதோடு இதய பலவீனத்தைப் போக்கும் மருந்தும் சேர்த்துக் கொடுப்பதுதான் முறை.

இதய வியாதி என்னும் நோய் அநேக மூல காரணங்களினால் உண்டாகிறது. அத்தகைய இதயவியாதியின்

காரணத்தை அறிய முடியாமல் செய்யும் சிகிச்சைகளினால் விபரீதமே விளையும்.

ஒரு பெண்மணிக்குப் பெருமூச்சு என்னும் இதயநோயும் "ஆயாசமும் உறக்கமின்மையும், வயிறு உப்பலும் வந்து அவள் துன்பப்பட்டுக் கொண்டிருந்தாள் இதயநோய்க்கு என்று எத்தனையோ மருந்துகளை உண்டும் ஊசி போட்டுக் கொண்டும் பயன் இல்லை. எதிர் வீட்டில் இருந்த என்னிடம் வந்து யோசனை கேட்டார்கள்.

நான் அவர்களின் வேண்டுகோளுக்கிணங்க நோயாளியைத் தீரப் பரிசோதித்தேன் இதயத்தில் யாதொரு நோயுமில்லை கர்ப்பப் பையில் உதிரம் தங்கிக் கிடப்பதாக உணர்ந்து அதைச் சௌக்யமாக வெளிப்படுத்த வெள்ளைச்சாறு என்னும் கீரையைக் கொண்டுவந்து 150-கிராம் கீரையைக் காம்புகளுடன் தட்டிப்போட்டு அவற்றில் கால் விட்டர் நீர் விட்டு அரைக்கால் லிட்டராகச் சுண்ட காய்ச்சி வடிகட்டிக் கொண்டு கொஞ்சம் பாலும் சர்க்கரையும் சேர்த்துக் காலை. மாலைகளில் காபிக்குப் பதிலாக உபயோகிக்க செய்தேன்.

அப்படியே செய்ததில் முதல் நாள் இரண்டுதரம் மலம் தாராளமாய் கழிந்து ஆயாசம் கொஞ்சம் குறைவுபட்டது. மறுநாள் முன்தினம் போல் சாப்பிட்டாள். மூன்றாவதுநாள் வீட்டு விலக்காகிக் கர்ப்பப்பையில் உதிரக்கட்டுகள் வெளிப்பட்டு விட்டன.

உதிரக்கட்டுள் நான்கு நாள் வெளிப்பட்டதால் ஆயாசம் தூக்கமின்மை பெருமூச்சு மேல்சுவாசம் முதலான துன்பங்கள் அடியோடு போய் விட்டன.

மறுநாள் நோயாளி என்னிடம் வந்து தனக்கு ஏற்பட்ட குணத்தைக்கூறி மகிழ்ந்து வேறு எந்த மருந்து சாப்பிட வேண்டும் என்று கேட்டாள். தாமரைக்கியாழம் பருகி வரும்படி கூறினேன். பிறகு எந்தவிதமான தொந்தரவும் அவளுக்கு ஏற்படவே இல்லை.

சாறுவேளை என்பது இரண்டு வகை ஒன்று சிவப்பு மற்றொன்று வெள்ளை இந்தக்கீரை நீர்ப்பையிலும் கர்ப்பப்பையிலும் வேலை செய்யக் கூடியது. மலம் தள்ளக் கூடியது.

இதயப் பாதுகாப்பு :- மனிதன் காட்டில் வசித்த காலத்தில் அவன் நாள் முழுவதும் நடந்து கொண்டோ ஓடிக்கொண்டோதான் இருந்தான். ஆனால் இந்தக் காலத்திலோ சர்வகலாசாலை ஒட்டப்பந்தயத்தில் பரிசுகள் பலபெற்று உயர்ந்த பதவி வகிக்கும் வாலிபர் கூட ஓடுங்கலையையும் அறவே மறந்து உட்காரும் கலையைக் கற்றுக் கொண்டு விட்டார்கள் உட்கார்ந்திருப்பவரை மகிமைப் படுத்தும் காலமிது "அடேயப்பா! அவரா! உட்கார்ந்திருந்த இடத்திலிருந்தே ஆயிரம் ஆயிரம் காரியங்களைச் சாதித்து விடுவாரே! அற்புதமானவரில்லை! என்று பெருமையாகச் சொல்கிறார்கள்.

உட்கார்ந்திருப்பது ஒரு தொற்று நோய். இது விரைவில் பலரைப் பற்றும் பெரிய பதவியில் பத்து ஆண்டு கழித்த ஒருவர் அதே வயதுள்ள ஒரு சம்சாரியைவிட 50 ஆண்டு முதியவராகக் காட்சியளிக்கிறார் ஆள் உட்கார்ந்து கொண்டேயிருக்கிறார் வயது இப்படி ஒரே ஓட்டமாக ஓடுகிறது.

நடப்பது மிகவும் நல்லது முக்கியமாக ரத்த ஓட்டத்தை அது துரிதப்படுத்தும் சொகுசானவாழ்க்கை உடலின் எடையைக் காட்டும். இதயத்தின் வலுவைக் குறைத்து வாழ்க்கையை கவிழ்த்துவிடும். தேவைக்கு அதிகமான உணவை உண்டு போதுமான உடற்பயிற்சி செய்யாமலிருப்பதே இதயக் கோளாறுக்கு முக்கியமான காரணம் நடப்பது சிறந்த தேகப்பயிற்சி அதிகாலையில் எழுந்து தினசரி 2-மைல் நடக்கலாம் களைப்பு ஏற்படாமல் ஒழுங்காக நடந்து வருவது நல்லது வாழ்வில் எளிமை துலங்க வேண்டும் பழக்கங்கள் அளவை மீறாதமிதத்தோடு இருக்க வேண்டும்.

நிலைவெல்லாம் ஆக்க நினைவாயிருக்க வேண்டும். தெளிவும் உண்மையும் துலங்க சிந்தனைபுரியப் பழகிக் கொள்வது அவசியம். மனம்போன போக்கெல்லாம் போகாமல் அதைக் கட்டுப்படுத்த வேண்டும்.

நேற்றுநாளை என்கிற கவலைகள் இல்லாமல் இன்றைய வாழ்வை நன்றாக முழுதாகவோ வாழவேண்டும்.

தெய்வ வழிபாடும் உற்சாகமூட்டும் உல்லாசப் பொழுது போக்கும் முக்கியமானவை.

தினசரி உணவு வகையிலே அரைக்கீரை, சிறுகீரை, பொன்னாங்காணிக்கீரை, மணத்தக்காளிக்கீரை, முளைக்கீரை முதலியவற்றில் ஏதாவது ஒன்று சேர்த்துக் கொள்ள வேண்டும்.

பழவகையிலே அத்திப்பழம், ஆரஞ்சுப்பழம், திராட்சைப்பழம், விளாம்பழம், தக்காளிப்பழம், உலர்ந்த திராட்சை, பேரீச்சம்பழம் ஏதாவது சாப்பிடலாம். இவற்றில் கால்ஸியம் (சுண்ணாம்புச் சத்து) இருக்கிறது.

வசதியுள்ளவர்கள் தினசரி ஓர் ஆப்பிள் பழம் சாப்பிடலாம் இதயத்துக்குப் பலம் தருவதில் ஆப்பிள் இணையற்றது.

வாதுமைப் பருப்பு இதயத்துக்கு மிகவும் நல்லது இதிலும் கால்ஸியம் நிரம்ப இருக்கிறது. தினசரி இரவு படுக்கப்போகும் முன் 9 வாதுமைப் பருப்புகளை நீரில் ஊறப்போட வேண்டும். அதிகாலையில் எழுந்ததும் பல்தேய்த்து முதல் உணவாக இந்த வாதுமைப் பருப்பை நன்றாக மென்று சாப்பிட்டு பசும்பால் பருகி வரலாம். இதய நோய் வரவே வராது. இதயத்தைப் பலப்படுத்துவதில் வாதுமைப் பருப்பு, ஆப்பிள், பேரீச்சம்பழம் மூன்றும் மிகச் சிறந்தவை.

இதயத் தளர்ச்சியுள்ளவர்கள் கூடிய வரையில் கொழுப்புப் பதார்த்தங்களையும் எண்ணெயில் தாளித்த அல்லது பொரித்த பட்சணங்களையும் குறைத்து உண்ண வேண்டும் அவற்றால்

கல்லீரலுக்கு மிகந்த வேலை ஏற்படுகிறது. ஜீரணிப்பதற்கு கடினமானவை அவை இதயத்துக்குத் திருப்பிப் போகும் அசுத்த ரத்தத்தில் பெரும்பாகம் வழியில் கல்லீரலில் தங்கிவிட்டுத்தான் வரும். ஆகவே அது நெய் அல்லது எண்ணெய் பட்சணங்களை ஜீரணிக்க முடியாமல் கிடந்து கஷ்டப்படும் சமயங்களில் இதயம் பாதகம் உறுகிறது. ஆகவே, ஜீரணத்துக்கு எளியவற்றையே மிதமாய்ச் சாப்பிட வேண்டும்.

பிராணாயாமம்

நம் உடலில் உயிரைக் கட்டிப்பிடித்து வைப்பது எது? நாம் உண்ணும் உணவா? பருகும் பானமா? நம் எண்ணங்களும் இச்சைகளுமா?

நம் இச்சை இல்லாமல் இயற்கையின் சக்தியால் தானகவே இயங்கும் வன்மை பெற்ற நம்சுவாச இந்திரியங்களே இந்தச் சாதனையைச் செய்து வருகின்றன. சுவாசம் அல்லது மூச்சு என்பது காற்றை நாசியால் இழுத்து, அதிலிருந்து சத்துப் பொருள்களை உடலிலே கிரகித்துக் கொண்டு அசத்தத்தை மீண்டும் காற்றிலே கலந்து வெளியிடுவதே. சுவாசம் நின்றுவிட்டால் உயிர் நீங்கி விட்டதாகத் கூறுகிறோம். அந்த உடலைப் பிணம் என்கிறோம். அதை வைத்திருந்தால் அழுகித் துர்நாற்றம் வீசும் என்று கருதி அதை உடனே அப்புறப்படுத்திப் புதைத்தோ எரித்தோ விடுகிறோம்.

மனிதனை மனிதனாக வாழ வைக்க நடக்கும் சுவாசிக்கும் தொழிலை, நாம் சற்று நேரமாவது கவனத்துடன் செய்கிறோமா? சுவாசம் சிறிது தடைப்படும்போது தான் அது நம் கவனத்துக்கு பாத்திரமாகிறது. மனப்பிராந்தி அடைந்து டாக்டரிடம் உடலைப் பரிசோதித்துக் கொள்ளவோ மருந்து வாங்கிச் சாப்பிடவோ போகிறோம் இந்த மாதிரி சீர்கேடான நிலைமை ஏற்படாதிருக்க நோய்களின் எதிரே பயங்கொள்ளியாக வாழாதிருக்க நிதமும் பிராணாயாமம் செய்ய வேண்டும்.

உடலின் பிராணசக்தியும், ஆதார சக்திகளையும் முறையாகக் கட்டுப்படுத்துவதே பிராணாயாமம் அது மூச்சு விடுவதை ஒழுங்கு படுத்துகிறது. உடலிலுள்ள பல வேறு உறுப்புகளுக்குச் சிறந்த பயிற்சியைக் கொடுக்கிறது. எல்லா வகையான நோய்களையும் போக்குகிறது. ஆரோக்கியத்தை விருத்தி செய்கிறது. திடசித்தத்தை அளிக்கிறது.

ஈரமில்லாத நல்ல காற்றோட்டமான அறையில் பிராணாயாமம் செய்ய வேண்டும். நதிக்கரை, ஏரிக்கரை, தோட்டம், திறந்தவெளி, மலையடிவாரம், மலையுச்சி ஆகியவை இதற்கு ஏற்ற இடம்.

பிராணாயாமம் செய்யும்போது உடலை வருத்தி அதிக முயற்சி செய்ய வேண்டாம். செய்யும்போது மகிழ்ச்சியும் மனநிறைவும் கொள்ள வேண்டும். எப்போதும் மிகவும் மெதுவாகவே மூச்சை உள்ளிழுக்க வேண்டும். வெளிவிடும்போதும் அப்படியே ஓசையற்று இருக்க வேண்டும்.

1. பத்மாஸனத்தில் அமர்ந்து கொள்ளுங்கள்.

2. வலது மூக்குத் துவாரத்தை வலது கைக் கட்டை விரலால் மூடிக்கொள்ளுங்கள் மெதுவாகக் காற்றை உள்ளிழுங்கள்.

3. பிறகு இடது மூக்குத் துவாரத்தையும் வலது மோதிரவிரல், சிறு விரல்களால் மூடிக்கொள்ளுங்கள் மூச்சை அப்படியே அடக்கிக் கொள்ளுங்கள். மிகச் சாதாரணமாக முடிந்தவரை அடக்கிக் கொண்டால் போதும். கஷ்டப்பட்டு அடக்க வேண்டாம்.

4. பிறகு வலக்கைக் கட்டைவிரலை எடுத்துவிட்டு மிக மிக மெதுவாக வலது மூக்குத் துவாரத்தில் வழியாகக் காற்றை வெளியிடுங்கள்.

5. பிறகு முன்போலவே மிகவும் மெதுவாக வலது மூக்குத் துவாரத்தின் வழியாகக் காற்றை உள்ளிழுங்கள்.

6. சற்று நேரம் சௌகரியமாக மூச்சை அடக்கிக் கொள்ளுங்கள்.

7. இடது மூக்குத் துவாரத்தை அடைத்துக் கொண்டிருக்கும் விரல்களை இப்போது எடுத்துவிட்டு அதன் வழியாகக் காற்றை வெளியே விடுங்கள். காற்றை வெளிவிடும்போது மிக மிக நிதானமாக வெளிப்படுத்த வேண்டும்.

இந்த ஏழு படிகளும் சேர்ந்து ஒரு பிராணாயாமம் ஆகும் ஆரம்பத்தில் 5 பிராணாயாமம் செய்யத் தொடங்கிப் படிப்படியாக எண்ணிக்கையை அதிகரித்துக் கொள்ளலாம். நாளடைவில் ஒரே சமயத்தில் 20 பிராணாயாமங்கள் செய்யலாம்.

பிராணாயாமத்தை ஒழுங்காகச் செய்து வந்தால் என்றென்றும் இளமையோடு ஜொலிக்கும் வாழ்க்கையைப் பெறலாம்.

காகம் உறவு கலந் துண்ணக்
கண்டி ரகண்டா கார சிவ
போக மெனும் பேரின்ப வெள்ளம்
பொங்கித் ததும்பிப் பூரண மாய்
ஏக வருவாய்க் கிடக்கு தையோ
இன்புற்றிட நாம் இனி யெடுத்த
தேகம் விழு முன் புசிப் பதற்குச்
சேர வாரும் செகத் தீரே.

(தாயுமானார்)

கல்லீரல்

கல்லீரலில் உண்டாகும் வியாதிகள் பல. அவற்றின் காரணத்தால் காணப்படும் வியாதிகளும் பல.

கல்லீரலில் உண்டாகும். வியாதிகளில் முக்கியமாய் வீங்குவதாலும் இரணத்தாலும் சுருங்குவதாலும் பலவித வியாதிகள் காணப்படுகின்றன.

கல்லீரலையே "லீவர்" என்று ஆங்கிலத்தில் சொல்லுவார்கள்.

கல்லீரலின் சகாயத்தால் உண்ணும் ஆகாரம் ஜீரணிக்கப் படுகின்றது. கல்லீரலுக்கும் இருதயத்திற்கும் மூளைக்கும்

தொடர்ந்து. வேலை .செய்யக்கூடிய நரம்புகள் அமைக்கப்பட்டுள்ளன.

எனவே கல்லீரலின் சீர்கேடானது மூளையையும் இருதயத்தையும் நீர்ப்பையையும் தீனிப்பையையும் சீர் கேடடையச் செய்துவிடும் என்பதை அனைவரும் அறிவார்கள்.

கல்லீரலில் வீக்கம் காணுமானால் இரத்தக் குறைவு ஏற்படும். இருதயம் பலயீனத்தையடையும் பிறகு மூளையும் சோர்வடையும் கடைசியில் நீர்ப்பையில் நீர்ப்பை சரியான வேலை செய்யாமல் குறைந்த அளவான நீரை வெளிப்படுத்துவதும் மஞ்சள் அல்லது சிவந்த நிறமான நீரை வெளிப்படுத்துவதுமாகும் தவிர நீர்ப்பையிலுள்ள நீர் சரீரத்திலும் வயிற்றிலும் பரவ ஆரம்பிக்கும். முதலில் பாதங்களில் வீக்கம் காணும் பிறகு கரல் தொடை முதலான இடங்களுக்கும் வீக்கம் பரவும். பிறகு வயறு வீங்கும் இப்படி வீங்கியபின் குரல்வளை வீக்கத்தையடையும் அதற்கு மேல் இருமலும். சுவாசத்திலும் ஒருவித கர் என்ற சப்தமும் உண்டாகும் இதை மகோதரம் எனச் சொல்லுவார்கள் ஆங்கில வைத்தியத்தில் டிராப்சி என்பார்கள்.

கல்லீரலில் காணப்படும் வீக்கமானது குழந்தைகளுக்கு எற்படில் பால் கட்டி எனப்படும்.

சிலருக்குக் கல்லீரல் வீங்குமானால் நீர்பையில் மஞ்சள் நிறமான சத்து கலந்து நீர் வெளிப்படும். அவர்களின் கண்கள். சரீரம் முதலானவை மஞ்சள் நிறமாகக் காணப்படும். இதை மஞ்சக்காமாலை (ஜாண்டிஸ் என்று கூறுவர்) இவை கல்லீரலிலி ருந்து உண்டாகும் நோயேயாகும்.

முதலில் இருதயம் கெட்டு அதன் மூலம் கல்லீரல் வீக்கத்தை அடையுமானால் அவர்களுக்கு மேல் சுவாசம் வாங்கும். மூச்சு திணறும். பலயீனமாய் இருக்கும் என்றாலும் அவர்களுக்கு இலேசாய் கல்லீரல் வீக்கத்தை அடைந்திருக்கும் ஆனால் இதனைக் கல்லீரல் வியாதி எனச் சொல்லாது இருதய வியாதி என்பார்கள்.

'இவ்வியாதியுள்ள மக்களுக்கு ஆகாரம் ஏற்றுக் கொள்ளாது. பலாத்காரமாய்ப் புசித்தாலும் சங்கடம் உண்டு பண்ணும்.

இந்த நோயாலும் பாதம் வீங்கும் ஆனால் வயறு வீங்காது என்பதே முன் சொன்ன வியாதிக்கும் இதற்கும் உள்ள வித்தியாசமாகும்.

கல்லீரலில் வீக்கமானது சன்னிபாத சுரங்களிலும் காணப்படும் அவ்வீக்கமானது சுரம் நின்ற ஒருவாரத்திற்குள் தானாகவே குறைந்துவிடும்.

கல்லீரலில் காணப்படும் வீக்கமானது அதிக உஷ்ணப் பிரதேச யாத்திரையிலும் மலைநீரருந்துவதாலும் நீர்ப்பையில் உஷ்ணம் தாக்கி நீர் இரத்தம் போல் இறங்கி பிறகு கல்லீரலை வீங்கச் செய்து விடுமானால் அத்தகையோர்களுக்கு மஞ்சள் காமாலை உண்டாகும்.

இத்தகைய காமாலை இரண்டாக பிரிக்கப்படும். அவைகளில் ஒன்று மஞ்சள் காமாலை. மற்றொன்று பித்தக் காமாலை.

பித்தக் காமாலை என்னும் நோயாளியின் நீர் வெண்மையாகவே காணப்படும். ஆனாலும் இரத்தம் குறைந்து கண்ணிலும் சரீரத்திலும் இரத்தமின்றி வெளுத்துக்கர்ணும்.

மஞ்ச காமாலைக்குச் செய்ய வேண்டிய சிகிச்சை இரத்தத்தில் சிவப்புச் சத்தை உண்டு பண்ணக் கூடிய வகையான மருந்து வகைகளால் என்பதை முதலில் உணர்தல் வேண்டும்.

காமாலை என்று சொல்லப்பட்ட பெயரானது ஒன்றாகக் காணப்பட்டாலும் காரணங்களும் சிகிச்சையும் வேறாகவே இருப்பதால் காமாலை நோயானது வேறுபாடுடையது என்று சொல்வதில் குற்றமில்லை.

பித்தக் காமாலைக்கும் மஞ்சள் காமாலைக்கும் மூல காரணம் தெரியாத காரணத்தால் ஆங்கில வைத்தியர்கள் செய்யும் சிகிச்சை பயனற்றதாகிறது.

சிகிச்சை பயனற்றுப் போவதால் அந்நோயைக் கண்ட ஆங்கில வைத்தியர்கள் பயப்படக் காரணம் ஏற்பட்டுள்ளது. சில சமயங்களில் பித்த காமாலையை ஆங்கில முறையில் குணப்படுத்தி வருவதாகச் சொன்னாலும், மஞ்சள் காமாலை என்னும் ஜாண்டிஸ் நோயைக் குணப்படுத்த அவர்களால் சாத்திய படுவது இல்லை.

பித்த காமாலை நோயை ஆங்கிலேயர்கள் எனீமியா என்று சொல்லுவார்களேயொழிய காமாலை என்றே வேறு பெயரைக் கொண்டு வழங்குவது கிடையாது.

பிளட்லென்ஸ் எனீமிக் என்பதோடு நில்லாமல் இரத்தக் குழாய்களில் வெள்ளைச் சத்தையுடைய புழுக்கள் மலிந்து கிடப்பதாயும் அதை மாற்றவோ அல்லது நாசமுறச் செய்யவோ கரனோகாக்ஸ் மோனோகாக்ஸ் போன்ற பேருடைய மருந்துகளைக் கொண்டு ரத்தத்தில் குத்தி சிகிச்சை செய்வதும் உண்டு.

நம் நாட்டு வைத்தியர்கள் மண்டூரம் அயக்காந்தம், அயத்தங்க செந்தூரம் அல்லது அயச் சத்துள்ள மூலிகைகள் முதலான வகைகளில் சிகிச்சை செய்வார்கள்.

லேகியமாகவும், கிரதமாகவும் ஷர்பத்தாகவும் மருந்துகளை முடித்து உபயோகிப்பார்கள்.

குழந்தைகளுக்கு ஏற்படும் கல்லீரல் வீக்கத்திற்கு நாக பஸ்பம் கொடுப்பது உண்டு.

நாக பஸ்பத்தை பெரியவர்களுக்கு மூல ரோகத்துக்கே கொடுக்கும்படியாக நூல்களில் கூறியிருப்பினும் எமது அனுபவத்தில் குழந்தைகளுக்கு ஏற்படும் பால் கட்டிக்கு கொடுத்து கட்டிகரைந்து குழந்தை நோய் நீங்கி பூரண குணம் காணப்பட்டிருக்கிறது.

நாக பஸ்பமானது பெரியவர்களுக்கு ஒரு அரிசி பிரமாணம் நெய் அல்லது வெண்ணெயில் கொடுப்பது வழக்கம்

இவற்றில் அதிக நாள் கொடுப்பின் லெட்பாயிசன் உண்டாகி கெடுதல் சம்பவிக்கும் எனக்கூறுவது உலக அனுபவம்.

குழந்தைகளுக்குண்டாகும் பால் கட்டி எனப்படும் கல்மாந்தம் (இளம்பெண் டைல்லிவர், உல்லார்ஜ் மெண்ட் ஆப்லிவர்) எனப்பட்ட நோயைக் குணப்படுத்த வேண்டுமானால் நாக பஸ்பத்தைப் பத்து குண்டுமணி எடை நீருடன் காலை மாலைகளில் கொடுத்துவர நோய் நிவிர்த்தியாய் விடுகிறது.

எத்தனை பெரிய கட்டியாக இருந்தாலும் கரைக்கூடிய மருந்து இது ஒன்றேயாகும். ஆனால் பழக்கமில்லாதவர்கள் பயப்படுவார்கள் அப்படி பயப்பட வேண்டிய அவசியமில்லை.

கல்லீரலில் வீங்கி விடுமானால் சாதாரணமான அளவு மருந்து பயன் தருவதில்லை. ஆதலால் அதிக அளவு கொடுத்தாலன்றி பயனளிக்காது என்பது எமது அனுபவமாகும்.

சாதாரண தேகத்தில் நாகபஸ்பம் விஷத்தைச் செய்யும், பால் கட்டியுள்ள தேகத்தில் நன்மையைச் செய்யும். அதனால் பால் கட்டியுள்ள குழந்தைகளுக்குப் பயமின்றி நாகபஸ்பத்தைக் கொடுக்கலாம்.

நாக பஸ்பமானது மூலத்திலுள்ள உணத்தைப் போக்கக் கூடிய நீரில் உள்ள சூட்டைத் தணித்து தாராளமாக நீர் இறங்கச் செய்யும் தவிர கல்லிரலின் வீக்கத்தைக் குறைக்கும் தன்மை வாய்ந்தது.

நாக பஸ்பம் செய்ய வேண்டுமானால் 5 பலம் சிறுகண் நாகத்தைச் சட்டியில் உருகவைத்து, உருகியபின் இலைக் கள்ளியின் கட்டையால் தேய்த்துவர கந்தக்கள்ளிமரம் தேயத்தேய நாகம் பஸ்பமாகிவிடும். சமார் 6 மணி நேரமாவது மேல்படி கட்டையாக தேய்க்க வேண்டும்.

நாகமென்பதில் இரண்டு விதமுண்டு, ஒன்று பெருகண் நாகம் மற்றொன்று சிறுகண் நாகம். மருந்து செய்வதற்கு முன் நாகத்தைச் சுத்தி செய்ய வேண்டும்.

சுத்தி என்பது நாகத்தை 21 முறை இலுப்ப எண்ணெயில் உருக்கி ஊற்றுவதாகும்.

நாக பஸ்பத்தை அனேக விதங்களிலும் பஸ்பம் செய்வது உண்டு. பால் கட்டியைக் கரைப்பதற்கு மேற்சொன்ன முறையே மேலானது. ஏனெனில் கொம்புக் கள்ளியின் சத்தானது குழந்தைகளுக்குண்டாகும் கபத்தையும் குரல் வளையின வீக்கத்தையும் குறைப்பதுமின்றி மலபந்தத்தை நீக்கிவிடும். ஆகவே இம்முறை சாலச்சிறந்தது.

கல்லீரலின் வீக்கமானது அதிகரிக்க அதிகரிக்க தீனிப்பையும் பித்தப்பையும் வீங்கிவிடும். முடிவில் சரீரம் வீக்ககத்தை அடைந்து மரணத்தை உண்டுபண்ணும். மேல் சொல்லிய மருந்தை உபயோகிக்கும் போது கடுமையானபத்தியம் இருக்க வேண்டிய அவசியமில்லை.

சில வைத்தியர்கள் பால்கட்டி உண்டான குழந்தை களுக்குப் பசும்பால், உப்பு, புளிசாரம், சாதம் முதலியவைகள் ஆகாது என்பார்கள். அத்தகைய பத்தியங்கள் இம்மருந்துக்கு வேண்டியதில்லை.

குழந்தைகளுக்கு எண்ணெய் தேய்த்து ஸ்நானம் செய்விக்கும் தினத்தில் மாத்திரம் மருந்து நிறுத்துதல் வேண்டும்.

பெரியோர்களுக்கு கல்லீரல் வீக்கத்தை அடையுமானால் ஆகாரம் ஜீரணிக்காது. நீர் மஞ்சளாக இறக்கும் சரீரம் இளைத்து மேல் வயிறு கனத்து காணப்படும். சில சமயங்களில் நடந்தால் ஆயாசம் இருக்கும். அத்தகையோர்களுக்கு ஜல ரூபமான ஆகாரத்தையும் சுலபத்தில் ஜீரணிக்கக்கூடிய வஸ்துக்களையும் கொடுத்து வருதல் வேண்டும்.

கல்லீரல் வீங்கிவிடுமானால் சிலருக்கு ஜுரம் உண்டாகும் அந்த ஜீரமானது விஷஜுரம் என்னும் மலேரியா ஜீரம் போல் குறிகள் காணப்படும். ஆனால் விஷ ஜுரத்துக்கு உண்டான மருந்துக்களைக் கொடுத்தால் ஒரு பயனும் விளையாது ஜுரம்

குறைவதும் அதிகப்படுவதும் குளிர் உண்ட்டாவது வேர்வை விடுவதும் அதிகமாக ஜீரம் காய்வதும் ஆகிய குணங்கள் காணப்படும். இந்த ஜுரமானது நடுநிசியில் அதிகரித்து இருக்கும். அத்தனைய சுரத்துக்கு கிருஷ்ண ஜுரம் என்றும் கலாசார் என்றும் கூறுவார்கள்.

இந்த ஜுரமும் கல்லீரல் வீக்கத்தைக் காட்டும். இந்த வியாதிக்கு நாக பஸ்பம் பயன்படுத்தி குணமாக்கலாம்.

கல்லீரல் வீக்கம் உடையவர்களுக்கு மலபந்தம், ஆயாசம், இரத்தக்குறைவு இவைகளை உண்டாக்கும்.

இத்தகைய வீக்கத்தைப் போக்க வேண்டுமானால் வல்லாரைக்கீரை என்னும் செடியைப் பிடுங்கி வந்து வேர் காம்புகளை நீக்கி இலைகளை மட்டும் வதக்கி வலது பக்கத்தில் விலா எலும்பிற்குக் கீழ் தொப்புக்குக்கு மேல் இருக்கப்பட்ட கல்லீரலின் வீக்கத்தின் பேரில் வைத்துக் கட்டிவிட வேண்டும். ஒரு தடவை கட்டும் கட்டானது சுமார் 12 மணி வரையிலும் இருக்கலாம். அதன் பிறகு புதிதாகக் கட்ட வேண்டும். இப்படி சில நாள் கட்டி வர கல்லீரலின் வீக்கம் நீங்கிவிடும்.

கல்லீரல் அதிகமாக வீங்கிய நோயாளிகளுக்கு நீர் வகைகள் சேர்ந்த-நீரான ஆகாராதிகளையே கொடுத்து வர வேண்டும்.

ஓர் அம்மையாருக்கு சுமார் மூன்று ஆண்டு காலமாய் கல்லீரலின் வீக்கத்தினால் துன்பப்பட்டு மெலிந்து இரத்தமின்றி ஆகாரம் குன்றி அவதிப்பட்டவருக்கு, ஆங்கில முறையில் பல சிகிச்சைகள் செய்தும் குணமாகாமல் இந்த வல்லாரையிலை சிகிச்சையினால் ஒரு மாதத்திற்கு கல்லீரலின் வீக்கம் மறைந்து சுகமாய் விட்டார்கள் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

கல்லீரலின் இரணம்

கல்லீரலில் இரணம் ஏற்படில் ஜீரணிக்கும் போது வயிற்றுவல் உண்டாகும். வலி அதிகரித்தால் வாந்தி காணும்

இந்நோய்யைக் குன்மம் என்று சொல்லுவார்கள் இவை எட்டு வீதம் எனக்கூறுவர்.

ஆங்கிலேயர் இதை டிஸ்பெப்சியா என்ற ஒரே பெயரால் அழைப்பார்கள்.

இந்நோய் பலவிதமான குணங்களைக் காட்டக் கூடிய தாய் இருக்கின்றது.

சிலருக்கு ஆகாரம் உட்கொண்ட சிறிது நேரத்திற்கெல்லாம் வயிற்றுவலி காணும்.

மற்றும் சிலருக்கு வலி இல்லாமலே உண்டபின் வாந்தி காணும்

அநேகமாய் இந்நோயானது கல்லீரலினின்று உண்டாவதாய் இருந்தாலும் நோயாளிகளுக்கு மார்பிலிருந்து வலி உண்டாவதுபோல் காணப்படும்.

இதற்குக் காரணம் கல்லீரலினின்று வெளிப்படும் காஸ் என்னும் ஒருவிதக் காற்றேயாகும்.

கல்லீரலின் மேல்பாகத்தில் இரணம் இருப்பவர்களுக்கு உண்டவுடன் வலியும் கீழ்பாகத்தில் இரணம் இருப்பவர்களுக்கு உண்ட ஆகாரம் சமிக்கும்போது. அதாவது உண்ட பின் 4 மணிக்குமேல் 6 மணிக்குள்ளாக வலி காணும். சில சமயம் வாந்தியும் இருக்கும்.

இதைக் கர்ம வியாதி என்று சொல்வதுண்டு. நம் நாட்டில் சுலபத்தில் நிவர்த்திக்க முடியாத வியாதிகளை எல்லாம் கர்ம வியாதி எனப்பெயரிட்டு மக்களுக்குச் சமாதானம் சொல்லி வந்தார்கள்.

இவ்வியாதிக்கு பெரும்பாலோர் சோடா மாவை உபயோகித்து வருகிறார்கள்.

பலர் பலவித எண்ணெய்களும் லேகியங்களும் பஸ்பங்களும் செய்து அனுபவமாகக் கொடுத்து வருகிறார்கள்.

அன்னவர்களிடம் சென்று காரணம் கேட்டத்தில் திகைத்து அனுபவம் என்பார்கள்.

கல்லீரலில் காணப்படும் இரணம் சுலபத்தில் ஆறுவது கிடையாது. இரணம் அதிகமாகப் பரவுதலும் இல்லை

கல்லீரலில் இரணத்தை ஆற்றக்கூடிய மருந்துகளை உபயோகிக்கும் பட்சத்தில் இரணம் நீங்கிவிடும்.

சிகிச்சை

கல்லீரலின் இரணத்தை ஆற்றுவதில் முக்கியமான மருந்துகளாவன? சோடாமாவு. பூநீர் உப்பு. இந்துப்பு தாம்பிர உப்பு. வெடியுப்பு. நவாச்சார உப்பு. அன்னபேதி உப்பு ஆகிய இவைகளின் பஸ்பங்களாலும். காடி நீர். சுண்ணாம்பு நீர் தென்னஞ்சாறு பனஞ்சாறு முதவானவைகளாலும் இரணம் ஆறிவிடும்.

ஆங்கில வைத்தியர்கள் டிங்சர் அயோடின். பேலேடோனா. நியுட்ரோலா. சோடா பிஸ்மத் முதலான மருந்துகள் கொடுத்து குணப்படுத்துகின்றனர்.

அயோடின் என்னும் மருந்து 2 துளி முதல் 5 துளி வரையில் ஒரு அவுன்சு நீரில் நாள் ஒன்றுக்கு மூன்று முறை கொடுக்கலாம்.

சோடா மாவு என்பதும் பூநீரென்பதும் ஒன்றேயாகும். பூநீர் உப்பை ஆங்கில முறைப்படி சுத்தம் செய்து சோடாமாவாகச் செய்கிறார்கள்.

பூநீர் உப்பு செய்யும் விதம்

சித்திரை வைகாசி மாதங்களில் களர் பூமியில் அதாவது உழமண் விளையும் இடத்தில் பவுர்ணமி தினத்தன்று காலையில் சூரிய உதயத்திற்குமுன் கதிர்போல் ஒரு அங்குலம் முதல் 2 அங்குலம் வரையில் பூத்து கிளம்பி இருக்கும். இந்தப் பூநீரை

மண்படாமல் எடுத்து ஒரு பீங்கானில் வைத்து அல்லது ஒரு மண் பாத்திரத்தில் வைத்து எடுத்துக்கொண்ட பிறகு அதில் சேர்க்க வேண்டிய மருந்தை ஒரு சிட்டிகை கலந்து இரவில் சந்திர ஒளியில் வைக்க வேண்டும்.

சேர்க்க வேண்டிய மருந்தின் விபரம்

குரு பஸ்பம்

குருபஸ்பம் என்பது ராமனாதபுரம் ஜில்லாவில் கடற்கரையில் ஒதுக்கப்பட்டிருக்கும் ஒரு வகைகடற் கல்லை எடுத்துக்கொண்டு வந்து. ஒரு மண் பாண்டத்தில் போட்டு மேல்மூடி சிலை செய்து உலர்த்தி கரி நெருப்பில் வைத்து 1 மணி நேரம் வைத்து ஊதி எடுத்துக் கொள்ளவேண்டும் அல்லது 400. 500 வராட்டிக்கு குறையாமல் வைத்து புடம் போட வேண்டும்.

இப்படிச் செய்தால் கடுங்காரமாகி கல் சுன்னமாகிவிடும். இந்த சுன்னத்தை ஒரு புட்டியில் போட்டு கல்கார்க் இடவேண்டும் இந்த குரு சுன்னத்தில் ஒரு சிட்டிகை பூநீல் கலக்கவேண்டும்.

குறிப்பு : கடல். கல் என்பதை ராமேஸ்வரம் செல்லப் பட்டவர்கள் ஒரு புனிதமான கல்லாக பாவித்து எடுத்துக் கொண்டு வருவதும். அங்குள்ள ராமேஸ்வரர் ஆலயத்தில் சங்கு சோழி கடைகளில் வியாபாரம் செய்பவர்களிடம் வாங்கி வருவதும் வழக்கம். அக்கல்விற்குச் சில கதைகளையும் கூறுவார்கள் அவையாவன.

ராமாயணக் கதையில் இராவணன் சீதையைச் சிறைப்பிடித்து விமானத்தில் ஏற்றி ஆகாயத்தின் மூலம் ராமேஸ்வரத்துக்கு கொண்டுவந்து வைத்திருந்த போது பலாத் காரமாக சீதையை சேர்வது நியாய விரோதமெனக் கருதிய இராவணன் தோழிமார்களை அனுப்பி அவர்கள் மூலம் தன்பேரில் பிரியமுண்டாகுமாறு போதித்து வரச்செய்த காலத்தில்

நாள்தோறும் சீதை குளிக்கும்போது தன் தேகத்தில் பூச உபயோகப்பட்ட மஞ்சளே கல்லாக மாறிவிட்டது என்பனவாகிய கதைகளை ஆதாரமாக வைத்துக்கொண்டு அதற்கு சீதை மஞ்சள் கல்லாக மாறிவிட்டது என்பனவாகிய கதைகளை ஆதாரமாக வைத்துக்கொண்டு அதற்கு சீதை மஞ்சள் எனப்பெயருமிட்டு அது புனிதமான கல் என்றும் கூறி வருகின்றார்கள். இந்த கல்லையே குருஉப்பு என்று தெரிந்து கொள்ளுதல் வேண்டும். இந்த சமுத்திரத்திலிருந்து விளையப்பட்ட ஒரு வித உப்பு.

குரு உப்பைப்பற்றி பலர் லலித கல்லையும் உப்பையும் கூறி வருகிறார்கள். குருடர் கண்ட யானையின் கதையைப் போல நாம் தாம் கண்டவற்றை இதுதான் குரு உப்பு என்று கூறுவார்கள். ஆனால் அவையெல்லாம் காரியத்துக்கு உதவாது என்பது அனுபவபூர்வமான உண்மை. அடியேன் கூறிய இந்த குரு உப்பும் முதல் தரமான குரு உப்பு அல்ல இருந்தாலும் இது வைத்தியத் துறைக்கு மிக்க பயன் உடையதாக இருக்கிறது.

பூநீற்றின் எண்ணெய் சுழட்டுவதற்கு பலமுறைகள் கூறி இருப்பினும் இவை யாவையும் பஸ்பத்தில் தெரிந்து கொவதாக இல்லை. ஒவ்வொருவரும் யூகத்தின் பேரில் அதுவாக இருக்கமோ இதுவாக இருக்குமோ என்று செய்து பிரித்து பயனின்றி கைவிட்டதாகத்தான் தெரிகிறது. இதனைப்பற்றி எழுதுவதாக இருந்தால் எடுத்துக்கொண்ட விஷயம் எழுத முடியாது முப்பு விஷயம்பற்றி தனி தலைப்பின் பின் எழுதுகிறேன். இனி குரு உப்பைப்பற்றி கவனிப்போம்.

குரு பஸ்பத்தை ஒருசிட்டிகை எடுத்துக் கொண்டு ஒரு பத்து வீசை பூ நீறுள்ள ஒரு பாத்திரத்தில் போட்டு கலக்கச் செய்து பகலில் சூரிய வெப்பத்திலும் இரவில் சந்திர ஒளியிலும் பீங்கானில் வைக்கும் பட்சத்தில் அதிலிருந்து எண்ணெயைப் போலொத்த ஒரு வஸ்து வெளிப்படும். வெளிப்பட்ட அந்த எண்ணையைப் போலொத்த நீரை ஒரு புட்டியில் பதனம் பண்ணிக்கொள்ள வேண்டும் நீர்பிரிந்த பிறகு மிகுதியாய் உள்ள உப்பை இரண்டு நாள் காயவைத்து குரு பஸ்பத்தில் ஒரு

சிட்டிகை போட்டு சகலத்தையும் ஒன்றுபடுத்தி மீண்டும் தனி தனி பீங்கான் தட்டில் வைத்து கீழே ஒரு கோப்பை இருக்கச்செய்து பீங்கானில் இருந்து கசியும் நீர் கோப்பையில் விழுமாறு சாய்வாக வைத்து ஓர் இரவு சந்திரபிரகாசத்தில் வைக்க வேறுவித வர்ணத்துடன் நீர் பிரியும் பிரிந்த நீரை வேறு புட்டியில் பதன்ப்படுத்த வேண்டும். மீண்டும் மிகுதிப்பட்ட உப்பை ஒன்று சேர்த்து இரண்டு நான் காயவைத்து இரண்டாம் நாள் குரு பஸ்பத்தை சேர்த்து மறுபடியும் முன்போலவே பீங்கானில் கோப்பையுடன் சந்திரபிரகாசத்தில் வைத்தல் வேண்டும்.

ஒவ்வொரு முறையிலும் ஒவ்வொரு வர்ணத்துடன் கூடிய நீர் பிரியும் ஏழாவது முறை பிரியும் நீர் பரிசுத்தமான நீராக காணப்படும். இதை சாஸ்திரங்களில் சுத்தி கங்கை எனக் கூறுகிறது.

முக்கிய கவனிப்பு

பூமியிலிருந்து எடுத்த பூநீர் உப்பை யாதொரு வஸ்துவையும் கலக்காமல் அடுப்பில் ஏற்றாமல் குரு பஸ்பத்தை மாத்திரம் கலக்கி சூரிய உஷ்ணத்திலும் சந்திர பிரகாசத்திலும் வைத்து ஒரு விதமான நீரைப் பிரித்தல் எதுவோ அதையே பூநீர் தீக்ஷை என்பார்கள் அதிலிருந்து வெளிப்படும் ஏழுவிதவர்ணத்தோடு கூடிய நீரே ஜெயநீர் என்று சொல்லப்படும்.

சிலவாதிகளும் வைத்தியர்களும் இம்முறை தெரியாமல் பூநீருடன் நீரைச் சேர்த்து காய்ச்சுவதும் அதிலிருந்து ஜெயநீர் எடுப்பதுமாக வழங்கிவருகிறார்கள். அம்முறை தவறானது என அறிதல் வேண்டும்.

ஏழாவது முறை சுத்த நீரை பிரித்தபின் காணப்படும் பூநீரானது கசிவற்ற காரமுள்ள சோடா நீரைப் போல் காணப்படும் அந்த உப்பையே பூநீர் உப்பு எனக்கூறலாம்.

குன்ம வியாதிகளுக்கு ஒருபலம் மேல் சொன்ன உப்பும் உரு விராகனிடை வீரமும் சேர்த்து சுன்னம் செய்யக்கூடிய எந்த

மூலிகையில் சாறையையாவது விட்டரைத்து பில்லை தட்டி உலர்த்தி 50 வரட்டியில் புடம்போட்ட பிறகு மீண்டும் ஒருவிராகனிடை வீரத்தைசேர்த்து முன்போல மூலிகையின் சாற்றால் அரைத்து பில்லைதட்டி உலர்த்தி 5 வரட்டியில் புடம் போடவேண்டும். இதன்படி ஒவ்வொரு முறையும் ஒவ்வொரு விராகனிடை வீரம்சேர்த்து அரைத்து 10 தடவை புடமிட்டால் உயர்ந்த பூநீர் சுன்னமாகும். இச்சுன்னத்தால் சகல வித குன்மங்களும் நீங்கிவிடும்.

இம்முறை வைத்தியர்கள் தவிர மற்றவர்களுக்கு கடினமாக தோன்றலாம் என்றாலும் இதன் உண்மை வைத்தியர்களுக்கே விளங்கும்.

பூநீல் ஒன்றையும் சேர்க்காமல் ஏழுவித நீரை பிரிக்கும் முறை தெரியாத வைத்தியர்கள் அநேகர் இருக்கிறார்கள். இம்முறை தெரிந்து கொண்டால் வைத்திய துறைக்கு மிக்க பயனுள்ளதாயிருக்கும்.

இதனைக் கொண்டு முப்புவை முடித்துவிடலாம் பொன் செய்துவிடலாம் தேகத்தை வஜ்ஜிரமாக்கலாம் என்று மனப்பால் குடிக்க வேண்டாம்.

இம்முறையால் வாதிகள் நினைக்கும் வண்ணம் யாதொரு அற்புதமான காரியங்களையும் செய்ய முடியாது என நீங்கள் தெரிதல் வேண்டும்

இம்மருந்தை சாதாரண வைத்தியத்துக்கு உபயோகமான மருந்து என்பதை தெரிந்து கொள்ளல் வேண்டும்.

இந்துப்பு

இந்துப்பு என்பது பூமியில் விளையும் ஒருவித உப்பு இதை சுத்தம் செய்து எப்சம் சால்ட் என்றும் மாக்சல்பர் என்றும் ஆங்கில வைத்தியர்கள் கூறுவார்கள்.

இந்த உப்பை பெரியவர்கள் ஒரு விராகனிடை முதல் மூன்று விராகனிடைவரை உட்கொள்ளலாம். இதுபேதியாகக் கூடியது கல்லீரலின் பேரிலும் வேலை செய்யக்கூடியது.

தும்மட்டிக்காய் உப்பு செய்யும் விதம்

ஆத்து தும்மட்டிகாயை கொண்டுவந்து இரண்டாக அறுத்து வயிற்றிலுள்ள சோற்றை எடுத்துவிட்டு இந்துப்பை வைத்து மூடி நூல்கட்டி ஒருகுடுவையில் வைத்து 50 வரட்டியில் புட்டம்போட பஸ்பமாய்விடும்.

இந்த பஸ்பத்தை மறுபடியும் தும்மட்டிகாயின் வயிற்றில் முன்போல் வைத்து நூல்கட்டி குடுவையில் வைத்து சிலை செய்து புடம்போட வேண்டும். இதன் படி நாலைந்து முறை புடம் போட்ட பிறகு பஸ்பத்தை எடுத்து வைத்துக் கொண்டு ஒரு குண்டுமணி எடை முதல் 3 குண்டுமணி எடை வரையில் பெரியவர்களுக்கு கொடுக்கலாம்.

அனுபானம் :- தேன் அல்லது நெய்யில் குழைத்து காலையில் கொடுக்கலாம்.

இம்மருந்தானது குன்மநோயை கேட்பதுமன்றி பெண்களுக்கு காணும் சூதகவாயு என்னும் உதிரச் சிக்கலைப் போக்கும் மார்வலியும் கேட்கும் மலம் தள்ளும் வயிற்று வலிக்கும் இம்மருந்தை உபயோகிக்கலாம் வயிற்றுவலி உள்ளவர்களுக்கு வெண்ணீரிலும் மார்வலி உள்ளவர்களுக்கு நெய்யிலும் சூதகக்கட்டு உண்டானவர்களுக்கு தேனிலும் கொடுக்க வேண்டும்.

தாமரை உப்பு

தாமரைடப்பி செய்து அந்த டப்பியில் உப்பைக் கொட்டி 15நாள் பூமியில் புதைத்து வைத்து பிறகு உப்பை எடுத்துக் கொண்டு அவ்வுப்பை எலுமிச்சம் பழம் ரசம் விட்டு அரைத்து பில்லைதட்டி 50 விறட்டியில் புடம் போட வேண்டும் இப்படி 5

முறை செய்தால் உப்பு பஸ்ப்மாகிவிடும். இந்த பஸ்பத்தை ஒரு அரிசி எடை காலை மாலையில் தேனில் கொடுக்கவும்.

கல்சுண்ணாம்பின் உப்பு

கல்சுண்ணாம்பை ஒரு பானையில் கலக்கி தெளிவு நீரை எடுத்து காய்ச்ச வேண்டும். சுண்டக் காய்ச்சிய பின் அடியில் கிடைக்கும் உப்பை சூரிய புடத்தில் வைத்து புட்டியில் பதனப்படுத்த வேண்டும். இந்த உப்பு 1/4 குண்டுமணி முதல் 1/2 குண்டுமணி வரையில் தேன் அல்லது நெய்யில் கொடுக்கலாம்.

சோத்துப்பு பஸ்பம்

சோத்துப்பை 5 பலம் எடுத்துக் கொண்டு அதற்கு சமமாக பிரண்டை சேர்த்து குடுவையில் வைத்து சீலைசெய்து 50 வரட்டியில் புடம்போட வேண்டும். இப்படி ஏழு முறை புடம் போட்டபின் புட்டியில் பதனம்பண்ணி வைத்துக் கொண்டு 1 குண்டுமணி முதல் 3 குண்டுமணி வரையில் தேன் அல்லது நெய்யில் கொடுத்து வரலாம்.

நவாச்சார உப்பு பதங்கம்

பத்துபலம் நவாச்சாரத்தை தூள் செய்து ஒரு பெரிய சட்டியில் வைத்து மேலே ஒரு பெரிய சட்டி வைத்து மூடி அடுப்பில் வைத்து ஒரு மணி நேரம் சிறிய தீயாகவும் மீண்டும் ஒருமணி நேரம் பெருந் தீயாகவும்மறுபடியும் ஒரு மணிநேரம் அகண்ட தீயாகவும் எரித்து ஆரவைத்து எடுக்க மேல் சட்டியில் பதங்கம் போலவும் மஞ்சள் நிறமாகவும் படிந்திருக்கும் பஸ்பத்தை எடுத்து புட்டியில் பதனம் பண்ணி ஒரு குண்டுமணி முதல் 8 குண்டுமணி வரையில் நெய்யில் கொடுக்கலாம்.

அன்னபேதி உப்பு

அன்னபேதி என்னும் உப்பை 5 பலம் வாங்கி வந்து எலுமிச்சம் பழம் ரசத்தை விட்டு அரைத்து பில்லைத்தட்டி

குடுவையிலிட்டு சீலை மண்செய்து உலர்த்தி 25 வரட்டியில் புடம்போட்டு எடுத்து மீண்டும் அந்த பஸ்பத்துடன் எலுமிச்சம்பழரசம் விட்டு சேர்த்து புடம்போட வேண்டும் இதுபோலவே 5 முறைபுடம் போட்டபின் 6வது முறை ஷெ பஸ்பத்தில் எடைக்கு 8ல் ஒரு பங்கு லிங்கமும் 16ல் ஒரு பங்கு கந்தகமும் சேர்த்து எலுமிச்சம் பழரசம் விட்டு அரைத்து புடம் போட்டு பஸ்பத்தை பதனம் செய்யவேண்டும்.

இந்த பஸ்பம் செந்தூரத்தில் ஒரு அரிசி எடை முதற்கொண்டு மூன்று அரிசி எடை வரையில் தேனில் கொடுக்கலாம்.

தீரும் ளியாதிகள் :- கல்லீரலின் இரணம் பித்த சுரம். வாதசுரம். பசிமந்தம். சீதபேதி இவைகள் நீங்கும். சீதபேதி உள்ளவர்களுக்கு மாத்திரம் வெண்ணையில் கொடுக்கவும்.

காடி நீர்

காடிநீர் என்பது நம்நாட்டின் பழமையான ஒரு பெரிய மருந்து அம்மருந்தானது தற்காலத்தில் முறை புரண்டு அநாகரீகவழியில் வியாபாரத்தை முன்னிட்டு பொருளீட்டை முதன்மையாக வைத்து காடியை தயார் செய்து புட்டிகளில் பதனம் பண்ணி புட்டி ஒன்று 2 ரூபாய் விகிதம் கடைகளில் விற்கப்படுகின்றன. பொரும்பாலானவர்கள் இந்தக்காடியை வாங்கி ஊர்காய்களுக்கும் மற்றும் மருந்தின் பிரயோகங்களுக்கும் உபயோகப்படுத்தி வருகின்றார்கள். எனவே கடையில் விற்கும் காடியானது முன்னோர்கள் சொல்லி வைத்த காடி அன்று ஆனால் கடையில் விற்கும் காடியானது எப்படி தயாரித்து விற்பனைக்கு அனுப்பப்படுகின்றது என்பதை கவனிப்போம்.

சர்க்கரையை பாணலில் போட்டு வறுக்க வறுக்க ஒருவித கருநிறமாக மாறிவிடும். அப்பொழுது அரஸடிக் ஆசிட் வேண்டிய அளவில் சேர்த்து நீரைக் கொட்டி வடிகட்டி புட்டியில் பதனம் பண்ணி லேபிலிட்டு விற்கப்படுகிறது இந்த காடியும் புளிப்புள்ளதாகவே காணப்படும்.

காடி செய்யும் விதம்

ஒரு பெரிய மண்பாத்திரத்தில் கால்படி பச்சரிசியை சமையல் செய்து கஞ்சியும் சாதமும் இரண்டையும் கொட்டி 6படி சுத்தநீர் விட்டு துணியால் வாய்கட்டி சூரிய புடத்தில் வைத்து வரவேண்டும். வாரத்துக்கு ஒருமுறை வேறுபாத்திரத்தில் மாற்றிவிட வேண்டும். இப்படி ஒரு மாதம் கழித்தபின் பார்க்க முதலில் போட்ட அன்னமானது காணப்படாது. அந்த சமயம் மறுபடியும் கால்படி அன்னம்சமைத்து அதில் கலந்து விடவேண்டும் கலந்த பின் நாள் தவறாமல் சூரியபுடத்தில் வைப்பதுவும் வாரத்துக்கு ஒரு முறை பானையை மாற்றுவதும் முக்கியமாய் கவனிக்க வேண்டும் இதன் படி மாதம் ஒருமுறை அன்னம் சமைத்து கலந்துக் கொண்டுவர வேண்டும் இப்படி செய்து கொண்டு வரும் காலத்தில் 3 மாதத்துக்குமேல் அந்த காடியை உபயோகித்து வரலாம் எவ்வளவு காடி எடுத்துக் கொள்கிறோமோ அவ்வளவு நீரை அதில் கலந்து விடவேண்டும். இப்படி கலந்து வருவதால் எத்தனை ஆயிரம் பேருக்கும் நாம் கொடுத்தாலும் காடி குறைந்து விடாது. ஆறு மாதத்துக்குப்பின் காடியில் அதிக புளிப்பு ஏறிவிடுமாகையால் 4 நாளைக்கு ஒரு முறை பானைமாற்றுதல் வேண்டும். மழைக்காலங்களில் சூரியபுடத்தில் வைக்க இயலாத காரணத்தால் காடியில் பூசனம் பிடிக்காதபடி தடுக்க சமையல் செய்த பிறகு அடுப்பிலுள்ள நெருப்பை எடுத்துவிட்டு அடுப்பில் காடியை வைத்து விடவேண்டும். இதன்படி செய்ய காடி கெடாமல் இருக்கும் காடிக்கு அதிகநாள் ஏற ஏறபுளிப்பு அதிகரிக்கும் புளிப்பு அதிகரிக்க அதிகரிக்க கொடுக்க வேண்டிய அளவை குறைத்தல் வேண்டும்:

ஆறு மாதத்திற்கு மேற்பட்ட காடியானது பௌர்ணமி தினத்தில் இரவில் ஒருவித சப்தத்தை உண்டு பண்ணும்.

காடியால் தீரும் வியாதி

வயிற்றுவலி, நீர்கடுப்பு, மார்வலி, உஷ்ணபேதி, அஜீரணபேதி, விஷபேதி முதலிய வியாதிகள் நீங்கும் சரீரத்தில் உள்ள வெக்கையை போக்கும்.

சோத்துப்புச் செந்தூரம்

ஒருபடி சோத்துப்பில் பாதி உப்பை ஒருசட்டியில் வைத்து அதில் மத்தியில் 1 பலம் லிங்கம் வைத்து மற்ற பாதி உப்பை மேலே போட்டு மேல்சட்டி மூடி சீல் செய்து அடுப்பில் வைத்து மூன்று மணி நேரம் காடாக்கினியாக எரித்து பிறகு லிங்கமும் உப்பும் இரண்டையும் கல்வத்திலிட்டு தூள் செய்து புட்டியில் பதனம் செய்து கொண்டு 3 குண்டுமணி எடை சாதநீரில் காலை மாலை கொடுத்துவரை குன்ம வயிற்றுவலி நீங்கும் தேனில் கொடுத்தால் மார்வலி சூதகக்கட்டு இவைகள் நீங்கும் இதற்கு யாதொரு பத்தியமுமில்லை. மருந்தை கூட்டியும் குறைத்தும் கொடுப்பது வைத்தியர்களில் அனுபவத்திற்கு ஏற்றபடி சரீரத் தத்துவத்தையும் நிலையையும் பொறுத்ததாகும்.

கல்லீரலின் சுருங்கல்

கல்லீரலின் சுருங்கல் எதுவோ அதையே ஆங்கிலேயர்கள் கிரோலின் ஆப்தி லிவர் என்று சொல்லுவார்கள்.

இவை பெரும்பான்மையும் அதிக குடியினால் உண்டாகின்றன. இவ்வியாதியானது வயிறு கைகால் முதலி யவைகள் வீங்கச் செய்யும் இவ்வியாதியை எம்மருந்தும் நிவர்த்திக்க முடியாது. ஆதலால் இவ்வியாதி கண்டவர்கள் மரணமடைவது நிச்சயம் இதற்கு எந்த சிகிச்சையும் பயன்படாது.

மண் ஈரல்

மண் ஈரல் வீக்கத்தை அடையுமானால் சுரம் காணும் அல்லது சுரம் அடிப்பதனால் மண்ஈரல் வீக்கம் அடையும்

சாதாரணமாய் மண் ஈரலில் ஏற்படும் வீக்கத்திற்கு காரணம் விஷ காற்றும் விஷ நீறு மேலாகும்.

விஷக் காற்றாலும் நீராலும் உண்டாகும் சுரத்திற்கு விஷ சுரம் எனப்படும்.

இச்சுரமானது குளிர் சுரம், விஷ சரம், முறை சுரம் என சொல்லப்பட்டாலும் இவைகளின் குணங்கள் மாறுபட்டேயிருக்கும். ஆங்கிலர் இதை மலேரியா என்று அழைப்பர். விஷ சுரமானது மரணத்தை உண்டு பண்ணக் கூடியதாய் இல்லாவிட்டாலும் பலவீனத்தையும் துன்பத்தையும் உண்டு பண்ணுகின்றது.

இதனையறிந்து கொள்வது எப்படியெனில் சுரம் உண்டாவதற்குமுன் குளிர் உண்டாவது. சுரம் ஆரம்பித்த பின் 105 106 டிகிரிக்கு சுரம் அதிகரித்தல் சுரம் விடும்போது வியர்வை விடல் ஆகிய குணங்களாலும் இரத்த பரீட்சையாலும் உணர்ந்து கொள்ளலாம்.

விஷ சுரமானது ஒரு நாள் விட்டு ஒரு நாள் காய்வதுண்டு மூன்று நாள் விட்டும் நான்கு நாள் விட்டும் காய்வதுண்டு. இவற்றை முறையே முறைக் காய்ச்சல் என்றும் மூன்றாம் முறை காய்ச்சல் நான்காம் முறை காய்ச்சல் என்றும் கூறப்படும்.

இத்தகைய முறை காய்ச்சல் எந்த சுரமாகயிருந்தாலும் நீடித்து விடுமானாலும் அல்லது அடிக்கடி உண்டாகுமானாலும் மண்ஈரல் வீங்குகின்றது. இதனையே இந்தியர் சுரக்கட்டி என்றும் ஆங்கிலர் என்லார்ஜ்மெண்ட் ஆப் ஸ்பிளீன் என்றும் கூறுகின்றனர்.

மண் ஈரலில் வீக்கத்தையே சுரக்கட்டி என்கிறார்கள்.

விஷ சுரமானது இரத்தத்தில் சீர் கேட்டை உண்டுபண்ணி சரீரம் வெளுத்து மெலிவுற செய்யும் தன்மையுள்ளது.

மண் ஈரலின் வீக்கம் 1க்கு 6 பங்கு அதிகரிக்கப்படும் வகையில் மருந்துகளால் குறையக் கூடியது.

அதற்குமேல் வீங்கி விடுமானால் ஆபரேஷன் மூலம் அல்லது மேல் வைத்து கட்டும் முறை சிகிச்சைகளால் தான் குணமாகும்.

இச்சுரமானது அழுகிய நீரிலிருந்து எற்படும் விஷக்காற்றினால் உண்டாகின்றது.

நகர வாசங்களில் சாக்கடை கால்வாய்களை மூடி சூரிய உஷ்ணம் தாக்காதபடி ஓடச் செய்வதால் எவ்விதத்திலாவது மூடியுள்ள குழாய்களில் அழுகியநீரில் சம்மந்தப்பட்ட காற்றானது துவார்ங்களின் மூலம் வெளிப்பட்டு மக்களின் சுவாசத்தில் கலந்து சரீரத்தில் உள்ள இரத்தத்துடன் உறவாகி விஷசுரத்தை உண்டு பண்ணுகிறது. இக்காரணத்தைப் பற்றியே சாக்கடை நீர் அழுகி தங்கிபோகும் இடங்களிலும் குட்டை குளங்களிலும் அதற்கு இருப்பிடம் கூறப்பட்டது.

எனவே நகர வாசங்களில் விஷசுரம் குடி கொண்டிருப்பதற்கு ஏதுவுண்டு. எனெனில் சாக்கடை நீரை மூடி சூரிய வெளிச்சம் தாக்காதபடி செல்ல விடுவதாம். அழுகி நாற்றமுறுகின்றது. அந்த நாற்றமானது வெளிக் கிளம்பி மக்கள் சுவாசத்தில் கலப்பதால் விஷ சுரத்தால் பீடிக்கப்படுகின்றனர்.

விஷ சுரமானது தனிப்பட்டும் பிற நோய்களோடும் கலந்து இருப்பதுண்டு.

விஷ சுரத்தினால் மண்ணீரல் வீங்குவதுண்டு என்றாலும் மற்ற பாகங்களை வெகவாக கெடுப்பதில்லை.

கிருஷ்ண சுரம் என்னும் விஷ சுரமானது (கலாசார்) கல்லீரலையும். மண்ணீரலையும் வீங்க செய்யும் இரண்டும் வீங்கி விடுமானால் சரீரம் இளைத்து விடும் இரத்தம் குறைந்துவிடும்.

மண்ணீரலின் வீக்கத்தை குறைப்பதற்கு சில மருந்துகளை இங்கு குறிப்பிடுகின்றேன்.

வேம்பு. நிலவேம்வு. சீமை. சாமந்தி. சுரா பட்டை. எலுமிச்சம்பழம். தேன். கெந்தகம். கௌரி பாஷாணம் கொய்னா ஆகிய இவைகள் மண்ணீரலின் வீக்கத்தை குறைக்கும்.

வேம்பு முதலான வஸ்துக்களை கியாழமிட்டுக் கொடுத்து வரலாம். பாஷாணம் முதலானவைகளை பஸ்பம் செய்து உபயோகித்தல் வேண்டும். கொய்னா மருந்து தேனிலோ அல்லது நீரிலோ கலந்து உண்ணலாம். இவையன்றியும் கடல் நீரினாலும் நாகதாளி பழத்தாலும் மண்ணீரலின் வீக்கம் குறைந்துவிடும்.

பப்பாளி பழம் சாப்பிடுவதாலும் வீக்கம் குறையும் ஆனால் விஷ சுரம் நீங்க மாட்டாது. ஆதலால் சுரமில்லாத காலத்தில் கொடுப்பவை பலவாய் இருந்தாலும் சுரம் இருக்கம் காலத்தில் சுரத்தையும் போக்கி வீக்கத்தையும் குறைக்கும் மருந்தை கொடுக்க வேண்டும்.

மேல்நாட்டு வைத்தியர்கள் கொய்னா ஒன்றையே விஷ சுரத்திற்கு மருந்தாக உபயோகிக்கின்றார்கள். கொய்னா மருந்தை உபயோகிப்பவர்களுக்கு பெரும்பாலும் வீக்கம் காணுவதை அறிகிறோம். இதற்கு காரணம் போதுமான காலம் கொய்னாவை உபயோகிக்காததால் மீண்டும் மீண்டும் சுரம் உண்டாகி மண்ணீரல் விளங்குகின்றது. ஆதலால் கொய்னா மருந்தானது நாள் பட உபயோகித்தால் தான் விஷ சுர கிருமிகளை மாற்றுகின்றது.

எனவே கொய்னாவை சாதாரணமாக மருந்தாக பாவித்தல் வேண்டும். சில விஷ சுரங்களுக்கு கொய்னா பயன்படுவதில்லை அது சமயம் பாடாணம் உபயோகிக்கப் படுகின்றது.

மண்ணீரலில் வீக்கத்தை மயில் துத்த பஸ்பத்தாலும் நீக்கிக் கொள்ளலாம்.

கொய்னாவை உபயோகிப்பவர்கள் குழந்தைகளுக்கு ஒரு கிரயினிலிருந்து இரண்டு கிரயின் வரையில் கொடுக்கலாம்.

பெரியவர்களுக்கு ஐந்து கிரெயினிலிருந்து பத்து கிரெயின் வரையில் கொடுக்கலாம். கெர்ப்ப பெண்களுக்கு 5 மாதம் வரையில் கொய்னா கொடுத்தலாகாது கொடுப்பின் கெர்ப்ப சின்னம் உண்டாகும்.

என் அனுபவத்தில் மண்ணீரல் வீக்கத்தை குறைப்பதற்கு மேல் பூசும் மருந்து ஒன்றை கையாண்டு வருகின்றேன். அம்மருந்து எத்தகைய நிலையில் பெரிதான கட்டியாக இருந்த போதிலும் கறைந்து விடுகிறது. எத்தனையோ பேர்களுக்கு உபயோகப்படுத்தி குணத்தை கண்டிருக்கிறேன்.

மருந்தின் விபரம்

வேலம் பிசினி. பாதம் பிசினி. சாரவுந்த. உஷக் கதிரா என்னும் வஸ்துக்களை சமனிடை எடுத்து இடித்து நீரில் ஊறப்போட்டு அறைத்து வைத்துக் கொண்டு காடியின் அளவுக்கு கனத்த காகிதத்தை கத்தரித்து அதில் தடவி வீக்கத்தின் மேல் போட பிடித்துக் கொள்ளும். இதன்மேல் நீர் படாதபடி பார்த்துக் கொள்ள வேண்டும்.இப்பற்றானது வீக்கம் குறையும் பரியந்தம் விடாமல் பிடித்துக் கொண்டிருக்கும் மூன்றாம் நாள் நான்காம் நாள் பிரிந்து விழும். பிறகு மறுபடியும் போடவேண்டும். இவ்வாறு செய்ய வெகு சீக்கிரத்தில் வீக்கம் குறைந்து விடும்.

கடல் நுரையை தூள் செய்து ஒரு அரிசி எடை வெல்லத்தில் மூடி காலை மாலைகளில் கொடுத்து சமுத்திரம் நீர் அல்லது உப்பு கலந்த நீர் ஒரு அவுன்சு கொடுக்க 3 நாளில் எத்தகைய வீக்கமும் குறைந்துவிடும். மருந்து அதிக உஷ்ண முடையதால் குறைந்த அளவு கொடுக்கவும்.

சங்கு திராவம் 1 முதல் 5 துளி வரையில் காலை மாலைகளில் கொடுத்துவர கட்டி கரைந்துவிடும். சுர கட்டிகளுக்கு உலகில் இது சிறந்தது கல்லீரல் வீக்கமும் இதனால் நீங்கும்.

இதனால் உள்ளுக்கு மேலே சொன்ன எந்த மருந்தையாவது கொடுக்கலாம். இவற்றின் விரிவை விஷ சுரம் என்னும் வியாசத்தில் எழுதியிருப்பதால் இங்கு இதோடு விடுகிறேன்.

பிளட் பிரஷர்

பிளட்பிரஷர் என்பது இரத்தமானது அதிகமாக தலையிலும் மூளையினிடத்திலும் செல்லும் ஒரு வியாதி.

இந்த நோயைக் குணப்படுத்த இயலாதென்பது அறிவுடைய ஆங்கில வைத்தியர்களின் கருத்தாகும். நான் சில நாட்களுக்கு முன் ஒரு எம்.பி.பி.எஸ் பரீட்சையில் தேறிய ஆங்கில வைத்தியரிடம் பேசின போது பிளப்பிரஷர் என்னும் வியாதியைக் குணப்படுத்திவிடலாம் என்று சொன்னேன் அதற்கு அவர் பதில் சொன்ன போது பிளட்பிரஷர் என்னும் வியாதியை மருந்தால் குணப்படுத்தமுடியாது. எங்களிடமும் நல்ல மருந்து இருக்கின்றது. அம்மருந்தைக் கொடுத்தவுடன் மயக்கம் முதலான குணங்கள் மாறி இரத்த ஓட்டத்தின் வேகமும் குறைந்து விடுகின்றது. ஆனால் அம்மருந்தை நாங்கள் உபயோகிப்பதில்லை. அதற்கு பதிலாக பட்டினி போட்டுவிடுகிறோம். இராச் சாப்பாட்டை நிறுத்திவிடுகிறோம். கொழுப்புள்ள ஆகாரத்தைத் தள்ளிவிடச் சொல்கிறோம். அதாவது உளுந்து. மாமிசம். உருளைக் கிழங்கு ஆகிய இத்தகைய ஆகாரத்தைத் தள்ளிவிடச் செய்கிறோம். இவ்வகையில் குணம் போல காணப்பட்டாலும் மரணம் சம்பவித்துவிடும் என உறுதியாய்ச் சொன்னார். அன்றியும் மூளையினிடத்தில் எற்பட்ட அவ்வியாதி ஈக்காரணத்தாலும் குணமடையாது எனப் பலமாகப் பேசினார். ஆதலால் ஆங்கில வைத்தியர்கள் எவராயிருப்பினும் இது போன்ற அபிப்பிராயமுடையவர்களாகவே இருப்பார்கள் என்பது நிச்சயம்.

சுயதேச வைத்தியர்கள் இதை ஒப்பமாட்டாக்ள் என்பது உறுதி. ஏனெனில் அவர்களுக்கு இரத்தக் கொதிப்பின் காரணம் நன்றாய் தெரியும். ஆதலால் சுலபமாய் அவ்வியாதியை நீக்கி விடலாம் என்று நினைக்கின்றனர். இதற்குக் காரணம் யாதென ஆராயுமிடத்தில் இருபாடு பாட்டாளர்களின் கருத்தும் உண்மை எனவே புலப்படுகின்றது.

ஆங்கில முறையாளர்கள் பிளட்பிரஷர் என்னும் வியாதி மூளையினிடத்திலிருந்து உண்டாகும் ஒரு வியாதி என்றும் இதனால் மயக்கம் ஏற்படும் என்றும் ஆராய்ந்திருக்கின்றனர். அதன் படி நோயையும் கருதி சிகிச்சை செய்வதுடன் இரத்த ஓட்டத்தைக் குறைக்க பட்டினி போடுகின்றனர். மூளையினிடத்திலிருந்து வேலை செய்யும் நரம்புகள் முள்ளந்தண்டின் பக்கமாய் நீர்ப்பை முதலான இடங்களுக்குச் செல்வது முறை இம்முறையில் இந்தியர்கள் நீர்ப்பையில் இருக்கும் மேகப்புண் காரணமாய் நரம்பின் மூலம் மூளைக்குச் சென்று இரத்தக் கொதிப்பேறச் செய்து மயக்கம் முதலான துன்பங்கள் உண்டாவதாகக் கருதி நீர்ப்பையின் பால் ஏற்பட்டுள்ள தோஷத்தை நீக்க மருந்து கொடுக்கின்றனர்.

ஆங்கில வைத்தியர்கள் மூளையினிடத்தில் இருக்கும் உஷ்ணத்தை முன்னிட்டு வியாதி சம்பவிக்கின்றது எனக்கருதி ஆகாரத்தைக் குறைத்து தேகப் பயிற்சியைச் செய்வித்து இரத்தக் கொத்திப்பைக் குறைக்க முயற்சிக்கின்றனர். இவர்களின் சிகிச்சையால் மூல காரணம் ஆராயப்படாததால் நோய் நீங்குவதில்லை. மேலும் சில நாட்களில் மரணமும் சம்பவிப்பது நிதரிசனமாய் இருப்பதால் இந்நோய் அசாத்தியம் எனக் கருதுகின்றனர். தவிர பிளட்பிரஷரால் அப்ரபினசி என்னும் நோய் உண்டாவதாகவும் கூறுகின்றனர். (இரத்த ஓட்ட நரம்புகள் பிளத்தல்)

பிளட்பிரஷர் என்னும் நோயானது கரளைகளின் சீர் கேட்டாலும் கல்லீரலின் சீர் கேட்டாலும் நீர்ப்பையின் சீர் கேட்டாலும் மூளையின் சீர் கேட்டாலும் நரம்புகளின் கோளாறுகளினாலும் மனக்கவலைகளாலும் இன்னும் பலவிதக் காரணங்களாலும் உண்டாகிறதென்பது அறிவுடையவர்கள் கூறும் விஷயம்.

பிளட்பிரஷர் வியாதிக்காரர்களுக்கு விரோசன மருந்து கொடுத்தால் குணமாகக் காணப்படுகின்றது. ஆனால் அது பெரும் தவறாகும் என இரு வகுப்பு சிகிச்சைக்காரர்களும்

ஒப்புக் கொள்ளுகின்றனர். இந்திய வைத்தியத்தின் சிறப்பைக் காட்டக் கருதியே இவ்வியாசம் எழுதலானேன்.

இந்நோயானது சிரசில் உள்ள சிறிய நரம்புகளின் மூலம் அளவுக்கு மீறி இரத்தம் வேகமாய் ஓடுவதால் ஏற்படுகிறது. அதிகப்படியாக இரத்தம் ஓடும் காலத்தில் இரத்தக் குழாய் பிளவுபட்டு இரணம் உண்டாகின்றது. பிளவுபட்ட காலத்திலி ருந்து மயக்கம் ஏற்படுகின்றது இந்த மயக்கமானது 5 நாள் அல்லது 7 நாள் பரியந்தம் மாறுதல் இல்லாமல் இருந்து பிறகு தெளியும். அது சம்யம் மயக்கம் ஆரம்பித்ததிலிருந்தே ஒரு கையோ காலோ அல்லது இரண்டும் சேர்ந்தோ செயலற்றுவிடும் சிற்சிலருக்கு ஒரு மணி நேரம் அல்லது இரண்டு மணி நேரம் மயக்கம் இருந்து வாயோ கண்ணோ கோணலாகித் தெளிவதுண்டு இதை முக வாதம் என்றும் (பார்ஷியல் பெராலிஸஸ்) என்றும் கூறுவர். மயக்கம் தெளிந்து உயிர் தப்பிய பின் வாய் கோணலுக்கும் கண் கோணலுக்கும். நாக்கு கோணலுக்கும் அவுஷதம் உண்டு குணம் செய்து கொள்ளுவது முறை மயக்கம் நீடித்திருக்குமானால் பிராண ஆபத்து உண்டாகும். ஏனெனில் 5 நாள் அல்லது 7 நாள் மயக்கமாக இருந்து அதற்கு மேல் வெடித்த இடத்தில் இரணம் உண்டாகி சீழ் பிடிக்கும் அது சமயம் நோயாளியின் சரீரத்தில் சுரம் காணும். அந்த சுரமானது மருந்துகளுக்குக் கட்டுப்படுத்திக் குறைவது கஷ்ட சாத்தியம். சுரம் கண்ட பிறகு இரண்டு மூன்று நாளைக்குள் சுரம் அதிகரித்துக் கொண்டே போய் மரணத்தை அடைவிக்கும் இத்தகைய நிலையில் எத்தகைய சிகிச்சையும் பயன்தருவதில்லை. ஆனால் ஆங்கில முறைப்படி சிரசில் ஐஸ் வைப்பதும் தமிழ் முறைப்படி முலைப்பாலையும் கஸ்தூரியையும். நிறைய கொடுப்பதுவும் தவிர வேறு வழியில்லை.

நான் கேள்விப்பட்ட வரையில் அறிவுள்ள பெரிய டாக்டர் ஒருவர் ஆஸ்பத்திரியில் இத்தகைய நிலையில் ஒரே வேளையில் 5 குண்டுமணி கஸ்தூரியைக் கொடுக்கச் சிலருக்குக் குணம் ஏற்பட்டதாய் அறிந்தேன். ஆதலால் அறிவுள்ள ஆங்கில

வைத்தியமும் ஆபத்துக் காலத்தில் வைத்திய நிகண்டிலேயே இல்லாத அளவு அதிகப்படியான கஸ்தூரியைத் தேகத்தில் செலுத்தி நோயை நிவர்த்தித்து இருப்பதாய்த் தெரிகிறது எனவே தமிழ் வைத்தியர்கள் சென்னை முதலிய இடங்களில் நோய்கண்டு ஆபத்தான நிலைமைகளில் இருக்கும் நோயாளிகளுக்கு அளவுக்கு மீறிய கஸ்தூரியைக் கொடுப்பது பழக்கத்தில் இருப்பது சரியெனவே அதை ஆங்கிலர்கள் ஒப்புக் கொள்ளும் காலமும் ஏற்பட்டது.

சில ஆண்டுகளுக்கு முன் ஒரு குண்டுமணி கஸ்தூரியை ஏக காலத்தில் ஒருவர் கொடுத்து விடுவாரேயானால் அதனால் நோயாளி குணமடைந்தாலும் அதை உணர்ந்த ஆங்கில வைத்தியர்கள் தமிழ் வைத்தியன் முரட்டு வைத்தியன் என்று கூறுவார்கள். அவர்களே இப்போது இந்த காலத்தில் அதாவது (கர்னல் மால் கம்ஸன் போன்ற வைத்தியர்கள்) செய்யும் சிகிச்சையின் குணத்தை உணர்ந்த பின்னர் தங்கள் பழைய எண்ணத்தை கைவிட்டனர்.

இந்திய வைத்தியர்கள் இரத்தக் கொதிப்பிற்குக் கூறும் காரணங்களில் முக்கியமானதை இங்கே குறிப்பிடுகின்றேன். இரத்தம் கொதிப்பெடுத்து இருப்பதற்கு ஆங்கிலேயர் சொல்லும் காரணங்களை ஒப்புக்கொண்டாலும் அதற்கு மூலமான காரணங்களை ஆராயும்போது இரத்தக் கொதிப்பிற்குக் காரணம் மூளையினிடத்தில் இருந்து வெளிப்படும் வெள்ளைநிறச் சத்தும் சாம்பல் நிறச் சத்தும் (வொயிட் மேட்டர் கிரே மேட்டர்) அதாவது இச்சாசக்தி. கிரியாசக்தி என்னும் இரு சக்திகளின் அதிக வேலையினால் அஃதாவது மனத்தில் ஏற்பட்ட அதிக கவலையினாலும். நீண்ட யோசனையாலும் பயத்தாலும். கிரியா சக்தியாகிய வெண்ணிறச் சக்தியின் பலம் குறைந்து விடுகின்றது. அதனால் நீர்ப்பையில் வுஷ்ணம்தாக்கி அந்த உஷ்ணமானது இதயத்தையும் அணுகி இரத்தத்தை கொதிப்பேறச் செய்து இரத்தக் கொதிப்பென்னும் பிளட்பிரஷர் வியாதி காணப்படுகின்றது. இந்த வியாதி உண்டான பிறகு ஆங்கிலர்கள் கூறும் ஒவ்வொரு

அவயங்களும் சீர்கேட்டை அடைகின்றது. எனவே அது சமயம் பலர் பல காரணங்களாலும் இவ்வியாதி உண்டாகிற தென்பது கூறுவதுடன் முடிவாக ஒன்றையும் சொல்லாது விடுகின்றனர். இந்தியர் அதி போகத்தாலும் துர்ப்போகத்தாலும் மேக சம்பந்தமான வியாதி ஏற்பட்டு அதன் காரணத்தாலும் மூளையில் உள்ள சத்து குறைந்து சத்தின் குறைவால் அதிக உஷ்ணத்தைத் தடுக்க இயலாமல் பலவீனப்பட்டுள்ள இடமாகிய சிரசின் மூளையை அனுசரித்து இள நரம்புகள் பிளவுபட்டு இரணம் உண்டாகி கை கால் விழுந்து சுரம் கண்டு பிழைப்பவர்களும் மரணம் அடைவர்களுமாக இருக்கின்றனர். இந்தக் காரணத்தை நன்குணர்ந்த தமிழர்கள் அத்தகைய வியாதிக்கு இலேசாய் மலம் தள்ளக் கூடிய மருந்து கொடுத்து விட்டு மூளைக்கும் இருதயத்திற்கும் பலம் தரக்கூடிய மருந்துகளைக் கொடுத்து மூளையின் கண் குறைந்த சத்துக்களை அதிகப்படுத்தி நோயை அடியோடு நீக்குகின்றனர்.

மேலே சொன்னபடி 7 நாள் மயக்கத்தில் இருந்து பிறகு சுரம் அதிகரித்து விடும் நோயாளிகள் தவிர ஏனைய பார்ச வாயுவு வியாதிஸ்தர்களைக் குணப்படுத்துகின்றனர். மூளையின் கண் ஏற்பட்ட பலவீனத்தை நீக்கக்கூடிய மருந்துகளானவை :- இரசம். தங்கம். தாமரைப்பூ. கஸ்தூரி. அம்பர் முதலியன.

கஸ்தூரியைத் தனியாகவே அனுபானத்திலோ மற்ற மருந்துகளுடன் சேர்த்தோ கொடுக்கலாம். தாமரைப் பஸ்பத்தை கியாழம் இட்டோ அல்லது சர்பத்து செய்தோ கொடுத்து வரலாம்.பட்டுத் துணியை சாம்பலாக்கிப் பஸ்பம் செய்து அந்த பஸ்பத்தில் 1 குண்டுமணி எடை காலை மாலையில் தேனில் கொடுத்து வரலாம். இவைகளெல்லாம் பார்ச வாயுவு வருவதற்கு முன் பிளட்பிரஷர் இருக்கும் காலத்தில் செய்ய வேண்டிய சிகிச்சைகளாகும்.

நோய் கண்டு 10 நாள் பொறுத்து தெளிந்த பிறகு கை கால் விழுந்திருக்கும் சமயத்தில் கொடுக்க வேண்டிய மருந்துகளாவன.

மலம் தள்ளுததற்கு நேர்வாள சம்பந்தமான மருந்தும் வியாதியைக் கண்டிப்பதற்குக் கீழ்க்குறித்த வகைகளில் ஏதாவதொன்றையும் கொடுக்க வேண்டும்.

பட்டு கறுப்பு

வீரம் 1 பலம் இரசம் 1 பலம். இரண்டையும் ஜலம் விட்டரைத்து மொத்தை செய்து அதற்குமேல் 4 பலம் பழைய பட்டுத்துணியைச் சுற்றி நெருப்பில் கொளுத்தி விட்டால் இரசமும் வீரமும் போய் விடும் பட்டுத்துணி மாத்திரம் வெந்து சாம்பலாய் இருக்கும். அதை பொடி செய்து புட்டியில் வைத்துக்கொண்டு காலை மாலைகளில் ஒன்று முதல் ஐந்து கிரெயின் வரையில் தேனில் கொடுத்து வரலாம். இச்சா பத்தியம்.

தாம்பிர மெழுகு

ஒரு பலம் குளிசத்தகடு கொண்டு வந்து சிறுகக் கத்தரித்து ஒரு கிளாசில் வைத்து ஒரு பலம் கந்தகம் பொடி செய்து போட்டு எலுமிச்சம்பழம் ரசம் மிதக்க வைத்து அதனுடன் ஒரு விராகனிடை கஸ்தூரியும் சேர்த்து வெப்பலில் வைத்துவர தாமரம் க்ரைந்து விடும்.

சண்டமாருத செந்தூரம்

அதைக் கல்வத்தில் விட்டு அரைத்து எடுத்து வைத்துக்கொண்டு காலை மாலைகளில் 1 பனிப்பயர் அளவு வரையில் நெய் அல்லது வெல்லத்தில் வைத்து கொடுக்க வேண்டும். இச்சா பத்தியம்.

பூரம் விராகனிடை 4. லிங்கம் விராகனிடை 8 கெந்தகம் விராகனிடை 1 வீரம் விராகனிடை 1 ரச செந்தூரம் விராகனிடை 1 அஸ்கா சர்க்கரை விராகனிடை 1 இவைகளைக் கல்வத்திலி ட்டு 5 மணி நேரம் நன்றாக அரைத்து எடுக்க பவள நிறமுடைய செந்தூரமாக இருக்கும் இதனை எடுத்து ஒரு பாட்டலில் பதனப்படுத்தவும் இதனில் குன்றி அளவு எடுத்து பேயன்

வாழைப்பழத்தின் நடுவே வைத்து விழுங்கிவிட்வும். காலை மாலை இருநேரம் 6 நாள் மட்டும்.

தீரும் நோய்களாவது:- பார்ச வாதம் 13 வகை சன்னி வாதரோகங்கள். சூலை, பாண்டு விற்ை வாதம் முக வாதம் பவுத்திரம். மகோதரம். ரெத்தக் கொதிப்புக்கும் பார்சவாயுவிக்கும் ஆரம்பமாக இருப்பதைத் தெரிவிக்கும் தேகத்தில் எப்பாரிசத்திலேயும் துடிக்கும் துடி ரோகம் தீரும்.

சண்டமாருத செந்தூரம்
(வேறு முறை)

லிங்கம். வீரம். பூரம். இரசம். இரசச் செந்தூரம் கந்தகம் ஆகிய இவைகளைச் சமனெடை சேர்த்து 3 நாள் பரியந்தம் முலைப்பாலில் கல்வத்தில் அரைத்துலர்த்திப் பஸ்பத்தை புட்டியில் வைத்துக்கொண்டு காலை மாலைகளில் ஒரு அரிசி எடை தேனில் கொடுத்து வரவும். இதுபோல் இன்னும் அனேக முறைகள் உண்டு இதனைப் பின் விவரிப்போம்.

மேல் பூசு மருந்து

வேப்பன் எண்ணெயும் பெட்ரோலும் சமமாகக் கலந்து மேல் தேய்க்க சுகம்.

வேப்பன் எண்ணெய் ஸ்நானம் செய்யலாம் வேப்பன் எண்ணெய் ஒரு அவுன்சும். கஸ்தூரி ஒரு குண்டுமணியும் முலைப்பாலும் சேர்த்துக் காலை மாலைகளில் கொடுக்கலாம்.

சித்தாதிச் சூரணம்

தில்லைமரத்துப் பட்டையைத் தூள் செய்து அத்தூள் 5 பலமும். இரசம் ஒரு பலமும் சேர்த்து அரைக்க இரசம் உறவாகி விடும் மேற்படி சூரணத்தில் 2 குண்டுமணி முதல் 5 குண்டுமணி வரையில் காலை மாலைகளில் கொடுக்கலாம். மோர், நெய், பால் அதிகம் சேர்க்க வேண்டும். இச்சாபத்தியம் வாய்பிடிக்காது.

யாதொரு பயமும் இல்லை. எத்தனை ஆண்டுகள் கொடுத்தாலும் கெடுதல் செய்யாது.

வீர செந்தூரம்

ஒரு பலம் வீரத்தை கல்வத்திலிட்டு காட்டா மணக்கு பால் அது மூழ்கவிட்டு நன்றாக அரைத்து ரவியிலிட்டு நன்றாக காயவைத்து அரைத்து எடுத்து கொள்ளலாம் அல்லது மேற்படி பாலில் அரைத்து விலைத்தட்டி ஒட்டிலிட்டு மூடி சீலை செய்து ஒரு எருவில் புடமிட்டு எடுத்து அரைத்தெடுப்பதும் உண்டு எங்கனம் செய்தாலும் வேலை செய்வதில் தவறுவதில்லை அநுபானம் நெய் தேன் இவைகளில் கொடுக்க சகலவித வாத ரோகங்களையும் பார்சவாயுவும் குணம் செய்யும்.

அளவு:- 1 அரிசி எடைக் கொடுக்கவும்.

ரச செந்தூரம்

ஒரு பலம் ரசத்தை சுத்தி முறைப்படி சுத்தி செய்து கல்வத்திலிட்டு காட்டு காட்டாமணக்கின் பால் விட்டு அதனை அரைத்து வில்லைத்தட்டி உலர்த்தி ஒட்டிலிட்டு ஓடு மூடி சீலை செய்து மூன்று எருவில் புடமிட்டு எடுக்க முருக்கம்பூ போல் சிவந்த செந்தூரமாக இருக்கும் இதுவும் வாத ரோகம் பார்ச வாயு சகல நோயும் தீரும்.

அனுபானம் :- முன் முறை போல் கொடுக்கவும்.

சண்டமாருதத்தில் ப்ல மாறுதல்

நம் நாட்டு வைத்தியர்களிடம். நந்தி மெழுகு அகஸ்தியர் குழம்பு. கௌசிகர் மை. கனகலிங்க மெழுகு. ஆறுமுக செந்தூரம் சிவனார் அமுதம் பஞ்சபாண செந்தூரம். லிங்க செந்தூரம் ரச செந்தூரம். முதலான பெரிய மருந்துகள் எவ்வளவுதான் இருந்தாலும் ஏதோ ஒரு வகையில் முடிக்கப்பட்ட சண்டமாருத செந்தூரம் வைத்திருப்பார்கள். காரணம் வாத பித்த கப தோஷங்களால் விளைந்த நோய்களை இந்த செந்தூரத்தைக்

கொண்டே வியாதிக்கு தக்க அனுபானங்களை மாற்றி நோய்களை போக்கி குணம் செய்து விடுவார்கள்.

சண்ட மாருத செந்தூரம் என்ற பெயரில் பூரம் லிங்கம். வீரம். கந்தகம். ரச செந்தூரம் ஆக இந்த ஐந்து சரக்குகளைக் கொண்டு சம எடையாக ஒவ்வொரு சரக்குகளின் எடை கூட்டியும் குறைந்தும் வித்தியாசத்தோடு அரைத்து மருந்தாக முடித்து கையாடி வருகிறார்கள்.

அவர் அவர்களிடம் உள்ள முறைகளை மிக சிலாகித்து பேசுவதில் தயங்க மாட்டார்கள் அதே சமயம் வேறு முறையில் முடிக்கப்பட்ட சண்டமாருதத்தை சண்டமாருதம் போல் தாக்கி குறை கூறிப் பேசுவார்கள் காரணம் அதன் மர்மத்தை தெரியாதததினாலேயே அவ்விதம் பேசுகின்றனர்.

எனது அனுபவத்தில் எல்லா முறைகளும் நல்ல முறைகளே ஆனால் வயது. நோயின் நிலை. நோய்க்குத் தக்கபடி முடிந்த மருந்துகள். மருந்தின் அளவு அனுபானம் பத்தியம் இவைகளை அறிந்து கொடுத்தால் எந்த முறையில் தயாரித்த சண்டமாருதமும் நன்றாக வேலை செய்து வியாதியைக் குணம் செய்யும் என்பது திண்ணம்.

சண்டமாருத செந்தூரத்தில் சேரும் சரக்குகளில் அதி வீரியம் வாய்ந்த வீரம். பூரம் இவை இரண்டில் ஒவ்வொன்றும் ஒவ்வொரு முறைகளில் அதிக எடையாகவும். குறைந்த எடையாகவும் சுத்திசெய்தும் சுத்தியில்லாமலும் செய்யும்படி கூறப்பட்டிருக்கிறது இந்த சரக்குகளை அதிகம் சேர்த்தாலும் சுத்தி செய்யாவிட்டாலும் மருந்தானது அதிவீர்யம் வாய்ந்திருப்பதினால் நோயின் நிதானம் கண்டு மருந்தின் அளவில் மிகக் சிறிய அளவாயும் அனுபானம் தக்க மாதிரி வீரியம் வாய்ந்த மருந்துகளை அதிக நாள் கொடுக்கக்கூடாது அதுவும் மாமிசம் உட்கொள்ளாத வர்களுக்கு இம்மாதிரியான மருந்தை கொடுக்காமல் இருப்பதே நல்லது அப்படி கொடுக்க வேண்டிய அவஸ்யம் இருப்பின் மருந்தின் அளவு குறைந்தே கொடுக்கவேண்டும். மீண்டும் மருந்து கொடுக்க வேண்டி

இருப்பின் சில நாள் கழித்தபின் ஒருமுறை பேதிக்கு கொடுத்த பின்னரே மறுமுறை மருந்து கொடுக்க வேண்டியது சான்றோர் கடமையாகும்.

சண்டமாருத செந்தூரத்தில் சேரும் சரக்குகளை சுத்தி முறைப்படி சுத்தி செய்தாவது முலைப்பால் அல்லது கோழிமுட்டை வெண் கருவோ வெள் கரு ஜெய நீரிலோ அல்லது காட்டுக் கொட்டைப் பாலிலோ புடமின்றி அரைத்தெடுக்கும் செந்தூரத்தை துடர்ந்து 10 அல்லது 15 தினங்கள் கொடுத்தாலும் வாய்வேக்காடு காண்பதில்லை வியாதியும் குணமாகின்றது.

சண்டமாருத செந்தூரம் செய்வதில் அரையாப்புதான் மிக முக்கியமானதாகும் முதன் முதலாக வீரத்தையும் கெந்தகத்தையும் கல்வத்திலிட்டு நல்ல மைனமாக அரைத்த பின்பே மற்ற சரக்குகளை ஒன்றின்பின் ஒன்றாகக்கூட்டி சுமார் எட்டு மணிநேரம் அரைத்தெடுக்க வேண்டும். கெந்தகம் ரச செந்தூரம் இந்த இரண்டு சரக்குகளில் எது அதிகம் சேர்ந்தாலும் இவைகள் சேர்த்து சுத்தி இல்லாமல் அரைத்தெடுத்தாலும் இந்த மருந்து வாய்வேக்காடு காணப்பதில்லை. அதிக நாள் மருந்து கொடுத்து வரலாம் நாள் தாமதித்தாலும் வியாதியைக் குணமாக்குவதில் தவறுவதில்லை.

சண்டமாருத செந்தூரத்தின் அளவு நூல்களில் கூறியபடி இந்த காலத்தில் மக்களுக்கு கொடுத்தால் பரலோகத்துக்கு அனுப்ப வேண்டியதுதான் அந்த காலத்து மக்களின் உணவு உழைப்புமுறை வேறாக இருந்தது இந்த நவீன கால மக்களுக்கு முன் காலத்தில் சித்தர்களால் கூறப்பட்ட பற்ப செந்தூரங்கள் பணவெடை கொடுக்க கூறியுள்ளார்கள். அதுபோல் இந்த காலத்து மக்களுக்கு கொடுக்க கூடாது வயது நோய்க்குத்தக்கபடி 1/2 அரிசி முதல் 1/2 குன்றி வரைக் கொடுக்கலாம்.

அனுபானம் :- பலவிருப்பனும் குறிப்பாக நெய், தேன், திரிகடுகு, திரிபலாதி, இஞ்சிசார், சுக்குகியாழம், பனைவெல்லம் கேப்ஸில் அடைத்தும் கொடுக்கலாம் சீரக கஷாயம் மிளகு கஷாயம் தரவும்.

சண்டமாருதத்தில் மாறுதலான எடைகள்

1. பூரம் விராகனிடை	1	(7) பூரம் விராகனிடை	10
லிங்கம் விராகனிடை	1	லிங்கம் விராகனிடை	8
வீரம் விராகனிடை	1	வீரம் விராகனிடை	2
கெந்தகம் விராகனிடை	1	கந்தகம் விராகனிடை	2
ரசசிந்தூரம் விராகனிடை	1	ரசசிந்தூரம் விராகனிடை	2
2. பூரம் விராகனிடை	4	(8) பூரம் விராகனிடை	8
லிங்கம் விராகனிடை	8	லிங்கம் விராகனிடை	10
வீரம் விராகனிடை	8	வீரம் விராகனிடை	2
கெந்தகம் விராகனிடை	2	கெந்தகம் விராகனிடை	2
ரசசிந்தூரம் விராகனிடை	2	ரகசிந்தூரம் விராகனிடை	2
3. பூரம் விராகனிடை	4	9. பூரம் விராகனிடை	4
லிங்கம் விராகனிடை	8	லிங்கம் விராகனிடை	8
வீரம் விராகனிடை	8	கெந்தகம் விராகனிடை	8
கெந்தகம் விராகனிடை	2	வீரம் விராகனிடை	1
ரகசிந்தூரம் விராகனிடை	1	ரக சிந்தூரம் விராகனிடை	1
4. பூரம் விராகனிடை	10	சர்க்கரை விராகனிடை	1
லிங்கம் விராகனிடை	10	10. பூரம் விராகனிடை	8
வீரம் விராகனிடை	10	லிங்கம் விராகனிடை	8
ரசசிந்தூரம் விராகனிடை	1	வீரம் விராகனிடை	½
கெந்தகம் விராகனிடை	1 ¼	கெந்தகம் விராகனிடை	2
5. பூரம் விராகனிடை	4	ரச சிந்தூரம் விராகனிடை	2
லிங்கம் விராகனிடை	4	11. பூரம் விராகனிடை	2
வீரம் விராகனிடை	2	லிங்கம் விராகனிடை	2
கந்தகம் விராகனிடை	2	கந்தகம் விராகனிடை	½
ரச சிந்தூரம் விராகனிடை	16.	வீரம் விராகனிடை	½
6. பூரம் விராகனிடை	10	ரசசிந்தூரம் விராகனிடை	½
லிங்கம் விராகனிடை	10	12. பூரம் விராகனிடை	10
கந்தகம் விராகனிடை	1	லிங்கம் விராகனிடை	8
வீரம் விராகனிடை	½	கெந்தகம் விராகனிடை	1
ரசசிந்தூரம் விராகனிடை	1	வீரம் விராகனிடை	2
		ரச சிந்தூரம் விராகனிடை	2

மேற்கூறப்பட்ட பன்னிரு முறைகளும் சண்டமாருத செந்தூரம் என்ற பெயரில் பல நூல்களில் காணப்படுகின்றது பலரும் மருந்துகள் முடித்து அனுபவித்து வருகிறார்கள்

மேகநீர்

சிசன மூலம் பிற ஸ்திரீகளை போகிக்கும்போது விஷம் ஏறி நீர்ப்பை வரையிலும் பீஜம் வரையிலும் உள்ள நரம்பு துவாரத்தில் இரணம் ஏற்படில் அது சமயம் உப்புசத்துள்ள நீர் பையிலிருந்து வெளிவரும் சிறு நீரானது இரணத்தில் ஏற்பட எரிச்சல் காணும் இவ்விரணம் அதிகப்படில் பீஜத்தில் தங்கியிருக்கும் இந்திரியத்தையும் கரைத்து கசியச் செய்யும் அப்படி கசிந்து கொண்டிருக்கும் இந்திரியத்தை சிறுநீரானது வெளியில் தள்ளி விடும் இதனையே வெள்ளை வியாதி என்பர் (கனேரியா) வெட்டை, மேகம் என பல பெயர்கள் கூறுவார்கள்

இவ்வியாதியானது ஒரு ஸ்திரீ பல புருஷர்களிடம் போகிப்பதாலும் அல்லது ஒரு புருஷன் பல ஸ்திரீகளை போகிப்பதாலும் விலை மாதர்களிடம் சேருவதாலும் விஷம் உண்டாகி நோய் வருகின்றது இந்நோயானது பலவகையாக பிரிகின்றது பிரிந்து பல மாறுதலடைகிறது அத்தகைய மாறுதல்களைப் பல பெயர்களாக வகுக்கப்பட்டிருக்கின்றது.

இந்நோய் ஒன்றையே உலகில் பெரியநோயாய் கருதல் வேண்டும். இந்நோய் இல்லாத மனிதர்களோ. நாடோ இல்லை என்று கூறலாம் எல்லா நாடுகளும் இந்நோய்க்கு மருந்துகள் கண்டு பிடித்த வண்ணமாய் இருக்கின்றன.

இந்நோயைவளர விடாமல் நாசமுறச் செய்ய வேண்டுமானால் கீழ்க்கண்டபடி அனுஷ்டித்தால் நோய் உண்டாகமாட்டாது அப்படி அனுஷ்டிக்காத காரணத்தால் வரும் கெடுதலுக்கு விபரமும் சிகிச்சையம் குறிக்கின்றோம்.

வெட்டையை தடுத்துக் கொள்ள

போகம் செய்யும் காலத்திற்கு முன் வயறு நிறைய குளிர்ந்த நீரைச் சாப்பிட்டு போகித்தல் வேண்டும்.

போகித்த பின்னும் குளிர்ந்த ஜலத்தை வயறு நிறைய சாப்பிட வேண்டும்.

இதன்படி செய்தால் விஷம் காணாதபடி தடுத்து கொள்ளலாம் இல்லாவிடில் கீழ்குறிக்கும் தனி தனி நோய்கள் காணும்

இந்த வியாதியானது நீர் எரிச்சலையும் வெள்ளை நிறமான இந்திரியத்தையும் இரத்தத்தையும் வெளிபடுத்தும் தவிர துவாரத்தை அடைக்கும் நீர் அடிக்கடி குறைந்த அளவாக இறங்கும் ஒவ்வொருதரம் நீர் இறங்கும்போது தாங்க முடியாத எரிச்சல் உண்டு பண்ணும் மலம் கட்டும்.

சிற் சிலருக்கு இந்நோயானது அதி உஷ்ணத்தாலும். சிலருக்கு கர்ப்பத்திலிருந்து அதாவது தாய் தகபனுக்கு மேற்படி நோயுள்ள காலத்தில் பிறந்த பிள்ளையின் நோய் உண்டாகின்றன.

கர்ப்பத்தில் உண்டானதால். அதுசரீரத்தோடு ஆயுள் காலம் வரை பற்றி நிற்கும். இதனை நிவர்த்திக்க முடியாது.

உஷ்ணத்தால் உண்டானால் சிலாசத்துப்பஸ்பம் படிகார பஸ்பம். இளநீர் விளக்கெண்ணெய் முதலான மருந்துகளால் நிவர்த்தி செய்து கொள்ளலாம்.

பெண்கள் சம்பந்தமாய் உண்டாகும் வியாதிக்கு சந்தன அத்தர், சந்தன கியாழம். மேக எண்ணெய்கள் பச்சிலை மருந்துகள் முதலானவைகளால் நிவர்த்தித்துக் கொள்ளலாம்.

ஆரம்ப வெள்ளை

சந்தன அத்தர் 1 முதல் 5 துளி வரையில் நாள் ஒன்றுக்கு மூன்று மணிக்கொரு முறை சர்க்கரையில் கலந்து சாப்பிட ஆரம்ப வெள்ளை குணமாகும்.

வெள்ளெருக்கு என்னும் இலையை எலுமிச்சம்பழ பிரமாணம் 3 பல்லு வெள்ளை பூண்டு வைத்து அரைத்து மோரில் கலந்து காலையில் சாப்பிட்ட உப்பில்லா பத்தியம் இருக்க வேண்டும். இதன்படி மூன்றுநாள் சாப்பிட குணமாகும். இதுபோல எத்தனையோ பச்சிலைகளைச் சாப்பிடலாம் அவற்றுள் பழம் பாசி. கீழா நெல்லி. சிறு அம்மான் பச்சரிசி முதலிய இலைகளும் நல்லது.

வெள்ளைநோய் கண்ட புருடன் அடிக்கடி இளநீரும் விளக்கெண்ணெயும் கலந்து பேதிக்கு சாப்பிட வேண்டும்.

எண்ணெய் செய்யும் விபரம்

1. பிரம்மதண்டி விரை ஒரு பங்கு. சந்தனம் ஒரு பங்கு அழவன விரை அரைப்பங்கு ஆகிய இவைகளைச் சேர்த்து குழிதைலம் வாங்கி அத்தைலத்தில் 2 முதல் 10 துளி வரையில் சர்க்கரையில் சாப்பிட நாள்பட்ட வெள்ளை நோய் நீங்கும்.

2. வேப்பன் எண்ணெய் 10 பலம் புங்கன் எண்ணெய் 10 பலம் கெந்தகம் 5 பலம் வீரம் அரை பலம் லிங்கம் 1 பலம் பூரம் 1 பலம் ஆக இவைகளை நன்றாக ஒரு சாமம் அரைத்து சுடர் தைலம் வாங்கி புட்டியில் பதனம் பண்ணி 1 முதல் 5 துளிவரையிலும் காலை, உச்சி மாலையாக சாப்பிட நாள்பட்ட வெள்ளை நோய் நீங்கும்.

3. பூவரசம் பட்டை, கலியாண முருக்கன் பட்டை மருதாணிப்பட்டை. புங்கம் பட்டை, வகைக்கு 5 பலம் இடித்து 4 படி நீர்விட்டு 2 படியாக காய்ச்சி வடிகட்டிக் கொண்டு இரண்டு வீசை விளக்கெண்ணெய் ஒரு பலம் பூரம் தூள் செய்து கலந்து காய்ச்சி வடிகட்டி வைத்துக் கொண்டு காலையில் ஒரு அவுன்சு பசும் பால் அல்லது சாத நீரில் 3 நாள் கொடுக்க வியாதி நீங்கும் இச்சாபத்தியம்.

4. சீரகத்தை சூரணமாக செய்து வைத்துக்கொண்டு இதற்கு சமன் நாட்டுச் சர்க்கரையை ஒரு டீஸ்பூன் அளவு காலை மாலை உட்கொண்டு வர வெள்ளைப்படுவது குணமாக்கும்.

கொருக்கு

வெள்ளை நோயின் முதிர்ச்சியானது சிசன முனை பாகத்தைப் புண்படுத்தி விடுமானால் இதைக் கொடுக்கு (ஷாங்கர்) என்பர். இவ்விரணமானது சுலபத்தில் ஆறுவது கிடையாது.

இதற்கு போரிக் பவுடர், காலமல் சிங் ஆக்சைட் வாஸ்லின் சேர்ந்த மருந்துகள் பயன் தருவதில்லை ஆனால் சல்பார்சனால், அயோடால் முதலான இரத்தத்தில் செலுத்தும் மருந்துகள் பயன்தருகின்றது.

தமிழ் முறையில் சடாதார பஸ்பம் குணம் செய்யும். அனுபானமாக வெள்ளை குங்கிய பற்பத்தை தரலாம்.

இவ்வியாதி முதிர்ந்தாலும், இரணம் ஆறினும் உடனே கிரந்தி என்னும் (சிப்பிலிஸ்) நோய் காணுகின்றது.

இக்கிரந்தியானது இரத்தத்தில் பரவிய மேக நோயாகும் இதனால் மூளையையும் நேத்திரத்தையும் பாதிக்கின்றது.

ஆங்கில முறைப்படி பாடான மருந்துகளை இரத்தத்தில் குத்திக் குணப்படுத்தல்.

தமிழ் முறைப்படி மேலே சொன்ன எண்ணெய்களாலும் கந்தக ரசாயத்தினாலும் குணம் செய்யலாம். பூரபற்பம் பூரத்தெண்ணெயும் குணமாகும்.

அறையாப்பு

வெள்ளைநோயின் பகுதி பீஜத்திற்கு மேல் கட்டி காண்டல் எதுவோ அதனை அரையாப்புக் கட்டி என்பர்.

இதனைப் பழுக்கச்செய்து உடையவிட்டோ, அல்லது ஆபரேஷன் செய்தோ குணப்படுத்துவது நலம் இல்லாவிடில் முளையிலேயே அழுந்தவிடச் செய்தால் உடனே கழுத்தில் கண்டமாலையாகக் கிளம்பிவிடும். அவ்விரணம் கொஞ்சத்தில்

குணப்படுவதில்லை ஆதலால் அரையாப்புக் கட்டியை வெளிக்கிளம்பாமல் அமுக்கிவிடச் செய்யும் சிகிச்சை நல்லதன்று

கட்டியை உடைக்க மஞ்சள். அமுக்கினாங் கிழங்கு அயோடின் முதலான மருந்துகளால் உடையச் செய்யும்

கற்பூரமும். சாம்பிராணியும் சமனாய்க் கலந்து ஒருமணிநேரம் கலயத்தில் அரைக்கபிளாஸ்திரியாய் விடும் அதனை துணியில் தடவி கட்டிக்குப்போட ஆறிவிடும் உடையாத காலத்தில் போட உடைந்துவிடும்.

பித்த வாயு

பித்த வாயு. உஷ்ணவாயு என்னும் இரண்டும் ஒரே நோயைக் குறிக்கும் மேகவாய்வு என்பது வேறுபடும்

பித்தவாயு என்னும் உஷ்ண வாயுவினால் மார்வலி என்னும் இருதய வியாதியாகும் இருதயத்தில் அளவுக்குமீறி உஷ்ண காற்று தாக்குவதால் உண்டாகின்றது இதனால் ரெத்தம் கொதிப்படையச் செய்யும் தலை சுற்றல் மயக்கம் இருதயத் துடிப்பு இவைகள் காணும் பிளட்பிரஷர் எனச் சொல்லுவார்கள்

பித்த வாயுவானது தீனிப்பையிலும் கல்லீரலிலும் உஷ்ணம் அதிகரித்து தங்கும் வாய்வுக்கு உஷ்ண வாய்வு என்று கூறப்படும் ஆனால் பித்தவாயு நோயிலும் மார்வலி காண்பதுண்டு. எனினும் புளித்தேப்பம் முதலியவை காணும் மொத்தத்தில் இது இருதய வியாதி என்றே ஆங்கிலர் கூறுவார்கள்.மேக வியாதி என்பது இடுப்பின் கீழ் காணப்படும் வியாதி எனலாம் கைகளின் கீழ் கணுக்களிலும் இடுப்பிலும் நீர்ப்பையிலும் முள்ளந்தண்டிலும் உண்டாகும் வியாதிக்கு மேகவாய்வு என்று சொல்லப்படும்.

இந்நோய் இரண்டு காரணத்தால் உண்டாகிறது ஒன்று பெண்கள் அல்லது ஆண்களின் துர்நடத்தையால் உண்டாகும் மற்றும் பால்யத்தில் அதிபோகம் செய்வதாலும் முஷ்டி மைதுனம்

தூரஸ்திரீகளிடத்திலும் வியாதியுள்ள பெண்களிடத்திலும் கூடுவதாலும் தக்க பருவத்தில் இந்திரியத்தை வீணில் அதிகமாகச் செலவுசெய்தும் இதுபோல் கூடா ஒழுக்கத்தை நாடி சென்றதினாலேயே மேகவாய்வு அதிகம் காணப்படும். மேக வாய்வு என்பது வெட்டை ரோகத்தை அனுசரித்தே உண்டாகும் முதிர்ந்த வெள்ளை வியாதியே மேக வாய்வு என்று சொல்லப்படும்.

பாரிச வாய்வு

சிற்றின்பங்களில் அதிகமாக ஈடுபட்டு உடல் சக்தியை செலவிட்டவர்களுக்கும். மூளையை அதிகமாக வேலை செய்ய சிந்தனையைத் தூண்டிய வண்ணம் இருந்தவர்களுக்கும். சதா கவலைபட்டுக் கொண்டிருந்தவர்களுக்கும். பேராசையால் மனம் நொந்தவர்களுக்கும் தான் எதிர்பார்த்திருந்த காரியம் கைகூடாது தோல்வி கண்டவர்களுக்கும். ஏதோ ஒரு வகையில் காதலில் ஏக்கம் கொண்டவர்களுக்கும். இருதய கமலம் பலவீனம் கண்டவர்களுக்கும் தேகத்தில் ரெத்தம் வற்ற பித்தநாடி தாழ்ந்து உஷ்ணம் குறைந்து உடலில் வாத சிலேத்துமம் தொந்தமாகி விட்டவர்களுக்கும் ஏற்படும் நோயே பாரிசவாதமாகும். இந்நோய் முதன் முதல் தேகத்தில் குறிப்பிட்ட பாகத்தில். மதமதப்பு. குடைச்சல். வலி துடிப்பு முதலியவைகள் முன் எச்சரிக்கையாக தெரிவித்துவிட்டே நாளடைவில் உணர்ச்சி குன்றி அவ்விடம் உள்ள நரம்புகள் பாதிக்கப்பட்டு அவயவங்கள் அசைக்க முடியாத நிலையில் துவண்டு விடும். வாத பித்த கபமான முத்தோஷங்களின் தொந்தங்களின் சரீரத்திற்கு தக்கபடி. இடதுபக்கம். வலதுபக்கம் கால் கைகளிலும். முகம் நாக்கு இருதயம். குடல் முதலிய இடங்களிலும் பாதித்து அந்தந்த அவயவங்களுக்கு ஏற்றபடி நோயின் தன்மையும் பெயரும் மாறும் இருதயத்தைப் பாரிச வாயு தாக்கினால் உடனே இரணம் சம்பவிக்கும் ரெத்தக் கொதிப்புக் கண்டவர்களுக்கு பாரிசவாயு ஏற்பட்டு விடும் எனக் கூறலாம்.

சூதக வாய்வு

சூதகக்கட்டு அல்லது சூதக வாய்வு என்னும் வியாதியும் வெள்ளை வியாதியின் பாகமேயாகும்.

பெண்களுக்கு வெள்ளை வியாதி ஏற்படுமானால் அவர்களுக்கு புருஷர்களைப் போலல்லாமல் கெர்ப்பப்பையிலி ருந்து நாபிக்கு கீழே உள்ள பீஜம் வரைக்கும் புண் உண்டாகும் எனவே வெள்ளை வியாதியானது பெண்களுக்கு நீர் துவாரம் முதல் கெர்ப்பப்பை உள்பட பீஜம் வரையில் இரணம் ஏற்படும்.

(பெண்களுக்கு ஆண்களுக்கு இருப்பதைபோல் பீஜமும் லிங்கமும் உண்டு ஆனால் ஆண்களுக்கு வெளிப்பாகத்தில் காணப்படுகின்றன. பெண்களுக்கோ நாபிக்கு கீழ் இரண்டு விரற்படை அடிபாகத்தில் உள்ளே இருக்கின்றது)

வெள்ளை வியாதியால் புருஷர்களுக்கு நீர் துவார சிசனத்திலிருந்து பீஜம் வரை புண் உண்டாகி இந்திரியம் கசிவது போல் பெண்களுக்கும் பீஜத்திலிருந்து நாதம் கசியும் அப்படி கசியும் நாதமானது கெர்ப்பப்பையில் வந்து சேரும் எனவே விஷமான நாதம்பட்ட இடங்களில் புண் உண்டாகி வீக்கமும் காணுகின்றது தவிர கெர்ப்பப்பையில் வந்து சேரும் உதிரத்தையும் கரு நிறமாக்கி விடுவதன்றி தாராளமாய் வெளிப்படாமல் உஷ்ணத்தால் தடுத்து குறைந்த அளவாக வெளிப்படச் செய்கின்றது.

இதனால் சூதகம் தடை ஏற்பட்டு சரீரம் சிலருக்கு பெருத்துவிடும். மார்வலி காணும் அடிவயிற்றிலும் வலி ஏற்படும் இடுப்பில் வலியுண்டாகும் கை கால் ஒச்சல் ஏற்படும் நாள் தள்ளி தூரம் வெளிப்படும் சில சரீரத்துக்கு இளைத்து விடுவதும் கட்டிகட்டியாய் உதிரம் வெளிப்படுவதும் நாள் அதிகமாக தூரம் வெளிப்படுவதுமாக இருக்கும்.

இந்நோயானது நாள் பட கை கால் குடைச்சல். வீக்கம். ஆயாசம். இடுப்புவலி. கீல்வலி. முழங்கால் வலி. வயிற்று வலி முதலான தொந்தரவுகளை அதிகம் உண்டு பண்ணும்.

இந்த நோயை உணரமுடியாத பல வைத்தியர்கள் இத்தகைய நோயாளிகளுக்கு அடிக்கடி பேதியாகக்கூடிய மருந்துகளைக் கொடுக்கின்றனர். அது பொருத்த மற்றதாகும் மற்றும் சிலர் இருதய பலத்துக்கும். இரத்த விருத்திக்கும். இரத்த பரிசுத்தத்துக்கும் உஷ்ணம் குறைவுபடவும் மருந்து கொடுக்கின்றனர் அம்முறையும் பயனற்றதேயாகும்.

ஆங்கில வைத்தியர்களும் இந்நோயைக் கண்டறிய முடியாமல் பல மருந்துகளைக் கொடுத்தும் டானிக் எழுதித்தருவதும் பெண் வைத்தியர்களைக் கொண்டு பரிசோதிக்கச் செய்வதும். கெர்ப்பப்பையை சுரண்டிவிடச் செய்வதும் ஆகிய முயற்சியில் நோயாளிகளைத் துன்பத்திற்காளாக்குகின்றனர்.

சாதாரணமாய் புருஷ போகம் இல்லாத பெண்களுக்கு இவ்வியாதி உண்டாகாது சிலருக்கு ருதுவான உடனே வீட்டு தூரம் சரியாய் ஆகவில்லையென்றும் நாட்கள் தள்ளி தூரம் வருவதாகவும் கூறுமிடத்து அதை நோய் என்று சொல்லலாகாது இத்தகையோர்களுக்கு வேண்டுமானால் இரத்தவிருத்தி மருந்தும் பேதி மருந்தும் கொடுப்பது முறையாகும்.

கெர்ப்பப்பை பிரளல்

சில பெண்களுக்கு கெர்ப்பப்பை பிரண்டு விடுமானால் வீட்டுதூரம் காலத்தில் வலியுண்டாகும் கருவு தரிக்காது.

கெர்ப்பப்பை சிறுத்து விடுமானால் அல்லது கிருமிகள் ஏற்பட்டு அதனால் விஷக் காற்றுண்டானாலும் தூர காலத்தில் வயிற்றுவலி காணும். இவர்களுக்கு கரு தரிக்காது இதனை (லி ஸ்பிளேஸ்மெண்ட் ஆப் தி ஊம். டிஸ் மனோரியா) என்பார்கள் சூதகபந்தம் (ஆம்னோரியா) என்ற பெயரால் விவரிப்பது ஆங்கிலமுறை.

பெரும்பாடு

வெள்ளை நோய் முற்றிய இளைத்த தேகத்தில் இரத்தம் விஷமடைந்தபின் பலவீனத்தின் காரணத்தால் கொர்ப்பப்பை இருக்குமிடத்தை விட்டு கீழேஇறங்கிவிடும். அது சமயம் அதிகப்படியான உதிரம் போகும். இவ் உதிரமானது கட்டி கட்டியாகவும் அளவுக்கு மீறியதாகவும் அதிக நாள்படவும் போய்க் கொண்டிருக்கும் இதனை பெரும்பாடு. (மனரோல்ஜியா) என்பர்.

இதற்கு (பெசரி) என்னும் ஒரு வளையத்தைக் கொண்டு யோனிக்குள் செலுத்தி கொர்ப்பப்பையைத் தூக்கிப் பிடிக்கச் செய்வது ஆங்கில முறை தவிர (டூஷ்) கொடுப்பர் படுக்கையில் கிடத்துவர். ஈரதுணியை அடிவயிற்றில் வைப்பர் காரமின்றி இஞ்சிகளைக் கொடுப்பர் சில டாக்டர்கள் எமடின் இன்ஜக்ஷன் கொடுப்பர்.

தமிழ் முறையில் துவர்ப்புள்ள மருந்துக்களைக் கொடுப்பர் தவிர வேலம்பட்டையும் அத்திப்பட்டையும் இடித்து சார் வாங்கி அச்சாற்றில் கார் அரிசி மாவைக்கொட்டிக் கிண்டி புட்டு செய்து உண்ணக் கொடுப்பார்கள்.

ஆலம் விழுது அரசன் கொழுந்து. பாதாம் கொட்டைகார் அரிசி இவைகளை அரைத்து பால் பிழிந்து அடுப்பில் காய்ச்சி பால் கலந்து உண்ணக் கொடுப்பர் தென்னம் பாளையைச் சார்வாங்கி காலையில் கொடுப்பதும் பிச்சிப்பூவை விளங்காய் பிரமானம் அரைத்து பால்விட்டுக் கலக்கி கொடுப்பதும் நவாப்பட்டை. கருவமாப்பட்டை இவைகளின் கஷாயம் வைத்துக் கொடுப்பதும் முறையாக கையாளுகின்றனர்.

சில அரிவிலிகள் இதனை காட்டேரி குற்றமென்று கங்கணம்கட்டுவதும் பூசாரிகளைக் கொண்டு உடுக்கு அடித்து வர்ணித்து அந்த குற்றம் இந்த குற்றம் என்று புளுகுவதும் பூசை போடுவதும் முழுக்குவைப்பதும் ஆடுவெட்டி பொங்கல

வைப்பதும் மந்திரத்து விபூதி போடுவதுமான பயனற்ற காரியங்களில் செலவிட்டு பயனின்றி மாண்டு போகின்றனர்.

என் அனுபவத்தில் கண்ட அறிய சிகிச்சைகளை இங்கு குறிக்கின்றேன்

பாதம் பிசினியை 12 மணி நேரம் ஊரவைத்து சோறுபோல் காணும் வஸ்துவை எடுத்துக்கொண்டு வேலம்பிசினி ஊரின ஜலத்தை விட்டு பணங்கற்கண்டு சேர்த்து காலையில் கொடுத்தல்

கரிமஞ்சள் 5 பலம். வேப்பிலை 5 பலம் வேலம். பட்டை 5 பலம் இவைகளை இடித்து கியாழமிட்டு (செய்வகை 4 படி நீர்விட்டு 2 படியாக காய்ச்சிக் கொள்வது) அக்கியாழத்தால் வயிற்றையும் கொர்ப்பபையையும் அலம்பல்.

நெல்லிவத்தலின் தோல் கெந்தகம் வகைக்கு பலம் ½ யாக எடுத்து தூள் செய்து அத்துடன் 5 பலம் பூங்காவியைக் கலந்து அரைத்து வைத்துக்கொண்டு ஒரு வேளைக்கு குன்றி அளவாக வெண்ணெய் அல்லது நெய்யில் காலைமாலைகளில் கொடுக்க குணமாகும்.

சூதக வாய்வுக்கு பூரம் சேர்ந்த எண்ணெய் கொடுத்தால் குணம் செய்யும்.

சூதக வலிக்கு பெருங்காயம் ஒரு குண்டுமணி அளவு எடுத்து வெல்லத்தில் வைத்து தூரதினத்தில் கொடுக்கலாம்.

பூவரசம்பட்டை மகிழம்பட்டை புங்கம்பட்டை தென்னம்பாளை ஆகிய இவற்றின் சாறு வகைக்கு அரைக்கால்படி பூரம் அரைப்பலம் வீரம் ஒரு விராகனிடை விளக்கெண்ணெய் இருபது பலம் சேர்த்துக் காய்ச்சி வைத்துக் கொண்டு பாலில் காலையில் மாலையில் ஒரு பாலாடை விகிதம் 5 நாள் இச்சாபத்தியத்துடன் கொடுக்க பெண்களுக்குண்டான கொர்ப்ப நோய்கள் நீங்கும்.

கெர்ப்பப்பை வீக்கம்

கெர்ப்பப்பை வீங்கிவிடுமானால் ஆயாசம், மேல் மூச்சு, அசதி இவைகள் உண்டாகும் அடிவயறு கனத்துவிடும் இதனைப்போக்க களிமண்ணை நெகிழ அரைத்து கால் அங்குல கனம் வயற்றின் அடிபாகத்தில் விளக்கெண்ணெய் லேசாய் தடவி அதற்குமேல் கட்டிவிட வீக்கம் குறைந்து விடும் இதன் விபரம் களிமண் சிகிச்சையில் பார்க்கவும்.

வெட்டை

பெண்களுக்கு அதிக உஷ்ணத்தினால் சதா வெள்ளை பட்டுக்கொண்டிருக்கும் (லிக்கோரியா) என ஆங்கிலரும், வெட்டை என தமிழரும் கூறுவர். ஆங்கில முறையில் மீன் எண்ணெய் முதலான மருந்துகள் தரப்படுகின்றது அது ஒரு பயனையும் அளிப்பதில்லை. தமிழ் முறையில் தென்னங்கள்ளு அல்லது தென்னம்பாளை ரசம் காலையில் கொடுக்க குணமாகிறது சிற்சிலர் கூழ்பாண்ட லேகியத்திலும் குளிர்ச்சி எண்ணெய்களிலும் வெள்ளி பற்பம் சிங்கி பற்பம் சிலாசத்து பற்பம் முதலான மருந்துகளாலும் குணமடைகின்றனர்

வாத நோய்

வாயு ரோகங்களில் பல இருப்பினும் பீஜத்தில் உண்டாகும் வாயு நோயும் அவற்றிள் ஒன்றாகும் இதனை பெரும்பாலும் ஆப்ரேஷன் செய்கின்றனர்.

ஆப்பரேஷன் செய்யாமல் கௌபீனத்தை அடிக்கடி குளிர்ந்த நீரில் நனைத்துக் கட்டிக்கொண்டு வந்தால் இந்த நோய் நீங்குகின்றது. எத்தனையோ பேர் இச்சிகிச்சையால் குணமடைந்திருக்கின்றனர்.

வேறு வாத நோய் என்பது மாதம் ஒரு முறையோ அல்லது இருமுறையோ வீங்கிவிடும் இதனை நெரிக்கட்டி வரும் சுரம்

என்றும் யானைக்கால் சுரம் என்றும், வ்ாத நோய் என்றும் கூறுவர். (லிம்பாடின் எலிபெண்டைசிஸ்) என ஆங்கிலர் சொல்லுவர்

இதனைப் போக்க அருகம் வேரை பொடி செய்து 40 படி வெள்ளாட்டு பாலில் தினம் ஒரு படியாக விட்டுக் காய்ச்சி கடைசியில் புட்டியில் வைத்துக் கொண்டு 15 குண்டுமணி எடை வீதம் எடுத்து நாள் ஒன்றுக்கு 3 தடவை ஜலத்தில் 15 நாள் கொடுக்க வாத நோய் நீங்கும். இன்னும் இம்மருந்தால் பித்தரோகம், காமாலை, பாண்டு வீக்கம் இவைகளும் நீங்கும், பத்தியம் கிடையாது., 10 நாள் சாப்பிட எத்தகைய வாதமும் நீங்கிவிடும் இரண்டு வருஷத்திற்கு மேற்பட்ட வீக்கம் அப்படியே நின்றுவிடும்.

சுரம் என்பது என்ன?

நம் சரீரத்தில் சாதாரணமாக இருக்க வேண்டிய உஷ்ணம் 981/2 டிக்கிரி அதற்கு மேற்பட்டு 108 டிக்கிரி வரை உஷ்ணம் அதிகரித்திருப்பதை சுரம் என்று சொல்லுவார்கள்.

சுரம் அறியும் கருவியைக்கொண்டு ஆசனதுவாரத்தில் வைத்துப் பார்த்தால் 110 டிக்கிரியும், வாயில் நாவின் கீழ் வைத்துப் பார்த்தால் 108ம், அக்குள் சந்தின் உள் வைத்துப் பார்த்தால் 107ம் இருக்கும் பட்சத்தில் இந்நிலையில் கை கால் சில்லிட்டு மரணம் சம்பவிக்கும் என்பதை அறியலாம்.

சுமாராக 100 டிக்கிரிக்கு மேல் 104 டிக்கிரிவரை சுரம் அடிக்கலாம். 105, 106 அபாய சுரம், 106 டிக்கிரி வரை சரீரத்தில் உஷ்ணம் இருக்கும் அதற்கு மேல் இரத்த ஓட்டம் நின்று சீதளமாய் விடும் இதன் மேல் தேகத்தில் உயிர் நிற்க நியாயமில்லை. இந்நிலையில் உஷ்ண சம்பந்தபட்ட மருந்தை தேகத்தில் பூசுவதாலும் உள்ளுக்கு மருந்து கொடுப்பதாலும் தேகத்தில் ஊசியைகுத்தி மருந்தை ஏத்துவதாலும் பிழைப்பார்கள் என்று சொல்லுவதற்கில்லை.

சுரம் என்பது முக்கியமாய் இரணம் என்பதில் அடங்கிவிடும். சரீரத்தின் வெளிபாகங்களில் உண்டாகும் இரணங்களில் சீழ் சேர்ந்து இரத்தம் விஷமாக மாற்றுவிடில் சரீரத்தில் உட்பாகங்களில் இரணம் ஏற்பட்டாலும் அவ்விரணங்களின் உண்டாகும் சீழினால் இரத்தங் கொதித்துவிடும் இப்படி உள் வெளிபாகங்களில் உண்டாகும் இரணத்தால் சுரம் காணுகின்றது உடலினுள் எப்பாரிசத்தில் இரணங் காணப்படுகிறதோ அப்பாரிசத்தை அனுசரித்து சுரங்களின் பெயர்கள் கூறப்படுகிறது. வயற்றில் மலப்பையில் இரணம் ஏற்பட்டு உஷ்ணம் காணுமானால் அதை அதிசார சன்னிபாத சுரம் என்றும். கீழ்பாகக்குடலில் வயறு இவைகளில் இரணம் உண்டாகுமானால் அதைச் சன்னிபாத சுரம்என்றும் பித்தப்பையில் இரணம் உண்டாகுமானால் பித்த சுரம் என்றும் மண்ணீரல்லில் வீக்கமும் இரணமும் உண்டாகுமானால் விஷசுரம் என்றும் கல்லீரலில் இரணம் உண்டாகுமானால் கிருஷ்ண சுரம் என்றும் இரண்டு குரல்வளையில் இரணம் ஏற்படில் உஷ்ணசுரம் என்றும் பலபாகங்களில் ஏற்படும் இரணத்தைக் காட்டவே வித்தியாசமான பெயர்கள் வழங்கபட்டன.

நமது சரீரத்தில் தமிழர்களின் கணக்குப்படி 4448 வியாதிகள் இருக்கின்றன. அவை யாவும் வீங்கல். வெடித்தல். சுருங்கல் என்னும் இம்மூன்றினுள் அடங்கும் இவற்றுள் வெடித்தலினால் உண்டாகும் இடபேதத்தைக் காட்டுவதே பல பெயர்களால் அழைக்கப்படும் சுரங்களின் நாமமாகும்.சுரம் என்பது இரணம் என்று சொல்லுவதுபோல் இரணம் அல்ல. இரத்தத்தில் மாறுபடும் கிருமிகளே என்று கூறுவாறுமுளர்.

இரணங்களை ஆற்றச்செய்யும் சிகிச்சைகளில் பலவகை உண்டு. உஷ்ணத்துக்கு உஷ்ணம் கொடுப்பதும். விஷத்துக்கு விஷம் கொடுப்பதும் உஷ்ணத்துக்கு சீதளம் கொடுப்பதும் ஆன பல சிகிச்சைகளை கூறினார்கள் பற்ப செந்தூரங்கள் விஷத்துக்குவிஷம் கொடுத்து இரணத்தை மாற்றும் வகைகள். கியாழம் சூரணம் இவைகளைக்கொண்டு இரணத்தை ஆற்றுவது.

உஷ்ணத்துக்கு குளிர்ச்சியை தந்து ஆற்றுவ்து எதுவோ அது (சர்பத் முதலிய) யூனானி சிகிச்சை எனப்படும். இவ்வகை சிகிச்சைகளில் இரணத்தை ஆற்றுவது என்று கூறினார்கள்.

இம்முறைகளில் சித்தவைத்தியத்தை உணர்ந்த தமிழர்கள் இன்னின்ன பாகத்தில் உண்டாகும் இரணத்தை இன்னின்ன பாஷாணங்கள் பற்ப சிந்தூர சுன்னங்களால் நிவர்த்திக்கலாம் என்று கூறினார்கள் அவற்றுள் விஷ சுரமாகிய மண்ணீரலின் இரணத்தை சங்கு பாஷாணம். கௌரி பாஷாணம் இவைகளாலும் குரல்வளையில் உள்ள இரணத்தை தாளக பற்பம் செந்தூரம் இவைகளாலும் கல்லீரலில் ஏற்பட்ட இரணத்தை தாமிர பற்பம் நாக பற்பம் செந்தூரம் இவைகளாலும் தீனிப்பையில் உண்டான இரணத்தைப் பூரபற்பம் செந்தூரமும் சிரசில் ஏற்பட்ட இரணத்தை லிங்கபற்பம். செந்தூரம் இவைகளாலும் நிவர்த்திக்கலாம் என்று கூறியுள்ளார்கள்.

இந்த பாஷாணத்தினால் செய்யப்பட்ட மருந்துகள் இந்த சுரரோகங்களுக்கு மட்டும் கொடுக்கப்படுவதில்லை சுரரோகமில்லாத மற்றைய ஏனையரோகங்களை குணமாக்கும் உதாரணமாக சில பாஷாண மருந்துகள் குணம் செய்யும் வியாதிகளைக் கவனிப்போம்.

இரசம்

சிவ வீரியமென்கிற பாதரசத்தைச் சுத்திக்கிரமப் படி சுத்திசெய்து தோஷத்தைப் பூரணமாக போக்கி பின் சாரனை என்கிற சமஸ்காரம் செய்வதின் மூலம் ரத்திற்கு வீர்யம் என்ற பலத்தை அதிகரிக்கச் செய்து முறைப்படி முடிக்கப்பட்ட ரசபற்பம் ரச செந்தூரம். ரச சுன்னம் முதலான ரசத்தை முதன் மையாகக் கொண்டு தயாரிக்கப்பட்ட மருந்துகள் உடன் அழிவில்லாததாகச் செய்ய வல்லதாகும் சாதாரணமாக சுர ரோகம் முதல் குறை நோயானால் குஷ்ட ரோகங்கள் வரை குணம் செய்விக்கும் ஒரு லோகத்தை வேறு லோகமாக்கும் ரசவாத லோக சித்தி முதல் யோக சித்தியும் தேக சித்தியையும் கொடுக்க

வல்லது இந்த உயர்ந்த ரசத்துடன் மற்ற மருந்துகள் சேர்ந்து தயாரிக்கப்பட்ட மருந்தானது இதன் கலவையால் மற்ற மருந்துகள். பூரணத்துவம் பெற்ற சக்தி வாய்ந்த மருந்தாக பரிமளிக்கிறது.

இந்த ரசசம்பந்தப்பட்ட மருந்துகளால் முடிக்க பெற்ற மருந்துகள் நேத்திர சம்பந்தப்பட்ட நோய்கள் சர்ம சம்பந்தப்பட்ட கிரந்தி நோய் வயற்றுவலி சம்பந்தப்பட்ட எட்டுவித குன்மம் கீழ்பிடிப்பு சூலை தீராத இரணங்கள் பெரும்வியாதி பாரிசவாதம் முதலிய நோய்களைப் போக்கி விடுவதோடு தேகத்தில் காணக்கூடிய எல்லா வியாதிகளையும் போக்கி உடலுக்கு புஷ்டியை உண்டாக்கும் சத்தியுடையதாகும்.

அனுபானம்:- லேகியங்கள். நெய். வெண்ணைய் பனைவெல்லம் தேன்.

கந்தகம்

கந்து + அகம் என்பது கந்தகம் என்பார்கள். அதாவது கந்தகம் என்னும் தீயை அகம் உள்ளடக்கியிருப்பது என்பதாகும். இது எளிதில் தீ பிடிக்கும் தன்மையுடையது. இந்த கந்தகத்தில் கோழித்தலை கெந்தகம் என்றும் குழாய் கெந்தகம் என்றும். நெல்லிக்காய் கெந்தக மென்றும் பலவிதம் உண்டு பெரும்பாலும் உள்ளுக்கு சாப்பிடும் மருந்து வகைகளில் நெல்லிக்காய் கெந்தகமே சிறந்ததாகும்.

கந்தகத்துக்கு தீயின் குணம் அதிகமிருப்பதால் சிறிய அனலிலும் உருகிவிடும் தன்மையும் அதிக நெருப்புக்கு ரசத்தைப் போலவே ஓடிவிடும் தன்மையும் உண்டு ரச சாஸ்திரத்தை கற்றுணர்ந்தவர்கள் கெந்தாதிகளை ஓரளவு நெருப்புக்கு நிற்கவைத்து மருந்தாக முடிப்பார்கள்.

பாதரசத்தைப் போலவே இந்த கந்தகமும் தேகத்தைப்பற்றிய எல்லா நோய்களையும் போக்கும் தன்மையுண்டு ரசத்தை சிவனது வீரியம் என்னும் விந்து என்று

கூறுவதைப் போல் கந்தகத்தை சக்தியின் சுரோணிதம் நாதம் என்பார்கள் ரசத்தை சுத்தி செய்யும் விதிப்படி செய்யாமல் மருந்தர்க முடிந்தால் கெடுதலை விளைவிப்பதுபோல் கெந்தகம் செய்வதில்லை பசும்பாலில் அல்லது பசும் நெய்யில் கெந்தகத்தை உருக்கி 10 அல்லது 15 தடவை சாய்த்து எடுத்தால்கெந்தகம் சுத்தி அடைகிறது.

நம்மை தாய் தந்தையர்கள் எவ்வாறு காப்பாற்றுவார்களோ அதேபோல் காப்பாற்றி ரக்ஷிக்கும் சத்தி பெற்றது கந்தகமும் ரசமும். நமக்குத் தாய் கந்தகமும் தமக்கு தந்தை ரசமுமாகும் கந்தகம் சரியாக முடிக்கபட்ட மருந்து எல்லா நோய்களையும் போக்கும்கெந்தகத்தாலே வெள்ளியில் மஞ்சள் வர்ணம் ஏற்றுவோரும் உண்டு மஞ்சள் வர்ணம் ஏற்றுவதில் கெந்தகம் மிகவும் தனிச்சிறப்புடையது இதற்கு சிந்தூரத்தாதி என்றும் சிறப்புப்பெயர் கொடுக்கப்பட்டிருக்கிறது எவ்வகை செந்தூரங்களும் இதன் துணையின்றி ஆக்க முடியாது நேராக கெந்தகமாவது சேர வேண்டும் அல்லது கந்தக சத்தையுடைய சரக்குகள் கலந்தால் தான் எந்த சரக்குகளையும் சிவப்பு வர்ணமுடையசிந்தூரமாகச் செய்யும் ரசபற்பம் ரசசிந்தூரம் ரசசுன்னம் முதலிய வீரியம் வாய்ந்த மருந்தை சாப்பிட அஞ்சுபவர்கள் தாராளமாய் கந்தக பற்பத்தை பயன்படுத்தலாம்.

கந்தக பற்பம் சாப்பிடுவதனால் 18 விதமான சூலை சருமத்தைப்பற்றிய சொரி சிரங்கு முதல் சரீரத்தைக் குறைத்து அழுகி இத்து விழுகின்ற குட்ட ரோகங்கள் வரை உள்ளுக்கும் வெளி பிரயோகத்துக்கும் ஏற்ற மருந்து கந்தகமாகும்.

மற்றும் மலேரியா சுரமான விஷ சுரங்கள் முதல் சாதாரண சுர ரோகங்கள் வரை கந்தகத்தைப் பயன்படுத்தலாம் நரித்தலை வாதம். முடக்கு வாதம். பாரிசவாதம் முதலான வாதரோகங்களை குணம் செய்யும்.

மாந்தரோகம் வாயு சம்பந்தப்பட்ட ரோகம் கண்ட மாலை காமாலை வல்லைகட்டி கவிகை மகோதரம் குன்மம் ஆசனம் அடி தள்ளல் மலபந்தம் மந்த ரோகம் விஷ ரோகங்கள்

மூலரோகம் மேக வியாதிகள் ஈரல் வீக்கம் கட்டி மார் அடைப்பு இருமல் வாதசுரம் வாத அதிசாரம் சீதபேதி கப நோய்கள் கிரகணி ரோகம் சூதகத்தடை தேகத்தில் நோய் சம்பந்தப்பட்ட சர்ம வியாதிகள் பைத்தியரோகம் பித்தாதிக்கம் தூக்க மில்லாமை காசம் க்ஷயம் முதலான நோய்கள் குணமாவதுடன் ரத்தத்தை சுத்தம் செய்து கிழத்தனத்தைப் போக்கி வாலிபத்தன்மையும். முகப்பொலிவையும் தரும். கெந்தி சாப்பிட்டால் உந்தி குளிரும் என்ற பழமொழி உண்டு. அதாவது மூலாதாரத்தில் அதி உஷ்ணம் ஏற்பட்டு ரத்தம் வற்றி எலும்புருக்கியாகி ஊன்சத்தை போக்குவிக்கும் உஷ்ண சக்தியேயாகும் பசிதீபனத்தை உண்டாக்கும் கந்தகம் உஷ்ண சக்தி பெற்றதாக இருந்தாலும் சரீரத்தில் காணுகின்ற கணைச்சூட்டை நீக்குவதில் நிகறற்றதாகும் மனிதனை நீண்ட நாள் வாழ்க்கை கூடிய கல்ப மருந்துகளை பல இருப்பினும் ரசமும் கெந்தகமும் பிரதான கல்ப சரக்குகளாக சித்தர்கள் கூறுகிறார்கள்.

இந்த கெந்தக பற்பத்துக்கு வியாதிக்கு தக்கபடி நெய் வெண்ணெய் தேன் லேகியங்கள் முதலானவைகளில் அனுபானித்துக் கொடுக்கலாம்.

இந்த கெந்தக பற்பம் சாப்பிட்டு வருபவர்களுக்கு சிறிய வியாதிகள் உடன் குணமும் பலத்த நோய்கள் ஒரு மண்டலம் அருந்தி மருந்தை நிறுத்திய பின்பே நன்றாக ரத்தத்தில் வேலை செய்து நோய்களை போக்குகின்றது.

தாளகம்

தாளகத்தில் அதிஜிக்வாத ரோகம் தாளகக் கபநோய் குஷ்ட ரோகம் நடுக்கல் சுரம் க்ஷயகாயம் சுவாசகாசம் துஷ்டவிரணம் ஜலஸ்ராவம் சிரஸ்ரதபரோகம் தீரும்.

பொன்னரி தாரத்தினால்:- மந்தார சுவாசம் வாத சுரம் சத்திக்கிற க்ஷயம் செய்யான் விஷம் சருமத்தில் குஷ்டம் முதலியவை தீரும்.

அரிதாரத்தினால்:- க்ஷயகாசம் சிலேத்தும வாதம் அட்ட குன்மம் தீரும் மற்றும் மடலரிதாரத்தினால் தமக சுவாசம் காசம். சேத்துமம். கரப்பான் துஷ்ட விரணம் இவைகள் விலகும். மற்றும் மடலரிதாரமான பலகைக்கட்டி என்கிற இரண்டுவித கரடுகளாலும் உடலிலூறிய விஷங்கள் நீங்கும் இதனை பாகப்படி தீயிலிட்டு எடுத்த மருந்தே பெருத்த பயனுண்டாம் மற்றும் சிவந்த கல்லைப் போன்ற அரிதாரத்தால் குளர் சுரம் மகாவாத ரோகம் சரீரத்தில் குத்தலான வலி அரிப்பு தினவு கிஷப குஷ்ட ரோகம் இவைகளை நீக்கி குணம் செய்விக்கும்.

மேற் கூறப்பட்ட சரக்குகள் யாவும் ஏறத்தாழ ஒரே இனத்தையும் ஒரே குணத்தையும் உடையது என்பதை அறிதல் வேண்டும். இதனை இரசாயன முறைப்படி ஆராயும்போது பாஷாணம் கெந்தகமும் சேர்ந்திருப்பதாக தெரிகிறது இவ்விரண்டு சரக்குகளில் ஏற்றக் குறைச்சலான இயக்கத்தினால் மேற் கூறப்பட்ட பல இனங்களாகின்றன தாளகமே முதிர்ச்சியடைந்த பின் வெள்ளை பாஷாணமாக மாறுகின்றது என்றும் கூறினார்கள்.

ரச பாஷாண அவுஷதங்களில் தாளகத்துக்கு சமமான வஸ்து கிடையாது என்று வாதிப்போரும் உண்டு அப்பிரகத்தின் பெருமையை நாம் குறைத்து பேச முடியாத இருந்த போதிலும் ஒப்பற்ற மேன்மையை மறக்க முடியாது க்ஷயம் குஷ்டம் நுமோனியா காய்ச்சல் மேகத்தை யொட்டிய வியாதிகள் ஆகிய இவைகளில் இது நிகரற்று விளங்குகின்றது மேற் கூறப்பட்ட வியாதிகளில் வேறு எந்த மருந்தும் தாளகத்துக்கு நிகராக முடியாது நுரையீரல்களில் காணும் புண் இவைகளை மிக சீக்கிரத்தில் குணப்படுத்துகின்றது சரீரத்தில் காணும் மேகப்பற்றுகள் முதலியவைகளை நன்கு குணப்படுத்துகின்றது. இருமலில் நன்கு குணம் கொடுக்கிறது ஆனால் ஆஸ்மாவில் இது பலன் அளிப்பதில்லை. ரத்தவாந்தி மிகுந்திருக்கும் க்ஷய நோய்களில் இது மாத்திரம் தணித்து குணம் கொடுப்பதில்லை அந்தவகை நீங்கலாக மற்ற க்ஷய நோய்களின்

வகையனைத்திலும் இது வியாதியைப் பூரணமாகக் குணப்படுகின்றது ஆகவே இது க்ஷயரோகத்துக்கு மிக முக்கிய மருந்தாகின்றது. இம்மருந்தால் குணமாகிய பிறகு அந்நோய் திரும்பி வருவதில்லை க்ஷய நோய்களுல் சில சந்தர்ப்பங்களையொட்டி வேறு மருந்துகளையும் இதோடு சேர்த்துக் கொடுக்க வேண்டும். இதனை தனித்தும் அல்லது கூட்டு மருந்துகளுடன் சேர்த்தும் கொடுக்க வேண்டும் நோய்களுக்கு தகுந்தபடி ஆறுமாதம் முதல் ஒரு வருஷம் வரையில் உபயோகிக்க வேண்டியிருக்கின்றது. சாதாரண இருமல்களில் 15 நாள் முதல் 40 நாள் வரை உபயோகிக்கலாம். அனுபானம் தேன் நெய் லேகியம், கிஷாயம், சூரணம் முதலியவற்றுடன் கொடுக்கலாம்.

வெள்ளை பாஷாணம்

வெள்ளை பாஷாணத்தை நீர்விட்டு அரைத்துக் கடிவாயில் பூசச் சர்ப்ப விஷம் தேள் விஷம் இறங்கும் கிரமமாக உண்ணில் கபசுரம். திரிதோஷம் சந்திபாதம் துஷ்ட பீநசம் வாய்ப்புண் இவைகள் நீங்கும்

உபயோகிக்கும் முறை:- வெள்ளை பாஷாணம் என்பது சிமைச் சுண்ணாம்பைப் போலிருக்கும் ஜலம் பட்டால் உள்ளுக்குள் இழுத்துக் கொள்ளும் நெருப்பிலிட்டால் புகைந்துபோகும் இது தற்காலம் கிடைப்பது அரிது.

சங்கு பாஷாணம்

சங்கு பாஷாணம் வெண்மை நிறத்துடன் சங்கு போல் பளபளப்புடன் இருக்கும் நெருப்பிலிட புகையும் உடைத்துப் பார்க்க உள்ளே கண்ணாடிபோல் அதாவது படிகாரம் போல் நீரிக்கும் இதனை சத்தி செய்ய வேண்டும்.

அப்பிரகம்

அப்பிரகத்தில் கிருஷ்ண அப்பிரகம் வெள்ளை அப்பிரகம். தங்க அப்பிரகம் என பலவகை உண்டு. ரசத்திற்கு

அடுத்தபடியாக உயர்வான வஸ்து அப்பிரகமாகும் பரமசிவனுடைய தேஜஸ் ரசமாகும் அவ்வித்தே பார்வதியின் தேஜஸ் அப்பிரகமாகும். ரசத்திற்கு அடுத்தபடியாக பெருமை வாய்ந்த அப்பிரகதாகும். இது சரீரத்திற்கு பாதகம் செய்யாமல் சரீரத்தின் உள் உறுப்புக்களை பலப்படுத்துவதிலும் தளர்ந்த நரம்புகளை பலப்படுத்துவதிலும் உயர்ந்த ரசமான பிணி ஆகும் மற்றும் காய்ச்சல்களில் ஒப்பற்ற நன்மை அளிக்கிறது டைபாய்டு. நிமோனியா போன்ற விஷக்காய்ச்சலில் குணம் காணுகின்றது க்ஷயம் கிரகணி காய்ச்சலை தணிக்கும் குடல் அண்டம். பெருவயிறு மதுமேகம். பிரமியம் அதிமூத்திரம் சுரம் நமைச்சல். மேகரோகம். பைத்தியம். கண்நோய் வாத ரோகங்கள் தீரும். வீரிய விருத்தியை உண்டாக்கும் மற்ற பாஷாண மருந்துகளுட்ன் துணை மருந்தாக இதனை உபயோகிக்க குணம் காணுகிறது. தாதுபுஷ்டிக்கு இனையற்றதாகும். ஆண் பெண் ராஜ உறுப்புக்களை பலப்படுத்துகிறது. பெண்களின் மாதவிடாய் கோளாறுகளின்றி பாதுகாப்பு அளிக்கிறது.

அப்பிரக பற்பம் செய்ய குறைந்தது 30-புடங்களாவது போட வேண்டும்.

அனுபானம்:- நெய், தேன், வெண்ணை, லேகியங்கள் முதலான வகைகளில் கொடுக்கலாம்

கௌரி பாஷாணம்

அவுரி பாகல் இவ்விலைகளின் சாற்றால் சுத்தி செய்த கௌரி பாஷாணத்தில், மகாவாத ரோகங்களும் (அலசமும்) ஒதரோகம் அண்டவீக்கம் வாத கப சுரங்களும் போக்கும்.இதனை உபயோகிக்கும் முறை:- இந்த சரக்கானது எல்லா பாஷாண வர்க்கங்களிலும் கொடியது இதனை கையாடாமல் இருப்பதே உத்தமம் இதனை சிறந்த பண்டிதர்கள் சமயம் அறிந்து கொடுப்பது வழக்கம் எங்களமெனில்-கௌரி பாஷாணத்தை அவுரி இலைச்சாறு பாகற்காய்சாறு இவைகள் ஒவ்வொன்றிலும்

3-நாள் ஊறப்போட்டு எடுத்து அதற்கு சமனெடை சீமைபூங்கா கூட்டிக் கல்வத்திலிட்டு சிறு குழந்தைகளின் அமுரி விட்டு 2, 3 சாமம் அரைத்து கடுகு பிரமாணம் மாத்திரைகளாக செய்து சுரம் ஜன்னி முதலியரோகங்கள் எம்மருந்தாலும் தீராதவைகளுக்கு இம்மருந்து விரைவில் குணமாகும் இன்னும் மலம், ஜலம் கட்டித் தொண்டையில் கபம் நிறைந்து விண்ணுலகை எதிர்பார்க்கும் சமயத்தில் 2,3 மாத்திரையை உள்ளுக்குச் செலுத்த இரண்டொருதடவை வாந்தியும் பேதியுமாகி நல்ல ஸ்திதியை அடைவர் நாடியும் ஒழுங்குபடும் ஆகையால் எல்லா நம்பிக்கையும் கைவிடப்பட்ட சமயம் இதனை பிரயோகிக்கலாம்.

அயம் (இரும்பு)

இரும்பினாலாகின்ற மருந்தானது பித்த பாண்டு சிலேத்துமம், வெள்ளைகுட்டம், அதிகால ரோகம், வீக்கம், விஷாயாஜம், காமிலகம், வயிற்று நோய், விந்து நஷ்டம் ஆகிய இவைகள் நீங்கும். மலவிர்த்தியும் பசி தீபனமும் உண்டாக்கும் பலம் தரும்.

இதனை உபயோகிக்கும் முறையாவது: இதனைப் பாகப்படி பக்குவப்படுத்திக் கொடுக்க தாதுவின் துர்பலம் இரத்தக் குறைவு குடலிலுள்ள புண்கள், அதிசார பேதி, அஜீரணபேதி, கிராணிபேதி, காமாலை, சோபை, பாண்டு, முதலியவைகளை நீக்கும். இம்மருந்தானது உள்ளுக்குச் சென்றவுடன் இரத்தத்தில் கலந்து அதிலுள்ள சிவந்த அணுக்களை அதிகப்படுத்தி நல்ல தேக காந்தியை உண்டாக்கும். இம் மருந்தை கொடுக்கும் காலத்தில் ரோகிகளுக்கு பசியை அதிகப்படுத்தும் நாடியும் தீவிரமாய் நடக்கும். தேகம் கொழுமை பெறும். சிலருக்கு இரும்பு சம்பந்தமான மருந்து சென்றவுடன் வயிற்றெரிச்சல் உண்டாக்கும். அத்தகையோர்களுக்கு ஏதேனும் ஆகாரம் கொடுத்து 1/2 மணி சென்ற பின் மருந்தை கொடுத்தால் சாலச் சிறந்தது. இரும்பு சம்பந்தமான மருந்தை உட்கொள்ளும் போது புளியையும் புளிப்பு சம்பந்தமான பழவர்க்கங்களையும் சேர்க்கக் கூடாது.

இதனால் மருந்தின் குணம் கெடும். இம்மருந்தை நீடித்தும் கொடுக்க கூடாது. ஒரு முறை 10, 12 நாள் கொடுத்து விட்டு மருந்தை நிறுத்திவிட வேண்டும். அதன் பின் 2, 3 நாள் கழித்து ஏதேனும் ஒரு விரோசனத்தை (பேதி மருந்து) கொடுத்து 2, 3 முறை பேதியாகும்படி கவனித்தல் வேண்டும். இதனால் மருந்தின் குணம் மிகுதிப்பட்டு காணும். தனி அயச் செந்தூரத்தை அதிதூல ரோகத்திலும் அதிக ரத்த புஷ்டியுள்ள தேகிகளுக்கு கொடுக்க கூடாது.

மாக்ஷிகம்

மாக்ஷிகம் ஓர் உயர்ந்த சரக்கு என்பதில் ஆக்ஷேபமில்லை. அமிர்தம் போன்றதாகும். அயம், காந்தம் இவைகளை விட பன்மடங்கு குணம் இதற்கு இருப்பதால் அயம், காந்தம் கொடுப்பதற்கு பதில் மாக்ஷிகம் செந்தூரம் கொடுப்பது மிக உத்தமமாகும். இதில் சுவர்ண சத்தும் இருப்பதால் தங்கத்தின் குணங்களையும் இது கொடுக்கிறது. இது தங்க நிறமாகவும், சற்று கறுத்தும் பளுவாயும் இருக்கும். இதுவே சுவர்ண மாக்ஷிகம் எனப்படும். அல்லது தங்க நிமிளை என்றும் கூறுவார்கள். இந்த இனத்தில் மூன்று விதம் உண்டு. தங்க நிமிளை, வெள்ளி நிமிளை, வெங்க நிமிளை இந்த வகையில் பொன் நிமிளை என்றும் தங்க நிமிளை என்றும் ஸ்வர்ண மாக்ஷிக மென்றும் கூறுவர்.

இலிங்கம்

சிவந்த சாதிலிங்கம் முதலில் பாதரச உருகு ஆகையால் அந்த ரச குணத்தைக் கொண்டு பலவகை சுரம், அதிசாரம், ரூட்சை, சந்நிபாதம், அற்புத புண், அதிமூத்திரம், காணாகடிவிஷம், இருமல் கரப்பான், சிரங்கு, நுணாக்காய், கிரந்தி, மண்டல குஷ்டம் பாமை, சரீரகுத்தல், வலிவாத நோய், அந்தர் முகரோகங்கள், பாரிசவாதம் ஆகிய இவைகள் விலகும்.

வில்லைரச்சக் செந்தூரம்

வில்லைரசச் செந்தூரத்தால் தலைவலி நீர்க்கோர்வை தோஷங்களுடைய சுரங்கள் கிராணி, மயக்கம், சந்நி, கணசூலை முதலியவை குணமாகும்.

வீரம்

பாரிச வாய்வு, கீழ்வாய்வு, கீழ்பிடிப்பு முதலிய மிகவாத ரோகங்களுக்கும் ஆண்குறியில் காணும் கொருக்கு வியாதிகளுக்கும் புண், புரை, கிரந்திவளர்கின்ற துர்மாமிசங் களுக்கும் கொடுக்கலாம். இதனை சுத்தி முறைப்படி சுத்தி செய்தே உபயோகப்படுத்தல் வேண்டும்.

அனுபானம் - நெய் அல்லது பால்.

பூரம்

சுத்தி செய்த ரச கற்பூரத்தை நோய்களின் தன்மைக் கேற்றவாறு முலைப்பால், ஆட்டுப்பால், தேன் நெய் முதலிய அனுபானங்களில் கொடுக்க விஷ சுரங்களும் மாந்த சுரங்களும் பெண்களுக்கு காணுகின்ற சுரங்களுக்கும் மேகப் புண்களுக்கும் உபயோகிக்கலாம். இதனை குறைந்த அளவில் நல்ல வெல்லத்தில் வைத்து 7 நாள் கொடுக்க சகலவிதமான வாத பிடிப்பு பித்தசூலை, வயிற்று நோய், சிலேஷம், ஊரள் தம்ப வாதம் வாதாதிக்கம், சோணிதவாதம் வெள்ளை வெட்டை, குழந்தைகளுக்கு வயிற்றில் காணுகின்ற கல்வீரலின் வீக்கம், கட்டி முதலியவைகளை குணம் செய்கின்றது.

மனோசீலை

மனோசீலையால் குட்டம் அழுகல் உற்ற விரணங்கள் திமிருடன் உள்ள படைகள், கிரந்தி, புண்கள், சுரம், குளிர் அஜகள்ளிகாரோகம், குழந்தைகளுக்கு காணும் சுள்ளிப்பூவை

போன்ற நீண்ட கிரந்தி கொப்பளங்கள் சுவாச காசம், சிலந்தி விஷம் முதலியவைகள் நீங்கும். க்ஷயம், காசம் சுரம் குணமாகும்.

குறிப்பு :- இதனை தனியாக உள்ளுக்கு கொடுப்பது கிடையாது. இதனை இஞ்சி சாறுவிட்டு அரைத்து வில்லைகள் செய்து உலர்த்தி வைத்துக் கொள்ளச் சுத்தியாகும். இதனை இதரச் சரக்குகளுடன் கூட்டி மாத்திரைகளாகச் செய்து உபயோகிப்பதுண்டு.

மிருதார்சிங்கி

மிருதார் சிங்கியினால் உடம்பு எங்கும் பரவுகின்ற பித்தம், இரணம், கரப்பான், புண் கிரந்தி கூட்டம் மகாவிரணம் இவை யாவற்றையும் குணம் செய்விக்கும்.

காந்தம்

காந்தத்தால் வீக்கம், குன்மம், காமாலை, பிரமேகம், பாண்டு, முத்தோஷம், வெள்ளைவீழல், சீதளம் வாதநோய் மந்தம் மகோதரம் விழிநோய் சலமேகம் நீராமைக்கட்டி இவைகள் போகும். பூரண ஆயுளை உண்டாக்கும். ஈரலுக்கும் மண்ணீரலுக்கும் வலிமை தரும் சோகை குன்மம் திரிதோஷம் வெட்டை பிறமியம் நீராமை கல்லடைப்பு பாரிசவாய்வு பிடிப்பு நரம்புகளின் இழுப்பு தீரும்.

மண்டூரம்

மண்டூரத்தால் பாண்டு சோபை காமாலை குன்மம் வெண்குட்டம் சுவாச காசம், ஈரல்களிலுண்டாகும். நீர்க்கோவை ஆகிய பிணிகள் நீங்கும்.

தங்கம்

பொன்னால் தாவர விஷங்கள் தேஜசு மழுங்கல் அபினியாச சந்நிவாதம், பித்தம், க்ஷயம், பித்தசாசம் தேகவெப்பு

முதிர்ந்த கபதோஷம் க்ஷீண சுக்கிலம் விழிநோய் கோழைக்கட்டு இவைகள் போகும். பலத்தை அதிகரிக்கும். காமத்தை விருத்தி செய்யும். அறிவை பெருக்கும்.

வெள்ளி

இதனை தகடுகளாக அடித்து முறைப்படி புடமிட்டு எடுப்பதுண்டு. இதனை அரிசியெடை தேன் நெய் பாலாடை ஏதேனும் ஒன்றில் சாப்பிட்டு வர பசி தீபனத்தை அதிகப்படுத்தும். தேக உஷ்ணத்தைத் தணிக்கும். வெட்டைசூடு வெட்டை வாய்வு வெள்ளைபடுதல் நரம்புத்தளர்ச்சி வாத ரோகங்கள் மூளையின் சவவீனம் இவைகளை போக்கி பலத்தை தரும். நல்ல முறையில் முடித்த வெள்ளி பற்பத்தை லேகியங்களில் வைத்து அனுபானமாக சாப்பிட கண்களுக்கு ஒளியைத் தரும் கண்ரோங்களைப் போக்கும் தேகமும் முகமும் காந்தியுண்டாக்கும்.

வெள்ளிக் காடிக்காரம்

கடுமையான பேதி காலரா மூர்ச்சையுடன் வலி பற்கிட்டல் இசிவு கண் சம்பந்தப்பட்ட நோய்கள் பலவிதமான விஷகடிகள் கரப்பான் நீர் வடியும் கரப்பான் புண்கள் முதலிய ரோகங்களை நீக்கும். நரம்பு தளர்ச்சியை நீக்கி உடலுக்கு பலத்தைத் தரும்.

வெங்காரம்

வாதம் சுவாசம் ஸ்தாவர விஷம் கபம் இவைகளைப் போக்கி பசி தீபனத்தை அதிகரிக்கும் மலபந்தம் நீங்கும் பித்தம் அதிகரிக்கும் பெண்களின் மாத விலக்கு தோஷத்தை குணம் செய்யும் வாய் புண் வாய் நாற்றம் புண் கரப்பான் சொறி படை நமச்சல் ரத்த மூலம் இருமிரோகம் மூத்திரரோகம் பாம்பு விஷம் பல் சம்பந்தப்பட்ட நோய்கள் திரிதோஷத்தினால் தொந்திக்கப்பட்ட பல நோய்கள் அனைத்தையும் குணம் செய்யும். இதனை சோற்றுக் கற்றாழை சாற்றிலாவது

சிறியாநங்கை சாற்றிலாவது அரைத்து புடமிட மேற்கூறப்பட்ட நோய் யாவும் தீரும்.

சீனாக்காரம் அல்லது படிகாரம்

நீரை வறட்டும் உதிரப் பெருக்கை நிறுத்தும் ரணங்களின் துர்மாமிசத்தையறுக்கும் வாந்தி ஒக்காளத்தை சிறிய அளவில் அகற்றும். அந்த அளவில் வாந்தி ஒக்காளத்தை அதிகரிக்கும் இதைப் பொடி செய்து மூக்கில் போட பீனிசத்தை மாற்றும். இதை பெண் குறியில் வைக்க பெரும்பாடு உதிரத்தை நிறுத்தும். தண்ணீரில் கரைத்து தலையில் தேய்க்க பேன் சாகும். இதனை கொட்டைப் பாக்கோடு பொடி செய்து பற்களில் தேய்க்க பல்நோய் நீங்கும். இதனை தனித்து பொடி செய்து பாம்பின் வாயிலூத பாம்பு சாகும். தண்ணீரில் கரைத்து காதுகளில் விட செவிடு மாறும். வாய் கொப்பளிக்க பாதரச சம்மந்தப்பட்ட மருந்துகள் தின்றவர்களுக்கு ஏற்பட்ட வேக்காளத்தை அகற்றும். பல் இருகும் ஈறு பல்லுக்கும் இதை தலையின் கீழ் வைத்து நித்திரை செய்ய கனவு காணாது இதை பொரித்து அதற்கு சமன் கற்கண்டு உலர்ந்த நெல்லிக்காயின் மேல் தோல் சேர்த்து பொடித்து வேளைக்கு ஒரு விராகனிடை வீதம் பசும் மோரில் கலந்து சாப்பிட தீராத வெள்ளை வெட்டை நீரிழிவு நீர் கடுப்பு குணம் செய்யும் இன்னும் ரத்தபித்த ரோகங்களும் நாள்பட்ட அதிசார பேதிகளும் சீதபேதிகளும் கக்குவாய் இருமலும் வயிற்றுப்புண் வயிற்று வலிக்கும்படி காரத்தை கொடுக்கலாம். படிகாரம் சிறிது எடுத்து தண்ணீரில் கரைத்து மேலுக்கு போட்டால் ரத்தம் வருவது நிற்கும். அதிகமாய் ஜலம் விட்டுக் கரைத்து ரணங்களுக்கு போடலாம். வாய் ரணம் அதிக உமிழ் நீர் வடிதல் இதுகளுக்கு வாய் கொப்பளிக்கலாம். இதற்கு நீரை வரட்டும் குணம் இருப்பதால் வாய் நெஞ்சு உலர்ந்து தாகமெடுக்கும். மலத்தை இருக்கிவிடும். இதனை அதிக அளவில் சாப்பிட்டாள் குமட்டல் வாந்தியுடன் வயிற்றுக் கடுப்பு பேதி இந்த துர்குணத்தை உண்டாக்கிவிடும். வயிறு புண்ணாகிவிடும்.

ஆகவே இதனை 10 முதல் 20 கிரெயின் அளவு பெரியவர்களுக்கு கொடுக்கலாம். குழந்தைகளுக்கு 1 முதல் 5 கிரெயின் அளவு வரை கொடுக்கலாம். பசும்பால் இதன் துர்குணத்தைப் போக்கும்.

காவிக்கல், சுவர்ணக்காவி

இது ரத்தபித்தம் பெரும்பாடு மூலம் நாகப்தாபம் வாந்தி வாந்தி விக்கல் நெருப்பினால் உண்டான இரணம் அக்கி புண் கபம் சுரம் கண் நோய் முதலியவைகளைக் குணம் செய்யும். இந்த காவியையும் சீனாக்காரத்தையும் சமன் கலந்து அரைத்து உபயோகிப்பதும் உண்டு. இதனால் பல நோய்கள் குணம் செய்யும்.

நண்டுக்கல்

இதனால் நீர்சுருக்கு நீர், அடைப்பு கல்லடைப்பு, பிரமேகம் வெள்ளை முதலிய வியாதிகளை குணம் செய்யும். இதனை கல்வத்திலிட்டு நுணுக்கு முள்ளங்கி சார் விட்டு 5 நாளும் சிறுபீளைச் சார்விட்டு 5 நாள் அரைத்து உலர்த்தி வைத்துக் கொண்டு வேளைக்கு 2 முதல் 4 குன்றி எடை தினம் இரு வேளை சோம்பு கியாழத்தில் அல்லது நீர் முள்ளி கியாழத்தில் சேர்த்து கொடுத்து வர நீரடைப்பு கல்லடைப்பு மகோதரம் வீக்கம் குணம் செய்யும் மற்றும் இந்த நண்டுக்கல்லின் குணங்களாவது கண்களில் வடியும் நீரை வறட்டும் இதனை அரைத்து தேகத்தில் பூச படை சொறிகளைப் போக்கும். இதனை பொடி செய்து வெள்ளி சாமான்களை துலக்க பளபளப்பு அதிகரிக்கும்.

இருவி

காட்டில் விளைகின்ற இருவியினால் வாத சீதளத்தினால் உண்டாகும் வலிகள் மயக்கம் தாளக் கூடாத தலைவலி ரத்தக் கொதிப்பு ஸ்டீரியா சன்னி அடுத்து அடுத்து வரும் விக்கல் முதலியவைகளை குணம் செய்யக் கூடியதாகும். ஆனால்

இதனைத் தனியாக கொடுப்பது அரிது. இது நாபியைப் போல் விஷமுடைய சரக்காகும். இதனை சிறு துண்டுகளாக நறுக்கி ஒரு கோப்பையிலிட்டு சிறு குழந்தைகளின் சிறுநீர் விட்டு ஓர் இரவு ஊற வைத்து மறு நாள் வடித்து விடவும். இவ்விதம் 3 நாள் செய்து எடுக்க உயர்தரமான சுத்தியாகும். இதனைப் போல் பசுவின் நீராலும் சுத்தி செய்வது உண்டு.

Nirvisha நீர் விஷம்delphinum denudatum Jadwar.

இதனை ஜத்வார் என்று அரபி மொழியில் அழைப்பார்கள். இது வாதக் குடைச்சல் சுரம் பல் வலி வாதப்பிடிப்பு பாம்பின் கடி விஷங்கள் முதலியவற்றை குணம் செய்யும். மற்றும் இது காமத்தை தூண்டும் தேக வலிகளை குறைக்கும். அக்கினி பலத்தை அதிகரிக்கச் செய்யும் விஷத்தைப் போக்கும் பலத்தைத் தரும். இது விஷமுடைய சரக்கு. இதனை சுத்தி செய்தே உபயோகிக்க வேண்டும். இதனையும் இருவியைப் போல் சுத்தி செய்யலாம்.

நாபி

நாபிக்கு வசனாவி என்று பெயர். இதில் வெண் நாபி கருநாபி சென் நாபி ஆக மூன்று வகை உண்டு. இது மதுமேக வியாதிகளிலும். இந்திரிய ஸ்கலிதம் நீர் அடைப்பு பாரிச வாயு தலைவலி மூளையின் பலவீனம் சுரரோகங்கள் இஸ்டீரியா முதலிய பல வியாதிகளில் குணம் செய்கிறது. இது நரம்புகளுக்கு பலத்தைத் தரும். அதிக அளவில் கொடுக்கும் பட்சத்தில் கொடிய விஷத்தை உண்டு பண்ணும். வெண்ணாபியானது கருநாபியைவிட சற்று குறைந்த வேகமுடையது. இம்மருந்தை சுத்தி செய்வதானால் 3 நாள் மூலைபாலில் ஊற வைத்து பிறகு மிளகு கஷாயத்தில் வேக வைத்து எடுத்துக் கொள்ள வேண்டும். ஆட்டு பிச்சியில் 3 நாள் ஊர வைத்து எடுப்பது மேலான சுத்தியாகும்.

எட்டிக்கொட்டை

எட்டிக் கொட்டையை சுத்தி செய்தே மருந்துகளுடன் சேர்க்க வேண்டும். இதனை தனித்து உபயோகபடுத்தல் கூடாது. எட்டி விதையைக் குளிர்ந்த தண்ணீரில் விட வேண்டும். இவ்வாறு 10 தினங்கள் வரை மாற்றிபின் விதையின் மேல் தோலையும் உள் மூளையையும் நீக்கி ஈரம் இருக்கும் பொழுதே அரத்தால் ராவி தூள் செய்ய வேண்டும். அல்லது ஒரு சட்டியிலிட்டு காப்பி பொடி கலர் நிறமும் வாசனையும் வரும் வரையில் வருத்து எடுத்து தூள் செய்து மருந்துகளோடு சேர்க்க வேண்டும்.

இது உஷ்ணத்தை உண்டாக்கி வாய்வை அகற்றும். மலத்தை உடைத்து நீராக்கும். அத்துடன் சிறுநீரைப் பெருக்கி வெளியேற்றும். இது இருதயத்திலும் மூளையிலும் நன்றாக வேலை செய்து பல நோய்களைப் போக்கும். அவயவங்களுக்கு பலத்தைத் தரும். குறிப்பாக நரம்பு மண்டலங்களில் நன்றாக வேலை செய்து நரம்பு சம்பந்தமான வாதம் என்ற வாத ரோகங்களை போக்கும். ரத்தக் கொதிப்பு நோயில் நன்றாக வேலை செய்கிறது. இஸ்டீரியா என்ற வியாதிக்கு எட்டி மரத்தின் வடக்கு பக்கத்து வேரின் சூரணம் குணம் செய்வதைப் போல் இந்த எட்டி விதை சம்பந்தப்பட்ட மாத்திரைகளும் வேலை செய்து அந்நோயைக் குணப்படுத்துகிறது. பாம்பின் விஷ கடிக்கும் உபயோகிப்பதுண்டு.

சேங்கொட்டை

இந்த சேங்கொட்டையைப் பற்றி சித்தர் நூல்களில் சஞ்சீவிக்கு ஒப்பதாக கூறி இருப்பினும் இதனை நன்றாக சுத்தி செய்யாமல் மருந்தினங்களில் கூட்டுவதில்லை. இதனை தனித்தும் உள்ளுக்கு உபயோகிப்பதும் இல்லை. இதனை முதலில் மூக்கை நறுக்கிவிட்டு சுண்ணாம்புக் கல்லின் இடையில் வைத்து கார்டி நீர் தெளித்து நீற்றி எடுக்க வேண்டும். இவ்விதம் 7 தடவை செய்து எடுத்தக் கொட்டைகளை பசுவின் சாணிப்பால் சோற்றுக் கற்றாழை மடல் நீர் பானங்கள் பசுவின் பால் இளநீர்

முதலானவைகளில் ஒவ்வொன்றிலும் போட்டு ஒவ்வொரு சாமத்துக்கு குறையாமல் எரித்து எடுத்து வைத்த பின் உபயோகப்படுத்துவதே உயரிய முறையான சுத்தியாகும்.

சுத்தி செய்யும் பொழுது சர்வ ஜாக்கிரதையாக சுத்தி செய்தல் வேண்டும். இந்தக் கொட்டையின் பால் தேகத்தில் பட்ட இடத்தில் தீ சுட்டப் புண் போல் கண்டு அரிப்பு ஏற்படும். சிலருக்கு வீக்கத்தை உண்டாக்கி பேராபத்தையும் தரும். சுத்தி செய்யும்பொழுதும் பாலு எரிக்கும்பொழுது இதன் புகையும் மேல் படாமல் இருக்க வேண்டும்.

இது சகலவித நோய்களையும் போக்கும். பாரிச வாதம் கீழ்பிடிப்பு சூலை சிரங்கு மகோதரம் மூலம் விரண குஷ்டம் சருமத்திமிர் கடிவிஷம் க்ஷயம் குணமாகும்.

நமது உடல் - சில உண்மைகள்

மனித உடல் 65 சதம் தண்ணீராலானது. மூளை மண்ணீரல் தண்டுவடம் இவற்றில் 75 சதம் தண்ணீர், கண்களில் உள்ள பின்வழி ரசம் (Vitreous humour) என்ற திரவத்தில் 99 சதம் தண்ணீர் இருக்கிறது.

ஒரு மனிதன் நுரையீரலைப் பாய் போல் விரித்தால் அது 156 சதுர கஜம் பரப்பளவு உள்ளதாக இருக்கும். அதில் 500 மனிதர்கள் நிற்கலாம். 60 வயதுடைய ஒரு மனிதன் வாழ்நாளில் 96 லட்சம் கன அடி காற்றைத் தன் நுரையீரல்களுக்குள் செலுத்தியிருப்பான்.

மனித உடலிலுள்ள சிரைகளையும் (Veins) தமணிகளையும் (Arteries) இணைத்தால் மொத்த நீளம் 3,50,000 மைல் இருக்கும். இது பூமியை 14 முறை சுற்றிவர ஆகும் தூரத்திற்கு சமம்

பிறந்த குழந்தையின் நாடி ஒரு நிமிஷத்திற்கு 135 தடவை துடிக்கிறது. ஒரு வயதாகும் பொழுது 111 தடவையும் 6 வயதில்

96 தடவையும் 16 வயதில் 80 தடவையும் நடுத்தர வயதில் 72 தடவையும், 50 வயதுக்குபின் 60 தடவையும் துடிக்கிறது. புகை பிடிப்பவர்களின் நாடி புகை பிடிக்காதவர்களின் நாடியை விட ஒரு நிமிஷத்துக்கு 10 தடவையும் அதிகமாகத் துடிக்கிறது. நெப்போலியனின் நாடி ஒரு நிமிஷத்திற்கு 40 தடவைதான் துடித்ததாம்.

10 வயதான குழந்தைக்கு ஒரு சிறு காயம் பட்டால் அது குணமாக 6 நாட்களாகும். அதே சமயம் காயம் குணமாக 20 வயதான மனிதனுக்கு 10 நாட்களும், 30 வயதான மனிதனுக்கு 13 நாட்களும் 40 வயதான மனிதனுக்கு 18 நாட்களும், 60 வயதான மனிதனுக்கு 32 நாட்களும் பிடிக்கும்.

மனித உடலில் உற்பத்தியாகும் வெப்பம் தொடர்ச்சியாக வெளியேற்றப் பெறாவிட்டால் அதன் உஷ்ண நிலை 1 நாளில் 98.4 ஃபாரன் ஹீட்டுக்கு பதிலாக 185 டிகிரி ஃபாரன் ஹீட்டாக ஏறிவிடும்.

மனித உடலிலேயே மூக்கின் நுனிதான் மிகவும் குளிர்ச்சியான பாகம். இதன் உஷ்ண நிலை 70 டிகிரி ஃபாரன்ஹீட்.

சாதாரணமாக ஒரு மனிதனால் 84 மணி நேரம் தான் தூங்காமலிருக்க முடியும். 8 மணி நேர தூக்கத்தில் ஒரு மனிதன் குறைந்தபட்சம் 40 தடவையாவது தன் நிலையை மாற்றிக் கொள்வான்.

மணிக்கு 200 மைல் வேகத்தில் நகரும் பொருள்களை மனிதனால் 100 கஜ தூரத்துக்கு அப்பால் இருந்துதான் காண முடியும். இதற்கு காரணம் பார்வை நிலைப்பு (Persistence of Vision) என்ற விஞ்ஞான உண்மைதான் ஸினிமா சாத்தியமானதற்கும் இதுவே காரணம். மனிதன் கண்ணிமைப்பதற்கு எடுத்துக்கொள்ளும் நேரம் 1 செகண்டில் 16ல் 1 பங்கு இது தான் மனிதரால் மிகத்துரிதமாக செய்யப் பெறும்.

நிலத்திலே உள்ளவை பயிரிலே ஏறி மனிதனுக்கு உதவுகின்றன!

உடலுக்கு வேண்டிய உப்புகள்

இயற்கைத் தாய் நம் வாழ்க்கைக்கு அவசியமான பல உப்பு சத்துக்களை நிலத்தின் அடிப்பகுதியில் சேமித்து வைத்திருக்கிறாள். பல பயிர் பச்சைகளும் தமக்கு வேண்டிய போஷனையை நிலத்தில் இருக்கும் இந்த உப்புகளிலிருந்தே பெறுகின்றன. மனிதர்கள் தமக்கு வேண்டிய சக்தியைத் தானியங்கள். பருப்பு காய்கறிகள் பழங்கள் இவற்றின் மூலம் பெறுகிறார்கள். இந்த உப்புகள் மனிதருடைய ரத்தத்தோடு கலந்து வேறு வேறு இந்திரியங்களை வளர்க்க உதவுகின்றன.

இந்த உப்புகளுக்குள் கால்ஷியம் (சுண்ணாம்பு சத்து) மிகச்சிறந்தது சக்தி நிறைந்த இந்த உப்பு மனிதருக்கு சுத்தமான ரத்தத்தை உதவி, உடலுக்குத் தீரத்தைக் கொடுக்கிறது. பல் வலுவாய் இருப்பதற்கும் முக்கியமானது. பால், பாலேடு, டான்பிஸ், முட்டை, காய்ந்த அவரைப் பருப்பு உலுந்து காபேஜ் புளிச்சக்கீரை (கோங்கூர) காய்ந்த அத்திப்பழம், கொத்தவரக்காய், வெந்தயக்கீரை, காலிஃப்ளவர், லெட்யூஸ் கீரை, முள்ளங்கி, எலுமிச்சம்பழம், ஆரஞ்சு, திராட்சை, எள் இவற்றில் கால்ஷியம் அதிக அளவில் இருக்கிறது.

ஸோடியம் ஜீரண சக்தியை அதிகரிக்க உதவும் இதிலி ருந்து உடலுக்கு வேண்டிய இரும்பு சத்துக் கிடைக்கிறது. இதை உட்கொள்ளுவதால் செவிடு கண் பார்வைக் குறைவு, போன்ற குறைகள் எல்லாம் சரியாகிவிடுகின்றன. காய்ந்த பழங்கள், பால், பாலேடு, முட்டை, ஆப்பிள், புளிச்சக்கீரை, காபேஜ், தருப்பூசனி, பீட்ரூட், தக்காளி, பேரிக்காய், முதலியவற்றில் ஸோடியம் ஏராளமாக அடங்கி இருக்கிறது.

ஃபாஸ்ஃபரஸ் மூளைக்கும் நரம்புகளுக்கும் வேண்டிய போஷணையை கொடுத்து, எலும்பு, பல், மயிர் இவையெல்லாம்

வளரக் காரணமாகிறது. அதிகமாக மூளைக்கு வேலை கொடுப்பவர்கள் ஃபாஸ்ஃபரஸைக் கட்டாயம் சாப்பிட வேண்டும். இந்த சத்து உடம்பிலிருந்து குறையத் தொடங்கியவுடன் அவர்களுக்கு ஒச்சலும், சோம்பலும் உண்டாகும். வளர்ச்சி குன்றும். வாதம் பருப்பு, ஆப்பிள், புளிச்சக்கீரை, மீன் இவற்றின் மூலம் ஃபாஸ்ஃபரஸ் அதிகமாய்க் கிடைக்கும்.

கந்தகம் என்பது முக்கியமான மற்றோர் உப்புச் சத்து. இது உடலுக்குத் தானே வளம் தருவதோடு மற்ற உப்புக்களை ஜீரணம் செய்து கொள்ளும் சக்தியையும் குடலுக்கு உண்டாக்குகிறது. நம் உணவில் கந்தகத்தின் அளவு குறைந்து விட்டால் உடலில் அசுத்தப் பொருள்கள் அதிகரிக்கும். கல்லீரல் ஊக்கமாகவே வேலை செய்யாது. பாலேடு, முட்டை, மீன், மாமிசம், ஈஸ்ட், காபேஜ், சாக்கலெட், கர்ஜூரக்காய், புளிச்சக்கீரை, பால், உருளைக்கிழங்கு, வெங்காயம் இவைகளில் கந்தகச் சத்து நிறைந்திருக்கிறது.

உடலின் எடையைச் சமயெடையாகப் பாதுகாத்து, காயம்பட்ட சமயங்களில் ரணத்தைச் சீக்கிரம் ஆற்றுவது பொட்டாசியம் என்னும் உப்பு தினசரி உணவில் இதைச் சேர்த்துக் கொள்வதால் மலச் சிக்கல் நீங்கி உடம்புவலி போகும். இந்த சத்துக் குறைந்தால் மலச்சிக்கல் வந்துவிடும். உடம்பில் சிரங்கும் சொறியும் தோன்றும். கல்லீரலின் வேலை மந்தமாகும். உடம்பில் பட்ட காயம் ஆறாது. தக்காளி ஆலிவ் எண்ணெய் காபேஜ் ஆரஞ்சு எலுமிச்சம் பழம் திராட்சை உருளைக்கிழங்கு அன்னாஸ் வெள்ளெரிக்காய் இவற்றில் எல்லாம் பொட்டாசியம் அதிக அளவில் இருக்கிறது.

நரம்பு மண்டலங்களை ஒழுங்காய் வேலை செய்யும்படி ஊக்கி அவைகளுக்கு அவசியமான சக்தியைக் கொடுப்பது மக்னீஷியம் இது மனிதர்கள் தூக்கத்தின் சுகத்தை அனுபவிக்க உதவுகிறது. உற்சாகத்தைக் கொடுக்கிறது. இது உடம்பிலிருந்து குறைந்து விட்டால் மனதுக்கு அமைதி குறைந்து பித்தம்

அதிகரிக்கும். கோதுமைத் தவிர கொக்கோ தக்காளி லெட்யூஸ் கோங்கூறா பேரீச்சம் பழம் அத்திப் பழம் எலுமிச்சம் பழம் ஆரஞ்சிப்பழம் பீட்ரூட் காபேஜ் ஆப்பிள் இவற்றில் மக்னீஷியச் சத்து அதிகமாக இருக்கிறது.

மனித உடலின் சுரப்பிகளை எல்லாம் ஆட்டி வைப்பது அயோடின் உடம்பு கக்குகிற விஷப் பொருள்களால் மூளைக்கு அபாயம் நேராமல் காவல் செய்வது இதுதான் இந்தச்சத்து. உடலில் போதிய அளவுக்கு இல்லாவிட்டால் சுரபிகளெல்லாம் வேலை நிறுத்தம் செய்துவிடும். நோய்கள் தலை தூக்கும். தக்காளி காரட் கிட்னி அவரைப் பருப்பு வெள்ளைக் காபேஜ் வாழைப்பழம் லெட்யூஸ் உருளைக்கிழங்கு வெள்ளுள்ளி இவைகளில் அயோடின் சத்து நிறைந்திருக்கிறது.

குளோரின் என்பது உடலின் அசைவை அதிகப்படுத்துவது கீல்கள் தசைகள் இவைகளுக்குக் குளோரின் தான் புதிய சக்தியை உண்டாக்குகிறது. உடலில் கொழுப்பு வளர்வதை இது தடுக்கிறது பல் நோய் (பயோரியா) வராமல் தடுக்கிறது. உடலின் அசுத்தங்களை வெளியேற்றக் காரணமாக இருக்கும் குளோரினை 'உடலின் சலவைக்காரன்' என்று சொல்வதுண்டு. பால் பாலேடு தக்காளி, புளிச்சக்கீரை, முட்டை, வாழைப்பழம், பேரீச்சம்பழம், கோதுமை, காபேஜ், பேரிக்காய் இவற்றில் குளோரின் அதிக அளவில் இருக்கிறது.

ஃப்ளோரின் என்பது ஒரு வாயு. இது தொத்து நோய்களிலிருந்து உடலைக் காக்கிறது. எலும்புகளுக்கு உறுதி கொடுக்கிறது. இது இளமையை நீடித்து நிற்கச் செய்கிறது. உணவில் ஃப்ளோரின் சத்துக் குறைந்தால் கண் பார்வை மங்கும். பல் சொத்தை ஆகும். தொத்து நோய்கள் வெகு சீக்கிரத்தில் ஒட்டிக்கொள்ளும். இது தானியங்கள் எல்லாவற்றிலும் இருக்கிறது. பாலேடு பீட்ரூட், வெள்ளுள்ளி, காபேஜ், காலிஃபிளவர், புளிச்சகீரை, முட்டை இவற்றில் இருக்கிறது.

நரம்பு மண்டலங்களுக்குப் பலத்தைக் கொடுப்பது மாங்கனீஸ் இந்த சத்து உணவில் குறைந்து விட்டால் பைத்தியம் என்னும் நோய் உண்டாகும். வாதுமைப் பருப்பு முட்டை எலுமிச்சம் பழம் ஆரஞ்சிப்பழம் இவற்றிலிருந்து மாங்கனீஸ் சத்து கிடைக்கிறது.

நம் நாட்டு வைத்தியும் 1-ம் பாகம் முற்றிற்று.

சித்த மருத்துவம்

என்னும்

நல்வாழ்வுக் களஞ்சியம்

ஆசிரியர்

மருத்துவப் பெரும்புலவர்

கவிமணி டாக்டர். **ச. ஆறுமுகநாதர்**

அவர்கள் இயற்றியது

மேற்கண்ட நூல் 4-ஆம் பதிப்பு வெளியாகி விற்பனையாகிக் கொண்டிருக்கிறது. இவற்றில் உங்கள் இல்லற வாழ்க்கையில் ஏற்படும் சந்தேகங்கள் உபாதைகள் அனைத்திற்கும் தெளிவுபடுத்துவதுடன் உரிய மருந்துகளையும் கூறப்பட்டுள்ளது. மேலும் வரவிருக்கும் ஆர்.ஐ.எம்.பி. அரசினர் தேர்வுக்கு செல்வோருக்கு எளிய நடையிலான பாடத்திட்டங்களையும் தெளிவாக வகுத்துக்கொடுத்து உங்கள் வெற்றிக்குத் தக்க ஆசிரியராய் அமர்ந்திருந்து வழிகாட்டும் சொற்பப் பிரதிகளே கைவசம் உள்ளதால் உங்கள் பிரதியை இன்றே பெற்றிட முந்துங்கள்.

விலை ரூ.**30/-** வி.பி.பி. தபால் செலவு தனி

கிடைக்குமிடம் :

சண்முகானந்தா புக் டிப்போ

67, T.K. முதலி தெரு. சூளை. சென்னை - 600 112.

நம் நாட்டு வைத்தியம்

இரண்டாம் பாகம்

தீபாக்கினிச் சூரணம்

சரக்கு:- சீரகம். திப்பிலி. மிளகு. இந்துப்பு இவைகள் வகைக்கு 1 பலம் பெருங்காயம் 1/2 பலம் கருவேப்பிலை 1/2 பலம்.

செய்பாகம்:- பெருங்காயத்தை பொரித்தும் இந்துப்பு நீங்கலாக மற்றச் சரக்குகளைப் பொன்மேனியாக வருத்தும் நன்கு இடித்து சூரணம் செய்து வைத்துக்கொள்க.

உபயோகிக்கும் விதம்:- ஒரு வீராகனெடைச் சூரணத்தை முதல் அன்னத்துடன் போட்டுக் காய்ச்சிய பசு நெய்யை விட்டு பிசைந்து சாப்பிடவும்.

தீரும் வியாதி:- வயிற்றுவலி. வயிற்று எரிச்சல். உஷ்ண வாயுவினால் உண்டான பேதி. அஜீரணம் முதலியவைகள் நீங்கும்.

பத்தியம்:- இச்சா பத்தியம்.

நிலாவரைச் சூரணம்

சரக்கு:- சுக்கு. மிளகு. வாய்விளங்கம். ஓமம் இவைகள் வகைக்கு 1/4 பலம் நிலாவாரை 1 பலம்.

செய்பாகம்:- மேற் கூறப்பட்ட 5 சரக்குகளை நன்கு இடித்துச் சூரணம் செய்து வேளைக்குத் திரிகடிப் பிரமாணம் அந்தி சந்தி 20 நாள் சர்க்கரை கூட்டி கொடுக்கவும்.

தீரும் வியாதி:- மலபந்தம். வயிற்றுவலி. வயிற்று உப்புசம் தீரும்.

பத்தியம்:- இச்சா பத்திய்ம்.

பஞ்ச தீபாக்கினிச் சூரணம்

சரக்கு:- சுக்கு. மிளகு. அரிசிதிப்பிலி. ஏலம். கிராம்பு வகைக்கு பலம் 1 அஸ்கா சர்க்கரை பலம் 10.

செய்பாகம்:- மேற்கூறப்பட்ட ஐந்து சரக்குகளை இடித்து சூரணம் செய்து அஸ்கா சர்க்கரையை அரைத்து சூரணத்துடன் கலந்து பாட்டிலில் பதனபடுத்தவும்.

தீரும் வியாதி:- காலை மாலை திருகடி அளவு சாப்பிட பசி தீபனம் அதிகரிக்கும். பொய் பசியைப் போக்கும் வாந்தியை நிறுத்தும். அரோசிகத்தையும் கபத்தையும் போக்கும் வாத கப பித்தம் சீறாக்கும்.

சீதோபலாதிச் சூரணம்

சரக்கு:- மூங்கிலுப்பு 8 தோலா திப்பிலி 4 தோலா ஏலக்காய் அரிசி 2 தோலா லவங்கப்பட்டை 1 தோலா சர்க்கரை 16 தோலா.

செய்பாகம்:- சர்க்கரை நீங்கலாக மற்ற சரக்குகளை நன்கு இடித்துச் சூரணம் செய்து சர்க்க்ரையுடன் கூட்டி வைத்துக்கொள்க.

உபயோகம்:- வேளைக்கு 10. 15 குன்றின் எடை தேனில் மத்தித்து தினம் இரு வேளை கொடுக்கவும்.

தீரும் வியாதி:- கை கால் எரிச்சல் வறட்டு இருமல் தொண்டையில் கபம் மிகுந்து போராடும் இருமல் முதலி யவைகள் தீரும்.

பத்தியம்:- இச்சா பத்தியம்.

மும்மூர்த்திச் சூரணம்

சரக்கு:- சுக்கு. மிளகு. கருஞ்சீரகம் வகைக்கு பலம் 1.

செய்பாகம்:- இவைகளைத் தனித்தனியாக இளஞ்சூட்டில் வறுத்துத் தனித்தனியாக இடித்து சூரணம் செய்து வகைக்கு ஒரு பலம் வீதம் ஒருங்கு கூட்டி கல்வத்திலிட்டு நன்றாக அரைத்து சீசாவில் வைத்து பத்திரப்படுத்துக.

உபயோகிக்கும் விதம்:- வேளைக்கு திரிகடிப் பிரமாணம் காலை மாலை நாட்டுச் சர்க்கரைக் கூட்டி சாப்பிட்டு வர மார் அடைப்பு மார்பு எரிச்சல் அடி வயிற்றிலிருந்து சுவாசம் கிளம்பி மேல் மூச்சு வாங்குதல் குணமாகும். வீக்கம் வடியும் நீர் பிரியும்.

குழந்தைகளுக்கு சுகபேதிச் சூரணம்

சரக்கு:- சுத்தி செய்த சிவதைவேர் சூரணம் இந்துப்பு செவ்வியம் வகைக்கு 1 தோலா.

செய்பாகம்:- இவற்றை ஒன்று கூட்டிக் கல் வத்திலிட்டு மிருதுவாகும்படி அரைத்துச் சீசாவில் பத்திரப்படுத்துக.

உபயோகிக்கும் விதம்:- 6 மாதத்திற்கு உட்பட்ட குழந்தைகளுக்கு ஒரு சிட்டிகை பொடியை வெந்நீரில் கலக்கி கொடுக்க 2. 3 முறை பேதியாகும். கபம் இருந்தால் வாந்தியாக வெளிப்படும். குழந்தைகளின் வயதுக்குத் தக்கபடி ஏற்றக் குறைவாக உபயோகப்படுத்தவும்.

தீரும் வியாதி:- வாதம் பித்தம் சிலேத்மத்தை ஒழுங்குபடுத்தும் குழந்தைகளுக்கு நோய் அணுகாது.

கடுக்காய்ச் சூரணம்

சரக்கு:- கடுக்காய்த்தோல் 10 பலம் கருப்பு உப்பு 1 பலம்.

செய்பாகம்:- கடுக்காய்த் தோலை ஒன்று மிரண்டுமாக இடித்து ஒரு வாயகன்ற கோப்பையிலாவது அல்லது பழகின சட்டியிலாவது போட்டுச் சரக்கு மூழ்கக் கோவை இலைச்சாறு விட்டுத் தினந்தோறும் கிண்டிக் கொடுத்துக் கொண்டு

ரவிமுகத்தில் வைத்து வருக்க இது நன்றாய் உலர்ந்த பதத்தில் நன்கு இடித்துச் சூரணம் செய்து அதனுடன் கருப்பு உப்புத்தூளை கூட்டி இரண்டு மூன்று எலுமிச்சம் பழச்சாறு விட்டுப் பிசரி 2. 3 நாள் ரவி முகத்தில் வைக்கவும் இது நன்றாய் உலர்ந்த பின் மீண்டும் ஒரு முறை இடித்தாவது அல்லது கல்வத்திலிட்டு அரைத்தாவது சீசாவில் பத்திரப்படுத்துக.

உபயோகிக்கும் விதம்:- இந்த சூரணத்தில் வேளைக்குத் திரிகடிப்பிரமாணம் வாயிலிட்டு ஒரு வாய் ஜலம் சாப்பிடவும்.

தீரும் வியாதி:- கடினமான வயிற்றுவலி ஒருவேளை அல்லது இரண்டு வேளையில் குணமாகும். மற்றும் சுரக்கட்டி குன்மம் முதலியவைகள் சில நாள் நீடித்து சாப்பிட குணமாகும்.

ஆறுமுக சூரணம்

(வயற்றுக் கடுப்பு சீத ரத்தப்போக்கு நிற்கும்)

சரக்கு:- பிஞ்சு கடுக்காய் கடுக்காய்பூ, ஓமம் அதிவிடயம் சிறுநாகப்பூ கிராம்பு இவைகள் வகைக்கு ஒரு பலம்.

செய்பாகம்:- இவற்றை ஒரு பீங்கானிலிட்டு அது மூழ்க தயிரை விட்டு 6 மணி நேரம் சென்ற பின் அடுப்பிலிட்டு தயிர் சுண்ட எரித்து பின் வெய்யிலில் உலர்த்தி லேசாக வறுத்து தூள் செய்யவும்.

உபயோகம்:- வயிற்று கடுப்பின் கடும் வேதனையை போக்கி ரத்தம் சீதம் போக்கை நிறுத்தும்.

அனுபானம்:- தேன் அல்லது தண்ணீர்.

கட்டுவாதிச் சூரணம்

சரக்கு:- * சுண்டைக்காய் வற்றல் * மாங்கொட்டை பருப்பு * கறிவேப்பிலை இலவங்கப்பட்டை, நெல்லி வற்றல், மாதுளம் பழத்தோல், வெந்தயம், ஓமம்

செய்பாகம்:- இக்குறியிட்ட சரக்குகளை தீயாம்ல் வறுத்து எடுத்துக்கொண்டு மற்ற ஐந்து சரக்குகளை சேர்த்து சமனிடை எடுத்து இடித்து சூரணம் செய்து வைத்துக்கொள்க.

உபயோகிக்கும் விதம்:- இந்த சூரணத்தில் வேளைக்கு திரிகடிப்பிரமாணம் புளிப்பு மோரில் போட்டு சாப்பிட்டு வருக.

தீரும் வியாதிகள்:- அதிசாரம் மூலக்கிராணி வயிற்றுவலி பல காரணங்களால் உண்டான பேதி முதலானவைகள் குணமாகும்.

பத்தியம்:- எளிதில் ஜீரணிக்கக்கூடிய அன்னம் அல்லது மோர் சாதம்.

குழந்தைகட்கு சுகபேதி சூரணம்

சரக்கு:- சுத்தி செய்த சிவதைவேர் சூரணம் இந்துப்பு செவ்வியம் இவைகள் வகைக்கு 1 தோலா.

செய்பாகம்:- இவற்றை ஒன்றுக்கூட்டி கல்வத்திலிட்டு மிருதுவாகும்படி அரைத்தெடுத்து சீசாவில் இடுக.

உபயோகிக்கும் விதம்:- 6 மாதத்துக்குட்பட்ட குழந்தைகட்கு ஒரு சிட்டிகை எடுத்து வெந்நீரிலிட்டு கொடுக்க 2, 3 முறை பேதியாகும். கபம் இருந்தால் வாந்தியாகி வெளிப்படும். குழந்தைகளின் வயதுக்குத் தக்கபடி அளவை அதிகப்படுத்தி கொள்க.

தீரும் வியாதி:- வாத பித்த சிலேத்துமத்தை ஒழுங்குபடுத்தும் குழந்தைகளுக்கு நோய் அணுகாது.

சுகந்தமல்லிச் சூரணம்

சரக்கு:- பறங்கிச்சக்கை ஏலம், அதிமதுரம் சன்னலவங்கப்பட்டை கருஞ்சீரகம் கிராம்பு சீரகம் விதையில்லா திராட்சை சர்ஜிரா இவைகள் வகைக்கு ஒரு பலம் கொத்தமல்லி விதை 9 பலம்.

செய்பாகம்:- இங்கு கூறப்பட்ட 10 சரக்குகளில் கொத்துமல்லி விதையை மட்டும் நன்றாக ரவியில் உலர்த்தியும் மற்ற 9 சரக்குகளை பொன்மேனியாக வறுத்து யாவையும் இடித்து சூரணித்து சமனெடை கற்கண்டு சூரணம் கலந்து வைத்துக் கொள்ளவும்.

பிரயோகம்:- வேளைக்கு 1/2 தோலா விகிதம் தின. இரு வேளை வெந்நீரிலேனும் பாலிலேனும் கலக்கி சாப்பிட தொண்டைப் புண் விக்கல் வாந்தி காதடைப்பு தொண்டைக் கம்மல் அதிக வியர்வை விடுதல் சுக்கில சுரோணிதக் கெடுதல் மூத்திர எரிவு கைகால் எரிச்சல் அரோசிகம் முதலிய யாவும் குணமாக்கும்.

அசுவகெந்தி சூரணம்

சரக்கு:- கிராம்பு பலம் 1 சிறுநாகப்பூ பலம் 2 ஏலம் பலம் 3 இலவங்கப்பட்டை பலம் 4 இலவங்கப்பத்திரி பலம் 5 சீரகம் பலம் 6 தொத்தமல்லி விதை 7 பலம் மிளகு பலம் 8 அரிசி திப்பிலி பலம் 16 சுக்கு பலம் 32 அமுக்குரா கிழங்கு பலம் 64.

செய்பாகம்:- இங்கு கூறப்பட்ட பதினோரு சரக்குகளையும் ரவியில் உலர்த்தி இடித்து சூரணம் செய்து இவைகளின் மொத்த எடைக்கு நிகரான சீனி சர்க்கரை சேர்த்து வைத்துக் கொள்ளவும்.

பிரயோகம்:- வேளைக்கு 1/4 அல்லது 1/2 தோலா விகிதம் தினம் இருவேளை 20 அல்லது 40 நாள் பாலிலேனும் உட்கொள்ள மேக அஸ்திசுரம் அஸ்திவெட்டை சுவாசம் ஈளை பாண்டு மேக ஊறல் அரோசிகம் முதலியவை குணமாகும்.

அஷ்டாக்கினி சூரணம்

சரக்கு:- பெருங்காயம் பலம் 1 வசம்பு பலம் 2 திப்பிலி பலம் 3 சுக்கு பலம் 1 ஓமம் பலம் 5 கடுக்காய் பலம் 6 சித்தர மூலம் பலம் 7 கோஷ்டம் பலம் 8.

செய்பாகம்:- இங்கு கூறப்பட்ட 8 சரக்குகளையும் முறைப்படி இடித்துச் சூரணித்து வைத்துக் கொள்ளவும்.

பிரயோகம்:- வேளைக்கு 1/4 அல்லது 1/2 தோலா விகிதம் தினம் இருவேளை 20 அல்லது 40 நாள் பாலிலேனும் உட்கொள்ள மேக அஸ்திசுரம் அஸ்திவெட்டை சுவாசம் ஈளை பாண்டு மேகஊறல் அரோசிகம் முதலியவை குணமாகும்.

அஷ்டாக்கினி சூரணம்

சரக்கு:- பெருங்காயம் பலம் 1 வசம்பு பலம் 2 திப்பிலி பலம் 3 சுக்கு பலம் 4 ஓமம் பலம் 5 கடுக்காய் பலம் 6 சித்தரமூலம் பலம் 7 கோஷ்டம் பலம் 8

செய்பாகம்:- இங்கு கூறப்பட்ட 8 சரக்குகளையும் முறைப்படி இடித்துச் சூரணித்து வைத்துக் கொள்ளவும்.

பிரயோகம்:- இதனை 1/2 தோலா விகிதம் தினம் இரு வேளை வாயிலிட்டு சிறிது தண்ணீர் சாப்பிட வயிற்றிலுண்டாகும் பற்பல சங்கடங்களை நிவர்த்தித்து அஜீரணத்தை நீக்கிப் பசிதீபனத்தை உண்டாக்கும்

காய்ச்சுக்கட்டி சூரணம்

சரக்கு:- காய்ச்சுக்கட்டி பலம் 3 கிராம்பு பலம் 2 இலவங்கப்பட்டை பலம் 3 ஜாதிக்காய் பலம் 1.

செய்பாகம்:- இங்கு கூறப்பட்ட நான்கு சரக்குகளையும் தனித்தனியே இடித்து சூரணித்து ஒன்று சேர்த்து வைத்துக்கொள்ளவும்.

பிரயோகம்:- வேளைக்கு 5 முதல் 10 குன்றி அளவு சூரணத்தில் நெய் சர்க்கரை முதலியவை கலந்து தினம் 3 நேரம் 3 நாள் சாப்பிட சீதபேதி ரத்தபேதி குணமாகும்.

அஷ்ட சூரணம்

சரக்கு:- சுக்கு பலம் 7 மிளகு பலம் 15 அரிசி திப்பிலி பலம் 9 ஓமம் பலம் 2 இந்துப்பு பலம் 5 கருஞ்சீரகம் பலம் 9 பெருங்காயம் பலம் 8 பெருஞ்சீரகம் பலம் 6.

செய்பாகம்:- காயத்தை மட்டும் நெருப்பு தணலில் பொரித்து எடுத்துக் கொள்ளவும் இந்துப்பை நுணுக்கி கொள்ளவும் மற்ற சரக்குகளை தனித்தனியே துணியில் தளர முடிந்து ஒவ்வொன்றுக்கும் 1/2 படி சுண்ணாம்பு கல்லின் இடையில் வைத்து தண்ணீர் தெளிக்கவும் நன்றாக சுண்ணாம்பு வேகும் அளவு வரைக்கும் தண்ணீர் தெளிக்கவும் சுண்ணாம்பு நன்றாக நீந்தி சூடு ஆறியபின் முடிச்சுகளை அவிழ்த்து உலர்த்தி எடுத்து சூரணிக்கவும் இந்த சூரணம் பலநோய்களை குணம் செய்ய வல்லதாகும்.

உபயோகம்: புளித்தெப்பம் அஜீரணம் பசியின்மை அரோசிகம் வயிற்றுவலி நெஞ்சுவலி வயிற்றுப்போக்கு வலி குன்மம் முதலான நோய்களை போக்கி பசி தீபனத்தை அதிகரிக்கும்.

கரிசாலை சூரணம்

சரக்கு : உலர்ந்த கரிசலாங்கண்ணி இலைச் சூரணம் 4 பலம் மிளகு 2 பலம் கொடிவேலிப் பட்டைச் சூரணம் 1/2 பலம் மண்டூரச் செந்தூரம் 4 விராகனிடை

செய்பாகம்: இங்கு கூறப்பட்ட நான்கு சரக்குகளையும் கல்வத்திலிட்டு நன்றாக அரைத்து மிருதுவான பதத்தில் சீசாவில் பத்திரப்படுத்துக.

உபயோகிக்கும் விதம் : இந்த சூரணத்தில் வேளைக்கு 1/4 1/2 தோலா எடை எடுத்து ஆழாக்கு பசுவின் மோரில் போட்டுக் கலக்கித் தினம் இருவேளை 3 அல்லது 5 நாள் கொடுக்கவும். இன்னும் இந்த பிரயோகத்தில் ஓமம், சுக்கு

சமனெடையாக எடுத்துப் பொன்மேனியாக வறுத்து இடித்து சூரணம் செய்ததை 2, 3 குன்றி எடை கூட்டிக்கொடுப்பது சாலச் சிறந்தது.

தீரும் வியாதி:- சோகை, பாண்டு, காமாலை, மகோதரம் இரத்த குறைவினால் ஏற்பட்ட வீக்கம் முதலியவைகள் தீரும்.

பத்தியம்:- வெள்ளாட்டுப்பால் அல்லது பசுவின் பால் சாதம். ஆரம்பமான நோயாக இருப்பின் புளிதள்ளி இச்சாபத்தியம்.

முகபேதிச் சூரணம்

சரக்கு:- சுத்தி செய்த நேர்வாளம் 1-பலம், கடுக்காய் தூள் 1-பலம்

செய்பாகம்:- இவை இரண்டையும் ஒரு துணியில் முடிந்து கொம்புகள்ளி மரத்தை குடைந்து அதற்குள் மேற்கூறிய முடிச்சை செலுத்தி அந்த குடைத்தெடுத்த தூளைக்கொண்டே அடைத்து மண்ணுடன் சாணத்தை கூட்டிப் பிசரி மேலே பூசி 40-நாள் விட்டு வைக்கவும். பிறகு எடுத்து உலர்த்தி கல்வத்திலிட்டு அரைக்கவும் அரைக்கும் தருணம்அரைப்பவர் மூக்கு வாய் முதலிய இடங்களில் பஞ்சுவைத்து கட்டிக்கொண்டும் கண்களுக்கு உஷ்ணம் தாக்காமல் இருக்கக் கண்ணாடி மூடி போட்டுக் கொண்டு அரைத்தல் நன்று இன்றேல் அரைக்க ஆரம்பித்த சில நிமிடங்களுக்குள் பேதியாக ஆரம்பித்து விடும் இப்படி அரைத்தெடுத்ததைக் காற்று நுழையாத கல்கார்க் சீசாவில் பத்திரபடுத்துக.

உபயோகித்தும் விதம்:- ஜலதோஷம் ஜலுப்பு தீராத மண்டையிடி சிரசில் உண்டான நீர் ஏற்றம் முக்வாதம் முதலியவைகள் தீரும்.

பத்தியம்:- பேதி அதிகமானாலும் கம்மியாக ஆனாலும் மோர் சாதத்தை தவிர வேறு ஒன்றும் சேர்க்க கூடாது பேதி அதிகமானால் மோரை அதிக அளவு கூட்டிக்கொள்க.

குறிப்பு: இந்த சூரணத்தை பொடி போடுவது போல் போடக்கூடாது நெடியை மட்டும் முகரவும்.

பேதி சூரணம்
(சுலப முறை)

சரக்கு:- சுத்தி செய்து வருத்தெடுத்த வாளம் பலம் 1 கடுக்காய்தோல் சூரணம் பலம் 2.

செய்பாகம்:- இவை இரண்டையும் கல்வத்திலிட்டு சூரணமாக அரைத்தெடுத்து பதனப்படுத்தவும்.

உபயோகம்:- இதனை தனியாகவும் மருந்து கொடுக்கும்போது மலம் போக்க வேண்டியிருப்பின் துணை மருந்தாகவும் உபயோகிக்கலாம்.

அனுபானம்:- காப்பி. தண்ணீர் வியாதிக்குத்தக்க கியாழத்தில் கொடுக்கலாம்.

தாளிசபத்திரிச் சூரணம்

சரக்கு:- சுக்குஃ திபபிலி கடுக்காய்த்தோல் கோஷ்டம் அக்கிராகாரம் சீரகம் வாய்விளங்கம் எலம் கிராம்பு சடாமாஞ்சில் இவைகள் வகைக்கு ஒவ்வொரு தோலா தாளிசபத்தரி 10 தோலா சோம்பு மிளகு லவங்கப்பட்டை நெல்லிவத்தல் தான்றிக்காய் யானை திப்பிலி தனியா சாதிக்காய் வால்மிளகு இவைகள் வகைக்கு ஒரு பலம்.

செய்பாகம்:- மேற் கூறப்பட்ட சரக்குகளில் தாளிசப்பத்திரி தோலா பத்து மற்றகரக்குகள் தோலா 1 (ஒன்றாகச் சேர்த்து) சிறிது இளஞ்சூட்டில் வெதுப்பி இடித்து சூரணித்து சமனெடை சர்க்கரைக்கூட்டி கலந்துக்கொள்க.

உபயோகிக்கும் விதம்:- வேளைக்கு திரிகடிப் பிரமாணம் அந்தி சந்தி தேனிலாவது பாலிலாவது அனுபானம் செய்க.

தீரும் வியாதி:- கூஷயம் காசம் ஈழை அஸ்திசுரம் அஸ்திவெட்டை தாகம் நெஞ்சுபுண் பித்தவெட்டை பித்தபாண்டு கிராணி அரோசிகம் பொருமல் விக்கல் கைகால் எரிவு தேக காந்தல் முதலியவைகள் குணமாகும்.

பத்தியம்:- இச்சா பத்தியம்

மாணிபத்திரகூல சூரணம்

சரக்கு:- வாய்விளங்கம் நெல்லிவற்றல் கடுக்காய் தோல் இவைகள் வகைக்கு பலம் 1 சுத்தி செய்த சிவதைவேர் பலம் 3 வெல்லம் பலம் 12.

செய்பாகம்:- 4 சரக்குகளை இடித்து தூள் செய்து கொண்டு வெல்லத்தையும் பொடி செய்து சூரணத்தில் கலந்து உரலிலிட்டு இடித்து கொள்ளவும்.

உபயோகம்:- காலை அல்லது மாலையில் ஒரே வேளையே போதுமானது.

அளவு:- கழற்சிகாய் பருமன்

இதன் குணம்:- அதி உஷ்ணத்தைப் போக்கும் மேல் நோக்கும் வாயுவை கீழ்நோக்கி வெளியாக்கும் பழைய மலம் கழியும் பித்தவாத வியாதிகள் குணமாகும்

அசுவகெந்திச் சூரணம்

சரக்கு:- அமுக்கிராவேர் 4 பலம் நீரடிமுத்து பருப்பு பரங்கிசக்கை கடுக்காய் நெல்லிவத்தல்மோடி இவைகள் வகைக்கு ஒரு பலம் கிராம்பு சாதிக்காய் சாதிபத்திரி இவைகள் வகைக்கு ஒரு விராகனிடை.

செய்பாகம்:- இங்கு கூறப்பட்ட 12 சரக்குகளையும் பொன்மேனியாக வாசனை கிளம்ப வறுத்து இடித்துச் சூரணம் செய்து 6 பலம் சர்க்கரைக் கூட்டிக் கலந்து வைத்துக்கொள்க.

உபயோகிக்கும் விதம்:- இந்த சூர்ணத்தில் வேளைக்கு திரிகடிப் பிரமாணம் அந்தி சந்தி தேனில் கொடுக்கவும்.

தீரும் வியாதி:- மேகசூலை மேகஊறல் தேகவாய்வு கை கால் குடைச்சல் தீரும்.

பத்தியம்:- புளிதள்ளி இச்சாபத்தியம்.

கற்கடகச்சிங்கி சூரணம்

சரக்கு:- கடுக்காய்பூ 15 விராகனிடை காய்ச்சுக்கட்டி 10 விராகனிடை வறுத்த சீரகம் 5 விராகனிடை சாதிக்காய் 5 விராகனிடை நெல்லிவத்தல் 5 விராகனிடை வறுத்த வெந்தயம் 20 விராகனிடை.

செய்பாகம்:- இங்கு கூறப்பட்ட ஆறு சரக்குகளையும் நன்கு இடித்துச் சூரணம் செய்துக்கொள்க.

உபயோகிக்கும் விதம்:- இந்த சூரணத்தை குழந்தைகளின் வயதுக்கு ஏற்றவாறு 1/4. 1/2 விராகளிடை அதனில் கலந்து கொடுக்கவும் தீரும் வியாதி. இந்தசூரணத்தை 2 அல்லது 3 வேளை கொடுப்பதற்குள் எத்தகைய பேதியும் கட்டும் குணம் செய்யும்.

பத்தியம்:- எளிதில் ஜீரணிக்கக்கூடிய அன்னம் அல்லது ஆரூட் மாவு கஞ்சி நல்ல உணவாகும்

பஞ்சாமிர்த சூரணம்

சரக்கு:- கடுக்காய்த்தோல் 4 கழஞ்சு திப்பிலி 2 கழஞ்சு சிற்றரத்தை 2 கழஞ்சு வால்மிளகு 8 கழஞ்சு ஜாதிக்காய் 3 கழஞ்சு

செய்பாகம்:- இங்கு கூறப்பட்ட 5 சரக்குகளையும் நன்கு உலர்த்தி இடித்துச்சூரணம் செய்துவைத்துக் கொள்க.

உபயோகிக்கும் விதம்:- தினம் இருவேளை திரிகடிப் பிரமாணம் தேனில் அனுபானம் செய்து கொடுக்கவும்.

தீரும் வியாதி:- க்ஷயரோகத்தில் உண்டாகிய சுரம். இருமல் இவைகளுக்கு கொடுக்கவும் அந்நோய்க்குறியபற்ப சிந்தூரங்களுக்கு துணை மருந்தாக அதாவது அனுபான சூரணமாகக் கொடுக்க மிக்க நன்மை பயக்கும்.

க்ஷயத்துக்கு சூரணம்

சரக்கு:- தூதுவேளை தக்கோலம் சாதிக்காய் வாலுளுவை கொடிவேலி கொன்னைபூ நிலப்பனைக் கிழங்கு இவைகள் வகைக்கு ஒரு பலம்.

சரக்கு:- இங்கு கூறப்பட்ட ஏழு சரக்குகளையும் நன்கு உலர்த்தி இடித்துச் சூரணம் செய்து வைத்துக் கொள்க.

உபயோகிக்கும் விதம்:- தாளக பற்பம் செந்தூரம் போன்ற இருமல் க்ஷயம் தீரக்கூடிய பற்பசெந்தூரங்களுடன் அனுபான சூரணமாக கொடுக்க துணை மருந்தின் உதவியால் க்ஷயம்காசம் சுலபமாகத் தீரும்.

சூரண அளவு:- முக்கழஞ்சு அளவாக கொள்க.

ஈளை, க்ஷயம், காசம், கஷ்டசுவாசம், வாய்வு

(சிலேத்மரோகம் 96க்கும் சூரணம் யூகி)

சரக்கு:- அரிசிதிப்பிலி 10 பலம் கடுகு பலம் 5 மிளகு 5 பலம் ஓமம் வலம்புரிக்காய் பிறண்டை லவங்கப்பட்டை லவுங்கப்பத்திரி கிராம்பு சுக்கு சீரகம் தாளிச பத்திரி திரிபலை ஏலம் சித்தர் மூலம் இவைகளை 15-ம் வகைக்கு 2 பலம்.

மேற்கூறப்பட்டவைகளை லேசாக வருத்தெடுத்து அல்லது ரவியில் நன்றாக காயவைத்து இடித்து சூரணம் செய்து கொள்ளவும்.

அனுபாணம்:- சர்க்கரை நெய் தேன் இவை மூன்றும் கலந்து கலப்பில் மேற்படி சூரணம் காசிடை காலை. மாலை

இரு நேரம் சாப்பிடவும். மேற்படி அனுபானம் தனித்தனியாகவும் சாப்பிடலாம்.

குணம்:- ஈளை கூயம் காசம் கஷ்ட சுவாசம் வாத ரோகம் முதலானதுகளை போக்கி ரக்ஷிக்கும் தாளக பற்பம் அல்லது மேற்படி ரோகத்துக்கு ஏற்பட்ட பற்ப செந்தூரங்கள் எது கொடுத்தாலும் அதற்கு இச்சூரணத்தை அனுபானமாகக் கொடுக்க மேற்படி ரோகங்கள் வெகு சுலபத்தில் குணமாவது திண்ணம்.

சுகபேதிச் சூரணம்

சரக்கு:- சூரத்தாவரை இலை 4 பலம் பிஞ்சு கடுக்காய் பலம் 2 சோம்பு பலம் 1 சுக்கு பலம் 1 இந்துப்பு பலம் 1.

செய்பாகம்:- பிஞ்சு கடுக்காயை மட்டும் நெய் தடவி வருத்தெடுத்து தோலை மட்டும் எடுத்துக் கொள்ளவும். அத்துடன் மற்ற சரக்குகளையும் இடித்து சூரணித்து பத்திரப்படுத்தவும்.

உபயோகம்:- 1/2 முதல் 1 டீஸ்பூன் சர்க்கரை கலந்த நீரில் சாப்பிட நன்றாக பேதியாகும் பெரியோர் சிறியோர் குழந்தைகள் கர்ப்பிணிகள் எல்லோரும் உபயோகிக்கலாம்.

சிருங்கபேராதிச் சூரணம்

(பித்த வாயு சம்பந்தமான சகலவித அஜீர்ணங்கள் வாய் அரோசம் வயற்றுப்புசம் வாந்தி பசியின்மை புளிச்சேப்பம் வயிற்றுவலி அஜீர்ண மார்வலி வயிற்று இரைச்சல் இவைகள் விரைவில் விலக)

(குரு பரம்பரையாக வந்த அனுபவ முறை)

சரக்கு:- இஞ்சி 8 தோலா சீரகம் 4 தோலா கொத்தமல்லி விதை 4 தோலா கடுக்காய்த்தோல் 2 தோலா இந்துப்பு 2 தோலா ஆக மொத்தம் 20 தோலா எலுமிச்சம் பழச்சாறு தோலா 20 அதாவது 8 அவுன்ஸ் அல்லது பக்கா 1/2 படி அளவு ஆகும்.

செய்முறை:- இலேசான இஞ்சியை தோல் நீக்கி புளியங்கொட்டை அளவுக்கு கண்டங்களாக்கி கொள்க. சீரகம் மல்லி கடுக்காய்த்தோல் இவைகளை சுத்தமாக நோம்பி எடுத்து ரவியில் உலர்த்தி எடுத்துக்கொள்க.

பழச்சாற்றில் இந்துப்பை பொடித்து துணியில் வடிகட்டி வாயகன்ற பீங்கான் பாத்திரத்தில் வைத்துக் கொள்க. அதில் இஞ்சி முதலிய எல்லாவற்றையும் போட்டு நன்றாக கலந்து ஒரு நாளில் மூன்று தரம் கிளறுக. பாத்திரத்தின் வாயை மெல்லிய துணியினால் வேடுகட்டி வெய்யிலில் வைக்கவும். நன்றாக உலர்ந்த பிறகு உரலில் இடித்து ஆர்கண்டி அல்லது வாயில் துணியில் வஸ்திரகாயம் செய்து அல்லது நெருக்க கண் சல்லடையில் சலித்து கண்ணாடி ஜாடியில் போட்டு சிருங்கபேராதிச் சூரணம் என்று பெயரும் தயாரித்த தேமயும் கடிதத்தில் எழுதி ஜாடிமேல் ஒட்டி வைத்துக் கொள்ளவும்.

அளவு:- சிறியோர் 3, 6 குன்றியெடை பெரியோர் 6, 12 குன்றியெடை ஒரு நாளில் 2, 4 தடவை அனுமானம் தண்ணீர் சாப்பிடவும்.

குணங்கள்:- பித்த வாயு சம்பந்தமான சகலவித அஜீர்ணங்கள், வாய் அரோசிகம் வயிற்று உப்பிசம் வாந்தி பசியின்மை புளிச்சேப்பம் வயிற்றுவலி அஜீரணத்தால் ஏற்பட்ட மார்வலி இவை விரைவில் அதிசயிக்கத்தக்க வீதத்தில் விலகும். சாதாரணமாய் சிறிது அஜீரணம் வரும்போலிருப்பின் 3, 4 வேளைகள் சாப்பிடலாம். பெரிய விருந்து உண்டபின் ஜீரணத்தில் சம்சய மேற்படாமல் இருக்கவும் முன் ஜாக்கிரதையாக 2 வேளை சாப்பிட்லாம்.

இந்த சூரணம் குடும்பத்தில் கைவசமிருந்தால் வயிற்றில் அஜீர்ண சம்பந்தமான பலவித நிலைகளில் மிகவும் உபகாரமாயிருக்கும். இந்த சூரணம் ஒவ்வொரு குடும்பங்களிலும் இருக்க வேண்டியதாகும்.

குறிப்பு : மேற்படி சிறுங்க பேராதிச் சூரணம் பிளட்ப்ரஷர் என்று ஆங்கில வைத்தியர்களால் கூறப்படும் ரத்த கொதிப்பு வியாதிக்கு குறைந்த அளவில் அதாவது 3 முதல் 6 குன்றியெடை எடுத்து தண்ணீர் சாப்பிட்டுவர ரத்த வேகம் குறையும். நெஞ்சுவலி. மயக்கம். திக்பிரமை. குணமாகும்.

குன்மகட்டிக்கு சூரணம்

சரக்கு:- வசம்பு கடுக்காய்தோல் இந்துப்பு இவைகள் வகைக்கு பலம் 2 பெருங்காயம் பலம் 1/2 யவாச்சாரம் பலம் 1/4 புளிப்பு மாதுளம் பழத்தின் தோல் பலம் 3.

செய்பாகம்:- இவைகளை இடித்து சூரணம் செய்து பதனப்படுத்தவும்.

உபயோகம்:- காலை, மாலை 1/2 முதல், 1 தோலா வரை வயது நோய்க்கு தக்கபடி சாப்பிட்டு வெந்நீர் சாப்பிடவும் 7 நாள்.

தீரும் நோய்:- குன்மக்கட்டியைக் கரைக்கும் மல பந்தத்தைப் போக்கும் வயிற்று வலியையும். வயிற்று பொருமலையும் நீக்கும் வாயு வன்மத்தையும் ஒழிக்கும். வயிறு, வீக்கத்தையும் வயிறு உப்புசத்தையும் குணமாக்கும்.

பத்தியம்:- மோர் கலந்த சாதம் சாப்பிடவும்.

பஞ்சகம சூரணம்

(உணவின் அஜீர்ணத்தால் வயிற்றில் ஏற்படும் உப்புசம் பொருமல் வலிகள் எல்லாம் விலகும். குடல் வாயு கலைந்து உணவு நன்கு ஜீரணமாகும். பசி தீவிரமாகும். மலசுத்தியாகும். சிறுநீர் பிரியும் உடல் வலி போகும். மூலவியாதி கூட விசேஷமாய் குறையும்.)

சரக்கு:- சுக்கு. கடுக்காய்த்தோல் அரிசித்திப்பிலி சிவதை வேர்பட்டை சுவர்சல உப்பு.

செய்பாகம்:- ஆக ஐந்து சரக்குகள் சமனெடை எடுத்துவெய்யிலில் உலர்த்தி எல்லாவற்றையும் சேர்த்து இடித்து மெல்லிய துணியில் வடிகட்டி வாயகன்ற கண்ணாடி ஜாடியில் வைத்து பஞ்சகம சூர்ணம் என்று பெயர் எழுதி ஜாடி மேல் ஒட்டி வைக்கவும்.

குறிப்பு:- கருப்பு வர்ணமாயிருக்கும் சிவதையின் வேர் நல்லது வெளுப்பு நிற சிவதை வேர் சிலாக்கியமில்லை. சுவர்சல் உப்பு கிடைக்காவிடில் வெடியுப்பை சேர்க்கலாம். மருந்து பூரண வீர்யமுள்ளதாகும்.

உபயோகங்கள்:- உணவின் அஜீரண்த்தால் வயிற்றில் ஏற்படும் உப்புசம் பொருமல் வலிகள் எல்லாம் விலகும். குடல் வாயு கலைந்து உணவு நன்கு ஜீரணமாகும். பசி தீவிரமாகும். மலசுத்தியாகும். சிறுநீர் பிரியும் உடல்வலி போகும் மூல உபாதிகூட விசேஷமாய்க் குறையும்.

அளவு:- 4. 20 குன்றியெடை அனுபானம் 3. 4 மணிக் கொருதரம் 1 நாளில் 2. 3 தரம் சாப்பிடலாம். மறுநாள் காலையில் மலசுத்தியாகும்.

பஞ்சமுக சூரணம்

சரக்கு:- மஞ்சள் சுக்கு ஓமம் சித்தரத்தை அரிசி திப்பிலி இவை ஐந்து சரக்கையும் சம அளவு எடுத்து ஒரு இரும்பு வாணாலியில் சிறிது நெய் விட்டு வெதுப்பி எடுத்து சூரணித்து. ஒரு கண்ணாடி சீசாவில் பதனப்படுத்தவும்.

உபயோகம்:- காலை மாலை திரிகடி. அளவு சூரணத்தை எடுத்து பசும் பால் அல்லது தேன் நெய் முதலிய அனுபானங்களில் சாப்பிடவும்.

தீரும் வியாதி:- மருந்தீட்டில் உண்டான இருமல் உஷ்ணத்தால் ஏற்படும் இருமல் கூடயகாச இருமல் வரட்டு இருமல் குணமாக்கும்.

அறுவகைச் சூரணம்

சரக்கு:- சீரகம் பெருஞ்சீரகம் கருஞ்சீரகம் சதகுப்பை சன்னலவங்கப்பட்டை அதிமதுரம் இவைகள் ஆறு சரக்கும் வகைக்கு 1/2 பலம் கொத்தமல்லி விதை 3 பலம் கல்கண்டு 6 பலம் இவைகளை நிறுவை செய்து தனித்தனியே இடித்து சலித்து ஒன்று கலந்து வாயகன்ற கண்ணாடி ஜாடியில் வைத்து அறுவகைச் சூரணம் என்ற பெயரை எழுதி ஒட்டி விடவும். சகல பித்த ரோகங்களும் தணிக்கும் மருந்தின் அனுபானத்துடனும் கொடுக்கலாம்.

அமிர்தவல்லிச் சூரணம்

சரக்கு:- சீந்தில் சர்க்கரை 1 பலம் அதிமதுரம் நெல்லி முள்ளி ஏலம் சீரகம் சந்தனம் சாதிக்காய் லவங்கப்பட்டை நிலபனைக் கிழங்கு நெருஞ்சில் வித்து இவைகளின் வகைக்கு சூரணம் பலம் 2 இவையாவையும் ஒன்று கலந்து பாட்டிலில் பதனப்படுத்தவும்.

உபயோகம்:- சீதசுரம் துர்பலம் மேக வியாதிகள் நாள்பட்ட கீல்வாதம் காமாலை பித்தம் இருமல் இந்திரிய ஸ்கலிதம் குன்மம் இரத்தபிரியம் பித்த சுரம் மாந்தசுரம் சர்ப்பவிஷம் பிரமேகம் மூத்திர கிருச்சுரம் சர்ம வியாதிகள் முதலிய நோய்களைக் குணம் செய்யும்.

அளவு:- 4 முதல் 20 குன்றி வரை நெய் தேன் பால் முதலியவைகளில்.

சண்டியாதி சூரணம்

சரக்கு:- சுக்கு ஆணை கொம்பின் அதிவிடயம் பெருங்காயம் கோரைக்கிழங்கு கசப்பு வெட்பாலையரிசி சித்திர மூலப்பட்டை இவைகள் வகைக்கு 2 பலம்.

செய்முறை:- பெருங்காயம் உயர்ந்த ரகமாக இருக்க வேண்டும். தூசியும் மரத்தூளும் நிறைந்துள்ள பெருங்காயம்

எடுக்கக்கூடாது. ஒரு இருப்பு கரண்டிய அடுப்பிலிட்டு பெருங்காயம் பூராவும் பூசினால் போல் இருக்கும் படிக்கு நெய்விட்டுப் பிறட்டி கொண்டு சிறுதீயில் வருக்கவும். (பெருங்காயத்தை சிறு துண்டுகளாக நறுக்கி வறுக்கவும்) மற்ற சரக்குகளை வறுக்காமல் சுத்தமாக எடுத்து கொள்ளவும்.

அளவு :- 6. 9 குன்றி எடை சாப்பிடவும்.

ஹரிதக்காதி சூரணம்

சரக்கு:- கடுக்காய்தோல் ஆணைக்கொம்பின் அதிவிடயம் இந்துப்பு ஸௌவர்சல் உப்பு அல்லது வெடியுப்பு வசம்பு பெருங்காயம் இவைகள் வகைக்கு 2 பலம்.

செய்முறை:- முன் முறைப்படியே செய்யவும்.

உபயோகம்:- 1, 2 முறையும் அதிசாரம் நாக்கில் ருசியின்மை நெஞ்சில் ஒருவித கரிப்பு மலத்தின் கனமதிகம் இக்குறியோடு கூடிய ஆமாதிசாரம் தீரும்.

மேற்கூறிய சண்டியாதி சூரணம் ஹரீதக்கியாதி சூர்ணம் இரண்டு ஔஷதங்களும் ஆமாதிஸாரத்தில் கைகண்டவைகள் கண்டவிதமாய் அமிர்தமாய் சாப்பிட்டதின் தோஷத்தினால் வயிற்றாலை ஏற்படுகிறது. அதிசாரத்தின் ஆமநிலையில் பேதியை நிறுத்தும் மருந்துகள் சாப்பிட கூடியது. இது விபரீத மேற்படும். பெருங்குடலில் சேர்ந்திருக்கும். கெடுதலை அடைந்துள்ள மலாம்சம் வெளியே செல்ல அனுமதிக்க வேண்டும். மேற்கொண்டு கெடுதல் தொடராமல் காப்பாற்ற ஜீரண சக்தியை வளர்த்து குடலில் கெட்டுள்ள வாயுவை சமனம் செய்து பாகம் தீவிரமாகும்படியான மேற்படி இரு சூரணங்களில் ஏதேனுமொன்று உபயோகிக்க குணம் பிறக்கும். அஜீர்ண பேதி ஆரம்பித்தவுடன் சூரணத்தை முதலில் 4 வேளை 3. 4 மணி நேரத்திற்கு ஒருதரம் வெந்நீரில் கலக்கி சாப்பிட வேண்டும். பிறகு மோரில் கலக்கி சாப்பிட வேண்டும். பசியேற்படும் மேலும் கீழுமாய் தனியாய் குடல் வாயு வெளியாகும். பேதி சீக்கிரத்தில்

அடங்கிவிடும். பிறகு 2. 3 வேளை தேனில் குழைத்து சாப்பிடவும். மலம் நன்கு கட்டுப்பட்டு சுலப நிலை ஏற்படும். சாதாரண அஜீரணமிருப்பதாக தோன்றினால் மேற்படி சூரணத்தை வெந்நீரில் கலக்கி கொஞ்ச அளவில் சாப்பிட்டால் குடல்வாயு கலைந்து பசிதீபனம் ஏற்படும். மூத்திரம் நன்கு பிரியும். மலபிரவர்த்தியாகாமல் பார்த்துக்கொள்ளும்.

குறிப்பு:- சீதக்கடுப்பு ரத்தக்கடுப்பு உள்ள மலப்போக்கில் உள்ளவர்களுக்கு கொடுக்க கூடாது. இந்த சூரணத்தில் கடுக்காய் இருக்கிறதே என்று சங்கை வேண்டாம். கடுக்காய் இதர திரவியங்களுடன் சேர்ந்து திவ்வியமான பாசன தீபன் பெற்ற சரக்கு ஆமாதிசாரத்தில் கைகண்ட உயர்ந்த மருந்துகள்.

வெள்ளை வெட்டை நீர்சுருக்குச் சூரணம்

சரக்கு :- படிகாரம் நெல்லி வற்றல் கல் கண்டு இவைகள் தூள் செய்தது வகைக்கு 1 பலம் யாவும் ஒன்றாக பொடி செய்து வைத்துக் கொள்ள வேண்டும்.

அளவு :- திரிகடி சூரணத்தை எடுத்து இளநீரிலாவது அன்ன நீரிலாவது இட்டு சாப்பிட்டுவர மூன்று நாளில் குணம் செய்யும். வெள்ளை நீடித்தால் கொடுத்துக் கொண்டுவர பூரண குணம் செய்யும். இதனால் சிறுநீர் எரிச்சல் கடுப்பு நீர் சுருக்கு வெள்ளை வெட்டை முதலிய வியாதிகள் குணம் செய்யும்.

பேதிச் சூரணம்

(சுலப முறை)

சரக்கு :- சுத்தி செய்து வருத்தெடுத்த வாளம் 1 பலம் கடுக்காய்த் தோல் 2 பலம்.

செய்பாகம் :- இவை இரண்டையும் தனித்தனியே இடித்து சூரணம் செய்து பின் ஒன்றாக கலந்து அரைத்து ஒரு பாட்டிலில் பதனப்படுத்தவும். இந்த சூரணத்தை தனியாக தேனில்

ஒரு குன்றி அளவு கொடுக்க பேதியாகும். மற்ற செந்தூர பற்பங்கள் கொடுக்கும் பொழுது இதனை அத்துடன் கலந்து கொடுக்க பேதியாகும். ஒரு முறை பேதியாகி வியாதியை உடன் கண்டிக்கும். ஆகவே இதனை துணை மருந்தாகவும் கூட்டிக் கொடுக்கலாம்.

மதுமேக சூரணம்

சரக்கு:- நெல்லி வற்றல் விரலி மஞ்சள் இவைகள் வகைக்கு பலம் 1.

செய்பாகம்:- இவை இரண்டையும் சூரணித்து வைத்துக் கொண்டு காலை மாலை திரிகடி அளவு சாப்பிட்டு வரவும். சர்க்கரை வியாதி என்னும் மது மூத்திர ரோகம் குணமாகும். சிறுநீர் அதிகம் போவதையும் குறைக்கும். மஞ்சகாமாலை நோய் குணமாகும்.

குறிப்பு : மேற்படி சூரணம் செய்வதற்கு பதிலாக வேறு முறை சர்பத்தாக காய்ச்சுவதும் உண்டு. அதாவது பசும் மஞ்சளின் சார் படி 1/4 பசும். நெல்லிக்காய்ச்சார் படி 1/4 சுத்தமான தேன் படி 1/4 இவைகளைக் கொண்டு சர்பத்தாக காய்ச்சி 1 டீஸ்பூன் காலை மாலை சாப்பிட முன் நோய் தீரும்.

சமய சஞ்சீவிச் சூரணம்

சரக்கு:- ஓம உப்பு 1/4 பலம் இந்துப்பு 1/8 பலம் படிகாரம் 1 பலம் எலுமிச்சம்பழ உப்பு 1/8 பலம் மெந்தால் வீசம் பலம்.

செய்முறை:- இவை யாவையும் கல்வத்திலிட்டு அரைத்தெடுத்து கல்கார்க் சீசாவிலிடவும்.

உபயோகம்:- சுரம் வயிற்றுபோக்கு 2 குன்றி அளவு தேனில் தரவும் பெரும்பாட்டுக்கு ஓரிலைத் தாமரையை அரைத்த விழுதில் தரவும். நீர் எரிச்சல் உஷ்ணத்திற்கு மோரில் தரவும். நெஞ்சுவலி வயிற்று வலி இருமலுக்கு வெந்தியம் தரவும்.

வயிற்றுபோக்கு நிற்க தேனில் தரவும். பொதுவாக தண்ணீரிலும் தரலாம்.

சுக்கு சூரணம்

சுக்கு 1 பலம் எடுத்து மேல்தோல் சீவி அதற்கு பிரண்டையும் உப்பும் சேர்த்து அரைத்து கலசித்து பூசி கரி நெருப்பில் சுட்டுவாட்டி எடுத்து இடித்து சலித்து எடுக்கவும். இதில் சிறிது எடுத்து மோரில் சாப்பிட அஜீரணத்தைப் போக்கி ஜீரண சக்தி அதிகரிக்கும். வயிற்று வலியைப் போக்கும். வயிற்று போக்கை போக்கும் வயிற்று போக்கை நிறுத்தும். பசி தீபனம் அதிகரிக்கும். நெஞ்சுவலி குணமாகும். இதனை குழந்தைகள் முதல் பெரியோர்கள் வரை உபயோகிக்கலாம்.

குழந்தைகளுக்கு ஏற்படும் குத்திருமலுக்கு சூரணம்

மிளகு சுட்ட சாம்பல் ஆடாதோடையிலையை சுட்ட சாம்பல் கடுக்காய்த்தோல் சுட்டசாம்பல் இவைகளை கல்வத்திலிட்டு அரைத்து ஒரு பாட்டிலில் வைத்துக் கொள்ளவும்.

உபயோகம்:- 1 முதல் 3. 4 குன்றி குழந்தைகளுக்கு தக்கபடி மேற்படி மருந்தை எடுத்து தேனில் குழைத்துக் கொடுக்க குழந்தைகளுக்கு உஷ்ண சம்பந்தத்தினால் ஏற்படும் குத்தி குத்தி உண்டாகும் வரட்டு இருமல் வயிற்றுவலி சளி இருமல் முதலிய வியாதிகள் குணம் செய்யும்.

குழந்தைகளுக்கு மஞ்சள் கருப்புச் சூரணம்

விரலிமஞ்சள் துண்டுகளைக் குப்பைமேனியிலைச் சாற்றில் 10 அல்லது 15 தினங்கள் ஊறப்போட்டு புடமிட கருப்பு நிறமாக இருக்கும். இதனை அரைத்து பத்திரப்படுத்துக.

உபயோகம்:- 1/4 அல்லது 1/2 குன்றி எடை எடுத்து காலை மாலை தேனில் கொடுக்க குழந்தைகளுக்கு மார்பில் நிறைந்துள்ள கோழைக்கட்டை நிவர்த்தி செய்யும். மூச்சு

திணரலை குணமாக்கும். குழந்தைகளுக்கு மிக முக்கிய மருந்தாகும்.

குழந்தைகளுக்கு வசம்பு சூரணம்

வசம்பு பெரிய துண்டுகளாக 5 எடுத்து இதன் மேல் பெருங்காயம் ஒரு பலத்தை தண்ணீர் விட்டு அரைத்து கவசம் செய்து ஒரு ஓட்டிலிட்டு மூடி சீலை செய்து 2 அல்லது 3 எருவில் புடமிட்டு எடுத்து அரைத்து பதனப்படுத்தவும்.

உபயோகம்:- குழந்தைகள் முதல் பெரியோர் வரை உபயோகிக்க கிராணி வாந்தி கழிச்சல் குழந்தைகளுக்கு காணும் எலும்புருக்கி குணமாகும்.

அனுபானம்:- தேன் அல்லது நெய்.

உபயோகம்:- பசி அதிகரிக்கும். ஜீரண சக்தியை உண்டாக்கும். குழந்தைகளை நன்றாக வளர்க்கும் தேகம் பூரிக்கும்.

வசம்பு சூரணம்

(வேறு முறை)

5 துண்டு வசம்புக்கு ஒரு பலம் ஓமத்தை தண்ணீர் விட்டு அரைத்து கவசம் செய்து முன்போல் புடமிட்டு எடுக்கவும்.

உபயோகம்:- குழந்தைகளுக்கு காணுகின்ற பல வர்ணங்களாக போகும் பேதி அஜீர்ணம் மந்தம் சுரம் சீதபேதி கழிச்சல் முதலான வியாதிகளை கண்டிக்கும். குழந்தைகளுக்கு மேற்படி இரண்டு முறைகளும் சஞ்சீவியேயாகும்.

குழந்தைகளுக்கு கற்ப மிளகு சூரணம்

ஒரு பலம் மிள்கை ஒரு பீங்கான் தகட்டில் பரப்பி அது மூழ்க வேலி பருத்தி சார் விட்டு 24 மணி நேரம் ஊரவிட்டு எடுத்து ரவியில் உலர்த்தி எடுத்து இடித்து அரைத்து வஸ்திரகாயம் செய்து பாட்டிலில் பதனப்படுத்தவும்.

உபயோகம்:- 2 முதல் 4 அரிசி எடை வரை குழந்தைகளுக்கு தேன் பால் அனுபானமாக கொடுத்து வரவும். குழந்தைகள் தயிர் பால் போல் வாந்தி எடுத்தால் மந்தம் அஜீரணம் பேதி மாந்த இழுப்பு கால் கை சில்லிடுதல் சுரம் வயிறு பக்கம் பள்ளம் விழும். அள்ளுமாந்தம் உப்பு மாந்தம் இழுப்பு முதலிய சகல வியாதியும் குணமாகும்.

கற்ப மிளகு சூரணத்தை பெரியவர்களுக்கு கொடுக்கலாம். வயிற்றுவலி அஜீரணம் அஜீரண பேதியாதல் வயிற்றில் வாயு தங்கி இரைச்சல் வலி முதலிய வயிற்று கோளாறுகள் வாயு தொந்தரவு நீங்க சாப்பிடலாம். அஜீரணத்தைப் போக்கி பசி தீபனம் உண்டாக்கும். திவ்விய அவுடதமாகும்.

சரஸ்வதி சூரணம்

வல்லாரை இலை உலர்த்தி எடுத்தது 13 பங்கு வசம்பு 1 பங்கு இவை இரண்டையும் இடித்து சூரணம் செய்து வைத்துக் கொண்டு காலையில் 5 அரிசி எடை எடுத்து தேனிலும் மாலையில் அதே அளவு பசும் பாலிலும் 20 நாள் சாப்பிடவும். இதனால் மந்த புத்தி உள்ள பள்ளி சிறுவர்களும் மூளை பலவீனப்பட்ட வாலிபர்களும் நரம்பு தளர்ச்சி அடைந்தர்வ களும் ஒரு இடத்தில் வைத்துவிட்டு வேறு இடத்தில் தேடிக்கொண்டு இருப்பவர்களுக்கும் மாணவர்களுக்கு ஞாபக சக்தியை உண்டாக்கும். மூளை நரம்புகள் பலம் உண்டாக்கும்.

லவங்கச் சூரணம்

கிராம்பு கருவாப்பட்டை, கடுக்காய்பூ மாசிக்காய் இவை யாவும் சமயெடையாக எடுத்து லேசாய் வறுத்து இடித்து வஸ்திரகாயம் செய்து பதனப்படுத்தவும்.

அனுபானம்:- குழந்தைகளுக்குப் பால் அல்லது தேனிலும் பெரியவர்களுக்கு தயிர் அல்லது நெய்யிலும் 1/4 தோலா வரை நாள் ஒன்றுக்கு 3 வேளை கொடுக்கவும்.

தீரும் நோய்:- இரத்தக் கழிச்சல் இரத்த வாந்தி குணமாகும்.

அலுப்பு மருந்து சூரணம்

சரக்கு:- சுக்கு அரிசி திப்பிலி கடுக்காய்த்தோல் சிவதை வேர் வெடியுப்பு இவைகள் வகைக்கு சமயெடை தனித்தனியே இடித்து சலித்து பின் கலந்து பாட்டிலில் பதனப்படுத்தவும்.

உபயோகம்:- இடுப்பு வலி, தலை வலி அலுப்பினால் ஏற்படும் கடுப்புவலி தேகம் பூராவும் ஏற்படும் வலி இருமல் கபம் முதலான வியாதிகளுக்கு திரிகடி அளவு எடுத்து வாயில் இட்டு சுடு தண்ணீர் சாப்பிடவும் காலையிலும் மாலையிலும் சாப்பிடவும்.

குறிப்பு:- தலை வலிக்கு மேற்படி சூரணத்தை பாலில் குழைத்து பற்றுபோட குணமாகும். இன்புளுன்ஸா சுரம் குணமாக்கும்.

பித்த ராஜாங்க சூரணம்

சரக்கு:- கொத்தமல்லி சூரணம் 6 பலம் சீரகம் அதிமதுரம் கிராம்பு கருஞ்சீரகம் சன்னலவங்கப்பட்டை சதகுப்பை இவைகள் வகைக்கு பலம் 1 அஸ்கா அல்லது குழவுசீனி 12 பலம்.

செய்பாகம்:- மேற்படி சரக்குகளை நன்கு சூரணித்து கலந்து விடவும்.

உபயோகம்:- சகல பித்த ரோகங்களுக்கு 1/2 டீஸ்பூன் அளவு பால் அல்லது தண்ணீர் இவைகளில் சாப்பிடவும். வெகு ருசியாக இருக்கும் மற்றும் தீரும் வியாதிகளாவது வயிற்று எரிச்சல் வாய் வயிறு புண் கண்டமாலை தொண்டைப்புண் நீர்க்கட்டு சீரகாந்தல் நீர் எரிச்சல் தேகம் பூரிக்கும் குளிர்ச்சி தரும்.

பால் முதுகீகன்

ரசாயன சூரணம்

சரக்கு:- நாட்டு அமுக்கிராக்கிழங்கு சீமை அமுக்கிரா கிழங்கு பால்மோதிக் கிழங்கு நிலப்பனைக்கிழங்கு தண்ணீர்விட்டான் கிழங்கு சீந்திக்கொடி பூனைக்காலி விதை நெருஞ்சிமுள் நெல்லிவத்தலின் தோல். அதிமதுரம் ஏலரிசி சாதிக்காய் கிராம்பு வகைக்கு பலம் 2 இவைகள் யாவும் சூரணம் செய்தே எடை போட வேண்டும். பின் அயசிந்தூரம் சிங்கு பற்பம் ஆமையோட்டு பற்பம் கற்பூர சிலாசத்து பற்பம் சோழிபற்பம் சங்கு பற்பம் இந்த பற்பங்கள் வகைக்கு பலம் 1/2 அரைத்தெடுத்த அஸ்காசீனி பலம் 30.

செய்பாகம்:- சூரணங்களை நன்றாக வஸ்திரகாயம் செய்து அத்துடன் மேற்கூறப்பட்ட பற்ப வகைகளையும் சர்க்கரையுங் கலந்து சன்ன சல்லடையால் 15 முறை சலித்து யாவும் ஒன்று கலந்தபின் ஒரு கண்ணாடி பாட்டிலில் எடுத்து பதனப்படுத்தவும்.

உபயோகம்:- பால் தேன் நெய் அல்லது தண்ணீர் முதலிய அனுபானங்களில் கொடுக்கலாம்.

அளவு:- குழந்தைகளுக்கு 1/4 1/2 ஸ்பூன் அளவு பெரியவர்களுக்கு 1 முதல் 2 ஸ்பூன் அளவு சாப்பிடலாம்.

இதன் குணம்:- தேகத்தை போஷிப்பதில் நிகரற்றது. சகல வியாதிகளையும் குணம் செய்யும். புஷ்டியை உண்டாக்கும் தேராத குழந்தைகளை தேற்றும். எலும்புருக்கி நோய் க்ஷயம் காசம் யாவும் குணம் தரும்.

ரசாயன கல்ப சூரணம்

சரக்கு:- பவள பற்பம் விராகனிடை 1 வெங்காரபற்பம் விராகனிடை 2 மான் கொம்பு பற்பம் விராகனிடை 3 ஆமையோட்டு பற்பம் விராகனிடை 4 முத்து சிற்பி பற்பம் விராகனிடை 5 கருடக்கல் பற்பம் விராகனிடை 6 படிகார பற்பம்

விராகனிடை 7 சங்கு பற்பம் விராகனிடை 8 பலகரை பற்பம் விராகனிடை 9.

செய்பாகம்:- மேற்கூறப்பட்ட பற்ப வகைகள் எந்த முறைப்படி போடப்பட்டிருந்தாலும் குற்றமில்லை. முடிந்த பற்பங்களை எடை சேர்த்து மொத்த எடைக்கு சமன் சீந்தில் சர்க்கரை கலந்து வைத்துக்கொள்ளவும்.

தீரும் நோய்:- க்ஷயம். காசம். சூலை. இருமல். இளைப்பு. அஸ்திகாங்கை. கைகால் எரிச்சல். வயிற்றுவலி. மார்வலி. பக்க வலி. கல்லடைப்பு சதை அடைப்பு. நீர்தாரை குற்றங்கள். கல்லீரல் கட்டி. குழந்தைகளுக்கு ஏற்படும் கல்லீரம். குலைகட்டி. வீக்கம். குழந்தைகளுக்கு ஏற்படும் பலவித நோய்கள் வாதரோகம் யாவும் குணம் செய்யும்.

அனுபானம்:- பால். வெண்ணெய். நெய். தேன்.

கந்தக ரசாயன சூரணம்

பசும்பாலில் சுத்தி செய்யப்பட்ட கந்தகம் பலம் 10. இலவங்கப்பத்திரி. கிராம்பு. இலவங்கப்பட்டை. ஏலக்காய். சீந்திக்கொடி. கடுக்காய்த்தோல். கழற்சிப் பருப்பு. நெல்லிப் பருப்பு. சுக்கு கரிசாலை. இஞ்சிச் சாறு இவற்றின் கஷாயத்தில் ஒவ்வொன்றிலும் 8 முறை பாவனை செய்து பிறகு கெந்திக்கு சம எடை சர்க்கரை சேர்த்து கலந்து வைத்துக் கொள்ளவும்.

அளவு:- 1/2 முதல் 1 வரை விராகனிடை வீதம் ஒரு வேளையாக சாப்பிட்டு வர ரெத்த தோஷம். நரம்பு பலவீனம். சருமரோகம். சகலவிதமான மேகரோகம் சூலை 18 குஷ்டம் முதலிய நோய்களை குணம் செய்யும்.

சித்தரச சூரணம்

சரக்கு:- சுத்தி முறைப்படி சுத்தி செய்யப்பட்ட பாதரசம் பலம் 1. தில்லை மரத்தின் பட்டை பலம் 5.

செய்பாகம்:- பட்டையை உலர்த்தி இடித்து சூரணம் செய்து கல்வத்திலிட்டு அத்துடன் சுத்தி செய்த ரசத்தையும் விட்டு நன்றாக மைனம் போல் ஒற்று கலக்க அரைத்தால் இரண்டும் நன்றாக கலந்துவிடும். சுமார் 7 மணி நேரமாவது அரைத்தாக வேண்டும் என்பது கவனத்துக்குறியதாகும். இங்ஙனம் அரைத்தெடுத்த மருந்து முடிந்து விட்டதும் இம்மருந்தை எத்தனை ஆண்டுகள் வேண்டுமானாலும் சாப்பிடலாம். வாய் பிடிப்பதில்லை யாதொரு பயமின்றி சாப்பிடலாம். தேகம் வலிமை பெறும்.

அளவு:- தினம் காலை மாலை 2 குன்றி முதல் 5 குன்றி நிறை வரை பால் மோர் நெய் முதலிய அனுபானங்களில் சாப்பிட்டு வரலாம்.

தீரும் நோய்:- கண் சம்மந்தப்பட்ட ரோகங்கள் கிரந்தி 8 வித குன்மரோகம், தீராத பெரும் வியாதி குஷ்டம் அழுகியரிணம் நீண்ட நாள் ஆறாத ரணங்கள் 18வித சூலை கீழ்பிடிப்பு நோய்கள் க்ஷீணவாத நோய் முதலிய நோய்களை குணம் செய்விக்கும்.

சுராங்குச சூரணம்

நெல்லிக்காய், கடுக்காய், அரிசி, திப்பிலி, சித்தர மூலம் வேர்பட்டை இவை வகைக்கு பலம் 1 இவைகளை இடித்து சூரணம் செய்து வைத்துக்கொள்ளவும்.

அளவு:- திரிகடி அளவு சூரணத்தை தேனிலாவது சுரரோகத்துக்குறிய செந்தூரங்களிலாவது அனுபானமாக உபயோகப்படுத்தலாம்.

குணம்:- தனித்த இந்த சூரணமே சகல சுரரோகங்களையும் குணம் செய்து மலத்தை வெளியாக்கி மந்தத்தைப் போக்கி பசியை தூண்டி ஜீரணமாக்கும்.

வேறுமுறை

கடுக்காய் தோல் விராகனிடை 5 நிறுத்தெடுத்து நன்றாக சூரணம் செய்து பின் சாதிலிங்கம் விராகனிடை 1, சகஸ்திரபேதி விராகனிடை 1, சுத்தி செய்த கருநாபி சூரணம் விராகனிடை 1, இவற்றை மேற்படி தூளோடு சேர்த்து கல்வத்திலிட்டு நன்றாய் அரைத்து வைத்துக்கொள்ளவும்.

அளவு:- ஒரு பனவெடை தேனில் காலை மாலை கொடுக்க சுரரோகம் 64-ம் குணம் செய்யும்.

சிவனார் அமுதம்

சரக்குகள்:- இருவி பலம் 1, மனோசிலை பலம் 1, ரசம் பலம் 1, வெங்காரம் பலம் 1, வெண்ணாவி பலம் 1, கந்தகம் பலம் 1, சுக்கு பலம் 1, அரிசி திப்பிலி பலம் 1, மிளகு பலம் 8.

செய்முறை:- இருவியையும் வெண்ணாவியையும் பசும்பாலில் வேகவைத்து கழுவி காய வைத்து இடித்து பொடி செய்து கொள்ளவும்.

2. சுக்கு மிளகு அரிதிதிப்பிலி மூன்றையும் தனி தனியே பொடி செய்து சலித்து எடுத்துக் கொள்ளவும்.

3. கல்வத்தில் ரசத்தை விட்டு கெந்தகத்தையும் அதனுடன் போட்டு அரைத்து ரசம் மடிந்து தூளான பிறகு மனோசிலை வெங்காரத்தையும் அதனுடன் போட்டு அரைத்து பொடி செய்து கொண்டு மற்றப் பொடிகளையும் அதனுடன் கலந்து அரைத்தெடுத்துக் கொள்ளவும். எல்லாத் தூள்களையும் ஒன்றாக கலந்து ஒரே சமயத்தில் நன்றாய் கருநிறம் ஆகும் வரையில் அரைக்க முடியாதாகையால் அதை எல்லாம் வேறு ஒரு பாத்திரத்தில் எடுத்து வைத்துக் கொண்டு கல்வத்தில் கொஞ்சம் கொஞ்சமாகப் போட்டு கருநிறமாகி நன்றாய் பொடியாகிற வரையில் அரைத்தெடுத்துக் கொள்ளவும்.

அளவு:- 1 குன்றி அல்லது 2 குன்றி நிறை காலை மாலை இருவேளை கொடுக்கலாம்.

தீரும் நோய்கள்:- 1 வலிப்பு நோய் பட்டு மயங்கி கிடக்கும் போதும்.

2. பாம்பு கடித்து விஷம் தலைக்கேறி பல்கிட்டி. கண் சொருகி. கால் கை உடம்பு. சில்லிட்டு. மார்பு அடைத்துக்கொள்ளும் போதும். மூக்கு துளையில் ஒரு சிட்டிகை மருந்தை திணித்து ஊதி உள் செலுத்த வேண்டும். இவ்விதம் இரு மூக்கிலும் உட்செலுத்த உடனே மூச்சு வரும் வாய் திறக்கும் பின் உள்ளுக்கு மருந்தை தரவும்.

3. அரணை தேள் கடி முதலியவைகளுக்கு மூன்று தரம் தேனில் கொடுக்கவும்.

4. சன்னிபாத நோயில் தக்க அனுபானத்தில் கொடுக்கலாம்.

5. தோல் சம்மந்தப்பட்ட வியாதிகளுக்கு தக்க அனுபானங்களில் வியாதிக்கு தக்கபடி 20. அல்லது 40 நாள் மருந்து சாப்பிட்டுவர குணம் செய்யும்.

6. காசம் ஆஸ்மா இந்த நோய்க்கு 40 நாள் தேனிலும் ஆடாதோடை கஷாயத்திலும் தொடர்ந்து சாப்பிட்டு வர நீண்ட வருடங்களாக கஷ்டத்துக்கு உள்ளாக்கிய சுவாசகாச நோய் குணமாகும்.

7. வாதம் சம்மந்தப்பட்ட நோய் 80-ம்பித்த சம்மந்தப்பட்ட நோய் 40-ம் சிலேத்மன சம்மந்தப்பட்ட நோய் 96-ம் குணம் செய்யும்.

8. நோய்களுக்கு தக்கபடி அனுபானமும் வயது வியாதிக்கு தக்கபடி மருந்தின் அளவும் கூட்டியும் குறைத்தும் கொடுக்க வியாதி குணமாகும்

9. நோய்களுக்கு தக்கபடி உணவு கொடுக்க வேண்டும்.

10. பத்தியம் வைத்தும் பத்தியம் வைக்காமலும் மருந்தை உபயோகப்படுத்தலாம். நோயின் தன்மையைப் பொறுத்து வைத்தியர்கள் நிதானிப்பார்கள்.

கருப்பு மருந்து

சரக்கு:- சுத்தி செய்த ரசம் பலம் 1 சுத்தி செய்த கெந்தகம் பலம் 1. சுத்தி செய்த வெங்காரம் பலம் 1. சூரணித்து வஸ்திரகாயம் செய்த சுக்கு பலம் 1. முன்போல் சூரணித்த அரிசி திப்பிலி பலம் 1 முன்போல் சூரணித்த சித்திரமூல வேர்பட்டை பலம் 1.

செய்பாகம்:- இவை யாவும் சம எடையாக நிறுத்ததை வரிசை கிரமமாய் கூறியபடி முதலில் ரசத்தையும். கெந்தகத்தையும் நன்றாய் அரைத்து முடிந்த பின் வெங்காரத்தை சேர்த்து அரைத்து பின் சுக்கு. தீப்பிலி சித்திரமூல பட்டை சூரணம் இவை யாவும் ஒன்றின் பின் ஒன்றாக சேர்த்து மொத்தம் 24 மணி நேரம் அரைக்க வேண்டும். இம்மருந்துக்கு புடம் கிடையாது. எரிப்பும் இல்லை ஆகவே அரைப்புதான் பிரதானமானதாகும் என்பது கவனத்துக்குறியது. இங்ஙனம் முடிந்த மருந்தை எடுத்து பாட்டிலில் பதனப்படுத்தவும். பொதுவாக இந்த கருப்பு மருந்து எந்த நோய்களுக்கும் உபயோகிக்க குணம் செய்யும்.

அளவு:- 1 குன்றி நிறை முதல் 2. 3 குன்றி அளவு கொடுக்கலாம்.

உபயோகம்:- வியாதிக்கு தக்க அனுபானங்களில் கொடுக்க எத்தகைய கொடிய வியாதிகளையும் குணமாக்கும். நீடித்த ரோகங்களுக்கு 40 தினங்கள் வரை உபயோகப் படுத்தலாம்.

தொண்டையில் கபம்கட்டி பிராணாபத்தில் இருக்கும் நோயாளிக்கு இஞ்சிச்சார் துளசிசார். தேன். கருப்பு மருந்து ஒரு குன்றி நிறை எடுத்து கலந்து கொடுக்க கபக்கட்டை வெளியாக்கி நன்கு சுவாசம் வரச் செய்து ஆபத்தை காத்து ரக்ஷிக்கும் மற்றும் சுரம் ஜன்னி மேகரோகம் க்ஷயம் காசம் இருமல். குன்மம். சர்ம ரோகம். பூரான்கடி. எலிகடி. முதலான விஷக்கடி ரோகங்களைக் குணம் செய்யும். கிருப்பை கிட்டி, கிரந்தி நோய்கள், தோல் நோய்கள் நிறுப்பாக குணமாகும்.

பட்டுக் கருப்பு

சரக்கு:- ரசம் விராகனிடை 6 கெந்தகம் விராகனிடை 4, வீரம் விராகனிடை 2, லிங்கம் விராகனிடை 4, ரசசிந்தூரம் 3, பூரம் விராகனிடை 1, காடிக்காரம் விராகனிடை 1, பூநீர் விராகனிடை 1/2.

செய்பாகம்:- இவைகளை சுத்தி செய்து கெந்தகத்தை உருக்கி ரசத்தில் தொந்தித்து கல்வத்திலிட்டு அரைத்து அத்துடன் மற்ற சரக்குகளையும் ஒன்றின்பின் ஒன்றாக சேர்த்து அரைத்து அதில் ஆமணக்கு இலைச்சாற்றால் அரைத்து உருட்டி உலர்த்தி அதன் மீது சுயமான வெள்ளை பட்டு துணியை சுற்றி அதற்கு கொடிவேலி வேர் பட்டையை அரைத்து கவசமிட்டு 2 சீலை மண் செய்து உலர்த்தி தரையில் 4 விரக்கடை மணலைப்போட்டு அதன்மேல் இதை வைத்து அதன் மேல் 4 விரக்கடை மணலைப்போட்டு அதன் மேல் பத்து எருவை அடுக்கி புடம் போட்டு எடுத்து கல்வத்திலிட்டு பொடியாக அரைத்து ஒரு பாட்டிலில் பதனப்படுத்தவும்.

அளவு:- ஒரு குன்றி அளவு மருந்து எடுத்து சுக்கு அனுபானத்தில் கொடுக்கவும்.

தீரும் நோய்:- பக்ஷவாதம், சூலை வாதரோகங்கள், உதிரச்சிக்கல், கொள்ளைநோய் (காலரா) அமஸ்மாரம், இன்னும் அனேக ரோகங்களை குணம் செய்யும் வியாதிக்கு தக்க அனுபானங்களில் கொடுக்க சகல நோய்களையும் போக்கி ரக்ஷிக்கும்.

ராஸ்னாதி சூரணம்

சரக்கு:- சித்தரத்தை, பச்சைக் கற்பூரம், தாளிசபத்திரி, சிலாசத்துபற்பம், மஞ்சிஷ்டி, சுக்கு, திப்பிலி, மிளகு, கடுக்காய் தோல், தான்றிக்காய் தோல், நெல்லி வற்றல், கோரைக் கிழங்கு, வாய் விளங்கம் சித்திர மூலம் இவை வகைக்கு பலம் 1.

செய்பாகம்:- இவையாவும் இடித்து சூரணித்து வஸ்திரகாயம் செய்து சூரணித்துக்கு சமமாக லேகபற்பம் கலந்து வைத்துக்கொள்ளவும்.

அனுபானம்:- தேன், நெய் இவைகளுடன் கொடுத்தால் பாரிசவாதம், சுரம், இருமல், க்ஷயம், உப்பிசம், ரெத்த தோஷங்களினால் உண்டாகிய வியாதிகள் யாவும் குணம் செய்யும். அக்கினி தீபனம் அதிகரிக்கும்.

மேக ரோக ஸ்நான சூரணம்

(சர்ம சம்மந்தப்பட்ட நோய்களை சூணமாக்கும்)

சரக்கு:- ரசம், கெந்தகம், வீரம் பூரம், லிங்கம், தாளகம், மனோசிலை, மிருதார்சிங்கி, வெள்ளை குங்கிலியம், அயம், வெள்ளிக்கடிகாரம், நீரடிமுத்து, வாய்விளங்கம், சித்திர மூலவேர்பட்டை, வால்மிளகு, கோஷ்டம், வாசனை, கோஷ்டம், திரவியப்பட்டை, எலுமிச்சம் பழச்சார், அமுக்கிரா கிழங்கு, பூங்காவி, அதிமதுரம் ஜடாமாஞ்சி, மஞ்சள், மர மஞ்சள், பூலாக்கிழங்கு, கோரைக்கிழங்கு, மஞ்ஞிஷ்டி, கீழாநெல்லி, வல்லாரை, பிர்மதண்டி சமூலம், செவ்வியம், கருஞ்சீரகம், காட்டு சதகுப்பை, வெந்தயம், கடுக்காய், தானிக்காய், நெல்லிவற்றல், வில்வபழத்தின் ஓடு, கார்போக அரிசி, பெரிய வாலுளுவை, அரிசி பொன்னாவாரை, வேப்பம் பட்டை, கருங்காலி, வேப்பம் பருப்பு, சரக்கெண்ணை பட்டை, புங்கம் விதை, மருதோன்றி விதை, சந்தனம், அரலிவேர், கடுகு, தேவதாரிக் கட்டை, தகரவிதை வாகைப்பட்டை, பேய்புடல், நன்னாரி வேர், எருக்கம் வேர், கொத்தமல்லி, அழுஞ்சி வேர், விதை ஆடாதோடை, எழிலம், பாலைபாட்டை, துளசி, தும்பை, குப்பைமேனி, சிவகரந்தை இவையாவும் வகைக்கு தோலா 2.

செய்பாகம்:- மேற்கூறப்பட்டதில் ரசத்தையும் கெந்தகத்தையும் சேர்த்து அரைக்க தூளாகிவிடும். பின் மற்ற சரக்குகளை தனித்தனியே இடிக்க வேண்டியவைகளை இடித்தும் கல்வத்திலிட்டு பொடி செய்வதைப் பொடியாக அரைத்தும்

எல்லா சரக்குகளையும் ஒன்று சேர்த்து நன்றாக கலந்து ஒரு பீங்கான் ஜாடியில் பதனப்படுத்தவும்.

உபயோகம்:- ஒரு டீஸ்பூன அளவு சூரணத்தை எடுத்து தண்ணீரில் கலந்து சரீரம் பூராவும் பூசி 1/2 மணி நேரம் கழித்து குளிர்ந்த ஜலத்தில் ஸ்நானம் செய்ய வேண்டும். இவ்விதம் தினம் செய்துவர தோல் சம்மந்தப்பட்ட சகல மேக ரோகங்களையும் குணம் செய்யும்.

பரிமள ஸ்நான சூரணம்

சரக்கு:- கஸ்தூரி மஞ்சள் 2 தோலா பச்சிலை 2 தோலா கிளியூரம்பட்டை 2 தோலா ஜடாமாம்ஸி 2 தோலா பூலாக்கிழங்கு 2 தோலா பூஞ்சாந்துப்பட்டை 2 தோலா கோரைக் கிழங்கு 2 தோலா சோம்பு 2 தோலா அன்னாசிப்பூ 2 தோலா வெங்கப்பத்திரி 2 தோலா வெட்டி வேர் 2 தோலா நன்னாரி வேர் 2 தோலா சிறுநாகப்பூ 2 தோலா கார்போக அரிசி 2 தோலா தாளிசபத்திரி 2 தோலா சம்பகமொட்டு 2 தோலா வெண்கோஷ்டம் 2 தோலா கிராம்பு 2 தோலா கவுளா 2 தோலா மாகாளிக்கிழங்கு 2 தோலா வெங்கப்பட்டை 2 தோலா ஏலக்காய் 2 தோலா ஜாதிக்காய் 2 தோலா பச்சோந்திப் பட்டை 2 தோலா மஞ்ஞிஷ்டை 2 தோலா மரு 2 தோலா மகிழம்பூ 4 தோலா மருக்கொழுந்து 4 தோலா ரோஜாமொட்டு 4 தோலா விளாமிச்சம் வேர் 4 தோலா திரவியப்பட்டை 6 தோலா வெந்தயம் 6 தோலா எலுமிச்சம்பழத்தோல் உலர்ந்தது 6 தோலா சந்தனத்தூள் 8 தோலா மொத்தம் 96 தோலா.

செய்முறை:- எல்லா சரக்குகளையும் ஒன்று சேர்த்து வெய்யிலில் உலர்த்தி இடித்து வஸ்திரகாயம் செய்து சூர்ணத்தை வாயகன்ற கண்ணாடி ஜாடியில் அழுத்தமாக மூடி வைக்கவும்.

குறிப்பு:- இந்த சரக்குகளில் ஏதாவது கிடைக்காவிடில் அவைகளை விட்டுவிடலாம். கிடைத்த சரக்குகளை சேர்த்தாலும் போதுமானதாகும்.

உபயோகம்:- தேவையான அளவு சூரண்த்தை ஸ்நானம் செய்வதற்கு 10. 15 நிமிடத்திற்கு முன்பே கொஞ்சம் தண்ணீரில் கலந்து வைத்துவிடவும். ஊறிய பிறகு உடலில் தேய்த்துக் கொள்ள மிக சுகமாக இருக்கும். உடலில் எவ்வளவு அழுக்கு இருப்பின் அழுக்கை சுத்தமாக அகற்ற இந்த பொடியே போதுமானதாகும். சிறியோர் பெரியோர் குழந்தைகள் யாவரும் தினந்தோறும் ஸ்நான காலத்தில் உடலில் பூராவும் தேய்த்து சர்ம சம்மந்தப்பட்ட படை சொறி சிரங்கு தேமல் அழுக்கு இவைகளை போக்கி தேகத்திற்கு சுகந்த பரிமளத்தை தரும்.

ரவி பேதி மாத்திரை

சுத்தி செய்த நேர்வாளம் காயநதது 1 பலம். விரலி மஞ்சள் 1 பலம். இவை இரண்டையும் பச்சை தண்ணீர் விட்டு அரைத்து (4 மணி நேரம்) கழிந்துபின் மிளகு அளவாய் மாத்திரைகள் செய்து கொள்ளவும். பால் காப்பி இதுகளில் குழந்தைகளுக்கு ஒரு மாத்திரையும். பெரியவர்களுக்கு 2 மாத்திரையும் கொடுக்கலாம். இதையே இரவில் படுக்கபோகும் போது ஒரு மாத்திரையை வாழப்பழத்தில் வைத்து சாப்பிடவும்.

காலையில் 2 தட்வை சுகமாக பேதியாகும். வயிற்று வலி குமட்டல் உண்டாகாது. கெற்ப ஸ்திரீகளும் சாப்பிடலாம். பேதி அதிகமானால் மோர் சாதம் சாப்பிட பேதி நிற்கும்.

பஞ்ச ரத்தின குளிகை

பூரம். சுக்கு. மிளகு. அரிசி திப்பிலி வகைக்கு விராகனிடை 1. சுத்தி செய்த நேர்வாளம் விராகனிடை 1.

செய்யும் முறை:- இவையாவுய கல்வத்திலிட்டு கோதுமை நொய்கஞ்சி தெளிவு நீராய் 12 மணி நேரம் அரைத்து மிளகு அளவாய் உருட்டி உலர்த்தி பதனப்படுத்தவும் 1 மாதம் முதல் 6 மாத குழந்தைகளுக்கு 1/2 மாத்திரை முதல் 1 மாத்திரை வரையிலும் இதுபோல் வயதுக்கு தகுந்தபடி சாப்பிடலாம்.

வியாதிக்கு தக்குந்தபடி அனுபானம் மாறுதல் செய்யவும் பேதியாகும் வியாதிகள் குறைக்கும்.

குறிப்பு:- பேதி அதிகமானால் நிறுத்த மோர் அல்லத் எலுமிச்சம்பழச்சார் மோரிலிட்டு சாப்பிட பேதியாவது நிற்கும்.

பால சஞ்சீவி மாத்திரை அல்லது கோரோசனை மாத்திரை

சுத்தி செய்த பூரம் 1/4 பலம் கடுகு ரோகணி 2 பலம் அக்கிராகாரம் 1 பலம் கிராம்பு 1 பலம் சுத்தித்தவாளம் 1 பலம் கோரோஜனை 1/4 விராகனிடை இலைக்கல்லி 6 சார் செல்லத்தக்க அளவு.

செய்பாகம்:- சரக்குகள் யாவும் கல்வத்திலிட்டு 6 சாமத்துக்கு குறையாது அரைத்து பாசிப்பயறளவாக உருட்டி உலர்த்தி பாட்டிலில் பதனப்படுத்தவும். பால் குடிக்கும் குழந்தைகள் முதல் பெரியவர்கள் வரை உபயோகிக்கலாம். குழந்தைகளுக்கு காணுகின்ற சகல நோய்களுக்கும் கொடுக்கலாம். ஜுரம் கபம் மாந்தம் குணமாகும்.

குறிப்பு:- குழந்தைகளுக்கு காணுகின்ற பிரான்கோ நிமோனியா என்னும் மாந்த சுரத்துக்கு இம்மாத்திரை குணம் செய்யும்.

லிங்க மாத்திரை

சரக்குகள்:- சுத்தி செய்த லிங்கம் 1/2 பலம் பொரித்த பெருங்காயம் 1/2 பலம்

செய்பாகம்:- இவை இரண்டடையும் கல்வத்திலிட்டு அரைத்து அத்துடன் உரித்த வெள்ளைப்பூண்டை கொஞ்சம் கொஞ்சமாக போட்டு மெழுகுபதம் வரும் தருணத்தில் குன்றி அளவாய் மாத்திரைகள் செய்து உலர்த்தி பாட்டிலில் பதனப்படுத்திக் கொள்ளவும்.

உபயோகம்:- தினம் மூன்று வேளை சாப்பிடவும். ஒரு மாத்திரையை வாயில் போட்டு சிறிது தண்ணீர் சாப்பிடவும். சுவாசகோசத்தில் ஏற்படும் இறைப்பு உடனே குணமாகும். மற்றும் வயிற்றில் தங்கிய வாயு அது சம்மந்தமான பேதி சுரம் இடுப்புவலி சன்னி ஜலதோஷம் தலைவலி வாத சூலை முதலியன குணமாகும்.

குறிப்பு : வெள்ளை பூண்டை தோல் நீக்கி அம்மியிலிட்டு அரைத்து மெல்லிய சீலையில் தடவி நெருப்பனலில் வாட்டிப் பிழிய சாறு கிடைக்கும். இதனைக் கொண்டு மேற்படி மாத்திரை அரைக்கவும்.

இருமல் மாத்திரை

சரக்குகள்:- அதிமதுரம் வெண்மிளகு. பொரித்த எண்ணெய் வெங்காரம் சோற்று கற்றாழை சோறு பலம் 1 யாவும் கல்வத்திலிட்டு அரைத்து பட்டாணி பிரமாணம் மாத்திரைகள் செய்து பாட்டிலில் பதனப்படுத்தவும்.

இம்மாத்திரையை 4 மணி நேரத்திற்கு ஒன்று வீரம் வாயிலிட்டு சுவைத்து அதில் வரும் திரவத்தை சாப்பிட்டு வர கப சம்மந்தமான இருமல்கள் குணம் செய்யும். இம்மாத்திரையைப் பொடித்து தேனிலும் சாப்பிடலாம்.

பத்தியம்: சீதள பண்டங்களை நீக்கவும்.

ஜீரண நேசன் மாத்திரை

சரக்குகள்:- பெருங்காயம் 8 பலம் சுக்கு 8 பலம். கருஞ்சீரகம் 8 பலம். மிளகு 10 பலம். திப்பிலி 5 பலம். இந்துப்பு 5 பலம். ஓமம் 2 பலம் எலுமிச்சம்பழம் 45.

செய்பாகம்:- முன் கூறப்பட்ட சரக்குகளை இடித்து சூரணித்து எலுமிச்சம்பழம் சாற்றில் நன்றாய் அரைத்து எள்ளுமிட்டாய் போல் தட்டி உலர்த்தி பதனப்படுத்தவும்.

உபயோகம்:- புளித்த ஏப்பம், அஜீரணம், பசியில்லாமை, அரோசிகம், ருசியின்மை, வயிற்றுவலி, நெஞ்சு வலி, வயிற்றுபோக்கு யாவும் குண்மாகும். பசி தீபனத்தை அதிகரிக்கும். பித்த வாயுவினால் ஏற்பட்ட தொல்லையைப் போக்கும்.

போஜன குரடா மாத்திரை

சரக்குகள்:- சுக்கு 1 பலம், பெருங்காயம் 1 பலம், இஞ்சி 2 பலம், இந்துப்பு 2 பலம், சீரகம் 3 மிளகு பலம் 3 பலம்.

இவைகளை எலுமிச்சம் பழச்சாற்றில் 2 சாமம் அரைத்து சுண்டைக்காய் அளவாய் மாத்திரைகள் செய்து உலர்த்திப் பாட்டிலில் பதனப்படுத்திக்கொள்ளவும்.

தினம் காலை மாலை ஒரு மாத்திரை வீதம் சாப்பிட்டு வர அக்கினி மந்தம் பசியில்லாமை குன்ம வயிற்றுவலி சூதக வாயு கிராணி முதலிய வியாதிகள் குணமாக்கும். பசி தீபனம் அதிகரித்து ஜீரண சக்தி தரும். அஜீரணத்தைப் போக்கும்

தசாவதார பேதி மாத்திரை

சாதிக்காய் சாதிபத்திரி கிராம்பு வால் மிளகு அதிமதுரம் சுக்கு திப்பிலி அரத்தை கடுக்காய்பூ பச்சை கற்பூரம் இலைகள் பத்தும். வகைக்கு பலம் 1 சுத்திசெய்த வாளம் 5 பலம் இவை யாவையும் பொடி செய்து கல்வத்திலிட்டு பன்னீர்விட்டு அரைக்கவும். கிடைக்காவிட்டால் இளநீர் விட்டு அரைத்துப் பயறு அளவாய் உருட்டு உலர்த்தி பதனப்படுத்தவும். வயதுக்கு தக்கபடி 1 முதல் 4 மாத்திரை வரை உபயோகிக்கலாம் வியாதிக்கு தக்க அனுபானத்தில் கொடுக்க பேதியாகும். வியாதிகள் குணமாகும்.

சிவ சஞ்சீவி மாத்திரை

சுக்கு மிளகு திப்பிலி கடுக்காய் தாணிக்காய், நெல்லி முள்ளிநாபி நிர்விஷம் ரசம் கெந்தகம் இவை வகைக்கு

விராகனிடை ஒன்றும் நேர்வாளம் சுத்தி செய்த்து 6 விராகனிடை ஆக பதினொரு சரக்குகளையும் பொடி செய்து கரிசிலாங்கண்ணி சாற்றில் 1 சாமம் அரைக்கவும். இவ்விதம் ஏழு நாள் அரைத்து குன்றியளவாய் மாத்திரைகள் செய்து உலர்த்தி சீசாவில் பத்திரப்படுத்தவும். சகல வியாதிக்கும் வியாதிக்கு தக்க அனுபானத்தில் கொடுக்க வியாதிகள் குணமாகும். வாதபித்த சிலேத்ம தொந்தரோகங்கள் குணமாகும்.

கபவாத சுர மாத்திரை

சரக்குகள்:- லிங்கம் 2 தோலா பொரித்த வெங்காரம் 1 தோலா கந்தகம் 1 தோலா மிளகு 1 தோலா அரிசி திப்பிலி 1 தோலா.

செய்யும் முறை:- லிங்கத்தையும் கெந்தகத்தையும் சுத்தி செய்து (பாலில்) மற்ற சரக்குகளை சூரணித்து யாவையும் கல்வத்திலிட்டு நன்றாய் அரைத்தெடுக்கவும்.

அளவு:- 1 குன்றி அல்லது 2 குன்றி தேனில் காலை மாலை உபயோகிக்கலாம்.

உபயோகம்:- கபவாத சுரத்திற்கு இன்றியமையாத செந்தூரமாகும். மற்றைய சுரங்களுக்கும் இருமல் சுபம் முதலி யவற்றுக்கும் தேனில் கொடுக்கவும்.

குறிப்பு:- வேப்பம்பூ வேப்பம் ஈர்க்கு இலைகள் கஷாயத்தில் மாத்திரைகளாக உருட்டலாம். சூரணமாகவும் உபயோகிக்கலாம்.

அஷ்டாக்ஷர மாத்திரை

லிங்கம் 2 பலம் தாளகம் 2 பலம் மனோசிலை 2 பலம் வெங்காரம் 2 பலம் கருநாபி 2 பலம் இவை யாவையும் சுத்தி செய்து அத்துடன் சுக்கு 2 பலம் திப்பிலி 2 பலம் மிளகு 2 பலம் சேர்த்து கல்வத்திலிட்டு இஞ்சி சாற்றால் 2 சாமம் அரைத்து குன்றி அளவாய் மாத்திரைகளாக்கி உலர்த்தி பத்திரப்படுத்துக

தினம் காலை மாலை 1 மாத்திரை வீதம் சித்திரத்தை கஷாயம் இஞ்சிச்சாறு தாய்பால் இவைகளில் ஏதாகிலும் ஒன்றில் கொடுக்க கூஷயம் 4 சுவாசம் 5 காசம் 5, ஈளை மந்தாரசாகம் சூரம் 9 1/2 முதலிய நோய்களை குணம் செய்விக்கும்.

முகரும் ஜுர மாத்திரை

சுத்தித்த ரசம் 1/2 பலம் கந்தகம் 1/2 பலம் கருநாபி 1/2 பலம் வெங்காரம் 1/2 பலம் யாவும் சம எடையாக கல்வத்திலிட்டு நொச்சிலை சாற்றால் 4 சாமம் அரைத்துக் குன்றி அளவாய் மாத்திரை செய்து நிழலில் உலர்த்தி 7 சீலை செய்து குப்பியில் இட்டு வாய்க்கு பலபக் கல்லால் அடைத்து வாலுகா இயந்திரத்தில் 4 சாமம் எரித்து எடுத்துக் கல்வத்திலிட்டு கரு ஊமத்தை பூ சாறு நொச்சி இலைச்சாறு நாய்ப்பாகல் இலைச்சாறு முலைப்பால் முதலிய வகைக்கு ஒவ்வொன்றிலும் ஒரு நாள் அரைத்து குன்றியளவாக மாத்திரை செய்து உலர்த்தி வைத்து கொள்ளவும்.

பிரயோகம்:- ஒரு மாத்திரையைப் பொடி செய்து நாசியின் வலதுபுறம் இழுக்க அப்பாரிசத்திலிருக்கும் சுரம் நீங்கும். அங்கனமே இடது நாசியில் இழுக்க சுரம் முற்றும் நீங்கும்.

இம்மருந்து மருத்துவர்களுக்கு ஒரு விருது போன்றதாம்.

பத்தியம்:- இல்லை இது ஒரு மேஜிக் போன்ற வைத்தியமாகும்.

தலைவலி நிவாரண மாத்திரை

லிங்கம் கிராம்பு கோஷ்டம் அதிமதுரம் வெங்காரம் திப்பிலி அக்கிராகாரம் இவையாவும் வகைக்கு 1 பலம் குங்குமப்பூ கோரோசனை பச்சைக்கற்பூரம் இவை யாவும் வகைக்கு 1 விராகனிடை.

இவைகளைக் கல்வத்திலிட்டு சூரணித்து இஞ்சிசார் முலைப்பால் ஒவ்வொன்றிலும் இரண்டு நாள் அரைத்து மெழுகு

பத்தத்தில் பயறு அளவாக மாத்திரைகள் செய்து உலர்த்தி பாட்டிலில் பதனப்படுத்தவும்

அனுபானம் - தேன் இஞ்சி முதலியவைகளில் காலை மாலை சாப்பிட நீண்ட நாள் உள்ள சுரம் கபம் காசம் தாகம் தும்மல் ஏப்பம் தலைவலி பிடறிவலி சயித்தியம் குணமாக்கும்.

சண்முகாநந்தா மாத்திரை

நெல்லிக்கா கெந்தகம் 1/2 பலம் மடம் அரிதாரம் 1/2 பலம் ரசம் 1/2 பலம் நாபி 1/2 டலம்.

செய்பாகம்:- ரசத்தையும் கெந்தகத்தையும் சேர்த்து அரைத்து பின் நாபியையும் தாளகத்தையும் சேர்த்து அரைத்து பின் எலுமிச்சம் பழச்சாறு விட்டு 4 சாமம் நன்றாக அரைத்து பயறு அளவாக மாத்திரைகள் செய்து நிழலில் உலர்த்தி பாட்டிலில் பதனப்படுத்தவும். மாத்திரை 1 முதல் 3 வரை நெய்யில் குழைத்துக் கொடுக்க பக்ஷவாதம் முகவாதம் நடுக்குவாதம் அபஸ்மார ரோகங்கள் விஷக்கடி சருமம் சம்மந்தப்பட்ட ரோகம் இருமல் இளைப்பு குணமாகும்.

பூர மாத்திரை

பூரம் வாய்விளங்கம் கிராம்பு குரோசானி, ஓமம் இவை யாவும் வகைக்கு 1 பலம்.

இவைகளைக் கல்வத்திலிட்டு வேலிப் பருத்திச்சாறு நல்ல வேளைச்சாறு பாச்சாகல்லி என்னும் கொடிக்கல்லி பழுததாகயெடுத்து வாட்டி பிழிந்து அரைக்கவும். மாத்திரை பயறு அளவாக உருட்டு நிழலில் உலர்த்தவும். 2 மாத்திரை சாப்பிட்டு வெண்ணீர் அல்லது வியாதிக்குத் தக்க அனுபானம் கஷாயங்கள் தரவும் கை கால் குடச்சல் வலி சுரம் வாதம் வாயு சூலைகட்டு முதலிய வியாதிகள் குணமாகும்.

சுவர்ச குடோரி மாத்திரை

சரக்குகள்:- வெள்ளெருக்கம்பூ மிளகு இவ்வயாவும் வகைக்கு 1 பலம்.

செய்பாகம்:- இவை இரண்டையும் கல்வத்திலிட்டு நன்றாய் அரைத்து மிளகு அளவாய் உருட்டி உலர்த்தி பதனப்படுத்தவும்.

உபயோகம்:- காலை மாலை 1 முதல் 2 மாத்திரை சாப்பிட தாளிசபத்திரி கியாழம் சாப்பிடவும். சுவாசம் இருமல் காசம் குணமாகும்.

வீரமாத்திரை என்னும் திரிதோட மாத்திரை

வீரம் பலம் 1 சுத்தி செய்து கல்வத்திலிட்டு மிளகு சூரணம் பலம் 4 அத்துடன் கலந்து அரைத்துப்பின் 1/2 பலம் மிளகு கஷாயமிட்டு அரைத்து மிளகு அளவாக மாத்திரைகள் செய்து உலர்த்தி பாட்டிலில் பதனப்படுத்தவும் தக்க அனுபானங்களில் ஒரு மாத்திரை சாப்பிட சன்னி குளிர் சுரம் கபசுரம் இவைகள் குணம் செய்யும்.

குறிப்பு:- இம்மாத்திரை அரைத்து ஒரு மாதம் சென்ற பின் உபயோகப்படுத்துவதே நலமாகும்.

பத்தியம்:- உப்பு நீக்கிய கஞ்சி சாப்பிட நலம்.

கக்குவான் மாத்திரை

சரக்குகள்:- அக்கிராகாரம் 1/4 பலம் அதிமதுரம் 1/2 பலம் பொரித்த வெங்காரம் 1/4 பலம் குரோசாணி ஓமம் 1/2 பலம்.

செய்பாகம்:- இவைகளை பொடித்துக் கல்வத்திலிட்டு முசுமுசுக்கைச்சாறு விட்டு இரண்டு சாமம் அரைத்து சிறு குன்றி அளவாய் மாத்திரைகள் செய்து நிழலிலுலர்த்தவும்

குழந்தைகளுக்கு வேளைக்கு ஒரு மாத்திரை வீதம் தினம் 2, 3 வேளை தேனில் இழைத்துக் கொடுத்துவர குழந்தைகளுக்கு காணுகின்ற கக்குவான் இருமல் குணமாக்கும்.

ஆமையோடு பற்பம் சேர்ந்த மாந்த மாத்திரை

சரக்குகள்:- ஆமையோட்டு பற்பம் 1/4 பலம் சுத்தி செய்து பூரம் 1/4 பலம் மாவுசுக்குத்தூள் 1/4 பலம் பொரித்த வெங்காரம் 1/4 பலம் சுத்தி செய்த வாளம் 1 பலம்.

செய்பாகம்:- இவைகளை கல்வத்திலிட்டு சுக்கு கியாழத்திலாவது அல்லது உத்தாமணியிலைச் சாற்றிலாவது 2 சாமம் அரைத்து மெழுகு பதத்தில் பயறு உளுந்து அளவு மாத்திரைகளாக செய்து நிழலில் உலர்த்தி பத்திரப்படுத்துக.

தீரும் நோய்:- குழந்தைகளின் பருவத்திற்கேற்ப 1, 2 மாத்திரை வீதம் சுக்கு கியாழம் முலைப்பால் இவற்றிலேதேனும் மூன்றில் அனுபானம் செய்து காலை நேரத்தில் கொடுக்க பேதியாகும். இதனால் மாந்தம் சுரம் இருமல் முதலிய மல பிணிகள் குணமாகும்.

பஞ்ச ரத்தினாதி மாத்திரை

சரக்குகள்:- வீரம் பூரம் வாலைரசம் நெல்லிக்கா கெந்தகம் லிங்கம் இவைகளை வகைக்கு 1 பலம்

1. வீரம் இளநீரிலும்
2. பூரம் பிள்ளைபாலிலும்
3. சூதம் செங்கல் மஞ்சள் தூளிலும்
4. கெந்தகம் பசும் பாலிலும்
5. லிங்கம் சூடம் சாம்பிராணியிலும்.

இவை யாவும் சுத்தி செய்து எடுத்து யாவும் நுணுக்கி குப்பைக்கீரைச்சாறு பழைய புளி கரைத்தது தடிப்புமாக தண்ணீர்

எடுத்து வகைக்கு ஒவ்வொரு ச்மம் அரைத்து அரவைக்கு ஓடாத பதத்தில் உடன் சிறு பயறு பிரமாணம் மாத்திரைகளை செய்து விடவும் தாமதித்தால் இருகிப்போகும் ஆனதினால் உடன் மாத்திரை செய்யவும்.

இம்மாத்திரை சகலவித வாத சூலைகளுக்கு பழைய புளி கரைத்த தண்ணீரிலும் வயிற்று வலிக்கு சுக்கு கிஷாயத்திலும் பக்கவாதம் காய்ச்சல் முதலியவைகளுக்கு இஞ்சி சாற்றிலும் கண்டமாலை புண் கிரந்திகளுக்கு கருப்பட்டியிலும் 3 நாள் 6 நேரம் கொடுக்கவும்.

கோரோசனை மாத்திரை

சரக்கு:- கோரோசனை அதிமதுரம் கோஷ்டம் இந்துப்பு இலுப்பைக்கொட்டை சீரகம் இவையாவும் வகைக்கு 1 விராகனிடை.

செய்முறை:- இவைகளை கல்வத்திலிட்டு சோற்று கற்றாழைச் சாற்றால் ஒரு சாமமும் பிள்ளை பாலில் ஒரு சாமமும். மெழுகு பதமாக அரைத்து மிளகு அளவு மாத்திரைகள் செய்து உலர்த்திப் பாட்டிலில் பதனப்படுத்தவும்.

உபயோகம்:- இது பாலர்களுக்கு உண்டாகும் சளி இருமல் அஜீரணம் மலபந்தம் வயிற்றுவலி, வயிர் உப்பிசம் கணம். சுரம். மாந்தம். கக்குவான் இருமல். முதலிய குழந்தைகளுக்கு காணும் சகல நோய்களையும் கண்டிக்கும். இதனை உரை மருந்தாகவும் வியாதிக்கு தக்கபடி கொடுக்கலாம்.

பச்சை கற்பூர மாத்திரை

பச்சைக்கற்பூரம் கிராம்பு சாதிக்காய் இசபதங்கம் கெந்தகம் சுத்தி செய்த வாளம் இவையாவும் வகைக்கு விராகனிடை.

செய்முறை:- இவை யாவையும் கல்வத்திலிட்டு பொடித்து கற்றாழை நீரினால் பக்குவம் வரும் வரை அரைத்து

ப்யிறு உளுந்து அள்வாக மாத்திரைகள் செய்து நிழலில் உலர்த்தவும்.

தேன் இஞ்சி சாறு இவைகளில் வேளைக்கு ஒரு மாத்திரை வீதம் கொடுக்க வெப்புசுரம். தாபசுரம். வாதம் 80. பித்தம் 4. சேத்துமம் 9ம் குணமாகும். சகல ரோகங்களுக்கும் தக்க அனுபானங்களில் கொடுக்க திருவருளால் சகல வியாதிகளும் குணமாகும்.

பச்சை கற்பூர பேதி மாத்திரை

சாதிக்காய் 1 பலம் பச்சைக் கற்பூரம் 1 பலம் இலவங்கப்பட்டை 1 பலம் சுத்தி செய்த வாளம் 3 பலம்.

மேற்கூறிய சரக்குகளையும் கல்வத்திலிட்டு கற்றாழைச் சாற்றால் 5 மணி நேரம் வரை அரைத்து உளுந்து அளவாக மாத்திரைகள் செய்து நிழலில் உலர்த்தி சீசாவில் பத்திரப்படுத்தவும். குழந்தைகளுக்கு பருவத்துக்கு தக்கவாறு ஒரு மாத்திரை அல்லது இரண்டு மாத்திரை எடுத்து சர்க்கரை அல்லது தேனில் மத்தித்து கொடுக்க மூன்றே முக்கால் நாழிகைக்குள் பேதியாகி சுரம் விடும்.

பத்தியம்:- பாலுண்ணும் குழந்தைகளாயின் தாய் புளி நீக்கி இச்சாபத்தியம் இருக்கவும்.

பச்சைகற்பூர சுரஹர மாத்திரை

பச்சைக்கற்பூர கெந்தகம் இந்துப்பு லவங்கம் சாதிக்காய் சாதிப்பத்திரி இவை யாவும் வகைக்கு 1 பலம்.

செய்முறை:- மேற்கூறிய சரக்குகள் யாவும் கல்வத்திலிட்டு எலுமிச்சம் பழச்சாறு விட்டு 3 மணி நேரம் அரைத்துக் கொத்துக்கடலை அளவு மாத்திரைகள் செய்து நிழலில் உலர்த்திப் பாட்டிலில் பதனப்படுத்தவும்.

தீரும் நோய்:- இஞ்சி சுரசம் சர்க்கரை சுக்கு கியாழம் தேன் முதலியவையில் வயதுக்கு தக்கபடி 1 முதல் 2 மாத்திரை பொடி செய்து போட்டு கொடுக்க எச்சுரமும் மூன்றே மூக்கால் நாழிகைக்குள் குணம் செய்யும்.

கற்பூர பேதி மாத்திரை

சரக்குகள்:- பச்சைக்கற்பூரம் லவங்கம் வால்மிளகு சிறு நாகப்பூ கடுகு ரோகணி ஏலம் இவை யாவும் வகைக்கு 1/4 வாளம் சுத்தி செய்தவாளம் 1 1/2 விராகனிடை.

செய்பாகம்:- மேற்கூறிய சரக்குக்களை பொற்றலைக் கறப்பான் சாற்றில் ஒன்பது நாள் அரைத்து குன்றி அளவாய் மாத்திரைகள் செய்து நிழலில் உலர்த்தி பாட்டிலில் பதனப்படுத்தவும்.

தீரும் நோய்:- இஞ்சி, கரசம் தேன் குழைந்தைகளின் தாய்பால் முதலானதுகளில் அனுபானித்துக் கொடுக்க மாந்த சுரம் முதல் மற்ற சகல சுரமும் நீங்கும்.

பூர மாத்திரை

சரக்கு:- பூரம் 3 பலம் மொட்டு நீக்கிய கிராம்பு 3/4 பலம் பூநீர் 1/4 பலம் ஓமம் 3/4 பலம்.

செய்பாகம்:- மேற்கூறப்பட்ட சரக்குகளை கல்வத்திலி ட்டு பொடித்து தும்மட்டிகாய் சாற்றில் 1 சாமமரைத்து உளுந்து அளவாக உருட்டி உலர்த்தி பதனப்படுத்தவும்.

தீரும் நோய்:- குழந்தைகட்கும் பெரியோர்களுக்கும் பருவத்துக்கு தக்கபடி 1/2 படி தண்ணீரில் சோம்பு பலம் 1 திராட்சை பலம் 1 இவ்விரண்டையும் போட்டு 1/8 படியாக்கி அதில் ஒரு மாத்திரை உரைத்துக் கொடுக்க பழைய மலத்தை வெளிப்படுத்தி சிறுநீரைப் பெருக்கி எப்பவருவத்தினரும் நோயற்ற வாழ்வை அனுபவிப்பதற்கு இன்றியமையாத திவ்ய அவுடதமாகும். குழந்தைகளுக்கு 1/4 குன்றியளவு கொடுக்கலாம்.

சகல சுரக் குளிகை

சரக்கு:- கொயினா சுக்கு மிளகு திப்பிலி தேசாவரம் வெண்கோஷ்டம் இவை யாவும் வகைக்கு 1 பலம்.

செய்பாகம்:- இவைகளை சூரணித்து கல்வத்திலிட்டு பேப்புடல் நிலவாரை வேப்பம்பட்டை நிலவேம்பு வகைக்கு வீசை 1/2 எடுத்து இடித்து 4 படி தண்ணீர் விட்டு 1/4 படியாக வற்ற கியாழம் செய்து வடிகட்டி எடுத்து மேற்படி சரக்குகளை கியாழத்தில் அரைத்து குன்றி அளவாக மாத்திரைகள் செய்து உலர்த்தி பதனப்படுத்தவும்.

தீரும் நோய்:- ஒரு மாத்திரையை சர்க்கரை அல்லது இஞ்சி சத்தில் கொடுக்க விஷஜுரம் மலேரியா ஜுரம் குளிர் காய்ச்சல் குணமடையும்.

குளிர் சுரக் காய்ச்சல்

சரக்குகள்:- கரிமசால் பட்டை என்னும் கருவாய் பட்டை 1 பலம் ஆடு தீண்டாபாளை வேர்பட்டை 1 பலம்.

இவைகளை சூரணித்து கல்வத்திலிட்டு எலுமிச்சம் பழச்சாற்றால் அரைத்து பருத்திக்கொட்டை அளவாக உருட்டி உலர்த்தி பதனப்படுத்தவும்.

தீரும் நோய்:- 1 மாத்திரையை எடுத்து தேன் அல்லது வெந்நீரில் உரைத்துக் கொடுக்க குளிர் சுரம் குணமாகும். 3 அல்லது 4 வேளையில் குணம் செய்யும். சாதாரண சுரங்களுக்கும் கொடுக்க சுரம் குணம் செய்யும்

வல்லாரை சுர மாத்திரை

சரக்கு:- வல்லாரை இலை வேலிப்பருத்தி இலை மிளகு.

செய்பாகம்:- இவை மூன்றும் சமமாக எடுத்து சுத்தம் செய்து அம்மியில் அரைத்து வழித்து குன்றிமணி அளவாய் மாத்திரைகள் செய்து நிழலில் உலர்த்தி பத்திரப்படுத்திக் கொண்டு

ஒரு மாத்திரை வீதம் தின்ம இரண்டு வேளை வெந்நீரில் கொடுத்து வந்தால் சகலவித சுரங்களும் நின்றுவிடும். சிறு குழந்தைகள் முதல் பெரியவர்கள் வரை கொடுக்கலாம்.

கஸ்தூரி மாத்திரை

சரக்குகள்:- கஸ்தூரி 1/4 விராகனிடை குங்குமப்பூ 1/4 விராகனிடை பச்சைகற்பூரம் 1/4 விராகனிடை நாட்டுகற்பூரம் 1/2 விராகனிடை சாம்பிராணி 1 விராகனிடை செஞ்சந்தனம் ஏலம் ஜாதிபத்திரி தாளிசபத்திரி வால் மிளகு தக்கோலம் கிராம்பு அரத்தை சிறுலவங்கப்பட்டை இவை யாவும் வகைக்கு 1/4 பலம்.

செய்பாகம்:- இவை யாவும் சூரணித்து செவ்விளநீர் ஜலத்தில் அரைத்துப் பயிர் அளவாய் உருட்டி உலர்த்தவும்.

தீரும் நோய்:- குழந்தைகளுக்கு காணுகின்ற சுரம் இருமல் கபம் முதலியவைகளுக்குத் தாய்ப்பால் தேன் முதலிய அனுபானம்.

மூசாம்பர மாத்திரை

சரக்கு:- மூசாம்பரம் 1 தோலா சுக்குத்தூள் 1 தோலா கசகசா 1 தோலா சுத்தி செய்த வாளம் 1/2 தோலா கிராம்பு 1/4 தோலா.

செய்பாகம்:- இவைகளைக் கல்வத்திலிட்டு வெந்நீர் விட்டு குன்றி அளவாய் மாத்திரைகளாக்கி பதனபடுத்தவும்.

அளவு:- இரவு கொஞ்சம் ஆகாரம் உண்டு சுமார் 10 மணிக்கு மேல் 1, 2 மாத்திரையை சாப்பிட்டு சிறிது தண்ணீர் சாப்பிடவும். அதிகாலையில் 4, 5 முறை பேதியாகும்.

பத்தியம்:- காலையில் சூப்சாதம் சாப்பிடவும். இதனால் கைகால் குடைச்சல் இடுப்புவலி மார்வலி சூதகவாயு வாதஜுரம் நெரிகட்டி சுரம் குணமாகும்.

நாபி மாத்திரை

சரக்கு:- மிளகு 1 பலம் கருநாபி 1 பலம்.

செய்பாகம்:- கருநாபியை எருமை கோமியத்தில் விட்டு அடுப்பில் வைத்து சிறிது பொங்க எரித்து 1 நாள் ரவியில் உலர்த்தி மறுநாள் பசும் கோமியத்தில் அவ்விதமே எரித்து எடுக்க சுத்தியாகும். இதனை கல்வத்திலிட்டு பொடித்து அத்துடன் மிளகையும் சேர்த்து நன்றாக மெழுகு பதம் வரும் வரை அரைத்து மிளகு அளவாய் உருட்டி ரவியில் உலர்த்தி பாட்டிலில் பதனப்படுத்தவும்.

உப்யோகம்:- வாதம் 80-க்கும் குணம் செய்யும்.

அனுபானம்:- வயது ரோகங்களுக்குத் தக்கபடி பால் தயிர் இரண்டில் ஏதேனும் ஒன்றில் கலந்து சாப்பிடவும்.

மேற்படி மாத்திரையின் விசேஷ குணங்களாவது:- பாரிசவாதம் அல்லது தேகத்தில் எங்கு சோர்வு இருப்பினும் அப்பாரிசத்தில் மேற்படி மாத்திரையை சோற்று கற்றாழைச் சாற்றில் உரைத்து பூசிவர உணர்வு உண்டாக்கி நாடி நரம்புகள் இரத்த ஓட்டம் ஏற்படும். ஆண்மை அதிகரிக்கும் மலம் சுத்தியாகும் சிறுநீரை பிரிக்கும் வீக்கத்தை வடிக்கும்.

நாபி மாத்திரை

சரக்கு:- கருநாபி 2 தோலா சோழி பற்பம் 5 தோலா மிளகு தூள் 5 தோலா சுக்குத்தூள் 5 தோலா.

செய்முறை:- இவை நான்கையும் கல்வத்திலிட்டு இஞ்சி சாற்றில் அரைத்து பயறு அளவாய் மாத்திரைகள் செய்து வைத்துக் கொள்ளவும்.

உபயோகம்:- காலை மாலை 1 அல்லது 2 மாத்திரை தண்ணீரில் கரைத்து சாப்பிடவும். ஆமஜுரம் விஷஜுரம் (இன்புளுன்ஸா) அஜீரணம் வயிற்றுப்பொருமல் மலக்கட்டு சூலை சுவாசகாசம் முதலியவை நீங்கும்.

தீரும் நோய்:- மற்றும் இதில் உள்ள நான்கு சரக்குகளும் கபவாதசமம் செய்பவை தேகவலியைப் போக்கும் வியர்வை உண்டாக்கும் தலை மார்பு மூக்கு முதலிய இடங்களில் நீராக்கம் ஏற்பட்டு வேதனையுண்டாகும் போது நீரை வற்றச் செய்து வேதனையைக் குறைக்கும். வயிற்று உப்பிசம் மலக்கட்டு இருப்பதை குறைத்து சுவாசகாசம் போன்ற கஷ்ட சுவாச நிலையில் வியாதி வேகத்தை குறைப்பது அஜீரணத்தை போக்கி ஜீரணசக்தி செய்வது போன்ற முதலிய நல்ல குணங்களைத் தரும்.

எட்டிக்கொட்டை மாத்திரை

சரக்கு:- சுத்தி செய்த எட்டி கொட்டை கருக வறுத்தது. (தூள் செய்தது) சுக்கு தூள் மிளகு கிராம்பு இவை யாவும் வகைக்கு 1/2 பலம்.

செய்முறை:- இவையாவும் கல்வத்திலிட்டு நன்றாக அரைத்துப் பின் எலுமிச்சம் பழச்சாறுவிட்டு அரைத்து பாசி பயறு அளவாக உருட்டி நிழலில் உலர்த்தி பதனப்படுத்தவும். வயது தேகபலம் அனுசரித்து 1 அல்லது 2 மாத்திரை வீதம் வாயில் போட்டு தண்ணீர் அல்லது காப்பி மோர் சாப்பிடவும்.

தீரும் வியாதிகள்:- 18 வகைச்சூலை. கைகால் பிடிப்பு இடுப்பு வலி மார்நோய் மேல் கால் கை வலி முதலிய வியாதிகளை குணம் செய்யும் தாது பலப்படும் சகல் விதமான வாயுவும் தீரும்.

குறிப்பு: மேற்படி எட்டிக்கொட்டையை சுத்தி கிரமமாவது எட்டிக்கொட்டையை பசும் கோமியத்தில் போட்டு வேகவைத்து தோல் போக்கி பிளந்து இலையை எடுத்துவிட்டு சட்டியிலிட்டு கருக வருத்தெடுத்து நுணுக்கி சேர்க்கவும்.

காஞ்ஞிராதி மாத்திரை

சுத்தி செய்த எட்டிக்கொட்டை சூரணம் 6 1/2 விராகனிடை லவங்கப்பட்டை 3 1/4 விராகனிடை ஜாதிக்காய் 3 1/4 விராகனிடை ஜாதிபத்திரை 3¼ விராகனிடை மாசிப்பத்திரி 3¼ விராகனிடை கிராம்பு 3¼ விராகனிடை காரிகியூன் 3¼ விராகனிடை.

செய்முறை:- மேற்படி யாவையும் சூரணம் செய்து கல்வத்திலிட்டு ஓமத்திராவகம் விட்டு 1½ சாமநேரம் அரைத்து கடலைப் பிரமாணம் மாத்திரைகள் செய்து வைத்துக் கொள்க.

அனுபானம்:- ஓம திராவகத்தில் வேளைக்கு ஒரு மாத்திரை வீதம் காலை மாலை இரு நேரம் கொடுக்கவும்.

தீரும் வியாதி:- தேகத்தில் எங்குமுள்ள பிடிப்பு ரோகம் தீரும் மற்றும் பாரிசவாய்வு முகவாதம் தீரும்.

வாத ராஜக்குளிகை

சரக்கு:- வாலைரசம் 2 பலம் கெந்தகம் 2 பலம்.

செய்முறை:- இவைகளை கல்வத்திலிட்டு சிற்றாமணக் கெண்ணெய் துளித்துளியாக விட்டு மெழுகு பதத்திலேயே அரைத்து கோழி முட்டைப்போல் உருண்டை செய்து ஒரு நாள் ஆறவிட்டு அதன் மேல் கருப்பு பட்டு துணியைச் சுற்றி பின்னர் நூலால் வரிந்து கட்டிவைக்க ஒற்றைப்படி பிடிக்கும் படியான ஓர் சட்டியில் 5 அங்குலம் மணல் போட்டு பரப்பி அதன் மீது முன் சித்தப்படுத்திய உருண்டையை வைத்து நிறைய மணல் கொட்டி மேல் மூடிச் சீலை செய்து கானல்யில் அடுப்பேற்றி 4 சாமம் முத்தியாக எரிக்கவும். ஓர் இரவு ஆறவிட்டு மறுநாள் எடுத்துப்பார்க்க உருண்டையானது பளுவாகயிருத்தல் வேண்டும். அதன் மேல் இருக்கும் பட்டுத்துணியை நீக்கி அவ்வுருண்டையின் மேல் வெள்ளி மோதிரத்தை இழைக்க உறை விழவேண்டும். உருண்டையானது பளுவாகயிருந்து முன் கூறப்பட்ட பரிசைக்கு நிற்காவிடின் ஒரு குடுவையில் 2 அங்குலம் மணல் கொட்டி உருண்டையின் மீது பட்டுச்சுற்றி நூலால் கட்டி வைத்து மேலும் மணல் போட்டு ஒரு சர்மம் எரிக்கவும் நன்றாய் ஆறிய பின்னர் மேற்கூறிய வண்ணம் ரசமும்

கெந்தகமும் எடை குறையாமல் இறுகி வெள்ளியின் உலோகத்தை வாங்கும் படியான குளிகையாய் விடின் இதுவே மிகசிறந்தது. உருண்டை இலேசாக போய்விடின பிரயோசனமற்றதாகும் மறுபடியும் விவேகிகள் கஷ்டம் என்று பாராது செய்து முடிப்பார்கள். கிராம்பு திப்பிலி. மிளகு தாளிச பத்திரி சமனெடையாக நிறுத்துப் பொன்மேனியாக வறுத்து இடித்து சூரணம் செய்து வைத்துக்கொண்டு வேளைக்கு 1/2 விராகனிடைய சூரணத்தில் குன்றி பிரமாணம் முன் சரிவர முடித்த மருந்தைப் பொடித்து சேர்ந்து தேனில் மத்தித்து தினம் இருவேளை 5. 7. 10 நாள் கொள். ஜன்னி. வாய்வு. காக்கை வலி. முயல்வலி. தனுர் வாதம்வலி இடிவாதம். கபவாத ஜன்னி குத்தல். எரிச்சல். வாய். கண். முகம் கோணம் பிரசவஜன்னி முதலியவைகள் தீரும்.

பத்தியம்:- முதல் 10 நாள் புளி தள்ளி இச்சாபத்தியமாக இருக்க வேண்டும்.

காய மாத்திரை

சாதிலிங்கம் பெருங்காயம் நாபி சுத்தித்தவாளம் இவை யாவும் வகைக்கு ½ பலம்.

செய்முறை:- இவைகளை கல்வத்திலிட்டு சேர்த்துக் கற்றாழைச் சார்விட்டு கல்வத்தில் ஒட்டாது திரண்டு வரும் பதத்தில் மிளகு அளவாய் உடனே உருட்டி உலர்த்தவும்.

உபயோகம்:- இஞ்சி சுரசம் பனைவெல்லம். முதலி யவைகளில் தரலாம்.

தீரும் நோய்:- குளிர்சுரம். மேகசுரம் பித்தசுரம். கபசுரம். விஷசுரம் முதலிய சகல சுர ரோகங்களும். அதிசார பேதிகளும் கிராணி கழிச்சல் ரோகங்களும் குணம் செய்ய வல்லது.

சந்திரோதய மாத்திரை

மஞ்சள் 3 விராகனிடை ரசம் 1 விராகனிடை வெங்காரம் 1/2 விராகனிடை பூரம் 1 விராகனிடை

செய்முறை:- மேற்படி சரக்குகளை எடை செய்து வரிசைபடி ஒன்றின் பின் ஒன்றாக சேர்த்து அரைத்து எலுமிச்சம் பழச்சார் விட்டு 2 சாமம் அரைத்து பயறுபோல் உருட்டி உலர்த்தவும்.

உபயோகம்:- திருகடுகுதூளில் 1 மாத்திரை அல்லது 2 மாத்திரை சேர்த்து தேனில் சாப்பிட சன்னி குணமாகும். மிளகு. திப்பிலி சீரகம். கிராம்புதூளில் சாப்பிட நீண்ட நாள் சுரம் குணமாகும்.

பூர மாத்திரை

அரிசி திப்பில் 1 விராகனிடை சுத்தித்தபூரம் 2 விராகனிடை மிளகு 3 விராகனிடை ஆமை ஓட்டு பற்பம் 4 விராகனிடை

செய்முறை:- மேற்கூறியபடி நிறுத்தெடுத்துக் கல்வத்தி லிட்டு முலைப்பால் விட்டு 2 1/2 மணி நேரம் அரைத்து பயறு அளவாக உருட்டி நிழலில் உலர்த்தவும். குழந்தைகளின் பருவத்துக் தக்கபடி 1 அல்லது 2 மாத்திரை தேனில் கொடுக்க சர்வசுர ரோகங்களும் இழுப்பு இசிவு முதலிய மாந்தரோகங்களும் குணம் செய்யும்.

மாந்த மாத்திரை

மிளகுதூள் சுக்குத்தூள் திப்பிலித்தூள் ஓமம்தூள் கடுகு ரோகினித்தூள். கோஷ்டம். ஆமை ஓட்டுப்பற்பம். இவையாவும் வகைக்கு 1 பலம் சுத்தி செய்த வாளம் 5 பலம்.

செய்முறை:- இவையாவையும் கல்வத்திலிட்டு பழச்சாற்றால் 3 சாமம் அரைத்து பயறு உளுந்து அளவாய் மாத்திரைகள் செய்து உலர்த்தவும் 1 வயதுக்கு மேற்பட்ட குழந்தைகளுக்கு காலை 1 வேளை மட்டும் மாத்திரை தாய் பாலில் கொடுக்க பேதியாகும். இதனால் சன்னி சுரம் சீதளம் வலி மாந்தம் தீரும் வயதுக்கு தக்கபடி மாத்திரை தரவும். பேதி

அதிகமானால் வசம்பு சுட்டகரியைத் தேனில் இழைத்துக் கொடுக்கவும்.

சதுர்முக மாத்திரை

நெல்லிக்கா கெந்தகம் மடல் அரிதாரம் ரசம் நாபி இவையாவும் வகைக்கு ½ பலம்.

செய்முறை:- இவைகளை சுத்தி செய்து ரசத்தையும் கெந்தகத்தையும் சேர்த்து அரைத்து பின் எலுமிச்சம் பழச்சாறு விட்டு 4 சாமம் நன்றாக அரைத்து பயறு அளவாக மாத்திரைகள் செய்து நிழலில் உலர்த்தி பாட்டிலில் பதனப்படுத்தவும். மாத்திரை 1 முதல் 3 மாத்திரை வரையில் நெய்யில் இழைத்துக் கொடுக்க பக்ஷிசவாதம் முகவாதம் நடுக்கு வாதம் அபஸ்மார ரோகங்கள் விஷக்கடி சரும சம்பந்தப்பட்ட ரோகம் இருமல் இளைப்பு குணமாகும்.

சர்ம படை மாத்திரை

முரிதார் சிங்கி ரசம் கெந்தகம் பூரம் துருசுதுத்தம். இவை யாவும் வகைக்கு ½ பலம்.

செய்முறை:- மேற்படி சரக்குகளைக் கல்வத்திலிட்டு தூள் செய்து கற்பூர வெற்றிலைச் சாற்றால் மெழுகு பதம் வரும் வரை பச்சை கற்பூரக் கட்டி அரைத்து சிலேட்டுக் குச்சியைப் போல் அல்லது அத்தர் வில்லைகள் போல் செய்து உலர்த்திக் கொண்டு வேண்டும்பொழுது எலுமிச்சம் பழச்சாற்றில் சிறிது உறைத்து ஊரல் எடுத்து பரவுகின்ற படைகளுக்கு மேல் தடவ சீக்கிரம் குணமாகும்.

ஆண் குறி நுணிதோல் வெடிப்பு கண்டு உபாதை இருக்கும் போது மேற்படி இதை தடவ ஆறும்.

சர்க்குண பேதி மாத்திரை

சுத்தி செய்த வாளம். லிங்கம். சோடா உப்பு. இவையாவும் வகைக்கு 1/2 பலம்.

செய்பாகம்:- வாளத்தை மட்டும் சுத்தி செய்து மற்ற சரக்குகளை சுத்தி செய்யாமல் போடவும். முதலாவது சுத்தி செய்து விட்டு நெய்விட்டு வறுத்தெடுத்து வாளத்தை முதலாவதாகப் போட்டு அரைத்து பின் லிங்கத்தை சேர்த்து அரைத்து பின் சோடா உப்பை போட்டு அரைத்து பின் எலுமிச்சம் பழச்சாறு விட்டு அரைத்து சற்று ரவியில் வைத்து பின் மாத்திரையாக உருட்டவும்.

குறிப்பு : எலுமிச்சம் பழச்சாறு 2 பழம் மட்டும் போதுமானது

பேதி மாத்திரை

சரக்கு:- சுத்தி செய்த வாளம் சுக்கு. மிளகு. அரிசி. திப்பிலி. கடுகு ரோகணி. பெருங்காயம் இவை யாவும் வகைக்கு 1 பலம்.

செய்முறை:- மேற்படி சரக்குகளை இடித்து சூரணம் செய்து கல்வத்திலிட்டு முருங்கவேர் பட்டையை இடித்து பிழிந்த சாற்றினால் மெழுகு பதங்காண அரைத்து மிளகு போன்ற மாத்திரைகளாக உருட்டி நிழலில் உலர்த்தியெடுத்து பாட்டிலில் பதனப்படுத்தவும்.

உபயோகம்:- சிறுவர் முதல் பெரியோர் வரையில் இந்த மாத்திரையை உபயோகப்படுத்தலாம். வியாதிக்கு தக்க அனுபானங்களில் கொடுக்க சகல நோயும் தீருமென்றாலும் பிரதானமாக சகலவிதமான வாதரோகங்களும் 18 வித சூலை மேக ரோகங்கள் தீரும் என்பது அனுபவம்.

விஷ்ணு சக்கர மாத்திரை

முத்துசிப்பிச் சின்னம் பசும்பாலில் சுத்தி செய்த நெல்லி க்காய் கெந்தகம் சிச்சிலிகிழங்கு சூரணம் பொரித்த வெண்காரம் அரிசி திப்பிலி சூரணம் சுத்தி செய்த பாதரசம் மேல் தோல் சீவப்பட்ட சுக்குச்சூரணம் இவை யாவும் வகைக்கு 1 பலம் இஞ்சிச்சாறு செல்லத்தக்க அளவு.

செய்முறை:- முன்னதாக ரசத்தையும் கெந்தகத்தையும் சேர்த்தரைத்து நன்றாய் கருப்பு நிறமான பின் மற்ற சூரணங்களையும் சேர்த்து இஞ்சி சாற்றை வார்த்து 6 சாமம் கைவிடாமல் அரைத்து மிளகு பிரமாணம் மாத்திரைகள் செய்து நிழலில் வைத்து உலர்த்தி கொள்ளவும்.

பிரமாணம்:- குழந்தைகளுக்கு 1 மாத்திரையும் பெரியவர்களுக்கு 2 முதல் 4 மாத்திரை வரையிலும் நாலைந்து திருநூற்று பச்சிலைகளுடன் அல்லது ஒரு வெற்றிலையுடன் அனுபானித்துக் கொடுக்கவும்.

உபயோகம்: பக்ஷவாதம் முகவாதம் விஷபேதி வாயு சம்மந்தப்பட்ட குடல் முறுக்கு ரோகம் அஜீரணம் பக்க நோவு ஆகியவைகள் தீரும். சீதள சம்பந்தப்பட்ட ரோகங்களில் இது சங்சீவிக் கொப்பானது. க்ஷயசுரம் நீங்கலாக மற்ற எல்லாவித பேதிகளையும் தப்பாமல் கண்டிக்கும். உஷ்ண சம்பந்த ரோகங்களுக்கும் சுரங்களுக்கும் பருப்பு கீரை விதையை அரைத்து பிழிந்த ரசத்திலும் கபசம்பந்த ரோகங்களுக்கும் ஒருவித அனுபானமின்றியும் கொடுக்கலாம்.

இதற்கு சுருப்பு மாத்திரையென பெயருண்டு.

ஆனந்த பைரவி மாத்திரை

வெள்ளை நிறமான நாபி. இதனை பசும்பாலில் துண்டித்து நீபாட்டு 3 நாளூரவைத்து நாலாம் நாள் ஜலம் வார்த்துக் கழுவி சுத்தித்தபின் வெயிலிலுலர்த்தி நன்றாய் காய்ந்தபின் இடித்து சூரணித்து வஸ்திரகாயம் செய்து சீசாவில் வைத்துக் கொள்ளவும். இந்த சூரணம். அரிசி திப்பிலி மிளகு பொரித்த வெண்காரம் 1 முலைப்பாலில் சுத்தி செய்த லிங்கம் இவை வகை பங்கு சமம்.

இவற்றை கல்வத்திலிட்டு எலுமிச்சம் பழச்சாறு விட்டு 8 சாமம் கைவிடாமல் அரைத்து கடலை பிரமாணம் மாத்திரைகளாக உருட்டி நிழலிலுலர்த்தி வைத்துக்கொள்ளவும்.

உபயோகம்:- பக்ஷவ்வாத ரோகங்களில் மாத்திரையை உள்ளுக்கு கொடுத்து 2. 3 மாத்திரைகளை எண்ணையில் குழைத்து வியாதியுள்ள ஸ்தானங்களில் பூசி இராக் காலங்களில் அதன் மேல் பஞ்சு வைத்து கட்டவும் ஈரக்காற்று படாமல் ஜாக்கிரதையாக இருக்க வேண்டும். இப்படி செய்து வர மேற்படி ரோகங்கள் தீரும். சீதபேதிக்கு சர்க்கரையுடன் அனுபானித்துக் கொடுக்கவும். விஷபேதிக்கு இஞ்சி சார் அல்லது வெற்றிலைச் சாற்றில் அனுபானித்துக் கொடுக்கத் தீரும் அதிசாரபேதி முதலான பேதிகளுக்கு அபின் சேர்த்து கொடுக்கத் தீரும் மற்றும் இம்மாத்திரைகளை பீனிசரோகம் இருமல்ரோகம் கப சம்பந்தமான நடுக்குச்சுரம் வாதசம்பந்தமான நடுக்குச்சுரம் ஆகியவைகளுக்கும் கொடுக்கலாம் பித்த சுரத்துக்கு பருப்பு கீரை விதையை அரைத்து பிழிந்த சாற்றில் கொடுக்கத் தீரும் இதனுடன் இருமல் இருந்தால் விரையை வறுத்து அரைத்து பிழிந்த சாற்றில் கொடுக்கவும் க்ஷயசுரம் பிற சூத ரோகம் தாது நஷ்டம் ஆகியவைகளுக்கு தேனில் கொடுக்கவும்.

தேகபலம் வியாதி பலம் முதலியவைகளுக்குத் தக்கபடி வேளை ஒன்றுக்கு 1 முதல் 3 மாத்திரை வரையில் கொடுக்கலாம். இதற்கு சிவப்பு மாத்திரை யெனப் பெயருமுண்டு.

வஜ்ஜீரகண்டி மாத்திரை

சரக்கு:- லிங்கம் 8 விராகனிடை இரச கற்பூரம் 1 விராகனிடை இரசசெந்தூரம் 2 விராகனிடை வீரம் 4 குன்றிஎடை

இங்கு கூறப்பட்ட நான்கு சரக்குகளையும் கிரமப்படி சுத்தி செய்து கல்வத்திலிட்டு ஒரு சாமம் பழச்சாற்றிலும் ஒரு சாமம் இஞ்சி சாற்றிலும் அரைத்து மெழுகு பதமாக திரண்டு வரும் பொழுது உளுந்து அளவுள்ள மாத்திரைகளாகச் செய்து உலர்த்தி சீசாவில் பத்திரப்படுத்துக வேளைக்கு 1 மாத்திரை வீதம் தினம் இருவேளை நோய்க்குத் தக்கபடி அனுபானித்துத் தரவும்.

தீரும்வியாதி:- மேககுடைச்சல் விரைவாதம் வேக முறுஞ்சுரம் புண்புரை நடுக்கல்சுரம் தாகசுரம் மூர்ச்சை கனுவாதம் வெள்ளை சன்னி 13 கண்ட மாலை அரையாப்பு தீரும்.

நவமூல நிர்மூல மாத்திரை

நல்ல பிரண்டையை கணுக்களை நீக்கி நெருப்பில் வாட்டி சார்பிழிந்து வடிகட்டி எடுத்துக்கொண்டு அதில் குக்கலைப்போட்டு (சார் மிதக்கவேண்டும்) 2, 3 நாள் குக்கல் ஊறி சார் சுண்டியபின் மறுபடியும் மேற்படி பிரண்டைச் சார் குக்கலுக்கு மேல் 4 விராகனிடை இருக்கும்படி ஊற்றிக்கிண்டி குழம்பாக்கி துணியில் வடிகட்டி வைத்து கொள்ள வேண்டும் பின் வெள்ளை சிவதை வேரை பசும்பாலில் 4 மணி நேரம் ஊறவைத்து அப்படியே அடுப்பில் வைத்து ½ மணிநேரம் எரித்து இரக்கி தண்ணீர்விட்டு கழுவி காயவைத்துக் கொண்ட சிலதைவேர் தோலா 1, சூரத்து கடுக்காய்தோல் 1, தோலா தான்றிக்காய் தோல் 1 தோலா விதை நீக்கிய நெல்லிக்காய் தோல் 1 தொலா கடுக்காய்ப்பூ 1 தோலா ஆக இவ்வைந்து சரக்கையும் காயவைத்து இடித்து வஸ்திரகாயம் செய்து மேற்படி குக்கில் குழம்பில் குழிப்பி கல்வத்திலிட்டு அரைத்து சிறுசுண்டைக்காய் அளவாய் மாத்திரைகள் செய்து வைத்துக்கொள்ளவும்.

உபயோகம்:- தினம் ஒன்றுக்கு 4 முதல் 8 மாத்திரை வரையில் வாயிலிட்டு மென்று சாப்பிடவும் இதனால் நவமூலங்கள் குணமாகும் மற்றும் பித்த எரிச்சல் மயக்கம் கிறுகிறுப்பு மற்றும் பித்த சம்மந்தமான நோய்கள் குணமாகும் சூலை ரோகத்தையும் போக்கும்.

திரிலோக ரக்ஷாமணி மாத்திரை

(சகல காச ரோகங்களுக்கும்)

சரக்கு:- லிங்கம், தாளகம் மனோசிலை வெங்காரம் கரு நாபி சுக்கு மிளகு திப்பிலி இவை யாவையும் சுத்தி செய்து வகைக்கு 2 பலம்

மேற்படி சரக்குகளை சுத்தி செய்து சூரணித்து லிங்கம் தாளம் முதலான ஐந்து சரக்குகளையும் தனித்தனியே பொடிசெய்து பின் ஒன்றின் பின் ஒன்றாக சேர்த்து அரைத்து

பின் சுக்கு மிளகு திப்பிலி சூரணத்தையும் சேர்த்து இஞ்சி சாற்றால் 2 சாமம் அரைத்து குன்றி அளவுமாத்திரைகளாக்கி உலர்த்தி தினம் காலை மாலை ஒருமாத்திரை வீதம் சித்தரத்தை கஷாயம் இஞ்சிச்சாறு தாய்ப்பால் இவைகளில் ஏதேனும் ஒன்றில் அனுபானித்து கொடுத்துவர க்ஷயம் 4 சுவாசம் 5 காசம் 5 ஈளை மந்தாரசுரம் சுரம் 94 முதலிய நோய்களை குணமாக்கும்.

சஞ்சீவி மாத்திரை

(சகல ரோகத்திற்கும் பொது பிரயோகம்)

சரக்கு:- இருவி நாபி அரிதாரம் இரசம் கந்தகம் வெங்தான்றிக்காய் சுக்கு மிளகு திப்பிலி இவையாவும் வகைக்கு 1½ விராகனிடை சுத்தி செய்த நேர்வாளம் 6½ விராகனிடை.

செய்முறை:- இவைகளை முறைப்படி சுத்தி செய்து தனித்தனியாக பொடித்து கல்வத்திலிட்டு கையான்தகரைச் சாற்றில் 7 நாள் நன்றாக அரைத்து குன்றி அளவு மாத்திரைகளாய் செய்து நிழலில் உலர்த்தவும் இதனை ஒரு குளிகையாக சாதிக்காய் குடிநீரிலிட மூலவாயுவும் சிறு நீரில் கொடுக்க பல வாயுவுகளும் பாம்பு கடிக்கு பழச்சாறும் மூலநோய்வலி குன்மத்துக்கு நொச்சிலை சாற்றிலும் கபம் 16-க்கும் வெள்ளாட்டின் பாலிலும் இவ்வாறே நோய்களுக்கு தக்க கியாழங்களில் கொடுக்க சகல நோய்களும் குணம் செய்யும்.

அமுர்தாதி மாத்திரை

(பிரதானமாக குழந்தைகளுக்கு நல்லது)

சரக்கு:- அதிமதுரம் கோஷ்டம் ஏலம் கோரோசனை சாத்திரபேதி சண்பகப்பூ மாசிக்காய் இலவங்கம் இவையாவும் வகைக்கு 1/4 பலம் செய்பாகம். இவைகளை தனித்தனியே சுத்தித்துப்பொடி செய்து குளிக்கல்லிட்டு வெட்டிவேர் மாசிபத்திரிவேர் கருந்துளசி விலாமிச்சை இவைகளின் சாறுகளைக் கொண்டு முறையே இரண்டிரண்டு சாமம் அரைத்து குன்றி அளவு மாத்திரை செய்து நிழலிலுலர்த்திக் கொள்ளவும் அளவு குளிகை 1.

அனுபானம் :- மாசிபத்திரி குடிநீரில் கொடுக்க வாந்தியும் முலைப்பாலில் கொடுக்க குடல்படுவன் நீர்படுவன் மாந்தலம் கர்ப்பான் நாவரட்சி வயிற்றெரிவு விடாச்சுரம் வயிற்று உப்பிசம் இருமல் முதலிய நோய்களை குணம் செய்யுமீ.

குறிப்பு : மேற்படி குளிகை உருட்டாது தேன் விட்டு மெழுகாய் அரைப்பதுமுண்டு இதற்கு அமுர்தாதி மெழுகு எனபெயராகும்.

அஷ்ட பயிரவ மாத்திரை

(பல ரோகங்களுக்கு உபயோகப்படும்)

சரக்கு:- வாளம் ½ பலம் இரசகற்பூரம் இலிங்கம் கந்தகம் வீரம் நாபி இரசம் திரிகடுகு சாதிக்காய் சாதிபத்திரி இலவங்கம் இவையாவையும் வகைக்கு 1 விராகனிடை.

செய்பாகம்:- இவைகளைத் தனித்தனி முறைப்படி சுத்தி செய்து குளிகல்லில் சேர்த்து பழச்சாறு முலைப்பால் இவைகளைக்கொண்டும் இரண்டிரண்டு சாமம் பொடுதலைச்சாறு பொற்றலைக்கையான் சாறு நாவற்பட்டைச்சாறு இவைகளினால் ஒவ்வொரு சாமம் அரைத்து மிளகு அளவு மாத்திரைகள் செய்து உலர்த்தவும் இதனை முலைப்பாலில் கொடுக்க 64 சுரங்களும் தேனில் கொடுக்க தீராததோஷங்கள் இலவங்கக்குடி நீரில் கொடுக்க விஷ தோஷங்களும் நீங்கும் பொதுவாக இம்மாத்திரை சகல ரோகங்களுக்கும் முதலில் இம்மாத்திரையைக் கொடுத்து பின் வேறு தருவது நலம்.

கபாட மாத்திரை

(அதிமலப்போக்கை நிறுத்த வல்லது)

சரக்கு:- சாதிக்காய் சாதிபத்திரி பெருங்காயம் நற்சீரகம் ஆதிவிடயம் கிராம்பு அபினி வெந்தயம் லிங்கம் கழற்ச்சிப் பருப்பு குரோசானி ஓமம் இவையாவும் வகைக்கு 1 பலம்.

செய்முறை:- இவைகளைக் கல்வத்திலிட்டு பொடித்துக் கஞ்சா சாற்றால் (கஞ்ச நீரால்) நன்றாக அரைத்து இலந்தை விதை

அளவு மாத்திரை செய்து நிழலிலுலர்த்தி தேனில் மூன்று நாள் கொடுக்க கழிச்சலும் வாழைப்பழச் சாற்றில் கொடுக்க இரத்தகடுப்பு மூலக்கடுப்பு இரத்தக் கிராணி சீக்கிராணி சலக்கிராணி சங்கரகிராணி மலக்கிராணி வாயுக்கிராணி சோராக்கழிக்கிராணி அதிசாரக் கடுப்பு முதலானக் கழிச்சல் நோய் குணமாகும்.

அர்த்தநாரீஸ்வர மாத்திரை

(உடலில் ஒருபக்கம் ஏற்படும் சுரம் நீங்கும்)

சரக்கு:- இரசம் கந்தி நாபி வெங்காரம் இவையாவும் வகைக்கு 1 பலம்

செய்முறை:- இவை நான்கையும் சுத்தித்து கல்வத்தில் இட்டு நொச்சியிலைச் சாற்றால் இரண்டு சாமம் அரைத்து சிறுமாத்திரைகளாகச் செய்து உலர்த்தி ஒரு குகையிலிட்டு 7 சீலை செய்து ஒருபானையில் பாதி உப்பு இருக்கும் படி கொட்டி அதன் மீது மேற்படி குகையை வைத்து மேலும் உப்பினால் மூடி மேற்சட்டி மூடி 7-சீலை மண் செய்து அடுப்பின் மீது வைத்து கமலாக்கினியால் 4-சாமம் எரித்து ஆறவிட்டு எடுத்து கல்வத்திலிட்டு செங்கழுநீர் கிழங்கு சாறு நொச்சிசாறு பாகற்சாறு இவற்றால் முறையே 4 சாமம் அரைத்து குன்றி அளவாக மாத்திரை செய்து நிழலில் உலர்த்தவும் நொச்சிசாற்றில் கொடுக்க சுரங்கள் தீரும் இத்துடன் நசியமும் இட உடலில் ஒரு பக்கம் ஏற்படும் சுரம் நீங்கும்.

பத்தியம்:- ஆட்டுப்பால் கஞ்சி

குழந்தைகளுக்கு கார மாத்திரை

சரக்கு:- சுக்கு 1 பலம் மிளகு 2 பலம் கருஞ்சீரகம் 1 பலம் சிறுதேக்கு 1 பலம் கண்டதிப்பிலி 1 பலம் வாய் விளங்கம் 1 பலம் வசம்புசுட்டக்கரி 1 பலம் திப்பிலி 1 பலம் ஓமம் 1 பலம் கருப்பு உப்பு 1 பலம் கிராம்பு ½ பலம் சீரகம் 1 பலம் பூண்டு 1 பலம் சதாப்பு இலை 1 பலம்

செய்ப்பாகம்:- இவற்றில் சூர்ணிக்க வேண்டியவைகளை சூரணித்து மற்ற சரக்குகளுடன் கல்வத்திலிட்டு வெந்நீர்விட்டு 2 அல்லது 3 சாமம் அரைத்து மெழுகு பதத்தில் சுண்டு விரல் கனமும் ஒரு அங்குல நிகளமும் இருக்கும்படி திரட்டி நிழலில் உலர்த்தி வைத்துக்கொள்ளவும்

பிரயோகம்:- இந்தக் கார உருண்டையைக் குழந்தைகளுக்கு ஸ்நானம் செய்தவுடன் சந்தனக் கல்லில் சிறிதுமுலைப்பாலிட்டு வயதுக்கேற்றவாறு 7-8 உரை உரைத்தும் முலைப்பாலில் கலக்கி கொடுக்கவும்.

தீரும் வியாதி:- இது குழந்தைகளுக்கு காணும் மந்தத்தை நீக்கி தீபனத்தை அதிகப்படுத்தி நல்லபடி ஆகாரத்தை விரும்பும்படி செய்யும் வாத ரோகத்தையும் சீதள ரோகத்தையும் அனுகவொட்டாது குடல் இரப்பை முதலியவற்றின் தோஷத்தை நீக்கி நோயின்றி வளரச்செய்யும்.

பத்தியம்:- குழந்தைகளுக்கு இயற்கையான தாய்பால் அல்லது பசுவின் பால்

குழந்தைகளுக்கு சளி மாத்திரை

சரக்கு:- சுக்கு திப்பிலி மிளகு ஓமம் கிராம்பு பொரித்த வெங்காரம் சுத்தி செய்த லிங்கம் வகைக்கு பலம் ½ இவைகளை பொடித்து கல்வத்திலிட்டு எலுமிச்சம் பழச்சாற்விட்டு நன்றாக அரைத்து பாசிபயர் முதல் மிளகு அளவு வரை உருட்டி உலர்த்தி பத்திரப்படுத்துக.

உபயோகம்:- இருமல் சளி ஜுரம் வாந்தி அஜீரணம் அஜீரணபேதி முதலிய வியாதிகளை குணம் செய்யும்.

அனுபானம்:- குழந்தைகளுக்கு தாய் பாலில் கொடுக்கவும் குழந்தை பிறந்து 15 தினங்கள் சென்ற பின்பே இம்மாத்திரை தரவும்.

வெள்ளை மாத்திரை

சரக்கு:- பூரம் கோதுமை வாளம் இவையாவையும் வகைக்கு பலம்

செய்முறை:- வாளத்தை சுத்தி முறைப்படி சுத்தி செய்து மேற்படி எடை எடுத்து கொள்ளவும் கோதுமைமாவும் மேற்கண்ட யெடை எடுத்து யாவையும் கல்வத்திலிட்டு அரைத்து பசும்பால் சிறிது சிறிதாக விட்டு அரைத்து மாத்திரைகளாக உருட்டி உலர்த்தி பாட்டிலில் வைத்துக்கொள்ளவும்.

ஜீவரத்தின மாத்திரையைபோல் அனுபானத்தில் கொடுக்கவும்.

சாரவல்லி மாத்திரை

சரக்குகள்:- பெருங்காயம் தோலா எடை 1 சீரகம் 2 தோலா வாய்விளங்கம் 3 தோலா கொத்தமல்லி 4 தோலா செவ்வியம் 5 தோலா சுக்கு 6 தோலா மிளகு 7 தோலா அரிசி திப்பிலி 8 தோலா கோஷ்டம் 9 தோலா கடுக்காய்த்தோல் 10 தோலா சித்ரமூல வேர்ப்பட்டை 11 தோலா ஓமம் 12 தோலா பழயவெல்லாம் மேற்படி சூரணத்தின் எடைக்கு இரண்டு பங்கு சேர்த்து உரலிலிட்டு இடித்துக்கொள்ளவும்.

அளவு:- கழற்சிக்காயளவு காலை மாலை சாப்பிடவும் வாத ரோகம் 80ம் குணம் செய்விக்கும்.

அண்டவாயு மூச்சுபிடிப்பு இடுப்பு பிடிப்பு சூதக வாய்வு கற்ப சம்பந்தப்பட்ட நோய்கள் குணம் செய்து கெற்பம் தரிக்க வழிசெய்யும்.

சித்த மகரத்துஜம் என்னும் சந்திரோதய மாத்திரை

சரக்கு:- தங்க ரேக்கு 1 விராகனிடை சுத்திசெய்து ரசம் 8 விராகனிடை சுத்தி செய்த கெந்தகம் 16 விராகனிடை

இவைகளை சேர்த்து சிவப்பு பருத்திப்பூ சார்ற்றாலும் கற்றாழைச்சாற்றாலும் வகைக்கு ஒரு சாமம் அரைத்து உலர்த்தி சீலைமண்செய்து சென்ற காசிக்குப்பியில் போட்டு பலபக்கல்லால் மூடி சீலை மண் செய்து ஒரு சட்டியில் 5 விராகனிடை மணலைப்போட்டு அதன் மேல் மேற்படி குப்பியை வைத்து பின் குப்பியின் கழுத்து வரையிலும் மணலைக்கொட்டி சட்டியால் மூடி சீலைமண் செய்து தீபாக்கினியால் மூன்று நாள் எரித்து ஆறவிட்டு குப்பியை உடைத்து மருந்தை யெடுத்து அத்துடன் சாதிக்காய் பச்சைகற்பூரம் கிராம்பு சமுத்திரசோகை விதை வகைக்குவிராகனிடை 1 கஸ்தூரி 4 குன்றிமணி எடை இவைகளை யெல்லாம் சேர்த்து வெற்றிலைச் சாற்றால் அரைத்து குண்டு மணி அளவாய் உருட்டி மாத்திரைகளாக்கி தினம் காலை மாலை தாம்பூலத்துடன் 1 முதல் 2 மாத்திரை வரை சாப்பிட்டால் தாது புஷ்டி உண்டாகி அனேக ஸ்திரீகளை போகிக்க சக்தி உண்டாகும்.

நவமூலத்துக்கு மாத்திரை

சரக்கு:- சுக்கு கெந்தகம் இந்துப்பு ரசம் வெங்காரம் இவையாவும் வகைக்கு 2 பலம் சுத்திசெய்த வாளம் 5 பலம்

செய்முறை:- இவைகளை குமரிச்சாற்றில் (சோத்து கற்றாழை) அரைத்து குன்றி அளவாய் மாத்திரைகள் செய்து உலர்த்தவும் இந்த மாத்திரை 1 அல்லது 2 தேகத்திற்கு தக்கபடி வாழைப்பழம் தேன் நெய் இவைகளினால் அனுபானித்துக் கொடுக்க மூல மூளை வேரோடு கரைந்து விடும் 3 நாளைக்கு ஒரு தடவையாக 3-நாளைக்கு கொடுக்க மூல முளை கரைந்து குணமாகும்.

மேக வாயு மாத்திரை

சரக்கு:- பூரம் 3 பலம் லிங்கம் 3 பலம்

செய்முறை:- இவைகளை கல்வத்திலிட்டு நன்றாய் அரைத்து ஒருமண் ஓட்டில் போட்டு சிறுதீயில் வைத்து எரித்து

புகையாவண்ணம் கொடிக்கள்ளி கரிசிலாங்கண்ணி கொள்ளுக்காய்வேளை வெள்ளை சாட்டரனை இவைகளின் தனிச்சாற்றைச் சமனாகக் கலந்து நான்கு சாமம் சுருக்கு கொடுத்து பின்னர் கல்வத்தில் வழித்துப்போட்டு அதனுடன் 3 பலம் சுத்திசெய்து ஓமம் சேர்த்து முன் கலந்து வைத்துள்ள சாற்றில் மெழுகு பதம் காண யாவையும் அரைத்து மாத்திரைகள் மிளகு பிரமாணம் செய்து நிழலில் உலர்த்தி. சீசாவில் அடைத்திடு

குணம்:- இம்மாத்திரையிலொன்றைப் பனைவெல்லத்தில் வைத்து தினம் இருவேளை 5. 7 நாள் சாப்பிட கை கால் பிடிப்பு தீராத கைகால் குடைச்சல் முதலியவைகள் நீங்கும் இதற்கு புளி தள்ளி இச்சாபத்தியமாக இருத்தல் வேண்டும் சில சரீரங்களுக்கு புதிய அவிழ்தமாக இருக்கும் போது பல் ஈரில் நீர் சுறப்பு காணும் உடனே அவிழ்தம் கொடுக்காமல் நிறுத்திவிடவும்.

இம்மாத்திரைகள் செய்து நாள் பட்டதாய் இருப்பின் இந்த உபத்திரவமும் இருக்காது. பல வைத்தியர்களால் கைவிடப்பட்ட போது இச்சிகிச்சை செய்தல் கீர்த்திக்கிடமாகும்

இரா மாத்திரை

சரக்கு:- சுத்திசெய்த அறபிபோளம் 3 விராகனிடை ரோஜப்புச் சூரணம் மஞ்சள் கடுக்காய்ச் சூரணம் ரூமஸ்கதி சூரணம் சத்திசெய்த சிவதைவேர் சூரணம் இவைகள் வகைக்கு 1 விராகனிடை சுத்திசெய்த மாமூதா ½ விராகனிடை

செய்முறை:- இவை யாவையும் ஒன்றாய் சேர்த்து இடித்து மை போல் அரைத்துப் பயறு அளவாக மாத்திரைகள் செய்து கொள்ளவும் இராக்காலங்களில் ½ மாத்திரை சாப்பிட காலையில் சுகமாக மலம் போகும்.

குணம்:- தலைவலி கண்ணீருள் ரோகம் வயிற்றுவலி குணமாகும்.

சிரோத்தின மாத்திரை

சரக்கு:- இலிங்கம் 1 பலம் லவங்கம் 1 பலம் கோஷ்டம் 1 பலம் அதிமதுரம் 1 பலம் வெங்காரம் 1 பலம் திப்பிலி 1 பலம் அக்காரகாரம் 1 பலம் குங்குமப்பூ 1 விராகனிடை கோரோசனை 1 விராகனிடை பச்சைகற்பூரம் 1 விராகனிடை

செய்பாகம்:- மேற்படி சரக்குகளை சூரணித்துக் கல்வத்திலிட்டு இஞ்சிசார் முலைப்பால் ஒவ்வொன்றிலும் இரண்டுநாள் அரைத்து மெழுகு பதத்தில் பயறு அளவு மாத்திரைகள் ஆக்கவும்.

பிரயோகம்:- தினம் 1 வேளை இஞ்சி சுரசம் தேன் முலைப்பால் ஏதேனும் ஒன்றில் கொடுக்கவும்.

தீரும் வியாதிகள்:- பழய சுரம் கபம் காசம் தாகம் தும்மல், ஏப்பம் சயித்தியம், தலைவலி, பிடரிவலி, இவைகள் குணமாகும்.

சிரோரத்தின மாத்திரை
(வெளிப்பிரயோகம்)

சரக்கு:- கஸ்தூரி மஞ்சள் ½ பலம் சாம்பிராணி ½ பலம் சுக்கு ½ பலம் வெங்காரம் ½ பலம் மிளகு ½ பலம் சாதிக்காய் ½ பலம் இலவங்கம் ½ பலம் ஓமம் ½ பலம் கற்பூரம் ½ பலம் பூசும் மஞ்சள் ½ பலம்.

செய்முறை:- யாவும் சூரணித்து முலைப்பால் விட்டு அரைத்து மெழுகுபதத்தில் சுண்டக்காய் அளவு மாத்திரைகள் செய்து உலர்த்தி வைத்துக்கொள்ளவும்.

பிரயோகம்:- வேண்டும்போது இதிலொரு மாத்திரையை முலைப்பால் இழைத்து நெற்றி பொறி கன்னம் முதலிய இடங்களில் தளமாய் பூசிவர சீதளநீரை வற்றச்செய்து தலைவலி தலைபாரம் முதலியவற்றை குணப்படுத்தும்.

பிராணாயாம மாத்திரை

சரக்கு சாதிக்காய் 10 விராகனிடை கிராம்பு 5 விராகனிடை ஏலம் 5 விராகனிடை அதிமதுரம் 5 விராகனிடை

செய்பாகம்:- சரக்குகள் யாவும் தனித்தனியே இடித்து சூரணம் செய்து கல்வத்திலிட்டு கஞ்சா இலைச்சார் விட்டு நெகிழ வரைத்து ரவியில் உலர்த்தவும் இதுபோல் 10 தடவை சார்விட்டு ரவி உலர்த்திய பின் மெழுகு பதத்தில் மிளகு அளவாக உருட்டி ரவியில் உலர்த்தி தங்கத்திலான டப்பியில் பதனப்படுத்தவும்.

குணம் இந்த குளிகையில் ஒன்றை வாயிலிட்டு வாசியை சுளினைக்குயேற்றிவர அமுர்தம் கிடைக்கும் அதனை பானம் செய்யவும் இதனால் தேகம் அமுர்தரச தேகமாகும்.

காமகேசரி மாத்திரை

சரக்கு:- மதனகாமப்பூ ½ பலம் ½ பலம்ஜாதிக்காய் ½ பலம் முருங்கைவித்து ½ பலம் ½ அரசம்வித்து ½ பலம் அதிமதூரம் ½ பலம் கிராம்பு ½ மராட்டிமொக்கு ½ பலம் ஆலம்வித்து அத்திவித்து ½ பலம் அபினி ¼ பலம் சாம்பிராணி பதங்கம் ¼ தங்க செந்தூரம் 1 விராகனிடை

செய்முறை:- இங்கு கூறப்பட்டது 12 சரக்குகளில் இடித்து சூரணம் செய்ய வேண்டியவற்றை சூரணித்து மிகுதியுள்ள சரக்குகளுடன் தட்டிக் கல்வத்திலிட்டு முருங்கைப்பூச்சாறு விட்டு 4 சாமம் அரைத்து கடலை பிரமாணம் மாத்திரைகள் செய்து நிழலில் உலர்த்தி சீசாவில் பத்திரப்படுத்து.

பிரயோகம்:- இம்மாத்திரையை வேளைக்கு ஒன்றாக காலை மாலை காய்ச்சிய பசுவின் பாலில் தூள் செய்து போட்டுக்கலக்கி 40 நாள் உண்டு வருக.

தீரும்வியாதி:- தாது பலவீனம் குணமாவதுடன் தேக சக்திவுண்டாகும் கிரமமாக ஒரு மண்டலம் சாப்பிட

சந்தர்ப்பபடாவிட்டால் குறைந்த பட்சம் 7 நாள் தொடர்ச்சியாக சாப்பிடவும்.

பத்தியம்:- மாத்திரை உட்கொள்ளும்போது புளி தள்ளவும் இச்சாபத்தியம்.

ஆண் தன்மை அதிகரிக்கும் விந்துகட்டும்

கெஜகெம்பீர மாத்திரை

சரக்கு:- நீர்விஷம் விராகனிடை 1 அம்பர் குன்றி எடை குங்கும்ப்பூ விராகனிடை ½

செய்பாகம்:- இவைகளை சூரணித்து கல்வத்திலிட்டு பன்னீர்விட்டு அரைத்து மெழுகுபதத்தில் 1. 2 குன்றி எடை அளவு மாத்திரைகளாகச் செய்து நிழலில் உலர்த்திவேளைக்கு 5 மாத்திரை வீதம் தினம் 5 வேளை கொடுக்க இந்திரிய உடைச்சலையும் குறிதளர்ச்சியையும் குணப்படுத்துவதுடன் இருதயம் மூளை இவைகளை அனுசரித்த ரோகங்களையும் குணமாக்கும்.

இந்திரியகட்டு மாத்திரை

சரக்கு:- எட்டிக் கொட்டை சுத்தி செய்து கருகவருத்தது 1 தோலா சாதிக்காய் 1 தோலா கிராம்பு 1 தோலா சாதிபத்திரி 1 தோலா புரசம்பிசின் 1 தோலா மிளகு 1 தோலா சுக்கு 1 தோலா

செய்முறை:- மேற்படி யாவையும் தனித்தனியே இடித்து சூரணித்து சம அளவில் கலந்து கல்வத்திலிட்டு எலுமிச்சம்பழம் சாறுவிட்டு நன்றாக அரைத்து பட்டாணி அளவாக மாத்திரைகள் செய்து உலர்த்தி வைத்துக்கொள்ளவும்.

உபயோகம்:- காலை மாலை ஆகாரத்துக்குபின் 1 மாத்திரை அல்லது 2 வாயிலிட்டு தண்ணீர் அல்லது காபி பால் மோர் ஏதேனும் ஒன்று சாப்பிட்டு வரவும்.

இதன் குணம்:- பசி அதிகரிக்கும் அஜீரணத்தை போக்கி ஜீரண சக்தியை உண்டாக்கும் கை கால் வலி உடல்சோர்வு அசதி தேகதுடிப்பு பீடிப்பு மூலம் கால் பிடிப்பு சூலை மார்வலி முதலி யவைகளை நீக்கி குணம் செய்யும்.

தாது புஷ்டி மாத்திரை

சரக்கு:- வாலைரசம் 3 விராகனிடை சுத்திசெய்த லிங்கம் 2 விராகனிடை

செய்முறை:- இவ்விரண்டையும் கல்வத்திலிட்டு அரைத்து பிறகு சுத்தி செய்த எண்ணெய் வெங்காரம் 1 சுத்தி செய்த கஞ்சா அபின் இவைகள் வகைக்கு பலம் அரை சேர்த்து அரைத்து அத்துடன் கிராம்பு முருங்கை வித்து சாதிக்காய் சாதிபத்திரி கோரைக்கிழங்கு பூனைக்காலி விதை சாரப்பருப்பு பூமிசர்க்கரைக்கிழங்கு வகைக்கு அரைபலம் சூரணித்து வஸ்திரகாயஞ் செய்து சேர்த்து ஒரு முற்றின தேங்காய்க்குள் அடைத்து சாணியால் கவசம் செய்து 10-15ல் எருவில் புடம் போட்டு எடுத்து தேங்காயை உடைத்து முருங்கைப்பூ சாற்றால் 3 சாமம் அரைத்து கழற்சி காய் அளவு மாத்திரைகளாக்கி உலர்த்திவைத்துக் கொண்டு 1. 2 மாத்திரைகள் சூரணித்து சீனியுடன் சேர்த்துப்போட்டு காய்ச்சி உடனே சாப்பிடவும் இவ்விதமாக காலை மாலை இருநேரம் 20 நாள் (அரைமண்டலம்) சாப்பிட்டால் விந்து ஸ்தம்பனமாகி இடுப்புவிடமாட்டாது போகம் வெகு நேரமிருக்கும்.

தாதுபுஷ்டி சுவர்ண மாத்திரை

சரக்கு:- தங்கபஸ்பம் மதனபூ அபின் கிராம்பு சாதிக்காய் மாராட்டிமொக்கு சாம்பிராணி பதங்கம் முருங்கை வித்து ஆலம்வித்து அரசம்வித்து அத்திவித்து அதிமதூரம் இவையாவும் வகைக்கு 5 விராகனிடை

செய்முறை:- இவைகள் 12-ம் வகைக்கு 5 விராகனிடை சேர்த்து முருங்கைப்பூ சாற்றால் அரைத்து 5. கிரேன் எடை உள்ள

மாத்திரைகளாக செய்து கொள்ளவும் அதாவது பெரிய குண்டுமணி அளவு மாத்திரைகளாக செய்யவும் தினம் காலை மாலை ஒவ்வொரு மாத்திரைகளாக சாப்பிட்டு உடனே பசும் பாலில் முருங்கைப்பூ போட்டுக் காய்ச்சி சாப்பிட்டு வந்தால் விந்து ஊறி தம்பன சக்தியுண்டாகி தினம் 100 ஸ்திரீகளுடன் போகம் செய்தாலும் விந்து விடாது ஸ்திரீகள் நடுங்குவார்கள் இந்த மாத்திரையை சாப்பிட்டால் சிலருக்கு கிரிகிரிப்பு மயக்கம் உண்டாகும் ஆதலால் அவர்கள் குறைந்த அளவில் சாப்பிட வேண்டியது இம்மருந்து அனுபவத்தில் மிகச்சிறந்ததாக அறியப்பட்ட முறையாகும்.

பஞ்சீகரண மாத்திரை

சரக்கு:- அரிதாரம் 1½ பலம் வீரம் 1¼ பலம் கௌரி 1 பலம் வெள்ளை பாஷாணம் ½ பலம் லிங்கம் ¼ பலம்

செய்முறை:- மேற்கூறப்பட்ட சரக்குகளை விதிப்படி செய்து பின்பே மேற்கூறியபடி எடை நிறுவை செய்து இவையாவும் நின்ற எடைக்கு சுத்தி செய்த கெந்தகத்தை நிறுத்தெடுத்து ஒரு இரும்பு சட்டியிலிட்டு கரி நெருப்பில் வைத்து உருக்கி அது சமயம் எடை செய்த பாஷாண சரக்குகளை நன்கு தனித்தனியே பொடி செய்து பின் ஒன்று சேர்த்து அரைத்து எடுத்த தூளை உருக்கப்பட்டிருக்கும் கெந்தகத்திலி ட்டு ஒரு குச்சியால் ஒன்று சேரும் படி கிளறியாவும் கலந்ததும் ஒரு கல்திருகை துவாரத்தில் சிறிது நெய் தடவி இந்த பள்ளத்தில் மேற்படி உருக்கினதைவிட உறைந்து கட்டியாகிவிடும் இந்த செட்டாகிய கட்டியை முன் கூறியபடி உரைக்கும் படியாகவோ தூளாகிப்பொடி செய்தோ அல்லது மாத்திரையாகவாவது உபயோகிக்கலாம்.

தீரும் நோய்கள்:- வாய்வு 80 குணமாகும் மற்றும் குன்மம் நெஞ்சு அடைப்பு பிரமை மூர்ச்சை சயரோகம் வாந்தி ஏப்பம் சுரம் தொண்டைக்கம்மல் காமாலை சோகை சன்னி சன்னி வலிப்பு விஷகடி ரோகங்கள் முதலிய ரோகங்களும் மற்றும் பல ரோகங்களும் குணமாகும்.

ஆமையோட்டு மாத்திரை

ஒரு பலம் ஆமையோட்டை நொறுக்கி இதன் மேல் செம்மண் பூசிய துணியைப் பந்தளவு சுற்றிக் காயவைத்துக் கொளுத்தி எரித்து எல்லாம் அவிந்து போன பின்பு ஆமையோட்டை எடுத்து நன்றாக நுணுக்கி சிவக்க வறுத்துப்பொடி செய்து வைத்துக்கொள்ளவும்.

பிறகு சுத்தி செய்த பூரம் 1 விராகனிடை சுத்தி செய்த வாளம் 1½ கடுக்காய்தோல் தூள் சின்னப்படி காலே அரைக்கால்படி எடுத்துக்கொரண்டு முன்கூறிய ஆமையோடு தூள் முதல் கடுக்காய் தோல் தூள் வரையில் ஒன்றின் பின் ஒன்றாக கல்வத்தில் போட்டு எல்லாவற்றையும் நன்றாக உறவாக்கும்படி அரைத்து பிறகு எலுமிச்சம் பழச்சாறு தேவையானது விட்டு இரும்புத் தகட்டால் தள்ளிக் கொண்டே அரைக்கவும் இப்படி 2 அல்லது 3 நாள் அரைத்து மிளகு பிரமாணம் மாத்திரைகள் உருட்டிக் காயவைத்துக் கொள்ளவும்.

குறிப்பு:- மருந்தை முதல் நாள் அரைத்து அறவை நிறுத்திய பிறகு அப்படியே கல்வத்துடன் முன்கூறிய மருந்தை வைத்து அதில் துரு பிடிக்காத 2, 3 இரும்புக் கத்திகளையோ அல்லது இரும்புத் தகடுகளையோ துண்டுகளையோ மருந்தைச் சுற்றி மருந்தில் சொறு விட்டு மூடி வைக்கவும் இப்படி, 2 அல்லது 3 நாள் மருந்து அரைத்தவுடன் செய்து (2 அல்லது 3 இரவு) மாத்திரைகள் உருட்டிக்கொள்ளவும்.

அனுபானம்:- வெந்நீர் தாய்ப்பால் கபம் அதிகமாக இருந்தால் இஞ்சிசாறு

தீரும் நோய்:- மாந்தம் கபம், ஜ்வரம்

பத்தியம்:- பாலுண்ணும் குழந்தையாய் இருந்தால் தாயார் புளிமோர் குளிர்ந்த ஜலம் நீக்கவும்.

சரக்கு:- அர்த்தை ஓமம் அதிமதுரம் கிராம்பு சுக்கு இவைகள் வகைக்கு தோலா 1 திப்பிலி பொரித்த வெங்காரம் விராகனிடை 1 மிளகு சுத்தி செய்த ஜாதிலிங்கம் விராகனிடை 2. முன் கூறியவற்றை தேவையான எலுமிச்சம்பழச்சாற்றில் 2 ஜாமம் அரைத்து பயறு அல்லது உளுந்துபிரமாணம் முதல் மிளகு பிரமாணம் வரையில் மாத்திரைகளாக உருட்டி நிழலில் காயவைத்து எடுத்துக்கொள்ளவும்.

அனுபானம்:- (1) ஆலம் விழுது கஷாயத்தில் தேவையான மாத்திரைகளை கொடுக்க பூரண ஜ்வரமும் (2) ஜீரகம் லவங்கம் சேர்ந்த கஷாயத்தில் கொடுக்க ஜ்வரமும் தாகமும் நீங்கும் (3) ஊமக் கஷாயத்தில் மந்தஜ்வரமும் (4) பூண்டு ரஸத்தில் வலிப்பு இசிவுகளும் (5) கற்பூரவள்ளிச்சாற்றில் கோழைக்கட்டும் (6) சுக்கு கஷாயத்தில் வெப்பு ஜ்வரமும் (7) இஞ்சி சாற்றில் பித்த ஜ்வரமும் (8) சித்தரத்தை கஷாயத்தில் கபஜ்வரமும் (9) தேனில் ஜ்வரமும் (10) வெற்றிலைச் சாற்றில் ஜலதோஷமும் தொண்டை கட்டும் (11) தாய்ப்பாலில் ஜ்வரம் ஜன்னிகளும் (12) துளசி அல்லது கடுஞ்சாங்கோரை (நாய்த்துளசி) பிட்டு அவிழ்த்து பிழிந்த சாற்றில் கொடுக்க எல்லா ஜ்வரங்களும் மாந்தங்களும் போகும்.

குறிப்பு:- இத்துடன் ஆமை யோடடு பற்பம் சேர்த்துச் செய்து கொண்டால் இன்னும் விசேசபலனைக்கொடுக்கும் இந்த மாத்திரை பாலகர்களுக்கு உண்டாகும் நோய்களுக்கெல்லாம் சஞ்சீவி போன்றது.

அதிமதுராதி மாத்திரை

சரக்கு:- அதிமதுரம் அரிசி திப்பிலி கோஷ்டம் லவங்கம் பட்டை இலவங்கப்பத்திரி நாகசேகரம் சந்தனம் சகஸ்ரபேதி இலவங்கம் பற்படாகம் ஜாதிபத்திரி இவைகளின் சூர்ணம் வகைக்கு 1 விராகனிடை நல்ல கோரோசணை 4 விராகனிடை கோரோசனையை தனியாக நன்றாக பொடிசெய்து இளநீர் சிறுகவிட்டு 4 சாமம் அரைத்து குன்றிமணி பிரமாணம் மாத்திரைகள் செய்து நிழலில் உலர்த்தி வைத்துக் கொள்ளவும்

அளவு:- ½ முதல் 1 மாத்திரை வியாதி பலத்துக்கு தகுந்தபடி சக்கரை முதலிய அனுபானங்களில் கொடுக்கலாம்.

தீரும் நோய்கள்:- முக்குகணம் தேரைகணம் மகாகணம் சூழிகணம் கணரோகத்தால் ஏற்படும் அசதி கணரோகத்தில் உண்டாகும் பேதி இரத்தபேதி தோஷங்கள் முதலியவைகள் நீங்கும் மற்றும் இந்த மாத்திரையை அந்தந்த வியாதிக்கு ஏற்ற அனுபானங்களில் கொடுக்க விசேஷமான குணத்தையே தரும்.

முத்துச்சிப்பி பற்பம்

5 பலம் முத்து சிப்பியை 10 வறட்டியின் நடுவில் வைத்துப் புடமிட்டு வெந்த பின் கல்வத்திலிட்டு குமரிச்சாற்றினால் 2 சாமம் அரைத்து வில்லை செய்து ரவியில் உலர்த்திப்பெரின்னாங்காணி இலையை அரைத்துச் சிறுதேங்காய் பிரமாணம் அவ்வில்லைக்கு கவசம் செய்து இரண்டு மூன்று சீலை செய்து சாம்பலிற் புறட்டி 30 வறட்டியிற் புடமிடப்பற்பமாகும்.

பிரயோகம்:- வேளைக்கு ¼ அல்லது ½ பணவெடை தினம் இருவேளை 7-நாள் அல்லது 10-நாள் நெய்யில் உட்கொள்ள உஷ்ணத்தால் உண்டான கபரோகங்கள் நிவர்த்தியாகும்.

பத்தியம்:- இச்சாபத்தியம்

முத்துச்சிற்பி பற்பம்

கற்சுண்ணாம்பையும் அப்பளா காரத்தையும் ஜலம்விட்டு கரைத்து ஒரு மண்பாண்டத்தில் விட்டு அதனில் தேவையான அளவு முத்துச் சிப்பிகளைப் போட்டு அடுப்பிலேற்றி ஒரு சாமம் எரித்து ஆறவிட்டுச் சிப்பிகளை தேய்த்து அலம்பியெடுக்க சுத்தியாகும்.

மேற்கண்டபடி சுத்தி செய்ததில் இரண்டு பலம் நிறுத்தெடுத்துக் கல்லுரலில் போட்டுக் கடற்பாறையால் இடித்துத்தூள் செய்து கல்வத்தில் போட்டு மணத்தக்காளிச்சாறு

சிறிது சிறிதாக விட்டு 4 சாம்ம் அரைத்து மெழுகு பதத்தில் ஒரே வில்லையாக தட்டி உலர்த்தி அகலிலிட்டு சீலை செய்து காயவைத்து 30 40 விராட்டியால் புடமிட பற்பமாகும்.

உபயோகம்:- தினம் இருவேளைக்கு ¼ ½ குன்றியெடை நெய்யில் சாப்பிட தேக காங்கை நீர் எரிச்சல் இருமல் அஜீரணபேதி பித்த எரிவு நாவாட்சி முதலியவைகள் குணமாகும்.

சிப்பி பற்பம்

இரண்டு பலம் சுத்திசெய்த முத்துச்சிற்பிகளை கல்லுரலில் போட்டு கடப்பாறையில் இடித்துத் தூள்செய்து கல்வத்திலிட்டு மணத்தக்காளிச்சாற் கொஞ்சங் கொஞ்சமாய் விட்டு 4 சாமம் அரைத்து மெழுகுபதத்தில் ஒரே வில்லையாக தட்டி காயவைத்து அகலில் அடக்கிச்சீலைமண் செய்து காய்ந்தபின் 30, 40 வறட்டியில் புடமிடப் பற்பமாகம். இந்த பற்பத்தில் வேளைக்கு ¼, ½ குன்றியெடை நெய்யில் அனுபானம் செய்து தினம் இருவேளைக் கொடுத்து வரத்தேககாங்கை நீர் எரிச்சல் இருமல் அஜீரணபேதி பித்த எரிச்சல் நாவறட்சி முதலியவைகள் குணமாகும்.

நல்முத்து பற்பம்

ஒரு பலம் நல்முத்தைக் கல்வத்திலிட்டு கோழி முட்டையின் மஞ்சள் கருவால் அரைத்து பில்லை தட்டி உலர்த்தி ஓட்டிலிட்டு சீலை மண் செய்து குக்குட புடம் போட சுண்ணமாகும் வெற்றிலைக்கு தடவி தாம்பூலம் போட்டுக் கொண்டால் கபரோகங்கள் 96-ம் தீரும்.

கற்பூர சுண்ணம்

ஒரு பலம் நாட்டு கற்பூரத்தை கல்வத்திலிட்டு கற்பூரவல்லி சாற்றில் ஒரு சாமம் அரைத்து வில்லை தட்டி நிழலில் உலர்த்தி ஓட்டிலிட்டு சீலைமண் செய்து கோழிப்புடம் போட சுண்ணமாகும். தாம்பூலத்துடன் போட்டுக் கொண்டால் தேகம் வச்சிரசரீரமாகும் சகலகபரோகங்களும் மலசலக்கட்டுகள் தீரும்.

சங்கு பற்பம்

3 பலம் வெள்ளை சங்கை ஒரு இரும்பு உரலில் போட்டு இடித்துத் தூள் செய்து கல்வத்தில் போட்டுப் பிரண்டைச் சாறு விட்டு 2 சாமம் அரைத்து 4, 5 வில்லையாகச் செய்து காயவைத்து ஒரு அகலில் பரப்பி மேல் அகல் மூடிச்சீலை செய்து 20, 25 விரட்டியால் புடமிடவும் இப்படிபுடமிட்ட பற்பத்தை எடுத்து மீண்டும் கல்வத்தில் போட்டு முன் போல் 35 புடமிட்டு வைத்துக்கொண்டு வேளைக்கு 1 .2 குன்றி எடை நெய் வெண்ணெய் முதலிய, அனுபானங்களில் தினம் காலை மாலையாக இருவேளை கொடுத்துவர வாதகுன்மம் நீர் சுருக்கு நீர் எரிச்சல் முதலியவைகள் போக்குவிக்கும் வயிற்றுவலிக்கு எலுமிச்சம் பழரசத்தில் அனுபானமாக கொடுக்க வயிற்றுவலி குணமாகும்.

சங்கு பற்பம்

3 பலம் சங்கை சிறுதுண்டுகளாக நறுக்கி ஒரு பீங்கானில் போட்டுக் கீழாநெல்லிச்சாறு விட்டு 3 நாள் ஊரவைத்து 4-ம் நாள் சுத்தமாக ஜலம்விட்டு அலம்பி ஒரு குடுவையில் போட்டு மூழ்க கீழாநெல்லிச்சாறு விட்டு வாய்க்கு ஒரு மூடியிட்டு சீலை செய்து 30 விரட்டியில் புடமிடவும் சரிவரவெளுத்துப் பூரிப்பு இல்லாதிருந்தால் மீண்டும் அதனைக் கல்வத்தில் போட்டு ஷெ மூலிகைச்சாற்றை விட்டு 2 சாமம் அரைத்து 4, 5 வில்லைகளாகக் தட்டி காயவைத்து ஓட்டில் அடக்கிச் சீலை செய்து 25 வறட்டியில் புடமிடவும் இதன் உபயோகம் முன் முறையில் கூறப்பட்டதேயாகும்.

குறிப்பு : முன்போல் நற்சங்கு இலை கியாழமிட்டு அரைத்து புடமிடுவது சாலசிறந்தது.

சங்கு பற்பம்

சங்கை சிறுதுண்டுகளக நறுக்கி 2 பலம் எடுத்து குப்பைமேனிச் சாற்றிலேனும் 3 நாள் ஊரவைத்துப் பின்னர்

ஒரு குடுவையில் போட்டு அவை மூழ்க எச்சாற்றில் ஊரப்போட்டதோ அச்சாற்றை விட்டுச் சில்லு மூடிச்சீலை செய்து காய்ந்தவுடன் 10 வறட்டியில் புடமிட பற்பமாகும்.

பிரயோகம்:- வேளைக்கு ½ அல்லது பணவெடை வீதம் காலை மாலை பழச்சாற்றிலேனும் வெண்ணையிலேனும் உட்கொள்க இரண்டு மூன்று வேளையில் மார்நோய், மார் எரிச்சல், மார் அடைப்பு நீர் சுருக்கு வெள்ளை முதலியன பரிகரிக்கப்படும்.

பத்தியம் : இச்சாபத்தியம்.

முன்முறை போல் ஆடாதொடை இலைச்சாற்றிலும் தாமரை இலைச்சாற்றிலும் புடமிட உயர்வாகும்.

சங்கு பற்ப சுன்னம்

5 பலம் சங்கு துண்டுகளை பழச்சாற்றிலூரப் போட்டு பழச்சாறு விட்டு எரித்து பூர்க்கச் செய்து அதனை கல்வத்தில் இட்டு அரைப்பதற்குத் திரவரூபமாக பிரண்டை இலையைக் கொஞ்சம் கொஞ்சமாய் போட்டு 2-சாமம் அரைத்து ஒரே வில்லையாக தட்டி காயவைத்து அகல்லிடக்கி, சீலை செய்து 50 வறட்டியிற் புட்மிடச் சுண்ணமாகும் இவ்வண்ணம் 7-முறை அரைத்து புடமிட்டது விசேஷ குணந்தரக்கூடிய திவ்விய ஒளஷதமாகும்.

பிரயோகம் :- வேளைக்கு ½ அல்லது 1 பணவெடை தினம் காலை மாலை பழச்சாற்றிலேனும் வெண்ணெயிலேனும் உட்கொள்க. 2, 3, வேளையில் மார் நோய் மார் எரிச்சல் மார் அடைப்பு நீர்சுருக்கு வெள்ளை முதலியன பரிகரிக்கப்படும்.

ஆமையோட்டுப் பற்பம்

3 பலம் ஆமையோட்டைச் சிறுதுண்டுகளாக நறுக்கி ஒரு மண்பாண்டத்தில் போட்டு சுண்ணாம்பும் அப்ளாக்காரமும் ஜலத்தில் கரைத்து வடிகட்டிய நீரைவிட்டு 1 மணிநேரம் எரித்து அலம்பி ரவியில் காய வைத்து இடித்து சூரணம் செய்து

கல்வத்திலிட்டு கோவை கிழங்குச்சார் வீட்டு 4-சாமம் அரைத்து மெழுகு பதத்தில் ஒரே பில்லையாகதட்டி அகலில் வைத்து, உலர்த்தி மேல் அகல்மூடிச் சீலை செய்து உலர்த்தி 30 அல்லது 40 வறட்டியில் புடமிடவும் ஆறினபின் பற்பம் போதிய வெளுப்பு இல்லாவிடின் மீண்டும் முன்போல் கோவைக்கிழங்குசார் விட்டு இரண்டுசாமம் அரைத்து வில்லைத் தட்டி முன்போல் புடமிட நல்லபற்பமாகம் அரைத்து சீசாவில் பத்திரப்படுத்துக.

சர்வ ரோக சம்கார சங்கு சுண்ணம்

சரக்கு :- வீரம் பூரம் லிங்கம் மனோசிலை தாளகம் ரசம் கெந்தகம் வெள்ளை பாஷாணம் நவச்சாரம் இவையாவும் வகைக்கு 1 விராகனிடை சங்கு 1 வீசை.

செய்பாகம் : மேற்படி சங்கின் முதுகில் ஒரு துவாரம் செய்து அதனுள் வீரத்தையும் ரசத்தையும் சேர்த்தரைத்து துளை முதலாகப் போட்டு மற்றும் உள்ள 7 சரக்குகளை தனித்தனியாக அரைத்து அந்த சங்கினுள் ஒன்றின் பின் ஒன்றாகப் போட்டு அந்த துவாரத்துக்கும் மற்றுமுள்ள இயற்கை வழியையும் கிளிஞ்சல் சுண்ணாம்பால் மூடி அல்லது சாதாரண சுண்ணாம்பால் மூடி சீலை கவசம் செய்து உலர்த்தி 350 எருவில் குழிவெட்டி புடமிட புடமானது 3 தினங்கள் கழித்து புடத்தை பிரித்து எடுத்து மேல் கவசத்தை நீக்கி பார்க்க நல்லசுண்ணமாகும் புடம் நன்றாக ஆறின பின் கவசத்தை பிரித்துப் பார்க்க அதனுள் மணிபோல் கட்டியிருக்கும் அதனை தனியாகவும் உபயோகிக்கலாம் இந்த சங்கோடும் சேர்த்து அரைத்துக் கொள்ளவும்.

சங்கு சுண்ணத்தின் அனுபானமும் உபயோகமும். சரீரத்துக்கு தக்கவாறும் வியாதிக்கு தக்கபடியும் மருந்தை கூட்டியும் குறைத்தும் உபயோகிக்கவும்.

[1] குன்றி எடை அல்லது 1 அரிசியெடை தேனில் உண்ண வாயு மாரடைப்பு தீரும்.

[2] கருணை கிழங்கு லேகியத்தில் வைத்து சாப்பிட மூலம் மூலவாய்வு பாண்டு நவமூலம் தீரும்.

[3] ஆடாதொடை லேகியத்தில் சாப்பிட ஈளை இருமல் வரட்டிருமல் தொண்டை கட்டு தீரும்.

[4] இஞ்சி லேகியத்தில் சாப்பிட அக்கினி மந்தம். வயிற்றுபொருமல் வயிற்றிரச்சல் தொண்டைகட்டுத் தீரும்.

[5] பூண்டு தைலத்தில் சாப்பிட சன்னி தோஷம் சுரம் உள்வீச்சு விக்கல் தீரும்.

[6] பசும் நெய்யில் சாப்பிட சொரி சிரங்கு மேல் தடிப்பு கிரந்தி மேகம் வெட்டை நீர்சுருக்கு வயிற்று கடுப்பு எலிகடி முதலிய விஷம் தீரும்.

[7] **பசும்பால்** :- வெள்ளை வெட்டை தண்டி மேகம் நீர் கடுப்பு தீரும்.

[8] பனைவெல்லம் 7 நாள் கொடுக்க சூலை 18ம் தீரும்.

[9] ஜாதிக்காய் லேகியத்தில் சாப்பிட கிராணி கழிச்சல் தீரும்.

[10] வேப்பம் பருப்பு 10 முலைப்பாலில் அரைத்து எடுத்து விழுதில் சாப்பிட 7 தோஷம் தீரும்.

[11] கோவைச் சாற்றில் சாப்பிட பாண்டு சோகை காமாலை வீக்கம் தீரும்.

[12] விடத்தலாம் இலையை முலைப்பாலில் அரைத்தவிழுதில் சாப்பிட சீதம் ரெத்தம் விழுதல் தீரும்.

[13] கொடிவேலித் தைலத்தில் சாப்பிட சூதகவலி சூதகசிக்கல் தீரும்.

[14] மரப்பட்டை நாவல்பட்டை உதியம்பட்டை சாற்றில் சாப்பிட பெரும்பாடு தீரும்.

[15] வெண்ணையில் சாப்பிட வெள்ளை வெட்டை அபானயெரிச்சல் தீரும்.

[16] பழச்சாற்றில் சாப்பிட யானை மேகம் கர்ப்பிணி நீர் அடைப்பு தீரும்.

[17] அதிவிடய சூரணத்தில் 10நாள் சாப்பிட சகல கிராணியும் தீரும்.

பத்தியம் :- நோய்க்கு உதவாத பத்தியம் நீக்குக.

ஆமையோட்டு பற்பம் சாப்பிடும் அனுபானமும் அதன் குணமும்

இந்த பற்பத்தில் வேளைக்கு குன்றியெடை தினம் இருவேளை வெண்ணையுடன் சிறிது சர்க்கரையிட்டுக் குழைத்து அதனில் அனுபானம் செய்து 10-நாள் கொடுக்க உள்மூலம் வெளிமூலம் ரத்தமூலம் பவுத்திரம் உஷ்ணபேதி அதிசாரபேதி நாட்சென்ற பேதி. இவைகள் குணமாகும். அப்போது பால் சாதம் நெய்சாதம் அல்லது அதிக காரமில்லாத அன்ன பதார்த்தங்கள் பத்தியமாகக் கூட்டின் அதிக சிறந்தது.

குழந்தைகளுக்கு துவரம்பருப்பு பிரமாணம்தினம் இருவேளை தேன் அல்லது நெய் முதலிய அனுபானங்களில் கொடுக்க அஜீரணம் மாந்தம் வயிற்று பொருமல் உள் ஜீரணம் தீரும் பொடுதலை கியாழத்தில் கொடுக்க பேதிகட்டும்.

ஆமையோட்டு பற்பம்

3 பலம் ஆமையோட்டைச் சிறு துண்டுகளாக நறுக்கிப் பச்சை கோரைக்கிழங்கை நன்றாக அரைத்து சுமார் தேங்காய் பிரமாணத்துள் பொரித்துச் சீலை செய்து 3 மணிநேரம் ரவியில் உலர்த்தி 50 வறட்டியிற் புடமிடப் பற்பமாகும் அல்லது கல்லரிதாரத்தைச் சுத்த ஜலம் விட்டு அரைத்துத் துண்டுகளுக்குப் பூசி உலர்த்தி அகலிலடக்கி சீலை செய்து புடமிடப் பற்பமாகும்.

பிரயோகம் : வேளைக்கு 1/2 முதல் 1 குன்றி எடை வரையில் நெய்யில் கொடுக்க அஜீரணம் மார்புநோய் முதலி

யவை நீக்கி பசிதீபனம் அதிகரிக்கும் குழந்தைகளுக்கு அரிசி பிரமாணம் கொடுக்க சகல மாந்த ரோகங்களும் குணப்படும்.

பத்தியம் :- இச்சாபத்தியம்

சிங்கி பற்பம்

ஐந்து பழம் கலைமான் கொம்பை சிறு துண்டுகளாக நறுக்கியாவது அல்லது பிளந்தாவது ஒரு மட்கலய்த்தில் போட்டு அதில் அகத்திக்கீரை மெழுகு பதமாக அரைத்துச் சுமார் ஒரு தேங்காய் பிரமாணம் போட்டு 1 படி சுத்தஜலம் விட்டு கலக்கி அடுப்பில் வைத்து நீரெல்லாம் முற்றிலும் யெல்லாம் சுத்தமாக துடைத்து வைத்துக்கொள் அப்பால் உத்தாமணியிலையைச் (வேலிபருத்தி) சாந்துப்போல் அரைத்து சுமார் ஒரு தேங்காய் பிரமாணம் திரட்டி அதன் நடுவில் முன்சுத்தப்படுத்திய கொம்புகளைச் சொருகி மண்சீலை 7. 8 செய்து ஒருநாள் ரவியில் உலர்த்தி மறுநாள் 100 வறட்டியில் புடமிடவும் நன்றாய் ஆறியபின் சோதித்துப்பார்க்க கொம்பு துண்டுகள் யாவும் நீற்றிருக்கும் அரைத்து சீசாவில் பத்திரப்படுத்துக ஒருவேளை நிறமானது சுத்த வெள்ளையாக இராவிடின் சிறிதும் காலதாமதம் செய்யாமல் கல்வத்திலிட்டு பால்விட்டு ஒரு சாமம் அரைத்து அரையனா கனமும் அகலமும் உள்ள வில்லைகளாகத் தட்டி உலர்த்தி அகலில் பரப்பி மேல் அகல் மூடி சீலை செய்து 60 70 வறட்டியில் புடம் போட நல்ல பற்பமாகும் வேண்டும்பொழுது இந்த பற்பத்தில் வேளைக்கு 1. 2 குன்றி எடை உஷ்ண பேதிகளுக்கு தேனிலும் அனுபானம் செய்து தினம் இருவேளை கொடுத்து வர மார்பு வலி கோழைக் கட்டு உதிரவாந்தி. உதிரகடுப்பு. பேதி காமாலை வெள்ளை இவைகள் நீங்கும்.

சிங்கி பற்பம்

ஐந்து பலம் மான் கொம்பைக் கொண்டு வந்து சிறு துண்டுகளாகப் பிளந்து ஒரு குடுவையில் போட்டு மூழ்கக் குப்பைமேனி இலைச்சாறு விட்டு வெயிலில் வைத்து சுண்டிவரும்

தருவாயில் வழித்து எடுத்து அதற்குமேல் குப்பைமேனி இலையையே மெழுகு வண்ணம் அரைத்து கவசமிட்டு மண்சீலை செய்து உலர்த்தி 100 வறட்டியில் புடமிடவும் இதுவும் ஒரு சமயம் போதுமானது வெளுப்பு இல்லாவிடில் வெள்ளாட்டுப்பால் விட்டு அரைத்து சிறு வில்லைகளாகத் தட்டி உலர்த்தி அகலில் பரப்பி மேல் அகல் மூடி சீலை செய்து 60. 70 வறட்டியில் புடமிட நல்ல பற்பமாகும். இதனை அரைத்து சீசாவில் பத்திரப் படுத்துக வேண்டும் போது வேளைக்கு குன்றி எடை தினம் இருவேளை தேனில் கொடுக்க இருமல் ஈளை வாயு சம்மந்தமான மார்புவலி வயிற்றில் சஞ்சரிக்கும் படியான வாயு தேகக்கடுப்பு முதலியவைகள் குணமாகும்.

சிங்கி பற்பம்

முன் முடித்த சிங்கி பற்பம் 1 தோலா எடையை கல்வத்தில் இட்டு இதற்குச் சமனெடை அதிக சன்னமாகத் தகடடித்து கடிதங்களின் இடையில் வைத்து வருகின்ற வெள்ளி ரேக்கைக் கொஞ்சம் கொஞ்சமாக கட்டிக் கற்சுண்ணாம்பு நீர்விட்டு அரைத்து வருக வெள்ளியின் பளபளப்பு மாறினசமயம் வில்லைத் தட்டி அகலில் வைத்து மேல் அகல் மூடிச்சீலை செய்து 10 வறட்டியில் புடமிடவும் அப்படி 2-3 புடம் போட்டு எடுக்க நல்ல பற்பமாகும். இதனில் ¼ ½ குன்றியெடை தினம் இருவேளை தகுந்த அனுபானங்களில் கொடுத்துவர மார்நோய் தேகத்தில் உண்டான நரம்புகளின் தேகதுர்பலம் மார்பு துடிப்பு முதலியவைகள் குணமாகும்.

சிங்கி பற்பம்

அரத்தினால் இராவி எடுத்த ஐந்து தோலா மான்கொம்பு பொடியுடன் சமனெடை ஓமம் சேர்த்து ஒரு குடுவையில் போட்டு நிறையவெள்ளெருக்கன் பால்விட்டு 3 நாள் வைத்து ஊரவைத்து 4-ம்நாள் ஓடுமூடி சீலைசெய்து காய்ந்த பின் 150 வறட்டியிற் புடமிடுக ஒரு சமயம் கருத்திருப்பின் அதனை வெள்ளெருக்கன் பாலால் அரைத்து வில்லை செய்து காயவைத்து

ஒட்டிலடக்கிச் சீலை செய்து 100 வறட்டியிற் புடமிட நல்ல பற்பமாகும் இதனில் வேளைக்கு ½ குன்றியளவு தினம் இரு நேரம் 14 நாள் கொடுக்க சுரம் இருமல் பேதி இத்தியாதி கூடிய க்ஷயரோகங்கள் குணமாகும்.

பத்தியம் :- கோதுமை ரவையை நெய்யில் வறுத்து பாலிட்டுக் கஞ்சி செய்து ஆகாரங்கொள்க வேறொன்றும் ஆகாது.

சிங்கி பற்பம்

2 பலம் புள்ளிமான் கொம்பை சிறு துண்டுகளாக நறுக்கி நீரிலொருநாள் ஊறப்போட்டு மறுநாள் அலம்பியெடுத்து 10 வறட்டியின் நடுவில் வைத்துப் புடமிடுக புடம் ஆறினபின் யெடுத்து கல்வத்திலிட்டு நற்சங்கம் இலைச் சாற்றால் இரண்டு சாமநேரம் அரைத்து வில்லைத்தட்டி உலர்த்தி களர்ச்சியிலையை அரத்து விளாங்காய்ப் பிரமாணம் கவசித்து மண்சீலை செய்து சாம்பலிற் புரட்டி 40 வறட்டியிற் புடமிட நல்ல பற்பமாகும் இதனை வேளைக்கு பணவெடை வீதம் தினம் இருவேளை நெய், வெண்ணெய் இவைகளில் சாப்பிட நீரடைப்பு நீர் எரிச்சல் க்ஷயம் முதலியவைகளை குணப்படுத்தும்.

சிங்கி பற்பம்

ஒரு தோலா வெடியுப்பு 1 தோலா ஓமத்தையும் ஜலம் விட்டு அரைத்து மெழுகு பதத்தில் 1-தோலா மான்கொம்பின் மேல் கவசம் சாத்தி காய்ந்த பின் சீலை செய்து 1-முறம் காட்டுக்கறியில் இடையில் வைத்து நடுவில் நெருப்பிலிட்டு விசிறி விடவும் பின் நெருப்பு ஆறினபின் பார்க்க மான் கொம்பானது நன்றாக நீறிபற்பமாகயிருக்கும். இதனில் 3 பணவெடை தேனில் மத்தித்து கொடுக்க நுரையீரலில் சிக்கப்பட்டுள்ள கபங்களை கரைத்து வெளியாக்கும். கஷ்ட சுவாசமிருக்கினும் குணப்படுத்தும் மற்றும் சீதாங்க சுரத்துக்கும் இதனை நல்ல அனுபானங்களில் பல மருந்துகளோடு கொடுக்கலாம்.

இது அனுபவத்தில் சிறந்த பாகமாக அறியப்பட்டிருக்கிறது தாளகபற்பம் கொடுக்கும்போது அத்துடன் இந்த சிங்கி பற்பத்தையும் சேர்த்து கொடுத்தால் மிக நன்மை பயக்கும்.

கர்ப்பூர சலாசத்து பற்பம்

கோவை இலையை அரைத்து அதுக்குள் வைத்து சுத்தி செய்த கர்ப்பூர சலாசத்தை வைத்து மூடி மண் சீலை செய்து சிறுபுடம் போட பற்பமாகும் இது நல்ல முறையாகும். நெய்யில் பணவெடை கொடுக்க பித்தவெட்டை உஷ்ண ரோகங்கள் நீர் கடுப்பு தேக எரிவு கல்லடைப்பு குணமாகும்.

வீர பற்பம்

அப்பைக் கிழங்கை அரைத்து அதற்குள் சுத்தி செய்த வீரத்தை வைத்து மூடி சீலை மண் செய்து குக்குட புடம் போட பற்பமாகும். இதனில் நெல்லி விடை கொடுக்க சூலை குன்மம் வாயு, சன்னி, குஷ்டம், மேகம் முதலியவைகள் குணமாகும்.

சர்வசுத்தி ரசம்

சுத்தி செய்த ரசம் பலம் 4 சுத்தி செய்த நெல்லிக்காய் கெந்தகம் பலம் 2 இவைகளை குப்பைமேனி இலைச் சாற்றாலும் கொருகுப்பை இலைச்சாற்றாலும் வகைக்கு 1 சாமம் அரைத்து உலர்த்தி பிறகு தும்பை இலைச்சாற்றாலும் செம்முள்ளி இலைச்சாற்றாலும் வகைக்கு 8-சாமம் அரைத்து உலர்த்தி சீலைமண் செய்து காசிக் குப்பையில் ¾ குப்பி போட்டு பளபக்கல்லால் மூடி சீலை மண் செய்து கைலாசநாத செந்தூரம் எரிக்கும் விதமாய் இதையும் எரித்து 2-நாள் ஆறவிட்டு மருந்தை எடுத்து வைத்துக்கொள்ளவும் சுக்கு மிளகு, திப்பிலி. இம்மூன்றும் கொஞ்சம் வறுத்து சூரணித்து அதில் பஸ்பம் ¼ பணவெடை வைத்துக்கொடுக்க குன்மம் சூலை 18-ந் தீரும் தாது விர்த்தியாகும் யானைக்குள்ள பலம் வரும் அன்றியும் கிரகணி மூர்ச்சை அதிசாரம் பித்தவாயு நெஞ்சு எரிவு மேகம் மூலம்

குஷ்டம் வெடி சூலை புண் சொர்றி சகலபித்தம் சிலேத்ம ரோகங்கள் தீரும்.

நரசிம்ம ரசம்

ரசம். ரசகற்பூரம். ரசசெந்தூரம். உலர்ந்தலிங்கம். வீரம் இவ்வைந்தும் சுத்திசெய்து சமமாகச் சேர்த்து நாட்டுக் காட்டாமணக்கு பாலால் ஒருநாள் அரைத்து பில்லைதட்டி அகலி லிட்டு அகலால் மூடி சீலைமண் செய்து 2-மரக்கால மணலைத் தரையில் கொட்டி அதன் மேல் வைத்து மணலால் மூடி 5. 6 எருவை அதன் மேல் அடுக்கி புடம் போடவும் மருந்து சூடு ஆனால் போதுமானது மருந்தை ஆறவிட்டு எடுத்து கற்றாழைக் சாற்றால் அரைத்து அதே மாதிரியாக ஒரு புடம் போட்டு எடுத்து சூரணித்து 1/2 பணவெடை சீனியில் வைத்துக் கொடுத்து உடனே தக்க அனுபானங் கொடுக்க சகல ஜன்னி தோஷம் மேகம்-20. வாதம்-80. சிலேஷ்மம்-20. சுரம்-64. சூலை-18 அரையாப்பு காசம் முதலிய கடூரமான ரோகங்கள் குணமாகும் வியாதிக்குத் தக்கபடியாக பத்தியம் இருக்கவும்.

இரச பற்பம்

சுத்தி செய்த ரசத்தை வெற்றிலைச் சாற்றால் அரைத்து ஒரு மலை வெங்காயத்தை (பெரிய வெங்காயம்) கத்தியில் வெட்டி பெரிய தூண்டில் பள்ளம் தோண்டி அதில் மேற்படி ரசகலவை வைத்து சிறுதுண்டால் மூடி சீலைமண் செய்து உலர்த்தி ஓட்டிலிட்டு ஓட்டால் மூடி சீலைமண் செய்து சிறுபுடம் போட பற்பமாகும் ½ குன்றி முதல் 1 குன்றி வரையில் கொடுக்க சுரம் சூலை குஷ்டம் வாதம் முதலியவைகள் குணமாகும்

ரச பற்பம் (வேறுமுறை)

சுத்திசெய்த ரசத்தை சிவகரந்தைச் சாற்றால் 3-நாள் அரைத்து வில்லைசெய்து உலர்த்தி ஓட்டிலிட்டு மூடி சீலைமண் செய்து உலர்த்தி குக்குட படம் போட பற்பமாகும். பனை

வெல்லத்தில் ஒருகுன்றி எடை வைத்துக் கொடுக்க ஷை வியாதிகள் குணமாகும்.

ஏமரச பற்பம்

தங்கப்பொடி விராகனிடை 4 சுத்தி செய்த ரசம் விராகனிடை 4 கல்வத்திலிட்டு ஒரு சாமம் அரைத்து அத்துடன் சுத்தி செய்த கெந்தகம் விராகனிடை 48சேர்த்து 1½ சாமம் அரைத்து அத்துடன் நல்ல முத்து விராகனிடை 64 சுத்தி செய்த சங்கு விராகனிடை 96 (சங்கு பாஷாண மல்ல) வெங்காரம் விராகனிடை 4 இவைகளைச் சேர்த்து பழுத்த எலுமிச்சம் பழச்சாற்றினால் ஒரு சாம நேரம் வரையில் அரைத்து பில்லைத் தட்டி உலர்த்தி ஒரு அகலிலிட்டு மேல் அகல் மூடி சீலை மண்செய்து தரையில் ஒருமுழம் குழி பறித்து எருவடுக்கி ஷை அகலை வைத்து அதன் மேல்எருவை அடுக்கி கெஜபுடம் போட்டு எடுத்து குன்றி மணிஎடை மருந்தையும் 24 மிளகு சூரணமும் 2 விராகனிடை பசும்நெய்யும் (இம்மூன்றும்) சேர்த்துக்கொடுக்கவும் தினம் காலைமாலை கொடுக்க காசம் க்ஷயம் சுவாசம் வாதம் சகலவிதமான கபரோகங்கள் கிரகணி அதிசாரம் குணமாகும்.

பதிப்பிரிய பஸ்பம்

நாரில்லாத சுக்கு பலம் 2 வேலிப்பருத்திச சாற்றால் மைபோல் அரைத்து பில்லைதட்டி ஒரு சட்டியில் 2 விரல் கனம் கரிபுப்பைப் பரப்பி அதன்மேல் ஷை வில்லையை வைத்து அதன்மேலும் முன்போல் கரியுப்பைப் பரப்பி ஓட்டால் மூடி சீலைமண் செய்து 5 எருவில் புடம்போட்டு எடுத்து சூர்ணித்து 1. 2 விராகனிடை வீதம் தினம் காலை மாலை. தேனில் கலந்து சாப்பிட்டு வர வயிற்று பொருமல் அக்கினி மந்தம். அஜீரணம். வாந்தி. புளியேப்பம். அபானவாயு பிரிதல் முதலியவைகள் குணமாகும்.

1 பணவெடை பஸ்பம் விஷ்ணுக்கிரந்தி கஷாயத்தில் உட்கொள்ள ஜீர்ணஜ்வரம் நிவர்த்தியாகும்.

1 பணவெடை பஸ்பம் பசுவின் நெய்யில் கர்பிணிக்கள் சாப்பிட கர்ப்பம் விருத்தியாகும் கர்பத்திலுள்ள வியாதி நீங்கிச் சுகபிரஸவமாகும்.

1 பணவெடை பஸ்பத்தை அரிசிதிப்பிலி தேவையானதை எடுத்து வறுத்து சூர்ணத்துடன் தேன் சேர்த்து லேகியம் போல் செய்து பாக்களவு லேகியத்தை பஸ்பத்தை வைத்துச் சாப்பிட க்ஷயம் சுவாஸம் இருமல் நீங்கும்.

1 பணவெடை பஸ்பம் நெய்யில் சாப்பிட இளைத்த திரேகம் புஷ்டியாகும்.

இந்த சிலாஜித்பஸ்பம் 2 பங்குலிங்க செந்தூரம் 1 பங்கு அப்ரக செந்தூரம் 1 பங்கு இம்மூன்றையும் ஒன்றாகக் கலந்து வேளை ஒன்றுக்கு 2 குன்றிமணி பஸ்பத்துடன் 5 மிளகுபொடி செய்த சூரணமும் சேர்த்து தேனில் குழைத்து மத்தித்து சாப்பிட மகா க்ஷயரோகங்கள் போகும்.

1 பணவெடை பஸ்பம் தேனில் கொள்ள மேகம், வெட்டை சூலை சொறி சிரங்கு போகும். இது தவிர மேகம் 21 மூத்திர கரிச்சரம் அஸ்மரி நீரிழிவு இவைகள் நீங்கும்:

இளுப்பை அறப்பு பற்பம்

இளுப்பைக்கட்டி 2 பலம் ஆடாதோடை இலை அரைத்தெடுத்து 6 பலம் எடுத்து அதனுள் மேற்படி இலுப்பைக்கட்டியை பொதித்து ஒரு சட்டியில் வைத்து மேல்சட்டி மூடி சீலை மண் காய்ந்தபின் 25 எருவில் புடமிட்டு எடுத்து கற்கள் மண் இல்லாமல் வடிகட்டி வைத்துக்கொள்ளவும்.

இதனை அண்டவாயு உள்ளவர்களுக்கு காலை மத்தியானம் மாலை ஆக மூன்று வேளை முருங்கைபட்டை கியாழத்தில் வேளைக்கு 4 குன்றி எடை கொடுத்து வரவும்.

சாதாரண அரப்புத்தூளை தீயில்போட்டு புகை பிடிக்கவும் அண்டவாயு உடன் குணமாகும்.

ஸ்வேத பற்படி பற்பம்

சரக்கு :- நவச்சாரம் 2½ தோலா படிகாரம் பொரித்தது 5 தோலா வெடியுப்பு 20 தோலா

செய்முறை :- இவைகளை ஒரு வாய் அகன்ற ஓர் மண் சட்டியில் போட்டு ஒன்றாக கொழுந்து விட்டு எரியும் நெருப்பில் வைத்து (துருத்தியால் ஊதுவதாக யிருந்தால் மிக்க நன்று) மண்சட்டி திறந்தே இருக்க வேண்டும் மேற்கூறப்பட்ட சாமான்கள் சிறிது சிறிதாக ஜலமாக கரைய ஆரம்பிக்கும் பின் வெடியுப்பு நாற்றத்துடன் புகைக்கிளம்பும் இந்த புகை மேல் மூச்சால் உடலுக்கு ஒத்துக்கொள்ளாது ஆகையால் புகை மேல் படாது விலகி இருப்பது உத்தமம் இப்படி சுமார் ¼ மணிநேரம் ஆகுவதற்குள் மேற்படி புகை அடங்கி எல்லாம் திரவமாக மாறிவிடும் உடனே அந்த திரவகத்தை சுத்தமான 4 அல்லது 5 பீங்கான் தட்டுகளில் ஒரு நூல் தடிப்பிற்கு பறவலாக ஊற்றிவிட வேண்டும் அதாவது அப்பளம் போல் இருக்கும் படியும் அப்பளத்தைவிட சன்னமாக பரவும்படியும் ஊற்றவேண்டும் மண்சட்டி சிறிது ஆறினாலும் திரவம் கெட்டியாய் விடும் ஆதலால் தாமதிக்காமல் ஊற்ற வேண்டியது. இந்த திரவம் கை மேல் பட்டால் ரணம் ஆகிவிடும் ஆகையால் ஊற்றும் போது ஜாக்கிரதையாக ஊற்ற வேண்டும் கூடியவரையில் மருந்து தடிப்பு ஆகாமல் இருக்க பீங்கான் பிளேட்டுக்களை உடனே ஆட்டி மருந்து எங்கும் பரவும்படி செய்து விடவேண்டும் ஒரு நிமிஷத்திற்குள் ஊற்றிய திரவம் அப்பளம் மாதிரி கெட்டியாய்விடும் இதுதான் பற்பம் பிறகு இதனை இடித்து தூளடையில் சலித்துவைத்துக் கொள்ளவும்.

ஸ்வேத பற்படி பற்பம்
சாப்பிடும் அளவும் அனுபானமும்

சாப்பிடும் அளவு :- வீசம் தோலா முதல் அரைக்கால் தோலா வரை ஒரு வேளைக்கு உபயோகிக்கலாம் ஒரு தினத்துக்கு 3 அல்லது 4 தடவைக் கொடுக்கலாம்.

தங்க பஸ்பம்

தங்கத்தகடுகளுக்கு எருக்கம் விதையை வாய் நீரால் உரைத்து கவசமிட்டு ஓட்டிலிட்டு சீலைமண் செய்து வராக புடம் போட்டு எடுத்து நத்தை சூரி விதையை அரைத்து கவசமிட்டு ஓட்டிலிட்டு சீலைமண் செய்து புடம்போட பஸ்பமாகும் இப்பற்பமும் முன்கூறிய வியாதிகள் யாவும் குணம் செய்யும்.

மேற்படி வேறு முறை

தங்கப்பொடியை உப்பிலாங்கொடிச் சாற்றால் 3 சாமம் அரைத்து ஓட்டிலிட்டு சீலை மண் செய்து புடம் போடவும். 2. 3 புடம் போட திவ்யமான பற்பமாக முடியும். இதுவும் ஷை வியாதிகள் குணமாகும்.

பலகரை பற்பம்

½ தோலவுக்கு எடை நிற்கும் படியாஞதும் முதுகில் மஞசள் நிறமுடையதுமான சோழி என்னும் பலகரை பலம் 5 நிறுத்தெடுத்து ஒரு பீங்கானில் போட்டு அது மூழ்க எலுமிச்சம் பழச்சாறு விட்டு மறுநாள் எடுத்து பின்னும் எலுமிச்சம் பழச்சாறு விட்டு நன்றாக கல்வத்திலிட்டு அரைத்து வில்லை தட்டி உலர்த்தி ஒரு ஓட்டிலிட்டு மேல் அகல்முடி சீலை மண் செய்துலர்த்தி 30 வறட்டியிற் புடமிட நல்ல பற்பமாக முடியும் பின் அதை எடுத்து பதனப் படுத்தவும். நெய் அல்லது தேன் இவைகளில் அனுபானமாக கொடுக்கவும்.

உபயோகம் : குஷ்டம் ரெத்தபித்தம் இந்த இரண்டு வியாதிகள் தவிர மற்ற சகல ரோகத்துக்கும் வியாதிக்கு தக்கபடி அனுபானத்தில் கொடுக்கவும். முக்கியமாக பக்க. சூலை மார்நோய் வாயுவு நீங்கும் மற்றும் அதிசாரம் கிரகணி காசம் க்ஷயம் சூலை குழந்தைகளுக்கு வயிற்றுவலி ஏற்பட்டு அவஸ்தைப்படுவதற்கு மிகவும் உபயோகப்படும் இரப்பையில் புளிப்பு ஏற்படும் வலியுண்டாவதை நீக்கும் புளிப்பு ஏப்பமும் நீக்கும்.

மேற்படிபற்பத்தை 17-பாகமாக பொடித்து பாதிபொடியை ஒரு அகலில் போட்டு அதன்மேல் மேற்படி மொத்தை வைத்து அதன்மேல் பாக்கி கந்தகப் பொடியை போட்டு அகலால் மூடி 7-சீலைமண் செய்து தரையில் குழி தோண்டி எருவை அடுக்கி புடம் போடவும் வெகு நல்ல பற்பமாகும் ஒவ்வொரு புடத்திலும் மேல் சொல்லியபடி கந்தகத்தையும் சேர்த்து வரவும் உருக்குவாயில் மனோசீலையை கொடுத்தும் வெட்டையாக்கலாம்.

தங்க பஸ்பத்தில் ¼ குன்றி மணிஎடை அனுபானத்திலிட புத்தி ஸ்மரணம் வெண்குஷ்டம் மேகம் குஷ்டம் முதலிய அனேக கொடி ரோகங்கள் குணமாகும். பசும் வெண்ணையில் கலந்து சாப்பிட்டு வர தேகம் பலக்கும் விந்து ஊறும் தாதுக்கட்டும்.

பலகரை பற்பம்

3-பலம் பலகரையை ஒரு பழகின மட்கலயத்தில் போட்டு அவைகள் நன்றாய் மூழ்க எலுமிச்சம் பழச்சார் விட்டு 5-நாழிகை ரவியில் வைத்து அப்பால் காயத்தின் வாய்க்கு பொருத்தமான அகல் முடிச்சீலை 7 செய்து காய்ந்த பின் 30. 40 வறட்டியில் புடமிடவும் புடம் நன்றாய் ஆறினபின் எடுத்துச் சீலையை நீக்கிப் பார்க்க பலகறை வெந்து நீற்றிருக்கும் அவைகளை ஒரு கோப்பையில் போட்டுக் காற்று வாட்டமாக வைக்க பூத்துவிடும் இதை அரைத்து சீசாவில் பத்திரப்படுத்துக வேண்டும்போது வேளைக்கு 1½ குன்றி எடை எலுமிச்சம் பழச்சாற்றில் கலக்கி கொடுக்க வயிற்றுநோய் வலி நீர் சுருக்கு முதலியவைப் போக்கும் இதை தேங்காய் எண்ணையில் மத்தித்து ணங்களுக்குப் போட ஆறும் இதை தேனில் மத்தித்து ணங்களுக்குப் போட ஆறும் இதை தேனில் மத்தித்து சாப்பிட ரம் பித்த சுரம் பித்த எரிவு குன்மம் ஈரல்களில் வீக்கம் தகவாய்வு இவைகள் போகும் இதை வெண்ணையில் மத்தித்து சாப்பிட்டு வர வெள்ளை சீதபேதி கழிச்சல்கிரகணி குணமாகும்.

பலகரை பற்பம்

ஒரு தோலா சங்கு பாஷாணம் 6 தோலா நெல்லிக்காய் கெந்தகம் இவை இரண்டையும் கல்வத்தில் போட்டுகொம்பு கள்ளியை வதக்கி பிழிந்தெடுத்த சாறு விட்டு நன்றாய் அரைத்து இருபாகமாக பங்கிட்டு ஒரு பாகத்தை ஒரு பெரிய பலகறைக்கு கவசமிட்டு அதன் மீது மண்சீலை 2. 3 செய்து 2. 3 வறட்டியில் புடமிடவும் இது நன்றாய் ஆறினவுடன் கவசத்தை செமதுவாக நீக்கி உள்ளிருக்கப்பட்ட பலகறையை எடுத்து முன் நிறுத்தி வைத்துள்ள மற்றோர் பாதிமருந்தை முன்போல் கவசமிட்டுச் சீலை செய்து 5. 6 வறட்டியில் புடமிடவும் அப்போது பலகரை நீக்கி சுண்ணமாகும். இதனை அரைத்து சீசாவில் பத்திரப் படுத்துக. வேண்டும்போது வேளைக்கு 2. 3. அரிசி எடை தேனில் கொடுக்கச் சுவாசகாச ரோகத்தில் கபத்தின் உபரியால் உண்டான சுவாச கஷ்டத்தை நிவர்த்தி செய்யும் இந்த பற்பம் கபத்தை எளிதில் கரைத்து இருமலைக் குணப்படுத்தும்.

பவள பற்பம்

நற்பவளத்தின் சுத்திக் கிரமமாவது:- தேவையான அளவு பவளத்தை ஒரு பீங்கான் கோப்பையில் போட்டு எலுமிச்சம் பழச்சாறு விட்டு ஓர் இரவு ஊறபோட்டு எடுக்க சுத்தியாகம் இங்ஙனம் செய்த பின்பே அவிழ்த்த பாகங்களில் சேர்க்கவேண்டும்.

எங்கனமெனில் :- ஒரு பழகின குடுவையில் 1 அல்லது 2 பலம் சுத்தி செய்து பவளத்தை போட்டு அவைகள் மூழ்க முயலின் இரத்தத்தை விட்டுக்கிளறி ஓடு மூடிச் சீலை செய்து 20 வறட்டியில் புடமிடப் பற்பமாகும்.

வேறு முறை

குப்பைமேனி இலையாவது இலந்தை இலையாவது தேள் கொடுக்குச் செடியின் இலையையாவது நன்கு அரைத்து சுமார்

சிறு தேங்காய் பிரமாணம் உருண்டை செய்து அதனிடையில் பவளம் செய்து 2. 3 பலம் சுத்தி செய்த நற்பவளத்தை வைத்து வாய் சேர மூடிசீலைச் செய்து 50. 60 வறட்டியில் வைத்து புடம் போட பவளம் வெந்து வெளுத்து பற்பமாகும் அரைத்து சீசாவில் பத்திரப்படுத்துக.

பவள பற்பம்

கொடி பவளம் பலம் 2 எலுமிச்சம் பழச்சாற்றில் 3 நாள் ஊறவைத்து எடுத்து சுத்த ஜலத்தில் கழுவி வெய்யலில் ஒரு நாள் உலர்த்தி இலந்தை இலையை ஒரு தேங்காய் அளவு அரைத்தெடுத்து அதில் பவளத்தைப் பொதித்து சீலைமண் 3 செய்து ஓட்டில் வைக்காமல் 50 எருவில் புடமிட பற்பமாகும்.

அனுபானம் :- நெய் அல்லது வெண்ணை காலை மாலை 2 அல்லது 3 அரிசி எடை கொடுக்கலாம்.

தீரும் வியாதி :- உஷ்ண நீர்கட்டு நீராம்பல். சோகை கபம் இருமல் ஆரம்ப க்ஷயம் பித்தகாசம் நீர்கடுப்பு முதலியன தீரும்.

பத்தியம் :- சீதள பதார்த்தங்கள் நீக்கவும்.

பவள சுண்ணம்

நற்பவளம் 2 பலம் நிறுத்தெடுத்து எலுமிச்சம் பழரசத்தில் ஒரு நாள் ஊரப்போட்டு எடுத்து கிளுச்சள் நீர்விட்டு நீத்து அந்த நீரைக்கொண்டு மறுகிளுஞ்சளுக்கு கொடுத்து நீத்து இதுபோல் 7 தடவை நீத்தெடுத்த கடுங்கார நீரையெடுத்து மேற்கூறிய பவளத்தைக் கல்வத்திலிட்டு மேற்கூறிய கிளுச்சல் கடுங்கார நீரைவிட்டு அரைத்து வில்லைதட்டி உலர்த்தி அதன்மேல் இலந்தயிலையை அரைத்துக் கவசம் செய்து உலர்த்தி ஓட்டிலிட்டு மேல் அகல் மூடி சீலை செய்து முழப்புடமிடவும் இது கடுங்கார சுன்னமாக முடியும் இதனையெடுத்து அரைத்துப் பதனப்படுத்தவும்.

உபயோகம் : சன்னி இசுவு கபம் ஈழை இருமல் இழைப்பு மாந்தரோகம் முதலிய ரோகங்களை போக்கும் தேனில் அனுபானித்துக் கொடுக்கவும்.

பவழச் சுண்ணம்

மிக சிறிதாக இருக்கும் பவளத் துண்டுகளை கொடி எலுமிச்சம் பழச்சாற்றில் 2 மணிநேரம் ஊரவைத்து எடுத்து நல்லவேலை இலையை விளாங்காய்ப் பிரமாணம் அரைத்து உருட்டி அதில் பவளத்துண்டுகளை ஒரு பவளத்துண்டோடு ஒரு பவளத்துண்டு கட்டுபடாமல் சொருகிமேல் கவசம் செய்து சற்று உலர்ந்த பின் முழுப்புடம் போட்டு புடம் ஆறின பின் உடைத்து பவழத்துண்டுகளை எல்லாம் எடுத்து ஒரு பீங்கான் கோப்பையில் போட்டு பசும் பாலைக் காய்ச்சி கொஞ்சம் கொஞ்சமாய் பவளத்தின் மீது விட்டு வந்தால் பவளம் மலர்ந்து சுண்ணமாகும் இதனையெடுத்து பத்திரப்படுத்துக.

உபயோகம் : வெள்ளை வெட்டை கைகால் எரிவு உள்ளவர்களுக்கு வெற்றிலையில் ஷை சுண்ணத்தை தடவி அத்துடன் பாக்கு சேர்த்து மென்று சிறிது சிறிதாக சாப்பிட மேற்கூறிய ரோகம் தீர்ந்து பல்லுக்கு ஒளியும் முக வசீகரமும் உண்டாகும்.

பவள் பற்பம்

நீலவர்ணமாகப் பூப்பூக்கும் படியான கண்டங்கத்திரிக் காய்களைக் கொண்டு வந்து இடித்து ஓர் அகலில் பரப்பி அதனில் சுத்திசெய்த வேர்ப்பவளத்தை வைத்து மீண்டும் இடித்த காய்களைப் போட்டமுத்தி மேல் அகல் மூடிச் சீலை செய்து காயவைத்து முழப்புடத்திலிடவும் பவளமானது வெளுத்து நீற்றிருக்கும் இவைகளை சேதப்படாமல் எடுத்து கல்வத்திலிட்டு அரைத்து சீசாவில் பத்திரப்படுத்துக.

உபயோகம் : இதனில் குன்றியளவு பசுவின் நெய்யில தினம் இருவேளையாக உட்கொள்க ஈளை. இருமல் காசம் க்ஷயம் முதலிய ரோகங்கள் நிவர்த்தியாகும்.

கற்பூர சிலாசத்து சுண்ணம்

ஒரு பலம் கற்பூர சிலாசத்தை நிறுத்தெடுத்து எலுமிச்சபழச்சாற்றில் ஊர வைத்துஎடுத்து நல்ல வேளை இலையை இடித்து வில்வபழம் பருமன் உருட்டி அதன் மத்தியில் கற்பூர சிலாசத்தை பொதிய வைத்து மேல் கவசம் செய்து உலர்த்தி முழுபுடம் போட்டு எடுக்கவும்.

உபயோகம் : பவளச் சுண்ணம் செய்யக்கூடிய குணங்கள் எல்லாம் இந்த கற்பூரசிலாசத்து சுண்ணம் செய்யும் அதைவிட மேலானது என்றும் கூறலாம் வெண்ணை நெய் பால் முதலிய அனுபானங்களில் வெற்றிலை பாக்கு உடன் இந்த சுண்ணம் தரித்து போடலாம் எங்கனம் செய்யினும் குணம் ஒன்றே செய்யும்.

நண்டுக்கல் பற்பம்

கற்சுண்ணமும் பூநீறுஞ் சேர்த்துத் தெளிவெடுத்த நீரில் நண்டுகல்லைப் போட்டு 5 முதல் 7 தடவை வரையெடுத்திடுக சுத்தியாகும் பின் சுத்த தண்ணீர் விட்டு கழுவி உலர்த்தி தூள்செய்து முள்ளங்கி கிழங்கின் சாற்றால் மைபோல் அரைத்து ரவி உலர்த்தி பின் அங்கனமே சிறு பீளைச்சாற்றிலாவது உலர்த்தி வைத்துக்கொண்டு நீரைத்தள்ளும் மூலிகைச் சாற்றிலேனும் குடிநீரிலேனும் ½ -முதல் 2-குன்றி மணியளவு பிரயோகிக்க நீர்கட்டு நீரடைப்பு கல்லடைப்பு முதலியநோய்கள் தீரும் (புடமில்லை).

வேறுமுறை

வெங்காரத்தைப் பொரித்து கிஷாயம் செய்து அதில் குன்றிமணி எடை நண்டுக்கல்லை உரைத்துக் கொடுக்க கிருச்சரம் தீரும் மூக்கரட்டைவேர் சாற்றில் அல்லது கஷாயத்தில் குன்றி அளவு மேற்படி கல்லை உரைத்துக் கொடுக்க வாதரோகங்கள் குணமாகும் சீரக கஷாயத்தில் குன்றி அளவு ஷை கல்லை உரைத்துக் கொடுக்க சுரங்கள் தீரும் சாதிக்காய் தூளில்

குன்றிஎடை மேற்படி கல்நண்டு கல்லை உரைத்துக் கொடுக்க விந்துதம்பனமாகும் இதற்கு முறிவு எலுமிச்சம் பழச்சாறாகும்.

அஞ்சனக்கல் பற்பம்

அஞ்சனக்கல்லை 1 பலம் எடுத்து சிறுகீரையை அரைத்து குகைபோல் செய்து அதில் மேற்படி சட்டியை வைத்து மேலும் மேற்படி கீரையால் மூடி சீலைமண் செய்து கெஜபுடம் போட பஸ்பமாகும் இந்த பற்பத்துக்கு அனுபானம் தேனில் சாப்பிடவும்.

தீரும் நோய்கள் : 20 வகையான மேக ரோகங்கள் குணமுண்டாகும்.

கல்மத பற்பம்

சரக்கு : கல்மதம் படிகாரம் இவையாவும் வகைக்கு பலம் 1.

இவ்விரண்டையும் கல்வத்திலிட்டு சோற்று கற்றாழை சாற்றால் இரண்டு சாமம் அரைத்து வில்லைத் தட்டி காய்வைத்து அகலில் வைத்து மேல் அகல் மூடிச் சீலைசெய்து 25 வறட்டியில் புடமிட நல்ல பற்பமாகும். இதனை குன்றியெடை அந்தி சந்தி நெய் வெண்ணெய் முதலியவற்றில் கொடுக்கச் சீதபேதி இரத்தபேதி. உஷ்ணபேதி நீர்க்கட்டு நீர் எரிச்சல் இவைகள் போகும்.

கல்மத பற்பம்

2½ பலம் வெங்காரத்தையும் 2½ பலம் வெடியுப்பையும் பொடி செய்து ஓர் அகன்ற மட்பாண்டத்தில் போட்டு கரி நெருப்பனலில் வைத்து வருகாமலும் பொங்காமலும் இருக்கும்படி சிறிது வெதும்பி ஆறவிட்டு உப்புகளை ஓர் வாயகன்ற தட்டை கோப்பையில் போட்டு தினந்தோறும் பனியில் வைத்துக் கொண்டுவர நீர்கசிவு உண்டாகிச் சலமாகும் அப்போதைக்கப் போது தட்டில் உள்ள நீரை வடித்து வைத்து

கொள்க இது ஒருவிதமான ஜெயநீராகும் அப்பால் கல்மதம் நாட்டுக்கல்நார் கர்பூர சிலாசத்துபலகறை காந்தம் வகைக்கு பலம் 1/2 வீதம் கல்வத்திலிட்டு முன் சுத்தப்படுத்திய ஜெய நீரால் இரண்டு சாமம் அரைத்து மெழுகு பதத்தில் வில்லை தட்டி உலர்த்தி அகலில் அடக்கி சீலை செய்து 20 வறட்டியில் புடமிடப்பற்பமாகும் இதனையெடுத்து அரைத்து பத்திரப்படுத்தவும்.

உபயோகம் : வேளைக்கு 1 குன்றியெடை தினம் இருவேளை நெய் வெண்ணை இவைகளில் அனுபானம் செய்து கொடுத்துவர நீர்சுருக்கு வெள்ளை வெட்டை நீர் அடைப்பு. மேகசுரம் முதலியவைகள் குணமாகும்.

நாட்டுக் கல்நார் பற்பம்

மூன்று பலம் நாட்டுக் கல்நாரை சுத்த ஜலத்தில் நன்றாய் அலம்பி வெய்யலிற் காயவைத்து சிறு துண்டுகளாக நறுக்கி ஓர் இரவு இளநீரில் ஊரப்போட்டு எடுத்தலம்பிக் காயவைத்து கல்வத்திலட்டு சிறு செறுப்படைச்சாற்றால் நாலு சாமம் அரைத்து சிறு வில்லைகளாகத் தட்டி நன்கு உலர்த்தி ஒரு அகலின் ஒன்றின் மீது ஒன்று படியாமல் பரப்பி மேல் அகல் மூடி சீலைசெய்து 20 வறட்டியில் புடமிடவும் இப்படியே மேற்படி மூலிகையில் அரைத்து முன்போல் வில்லை செய்து அகலிலிட சீலை செய்து 10 புடமிட்டு கொண்டுவர மிக உயர்தரமான பற்பமாக முடியும் இதனில் வேளைக்கு 1. 1½ குன்றியெடை நெய் வெண்ணெய் இவைகளில் கொண்டுவர நீர் எரிச்சல் வெள்ளை தேககாங்கை எலும்புருக்கி முதலியவற்றை நீக்கி நரம்புகளுக்கு முறுக்கேறும் பெண்களுக்கு பால் அளித்ததினால் ஆன ஸ்தன தளர்ச்சி நீங்கும்.

சீமை கல்நார் பற்பம்

2 பலம் சீமை கல்நாரைச் சிறுதுண்டுகளாக நறுக்கிக் கற்சுண்ணாம்பு தெளிவு நீரில் ஒருநாள் எடுத்துலர்த்தி

வைத்துக்கொள்க பிறகு பொடுதல்லையை அரைத்து சுமார் சிறு தேங்காய் பிரமாணம் திரட்டி அதன் எடையில் முன் சுத்தப்படுத்தியுள்ள துண்டுகளைச் சொருகி மண்சீலை செய்து 30 வறட்டியில் புடமிட கல்நார் நீற்றிருக்கம் இதனை அரைத்து சீசாவில் பத்திரப்படுத்துக வேண்டும்போது இந்த பற்பத்தில் 1. 1½ குன்றி எடை நெய் வெண்ணை முதலியவைகளில் தினம் இருவேளை அனுபானஞ்செய்து கொடுத்துவர வெள்ளை வெட்டை நீர் எரிச்சல் நீர்கட்டு தேக காங்கை கபரோகங்கள் முதலியவைகள் குணமாகும் இதனை கொண்டு பல்துலக்கிவரப் பல்லாட்டம் நீக்கி உறுதி பெறும்.

எருமைக் கொம்பு கல்நார் பற்பம்

இரண்டு பலம் எருமைக் கொம்புக் கல்நாரை துண்டுகளாகப் பிளந்து ஒரு பழகின சட்டியில் போட்டு 1½ படி பசுவின் பால் விட்டு அடுப்பிலேற்றிப் பால் சுண்ட எரித்து ஜலம் விட்டு அலம்பிக் காயவைத்து கல்லுரலில் போட்டு கடப்பாரையால் நன்கு இடித்து மாவாக்கி கல்வத்தில் போட்டுக் கடுக்காய் கியாழம் விட்டு 4 சாமம் அரைத்து வில்லைத்தட்டி காயவைத்து அகலில் அடக்கிச் சீலை மண் செய்து உலர்த்தி 40. 50 வறட்டியில் புடமிடவும் வெளுத்து சிவப்பாகயிருக்கும் இன்றேல் முன்போல் ஷை கியாழத்தில் அரைத்து பின்னும் ஒரு புடம் போட்டு எடுக்க நல்ல பற்பமாகும் வேண்டும் போது குன்றி எடை தினம் இருவேளை நெய் வெண்ணை முதலிய அனுபானங்களில் கொடுத்து வரச் சில நாளில் பெருத்த சரீரம் இளைக்கும் வெள்ளை நீர்கட்டு நீர்சுருக்கு நீரெரிச்சல் தேகவெப்பம் முதலியவை குணமாகும்.

கற்பூர சிலாசத்து பற்பம்

ஒருபலம் கற்பூர சிலாசத்தை எலுமிச்சம் பழச்சாற்றில் 3-நாள் ஊரப்போட்டு எடுத்து அலம்பி மீண்டும் பசுவின் பாலில் 3-நாள் ஊரப்போட்டு எடுத்து அதன்பேரில் ஒரு சிறிய

தேங்காய் பிரமாணம் கீழ்க்காய் நெல்லி சமூலத்தை அரைத்துக் கவசம் செய்து சீலை செய்து 30 35 வறட்டியில் புடமிட நல்ல பற்பமாகும் வேளைக்கு 1 அல்லது ½ குன்றி எடை நெய் வெண்ணை முதலிய அனுபானங்களில் அந்திசந்தி கொடுத்து வர சீதபேதி தேகவெப்பம் நீர்சுருக்கு நீர்கட்டு முதலியவை குணமாகும்.

வேறு முறை

2 பலம் கற்பூர சிலாசத்தை எலுமிச்சம் பழச்சாற்றிலேனும் சுண்ணாம்பு தெளிவு நீரிலும் மும்மூன்று நாள் ஊரப்போட்டு அலம்பியெடுத்து வைத்துக் கொள்க அதன் பின் கீழ்க்காய் நெல்லி சமூலம் கரசணாங்கண்ணி சமூலம் பொன்னாங்கண்ணி சமூலம் முடக்கத்தான் சமூலம் நல்லவேளை சமூலம் அம்மாம்பச்சரிசி சமூலம் சோற்று கற்றாழை கோவை இலை இவைகள் வகைக்கு 2-பலம் வீதம் உரலிற் போட்டு இடித்து உறவாக்கி அதனை அம்மியில் வைத்து அரைத்து முன் சுத்தப்படுத்தி வைத்துள்ள கற்பூர சிசாசத்து கட்டிக்கு கவசம் செய்து அதன்பேரில் மண் சீலை செய்து ஒருநாள் காயவைத்து மறுநாள் 35. 40 வறட்டியில் புடமிட ஆறின பின் உள்ளிட்ட மருந்தைப் பார்க்க பூத்திருக்கும் இதனை அரைத்தெடுத்து சீசாவில் பத்திரப்படுத்துக. வேண்டும்பொழுது ½ அல்லது 1 குன்றியெடை நெய் அல்லது வெண்ணை முதலிய அனுபான்னங்களில் கொடுக்க வெள்ளை நீர் சுருக்கு நீர் அடைப்பு உட்காங்கை முதலியவை குணமாகும் தாதுபலப்படும்.

கெருடகல் பற்பம்

யானை அறுகு கிழங்கை அரைத்து கவசித்து சீலைமண் செய்து கெஜபுடமிட பற்பமாகும் வெண்ணெயில் உட்கொள்ள கண்ரோகம் வயிர்கடுப்பு எலும்புருக்கி உள் வரட்சி அஸ்திசுரம் வெள்ளை வெட்டை நீங்கும் இளைத்த பிள்ளைகளுக்கு கொடுக்க பெருத்து வளரும் இது அஸ்தி காங்கையை எடுப்பதில் நிகறற்றது

க்ஷயரோகிகளுக்கு அனுபானமாக கொடுக்கலாம் கணைச் சூடு உள்ள குழந்தைகளுக்கு கொடுக்ககணைச்சூடு நீங்கி குழந்தை பெருத்து வளரும்.

வெடியுப்பு சுன்னம்

வெடியுப்பு பலம் 1 சோடா உப்பு பலம் 1 இவை இரண்டையும் கல்வத்திலிட்டு பிரண்டை சாற்றில் 4-சாம்ம் அரைத்து வில்லைதட்டி காயவைத்து ஓடு மூடி சீலை 7 செய்து 50 எருவில் புடமிட சுண்ணமாகும்.

உபயோகம் : இந்த சுண்ணத்தில் 2-குன்றி அளவு எடுத்து வெந்நீரில் கலக்கி வெரும் வயற்றில் காலை மாலைக் கொடுக்க வயிற்று வலி குணமாகும் எலுமிச்சம் பழச்சாற்றிலும் உபயோகிக்கலாம்.

துருசு பற்பம்

துருசு விராகனிடை 3 வெடியுப்பு விராகனிடை 2 இவைகளை குப்பைமேனி இலைச்சாற்றால் அரைத்து வில்லை செய்து உலர்த்தி ஒரு ஓட்டிலிட்டு ஓடு மூடி சீலைமண் செய்து உலர்த்தி குக்குட புடமிட பற்பமாகும் இதனை எடுத்து பதனபடுத்தவும்.

உபயோகம் : இந்த பற்பம் ½ முதல் 2 குன்றிவரை தக்க அனுபானத்தில் சாப்பிட வயிற்றுவலி கபரோகங்கள் 96-ம் குணமாகும் இது வீண் புகழ்ச்சி இல்லை செய்து பாருங்கள்.

துருசு பற்பம்

கௌதும்பை கருஊமத்தை இவைகளில் புடமிட மிக நல்லது பித்தபாண்டு க்ஷாமாலை பக்கவாயு சோகை ஈளை காசம் இரைப்பு முதலியவைகள் குணமாகும்.

யானைப் பல் பற்பம்

ஒரு முழு யானைப்பல்லை எடுத்து அதற்கு அகத்தியிலையை அரைத்து கவசம் செய்து ஒரு புடமிடவும் பின் மருதாணியிலையை அரைத்து கவசித்து முன்போல் புடமிடவும் பின் பொற்றலை கையான் இலையை அரைத்து கவசித்து முன்போல் புடமிடவும் பின் எடுத்துப் பதனப்படுத்தவும்.

இதனை பழைய 1/8 ரூபாய் எடை எடுத்து நெய் தேனில் சாப்பிடவும் 10, 20, 30 வருடங்களாக கற்பமில்லாத ஸ்திரீகளுக்கு கொடுக்க கர்ப்பம் தரிக்கும் மற்றும் தாதுகளுக்கு புஷ்டியைத் தந்து தேகபலம் அதிகரிக்கும்.

குறிப்பு : மேற்படி யானைப்பல்லுக்கு முதல் புடம் மட்டும் கவசம் செய்து புடம் மறுபடி புடங்களுக்கெல்லாம் அதில் கூறப்பட்ட சாற்றை விட்டு அரைத்து அந்த தழையையே அரைத்து கவசித்து 50 எருவில் புடமிடவும்.

தாளக பற்பம்

சரக்கு : தாளகம் பலம் 1 வெங்காரம் பலம் 1.

செய்பாகம் :- மேற்கூறப்பட்ட வெங்காரத்தை கல்வத்திலிட்டு பொடிசெய்து அதில் பாதி பொடியை ஒருமண்குடுவையிலிட்டு அதன் மேல் மேற்படி தாளகக் கட்டியை வைத்து அதின் மேல் மீதியுள்ள பாதி வெங்காரம் பொடியைப் போட்டு மேல்மூடி சீலை செய்து ரவியில் உலர்த்தி 4 அல்லது 5 விறட்டியை குடுவைக்கு கீழ்மேல் வைத்து புடமிட்டு புடம் ஆறின பின் பிரித்தெடுக்கலாம் மருந்தை கல்வத்திலிட்டு பொடித்து வைத்துக்கொள்ளவும்.

உபயோகம் :- ஒரு அரிசி எடை முதல் 2 அரிசி எடை தேனில் சாப்பிடவும்.

தீரும் வியாதி :- காசம் இரும்மல் (ஆஸ்மா) மூச்சுதிணரல் கஷ்டசுவாசம் உடன் நிவர்த்தி செய்யும் நீடித்து சாப்பிட்டு வர வியாதிகுணமாகும்.

தாளக பற்பம்

ரேக் தாளகம் 1 பலம் இதனை கல் சுண்ணாம்புக்குள் வைத்து கழுதை அமுரியால் ஏழு தடவை தாளித்து சுத்தி செய்து கொண்டு முற்றின பிரமதண்டு சாற்றால் 4-சாமம் அரைத்து பில்லை தட்டி காயவைத்து ஷெ பில்லையை ஓட்டிலிட்டு 7 சீலை வலுவாக செய்து 10 எருவில் புடமிட்டு எடுக்க அதிக காரமுள்ள பற்பமாக முடியும் இதனையெடுத்து அரைத்து பதனப்படுத்தவும்.

அனுபானம் :- தேனில் காலை மாலை 2 அல்லது 3 அரிசி எடை கொடுக்க கூஷயம் காசம் கிரந்தி சூலை மேகம் குஷ்டம் சுரம் முதலிய கடுமையான ரோகங்கள் தீரும்.

வேறுமுறை

தங்கப்பொடியை சிவப்பு அம்மான் பச்சரிசி இலைச்சாற்றால் 4-சாமம் அரைத்து பில்லைதட்டி உலர்த்தி கடம்புயிலையாவது அல்லது உப்பிலாங்கொடி இலையாவது அரைத்து அப்பில்லைகளுக்கு கவசமிட்டு ஓட்டிலிட்டு சீலை மண் செய்து கஜபுடம் போட பற்பமாகும்.

தங்க பஸ்பம்

பனிதரங்கை பூண்டை அரைத்து தங்கங்களுக்கு கவசமிட்டு ஓட்டிலிட்டு சீலை மண் செய்து கெஜபுடம் போட பஸ்பமாகும் ஒரு குன்றி மணி எடையெடுத்து அனுபானத்தில் கொடுக்க காசம் கூஷயம் ஈளை கபரோகங்கள் மேகம் சூலை குன்மம் மகோதரம் வாயு குஷ்டம் நீராம்பல் நீரிழிவு வெட்டை பித்தம் கருமேகம் முதலிய. அநேக வியாதிகள் தீரும் வெண்குஷ்டத்துக்கு கவுரி இலையின் தனிச்சாறு படி 2 எடுத்து

ஓர் கல்சட்டியில் போட்டு வெய்யலில் வைத்து மெழுகு போல் வரும்போது ஆடாதொடை இலைகளைச் சேர்த்து மெழுகு போல் அரைத்து அத்துடன் புனுகு பலம் ¼ ஷெ சுவர்ண பஸ்பம் விராகனிடை 2 சேர்த்து அரைத்து நெல்லிக்காய் போல் உருட்டி இளம்பதமாய் உலர்த்தி சுயநல்லெண்ணையில் போட்டு தினம் அந்தி சந்தி ஒவ்வொரு உருண்டையாக 6-மாதம் சாப்பிட்டால் வெண்குஷ்டம் தீரும் ஷெ மருந்து ஊறும் எண்ணெயால் 8 நாளைக்கு ஒரு தடவை அப்பியங்கன ஸ்நானஞ் செய்து வரவும்.

பத்தியம் :- ஆண் பெண் சம்போகம் கூடாது..

தங்க பஸ்பம்

தங்க ரேக்கு விராகனிடை 1 அதை தம்படி அளவாய் கத்தரித்து கௌதும்பை இலையை வில்வபழம் அளவு உருண்டை செய்து அதில் ஒவ்வொரு துண்டையும் தனித்தனியாக சொருகி அவ்வுருண்டைக்கு 5 சீலை மண் செய்து காயவைத்து 20 வறட்டியில் புடமிடவும் ஆறின பிறகு எடுத்துப் பார்க்க நீரின் வெண்மையாகயிருக்கம் அதை வெகு ஜாக்கிரதையாக பேனாகத்தியால் எடுத்து சீசாவில் அடைத்து வைக்கவும்.

உபயோகம் : இதை அரிசி எடை எடுத்து வெண்ணையில் வைத்துக் கலந்து 10-நாள் உட்கொள்ள நீரொழுக்கு பிரமேகம் தீருவதுடன் தாது விரித்தியாகி புருஷ லக்ஷணம் பிரகாசிக்க செய்யும்

தங்க பஸ்பம்

தங்க ரேக்கை அவரையிலைச் சாற்றில் அரைத்து 20 விராட்டியில் புடம் சிறுசென்னி சாற்றில் அரைத்து 30 விராட்டியில் புடம் போடவும் திருநூற்று பத்திரி சாற்றில் அரைத்து 40-விறட்டியில் புடம் இவ்வாறு மூன்று புடம்போட்டு எடுத்தால் உயர்தரமான பற்பமாக முடியும்.

குணம் :- முன் கூறப்பட்டதேயாகும்.

வெள்ளி பஸ்பம்

சுத்தமான வெள்ளி 1 தோலா எடுத்து கும்பட்டியிலிட்டு பழுக்க ஊதி அழகுவண்ண மூலிச்சாற்றில் 7 தடவை ஊதி ஊதி தோய்த்தெடுத்து அதே இலையை அரைத்து தேங்காய் பிரமாணம் உருட்டி அதனுள் அந்த ரூபாயை வைத்து 7 சீலைமண் செய்து காயவைத்து முழ ஆழம் குழி வெட்டி தாம்பிர பஸ்பம் புடம் போல் போட்டு எடுக்க நல்ல பஸ்பமாகும் இதையெடுத்து சீசாவில் பதனப்படுத்தவும்.

உபயோகம் :- இந்த வெள்ளி பஸ்பத்தில் அரிசி எடை எடுத்து பசும் வெண்ணையில் காலை மாலை 10 நாள் சாப்பிட்டு வர தாது விரித்தி செய்யும் காசம் தீரும் முளை இருமல் சுவாசகாசம் தந்திர காசம் தீரும்.

பத்தியம் :- இச்சாபத்தியம்.

வெள்ளை பாஷாண சுண்ணம்

6 தோலா அப்ளாகாரத்தை நயிசாக அரைத்து இருபாகமாக்கி ஒரு மூசையில் ஒரு பாக மருந்தை வைத்து இதன் மத்தியில் 1 தோலா வெள்ளை பாஷாணத்தை வைத்து அதன் மேல் மற்றொரு பாக மருந்தை போட்டு கையால் சரிவர அமிக்கி மூசையின் வாயிற்கு ஒரே ஓட்டால் முடி 7 சீலைமண் செய்து காயவைத்து சேவல் உயரம் விராட்டியில் புடம் போட பஸ்பமாகும் இதில் அரிசி யெடை எடுத்து தேனில் மத்தித்து உள்ளுக்கு கொடுக்க சுரமெனப்பட்டவை யாவும் தீரும் வெண்ணையில் சாப்பிட (10-நாள்) இரப்புநோய் சுவாசகாசம் வாதரோகம் தீரும்.

பத்தியம் :- இச்சாபத்தியம்

உருக்கு பஸ்பம்

சுத்தி செய்த உருக்கை தகடுகலாக்கி ஆகாச கெருடன் கிழங்கில் பொதிந்து சீலை மண் செய்து உலர்த்தி வராகபுடம் போட பற்பமாகும் இதனை யெடுத்து பத்திரப்படுத்தவும்.

உபயோகம்:- குன்றி எடை தேனில் அனுபானித்து சாப்பிட தேகம் பலம் பெரும் நரை திரை மாறும் இந்த பற்பத்தை ராஸ்னாதி சூரணத்தில் கலந்து சாப்பிட பாரிசவாதம் குணமாகும் ராஸ்னாதி சூரணத்தில் கூறப்பட்ட வியாதிகள் அனைத்தும் குணம் செய்யும்.

அய பஸ்பம்

சுத்தி செய்த அயப்பொடியை குப்பைமேனி சாற்றால் 2 சாமம் அரைத்து உலர்த்தி முந்திரி மரத்தின் ஒரு சிறு கட்டையை துளைத்து அதிலிட்டு மேற்படி மரத்தின் சகையால் மூடி சீலை மண்செய்து கெஜபுடம் போட பற்பமாகும் இதில் ½ விராகனிடை எடுத்து தக்க அனுபானத்தில் சாப்பிட பித்த வெட்டை பாண்டு சோகை 9 முதலியவை குணமாகும் தேகம் இருகும் விந்து ஊறிவிந்து கட்டும் இதுவும் ராஸ்னாதி சூரணத்தில் கலந்து சாப்பிட நலம் தரும்.

கோமூத்திர சிலாசத்து பற்பம்

விதை நீக்கிய கடுக்காய் தான்றித்தோல் நெல்லி முள்ளி வகைக்கு விராகனிடை 10 இந்த விராகனிடையும் 4 சேர் சுத்த ஜலத்தில் போட்டு 3ல் ஒரு பங்கு கஷாயமாகக்காய்ச்சி வைத்துச் கொள்ளவும் பிறகு 20 விராகனிடை கோமூத்திர சிலாசத்தை கல்வத்திலிட்டு மேற்படி திரிபலாதி கஷாயத்தை விட்டு 1 சாமம் அரைத்து (3-மணி நேரம்) வில்லைகள் செய்து காயவைத்து 50-முதல் 75 விராட்டியில் புடம் போட பற்பமாகும்.

அளவுகள் :- ½ பணவெடை முதல் 1-பணவெடை சாப்பிடவும் அனுபானம் (1) பணவெடை பஸ்பத்துடன் நெருஞ்சில் முள் கஷாயம் சாப்பிட சகல மேகங்களும் நிவர்த்தியாகும்.

அனுபானம் :- பெருங்காயம் 1 குண்டு மணி முதல் 3 குன்றிவரையில் வெந்நீரில் கரைத்து அதில் மேற்படி பற்படி பற்பத்தை கலந்து கொடுக்க. அல்லது சுக்கு கிஷாயத்தில் பற்படி பற்பத்தை சேர்த்துக்கொடுக்க அஜீரணமும் வயிற்று பொருமல் மலபந்தம் இவைகள் விலகி குடலை நன்றாக சுத்தம்செய்து மலம் சிறுநீர் முதலான அசுத்த மாசுக்களை வெளியாக்கும்.

மூத்திரத்தில் அடைப்புகளுக்கும் அதிக உப்பு இருப்பதற்கும் எட்டி கொட்டை (விஷமுஷ்டி) சூரணம் ½ குன்றி முதல் 2 குன்றிவரை அல்லது ½ கோதுமை எடை முதல் 2 கோதுமை எடை வரை எடுத்து அதில் பற்படி பற்பம் அளவுபடிக்கு கலந்து நெருஞ்சில் நீர் முள்ளி வெள்ளை காட்டரணை வேர் இவைகளை தனித்தனியாகவோ அல்லது சேர்தோ செய்த கியாழத்தில் மேற்படி சூரண பற்பத்தை இட்டுக் கொடுக்கவும்.

அனுபானமின்றி தனியே மருந்தைக் கொடுத்தாலும் நன்றாக வேலை செய்யும் கியாழமின்றி கொடுக்கலாம் இது சிறந்த மூத்திர விரோசனகாரி.

பூசனிக்காய் சாற்றில் கொடுத்தால் மூத்திரக்கட்டு நீங்கிவிடும் மூத்திரத்தில் அதிக உப்பு சத்து இருந்தால் குறைந்து விடும் தேக ஆரோக்கிய நிலைக்கு வெகு சீக்கிரத்தில் குணமாக்கும்

விஷ முஷ்டி சேர்ந்த கஷாயங்களில் கொடுப்பதினால் இருதயத்துக்கு நன்றாக வேளையைத் தூண்டி பலமளிக்கின்றது மற்றும் இது சர்வாங்க வீக்கம் மகோதரம் பாண்டு ஜலோதரம் கல்லிரல் மண்ணீரல் வீக்கம் முதலானவைகளுக்கு சாரணை சுரக்கொடி மூக்கத்திச்சாரணை நீர் முள்ளி கோவை வெள்ளரி விதை நெருஞ்சில் முதலிய கியாழங்களில் கொடுக்க நன்றாக மூத்திரம் விரோசனமாகி தேகத்தில் உள்ள வீக்கம் நீங்குகின்றன காளரியா மேகம் பெண்களுக்கு மர்மஸ்தானத்தில் ஏற்படும் புண் ஆற்றுவதற்கும் வியாதியைச் சுகப்படுத்துவதற்கு பூசனிக்காய்

சார் அல்லது தண்ணீர் விட்டான் கிழங்கு சாற்றில் கொடுக்கவும் கோரமான அதிசாரம் காலரா வாந்தி இவைகளுக்கு பார்லி வாட்டரில் கலந்து கொடுக்க வியாதியின் வேகம் விரைவில் குறையும் வயிற்றுவலி புளித்தேப்பம் இவைகளுக்கு நல்ல குணம் காணப்படுகிறது இதை தனியாகவும் தேங்காய் உப்பு இந்துப்பு இவைகளுடன் எட்டிசூரணம் கலந்தும் உபயோகிக்கலாம். மூத்திரத்தில் ஏற்படும் அசிடிட்டி தோஷங்களை அகற்றி அதனால் ஏற்படும் விகாரங்களைச் சமனம் செய்யும் இதேமாதிரி வயிற்றில் ஏற்படும் புளிப்புகளையும் சமனம் செய்யும் இங்கு சிற்சில ரோகங்களுக்குத்தான் அனுபானம் தரப்பட்டிருக்கிறது இந்த முப்பு போன்ற இம்மாமருந்து அனேககொடிய ரோகங்களுக்கும் தனித்தேனும் அனுபானத்துடனும் (கியாழம்) மற்றும் மருந்துகளுடன் துணையாகவும் எல்லா மருந்துகளுடன் துணையாகவும் எல்லா மருந்துகளுடனும் இம்மருந்தைக் கலந்து கொடுப்பதால் குணம் காணப்படுகிறது அனுபோக வைத்தியர்கள் அவர்களின் சாதுர்யத்தினால் பல ரோகங்களை குணப்படுத்தலாம் ஒவ்வொருவைத்தியரிடமும் இது அவசியம் இருக்க வேண்டும்.

ரச பற்பம்

1 தோலா சுத்தி செய்த ரசத்தை அத்திபால் விட்டு 1 சாமம் அரைத்து வட்டு செய்து காயவைத்து 4 தோலா பெருங்காயத்தை அத்திப்பால் விட்டு அரைத்து இரண்டு மூசைபோல் செய்து அதனுள் மேற்செய்த வட்டயைவைத்து அதன் மேல் மற்றொரு மூசையால் மூடி 7 சீலைமண் செய்து ரவியில் காயவைத்து 18 பலம் விராட்டியால் புடம் போட்ட ரச பஸ்பமாய் மாறிவிடும் இதனை எடுத்து புட்டியில் பதனம் செய்யவும்.

உபயோகம் :- இதில் அரிசியெடை எடுத்து வெண்ணையில் வைத்து 5 நாள் காலை மாலை உட்கொள்க கைகால் பிடிப்பு வெள்ளை கொருக்கைபுண் முதலியவைகள் தீரும் தாது விர்த்தியாகும் இச்சாபத்தியம்.

வீர பற்பம்

சரக்கு :- அப்பைக் கோவைக்கிழங்கு 2 வீரம் பலம் 1/2

செய்பாகம் :- மேற்படி கிழங்கை அரைத்த விழுதில் வீரத்தைப் பொதிந்து ஒட்டிலிட்டு மேல்ஓடு முடி சீலைமண் செய்து உலர்த்தி 3 விராட்டியில் புடமிட பற்பமாகும் இதனை எடுத்து பதனப்படுத்தவும்.

உபயோகம் :- தேன் நெய் முதலிய அனுபானத்தில் கொடுக்க வாதரோகம் 20 குணமாகும்.

பூர பற்பம்

ஒரு சின்ன குகையில் பாதி அளவு சோடா உப்பைப் போட்டு அதில் ½ பலம் பூரக்கட்டியை வைத்து அதன்மேல் சோடா உப்பைபோட்டு மூடி கவசித்து 1 அல்லது 1½ விராட்டியில் புடமிட்டு எடுக்கவும் அது மஞ்சள் வர்ணத்துடன் இருப்பது பூரபற்பமாகும் வெள்ளையாக இருப்பது சோடா உப்பு இவை இரண்டையும் தனிதனியே அரைத்து தனிதனி பாட்டிலில் பதனப்படுத்தவும்.

உபயோகம் :- பூரபற்பம் உழுந்து அளவு தேனில் கொடுக்க புண் புறை வெள்ளை வெட்டை சூலை இளம் பிள்ளை வாதம் குணமாகும் சோடா பற்பம் வயிற்றுவலி குன்மம் குணமாகும்.

வெள்ளை பாஷாண பற்பம்

6 தோலா அப்ளாகாரத்தை நயிசாக அரைத்து இருபாகமாக்கி ஒரே மூசையில் ஒருபாகம் மருந்தை வைத்து இதன் மத்தியில் 1 தோலா வெள்ளை பாஷாணத்தை வைத்து அதன் மேல் மற்றொரு பாக மருந்தைப்போட்டு கையால் சரிவர அமிக்கி மூசையின் வாயிற்கு ஒரு ஓட்டால் மூடி 7 சீலைமண் செய்து காயவைத்து சேவல் உயரம் விராட்டியில் புடம்போட

பற்பமாகும் இதில் அரிசியெடை எடுத்து தேனில் மத்தித்து உள்ளுக்கு கொடுக்க சுரமெணப்பட்டவையாவும் தீரும் வெண்ணெயில் சாப்பிட (10 நாள்) இரப்பு நோய் சுவாச காசம் வாதரோகம் தீரும்.

பத்தியம் :- இச்சா பத்தியம்

நவநீத பூபதி பற்பம்

கற்பூரசிலாசத்து கல்மதம் கல்னார் கலைமான் கொம்பு பலகரை பவளம் படுகாரம் வெங்காரம் உருத்திராட்சம் இந்த ஒன்பது வகையும் வகைக்கு 1 பலம் எடுத்து இடித்து தூள் செய்து கல்வத்திலிட்டு பசுவின்பால் விட்டு அரைத்து வில்லைதட்டி உலர்த்தி கவசித்து சீலை செய்து 50 எருவில் புடமிட்டு எடுத்து முன்போல் பசும் பால் விட்டு அரைத்து புடமிடவும் இவ்விதம் மொத்தம் மூன்று புடமிட்டு எடுக்க திவ்யபற்பமாக முடியும்.

உபயோகம் :- வெள்ளை வெட்டை இதனால் வரும் ஜுரம் இருமல் எலும்புருக்கி நோய் க்ஷயம் உஷ்ணம் தாகம் இருமல் குணமாகும் அனுபானம் நோய்க்கு தக்கபடி வால்மிளகு கஷாயம் சூரணம் நெய்வெண்ணெய் முதலியன.

குறிப்பு :- சிலாசத்து என்ற சரக்கை மட்டும் தனியாக புடமிட்டு கடைசியில் இத்துடன் சேர்க்கவும் மேற்படி மருந்தோடு சேர்த்து புடமிட்டால் கோழிமுட்டை அவித்த வாசனை வரும் என்பதை கவனிக்கவும்.

பஞ்ச சுண்ண பதங்கம்

சரக்கு :- வீரம் 2 தோலா பூரம் 2 தோலா சாதிலிங்கம் 2 தோலா ரசம் 2 தோலா ரசசெந்தூரம் 2 தோலா

செய்முறை :- ரசத்தை செங்குத்தூளில் சுத்திசெய்து ரசசெந்தூரத்தை தவிர மற்ற சரக்குகளை பிள்ளை பாலில் ஊரப்போட்டு பால்காயவிட்டு 5 சரக்கையும் ஒன்று சேர்த்து அரைத்து ஒரு புதுசட்டியில் 1 படி உப்பை இடித்து அதில் ½

படி உப்பை சட்டியில் போட்டு மேற்படி மருந்தை மத்தியிலிட்டு மீதி ½ படி உப்பை அதன் மீது கொட்டு அதன் மேல் இருப்புவல் மூலிச்சார் மாகாணிப்படி அரைத்துத் தெளித்து மேற்சட்டி மூடி சீலை மண் செய்து அடுப்பேற்றி இடைவிடாமல் 1 சாமம் எரித்து மறுநாள் கவசத்தைப் பிரித்து மேற்சட்டியில் உள்ள பதங்கத்தை வராக முடியால் சுரண்டி எடுத்து வைத்துக்கொள்ளவும்.

உபயோகம் :- மேற்படி பதங்கத்தில் ஒரு அரிசி எடையெடுத்து 3 நாள் காலை மாலை 6 வேளை கொடுக்கவும்.

பத்தியம் :- கரப்பான் பண்டங்களைத் தள்ளவும்.

தீரும் வியாதிகள் :- மேகரோகம் படர்மேகம் கைகருப்பு புள்ளிகள் தேக மெங்கும் கருப்பு புள்ளிகள் கிரந்தி ரோகம் தீரும் இதனை இன்னும் பலவியாதிகளுக்கு கொடுக்க சுகம் தீரும்.

பஞ்சமுகப் பிர்மாஸ்திரம் (செந்தூரம்)

சரக்கு :- வீரம் ½ பலம் தாளகம் ¼ பலம் லிங்கம் ½ பலம் நெல்லிக்காய் கெந்தி 1½ பலம் கற்பூரம் ¼ பலம் வாலை ரசம் 2 பலம்.

செய்முறை :- மேற்படி கெந்தியில் ½ பலம் மட்டும் தனியாக யெடுத்து கம்மார் வெற்றிலைச் சாற்றால் மைபோல் அரைத்து ஓர் விளாங்காய் பருமனுள்ள ஓர் கலயமெடுத்து அதன் உட்புறமெல்லாம் பூசி அதன் வாய் மூடிக்கும் பூசி காயவைத்து மேற்கூறப்பட்ட சரக்குகளை யெல்லாம் தூள் செய்துக் கலயத்தில் அரைபாகம் மருந்தையிட்டு அதில் சிறிய குழிசெய்து அதில் மேற்கூறப்பட்ட வாலைரசத்தை அதில் விட்டு மீதியிருக்கும் மருந்து தூளையும் மெதுவாகப் போட்டு வாய் ஓடு மூடி மேலும் கீழும் அசையாதபடி சீலை மண் 7 செய்து காயவைத்து ஓர் குண்டு சட்டியில் ஒண்ணே கால்படி செய்பூர்மாகாணத்து சோத்துப்பை மாவாகபொடி செய்து சட்டியிலிட்டு மேற்படி

கலயத்தை அசையாது வைத்துச் சற்று அழுத்தி அதன்மேல் ஒண்ணேகால்படி மேற்படி உப்பை போட்டு மூடி கையினால் சற்று அழுத்தி மேற்படி சட்டிமூடி சந்துக்கு 7 சீலை மண் செய்து காயவைத்து அடுப்பின் மீதுயேற்றி ஒரேசாதி விரகால் எரிக்கவும் அடுப்பின் அளவாவது 4 சாமம் தீபாக்கினி 2 சாமம் கமலாக்கினி 1 சாமம் தனலாக்கினி இப்படியாக யெரிக்கவேண்டும் எடுத்து ஆறிய பின் பார்க்க அதாவது கலயத்தை உடைத்துப் பார்க்க அதெல்லாம் உருகி குண்டுகல் போலிருக்கும் இதனை யெடுத்து கல்வத்திலிட்டு ஒரு சாமநேரம் அரைத்துப் பார்த்தால் முருக்கம்பூ நிறமாக செந்தூரமாகியிருக்கும். இதனை பரணையில் வைத்து வைக்கவும். இச்செந்தூரத்திற்கு தனிச் செந்தூரமென்றும் ஒரு பெயருண்டு இது விசேஷ கீர்த்தி பெற்ற செந்தூரமாகும்.

பஞ்சமுகப் பிர்மாஸ்திரத்துக்கு அனுபானங்கள்

இதில் வேளை ஒன்றுக்கு 3 குண்டுமணி விகிதம் காலை மாலை 15 அல்லது 2 நாள் நெய்யில் மத்தித்து சாப்பிட்டு வர மேகம் 2 சிற்சில குட்டம் மேகப்படைகள் வாதம் 80 தீரும் தேனிற் கொள்ள சுரம் 64 ஐன்னி இன்னும் அனேக வியாதிகள் குணமாகும்.

பத்தியம் :- இச்சாபத்தியம் வெள்ளாட்டுக்கறி பால். நெய். தயிர் இவைகளை விசேஷமாய் சேத்துக்கொள்ள வேண்டும் அவ்வாறு செய்தால் நலம் இதைசாப்பிட்டுவரும் பொழுது பிரதி தினம் குளத்தில் 2 அல்லது 4 முழுக்குப் போட்டு ஸ்நானஞ் செய்யவேண்டியது ஸ்நானம் செய்யும்பொழுது எல்லாம் உச்சியிற் கொஞ்சம் நெய் தேய்த்துக் கொள்ள வேண்டியது குட்டம் முதலிய ரோகங்களுக்கு ஒரு மண்டலம் சாப்பிட்டு பின் 10 நாள் விட்டு பின்னும் ஓர் மண்டலஞ் சாப்பிடப் பூரண சுகத்தை தரும்.

சரக்கு :- அரப்பொடி 4 பலம் பூரம் 3 பலம் வீரம் 4 பலம் லிங்கம் 1 பலம்.

செய்பாகம் :- இரண்டு மண்பாத்திரம் கொண்டு வந்து ஒரு பாத்திரத்தில் அப்பொடியை பரப்பி அதன்மீது வீரம் பூரம் லிங்கம் பொடி செய்து போட்டு அதன் மீது மீய்ந்த அரப்பொடியைத்தூவி மேல் கலச சட்டியை மூடி சீலை மண் வலுவாக செய்து 4½ மணிநேரம் ஜடராக்கினையாக யெரித்து மேல் கலசத்தில் பதங்கமாக யேறியிருக்கும் (சூடு ஆறின பின்பு கவசத்தை பிரிக்கவும்) இதனை வராக முடிகொண்டு துடைத்து எடுக்கவும்.

உபயோகம்:- இந்தப் பதங்கத்தில் அரிசியெடை யெடுத்து விளக்கெண்ணெயில் மத்தித்து கொடுக்க குழந்தைகளுக்கு யேற்படும் ஈரல் குலைக்கட்டிகள் கரைந்து சுகமடையும் மற்றும் கிரந்தி மேகபத்து அரையாப்பு பெண்சம்பந்தமான நோய் லிங்கரணம் முகவாதம் தீரும்.

சிவ பதங்கம்

சரக்கு :- உலர்ந்த லிங்கம் 2 பலம் வளையலுப்பு 1 பலம் சோத்துப்பு 2 படி

செய்பாகம் :- ஒரு சட்டியில் சோத்துப்பைக் கொட்டி அதன் மத்தியில் வளையலுப்பை பாதிபோட்டு அதன்மேல் லிங்கத்தைப் பொடித்துப் போட்டு மேல் வளையலுப்பை போட்டு மேல் சட்டி மூடி உளுத்தம் பருப்பு வீசம்படி எடுத்து ஊரவைத்து அரைத்து 7 சீலை செய்து உலர்த்தி அடுப்பின் மீது வைத்து வேப்பன் விரகால் 4 சாமம் எரித்து மறுநாள் சீலையை பிரித்து யெடுத்து பதங்கத்தைப் பதனப்படுத்தவும்.

உபயோகம் :- இந்த பதங்கத்தை வாதம் 80க்கும் உபயோகப்படுத்தலாம் மேல் கை கால் வீக்கத்தை ஒரு வாரத்துக்குள்ளாக குணம் செய்யும் இன்னும் அனேக வியாதிகளுக்கு கொடுக்கலாம் பச்சரிசி மாவு சிறிது எடுத்து ஜலம் விட்டு பிசைந்து அதன் நடுவில் மேற்படி பதங்கம் உளுந்து அளவு எடுத்து வைத்து உருட்டி காலையில் மட்டும் 5 நாள்

சாப்பிடவும் இம்மருந்து சாப்பிடும் முன் பாசிப்யிர்சேர்த்துப் பொங்கல் நெய் சேர்த்து சாப்பிடவும் பத்தியமில்லை சாம்பார் சாதம் கூட சாப்பிடலாம்.

ரச பதங்கம்

சரக்கு :- சீனம் சாரம் வெடியுப்பு வெங்காரம் சுட்ட துருசு சமுத்திரலவணம் பூநீர் இவைகளை வகைக்கு ½ பலம் சுத்தி செய்த ரசம் 2 பலம்.

செய்முறை :- மேற்கூறப்பட்ட 7 சரக்கையும் கல்வத்தில் இட்டு வெள்ளைச்சாரணைச் சாற்றில் நெகிழ அரைத்து அரைக் கால்படி போல் இரண்டு மண் உழக்கு தயாரித்து ஒரு உழக்கில் மேற்கூறிய சரக்குகளைப் போட்டு மற்றொரு உழக்கால் மூடி வலுவாய் சீலைமண் செய்து உலர்த்தி அடி உழக்கு மட்டும மறையும் படி சுமார் 3 அல்லது 4 விராட்டிகள் அடுக்கி புடமிட ரசமானது பதங்கமாகயேறிவிடும். புடம் ஆறினதும் சீலையை மெதுவாகப் பிரித்து பதங்கத்தைப் பதனம் செய்யவும்.

உபயோகம் :- பன வெல்லத்தை சிறிது ஜலமிட்டு பிசைந்து சிறுசுண்டைக்காய் அளவுயெடுத்து அதன் மத்தியில் ஷை பதங்கத்தை வைத்து உருட்டி காலையில் மட்டும் சாப்பிடவும்.

தீரும் வியாதியாவது :- மேல் கால் வலி குத்தல் குடச்சல் நெஞ்சுவலி மற்றும் வாத சம்பந்தமான நோய்கள் தீரும்.

ரசவீர பதங்கம்

ரசவீரம் வகைக்கு 1 பலம் நிறுத்தெடுத்து கல்வத்திலிட்டு அரைத்து ஒரு சட்டிலிட்டு மேல் சட்டி மூடி சீலை மண் வலுவாக செய்து அடுப்பிலிட்டு 4½ மணிநேரம் எரித்து விடவும் ஆறின பிறகு கவசம் நீங்கி பதங்கத்தை எடுத்துப்பதனப்படுத்தவும்.

மேற்கூறிய சரக்கையே சட்டியிலிட்டு மூடி வேப்பெண்ணையை அகலிலிட்டு பெரிய திரிபோட்டு

தீபொருத்தி எரித்தெடுப்பதும் உண்டு எங்கனம் செய்யினும் குணமொன்றே ஆமணக்கு எண்ணையிலும் எரிக்கலாம்.

உபயோகம் :- ஜன்னி மார்வலி மாரில் வாயுவு மார் அடைப்பு முதலியவற்றுக்கு இஞ்சிசார் தேன் அனுபானத்தில் மேற்படி பதங்கம் அரிசியெடை எடுத்து காலையில் கொடுத்து வரவும் 4. 5 வேளையில் குணம் தரும் காலை மாலை இரு நேரம் 3 நாள் 6 வேளையும் தரலாம் இங்கனம் கொடுத்த பிறகு லிங்க செந்தூரம் கொடுக்கவும் இவ்விதம் 2 : 3 தடவை செய்யவும்.

குறிப்பு :- எரித்தெடுத்த பதங்கம் வெண்மையாக யிருப்பதை மட்டும் எடுத்துக்கொண்டு கருப்பாக இருப்பதை தள்ளிவிடவும் கருப்பு நிறத்தோடு இருப்பது வாய்பிடிக்கும்.

பூரப் பதங்கம்

ஒரு பலம் பூரத்தை 30 நாழிகை முலைப்பாலில் ஊரவைத்து எடுத்து வெண்மையாகயிருக்கும் வெங்கச்சங் கல்லைத்தூள் செய்து ஒரு சட்டியில் போட்டு அதன்மீது பூரத்தை தூள் செய்து போட்டு மேற்சட்டிக்கு வெற்றிலை சார் தடவி மூடி சீலை மண்செய்து 1½ சாமம் ஒரே சாதி விரகால் எரித்து மறுநாள் கவசத்தைப்பிரித்து பதங்கத்தை பதனமாய் எடுத்து பதனப்படுத்தவும்.

உபயோகம் :- இந்த பதங்கத்தில் அரிசி எடை எடுத்து விளக்கெண்ணையில் குழைத்து 3 நாள் அல்லது 6 நாள் காலையில் மட்டும் கொடுத்துவர மார் அடைப்பு திரேகம் குத்தல் குடச்சல் திமிர்வாதம் சகலவிதமான வாயு ரோகமும் தீரும்.

பத்தியம் :- இச்சாபத்தியம்

கௌரி பதங்கம்

கௌரி பாஷாணம் வெள்ளை பாஷாணம் பூரம் இவையாவும் வகைக்கு பலம் 1

செய்பாகம் :- மேற்கண்ட மூன்று சரக்குகளையும் கல்வத்திலிட்டு எருக்கம்பால் விட்டு ஒரு சாமம் அரைத்து வில்லைத் தட்டிக் காயவைத்து ஒரே அளவாய் இரண்டு சட்டி வாங்கி வந்து வாய் பொருந்தும்படிக்கு தேய்த்து பின் ஒரு சட்டியில் மேற்படி வில்லையை வைத்து மேல் சட்டி மூடி 7 சீலை மண் வலுவாக செய்து காயவைத்து அடுப்பின் மீது வைத்து 4 மணிநேரம் ஜடராக்கினியாக எரிக்கவும் எரிக்கும் சமயம் மேற் சட்டி மீது ஈரத்துணியை பிழிந்து, ஈரம் இருக்கும் படிக்கு போடவும் ஈரம் உலர்ந்ததாக தெரிந்ததும் பின்பு முன் போல போட்டு வரவும் மேற்கண்ட 4 மணி நேரம் எரிப்பு எடுத்து எரிப்பை நிறுத்தி விடவும் மறுநாள் பதங்கத்தை எடுத்து பதனப்படுத்தவும்.

உபயோகம் :- முகவாதம் நடுக்கு வாதம் ஜன்னி ஜுரம் முதலிய சகல வாத ரோகத்துக்கு கொடுக்க குணமாகும்.

காடிக்கார பதங்கம்

காடிக்காரம் 3 விராகனிடை பூரம் 1½ விராகனிடை சீனாக்காரம் 1 விராகனிடை.

செய்பாகம் :- மேற்கூறப்பட்ட மூன்று சரக்குகளையும் முலைப்பாலில் ஊரப்போட்டு அந்த பால் விட்டே அரைத்து அதை மூன்று பில்லைகளாக உலர்த்தி ஒரு சட்டியில் பில்லைகளைத் தனித் தனியாக வைத்து மேற்சட்டிக்கு வெற்றிலைச் சார் தடவி மூடி 7 சீலைமண் செய்து உலர்த்தி அடுப்பேற்றி காடாக்கினீயாக 2 சாமம் யெரித்துவிட்டு மறுநாள் கவசத்தைப்பிரித்து மேற்சட்டியில் இருக்கும் பதங்கத்துக்கு இரு பங்கு கொய்னா சேர்த்து கல்வத்திலிட்டு அரைத்து வைத்துக்கொள்ளவும்.

உபயோகம் :- ஜுரம் சூலை குன்மம் பவுத்திரம் வெள்ளை வெட்டை கிரந்தி புண் புரை இந்நோய்களுக்கு இம்மருந்தில் அரிசி எடை தேன் நெய் வெண்ணை முதலிய அனுபானங்களில் கொடுக்க மேற்கூறிய நோய்கள் தீரும்.

திருமூர்த்தி பதங்கம்

பூரம் பலம் 1½ ரசம் பலம் 1½ வீரம் பலம் ½ இம்மூன்றையும் கல்வத்திலிட்டு அரைத்து இருவாய் அகன்ற சட்டி எடுத்து ஒரு சட்டியில் ஒரு பலம் அயப்பொடியை பரப்பி அதன் மேல் முன் அரைத்து வைத்த மருந்து தூளைக் கொட்டி அதன் மேல் வேறு ஒரு பலம் அயப்பொடியை கொட்டி மூடி அதன் மேல் சட்டி மூடி 7 சீலைமண் வலுவாக செய்துலர்த்தி அடுப்பிலிட்டு 3 சாமம் ஜடராக்கினியாக யெரிக்க மேற்சட்டியில் பதங்கம் ஏரியிருக்கும் இதனைமறுநாள் கவசத்தை பிரித்து எடுத்து பதனபடுத்தவும்.

உபயோகம் :- புண் கிரந்தி வெடிசூலை இவைகளுக்கு பதங்கத்தில் அரிசி எடையெடுத்து ரவாமாவில் வைத்து 3 முதல் 6 நாள் வரை கொடுக்க வியாதி தீரும்.

இரச பதங்கம்

சரக்கு :- வெள்ளை பாஷாணம், வீரம் சுத்தி செய்தகடல் நுரை துருசு சூடம் நவாச்சாரம் கெந்தகம் மனோசிலை லிங்கம் தாளகம்.

செய்முறை :- மேற்கூறிய பத்து சரக்கிலும் வகைக்கு ஒரு களஞ்சி நிறுத்தெடுத்துக்கல்வத்திலிட்டு பொடித்தவுடன் ஒரு பலம் இரசத்தை விட்டு அதில் நாய் சாறுவிட்டு யாவும் ஒன்றுபட அரைத்து வட்டு செய்து காயவைத்து ஒரு சட்டியில் வைத்து மேலே ஒரு அயசட்டியைகவிழ்த்து மூடி 7 சீலை மண் செய்து உலர்த்தி அடுப்பேற்றி 2 சாமம் தீயெரித்து தீ ஆறியபின் எடுத்து பிரித்துப் பார்த்தால் அயச்சட்டியின் மேல் வெண்ணிறமான பஸ்பம் பூத்திருக்கும் இதனை மயிர் குச்சியால் வழித்தெடுத்து சீசாவில் பதனம் செய்யவும்.

உபயோகம் :- இந்த பதங்கத்தில் பண எடை எடுத்து பின் வெல்லத்தில் வைத்து 10 நாள் சாப்பிட கை கால் முடக்கு

சுவாங்காசம் மேகம் அரையாப்பு மூக்கரையான நோய் இன்னும் அனேக வியாதிகள் போக்குவிக்கும் தாதுவிர்த்தியுண்டாகும்.

குறிப்பு :- கடல்நுரை சுத்தி செய்யும் விதமாவது கடல் நுரையை இடித்து மாவாக்கி குளிர்ந்த ஜலத்தில் 7 தடவை உராய்ந்து கழுவி அதிலிருக்கும் கவுச்சிகளை எல்லாம் நீக்கி காய்ந்தபின் எடுத்துக் கொள்ளவும் இதுவே சுத்தியாகும்.

பூரக்கட்டு பற்பம்

ஒரு மண் சட்டியில் 50 செங்கோட்டையை இரண்டாக வெட்டிப்பரப்பி அதன்மேல் ½ அங்குல கனம் 3 பலம் நிறையுள்ள சதுரமான வெள்வங்கத் தகடு செய்து வைத்து அதன் மீது ½ பலம் பூரக்கட்டியை வைத்து அதன் மீது 50 சேங்கொட்டையை முன்போல் இரண்டாக வெட்டிப்போட்டு மேல் சட்டி மூடி சந்துவாய் சீலை செய்து உலர்த்தி அடுப்பில் வைத்து தீபம் போல் ஒரு சாமமும் கமலாக்கினியாக 1 சாம நேரமும் எரித்து சட்டி ஆறியதும் எடுத்துப் பிடித்து பொடிக்கவும்.

அளவு :- 1 அரிசி எடை முதல் 3 அரிசி எடை வரை தேன் அல்லது நெய் அனுபானமாக உபயோகிக்கலாம்.

தீரும் நோய் :- நடுக்குவாதம் உத்தரவாதம் பார்சவாதம் குணமாக்கும்.

காலாந்த கௌரி பதங்கம்

சரக்கு :- வெள்ளைப் பாஷாணம் துருசு காந்தம் வீரம் லிங்கம் தாளகம் கௌரி காந்தம் பூரம் மனோசிலை.

செய்முறை :- ஆக இச்சரக்குகளை வகைக்கு பலம் காலாக கல்வத்திவிட்டு சிற்றண்ட வெண்கரு ஜெய நீரால் நன்றாய் அரைத்து அதனில் ஒரு மூசையும் 5 6 துவாரங்களுடன் பொருந்திய மேல்மூடி ஒன்றையும் செய்து வெடிக்காமல்

நிழலில் உலர்த்திவைத்துக்கொண்டு அதனில் இரண்டு பலம் வாலை ரசத்தை விட்டு சிறு துவாரங்களிட்டு முடித்துள்ள மூடியைக்கொண்டு வாய்மூடி சந்திற்கு உளுத்தமாவைத் சிறிது ஜலம் விட்டு பிசைந்து பூசி இரண்டொரு சீலைசெய்து வைத்துக்கொள்க பின்னர் நான்குபடி உப்பை இடித்தேனும் அல்லது இயந்திரதிலிட்டு அரைத்தேனும் ஒரு வலுவான மண்பாண்டத்தில் போட்டு அழுத்தி இடையில் பள்ளம் செய்து முன்சித்தப்படுத்தியுள்ள மூசையை இட்டு வாய் மட்டத்திற்கு உப்பு இருக்க அழுத்தி கரிசலாங்கண்ணி இலைசாற்றை உட்புறமாக பூசி உலரவைத்து பொருத்தமான ஒரு மண்பாண்டத்தை மேல் மூடி 7 சீலை செய்து காய்ந்த பின் அடுப்பேற்றி முத்தீயாக 10 ஜாமம் எரித்து ஆறவிட்டுப் பார்க்க மேல் சட்டியில் பதங்கம் ஏறி நிற்கும் இதனை சேதப் படாமல் சுரண்டியெடுத்துக் கல்வத்திலிட்டு அரைத்து சீசாவில் போடவும் இதனில் வேளைக்கு கடுகு பிரமாணம் பனை வெல்லத்தில் வைத்துதினம் இருவேளை மூன்று நாள் கொடுக்க குட்டம் சூலை கூன் முடக்கு வாதநோய் சம்பந்தமான மகாரோகங்கள் யாவும் குணமாகும் சீதள சம்பந்தத்தினால் கபம் மீறிப் பிழைப்பதற்காக தோன்றுங்காலத்தில் மருந்தின் அளவைக் கவனிக்காது சமயோசிதம் போல் சிறிது கூட்டியும் அவசியமானால் அதிகப்படுத்தியும் கொடுக்க நெருங்கி நின்ற காலனையும் கசக்கி ஓட்டி விடும்.

பத்தியம் : பால் கஞ்சி அல்லது பாலன்னம் சாப்பிட வேண்டும்.

குறிப்பு :- சிற்றண்ட வெண் கருவோடு எருக்கம் பால் விட்டு ரவியில் வைத்து முறித்தது இதுவே சிற்றண்ட வெண்கரு ஜெயநீர் எனப்படும்.

சிந்தாமணி குளிகை

சரக்கு :- சுத்திசெய்த ரஸம் சுத்திசெய்தகந்தகம் சுத்தி செய்த தாளகம் சுத்திசெய்த நாபி சுத்திசெய்த லிங்கம் மஞ்சள்

கடுக்காய் தோல் சூரணம் தான்றிக்காய் தோல் சூர்ணம் நெல்லி வற்றல் சூர்ணம் பொரித்த வெங்காரத்தூள் மேல்தோல் சீவின சுக்கு சூர்ணம் மிளகு சூர்ணம் அரிசி திப்பிலி சூர்ணம் அக்கிராகாரச் சூர்ணம் இவைகள் வகைக்கு விராகனிடை 2½ சுத்திசெய்த நேர்வாளம் பருப்பு விராகனிடை 25 கரும்புச்சாறு செல்லத்தக்க அளவு.

செய்முறை :- முதலில் ரசத்தையும் கெந்தகத்தையும் கல்வத்திலிட்டு இரண்டும் நன்றாக உறவாகி கருப்பாகிற வரையில் அரைத்து எடுத்துக்கொள்ளவும் தாளகம் லிங்கம் அவைகளை தனித்தனியாக பொடித்து கொள்ளவும் பிறகு நேர்வாள பருப்பை நன்றாக மைபோல் அரைத்துக் கொள்ளவும் பின்பு சூர்ணங்களை எல்லாம் ஒன்றாக கலந்து வாளத்தில் சிறுகச் சிறுக்ச் சேர்த்து அரைத்து எல்லாம் நன்றாக உறவாடிய பின் கருப்புச் சாறை சிறுக சிறுகவிட்டு எட்டு சாமம் அரைத்து அரைக் குன்றிமணி அளவு மாத்திரைகளாக உருட்டி நிழலில் காயவைத்து எடுத்துக் கொள்ளவும்.

பிரமாணம் :- 1 முதல் 2 மாத்திரை வரையில் அனுபானங்களும் உபயோகமும் :-

1. வெல்லத்துடன் மாத்திரையைச் சாப்பிட்டு பிறகு மேலே 2 விராகனிடை கரிசிலாங்கண்ணிச் சாற்றில் சர்க்கரையை 1 விராகனிடை கலந்து சாப்பிடவும் நல்ல பேதியாகி வயிற்றிலுள்ள துர்மலங்கள் நீங்கி தேக ஆரோக்யம் உண்டாகும்.

2. புளித்த பசுமோர் விராகனிடை மூன்றுடன் தேன் விராகனிடை 3 கலந்து சாப்பிட கிரஹணீரோகம் தீரும்.

3. எலுமிச்சம் பழச்சாறு விராகனிடை 2 தேன் விராகனிடை 2 கலந்து சாப்பிட்டாலும் கிரஹணி ரோகம் தீரும்.

4. பனை வெல்லத்தை மெழுகுபோல் செய்து அதற்குள் மாத்திரையை வைத்து விழுங்க எலிகடி விஷம் பூரான்கடிவிஷம் காணாக்கடி விஷம் முதலியவைகள் தீரும்.

5. 1 விராகனிடை சீனி சர்க்கரையில் வைத்து (சீனிச்சர்க்கரையை நைப்பாகும்படி கையில் வைத்துத் தேய்க்கவும்) சாப்பிட பித்த ரோகங்கள் தாகரோகங்கள் தீரும்.

6. மணததக்காளி இலைச்சாறு விராகனிடை 2. தேன் விராகனிடை 2 கலந்து சாப்பிட அக்கினிதீபனம் உண்டாகி நல்லபசி எடுக்கும்.

7. வல்லாறை இலைச்சாறு விராகனிடை 2 தேன் விராகனிடை 2 கலந்து சாப்பிட தாகரோகம் மேகப்படை சர்மரோகங்கள் திமிர் குஷ்டம் இவைகள் தீரும்.

8. தேனில் குழைத்து சாப்பிட வாதசுரம் பித்தசுரம் கபசுரம் ஆகிய மூவகை சுரங்களும் போகும்.

9. முருங்கைப் பட்டைச்சாறு விராகனிடை 2 பசுவின் கோமயம் விராகனிடை 2 கலந்து சாப்பிட குன்மரோகங்கள் போகும்.

10. 3 விராகனிடை புளியை 2 பலம் ஜலத்தில் கரைத்து வடிகட்டிய புளித் தண்ணீரில் 2 விராகனிடை சீனிச்சர்க்கரை கலந்து சாப்பிட மலபந்தம் ஜலபந்தம் தீரும்.

11. 3 விராகனிடை புளியை 4 பலம் ஜலத்தில் கரைத்து 3 மணி நேரம் தெளிய வைத்து தெளிவை மாத்திரம் இறுத்து எடுத்து இதில் 2 விராகனிடை கற்கண்டை பொடித்துப் போட்டு கரைத்து சாப்பிட சகலஉஷ்ண ரோகங்களும் சாந்தமாகும்.

12. குன்றிமணி இலைச்சாறு விராகனிடை 2 தேன் விராகனிடை 3 கலந்து சாப்பிட சன்னிபாத ஜ்வரங்கள் தீரும்.

13. இஞ்சிச்சாறு விராகனிடை 3 தேன் விராகனிடை 2 கலந்து சாப்பிட படர்தாமரை தேமல் முதலிய சர்மரோகங்கள் தீரும்.

14. சீமை திராக்ஷைக்காடி விராகனிடை 2 தேன் விராகனிடை 2 கலந்து சாப்பிட வாய்நாற்றம் அண்டவாத ரோகம் தீரும்.

15. 2 மாத்திரையை நல்லெண்ணை விராகனிடை 3 கலந்து இதில் மாத்திரைகளைக் கரைத்துப் பிறகு இதில் வெந்நீர் 2 ஆழாக்கு விட்டு கரைத்து வாய் கொப்பளிக்க பல்வலி பல்புழு நீங்கும் வாயு. சம்பந்தமான பல்வலிகளும் போகும் பல்வலி ரொம்ப தொந்தரவாக இருந்தால் இந்த மாத்திரையை ஆரம்பத்தில் பேதிக்கு கொடுத்து வயிற்றிலுள்ள துர்மலங்களை நீக்கி பிறகு மேற்கண்டபடி வாய் கொப்பளிக்கவும்.

குறிப்பு :- இந்தமாத்திரை எவ்வளவுக்கெவ்வளவு பழமையாக இருக்கிறதே அவ்வளவுக்கவ்வளவு விசேஷகுணத்தை தருகிறபடியால் வைத்தியர்களும் மற்றவர்களும் இதை செய்து கைவசம் வைத்திருந்தால் சமயங்களில் ரொம்ப ஒத்தாசையாக இருக்கும் தவிர இந்த மாத்திரையை இதில் சொல்லப்படாத இன்னும் அனேக வியாதிகளுக்கு உதவுகிறபடியால் அவரவர்கள் உபயோகித்து தங்கள் அனுபவத்தை நிச்சயித்துக் கொள்ளலாம் மேற்கண்ட அனுபானங்களைத் தவிர அவரவர்கள் தங்களுக்கு அனுபவமான அனுபானங்களையும் உபயோகித்துக் கொள்ளலாம்.

கஸ்தூரி மெழுகு

(உடல்வலி அசதி அலுப்பு பிடிப்பு வாதம் தீரும்)

சரக்கு :- கஸ்தூரி 1/4 விராகனிடை மூசாம்பரம் 8 தோலா டாமாஞ்சில் அசாரூன் சுமஸ்தகி குங்குமப்பூ மிளகு லவங்கம் பெரும் லவங்கப்பட்டை இவையாவும் வகைக்கு ¼ தோலா தேன் 6 பலம்

செய்பாகம் :- தேனை காய்ச்சி அழுக்கை நீக்கி விட்டு மற்ற சரக்குகளை இடித்து சூரணித்து தேன் விட்டு மெழுகு பதம் காண அரைத்து பத்திரப்படுத்தவும்.

அளவு :- 3. 4 குன்றியெடை சாப்பிட்டுவர காக்கை வலிப்பு பின் காணல் வாய்கோணல் சாரீசவாதம் ஜன்னி

வர்தப்பிடிப்பு சரீரத்தில் ஏற்படும் வலி குத்தல் குடச்சல் அசதி ஏற்படும் இடங்களில் ஜலத்தில் கரைத்து பூசி தடவி வலி நீங்கும் ஷை வாத ரோகங்களுக்கு சாப்பிட்டு வர நீங்கும்.

கஸ்தூரி மெழுகு

வயிற்றுவலி நெஞ்சுவலி சுரம் ஜன்னி குணமாகும்

சரக்கு :- சடாமாஞ்சில் சுமஸ்த்தகி மிளகு லவங்கம் லவங்கப்பட்டை அசாரூன் மூசாம்பரம் இவையாவும் வகைக்கு 1 விராகனிடை நிலக்கடலை 2 பலம் குங்குமப்பூ ¼ விராகனிடை வாள் மிளகு ½ பலம் கஸ்தூரி 4 குண்டுமணி நிறை.

செய்பாகம் :- இடித்து சூரணிக்க வேண்டியவைகளை இடித்து சூரணித்து கல்வத்திலிட்டு அரைத்து பின் செல்லத்தக்க அளவு சுத்தமான தேன்விட்டு மெழுகுபதம் காண அரைத்து வழித்து ஒருவாய் அகன்ற பீங்கான் ஜாடியில் வைக்கவும்.

உபயோகம் :- சுரம் ஜன்னி மேல் கால் கை வலி குணமாகும் மற்றும் வயிற்றுவலி நெஞ்சு வலியைபோக்கு விக்கும் பசி அதிகப்படுத்தும் பொய்பசியை போக்கும் இதை பல வியாதிகளுக்கு உபயோகப் படுத்தலாம்.

கஸ்தூரி மெழுகு

(பலரோகம் தீரும் உயர்ந்ததாக)

சரக்கு :- கஸ்தூரி 1 விராகனிடை பச்சைகற்பூரம் 2 விராகனிடை கோரோசனை 4 விராகனிடை குங்குமப்பூ 4 விராகனிடை புனுகு ¼ விராகனிடை ஜவ்வாது ¼ விராகனிடை பூ நீக்கிய லவங்கம் 4 விராகனிடை வால்மிளகு 4 விராகனிடை எலரிசி 8 விராகனிடை சிறுவலங்கப்பட்டை 6 விரானிடை

செய்பாகம் :- சூரணம் செய்பவைகளை சூரணம் செய்துயாவும் கல்வத்திலிட்டு கம்மாறு வெற்றிலைச்சாற்றில் மூன்று மணிநேரம் அரைத்து பின் இஞ்சிச்சாறு சித்திமூல வேர்கிஷாயம் மஞ்சள் கரிசலாங்கண்ணிசார் இவைகளில்

தனிதனியே ஒவ்வொரு சம்ம அரைத்து கடைசியில் தேன்விட்டு மெழுகு பதம் காண அரைத்து பதனப்படுத்தவும்.

அளவு :- பயறு பிரமாணம் தேனில் துவட்டி கொடுக்கவும் சீதள ஜுரம் மாந்தம் முகவாத ஜன்னி இருமல் இதக ஜன்னி நடு குமாந்தம் கபம் வயிறு உப்பிசம் தீரும்.

கஸ்தூரி மெழுகு

சுரம் இருமல் ஜலதோஷம் மாந்தம் கண் முதலி வைகளுக்கு சிறந்தது

சரக்கு :- சுத்திசெய்த லிங்கம் 1 பலம் சரசெந்தூரம் 1 பலம் வாசனை கோஷ்டம் 2 பலம் தேசாவரம் 2 பலம் அரிசி திப்பிலி 3 பலம் கிராம்பு 3 பலம் சித்தரத்தை 4 பலம் கஸ்தூரி 4 குன்றி நிறை.

செய்முறை :- மேற்படி சரக்குகளை இடித்து சூரணம் செய்து கல்வத்திலிட்டு இஞ்சி சாறு தூதுவளைசாறு வேல் பருத்திசாறு முசுமுசுக்கைச்சாறு கரும்பின்சார் கையான்தகரைசார் வகைக்கு வீசம்படி தனித்தனியே விட்டரைத்து பின்போதிய அளவு தேன்விட்டு மெழுகு பதம் வரும் வரை அரைத்து பதனப்படுத்தவும்.

உபயோகம் :- சுரரோகங்கள் இருமல் ஜலதோஷம் குழந்தைகளுக்கு ஏற்படும் சகலநோய்கள் தீரும் சார்வகைகள் சேர்க்காமல் தேன்விட்டு அரைப்பதுமுண்டு.

குங்குமப்பூ மெழுகு

(விந்துவைக் கட்டும் ஸ்திரீ போக இன்பம் தரும்)

சரக்கு :- குங்குமப்பூ ½ விராகனிடை கோரோசனை ½ விராகனிடை சுமஸ்தகி 5 விராகனிடை சாதிக்காய் 2 விராகனிடை கருஞ்சீரகம் 2 விராகனிடை அக்கிராகாரம் 1 விராகனிடை பளிங்கு சாம்பிராணி 1 விராகனிடை சிறுநாகப் பூ 1 விராகனிடை.

செய்பாகம் :- இவையாவையும் கல்வத்திலிட்டு தேனை சிறுக சிறுக விட்டு மெழுகு பதம் வரும் வரையில் அரைத்து பீங்கான் டப்பியில் பதனப்படுத்தவும்.

உபயோகம :- மாலை 6 மணிக்கு சுண்டைக்காய் அளவு சாப்பிடடு பசும்பால் சாப்பிட்டு வரவும் இவ்வாறு 15 நாள் சாப்பிடவும் உணவில் புளி கூட்டுவது நல்லது.

இதன்குணம் :- ஸ்திரீ போகத்தில் சுகத்தைதரும் விந்துவை கெட்டிப்படுத்தும் பெண்கள் சாப்பிட நாதம் கட்டிப் போகும் சிறப்பு அவயவங்கள் பூரித்து விம்மும்.

நந்தி மெழுகு
(உயர்ந்த பாகம்)

சரக்கு :- 1 குதிரைப்பல் பாஷாணம் கௌரி லிங்கம் தாளகம் ஓட்டுத்துருசு வென்நாபி மனோசீலை கெந்தகம். வெள்ளை பாஷாணம் இவைகள் வகைக்கு விராகனிடை ரசசெந்தூரம் விராகனிடை 2 மயில்துத்தம் 1 விராகனிடை வீரம் 2 விராகனிடை 3 வாளம் 2 விராகனிடை 4 சுக்கு திப்பிலி மிளகு ஆனைத்திப்பிலி வகைக்கு பலம் ½ ஜாதிக்காய் ஜாதிபதிரி ஏலரிசி வால்மிளகு அதிவிடயம் கிராம்பு பறங்கிப்பட்டை வகைக்கு விராகனிடை 1. 5 சேங்கோட்டை எண்ணிக்கையில் 30 எட்டிக்கொட்டை எண்ணிக்கையில் 20. 6 பசுநெய் தோலா 6 பனைவெல்லம் பலம் 8 சுத்தமான தேன் உழக்கு 1.

மேற்கூறப்பட்ட சரக்குகளின் சுத்தி முறையாவது :- 1ல் கூறப்பட்ட சரக்குகள் 10ம் நீலிச்சாற்றில் ஊறவைத்து 4வது நாள் எடுத்து அலம்பிபுதிதாக நீலிச்சார் விட்டரைத்து வில்லைதட்டி ரவியில் உலர்த்தி நீலித்தழையை அரைத்து வில்லைக்கு ½ விரல் கணத்துக்கு கவசம் செய்து அதன்மேல் 2 விரல் கணத்துக்கு ஈனா பசுங்கிடேரி சாணத்தினால் பொதிந்து 2 நாள் காயவைத்து பத்து எரு மத்தியில் வைத்துபுடமிட்டு சாணம் சிவந்த பிறகு உடன் எடுத்து பார்க்க வில்லை. ஈரமாக

இருக்கும் ரவியில் உலர்த்தி கல்வத்திலிட்டு அரைத்துக் கொள்ளவும்.

2-வது கூறப்பட்ட சரக்கையும் ஒன்றென லக்கமிட்ட சரக்கோடு சேர்த்து சுத்தி செய்யாமல் நறுக்க வேண்டும்.

3-வது எண்ணில் கூறப்பட்ட வாளத்தை நன்றாக சுத்தி செய்து கொள்ளவும்.

4-வது எண்ணில் கூறப்பட்ட சரக்குகள் அனைத்தையும் இடித்து வஸ்திரகாயம் செய்து 1-வது 2-வது எண்ணில் கூறப்பட்ட சூரணங்களுடன் வாளத்தைக் கல்வத்திலிட்டு அரைத்து பின் மேற்படி சூரணத்தை சிறிது சிறிதாக போட்டு அரைத்து வைத்துக் கொள்ளவும்.

5-வது எண்ணில் கூறப்பட்ட சேங்கொட்டை மூக்கு வெட்டி எருமை சாணியில் காடிவிட்டு கரைத்து குழப்பி கொதிக்க வைத்து எடுத்து இரண்டாய் வெட்டி காய வைத்துக் கொள்க.

எட்டிக்கொட்டையை நாகப்பட்டை சாற்றில் ஒரு நாள் ஊற வைத்துக் கொள்ளவும்.

செய்பாகம் :- ஒரு அயச்சட்டியில் முன்னதாக நெய் விட்டு கமலாக்கினியாக எரித்து மேற்படி இரண்டு வகை கொட்டைகளையும் போட்டு காய்ச்ச சேங்கொட்டை இளகி தைலமாக மிதக்கும்பொழுது சல்லிக்கரண்டியில் அறித்து எடுத்து விட்டு அதில் பனை வெல்லமிட்டு இளகியவுடன் கீழே இறக்கி வைத்துக் கொண்டு சூரணங்களைப் போட்டுக்கிண்டி தேனை விட்டுக் கிளரி உடனே வேறு பாண்டத்தில் மாற்ற சூடு ஆறியபின் ஜாடியில் வைத்துக் கொள்வும்.

பிரமாணம் :- மிளகு தூதுவாளை சிறு சுண்டக்காய் அளவில் காலதேக வயது இளமை இவைகளுக்கு தக்கபடி கருப்பட்டியில் வைத்து விழுங்கி விடவும் 2 நாள் மருந்தை சாப்பிட்டு 3ம் நாள் மருந்தை நிறுத்திவிட்டு பால் மிளகு இட்டு ஸ்நானம் செய்யவும்.

பத்தியம் :- காப்பி டீ புகை பழயசாதம் குளிர்ந்த தண்ணீர் கடுகு உளுந்து நல்லெண்ணை வாயு பதார்த்தம் ஸ்திரீபோகம் 3 மாதம் வரையில் கூடாது.

சேர்க்கும் பதார்த்தங்களாவது :- உப்பு புளிமோர் துவரை பாசிப்பருப்பு இவைகள் சேர்க்கலாம்.

தீரும் வியாதி :- குஷ்டம் 18 மேகம் 21 சூலை 19 கிரந்தி 10 மேகரணம் வெண்குஷ்டம் யானைசொறி கைகால் குடைச்சல் வலி கடுப்பு முதலிய பல ரோகங்கள் குணம் செய்யும்.

பிறகு அளவு ஒருவருடம் சாப்பிட கல் சரீரமாகும்.

வங்க ரச செந்தூரம்

சரக்கு :- வங்கம் சரம் ஊசிகாந்தம் கர்கடக்சிங்கி கந்தகம் வெள்ளைபாஷாணம் இவையாவும் வகைக்கு 2 பலம்.

செய்பாகம் :- வெள்வங்கத்தை இலுப்பை நெய்யில் 7 தடவை உருக்கி காய்த்தெடுத்து ஈசல் இரகுபோல் தட்டி பொடியாக கத்தரித்து கல்வத்திலிட்டு அதில் ரசத்தைவிட்டு மசிய அரைத்துப்பின் கற்கடக சிங்கு காந்தம் வெள்ளை பாஷாணம் இம்முறைப்படி ஒன்றின்பின் ஒன்றாக அரைத்துப்பின் முலைப்பால் விட்டு அரைத்து காசுகள் போல் வில்லைத்தட்டி உலர்த்தி ஓட்டிலிட்டு மூடி சீலை செய்து ஒரு தாழியில் 1 படிமணல் போட்டு அதன் மேல் மருதம் செய்த ஒரு வார மணல் போட்டு அதனை மேல் மருதம் விதை புங்கப்பட்டை நெல் உமி கலந்து தாழி நிறம்ப போட்டு மேல் மூடி கீழும் மேலும் விராட்டி அடுக்கி கெஜபுடம் போட்டு மறுநாள் கணபதி பூஜை செய்து மருந்தை எடுத்து அறைத்து புட்டியில் பதனப்படுத்தவும்.

வங்கரச செந்தூரத்தால் தீரும் நோய்களும் அதற்கு அனுபானங்களும்

1. சிலேத்துமத்தால் ஏற்படும் நோய்களுக்கு தேன் அல்லது நெய்யில் ஒரு குன்றி அளவு செந்தூரம் சேர்த்துக் குழைத்து மூன்றுநாள் சாப்பிட அந்நோய் தீரும்.

2. ஆவாறை சமூல்மிட்ட கியாழத்தை மூன்று இரவு பனியில் வைத்து மாகாணி கியாழத்தில் ½ குன்றி மருந்திட்டு இரண்டு வேளை 3 நாள் சாப்பிட நீரடைப்பு நீர்கடுப்பு சதை அடைப்பு வெள்ளைவெட்டை குணமாகும்.

3. பித்த ரோகம் பயித்திய ரோகங்களுக்கு இஞ்சி சுரசத்தில் கொடுக்க குணமாகும்.

4. வாத நோய்களுக்கு சீரக சூரணத்தில் தரவும்.

5. விஷசுரங்களுக்கு விஷ்ணுகிரந்தி மிளகுகியாழத்தில் கொடுக்க குணமாகும்.

6. தக்காளி கியாழத்தில் தர ரத்த காசம் தீரும்.

7. சூலை கடிவிஷங்கள்காசம் ஈனை காமாலை முதலியவை குணமாகும்.

8. வாதகுன்மம் புத்துநோய் கரப்பான் குத்துவலி நெஞ்சுவலி இறைப்பு பவுத்திரம் ஜன்னி முடக்கு வாதம் முழிமாராட்டம் சகல மலகழிச்சல் நீராம்பல் பாண்டு 18 வித குஷ்டம் உடல் புண்கள் எரிச்சல் காந்தல் தீரும் தேகம் வஜ்ஜிர தேகமாகும்.

நாகப்பூபதி செந்தூரம்

சுத்தமான தாம்பிரத்தை லேசாக தகடுதட்டியது பலம் 2 எடுத்து புளிய இலைச்சாற்றில் போட்டுக் கொதிக்க வைத்தெடுத்து பின்கெந்தகம் பலம் 2 எடுத்து எருக்கம்பால் விட்டு அரைத்து மேற்படி தகட்டுக்கு இருபுறமும் பூசி ரவியில் உலர்த்தி சிறு சட்டிக்குள் போட்டு மேல் சட்டி மூடி சீலை மண் 7 செய்து உலர்த்தி ஒரு முழு உயரம் குழிவெட்டி எருவடிக்கி தீயிட்டு தீயானபின் எடுக்க செந்தூர பற்பமாகம் இதனை கல்வத்திலிட்டு நன்றாக அரைத்து இதன் எடைக்கு ரசமும் கெந்தகமும் சேர்த்து செறுப்படை சாற்றால் அரைத்து முன்போல் புடமிட்டு எடுத்து இம்மருந்தின் எட்டில் ஓர் பாகம் நாபியும் நாபியெடை மிளகும்

சேர்த்துச் சித்திர மூல கியாழத்தால் அரைத்து மிளகு அளவு மாத்திரை செய்துலர்த்தி அத்துடன் மிளகு சேர்த்து துணியில் முடிந்து நெல்லுக்குள் ஒரு மாதம் வைத்து பின் உபயோகப்படுத்தவும் சகல வியாதிகளும் குணமாகும்.

நாகப்பூபதி செந்தூரத்திற்கு வியாதிக்கு தக்கபடி அனுபானங்கள்

(1) சகல விதமான ஜன்னிகளுக்கும் ஒரு பணவெடை திப்பிலி தூளில் 1 மாத்திரை கொடுக்க

(2) 18வித ரோகத்துக்கு இஞ்சிசாறும் கொடிவேலி கியாழமும் சேர்ந்ததில் 1 மாத்திரை.

(3) திரிகடுகு சூரணத்தில் 1 மாத்திரைக் கொடுக்க சகல வித சுரரோகங்களும் குணமாகும்.

(4) 8-வித குன்ம ரோகங்களுக்கு ஒரு மாத்திரை தேனில் கொடுக்கவும்.

(5) க்ஷய ரோகத்துக்கு 1 மாத்திரை தேனில் கொடுக்கவும்

(6) பவுத்திரம், கரப்பான், புண்புரை, பிறலிவலி, குத்துவலி முதலியவற்றிற்கு தேனில் 1 மாத்திரை இழைத்துக் கொடுக்கவும்.

பூர செந்தூரம்

சுத்தி செய்த பூரம்பலம் கல்வத்திலிட்டு சிறுசெறுப்படைச் சாற்றை சிறிது சிறிதாகவிட்டு 4சாமம் அரைத்து ஒரேவில்லை செய்து ரவியிலுலர்த்தி அதன்மேல் சிறுசெறுப்படை சமூலத்தை அறைத்துசுமார் வில்வபழம் அளவு கவசித்து அதன்மேல் 7 மண்சீலை செய்து ஈரம்வற்ற சாம்பலில் புரட்டி உடனே 4, 5 விராட்டியில் புடமிட்டு ஆறியபின் எடுத்து கவசம் நீக்கிப் பார்க்க செந்தூரநிறத்திலிருக்கும். இதனை அரைத்து பதனப்படுத்துக 1, 2 அரிசி அளவு செந்தூரத்தை வெல்லத்தில் வைத்துதினம் இருவேளை 3-நாள் கொடுக்க வெள்ளை, கொறுக்கு

(ஆண்குறியின்புண்) அரையாப்பு, கிரந்தி, கை கால் பிடிப்பு முதலியவைகள் குணமாகும் குணம் தெரியாவிடின் மீண்டும் 5-நாள் கழித்து ஒரு முறை முன்போல் கொடுக்கக்குணம் ஆகும்.

பத்தியம் :- பால் சாதம் சேர்க்கவும்.

வீர செந்தூரம்

வீரம் பலம் :- இதனை கல்வத்திலிட்டு வெள்ளை காட்டாமணக்கில் பால்விட்டு அரைத்து குழம்பு பதமாகயிருக்கும் சமயம் ஒரு அகலில் இட்டு மேல் அகல் மூடி சீலைமண் செய்து உலர்த்தி 3 எருவில் புடமிட்டு எடுக்க செந்தூரமாகயிருக்கும். இதனை அரைத்து பாட்டிலில் பதனப்படுத்துக.

இதனை புடமிடாமல் பங்குனி, சித்திரை, ரவியில் 15 20-நாள் வைத்து எடுப்பதுமுண்டு. (காட்டாமணக்கு பாலில் அரைப்பது) இதனை அரைத்து வைத்துக் கொள்ளவும்.

உபயோகம் :- 1-குன்றி அளவுஎடுத்து தேனில் காலை மாலையாக 3-நாள் வரை கொடுக்கலாம்.

தீரும் நோய்கள் :- குன்மம், பக்ஷவாதம், கீழ்பிடிப்பு, கிரந்தி, குறை நோய் குணமாகும்.

அயமணி கலாப செந்தூரம்

சரக்கு :- அயப்பொடி காந்தம் அரிதாரம்ரசம் இவையாவும் வகைக்கு 1-பலம்.

செய்முறை :- இவைகள் ஒவ்வொன்றையும் கல்வத்தில் இட்டு தனித்தனியே அரைத்துப்பின் வரிசைப்படி சேர்த்து அரைத்து குப்பைமேனிச் சாற்றினால் 3 தினமும் அரைத்து வில்லைதட்டிரவியில் உலர்த்தி கெஜப்புடம் போட்டு புடம் ஆறி எடுக்க நல்ல நிறமுடைய செந்தூரமாயிருக்கும். இந்த செந்தூரத்தில் குன்றி அளவுதேனிலாவது நோய்க்குத்தக்கபடி

லேக்கியத்திலாவது சாப்பிட்டுவர இரத்தசோகை. பீலிகை. பாண்டு. வீக்கம். ரெத்தம்கக்கல். கவுசை நீராம்பல். கட்டி. சூதகக்கட்டி. சூதகவாய்வு. சந்துசூலை. வயிற்றுவலி. குன்மம். தேமல் படையாவும் குணமாக்கும். தேகம் நல்ல நிறம் பெறும்.

உறுக்கு செந்தூரம்

(நரை திரைமாறும் ஆண்தன்மை அதிகரிக்கும்)

எட்டிக்கொட்டை இலைச்சாறும் வெள்ளாட்டு அமுரியும் சமமாய்ச் சேர்த்து அதில் எக்குவை சிவக்க காய்ச்சி 21-தடவை தோய்க்க வெட்டையாகும். இதனை சூரணித்து ஷெ சாற்றில் 10 நாள் ஊரவைத்து எடுக்க மெழுகு போலாகும். அதை ஷெசாற்றில் அரைத்து 20-தடவை வராகபுடமாகப் போட்டு எடுக்க நல்ல செந்தூரமாகயிருக்கும்.

இதன் குணம் சொர்ண செந்தூரத்திற்கு மேலானதாகும். இது வீண்புகழ்ச்சிக்குறிய மொழி என நினைக்க வேண்டாம் உண்மையிலேயே அயத்தங்கமேயாகும். இதில் குன்றியளவு தேன் அனுபானத்தில் சாப்பிட தேகம். பலக்கும். ரெத்தம் விர்த்தியாகும். நரைத்திரை மாறும் நரம்புகள் உறுதியாகும் நமுசகத்தைப் போக்கும் ஆண்மை அதிகரிக்கும்.

தங்க செந்தூரம்

(இரத்த விர்த்தியும் தேகபலமும் உண்டாக்கும்) 2½ விராகனிடை தங்கரேக்கை சிவப்புபூ பூக்கும் அவரையிலைச் சாற்றால் 2. 3-நாள் அரைத்து வில்லை செய்து உலரவைத்து அகலிலிட்டுச் சீலை செய்து 100 வறட்டியில் புடமிடவும் ஒருபுடத்திலேயே செந்தூரமாகும். ஒரு சமயம் நிறம் சரியாக ஆகாவிட்டால் மீண்டும் முன்போல் அரைத்து ஒருபுடமிட நிறம் நன்றாயிருக்கும் இதனைவேளைக்கு இரண்டு அரிசி பிரமாணம்தினம் இருநேரம் 12 நாள் கொடுக்க இரத்த விரித்தி செய்து சப்த்த தாதுக்களை வலுவடையச் செய்து தேகத்தை போஷிக்கும்.

வெள்ளி செந்தூரம்

(அதிக உஷ்ணம். காசம். கூஷயம். மூலம் குணமாகும்)

சரிகை வெள்ளிதோலா 3 நிறுத்தெடுத்து சன்னமாய் (பொடியாக) கத்தரித்து கல்வத்திலிட்டு சிறுசெறுப்படைச்சாற்றால் நன்றாக அரைத்து சிறுவில்லைகளாகத் தட்டி ரவியில் உலர்த்தி அகலிலிட்டு மேல் அகல்மூடி சீலை மண்செய்து 100-வறட்டியில் புடமிடவும் நிறம் நன்கு வராதிருந்தால் மீண்டும் நல்ல நிறம் வரும்வரை இரண்டு புடமிட நல்ல செந்தூரமாக இருக்கும் இதனையெடுத்து பதனப்படுத்தவும்.

உபயோகம் :- தேன் நெய் முதலிய அனுபானங்களில் சாப்பிட்டு வர அஸ்திகாங்கை அஸ்திவெட்டை மேகச்சூடு எலும்புருக்கி. கூஷயம். காசம். வெட்டைச் சூடு. மூலம். முதலான நோய்களை குணம் செய்யும்.

குறிப்பு : நிறம் வரும் வரை 2-அல்லது 3. 4 புடமிடவும்.

நாக செந்தூரம்

துத்துநாகம் பலம் 10 எடுத்து இலுப்பை நெய்யும் பசுவெண்ணையும் அதன்மேல் தடவி வெள்ளாட்டுப் பாலில் 20 தடவை உருக்கி சுத்தம் செய்து ஓர் சட்டியிலிட்டு அடுப்பிலேற்றி அதில்வெடியுப்பு பலம் ஓமம் ½ படி மஞ்சள் பலம் இவற்றை நன்றாக பொடி செய்து சிறுகசிறுக சட்டியில் போட்டு அத்துடன் சென்னாயுருவியையும் நறுக்கிப்போட்டு நன்றாக வறுக்க அது மாதுளம்பழம் போல சிவந்த செந்தூரமாகும். இந்த செந்தூரத்தில் 3 குன்றிஎடை அதாவது ஒருபணவெடை எடுத்து அத்துடன் வெருகடி சித்ர மூலவேர் சூரணம் சேர்த்து தேனில் 10-நாள் சாப்பிடவும் இதனால் வாந்தியோடு கூடிய சக்திகுன்மம். எரிகுன்மம். வாயுகுன்மம். வலிகுன்மம். 18-வகை குஷ்டம். உதிரதிரட்ச்சி தீரும். சுக்கு. திப்பிலி. மிளகு. இவற்றை வறுத்துத் தூள் செய்து இந்த சூரணத்துடன் செந்தூரம் சேர்த்து 40 நாள் இருவேளை சாப்பிட கபம் 96. பித்தரோகம் 108 உஷ்ணரோகம் யாவும் தீரும்.

லிங்க செந்தூரம்

தலைச்சுருளிதழையைத் தண்ணீர் விடாமல் விளாங்காய் அளவு அரைத்து அதற்குள் 1 பலம் லிங்கத்தை பொதித்து அதன்மீது 7 சீலைமண் செய்து 4-மணி நேரம் சென்றபின் 5விரட்டியில் புடமிடவும் பின் எடுக்கவும்.

குறிப்பு :- புடமிடும்போது ஈரத்தோடு இருப்பது நல்லது ஷை புடமிட்ட லிங்கத்தை எடுத்து கல்வத்திலிட்டு அரைத்து புட்டியில் பதனப்படுத்தவும்.

அனுபானம் :- தேனில் ஒரு குன்றிமணி அளவு காலை மாலை தரவும். சுரம். தலைவலி ஜன்னி வாதம் பித்தம் யாவும் குணமாகும் சகலநோய்க்கும் கொடுக்கலாம்.

குறிப்பு :- மேற்படி மூலிகையின் மறுபெயர்களாவது:- ஈஸ்வரமூலி. கர்பகெந்தி. பெருமருந்துக்கொடி. தலைசுருளிப் பூண்டு. உரிசட்டிக்கொடி என்று பலபெயர்கள் உண்டு.

பலவகை லிங்க செந்தூரம்

(1) ஒருபலம் உலர்ந்த லிங்கத்தை ஒரு ஓட்டிலிட்டு அடுப்பில் வைத்து ¼ படி கழுதைப்பால் சுருக்கிட்டு எடுத்து சகல சுரரோகங்களுக்கும் வாதரோகங்களுக்கும் இளம்பிள்ளை வாத ரோகத்துக்கும் சன்னி ரோகத்துக்கும் திரிகடுகு சூரணம் தேனில் அனுபானத்தில் கொடுக்கவும்.

(2) ஒரு பலம் உலர்ந்த லிங்கத்தை முன்மாதிரி ஓட்டிலிட்டு ஆடு தீண்டாப்பாளைசார் ¼ படிசுருக்கு கொடுத்து எடுத்து தூள்செய்து தக்க அனுபானங்களில் கொடுக்க மேற்படி ரோகங்கள் குணமாகும்.

(3) ஒரு பலம் லிங்கத்தை ¼ படி வேப்பெண்ணெய் சுருக்கு கொடுத்து எடுத்துதூள் செய்து தேனில் கொடுக்க தேகத்தில் உள்ள பூட்டுக்கு பூட்டுவலிகள் குணமாகும். சூலை தீரும்

(4) ஒரு பலம் லிங்கத்தை கல்வத்திலிட்டு இஞ்சி சார்விட்டு அடுப்பில் வைத்துசார் சுண்ட எரித்து எடுத்து அரைத்துதேனில் கொடுக்க சகல சுரரோகம் வாத பித்த ரோகம் தீரும்.

(5) ஒரு பலம் லிங்கத்தை எடுத்து 1 பலம் கெந்தகத்தையும் தூள்செய்து ஒரு ஓட்டிலிட்டு மூடிசீலை செய்து சிறுபுடமிட்டு எடுத்து கல்வத்திலிட்டு தூள்செய்து சகல சுரரோகங்களுக்கும் கொடுக்கலாம்.

சிவ தாம்பர செந்தூரம்

சரக்கு :- சுத்தி செய்த தாம்பிர அரப்பொடி 6 விராகனிடை. சுத்தி செய்த கெந்தகம் 18 விராகனிடை. சத்திசெய்த ரசம் 12 விராகனிடை. லிங்கம் 9 விராகனிடை அரிதாரம் 7 விராகனிடை. மனோசிலை 4 விராகனிடை எலுமிச்சம்பழச்சாறு போதுமான அளவு.

செய்முறை :- ரசத்தையும் கெந்தகத்தையும் தொந்தித்து அரைத்து நன்கு கருத்தபின் தனியே எடுத்துக் கொள்ள வேண்டும். பின் அரிதாரத்தை அரைத்தெடுக்க வேண்டும். இவ்வாறே மனோசிலையும் லிங்கத்தையும் தனித்தனியே அரைத்தெடுத்துக் கொள்ள வேண்டும் பின் தாம்பரபொடியை ½ மணி நேரம் நன்றாய் அரைத்த பின் மற்றவைகளை ஒன்று கலந்து தாமிர பொடியுடன் சேர்த்து எலுமிச்சம் பழச்சார் விட்டு 8-சாமம் அரைக்க வேண்டும் பின் ஒரேவில்லையாக பீங்கான் தட்டில் வைத்து வெய்யிலில் ஈரமன்றி நன்கு காய்ந்த பின் சட்டியில் வைத்து மேல்சட்டிமூடி 7 சீலை மண் வலுவாய் செய்ய வேண்டும் காய்ந்தபின் வட்ட அடுப்பில் வைத்து காற்றில்லாத இடத்தில் முதல் ஜாமம் தீபாக்கினியாகவும் 2-வது ஜாமம் கமலாக்கினியாகவும் மற்ற இரு ஜாமங்கள் காடாக்கினியாகவும் எரித்து பின் குளிர ஆரவைத்துப்பின் உடைத்தெடுத்தால் முருக்கம்பூ போன்ற நிறமுடைய செந்தூரம் இருக்கும்.

பிரமாணம் :- குன்றியெடை 1. 2.

தீரும் வியாதிகள் :- வாதம்-80 பித்தம்-40 சிலேத்துமம்-96 சூலை-18 குன்மம்-8 கிராணி-6 சோகை வாய்வு, மேகம்-21 முதலியவை குணமாக்கும்

பத்தியம் :- சமயம்போல், இன்னும்லேகியம் மாத்திரை முதலியவற்றிலும் சேர்த்துக் கொள்ளலாம் அனுபானமும் பத்தியமும் வியாதிக்கு தக்கபடி.

லிங்க செந்தூரம்

சாதிலிங்கம் பலம் 1 சிறுகுமட்டிக்காய்ச் சார் 1 படி லிங்க கட்டியை ஒரு ஓட்டில் வைத்து மேற்படி சார் பூராவும் சுருக்கு கொடுத்து சுருக்கு கொடுக்கும் பொழுது கட்டியை புரட்டி கொடுக்கவும்) ஆறினபின் மேற்படி கட்டியை கழுவி ஒருபலம் கடுகைபூவரசம் பட்டை சார்விட்டு அரைத்து மேற்படி லிங்கக்கட்டிக்கு கவசித்து காய்ந்தபின் பூவரசம் பட்டை பலம் 2 எடுத்து இதனை வெண்ணை போலரைத்து மேற்படி லிங்கத்துக்கு கவசித்து காய்ந்தபின் (சீலைமண் செய்து காயவைத்து 10 எருவில் புடமிட்டு ஆறியபின் கவசம் நீக்கி கல்வத்திலிட்டு அரைத்தெடுக்கவும்.

அளவு :- பணயெடை வீதம் காலை மாலை 15 நாள் 20 வேளை நெய் அல்லது வெண்ணை கொடுக்கவும்.

தீரும்நோய் :- பங்டமரம் பால்சொறியும் என்பது போல் குட்டம்,குறைநோய், புண்புரை, புத்துரோகம் தீரும்.

அன்னபேதி செந்தூரம்

ஐந்து பலம் அன்னபேதியைக் கல்வத்திலிட்டு போட்டுச் சுண்ணநீர்விட்டு இரண்டு சாமம் நன்றாய் அரைத்து மெழுகுபதத்தில் வழித்து ஒரு சிறியமண் கலயத்தில் போட்டு வாய்க்கு ஒடுமூடி 7-மண்சீலை செய்து ரவியில் உலர்த்தி 15, 20, வறட்டியில் புடமிடவும் புடமாறியபின் மேல்ஓட்டை நீக்கிப்பார்க்க இட்ட அன்னபேதியானது சிவந்திருக்கும். இதனை

அரைத்து புட்டியில் பத்திரப்படுத்துக. வேண்டும்போது வேளைக்கு குன்றியெடை தேன், நெய் இவைகளில் தினம் இருவேளை கொடுக்கச் சுரம், சீதபேதி காமாலை சோகை சுரக்கட்டி பித்த பிணி முதலியவைகள் நீங்கும்.

குறிப்பு :- கால்படி சுட்ட சுண்ணாம்புக் கல்லுடன் 1 வீசை மேல்தோல் சீவிக்கழித்த சோற்று கற்றாழைச் சோற்றைப் போட்டு மூங்கில் குச்சியினால் கிளரிக்கொடுத்து அதிலிருந்து பிழிந்து வடித்த தெளிவு நீற்றுக்கே சுண்ணநீர் என்று கூறப்பட்டது. சீதபேதிக்கு இந்த செந்தூரத்துடன் ஆமை ஓட்டுபற்பம் சிறிது கலந்து தரவும்.

கற்பூர அன்னபேதி செந்தூரம்

சரக்கு :- அன்னபேதி முத்துசிப்பி, பவளம், லிங்கம் இவையாவும் வகைக்கு 5-பலம் வீரம், பச்சைகற்பூரம் இவையாவும் வகைக்கு 1 விராகனிடை.

செய்பாகம் :- அன்னபேதியை குப்பைமேனிச்சாற்றில் ஊரப்போட்டு மறுநாள் எடுத்து மண்சீலைசெய்து 15 எருவில் புடம்போட்டு எடுத்துக்கொள்ளவும். பின் பவளத்தையும் குப்பைமேனிச் சாற்றில் ஒருநாள் ஊரப்போட்டு எடுத்துக்கொண்டு 15 எருவில் புடமிட்டு எடுத்துக்கொண்டு பின் முத்துச் சிப்பியையும் அவ்வாறே புடம் செய்து எடுத்து லிங்கத்தை சுத்தி செய்து எடுத்துக்கொண்டு பின் வீரத்தையும் சுத்தி செய்து எடுத்துக்கொள்ளவும். புடம்யாவும் ஒரே கலயத்தில் புடமிடலாம். புடமிட்டு எடுத்த சரக்குகளையும்மற்றவைகளையும் கல்வத்திலிட்டு நன்றாக அரைத்து ஆனபின் கடைசியாக பச்சை கற்பூரத்தை சேர்த்து அரைக்கவும்.

இதன் உபயோகம் :- சுரரோகம் 64க்கும் உபயோகிக்கலாம் தேன் கிஷாயம் எதிலும் கொடுக்க குணமாகும்.

தாளக செந்தூரம்

தாளகம் பலம் 2 நிறுத்தெடுத்து சுண்ண நீரில் போட்டு எரித்தெடுத்து தண்ணீர் விட்டு அலம்பி இலுப்பை எண்ணையில் சிறிதுவிட்டு வருத்தெடுத்து பின் தண்ணீர்விட்டு அலம்பி முள்ளி கீரைத்தண்டு சார்விட்டு அரைத்து ரவியில் 3-நாள் உலர்த்தி 4-ம் நாள் கோவை இலைச்சார்விட்டு அரைத்து ஒரேவில்லையாக தட்டி உலர்த்தி மணல் மறைவில் புடமிட்டு எடுத்து அரைத்துப் பதனப்படுத்துக.

உபயோகம் :- காசம் இருமல் க்ஷயம் கோழை மற்றும் கஷ்ட சுவாசம் இவைகளுக்கு தாளிசபத்திரி சூரணத்தில் அனுபானித்து தேன் நெய் வெண்ணெய் இவைகளில் சாப்பிட்டுவர மேற்படி வியாதிகள் தீரும்.

திருமூர்த்தி செந்தூரம்

(சுவாச காசம். சுரம். ஜன்னி. பாரிசவாதம் தீரும்)

இலிங்கம் 1 பலம். தாளகம் ¾ பலம். வீரம் ½ பலம்

இம்மூன்றையும் சேர்த்து அரைத்துக்கொண்டு ஒரு அறை செங்கல்லின் மத்தியில் சிறுகுழி செய்து அதில் முன் அரைத்து வைத்துள்ள தூளையிட்டு அழுத்தி அக்குழிவாய்க்கு பொருத்தமான மற்றொரு செங்கல் துண்டை தேய்த்து பொருந்தமூடி சீலைமண் செய்து ரவியில் உலர்த்தி சமார் 23 வரட்டியில் புடமிடவும் தீ பற்றி அடிவரையிலும் வரட்டி வெந்த சமயம் புடத்தைப் பிரித்து உள்ளிட்ட செங்கல்லைக் கோவின் சாணத்தில் பொதிந்து சூடாரினபின் எடுத்து பிரித்துப் பார்க்க உள்ளிட்ட மருந்தானது சிற்றரித்திருக்கும் இதனை அரைத்தெடுத்து குப்பியில் பதனப்படுத்தவும் வேளைக்கு ½ குன்றி ½ குன்றி அளவு தேனில் தினம் 2 வேளை கொடுக்கச் சுரம் ஜன்னி பாரிச வாயு சச்குவாய்பு ஈளை சுவாசகோசம் முதலியவைகள் தீரும்.

பத்தியம் :- ரோகத்தின் வன்மை மென்மைக் கேற்றவாறு [illegible]ரித்தள்ளியும் தள்ளாமலும் இச்சாபத்தியம் இருத்தல் நலம் [illegible]க்குமட்டும் கஞ்சி தரவும்.

வல்லாதி செந்தூரம்

(சுரம் சீதளம் ஜன்னி பச்சவாதம் சூலை க்ஷயம் தீரும்)

சரக்கு :- உலர்ந்த லிங்கம் 2-பலம் சுத்தி செய்த [illegible]ர்வாளம் பருப்பு 4-பலம். மூக்கு வெட்ப சேங்கொட்டை [illegible]-பலம் வேப்பெண்ணை ½ படி கோழிமுட்டை உடைத்து கரு [illegible]-பலம்.

இவையாவும் ஒருவாயகன்ற மண் சட்டியிலிட்டு சிறுதீயாக [illegible]ரித்து எண்ணையாவும் வற்றியபின் பார்க்க சட்டியிலிட்ட [illegible]க்குகள் கருகி தீய்ந்திருக்கும் அவைகளை அப்புறப்படுத்தி [illegible]ட்டு சட்டியில் இருக்கும் லிங்கத்தை எடுத்து கல்வத்திலிட்டு [illegible]ரைத்து பாட்டிலில் பதனப்படுத்தவும்.

உபயோகம் : குன்றிஅளவு செந்தூரத்தை தேன். இஞ்சிசார் [illegible]வைகளில் அனுபானித்துக் கொடுக்க ஜுரம் சீதளம் ஜன்னி [illegible]கவாதம் நடுக்குவாதம் பக்ஷவாதம் முதலிய சகலவித வாயு [illegible]லைகளையும் குணம் செய்யும் க்ஷயகாச ரோகத்திற்கும் குணம் [illegible]ய்யும்.

குறிப்பு : இம்முறைப்படி பூரத்தையும் போட்டு எரிக்கலாம்.

வீரபத்திர சிந்தாமணி செந்தூரம்

(பலரோகங்களுக்கு பொது பிரயோகம்)

மனோசிலை : 1-பலம் லிங்கம் 2-பலம் ரசம் 4-பலம். [illegible]நகம் 5-பலம்.

இவைகளை சுத்திசெய்து கரிப்பான் முருங்கைப்பூ [illegible]சிப்பூ மாதுளம்பூ இவைகளின் சாற்றால் வகைக்கு 8-சாமம் [illegible]ரைத்து உலர்த்தி சூரணித்து 8சீலைமண் செய்து காசி

குப்பியிலிட்டு பலபக்கல்லால் வர்யைமூடி சீலைமண் செய்து ஒருசட்டியில் 5விரக்கடை மணலைக்கொட்டி அதன்மேல் குப்பியை வைத்து இதன் கழுத்து வரையில் மணைப்போட்டு தீபாக்கினியால் 2சாமமும் கமலாக்கினியால் 2-சாமமும், காடாக்கினியால் 2-சாமமும் எரித்து ஆற்றி உடைத்துப் பார்க்க செந்தூரமாய் இருக்கும். இதில்குன்றி அளவுவியாதிக்கு தக்க அனுபானம் கொடுக்க மூலம் 9, மேகம் 10, குஷ்டம்19, சுரம்-64, ஈளை, இருமல், குன்மம், காமாலை 13 இன்னும் அனேக ரோகங்கள் குணமாகும்.

சுவர்ண செந்தூரம்

(பலரோகங்களுக்கு பொது பிரயோகம்)

சுத்தித்த தங்கம் 5-விராகனிடை ரசம் 4-பலம் கெந்தகம் 1-சேர்.

இவையாவையும் கல்வத்திலிட்டு செம்பரத்தம்பூ சாற்றால் ½ நாளும் குமரிவேர்சாற்றால் 1நாளும் அரைத்து நிழலில் உலர்த்திக் காசிக்குப்பியிலிட்டு வாய்மூடி 7 சீலைமண் செய்துலுர்த்தி வீரபத்திர சிந்தாமணியை செய்த, விதமாக இதையும் எரித்துஎடுத்து மருந்தை பதனப்படுத்தவும் ¼ குன்றி எடைவீதம் வியாதிக்குத் தக்க அனுபானங்களில் நீரிழிவு இருமல் காசம் 5 சன்னி, 3 மகோதரம் - 8 க்ஷயம் - 4 குன்மம் - 8 மூலம் 8 வலி - 5 வாதம் - 80 பித்தம் - 40 கிரகணி, பெரும்பாடு பிரமேகம் 21 சூலை - 18 குஷ்டம் - 18 கிரந்தி 9 சுரம் உட்சுரம் முதலிய கொடிய ரோகங்கள் குணம்செய்யும்.

வீர வீக்கிர்ம ரசம்

(பலரோகங்களுக்கு பிரயோகம்)

சுத்தித்த ரசம் 8-பலம் மனோசிலை 4-பலம் கெந்தகம் 2-பலம் தாளகம் 6-பலம்.

இவையாவும் சுத்தி செய்து மேற்கண்டவாறு எடைசெய்து கல்வத்திலிட்டு 3-நாள் அரைத்தெடுத்து ஒரு காசிக்குப்பியில்

நிரப்பி அதன் வாய்க்கு மாவுக்கல்லை அடைத்து சீலைசெய்து ஒருபானையில் ஆறுவிரக்கடை மணலையிட்டு அதன்மேல் குப்பியை வைத்து குப்பி மூழ்கிறவரை மணலைவிட்டு மேல்சட்டி மூடி அடுப்பிலிட்டு தீபாக்கினியால் 1-நாளும் கடாக்கினியால் 1-நாளும் இவ்விதமாய் 3-நாள் எரித்து எடுத்து பத்திரப்படுத்தவும்.

உபயோகம் : வாதத்துக்கு இஞ்சி சாற்றிலும் இது போல் ரோகத்துக்கு தக்கபடி அனுபானங்களில் கொடுத்துவர சகலவிதமான ரோகங்களும் இது குணம் செய்யும்.

படிகலிங்கச் செந்தூரம்

சீதபேதி, ரெத்தபேதி, அதிச்சாரம், குணம் செய்யும் சுத்தி செய்தலிங்கம் 1விராகனிடை படிகாரம் 1 பலம்.

படிகாரத்தைப் பொடித்து ஓர் வாயகன்ற மண்டியிலிட்டு அடுப்பிலேற்றிச் சிறுதீயாக எரித்துவர படிகாரமானது உருகி பொங்கி எழும்பி எழும்பி அடங்கி பூர்த்து வர ஆரம்பிக்கும் ஏறக்குறைய அரைபாகத்துக்கு மேல் பூர்த்து வருஞ்சமயத்தில் லிங்கத்தை தூள்செய்து படிகாரத்தின் மேல்தூவி படிகாரம் முற்றும் பூர்த்தபின்பு கீழிறக்கி ஆறினபின் கல்வத்திலிட்டு நன்றாக அரைத்து புட்டியில் பதனப்படுத்தவும் இதில் வேளைக்கு 1, 2 குன்றியெடை தினம் 2வேளை நெய் அல்லது தேன் முதலிய அனுபானங்களில் அருந்த சீதபேதி ரத்தபேதி அதிசாரம் முதலியவை குணமாகும். உஷ்ண வயிற்றுவலி உள்ளுருப்பு களின் ரணம் ஆற்றி குணம் செய்யும் சுரரோகமும் குணமாகும்.

வெங்கார லிங்க செந்தூரம்

(ஜன்னி, க்ஷயத்தில் காணும் பேதியை கட்டும்)

கற்பூரம் சாம்பிராணி இவையாவும் வகைக்கு 1பலம்

இவை இரண்டையும் சேர்த்து அரைத்து 8-பங்காய் பங்கிட்டு ஒவ்வொரு பாகத்தையும் 1 பலம் லிங்கக்கட்டிக்கு கவசித்து தீயிடவும். இப்படியே 8-பாகங்களையும் செய்து பின்

லிங்கக்கட்டியைக் கல்வத்திலிட்டு அரைத்து வைத்துப்பின் 10பலம் வெங்காரத்தை பொரித்து முன் அரைத்ததுடன் சேர்த்து 1 மணி நேரம் கலக்க அரைத்து பத்திரப்படுத்தவும். இதில் வேளைக்கு 1, 2 தினம் 2வேளை தேன் நெய் முதலிய அனுபானங்களில் கொடுத்துவர பேதி, சீதபேதி அதிசாரம் சுரத்துடன் கூடியபேதி முதலிய வியாதிகளைக் குணமாக்கும். மற்றும் சன்னி பாதத்தில் காணும் பேதிக்கு கூடியத்தில் காணும் பேதிக்கும் வழங்க மிக்க நன்மை பயக்கும்.

வெடியுப்பு அன்னபேதி செந்தூரம்

(வீக்கத்தை வடிக்கும் சிறுநீர் அதிகப்படுத்தும்)

சரக்கு : அன்னபேதி1-பலம் வெடியுப்பு1-பலம் மூக்குவெட்டி சேங்கொட்டை 6 மட்டும்.

செய்முறை : முன்கூறிய இரண்டு சரக்கையும் கல்வத்திலிட்டு பொடித்து ஒரு இரும்பு கிடாயில் போட்டு எரிக்க உருகி உறையும் பின்னும் தீயை அதிகப்படுத்தி எரிக்க உருகும் அந்ததருணம் சேங்கொட்டைகளை அதில் போட்டு அயக்குச்சியால் கிளரிவர உப்பு உறைந்து சிவந்துவரும் சமயம் கீழிறக்கி கொட்டைகளின் கரியைபோக்கிவிட்டு செந்தூரத்தை அரைத்து வைக்கவும்.

உபயோகம் : வேளைக்கு பெரியவர்களுக்கு 1குன்றி அளவும் குழந்தைகளுக்கு ¼, ½ குன்றுயளவாகவும் தேனில் 2வேளை கொடுத்துவரச் சிறுநீரை அதிகப்படுத்தும் தேகத்தில் எப்பாரிசத்திலேனும் வீக்கம் இருப்பின் குணப்படுத்தும். சுரக்கட்டி உள்ளவர்களுக்கு 10-நாள் கொடுக்க கட்டிகரைந்து விடும். இதுசிறந்த செந்தூரமாகும்.

சதுர்முக செந்தூரம்

(சீத பேதி குணமாக்கும்)

குமரிச் சாற்றில் அரைத்து போடப்பட்ட அன்னபேதி செந்தூரம், பொரித்த வெங்காரம், பொரித்த படிகாரம் கோபிகல் இவையாவும் வகைக்கு 1 பலம்.

மேற்கூறப்பட்ட நான்குசரக்குகளையும் கல்வததில் போட்டு 2 சாமம் மிருதுவாகும் பொருட்டு அரைத்து சீசாவில் பத்திரப்படுத்துக. வேளைக்கு 1 அல்லது 1½ குன்றிஎடை 4-மணி நேரத்திற்கு ஒருமுறை வெண்ணெய், நெய், முதலிய அனுபானங்களில் கொடுத்து வரசீதபேதி உடனே குணமாகும்.

யூனானி செந்தூரம்

தூளாக உள்ள பூங்காவி, பொரிக்காமல் உள்ள படிகாரம் இவையாவும் வீகைக்கு 1 பலம்.

இவ்விரண்டையும் நன்றாக அரைத்து வஸ்திரகாயம் செய்து வைத்துக்கொள்ளவும். இது வெள்ளை வெட்டை, சூடுகிரகணி கழிச்சல், வாய் வயிறுரணம் பெரும்பாடு உஷ்ணரோகங்கள் முதலிய ஏனைய ரோகங்களுக்கு பால்நெய் வெண்ணை தேன் முதலான அனுபானத்தில் 1, 2, குன்றி செந்தூரம் தர குணமாகும்.

அன்னபேதி செந்தூரம்

ஒருபலம் நல்ல வேளையிலையையும் அதற்கு சமன் அன்னபேதியையுங் கூட்டி நன்றாய் அரைத்து ஒரு சிறுகுடுவையில் போட்டு வாய்மூடி சீலைசெய்து காய்ந்தபின் 15-வறட்டியில் புடமிட செந்தூரமாகும் இதனில் அரைக்குன்றி தினம் இருவேளை தேகசுபாவத்திற்குத் தக்கபடி தேன் நெய் முதலிய அனுபானங்களில் கொடுக்க சுரம், சேர்க்கை, பாண்டு, காமாலை, பெரும்பாடு பித்தசம்மந்தமான பலரோகங்கள் குணமாகும்.

குறிப்பு : வேலிப்பருத்திச்சார் பொற்றாலைகையான் சார், சோற்று கற்றாழையில் சுண்ணாம்புக்கல் இட்டு எடுத்தநீர், பொன்னாங்கனிச்சார், எலுமிச்சம்பழச்சார் இவைகளில் தனித்தனியே விட்டரைத்து அன்னபேதியை புடமிடுவதுமுண்டு ஒவ்வொன் றிலும் புடமிட்ட செந்தூரங்கள் செய்வது சாலசிறந்தது.

சிங்கி செந்தூரம்

மிருதார் சிங்கி, அன்னபேதி இவையாவும் வகைக்கு 1பலம். இவைஇரண்டையும் கல்வத்திலிட்டு மழை ஜலத்தால் பத்துஜாமம் அரைத்து வில்லைதட்டிக் காயவைத்து அகலில் அடக்கி மேல் அகல் மூடி சீலை மண்செய்து காய்ந்தபின் 20பலம் கொண்ட வரட்டியில் புடமிட செந்தூரமாகும் இதனில் வேளைக்கு அரைக்குன்றி பிரமாணம் தினம் இருவேளை தேன், நெய், பால் முதலிய அனுபானங்களில் கொடுத்துவரத் தாதுபுஷ்டி உண்டாக்கும். தேகத்தில் வலிவும் வனப்பும் உண்டாக்கும் இன்னும் மேகரணங்கள், வாதபித்த ரோகங்களையும் குணம் செய்யும்.

அயச் செந்தூரம்

வேண்டிய அயத்தூளை எலுமிச்சம் பழச்சாற்றில் ஓரிரவு ஊரப்போட்டு அரைத்து அலம்பி ஒரு அகண்ட மண்னோட்டில் இட்டுத் தென்னைமட்டை பழுத்ததாக கொண்டு வந்து துடுப்பு போல் கட்டி அதனால் வருக்க நல்லசிவப்பான செந்தூரமாகும். இதனை தக்க அனுபானங்களில் கொடுத்துவரின் பாண்டு, சோகை, காமாலை முதலியவைகளும் இன்னும் இரத்தக் கேட்டால் உண்டான பலரோகங்களும் குணமாகும். இரத்தமும் விசேஷமாக உண்டாக்கும்.

குறிப்பு : இரத்தம் குறைபட்டவர்கள் சாப்பிடக் கூடாது என்பதை அறியவும்.

அயகெந்தி செந்தூரம்

சுத்தி செய்த அயப்பொடி, கெந்தகம் இவை யாவும் வகைக்கு பலம் 2.

இவ்விரண்டையும் கல்வத்திலிட்டு நவாச்சாரம் விராகனிடை 2 கற்சுண்ணாம்பு நீற்றது 1-பலம் இதை குளிர்ந்த தண்ணீரிலிட்டுக் கரைத்து தெளிவிருத்து 2-சாமம் நன்றாக அரைத்து வழித்து ஒருசாணாக்கி வைத்து குழம்புகிற மட்டும்

லையில் மெதுவாக ஊதிபிறகு சற்று அதிகமாக ஊதினால் செந்தூரமாகும். இதனை எடுத்து அரைத்துப் பதனப்படுத்தவும் ஒரு அரிசியெடை செந்தூரத்தை எடுத்து தக்க அனுபானங்களில் கொடுத்து வர வாயு, பாண்டு, காமாலை தேகத்தில் நீர் கோத்தல் நீர்புவலி மார்புளரிச்சல் முதலான அனேக வியாதிகளை போக்கி குணம் தரும்.

காடிக்கார செந்தூரம்

ரசசெந்தூரம் 2-கழஞ்சு, சுத்திசெய்த லிங்கம் 8கழஞ்சு வெள்ளிக்காடிக்காரம் 1 கழஞ்சு.

இவையாவையும் கல்வத்திலிட்டு இரண்டு மணிநேரம் அரைத்து ரவியில் ஒருசாமம் வைக்கவும் இப்படியாக அரைத்தெடுத்த பின்னர் சீசாவில் அடைத்து வைக்கவும் மூன்று வேளைக்கொரு தடவை சீசாவின் வாயடப்பை திறந்து 2, 3 நிமிஷம் உள் ஆவி வெளியாகும்படி விட்டு மீண்டும் அடைத்திடுக. அப்படி ஒரு மாதம் வைத்தெடுக்க செந்தூரம் தேவாமிர்தத்துக்கு ஒப்பானதாகயிருக்கும். வாந்தி பேதி (கொலரா)வுக்கு ஒரு குன்றியெடை செந்தூரத்துடன் சமயெடை சர்க்கரை சேர்த்து தேனில் கொடுக்கவும் சீதபேதி ஜீரணத்திற்கும் சிறந்தது.

பஞ்சமுக செந்தூரம்

அரிதாரம் லிங்கம், ரசம், நெல்லிக்கா கெந்தகம், வீரம், இவைகளை வகைக்கு ஒருவிராகனிடை நிறுத்தெடுத்து வெள்ளை மொட்டாமணக்கு பால்விட்டு அரைத்து வில்லைத்தட்டி உலர்த்தி சட்டிலிட்டு மேல்மூடி சீலை செய்து உலர்த்தி குக்கிட புடமிட்டு ஆறிடம் ஆறின பின்னர் எடுக்கவும்.

இதன் உபயோகம் : குன்றி அளவு செந்தூரமெடுத்து காலைகடுகு தூளிலாவது நல்ல வெல்லத்திலாவது வெண்ணை நெய் இவைகளில் வியாதிகளுக்கு தக்கபடி கொடுக்க ஜன்னி

தலைப்பாரம் ஜுரம் ஆரம்ப குட்டம் சூலைநோய் குன்மநோய்கள் பித்தவாயு கைகாலில் உள்ள ரணங்கள் இவையாவையும் குணம்செய்யும் பத்தியம் வியாதிக்கு தக்கபடி இச்சாபத்தியம்.

இரச செந்தூரம்

7 ரூபாயெடை கந்தகத்தை வெற்றிலைசாற்றால் 3 மணிநேரம் அரைத்து இரண்டு அகலுக்குள் பூசிநிழலில் உலர்த்தி அதற்குள் 2 ரூபாயெடை ரசத்தை கற்றாழைச் சாற்றால் 4-சாமம் அரைத்து குழம்பு பதத்தில் வழித்துவிட்டுச் சீலைமண் செய்து உலர்த்தி ஒருசட்டியில் நாலு விரற்கடை மணல் கொட்டிப் பரப்பி அதன் மீது வைத்து மேலும் மணல் போட்டு நிரப்பி இரண்டு சாமம் எரித்து எடுக்க செந்தூரமாகும். இச்செந்தூரத்தை மேகசுரம், மேகத்தடிப்பு, கூஷயம், கூஷயரோகத்துக்கு மிகமுக்கியமான செந்தூரமாகும். குன்றி அளவு எடுத்து தேனில் 20-நாள் கொடுக்க குணமாகும் தலைவலிக்கு 1-குன்றியெடை செந்தூரத்தில் முலைப்பால் விட்டுகுழைத்து பத்திட சிறிது நேரத்தில் தலைவலி குணமாகும்.

தாம்பர செந்தூரம்

சுத்திசெய்த தாம்பிரம் சுத்தித்தரசம் மனோசிலை கெந்தகம், அரிதாரம், நாபி, லிங்கம், நேர்வாளம், அக்கிராகாரம், நீர்விஷம், வெங்காரம், காரீயம், இவையாவும் வகைக்கு 2 பலம்.

செய்பாகம் : தாம்பரத்தை தூளாக ராவி மேற்கூறிய மருந்தினங்களோடு சேர்த்து கல்வத்திலிட்டு கற்றாழைச் சாற்றால் 2 சாமநேரம் நன்றாக அரைத்து அடைபோல் தட்டி உலர்த்தி அடுப்பிலிட்டு காலை 5 மணிக்கு அடுப்பு ஏற்றி இரவு 10-மணி வரையில் எரித்துமறுநாள் காலையில் சட்டி நன்றாக ஆறினபின் பிரித்தெடுத்துப் பார்க்க செந்தூரமாக முடிந்திருக்கும். அரைத்துப் பதனப்படுத்துக திரிகடுகுதூளில் ஒருகுன்றிசெந்தூரமிட்டு தேனில்சாப்பிட குன்மம்8 குட்டம்18 மகோதரம் கிரந்தி சூலை-18 காசம், ரெத்தகாசம், வண்டுகடி, காமாலை, சூட்டுநோய்கள் தீரும்.

குறிப்பு : ரசம் மட்டும் சுத்தி செய்தால் போதுமானது மற்ற சரக்குகளை சுத்திசெய்ய வேண்டியதில்லை.

வங்க செந்தூரம்

சுத்தி செய்த வெள்ளீயம் பலம் 1 உருகி அவ்வுருக்கு வாயில் 1 பலம், சுத்தி செய்தமனோசிலை பொடித்துபோட்டு இரும்பு கரண்டியால் பிரட்டிக் கொடுக்க ஈயம் வெட்டையாகும் அதை எடுத்து ஜலத்தால் அலம்பி கல்வத்திலிட்டு அத்துடன் வீரம் கர்ப்பூர சலாசத்து, அரிதாரம் இவைகளை சுத்திசெய்து வகைக்கு பலம் 1 சேர்த்து தக்காளி இலைச்சாற்றால் ஒருசாமம் அரைத்து பிறகுகோழி முட்டையில் மஞ்சள் கருவில் குப்பைமேனிச்சாறு சேர்த்து கலக்கி அதைவிட்டு ஒருசாமம் அரைத்து பில்லைத்தட்டி ஓட்டிலிட்டு 7 சீலைமண் செய்து வராகபுடம் போட செந்தூரமாகும்.

வெண்ணையில் குன்றிமணி இடை கொடுக்க சகல மேகம், மேகநீர் பித்தவெட்டை காந்தல் தலைவலி பீநிசம் குன்மம் ரத்த கிரிச்சரம் சகல கபரோகங்கள் விந்திரிதி குணமாகும்.

இராமபாண செந்தூரம்

வீரம், பூரம், ரசசெந்தூரம், லிங்கம், நெல்லிக்காய் கந்தகம் இவையாவையும் வகைக்கு 1 பலம்.

இவைகளைச் சுத்தி செய்து முலைப்பாலில் 4-சாமம் அரைத்து வெய்யலில் வைத்தால் செந்தூரமாகும். அனுபானத்திலி டசுரம் வீக்கம் மேகம் ஜன்னி வாதம் குணமாகும்.

லிங்க செந்தூரம்

சுத்தி செய்த 1-பலம் உலர்ந்த லிங்கத்துக்கு கொடிவேலி வேர்பட்டையை அரைத்து கவசமிட்டு சீலைமண் செய்து 10-எருவில் புடம்போட்டு எடுத்து அரைகுன்றி எடை தேனில் கொடுக்க சுரம், வாதம், பித்தம் தீரும்.

அஷ்டபயிரவ செந்தூரம்

சரக்கு : லிங்கம் மனோசிலை அரிதாரம் காந்தம் ரசகற்பூரம் வெள்ளைப் பாஷாணம் சுத்திசெய்த ரசம் கெந்தகம் இவையாவும் வகைக்கு 1-பலம்.

இவை எட்டும் சுத்திசெய்து குப்பைமேனி வெற்றிலை பருத்தியிலை வெள்ளெருக்கு துளசி இவைகளில் சாற்றால் தனித்தனியே 4-சாமம் அரைத்து பில்லைத் தட்டி உலர்த்தி ஓர்சட்டியிலிட்டு வெற்றிலையால் மூடி பிறகுமேல் சட்டிமூடி சீலைமண் செய்து 4-சாமம் எடுத்து குன்றிமணி யெடைதேன் அல்லது சீனியில் கொடுக்க சன்னி18, மேகம் 21, குஷ்டம்18, சூலை18 குன்மம்-8 கிரந்தி-9 கைகால்முடக்கு, பிளவை, புற்றுபவுத்திரம், கண்டமாலை, சூலைநோய், சகல கரப்பான் வாதம்-80, கன்னப்புற்று, பவுத்திரம்-15 கபரோகம்-96, ஜீக்வா ரோகம்-6 முதலிய அநேகபலமான ரோகங்கள் குணமாகும்.

கரியுப்பு செந்தூரம்

1 படி கரியுப்பை எருக்கல்பாலால் 1-சாமம் அரைத்து பில்லைதட்டி ஓட்டிலிட்டு சீலைமண் செய்து 15 எருவில் புடம்போட்டு எடுத்து இவ்விதமாகவே திருக்கள்ளிப்பால் தும்பை இலைச்சாறு மருதம்பட்டைச்சாறு கற்றாழைச்சாறு எலுமிச்சம்பழச்சாறு பொடுதலையிலைச்சாறு இவைகளில் ஒவ்வொன்றிலும் 1சாமம் தனித்தனியே அரைத்து தனித்தனியே ஒவ்வொரு புடமும் போட பஸ்பமாகும். பணயெடை தேனில் கொடுக்க உதரரோகம், சூலை, வீக்கம், குன்மம், வாயு வாந்தி அஜீர்ணம் தீரும்.

மயிலத்துவஜ செந்தூரம்

சுத்திசெய்த அயப்பொடி, சீனாகாரம், நவாசாரம், வெங்காரசுண்ணம் இவையாவையும் வகைக்கு 1 பலம்.

இவைகளை கல்வத்திலிட்டு கோழி முட்டையில் மஞ்சள் கருவாலாட்டி பில்லைத்தட்டி உலர்த்திஓட்டிலிட்டு ஓட்டால் மூடி சீலைமண் செய்து காடாக்கினியால் எரித்து எடுத்து அத்துடன் சுத்திசெய்த கெந்தகம், ரசம், வீரம், நாகபுஷ்பம் சேர்த்து பொற்றாலை கையாந்தகரைச் சாற்றால் ஒருசாமம் அரைத்து முன்போல் பில்லைத்தட்டி ஓட்டிலிட்டு சீலைமண் செய்து குக்குட புடம்போட்டு எடுத்து அனுபானத்தில் பணவிடை கொடுக்க குஷ்டம் மேகம் வாதரோகம் வெட்டை புடை முதலிய வியாதிகள் குணமாகும்.

துருசு செந்தூரம்

துருசு விராகனிடை 1 உத்தாமணிப் பாலில் போட்டு (துருசு முழுகும்படி பால்விட வேண்டும்) சூரியபுடம் வைத்து எடுத்து உத்தாமணிச் சாற்றால் அரைத்து பில்லைசெய்து உத்தாமணியிலையை அரைத்து அப்பில்லைக்கு கவசமிட்டு சீலைமண் செய்து உலர்த்தி சிறுபுடம் போட செந்தூரமாகும் இதை அனுபானத்திலிட அனேக வியாதிகள் குணமாகும். அன்றியும் கொக்கு மந்தாரை பூச்சாற்றில் சுத்திசெய்த தாம்பரத்தை (சுத்தி முறையில் காண்க) உருக்கி உருக்கு வாயிலி ல் இதைக் கொடுக்க, (இதை வாங்கும் வேறுமுறை) துருசு, கந்தகம், வகைக்கு பலம் 1 வீரம் விராகனிடை 1 இவைகளை சுத்தி செய்து, எலுமிச்சம்பழச்சாற்றால் 2-நாள் வரை அரைத்து பில்லைத்தட்டி உலர்த்தி ஓட்டிலிட்டு சீலைமண் செய்து வராகபுடம் போடவும். இவ்விதமாய் 3 புடம்போட செந்தூரமாகும் சுக்கு, மிளகு, திப்பிலி இவைகளைச் சேர்த்து சூரணித்து ஒருவிராகனிடை சூரணத்தில் ஒரு குன்றியெடை செந்தூரத்தை வைத்துக்கொடுக்க குன்மம் 8-கர்பரோகங்கள் கிரகணி குணமாகும்.

பத்தியம் : இச்சாபத்தியம்

திரிலோச்சன செந்தூரம்

சுத்தி செய்த இரும்பினை அரப்பொடி, சுத்திசெய்த தாம்பரத்தின் அரப்பொடி இவையாவும் வகைக்கு 1-பலம்.

இவைகளைச் சேர்த்து கற்றாழைச் சாற்றால் அரைத்து 10 புடமும் கையாந்தகரைச் சாற்றால் அரைத்து 3 புடமும் நாவல்பட்டைச் சாற்றால் 3 புடமும் போட்டு எடுத்து அத்துடன் சுத்திசெய்த நெல்லிக்காய் கந்தகம் சுத்திசெய்த அரிதாரம் வகைக்கு விராகனிடை 1 சுத்தி செய்த ரசம் 3 விராகனிடை சேர்த்து எலுமிச்சம் பழச்சாற்றாலும், முருங்கைப்பூ சாற்றாலும் தனித்தனியே அரைத்து 3 புடம் போட்டு வைத்துக் கொண்டு விசுவேசுவர சூரணத்தில் 1விராகனிடை வைத்து அரைமைண்டலம் சாப்பிட சூலை வெடிசூலை வாதபாண்டு, விஷபாண்டு, மூலபாண்டு, வாதசூலை, மேகசூலை, லிங்கசூலை முதலிய அனேக கடூர ரோகங்கள் குணமாகும் வியாதிகளுக்கு தக்கபடி பத்தியமாகும்.

சுவாசக்குடோரி செந்தூரம்

சுத்தி செய்த தாளகம், ரசசெந்தூரம், வீரம் இவையாவும் வகைக்கு 1 தோலா.

இவைகளில் முதல் இரண்டு சரக்கை கல்வத்திலிட்டு நன்றாய் ஒருசாமம் அரைத்து பின்னர் மூன்றாவது சரக்கை சேர்த்து 8-சாமம் அரைத்து சிறு குடுவையில் போட்டு ஓடுமூடி சீலைசெய்து மூன்று சிறு கற்களை அடுப்புபோல் வைத்து அதன்பேரில் குடுவையை வைத்துக் கீழே ஒரு அகலைவைத்து விளக்கெண்ணை விட்டு சுண்டுவிரல் கனமுள்ள திரியால் 3சாமம் எரித்து ஆறவிட்டுப் பார்க்க செந்தூரமாயிருக்கும்.

இதனில் வேளைக்கு இரண்டு அரிசி பிரமாணம் தேனில் தினம் ஒருநேரம் 3-நாள் கொடுக்கவும் வியாதியின் நிலைமைக் கொடியதாதலின் தினமிரு நேரம் 2-நாள் கொடுத்தால் போதுமானது. இவ்விதபிரயோகத்தினால் கபம் நிறைந்து

வெளிக்கு வராமல் சுவ்சாசம் திண்டாடி இழுப்புகண்டு பாதைப்படுங் கஷ்டத்தையுடைய சுவாச காசமெனினும் எளிதில் கபத்தைக் கரைத்து வெளியாக்கி சுகமடையச் செய்யும். பின்னர் சுவாச காசத்திற்காண வேறு எதனையாவது கொடுத்து பூரண குணம் உண்டாக்குக.

பத்தியம் : புனல்பாகம் பால் சேர்ந்த கஞ்சி முதலியவை கொடுக்கவும்.

பாலசஞ்சீவி செந்தூரம்

ரசசெந்தூரம், லிங்கம், பூரம், சுத்திசெய்த நேர்வாளம் இவையாவும் வகைக்கு 1/4 பலம்.

இவைகளை ஒன்றின் பின் ஒன்றாகச் சேர்த்து அரைத்து அதனுடன் நற்சங்கன்யிலையை அரைத்து 1/2 பலம் கூட்டி மெழுகுபதம் வரும்வரையில் நன்றாக அரைத்து வில்லைசெய்து காய்ந்தபின் கரிநெருப்பின் மீது ஒருபுதுமண் ஓட்டைவைத்து அதன்மீதுவில்லையை வைத்து புரட்டிக் கொடுத்து கொண்டுவர செந்தூரநிறம் வரும்போது எடுத்து ஆறவிட்டு கல்வத்திலிட்டு நன்றாய் அரைத்து சீசாவிலிடுக.

இதனை குழந்தைகளுக்கு அரிசி அளவும் பெரியவர்களுக்கு குன்றி அளவும் தேன், நெய், இருநேரம் கொடுக்க வாயு சம்மந்தமான வலி, பாரிசவாயு சுவாசகாசம், விடாஜ்வரம் ஜன்னி குணமாகும்.

மாதவச் செந்தூரம்

(சுரத்துக்கு அற்புதமானது காசம் தேகவலி தீரும்).

சரக்கு : சுத்தி செய்த லிங்கம் 8-விராகனிடை, வில்லை ரசசெந்தூரம் 4-விராகனிடை, வீரம் 2-விராகனிடை.

செய்முறை : இவற்றை கல்வத்திலிட்டு சிறிதுசிறிதாக முலைப்பால் விட்டு 2 அல்லது 3 மணிநேரம் அரைத்து ரவியில் உலர்த்தி மீண்டும் 2,3 மணிநேரம் அரைத்து சீசாவில்

பத்திரப்படுத்தவும் இந்தசெந்தூரத்தில் வேளைக்கு 3/4 குன்றிஎடை (துவரம்பருப்பு அளவு தினம் 2 அல்லது 3 வேளை தேனில் கொடுக்க எத்தகைய கடினமான சுரமும் விரையில் குறையும் 6வேளைக்கு மேல்கொடுக்க வேண்டிய அவசியமில்லை வேண்டுமானால் வேறுமருந்தை உபயோகப்படுத்திக் கொள்ளவும். மற்றும் இச்செந்தூரம் சன்னி சயித்தியம் தேகவலி காசம் தேகளரிச்சல் முதலியவற்றிற்கு கொடுக்க அதிக நன்மைதரும்.

பசிதீபன செந்தூரம்

சரக்கு : சுத்திசெய்த ரசம் விராகனிடை 1, பூரம் விராகனிடை ¼ வீரம் விராகனிடை ¼ கெந்தகம் விராகனிடை ½ பச்சைகற்பூரம் விராகனிடைகால் குங்குமப்பூ விராகனிடை 1, கஸ்தூரி விராகனிடை கால் அரிசிதிப்பிலி, சந்தனத்தூள், ஏலம், சுக்கு, வெண்மிளகு, இவை 5-சரக்கும் பொன்போல் வருத்துகொள்ளவும் வகைக்கு 1 விராகனிடை.

செய்பாகம் : சரக்குகளை தனித்தனியே பொடிசெய்து பின்யாவும் சேர்த்து அரைத்துபத்திரப்படுத்தவும்.

தீரும் வியாதி : பசிதீபனம் அதிகமாகும் மற்றும் இதுபல நோய்களைக் கண்டிக்கும்.

அனுபானம் : வாந்திக்கு நெய்யில் 2 குன்றி மருந்து கொடுக்கவும், ஜன்னிக்கு முலைப்பால், வயற்றுவலிக்கு சுக்கு, விஷபேதிக்கு 3 குன்றி தேனில், விக்கலுக்கு பன்னீர், மார்வலி, நெஞ்சுவலி, விலாபக்க வலிக்கு விளக்கெண்ணை இதுபோல் வியாதிக்கு தக்கபடி அனேக நோய்கள் குணமாகும்.

அயவீர செந்தூரம்

அயப்பொடி: சுத்திசெய்த ரசம், வகைக்கு 1-பலம் இவை இரண்டையும் கல்வத்திலிட்டு நன்றாக அரைத்து வீரம்பலம் 1, நவாச்சாரம் பலம்1, சேர்த்து மூன்றுநாள் கைவிடாமல் அரைக்க

சிவந்துபொடியாகும் இதனைப் புதுச்சட்டியிலிட்டு அடுப்பில் வைத்து வருக்க முறுக்கம்பூப் போல் சிவக்கும் பதத்தில் கல்வத்தில் கொட்டிவிடவும். (முதலில் கருப்புநிறப்புகை வரும் தருணம் கீழ் இரக்கவும்) இதனை நன்றாக அரைத்துப் பதனப்படுத்தவும் இதனை குன்றி அளவு பனை வெல்லத்திலாவது தேனிலாவது கொடுக்க சூலை குஷ்டம் கருமேகம் செம்மேகம் புள்ளிகள் கைகருப்பு வாதநீர் விஷக்கடி குணமாகும் நெய்யிலும் அனுபானிக்கலாம்.

குறிப்பு : வருக்க தென்னம் ஈர்க்கை உபயோகிக்கவும்.

ஆறுமுகச் செந்தூரம் (பலதரப்பட்ட கொடூர ரோகங்கள் தீரும்)

ரசம் 5-பலம், காந்தம் 7-பலம், கெந்தகம் 9-பலம், இந்துப்பு 4-பலம், வெங்காரம் 8-பலம் அயப்பொடி 12-பலம்.

இவைகளைக் கல்வத்திலிட்டுத் தனித்தனியே பொடித்து முறைப்படி கலந்து அரைத்துப்பின் கற்றாழைப்பால் சேர்த்து உறவாகும்படி 5-நாள் அரைத்து வில்லைத்தட்டி காயவைத்து அகன்ற சட்டியில் வைத்துவாய் பொருத்தமான மற்றொரு சட்டியால் மூடி சீலைமண் வன்மையாய் செய்து 8-சாமம் அடுப்பிலிட்டு எரித்து ஆறினபின் எடுத்துப் பார்க்கச் செந்தூரம் மாதுளம் பூ நிறம் பெற்றிருக்கும்.

இதனை இழைத்து குப்பியில் அடைத்துவைக்கவும்

ஆறுமுக செந்தூரத்தால் தீரும் நோய் விபரம் :

ஆறுமுக செந்தூரத்தால் அனுபானம் : இச்செந்தூரம் அரைகுன்றிமணி அளவு எடுத்து அத்துடன் திரிகடுகுத் தூளில் சேர்த்து தேனில் இழைத்து அருந்த அரைவாதம், விரைவாதம், அறுவகை மூலம் எரிகுன்மம், வறட்சி அனல் வெடிசூலை, மார்புச்சூலை, கர்ப்பரோகம், பாண்டு, சோகை கிரந்தி குடல்வாதம் பித்தம் வாதபித்தம், கபம், அரையாப்பு, மதம், அதிசாரம், மண்டையிடி, தொண்டைவலி, கண்டமாலை, வறட்சூலை

இவ்வகைகள் தீரும் நோய்களுக்கு தக்கவாறு நர்ட்களை அளவுபடுத்திக் கொள்ளவும்.

குறிப்பு : செந்தூரவகைகளில் மிகசிறந்த முறையாகும்.

கௌரி சிந்தாமணி செந்தூரம்

(சூலை 18. வாதம்-80. வாயு-26 பித்தம் தீரும்)

சுத்தித்த ரசம். கந்தகம். பொரிகாரம். இவையாவும் வகைக்கு 1-பலம்.

இவைகளைக் கல்வத்திலிட்டு முறைப்படி அரைத்து ரெட்டினால் கொட்டைபாக்கு அளவாய் கிளிகட்டி மணல் மறைவில் கிளிகளை மறையும்படி வரிசையாக வைத்து 10 வறட்டியை மணல்மேல் அடுக்கி எரித்து குளிர்ந்தபின் எடுத்து கல்வத்திலிட்டுப் பொடித்து பாட்டிலில் பதனப்படுத்தவும். மருந்து பலாப்பழம் வர்ணமிருக்கும். திரிகடுகு தூளில் வெருகடியும் மருந்து 1-குன்றி அளவும் எடுத்து தேனில் 1-மண்டலம் சாப்பிட சூலை-8. வாயு-26 குன்மம். உளைமாந்தை. தீராதசுரங்கள். எலி கடி. மந்தாரகாசம். சுவாசம். காசம். மூலம். காமாலை. யோனிசூலை. லிங்கசூலை. அண்டவாதம். சுரமாந்தை. எலிகடி குணமாகும்.

இரச செந்தூரம்

(மூலரோகம் பவுத்திரரோகம் மேகரோகங்கள் தீரும்)

சரக்கு : இரசம் 4பலம். கந்தகம் 1-பலம்

இவ்விரண்டையும் சேர்த்து அரைத்து குப்பியிலிட்டு வாலுகா இயந்திரத்தில் 1-சாமம் தீபம்போல் எரித்து மறுசாமம் கமலாக்கினியாய் எரித்து 3-சாமம் காடாக்கினியால் எரிந்த கந்தகத்தின் வாசம்வரும் அப்போது சிலாக்கையிட்டு மெள்ளக்கிண்டி பார்க்க உருகி இளகிபதமாக இருக்கும். அப்படி உருகாவிட்டால் மேற்கொண்டு 1 நாழிகை (24-நிமிடம்) கடும் தீ போட உருகிக் குழம்பாகும். அதுசமயம் 1/4 பலம் தாளகத்தை

நன்செய்து குப்பியினுள் போட்டு நான்கு பக்கமும் கலக்கும்படி கண்டவும். பின் 4சாமம் காடாக்கினியாக எரிக்க மருந்து மேலே வரும் சிலாக்கையிட்டு பார்த்தால் முனை சிவந்திருக்கும் இதுதான் பதம். கருத்திருக்கின் பின் 2சாமம் எரிக்க சிவக்கும் எடுத்து ஆறவிட்டு அரைத்து பதனப்படுத்தவும். முதல் குன்றிமணி அளவு இருவேளை 18-நாள் கொடுக்க மூலம். மேகநோய். பவுத்திரம் இன்னும் பிறநோய்கள் தீரும்.

பத்தியம் : புளி. புகையிலை நீக்கவும்.

அயச்செந்தூரம்

அரப்பொடியை எலுமிச்சம் பழச்சாற்றில் ஒரு நாள் ஊரவைத்து மறுநாள் அதைஜலத்தால் கழுவி உலர்த்தி ஓர் சட்டியில் போட்டு 4-சாமம் எரிக்கும் பொழுது பொற்றலை கையான்தகரை அல்லது கையான்தகரைசாறு கொஞ்சமாய் விட்டுபுரட்டி புரட்டி கொடுத்துவர செந்தூரம் ஆகும் பிறகு அதை எடுத்து சூரணித்து 2-குண்டுமணி எடைஎடுத்து வெண்ணையில் கொடுத்த உடனே கரும் குருஞ்சாவும் வெந்தியமும் வெங்காயமும் சேர்ந்த கசாயம் அல்லது வேறுவகை கசாயங்களை கொடுக்க கண். கை. கால் எரிச்சல் பசியில்லாமை. கணச்சூடு. தேகவீக்கம். இளைப்பு. சோகை. பாண்டு. அன்னத்துவேஷம். பித்தமயக்கம். பித்தவாயு முதலியவைகள் குணமாகும் வியாதிக்கு தக்க பத்தியமும் அனுபானமுமாம்.

வேறுமுறை : பெண் குதிரையின் பின் கால்களின் மாடங்களைத் தானே தேய்ந்து விழுத்ததை எடுத்து ராவின்பொடி பலம்-8 சிறு களாக்காய் சாற்றில் 3 நாள் ஊரவைத்து எடுத்து மேற்படி சாற்றால் ஒருசாமம் அரைத்து பில்லைத்தட்டி ஓட்டிலிட்டு சீலைமண் செய்து வராகபுடம் போட்டு எடுத்து ஓதியம்பட்டைச் சாற்றால் 2-புடமும் நாவல்பட்டைச்சாற்றால் 1 புடமும் போட வெகுதிவ்ய செந்தூரமாகும். இதை அனுபானத்திலிட மேற்படி வியாதிகள் குணமாகும்.

கைலாசநாத செந்தூரம்

சரக்கு : ரசம் 6-பலம் கந்தகம் 1/2 பலம் அரிதாரம் 8-விராகனிடை மனோசிலை 8-விராகனிடை லிங்கம் 8விராகனிடை.

இவைகளை சுத்திசெய்து முதலில் ரசமும் கந்தசுமும் கல்வத்திலட்டு அரைத்து இவ்விதமாக தும்பை இலைச்சாறு சிறுசெறுப்படை இலைச்சாறும் பூமாதுளைப் பூவின்சாறு தனித்தனியே வகைக்கு ஜாமம் அரைத்து உலர்த்தி சீலை மண்செய்த காசிக்குப்பியில் 3/4 குப்பிப்போட்டு பளபக்கல்லால் மூடி ஒரு சட்டியில் பாதிமணலை போட்டு அதன்மேல் மேற்படி குப்பியை வைத்து கழுத்து வரையில்மண்ணைப் போட்டு மேல்சட்டி மூடி சீலைமண் செய்து காடாக்கினியால் 3-நாள் எரித்து ஆறவிட்டு எடுத்து பதனப்படுத்தவும்.

உபயோகிக்கும் விதம் : பணவிடை செந்தூரத்தை தூதுளை, கண்டங்கத்திரி, ஆடாதொடை இவற்றின் சாற்றில் கொடுக்க ஈளை மந்தாரகாசம், சுரமாந்தம், சுவாசகாசம் சிலேஷ்மம் சன்னி குணமாகும் வெள்ளை பூண்டு தையிலத்தில் கொடுக்க ஜன்னி 13 குணமாகும் திப்பியை வறுத்து சூரணித்து தேனும் சேர்த்துக் கொடுக்க சூலை புண் ரணம், குஷ்டம் வண்டுகடி, கபாலசூலை, கபாலவரட்சை, சொறி, குன்மம் கரப்பான் நெஞ்சுவலி, வாயு குணமாகும். வெள்ளைப் பூண்டு தைலத்தில் சன்னி 13 குணமாவதுடன் இடக்குவாதம் முடக்குவாதம், குணமாகும். சுக்கு மிளகு ஓமம் இவைகளை வெதுப்பி சூரணித்து தேனில் சேர்த்து அனுபானத்திலிட பட்சவாதம் சன்னிபாதம் முகவாதம், பாரிசவாதம், முதலிய சகலவாதம் குணமாகும் வியாதிக்கு தக்க பத்தியமாம். இம்முறை அனுபவத்தில் சிறந்ததாக அறியப்பட்டதாகும்.

அயக்காந்த செந்தூரம்

குதிரையில் லாடத்தில் செய்யப்பட்ட அயச்செந்தூரமும் காந்த செந்தூரமும் சமஅளவாய்ச் சேர்த்து நாவல் பட்டைச்சாறால்

3-சாமம் அரைத்து பில்லைத் தட்டி ஓட்டிலிட்டு சீலை மண்செய்து வராகபுடம் போட அயக்காந்த செந்தூரமாகும் இதனை அனுபானங்களில் கொடுக்க பாண்டு, சோகை, காமாலை, தேகவெளுப்பு முதலியவைகள் குணமாகும்.

சுவர்ண அப்ரேக செந்தூரம்

பளிங்கு அப்ரேகத்தை காய்ச்சிக் கழுதை மூத்திரத்தில் 6-தடவை தோய்த்து, எடுத்து கல்வத்திலிட்டு நீராகார காடியில் செம்பரத்தம் பூக்களை போட்டு 4-நாள் வைத்து இருந்து பின்கசக்கி பிழிந்த ஜலத்தால் அரைத்து வில்லைசெய்து ஒருமுழம் எருவில் 6-புடம் எலுமிச்சம் பழச்சாற்றால் அரைத்து 1புடமும் போட்டு எடுத்து 10க்கு ஒன்றுத்தங்கம் சேர்த்து எலுமிச்சம் பழச்சாற்றால் அரைத்து ஒரு புடம்போட்டு எடுத்து அனுபானத்தில் ஒருபணவெடை கொடுக்க க்ஷயம், காசம், நீரிழிவு கபரோகங்கள் முதலிய கடூர ரோகங்கள் தீரும்.

அப்ரேக செந்தூரம்

ஓர் சட்டியில் கருங்குருவை அரிசியின் கஞ்சியைப் போட்டு அதில் கிருஷ்ண அப்ரேகம் ஒரு பங்கும் பளிங்கு அப்பிரேகம் இரண்டு பங்கும் சேர்த்துக் காய்ச்சியெடுத்து அலம்பி எடுத்து உலர்த்தி ஒரு சட்டியில் போட்டு அடுப்பில் ஏற்றி எரிக்கும்போது உலராத கற்றாழையின் வேரை துண்டுகளாக்கி கொஞ்சம் கொஞ்சமாக மேற்படி சட்டியில் போட்டு புரட்டி புரட்டி எடுத்துஒரு ஜாதிவிரகால் 4-சாமம் எரித்து கல்வத்திலிட்டு நாவல்பட்டைச் சாற்றால் அரைத்து 2-வராகபுடம் போடவும். இவ்விதமாக ஆல், அத்தி அரசு, கொடிவேலி இவைகளின் பட்டை கஷாயத்தாலும் எலுமிச்சம்பழம், கௌதும்மை சிவகரந்தை சிறுபெருப்படை, கரிப்பான், முருங்கைப்பூ இலைகளின் சாற்றாலும் தனித்தனியே ஒவ்வொன்றிலும் இரண்டு புடம்போட்டு எடுத்து இரண்டு குன்றிமணி எடைவீதம் அனுபானத்தில் கொடுக்க நீரிழிவு, மது மூத்திரம் க்ஷயம், காசம், மேகம் முதலிய அனேக கடூரரோகங்கள் குணமாகும்.

வீர செந்தூரம்

வீரம் 1-பலம் இதனை எலுமிச்சம் பழச்சாற்றால் ஒரு சாமமும் கோவைகிழங்கு சாற்றில் ஒருசாமமும் கல்வத்திலிட்டு அரைத்து ஒரே வில்லையாகச் செய்து 2 அல்லது 3 எருவில் புடமிட்டு எடுக்க செந்தூரமாயிருக்கும் இதனை எடுத்துப் பத்திரப்படுத்தவும்.

அளவு : தேன், நெய், நோய்க்குத் தக்க அனுபானத்தில் உளுந்து அளவு கொடுக்க வாதநோய் பாரிச வாதம் முழங்கால் வாதம் முதலிய 30-வாதம் குணமாம்

வீர செந்தூரம்

ஒரு பலம் வீரத்தைக்கல்வத்திலிட்டு காட்டா மணக்கின் பால்விட்டு அரைத்து வில்லைதட்டி முன்போல் புடமிட்டு எடுக்க நல்ல செந்தூரமாக முடியும்.

தீரும்நோய் : பாரிசவாதம் முதல் சகலவாத ரோகங்களையும் குணம் செய்யும்.

வீர செந்தூரம்

சுத்தி செய்த வீரத்துக்கும் கந்தகமும் அரப்பொடியும் சமமாய்ச்சேர்த்து எலுமிச்சம் பழச்சாற்றால் அரைத்து கவசமிட்டு உலர்த்தி ஓர் சட்டியில் இரண்டு விரற்கடை மணலைப்போட்டு அதன்மேல் வைத்து மணலால்மூடி இரண்டு ஜாமம் கமலாக்கினியால் எரித்து எடுக்க செந்தூரம் ஆகும் இதனையெடுத்து அரைத்து பாட்டிலிலிடவும்.

உபயோகம் : சூலை 18, வாதம் 80, மற்றும் சர்மசம் பந்தப்பட்ட வியாதிகளுக்கும் மற்றும் ஏனைய ரோகங்களையும் போக்கி குணம் செய்யும்.

அளவு : அரைக்குன்றி எடைதேன், நெய் அல்லது வியாதிக்கு தக்க அனுபானங்களில் கொடுக்க சகல ரோகங்களையும் குணம் செய்யும் வாய்பிடிக்காது.

அயவீர செந்தூரம்

அரப்பொடியை எலுமிச்சம் பழச்சாற்றில் ஒருநாள் ஊரவைத்து மறுநாள் அரைத்து பில்லைத்தட்டி ஓர் வராகபுடம் போட்டு எடுத்து ஒரு சட்டியில் ஒருபலம் வெடியுப்பைப்போட்டு அத்துடன் ஒருபடி சுத்த ஜலம்விட்டு கால்படியாக காய்ச்சி தெளிவை எடுத்து அத்தெளிவை ஜலத்தால் அரைத்து பில்லைகளாக்கி உலர்த்தி ஓட்டிலிட்டு 7-சீலைமண் செய்து குக்குட புடம்போட்டு எடுத்து அத்துடன் வீரத்தின் எடை சுத்திசெய்த லிங்மும் சுத்திசெய்த ரச செந்தூரமுஞ் சேர்த்து சூரணித்து ஒருகுன்றிமணி எடை அனுபானத்தில் கொடுக்க வாதம் 30, காசம்5 மேகவாயு, ஜன்னி, இரைப்பு, பாண்டு, சோகை, பித்தவியாதிகள் குணமாகும் வியாதிக்கு தக்க பத்தியம்.

பூர்ண சந்திரோதய செந்தூரம்

தங்கரேக்கு 10-விராகனிடை மனோசிலை ¼ விராகனிடை தாளகம் ½ விராகனிடை லிங்கம் ½ விராகனிடை ரசசெந்தூரம் ½ விராகனிடை பாலரசம் 2 விராகனிடை.

இவைகளைச் சுத்திசெய்து கல்வத்திலிட்டு எலுமிச்சம் பழச்சாற்றில் செம்பரத்தம் பூக்களைப்போட்டு ஒருநாள் ஊரவைத்து மறுநாள் பிழிந்த சாற்றைச் சேர்த்து 3-நாள் அரைத்து பிறகு பொற்றலை கையாந்தகரைச் சாற்றால் 2நாள் அரைத்து உலர்த்தி காசிகுப்பியில் போட்டு 7 சீலைமண் செய்து ஒரு சட்டியில் மணலைக்கொட்டி அதின் மத்தியில் இதைவைத்து தீபாக்கினியாய் 8-சாமமும் காடாக்கினியால் கிண்டி பார்க்க சலாக்கு முகம் கருப்பு கண்டால் பக்குவமென்று அறிந்து தீயைஅணைத்து அதை ஆறின பிறகு உடைத்து மருந்தை எடுத்து அத்துடன் ஒரு பலத்துக்கு ஒருகழஞ்சி கோரோசனையும் சேர்த்து சூரணித்துப் பணவிடை வீதம் தேனில் கொடுக்க சன்னி 3-தோஷம் 7-சிலேஷ்ம ரோகங்கள் 96 வலிப்பு 6 சுரம்64, காசம்8, மேகம்20, பிரமியங்கள் 20 குணமாகும் கொங்கின் பூ (கருஞ்சுரையின் பூ) சூர்ணத்தில் 3-மண்டலஞ் சாப்பிட்டால்

தேகத்தில் தேஜசு லட்சுமி விலாசம் அறிவுவிலாசம் உண்டாகும் விந்து கட்டும் விந்து ஊறும் இச்சா பத்தியம்.

பஞ்சமுக செந்தூரம்

வீரம் 3-விராகனிடை பூரம் 3-விராகனிடை லிங்கம் 3-தாளகம் 3 விராகனிடை கந்தகம் 3-விராகனிடை.

இவை ஐந்தும் சுத்திசெய்து நாட்டுக்காட்டாமணக்குச் சாற்றால் 2-சாமம் அரைத்து பில்லைத்தட்டி உலர்த்தி ஓட்டிலிட்டு சீலைமண் செய்து 3. 4 எருவில் புடம்போட்டு எடுத்து சூர்ணித்து சுக்கு மிளகு திப்பிலி இம்மூன்றும் இளவறுப்பாய் வருத்து செய்த சூர்ணம் தேன், பசும்வெண்ணெய் கருப்புட்டி இவைகளில் எதுவாகிலும் பணவிடை மருந்தை வைத்துக் கொடுக்க சூலை 18 கருமேகம் வெண்குஷ்டம் சகல மேகங்கள் குன்மம் 8 வாதம் 80 வெடிசூலை குணமாகும்.

இராஜ மண்டூர செந்தூரம்

மண்டூரம் 1-பலம் கந்தகம் 1பலம் ரசம்1-பலம் தாளகம் 1-பலம் நவச்சாரம் 1-பலம் வெடியுப்பு 1-பலம் கௌரிப்பாஷாணம் 1பலம் சீனாக்காரம் 1 பலம். இவ்வெட்டுஞ் சுத்திசெய்து எருக்கம் பாலால் ஒரு சாமம் அரைத்துப் பிறகு எலுமிச்சம் பழச்சாற்றால் 2-சாமம் அரைத்து குக்குடப்புடம் போடவும். இவ்விதமாய் 10 புடம் போட்டு எடுத்து பணவிடை அனுபானத்தில் கொடுக்க பாண்டு சோகை, காமாலை முதலி யவைகள் குணமாகும்.

இராஜ கருவங்க செந்தூரம்

கருவங்கம் பவளம், கர்ப்பூர சலாசத்து, இவையாவும் வகைக்கு 2-பலம்.

இவைகளை சுத்திசெய்து எலுமிச்சம் பழச்சாற்றால் 4 சாமம் அரைத்து பில்லைத்தட்டி ஓட்டிலிட்டு சீலை மண்செய்து

50 எருவில் புடம்போட்டு எடுத்து அதற்கு கால்பங்கு நெல்லி காய் கந்தகத்தைச் சேர்த்து பொற்றலைக்கையான் தகரைச் சாற்றால் 4சாமம் அரைத்து 2-புடம் 50 எருவில் போட்டு எடுத்து ணவெடை வீதம் அனுபானத்தில் கொடுக்க கழிச்சல், சீதபேதி. த்தபேதி, ஆண்குறி எரிவு, லிங்கபுற்று சகலமேகங்கள், ர்ப்பமேகம், மேகஊறல், படைகுணமாகும் வியாதிகளுக்கு க்கபடி பத்தியமாம்.

நாக செந்தூரம்

சுத்தி செய்த நாகம் 1 பலம் உருக்கி உருக்குவாயில் 1 லம் மனோசிலை கொடுத்து வெள்ளை கொழுஞ்சி வேறால் ண்ட பஸ்பமாகும் அதை எலுமிச்சம் பழச்சாற்றால் அரைத்து வராகப் புடம்போட்டு அத்துடன் சுத்திசெய்த ரசம் ½ பலம், சேர்த்து பொற்றலை கையான் தகரைச் சாற்றால் அரைத்து 2, 3 க்குடப் புடம்போட செந்தூரமாகும் ஒருகுன்றி மணியிடை னுபானத்திலிட மூலம், குன்மம் இசிவு இழுப்பு முதலிய லமான வியாதிகள் குணமாகும்.

பஞ்சாக்ஷரி செந்தூரம்

தங்கப்பொடி 1விராகனிடை, வெள்ளிப்பொடி, 8 ராகனிடை காந்தப்பொடி 8 விராகனிடை பாலரசம் 40 ராகனிடை.

இவைகளை சுத்திசெய்து எலுமிச்சம் பழச்சாற்றால் அரைத்து பில்லைத்தட்டி ஓட்டிலிட்டு சீலைமண் செய்து புடம்போட செந்தூரமாகும். ஒருகுன்றிமணி எடை னுபாத்திலிட க்ஷயம்-5 ஈளை, சிலேத்ம ரோகங்கள்-96 க்கட்டு, சதைஅடைப்பு, கிரந்தி பிரமியங்கள் 20, வெட்டை ண்குறி சதைதின்னுதல் முதலிய அனேக கடூரரோகங்கள் ணமாகும்.

சட்ரச செந்தூரம்

வெள்ளைப்பாஷாணம் 1விராகனிடை. வீரம் 2 விராகனிடை. லிங்கம்3 விராகனிடை இரசசெந்தூரம் 4விராகனிடை பூரம் 5-விராகனிடை. ரசம் 6 விராகனிடை.

இவைகளை சுத்தி செய்து வைத்துக்கொள்க சத்தி செய்த நெல்லிக்காய் கெந்தகம் விராகனிடை 10 உருக்கி கல்வத்தில் இட்டு அத்துடன் மேற்படி ரசம் மாத்திரம் சேர்த்து அரைத்துபிறகு மற்றவைகளையும் சேர்த்து நாட்டுக் காட்டாமணக்கு பாலால் ஒருநாள் அரைத்து பில்லைத்தட்டி ஓட்டிலிட்டு சீலைமண் செய்து ஒரு குக்குடப்புடம் சிறுபுடம் போட்டு எடுத்து அனுபானத்தில் கொடுக்க சுரம், க்ஷயம், காசம், சன்னி, மூர்ச்சை, அதிசாரம், பவுத்திரம், குஷ்டம், அண்டவாதம், குன்மம், மேகம், சூலை, கிரந்தி பீலிகம் வலிப்பு, வாதம், அபஸ்மாரம், குய்யரோகங்கள், ஆண்குறி ரோகங்கள் முதலிய அனேக பலத்த வியாதிகள் குணமாகும்.

கல்லுப்பு செந்தூரம்

கல்லுப்பை அழுக்கு போக அலம்பி உலர்த்தி கொள்க ஒருபடி கல்லுப்பொடி செய்து ஒரு சட்டியில் போட்டு ஆடுனப் பாளைச்சாறு கொஞ்சஞ் கொஞ்மாய் அரைப்படி சாறு விடவும். இப்படி விடும்போது திராவிக் கொடுக்க கொடுக்க உப்பு கருப்பாய்போகும் அதை எடுத்து ஷெ சாற்றால் அரைத்து பில்லைத்தட்டி உலர்த்தி ஓட்டிலிட்டு சீலைமண் செய்து 8-எருவில் புடம் போடவும் இவ்விதமாக செந்தூரம் சிகப்புநிறம் வரும்வரையில் அதாவது 8-வது புடத்தில் சிவப்பாகும் ஒவ்வொரு புடத்திலும் எரு குறைத்துக் கொண்டே வரவேண்டும். இந்த செந்தூரத்தில் பணஎடை எடுத்து தக்க அனுபானத்திலி. குன்மம்-8. வயிற்று வலி. சூதகவயிற்றுவலி. இருமல். காசம். க்ஷயம் முதலிய ரோகங்கள் குணமாகும்.

தாளக செந்தூரம்

சுத்திசெய்த தாளகத்தை ஒரு புதுசட்டியில் போட்டு அடுப்பின் மேல் வைத்து எரிக்கவும். எரிக்கும் பொழுது முள் முருங்கை (கல்யாண முருங்கை)யின் கழியால் செந்தூரமாகும் வரையில் கிளரிக் கொடுக்கவும். ஒரு குன்றி மணிஎடை எடுத்து அனுபானத்திலிட மேகம், வெட்டை, பிறமேகம் ரத்தபித்தம் சுரம் காசம் கபரோகங்கள் க்ஷயம் முதலிய வியாதிகள் குணமாகும்.

தாம்பர செந்தூரம்

ஆடு தின்னாவேரும். வெண்ணொச்சிவேரு. சமமாய் சேர்த்து இடித்து தூள் செய்து வஸ்திரகாயஞ் செய்து கல்வத்திலி ட்டு குக்கில் பாலால் (குக்கிலை ஜலத்திலிட்டு தடிப்பாய் கரைத்து கொள்வதுதான் பால் என்பது) அரைத்து சுத்தம் செய்த தாமரத்தகடுகளுக்கு மேலும்கீழும் தடவி ஓட்டிலிட்டு ஓட்டால் மூடி சீலைமண் செய்து கஜபுடம் போட செந்தூரமாகும். அரை குன்றிமணி எடைதேனில் கொடுக்க வாதம்-80. சன்னி-13. குன்மம்-8. மேகம்-20 முதலிய அனேக கடுரரோகங்கள் குணமாகும்.

ரசவீர நாக செந்தூரம்

1 பலம் சுத்திசெய்த நாகத்தை குகையிலிட்டு உருக்கி உருகி வருகையில் ஒரு பலம் மனோசிலை கொடுத்து வெண் கொழுஞ்சி வேரால் கிண்டவே நீற்றிப்போகும் இதை கல்வத்தில் இட்டு ஒரு பலம் சுத்தி செய்த வீரமும் அத்துடன் சேர்த்து முலைப்பாலால் அரைத்து 3 நாள் பனியில் வைத்து பிறகு இடைக்கு இரட்டிப்பு சுத்தி செய்த நெல்லிக்காய் கந்தகஞ் சேர்த்து பொற்றலை கையான் தகரை சாற்றாலரைத்து பில்லை செய்து உலர்த்தி ஓட்டிலிட்டு சீலைமண் செய்து குக்குடபுடம் போட செந்தூரமாகும். சிகப்பு வர்ணம் வரும் வரையில் புடங்கள் போடவும் இந்த செந்தூரத்தில் குன்றிமணியிடைபன வெல்லத்தில் வைத்து கொடுக்க சகல மூல ரோகங்கள் குணமாகும். கௌரி

செங்கரச் சூரணத்தில் கொடுக்க சகல வ்யிற்றில் எரிவு கண்டு சிறு நீர்க்கட்டி தேரைப்போல் இளைத்த ரோகங்களுக்கும் மூலத்தில் எடுத்த சகல ரோகங்களுக்கும் கொடுக்கலாம்.

பத்தியம் :- பெண். புளி. தாம்பூலம் ஆகாது

விஷம் தீர மாத்திரை

வெள்ளெருக்கு மொட்டு கற்பூர வெற்றிலை. மிளகு இவையாவும் வகைக்கு 2 பலம்.

வெள்ளெருக்கன் பாலிலிட்டு அரைத்து மாத்திரை மிளகு அளவுக்கு கொஞ்சம் பெரிதாக உருட்டி உலர்த்தி பதனப்படுத்தவும் சகல விஷகடிகளுக்கும் உள்ளுக்கு கொடுக்கலாம்.

சித்திரமூலக் குளிகை

சரக்கு :- சித்திரமூலவேர் பட்டைச் சூரணம் சுத்தி செய்த ரஸகற்பூரம் ஓமச்சூரணம் இவைகள் வகைக்கு 1½ பனைவெல்லம் விராகனிடை 4.

செய்முறை :- முதல் மூன்று சூர்ணங்களையும் கல்வத்தில் போட்டு 1 மணிநேரம் அரைத்து பிறகு பனைவெல்லத்தையும் சேர்த்து 6-மணி நேரம் அறைத்து மிளகு பிரமாணம் மாத்திரைகள் செய்து வைத்துக் கொள்ளவும்.

பிரமாணம் :- மாத்திரை 1 முதல் 2 வரையில்

அனுபானம் :- சீனிச்சர்க்கரை வெண்ணை சுக்கு விழுது 10 நாள் உபயோகித்தால் பற்பல ரணங்கள். கிரந்தி ரோகங்கள் யோனி புற்று சூலைகள். கள்ளிப்பூ கிரந்தி லிங்கப்புற்று பகந்தரரோகங்கள். கன்னப்பிளவை மார்சிலந்தி விரக்தி மேகரணங்கள் அஷ்டகுன்ம ரோகங்களும் தீரும்.

பத்தியம் :- புளி நீக்கி உப்பை வறுத்துச்சேர்க்கவும் புகை பெண் இவைகளை நீக்க வேண்டியது வியாதி பலம். தேகபலம் இவைகளுக்கு தகுந்த பத்தியமும் வைக்க வேண்டும்

வனைந்து - 30g எனில் இதன்தோசணை 10g
சேர்க்கவும்

குறிப்பு : இது அதிக உப்யோகமான மருந்தானாலும் சிலசுகுமார தேகிகளுக்கு அதிகம் உபயோகப்படாது. ஆகையால் மருந்துடன் கோரோசனை 1/2 விராகனிடை சேர்த்து செய்து கொண்டால் எல்லாதேகிகளுக்கும் உபயோகப்படும்.

லிங்கசெந்தூரம்

சரக்கு : மூக்கு வெட்டி சேங்கொட்டை உலர்ந்த லிங்கம் இவையாவும் வகைக்கு 1/2 சேர். நல்லெண்ணை புங்கெண்ணை வேப்பெண்ணை விளக்கெண்ணை இவையாவும் வகைக்கு 1/2 படி.

செய்பாகம் : இவ்வைந்து எண்ணையும் ஒன்று சேர்த்து ஒருபெரிய இரும்பு சட்டியிலிட்டு அதில் ஷெ லிங்ககட்டியையும் சேங்கொட்டையும் வைத்து தீமூட்டி கமலாக்கினியாக எரியும் பொழுது தீபிடிக்காமல் ஜாக்கிரதையாக எரிக்க வேண்டும் ஒரேநாளில் எரித்துவிடக் கூடாது. இப்படியாக தினம் சிலமணி நேரம் எரித்து நிறுத்திவிட்டு மறுநாள் சிறிது இப்படியாக 20-நாள் வரையில் எரித்து எண்ணையாவும் சுண்டியபின் எடுத்து அதற்குத் தேங்காய் அளவுக்கு சீயக்காயை அரைத்து தண்ணீரில் கரைத்து அதில் லிங்ககட்டியை போட்டு எரிக்க வேண்டும். 24-மணிநேரம் அனலில் வைக்கவேண்டும். மறுநாள் எடுத்து நன்றாய் கழுவி எண்ணை இல்லாமல் சுத்திசெய்து உலர்த்தி நன்றாய் அரைத்து வைத்துக்கொண்டு எவ்விதமான வாயுரோகங்களுக்கும் சுரம். ஜன்னி. உடம்பு கைகால் வலி. சூலை குத்தல் குடைச்சல் பக்ஷவாதம் முகவாதம் நடுக்குவாதம் சகலவித சுரரோகங்கள் வாதநோய்-80 குணம் செய்யும் இது நல்ல அனுபவ முறையாகும்.

குறிப்பு :- மேற்படி முறைப்படி லிங்கத்துக்குப் பதிலாக பூரத்தையும் எரிக்கலாம். அல்லது இத்துடன் சேர்த்தும் எரிக்கலாம்.

அபின் செந்தூரம்

அபின் அதிவிடயம் கர் கடகசிங்கி வெங்காரம் சீனிக்காரம் இவையாவும் வகைக்கு 1-விராகனிடை.

செய்முறை : அபின் தவிறமற்ற சரக்குகளை பொடித்துச் சூரணம் செய்து ஒரு சட்டியில் பாதியைக் கொட்டி மத்தியில் அபினை வைத்து மேலும் மேற்படி தூளைப் போட்டு அடுப்பிலிட்டு எரிக்க அபின் இளகிவரும் பருவம் பார்த்து எடுத்து அரைத்துப் பாட்டலிலிடவும்.

உபயோகம் அளவு : குன்றிஅளவு தேனில் கொடுக்க சீதபேதி அதிசாரபேதி வயிற்றுவலி ரத்தபேதி நீங்கும் இது அனுபவத்தில் சிறந்த முறையாக அறியப்பட்டது.

சுவர்ண எஃகு செந்தூரம்

சுத்திசெய்த எஃகு பலம்1 தங்கரேக் 2½ விராகனிடை

கார்த்திகை கிழங்குசார் (வெண் நாபியின் கிழங்கு சார்) சிறுகச்சிறுகவிட்டு 4-சாமம் அரைத்து உலர்த்தி ஓட்டிலிட்டு சீலைசெய்து உலர்த்தி கவசத்துக்கு 7 பங்கெடை விரட்டியில் புடமிட்டு எடுத்து முன்போல அரைத்துபுடம் இவ்விதம்மடக்கி மடக்கி 21 தடவை புடம்போட்டால் குங்குமம் போல் சிவந்த நிறத்தோடு செந்தூரமாக இருக்கும். இதனையெடுத்து பதனப்படுத்தவும்.

செந்தூரம் அளவு : 1. 2 அரிசிஎடை எடுத்து தேன்பாலோடு அல்வா இவைகளில் ½ அல்லது ஒருமண்டலம் சாப்பிட நரை திரைமாறும் தேகம் கற்பசரீரமாகும். இளைத்ததேக புஷ்டிஏற்படும் உதிரத்தில் உள்ள தோஷங்கள் நீக்கி ரத்த சுத்தியால் தேகம்பலம் தந்து புஷ்டியுண்டாக்கும். மற்றும் பாண்டு சோகை காமாலை அசதிக்ஷயம் ரத்தம் கக்கல் மூளைதுர்பலம் முதலிய வியாதிகள் நீங்கும்.

இம்முறை கையாண்டு நல்ல புகழ்பெற்றதாகும். இதனை அவசியம் செய்யவும்.

குறிப்பு : மேற்படி எஃகுக்கு கொட்டு உரி சிரல்களை உபயோகப்படுத்தலாம்.

அயத்தங்க செந்தூரம்

சரக்கு : கெந்தகம் 1-பலம் நாட்டு இரும்புத்தூள் 5-பலம் சுத்திசெய்த ரசம் 6-விராகனிடை தங்கப்பொடி (ரேக்கு) 1-விராகனிடை வெள்ளைப்பாஷாணம் ¼ விராகனிடை.

செய்முறை : இவையாவையும் கல்வத்திலிட்டு எலுமிச்சம் பழச்சாறுவிட்டு சுமார் 4-சாமம் அரைத்து பட்டாணிபோல் மாத்திரைகளாகச் செய்து நிழலில் உலர்த்தி காசிகுப்பியிலிட்டு கல்கார்க் மூடி தளசட்டியிலிட்டு மணல் 2-விரல்கடை மணல்பரப்பி அதன்மேல் புட்டியை வைத்து பின்புட்டியின் கழுத்தளவு மண்கொட்டி கமலம்போல் 4-சாமம் எரிக்கவும் பின் ஆறியபின் எடுத்து வைக்கவும்.

குறிப்பு : மாத்திரைகள் கருத்த நிறமாகயிருந்தால் ஓட்டிலிட்டு வருக்க செந்தூர நிறமாகும். இம்மருந்தை பரிக்ஷிக்க வேண்டில் காடி தண்ணீரில் ஒருபணவெடை மருந்தைப்போட காடி கட்டிவிடும்.

இம்மருந்தை மூதண்ட லேகியத்தில் மண்டலம் கொள்ள தளர்ந்த நரம்புகள் இறுகிதேகம் வலிவு பெறும். மற்றும். வாய்கோணல். முகவாதம். பட்சவாதம். 21-மேக ரோகங்கள் இவையாவும் குணமாகும். பின்நாக்கு குளரல். ஆண்குறி துவளல் குணமாகும் நீண்டு வலிவுபெறும்.

மன்மத லோக செந்தூரம்

சுத்திசெய்த அயப்பொடி சுத்திசெய்த செம்மண் நாகம். இவையாவும் வகைக்கு 4-பலம்.

கைவிடாமல் இவ்விரண்டையும் கல்வத்திலிட்டு 2-சாமம் அரைத்து எடுத்து ஓட்டிலிட்டு சீலைமண் செய்து 2-அடி சதுரபுடமிடவும். மறுபடியும் பூநாகம் சேர்த்து முன்போல் அரைத்து புடம் இவ்வாறு 16-தடவை புடமிட்டு 17-ம் தடவை பூநாகம் சேர்க்காமல் புளிப்பு மாதுளம் பழச்சார்விட்டு அரைத்து சிறு சிறு பில்லைகளாக செய்துளர்த்தி முன்போல் புடமிட்டு எடுக்கவும். இதில் தாமிரத்துக்குத் தகுந்தபடி செந்தூரமானது 5-அல்லது 6-பலம் வரை இருக்கும்.

இதன் குணம் : இந்த செந்தூரத்தில் 1-அரிசியெடை தேனிலாவது. நெய்யிலாவது சாப்பிட்டுவர தேகத்தில் நல்லரத்தம் விருத்தியாகி நரம்பு முறுக்கேறி தேகவன்மை ஆண்மைசக்தி விர்த்தி செய்து கொமார திசையுண்டாகும். இதை வருடத்தில் 1 தடவை சாப்பிட்டு வந்தால் தேகம் வஜ்ஜிர சரீரமுண்டாம்.

வீர செந்தூரம்

வீரம். கெந்தகம். லிங்கம். அயம். இவையாவையும் வகைக்கு 1-பலம்.

மேற்கூறப்பட்ட நான்கு சரக்குகளையும் அடியிற் கூறப்பட்டபடி சுத்திசெய்து முடித்து கல்வத்திலிட்டு இளநீர் சிறிது சிறிதாக விட்டு குழம்புபதம் காண அரைத்து எடுத்துஒரு இரும்புக் கரண்டி அல்லது இரும்பு சட்டியிலிட்டு எரித்து கிண்டிவர சிறிது கெட்டிபதமாக வந்ததும் எடுத்து கல்வத்திலி ட்டு நன்றாக அரைத்து ரவியில் உலர்த்தி பின்பாட்டிலில் போட்டு வைக்கவும். இதன் நிறம்கருமையாக இருக்கும் 10-நாட்கள் சென்றபின் பார்க்க சிவப்பு நிறமுடைய செந்தூரவர்ணமாய் தோன்றும். இதை மருந்தில் சேரும் சரக்குகளின் சுத்தி கிறமங்களாவது : வீரத்தின் சுத்தி சுண்ணநீரில் மேற்படி வீரத்தைப் போட்டு வைத்து 24-மணி நேரம் சென்றபிறகு எடுத்துக்கொள்ளவும்.

செய்பாகம் : ஒரு இரும்பு கரண்டியில் நெய்யை விட்டு அதில் கெந்தகத்தைப் போட்டு உருக்கி எடுக்கவும் இதுபோல் 3-தடவை செய்யவேண்டியது.

லிங்கசுத்தி : தாய்பாலில் 1-நாள் போட்டு எடுக்க சுத்தியாகும்.

அயம் : தனி அயசெந்தூரமிருந்தால் சேர்த்துக் கொள்வது சிலாக்கியம் இல்லாவிட்டால் எலுமிச்சம் பழச்சாற்றில் ஊரவைத்துக் கல்வத்திலிட்டு அரைத்து எடுத்து அயசட்டியில் நல்லெண்ணை விட்டு வறுத்தெடுத்து அரைத்துக் கொள்ளலாம். இங்கனம் சுத்திசெய்து முடித்தமருந்த உபயோகிக்கும் விதமாவது.

இந்த வீரசெந்தூரம் சகலவித சுரரோகங்களுக்கும் கொடுக்கலாம். நிமோனியா எனும் கபவாத ஜுரத்திற்கு இன்றியமையாத மருந்தாகும். மற்றும் காலராவுக்கும் மிக பிரதானமானதாகும். ஒருவேளை மருந்தில் பேதியாவதை நிறுத்தும் சிறுநீரை வெளியாக்கிவிடும்: மற்றும் ஜன்னி சயித்தியத்துக்கு இதுபோல் மருந்தை பார்த்ததில்லை. வெகு சீக்கிரத்தில் சரீரத்தில் உஷ்ணத்தை உண்டாக்கி விடக்கூடியதாகும் மற்றும் கபவாத ஜுரம் வந்து 7-ம்நாள் அல்லது 9-ம்நாள் வியாதியஸ்தருக்கு ஒருகண்டமான தினமாகும் ஜுரம் இல்லை என்று ஏதேனும் ஆகாத உணவு அருந்தினாலும் அருந்தாவிட்டாலும் ஓர்விதசங்கடத்தைதரும் தினமாகையால் இம்மருந்தை கையாள்வதால் குணமுண்டாகும்.

ரச செந்தூரம்

சுத்திசெய்த ரசம் ஒருபலம் எடுத்துக் கல்வத்திலிட்டு தில்லைமரத்துப் பால் செல்லத்தக்க அளவுவிட்டு அரைத்து வில்லைதட்டி உலர்த்தி சட்டியிலிட்டு மேல்சட்டிமூடி சீலைசெய்து உலர்த்தி அடுப்பில் வைத்து சுமார் 1½ அல்லது 2-மணி நேரம் எரித்து சட்டி ஆறியபின் சீலையை பிரித்துப் பார்க்க வில்லை கருப்பாக இருக்கும். இதனை கல்வத்திலிட்டு அரைக்க அசல் மஞ்சள் குங்கும நிறத்திற்கு ஒத்திருக்கும். இதனை எடுத்து பத்திரப்படுத்தவும்.

உபயோகம் : சகல நோய்களுக்கும் உபயோகிக்கலாம்.

காந்தச் செந்தூரம்

காந்தம் ரசம் அரப்பொடி கெந்தகம் இவையாவையும் வகைக்கு 1-பலம்.

இவை நான்கும்குமரிச்சார் விட்டு நன்றாக அரைத்து சேவல் புடமிட்டு எடுக்க நல்ல நிறமுடைய செந்தூரமாக முடியும்.

அனுபானம் : திரிகடுகு தேனில் சாப்பிட வாய்வு தீரும் சன்னிக்கு உள்ளிச்சாற்றில் சாப்பிட சன்னி ரோகம்நீங்கும். பிரமேகத்துக்கு மருதோன்றிசாற்றில் சாப்பிடத்தீரும். எரிகுன்மரோகத்துக்கு சீந்தில்கிஷாயத்தில் சாப்பிட பிரமேகம் குணமாகும் வாதநோய்க்கு நொச்சி சாற்றிலும் பெருங்காயத்திலும் ஈளை. இருமலுக்கு ஆடாதோடைச்சாற்றில் கொடுக்கவும் வியாதி குணமாகும்.

மகா காடிக்கார செந்தூரம்

இரண்டு பலம் காடிக்காரத்தை பனிதாங்கி பூண்டுச்சாறுவிட்டு 2-மணிநேரம் அரைத்து பில்லைதட்டி காயவைத்துக் கொள்ளவும். குத்துக்காரஞ்சம் உலர்த்தி பட்டுசமூலம் 12-சேர் நிறுத்து ஒரு பாண்டத்தில் போட்டு மேல்ஒரு ஓட்டால்மூடி சீலைமண்செய்து 30 எருவில் புடம் போட்டெடுத்த சாம்பலை ஒரு அகலில் போட்டு அமுக்கி அதன்மேல் ஷை பில்லைகளை வைத்து அதன்மேல் சாம்பலைபோட்டு அமுக்கி அகலால் மூடி சீலைமண் செய்து 10-எருவில் புடம் போட்டெடுத்து இத்துடன் ரச செந்தூரம் கால்பாகம் சேர்த்து அரைத்துக் கொள்ளவும், இதனில் 1/2 குன்றிமணி எடையெடுத்து சீனி சர்க்கரையில் அனுபானித்து வைத்து சாப்பிட கால்வீக்கம் பீஜவீக்கம். வாயுசுரம் முதலிய அனேக வியாதிகள் குணமாகும்

பத்தியம் : புளி தள்ளவும்

சண்டமாருத செந்தூரம்

வீரம் கெந்தகம் வகைக்கு பலம-2. பூரம் 4-பலம். லிங்கம் 8-பலம் இவைகளை சுத்திசெய்து வெள்ளைக் கருவால் 2 ஜாமம் அரைத்து பில்லைத்தட்டி உலர்த்தி ஓர் கலயத்தில் ஒருபடி ஜலமிட்டு அதில் ஷை வில்லைகளை போட்டு ஜலம் வற்றும் வரையில் காய்ச்சி பிறகு பில்லைகளை எடுத்து சூர்ணித்து அரையரை ஒருகுன்றி மணிஎடை பனைவெல்லத்தில் கொடுக்க ஜன்னி-13. குன்மம்-8. வாதம்-80. பக்கவாதம். கண்டமாலை பவுத்திரம் தீரும். கொடிவேலி வேர்ப்பட்டை குங்குமப்பூவும் சமமாய் சேர்த்து முலைப்பாலால் அரைத்து அதில் உதிர சிக்கல் தீரும். வெள்ளைபூண்டு தயிலமும் வெற்றிலைச்சாறும் கோழிமுட்டைத் தயிலமும் தேனும் சேர்த்து அதில் 3-தடவை கொடுக்க குழந்தைகளில் கட்டுமாந்தம். வலிப்பு. வாதனச்சுரம். குளிர்ச்சுரம். சன்னிமுதல் வலிப்பு முதலியவைகள் குணமாகும்.

காந்த செந்தூரம்

8-பலம் சுத்திசெய்த காந்தத்தை ஒருசிறு துணியில் முடித்து நாவல்பட்டைச்சாற்றில் 3-நாள் ஊரவைத்து பிறகு அந்தசாற்றிலேயே போட்டு ஒருஜாமம் எரித்து எடுத்து மேற்படி சாற்றால் ஒருசாமம் அரைத்து பில்லைத்தட்டி ஓட்டிலிட்டு சீலைமண்செய்து வராகபுடம் போடவும்.

இவ்விதமாக 3 புடம்போட செந்தூரமாகும். இதை அனுபானத்திலிட அயச்செந்தூரத்தில் சொல்லிய வியாதிகள் குணமாகும்.

சடாக்ஷர செந்தூரம்

ரசம். கெந்தகம். அரப்பொடி. வெண்காரம். சிங்கி இவ்வாறு வகைக்கு 16-கற்றாழைச்சாற்றால் அரைத்து உலர்த்தி பொடித்து கடும்வெய்யலில் ஒரு நாள் வைத்து அதைமறுபடியும் ஷை சாற்றால் அரைத்து முன்போல் மூன்றுமுறை வைக்க செந்தூரமாகும்.

சுக்கு மிளகு திப்பில் இம்மூன்றும் சமமாகச் சேர்த்து சூரணித்தபொடி விராகனிடை1. செந்தூரம் குன்றிமணி 1. தேன் கொஞ்சம் சேர்த்து தினம் 2-தடவை ஒருமாதம் கொடுக்க ஜன்னி. மொழிசூலை. வலிப்பு 5. கிரந்தி. அரையாப்பு. நெஞ்சடைப்பு கௌசி முகவாதம் மூர்ச்சை பித்தம் சிலேத்மம் தீரும்.

நவகுன்ம நவநீத செந்தூரம்

(குன்ம வயிற்றுவலி நாள்பட்ட சூதககட்டி தீரும்)

நவ உப்பு மருந்து

சரக்கு : வெடியுப்பு. வலையலுப்பு. பாறையுப்பு. வெளுத்துவுட்டுப்பு. கல்லுப்பு. அமுரி உப்பு. உவருப்பு வகைக்கு 1-தோலா. வரிகும்மட்டி பழச்சார் 1-படி பசும்பால் அரைபடி.

செய்பாகம் : தூள் செய்து பால் சார்வகையோடு சேர்த்துக் கரைத்து நீர்சுண்ட எரித்து எடுத்து அதில் வீரம். பூரம். ரசம். காந்தகம் கந்தகம் வகைக்கு ½ பலம். வாளம். 1-தோலா சுக்கு திப்பில் மிளகு வகைக்கு பலம் ¼ இவையாவும் தூள்செய்து உப்பில் சேர்த்து கல்வத்திலிட்டு அரைத்து அதில் எலுமிச்சம் பழச்சார் பின் திருபலை கிஷாயம் இவைகள் விட்டு அரைத்து மெழுகு பதத்தில் எடுத்துப் பதனப்படுத்துக.

தீரும் நோய்கள் : நவகுன்மம் நாள்பட்ட சூதகக்கட்டி கவுசை. கிரந்தி. சூலை. பீடிப்பு. நமச்சல். வயிற்றுவலி. வாதசூலை. பாம்புகடி விஷங்கள் 20. 30 வருஷம் உள்ளசக்தி குன்மம் குணமாகும். சூதக வயிற்றுவலி விஷதடிப்பு குழந்தைக்கட்டி தீரும்.

பஞ்சலவண மெழுகு

(கிரகணி குத்தல் குடைச்சல் சூலை வாதம் குன்மம் தீரும்)

வெடியுப்பு இந்துப்புகல்லுப்பு வளையலுப்பு கரியுப்பு இவையாவையும் வகைக்கு 1-பலம்.

செய்பாகம் : இவைகளை கல்வத்திலிட்டு பிரண்டைச்சாறு முருங்கைபட்டைச்சாறு. குப்பைமேனிச்சாறு. கற்றாழைச்சாறு

இவைகளால் தனித்தனியே நெகிழ அரைத்து ஒரேவில்லையாக தட்டி ரவியில் உலர்த்தி காய்ந்தபின் மேல்மூடி சீலைமண் செய்து 10-விறாட்டியில் புடமிடுக

இது சிலசமயம் உருகியும் உருகாமலும் சிவந்தும் இருக்கும். இதனை கல்வத்திலிட்டு அரைத்து இதன் எடைக்கு நான்கில் ஒரு பங்குபெருங்காயம் சேர்த்து தேன்விட்டு மெழுகுபதம் வரஅரைத்து எடுத்து பதனப்படுத்தவும் தினம் இருவேளை ¼ அல்லது காலே அரைக்கால் கழஞ்சு வீதம் சாப்பிட சூலை 26 கிரகணி 6. குன்மம் 8. வாதம் 80. குத்தல் குடைச்சல் முதலிய வாதம் தீரும்.

பத்தியம் : பிணிக்கேற்றபடி நடந்துகொள்க.

வீரமெழுகு

(வெளி உபயோகத்திற்கு குதிங்கால் வாதவலி தீரும்)

வீரம் 1 தோலா எடை நிறுத்தெடுத்து கல்வத்திலிட்டு அரைத்து தூள்செய்து வைத்து பின் தேன்மெழுகு 1பலம் நிறுத்தெடுத்து ஒருஇரும்பு கரண்டியிலாவது ஒரு மண் சட்டியிலாவது மேற்படி மெழுகை போட்டு கரி அடுப்பில் வைத்து எரியவிடவும் மெழுகு நன்றாக உருகினசமயம் தூள் செய்துள்ள வீரப்பொடியைப் போட்டு புகையாவண்ணம் கிண்டி சிறிது தேங்காய் எண்ணை சேர்த்து கிண்டிகீழ் இறக்கி சிமளில் பதனப்படுத்துக.

உபயோகம் : குதிக்காலில் தாங்க முடியாத வலி ஏற்படுவதற்கு இதனை பூசி தேய்த்துவர வலிநிற்கும். குத்தல் நிற்கும் கால் ஊன்றி நடக்க ஏதுவாகும்.

சர்பராஜ மைன மெழுகு

(பாம்புகடி விஷங்கள் குணமாகும்)

துருசு. ரசம். மணிபுங்கன் காயின்மேல் தோல். வகைக்கு தோலா-1 சுத்தித்தவாளம் தோலா-3 இவைகளை கல்வத்திலிட்டு

4-சாமம் அரைத்துப் பின் இரும்பு வாணாலியிலிட்டு நெருப்பு அனலில் வைத்துக் காந்தாமல் கருகாமல் எடுத்து கொம்பு சிமிளில் பத்திரப்படுத்துக. தேக திடத்திற்குத் தக்கவாறு மிளகு குன்றி பிரமாணம் பனவெல்லத்தில் கொடுக்கவும். ஒரு வேளைக்கு மேல் தேவையிராது பிராணன் நீங்கி விட்டதாக கூறினாலுஞ்சரி பிரம்பால் பலமாய் அடித்து தோல் தடிப்பெழும்பில் உச்சியைக்கீறி இந்த மெழுகில் குன்றி அளவு எடுத்துச் தேய்க்க சிறிது நேரத்தில் சுவாச முண்டாகும். உடனே கடுகு அளவு மெழுகை முலைப்பாலில் மத்தித்து கண்களுக்கு கலிகம் தீட்டவும். பின்குன்றி அளவுமெழுகை உள்ளுக்கு கொடுக்கவும்.

பத்திபம் : உப்பில்லாத கஞ்சி சிறுஅளவு கொடுக்க நித்திரை செய்யவிடக்கூடாது மறுநாள் தயிர்சாதம் உப்பு கூட்டலாம் இதற்கு சன்மானம் பெறக்கூடாது.

இலிங்க மெழுகு

(இளம்பிள்ளை வாதம். முகவாதம். பாரிசவாதம் தீரும்)

ஒரு பச்சைத் தவக்களையைக் கொண்டுவந்து வாய் வழியாக அரை அல்லது 1-பலம் லிங்கத்தை செலுத்தி வாயை தைத்துவிட்டு ஒரு இரும்பு கடாயில் போட்டு மூழ்கப்பசுவின் நெய்விட்டு அடுப்பில் வைத்துச் சிறுக எரித்து நெய்எல்லாம் சுண்டித்தவளை நன்றாய் வெந்து கருகின சமயம் தவளையை எடுத்து உள்ளிட்ட லிங்கத்தை எடுத்து நன்றாய் துடைத்து சுத்தம் செய்து கல்வத்தில் போட்டு தேன்துளித் துளியாக விட்டு மெழுகு பதத்திலியே அரைத்து வழித்துச் சீசாவில் பத்திரப்படுத்துக.

பிரயோகம் : வேளைக்குக் குன்றி அளவு தினம் இரண்டு வேளை வெல்லத்தில் வைத்து 5-நாள் கொடுக்கவும்.

தீரும் வியாதி : பாரிசவாதம் முகவாதம் குழந்தைகளுக்கு வரும் இளம்பிள்ளை வாதம் குணமாகும்.

பத்தியம் : புளி தள்ளி இச்சாபத்தியம்.

அய் மெழுகு

(ரத்த விர்த்தியாகும். தாதுபலம் உண்டாகும்)

அயப்பொடியை நல்லெண்ணை விட்டு வருத்து சீகைக்காயைக் கொதி ஜலம்விட்டு நன்றாய் அலம்பி எடுத்த அயத்தூள் பலம்-1 இதனை ஒரு பீங்கானிலிட்டு அது முழுகும் வண்ணம் புளிப்பு மாதுளம் பழரசத்தைவிட்டு ரவியில் வைத்துக் கொண்டுவர அயம் கரைந்து வரும் கரைந்ததை கல்வத்திலிட்டு லவங்கப்பட்டை. ஜாதிக்காய். ஜாதிபத்திரீ. ஏலம் கசகசா கிராம்பு திப்பிலி சுக்கு வகைக்கு ஒருபலம் சூரணம் சேர்த்துப் புளிப்பு மாதுளம் பழச்சாற்றினால் 2. 3 நாள் அரைத்து பதனம் செய்க.

இதனை வேளைக்கு குன்றி அளவாக தினம் 2-வேளை சாப்பிட்டுவர தாதுவிர்த்தியும் இரத்த பெருக்கமும் உண்டாகும்.

பத்தியம் : புளி நீக்கி மற்றவைகளை சேர்த்துக் கொள்ளலாம்.

கெந்தக மெழுகு

(கண்டமாலை யோனிபுற்று சொறி சிரங்கு மேகரோகம் தீரும்)

நெல்லிக்காய். கெந்தகம் பலம்4-எடை செய்து ஒரு மண் சட்டியில் வைத்து சிறுதீயாக எரித்துவரும் சமயம் முந்திரிப்பழச் சாற்றால் சுருக்கு கொடுத்து வந்தால் கந்தகம். மெழுகாகும். இதனையெடுத்து ஒருவாயகன்ற ஜாடியில் பதனப்படுத்தவும்.

உபயோகம் : இந்தமெழுகில் சுண்டைக்காய் அளவு எடுத்து பசும்நெய் 2- விராகனிடை எடுத்து அத்துடன் குழைத்து காலை மாலை இருநேரம் 15நாள் அல்லது 20-நாள் சாப்பிட்டுவர மேகரணம். மேகபுரைகள். யோனிபுற்று கண்டமாலை சொறி சிரங்கு இன்னும் மேக சம்பந்தமான சகல நோய்களும் குணமாகும்.

பத்தியம் : இச்சாபத்தியம். தயிர். பால். மோர். நெய் அதிக அளவு சேர்த்துக் கொள்ளவும்.

"தன்வந்திரியார் அருளிய" வேதாந்தக் குழம்பு

சரக்கு : ரசப்பதங்கம் சுத்தித்த தாளகம் மனோசிலை வெங்காரம் இந்துப்பு கடுக்காய் சூரணம் கருஞ்சீரகம் அரிசி திப்பிலி பெருங்காயம் வகைக்கு 1-பலம் சுத்தித்து வறுத்த வாளம் 5-பலம்.

செய்பாகம் : சகல சரக்கையும் சுத்திசெய்து எடைபோட்டு சூரணித்து நன்றாக அரைத்துப் பின்வாளத்தை சிறிதுசிறிதாக சேர்த்து சுமார் 5-சாம நேரம் மெழுகு பதம்வர அரைத்தெடுத்து கொம்பு சிமிளில் பதனப்படுத்தவும் முலைப்பால் விட்டு அரைக்கவும்.

சாப்பிடும் அளவு : மிளகு பிரமாணம் தரவும். சகல ரோகங்களுக்கும் கொடுக்கலாம்.

தன் வந்திரிகுழம்பு கொடுப்பதற்கு அனுபானங்கள் :- தீரும் நோய்கள்

1. இஞ்சிசாறு	குளிர்சுரம், ஜன்னி, மூலவாடி, அண்டவாதம், பித்தரோகம்
2. இளநீர்	நீர்கடுப்பு, நீர்சுருக்கு, கல்லடைப்பு
3. அகத்தியிலைச்சாறு	மகோதரம் வெட்டை
4. வெற்றிலைச்சாறு	விஷம்
5. கடுக்காய் கியாழம்	பித்தசுரம்
6. மல்லிக்கியாழம்	பித்தசுரம்
7. திப்பிலிகியாழம்	சிலேஷ்மம், சுரம்
8. விலாமிச்சவேர்	கியாழம் பித்தவெட்டை
9. சாதிக்காய்த்தூள்	அதிசாரம்

10. கடுக்காய்த்தூள்	இருமல்
11. பசும் நெய்	ரத்தமூலம்
12. பசும் பால்	பித்தம், பாண்டு
13. தேங்காய்ப் பால்	வாதரோகங்கள்
14. செம்மரி ஆட்டுப்பால்	திரளாத பெண்ணுக்கு
15. வெள்ளாட்டின் தயிர்	சூதகவாயு
16. ஆமணக்குயெண்ணை	வாயு
17. வெள்ளைப்பூண்டு தைலம்	சன்னி
18. நொச்சி இலைச்சாறு	வாதம் வாதசுரம்

மேற்படி அனுபானங்களில் கொடுக்க ரோகம் தீரும்.

கௌசிகர் குழம்பு மை

(சகல நோய்களுக்கும்)

சரக்கு : கடுக்காய், இந்துப்பு, பொரித்த வெங்காரம் மனோசிலை அரிதாரம் கடுகு கடுகுரோகணி பொரித்த பெருங்காயம் ரசம் திப்பிலி சீரகம் நாபி வகைக்கு 1 விராகனிடை. சுத்திசெய்த வாளம் 12-விராகனிடை தென்னங்குடுக்கை கட்டக்கரி 5-விராகனிடை பனைவெல்லம் 5-விராகனிடை.

செய்பாகம் : சுத்திசெய்ய வேண்டியவைகளை சுத்தி செய்து இடித்து சூரணம் செய்து கல்வத்திலிட்டு உத்தாமணி இலைச்சாறு விட்டு ஓர்நாள் கையோயாமல் அரைத்து மெழுகுபதமாக இருக்கும்போது தென்னங்குடுக்கை கரியும், பணங்கருப் பட்டியும், சேர்த்து தேங்காய்ப்பால் விட்டு மெழுகுபதமாக அரைத்து வழித்துக்கொள்க. தினம் ஒரேவேளை 2-குன்றி அளவு கொடுக்க 5, 6-முறை பேதியாகும். இந்தமெழுகினால் தீராத வியாதியே கிடையாது.

கௌசிகர் குழம்புக்கு அனுபானம்

(அனுபானங்கள் தீரும் நோய்கள்)

வாதரோகங்களுக்கு நொச்சி இலைச்சாறு பித்த ரோகங்களுக்கு மல்லி சீரககிஷாயம் முடக்கு வாதத்துக்கு சுக்குகிஷாயம். சிலோத்தும ரோகத்துக்கு சித்திரத்தை. கடுக்காய். ஈளை. இளைப்பு. காசத்துக்கு தூதுவேளை அரத்தை. சகல காசத்துக்கு திப்பில் ஆடாதோடை. கக்குவானுக்கு துருஞ்சிப்பட்டை கியாழம். சிலேத்தும சுரத்திற்கு கடுக்காய் கியாழம். பித்தசுரத்திற்கு ஏலம் மிளகு கியாழம். வாதகுன்மத்துக்கு வல்லாறைச்சாற்றில். எரிகுன்மத்துக்கு இளநீர் சீரகம் நெய் வலிகுன்மத்துக்கு ஆமணக்கெண்ணை அண்டவாதத்திற்கு வெள்ளாட்டு பாலில். மூலரோகத்திற்கு பால். நெய். மோர் முலைப்பால். பலவித குஷ்டத்துக்கு தென்னை வெல்லம். காமாலை. சோகை மகோதரம் ஆமணக் கெண்ணையில் கோமியம் சேர்த்து சந்துசூலை சர்வாங்கவாதம் கழுதை நீரில். சன்னி 13க்கும் இஞ்சிசாற்றில். ஷை அனுபானங்களில் கொடுக்க ரோகம் தீரும்.

கனகரச கற்பூர மெழுகு

(சகல நோய்களுக்கும்)

சரக்கு : லிங்கம் வீரம் பூரம் வகைக்கு 1 தோலா சரம் கெந்தகம் தாளகம். துருசு இந்துப்பு சாதிக்காய் கார்போக அரிசி. சுக்கு அரிசி திப்பிலி கோஷ்டம் மிளகு அரத்தை தேவாரம் ஏலம் கிராம்பு பச்சைக்கற்பூரம் கரியபகளம் ஓமம் இவையாவும் வகைக்கு 1விராகனிடை.

செய்பாகம் : சுத்திசெய்த கெந்தகத்தையும் ரசத்தையும் கல்வத்திலிட்டு 1-மணிநேரம் அரைக்கவும். பின்வரிசை கிரமமாக தாளகம் லிங்கம் வீரம் பூரம் துருசு கூட்டி நன்கு அரைத்து மிருதுவாக உறவான பதத்தில் மற்றயசரக்குகளை இடித்து சூரணம் செய்து போட்டு தேன் துளித் துளியாக விட்டு மெழுகு பதத்திலேயே 5. 6 சாமமரைத்து வ்ழித்து சீசாவில் பத்திரப்படுத்துக.

அளவு : வேளைக்கு ½ குன்றி பனை வெல்லத்தில் தினம் 1-வேளை 3. 5 நாள் கொடுக்கவும்.

அகத்தியர் குழம்பு

சுத்திசெய்த வாளம் ரசம் தாளகம் மனோசிலை வீரம் பூரம் லிங்கம் வெங்காரம் இந்துப்பு கருஞ்சீரகம் கடுக்காய்தோல் அரிசிதிப்பிலி பெருங்காயம் வகைக்கு பலம்1. சுத்திசெய்த நேர்வாளம் பலம் 6.

செய்பாகம் : சகல சரக்கையும் சுத்தி முறைப்படி சுத்திசெய்து தனித்தனியே தூள்செய்து வரிசை கிரமமாக ஒன்றின்பின் ஒன்றாக கல்வத்திலிட்டு அரைத்து பின் பிள்ளைபால் விட்டு நன்றாக அரைக்கவும் பிள்ளைப்பால் கிடைக்கா விட்டால் பசும்பால் அல்லது வெள்ளாட்டின் பால்விட்டு நன்றாக மெழுகுபதம் வரும்வரை அரைத்து பதனப்படுத்தவும்.

உபயோகம் : சகல ரோகத்துக்கும் கொடுக்கலாம். வியாதிக்கத் தக்க அனுபானங்களில் மிளகு அளவு முதல் கொடுக்க நன்றாக விரோசனமாகி நோய்கள் நீங்கும்.

அனுபானம் : தன்வந்திரிக் குழம்புக்கு குறித்தவையே சிறந்தது.

கனகலிங்க கற்பூர மெழுகினால் தீரும் நோய்கள்

இம்மெழுகு பழமை பெற்றிருப்பின் பயமின்றி நீடித்துக் கொடுக்கலாம் புதிய மருந்தாகயிருப்பின் சர்வ ஜாக்கிரதையாக ரோகியின் தேகசுபாவத்தை கண்டு 2. 3 வேளைக் கொடுத்து நிறுத்திவிடவும் தேவையானால் 2. 3 நாள்விட்டு மீண்டும் ஒருமுறை 3-வேளைக்கு கொடுக்கலாம்.

தீரும் வியாதிகள் : சன்னிதோஷம் காமாலை அதிநீர் சுரப்பு கிரந்தி சுரம் தாகம் சூலை முடக்குவாதம் ஸ்திரிகளுக்கு உதிரக்கட்டால் உண்டான சூதககுன்மம் சரீரக்கடுப்புவலி அரையாப்பு வெடிசூலை நெஞ்சடைப்பு மார்புகுத்து வலி குதிரைவலிப்பு முதலியவைகள் குணமாகும்.

குறிப்பு : இந்த முறையில் குறிப்பிட்ட சாதிக்காய் ஏலம் கிராம்பு என்னும் சரக்குகளுக்குப் பதிலாக அக்கிராகாரம் அதிமதுரம் சித்ரமூலம் என சில நூல்களில் கூறப்பட்டிருக்கிறது.

வான்மெழுகு என வழங்கி வரும் வான மெழுகு

சரக்கு : இரசம் ரசச்செந்தூரம் கந்தகம் வீரம் கௌரி சாம்பிராணி (சூடம்) கற்பூரம் வெள்ளைப் பாஷாணம் மிருதார்சிங்கி பூரம் லிங்கம் அபின் காந்தம் தாளகம் இவையாவும் வகைக்கு ½ பலம்.

செய்பாகம் : சகல சரக்குகளையும் சுத்தி முறைப்படி சுத்திசெய்து முதலில் ரசத்தையும் கெந்தகத்தையும் அரைத்துத் தனியாக வைத்துபின் மிருதாருசிங்கியும் கந்தகத்தையும் சேர்த்து அரைத்து பின்வெள்ளையும் கௌரியையும் சேர்த்து அரைத்துபின் தாளகம்வீரம் பூரம் இதனையும் சேர்த்து அரைத்துபின் லிங்கம் ரசசெந்தூரம் இரண்டை தனித்து அரைத்துபின் சாம்பிராணி கற்பூரம் இதனை தனித்தனியே பொடித்து அபினிமுதல் சகலசரக்கையும் பின்ஒன்றாக கலந்து கூட்டிநன்றாக அரைத்தபின் கோழிமுட்டையின் மஞ்சள்கரு தைலத்தை விட்டு மெழுகுபதம் காணும் வரைசுமார் 4-சாமம் அரைத்த கொம்பு சிமிளில் அடைத்து வைக்கவும்.

வான்மெழுகால் தீரும் நோய்கள்

சாப்பிடும் அளவு : உழுநதளவு பின்வெல்லத்தில் இருவேளை முறைஒன்றுக்கு மூன்று அல்லது ஐந்து நாள்

கொடுக்கலாம் இவ்வாறு விட்டுவிட்டு நோய்க்குத் தக்கவாறு வழங்கவேண்டும்.

தீரும் நோய்கள் : கபவாதசன்னி, எண்வகைசுரம், காசம் குஷ்டம், குடலண்டவாதம், சூலை இரணம், ஈளை தோடம், எண்வகை குன்மம், வயிற்றுவலி, கடுப்பு, நாள்பட்ட சூதககட்டு, மகோதரம், சோகை, மஞ்சள் காமாலை, சத்திவயிற்றுப்போக்கு, பவுத்திரம், கல்லடைப்பு, வலிப்பு, கிரந்தி புரைகண்டமாலை, நீரிழிவு மந்தார காசம் இவைகள் தீரும்.

குறிப்பு : இம்முறை 14-சரக்கள் கொண்டதுசிலர் 15-சரக்கு சேர்த்து செய்கிறார்கள் ஆயினும் இம்முறை குணம் காணப்பட்ட அனுபவமுறை.

ரசகெந்தி மெழுகு

(சரும சம்மந்தப்பட்ட நோய்களுக்கு)

சரக்குகள் : கெந்தகம் ரசகற்பூரம் அரிதாரம் ஊசிகாந்தம் துருசு துத்தம் மிருதார்சிங்கி சுக்கு ஓமம் மஞ்சள் திப்பிலி அரத்தை கோஷ்டம் வாலுளுவை சோம்பு ஏலம் சாதிக்காய் மிளகு சீரகம் கார்போகி மாசிக்காய் திப்பிலிக்கட்டை வாய்விளங்கம் வசம்பு லவங்கம் பறங்கிப்பட்டை சேங்கொட்டை கடுக்காய்த்தோல் கருஞ்சீரகம் காட்டுசீரகம் சிறுதேக்கு தாளிசபத்திரி திராட்சை பிரப்பன்கிழங்கு எட்டிவிதை தேத்தான்விதை நீர்முள்ளி எள்ளு கொள்ளு கொப்பரை தேங்காய் சின்னிவேர் சங்கம்வேர் அமுக்கிராவேர் ஆகாயக்கருடன் கிழங்கு சித்ரமூலவேர்பட்டை இவைகள் வகைக்கு விராகனிடை-1 கோழிமுட்டை 2-பனைவெல்லம் 46-விராகனிடை.

செய்பாகம் : பாஷாண சரக்குகளைச் சுத்திசெய்து கல்வத்திலிட்டு நன்றாக அரைத்து கடைசரக்குகளை உரலிலிட்டு இடித்து சலித்து ஷை பாஷாண சரக்குகளுடன் கூட்டி அரைத்து பனைவெல்லத்தையும் தூள்செய்து அதனுடன் கலந்துநன்றாக பிசரி கோழிமுட்டை உடைத்து ஊற்றிபிசைந்து

உரலிட்டு இரும்பு பூண் இல்லாத மரஉலக்கையால் 4-சாமம் நன்றாக மெழுகு பதம்வர இடித்துவழித்து வாயகன்ற பீங்கான் சாடியில் பத்திரப்படுத்துக.

அளவு : சுண்டைக்காய் பிரமாணம் எடுத்து மோருஞ் சோறுண்டு அதன்பிறகு மெழுகை சாப்பிடவும் உட்கொள்ளும் நாள் ஒரு மண்டலம் தலைமுழுகும் நாள் மருந்தில்லை பத்தியமில்லை.

தீரும் நோய்கள் : வெடிசூலை ஏகசூலை இடிசூலை புடைசூலை நுடிசூலை வாதசூலை கால்குடைச்சல் சுரனைவிப்புருதி கண்டமாலை குஷ்டம் விஷநீர் குறைநோய் சிரங்கு கிரந்தி ரோகங்கள் புரைபுண் யோனிபுற்று லிங்கபுற்று கன்னப்புற்று சிலந்திபிளவை பவுத்திரம் மூளைமூலம் பாதசக்ரம் தொடைவாழை முட்டுவாழை குழிவாழை முதுகுவாழை புதுவாழை மார்பு சிலந்தி நேத்திர பிளவை மற்றும் சகலசர்ம ரோகங்கள் தீரும்.

மார்க்கண்டேயர் மெழுகு எனும் அரக்குடோரி மெழுகு

சுத்திசெய்த ரசம் பூரம் வீரம் தாளகம் இவை வகைக்கு பலம்1. கெந்தகம் சுக்கு இவை இரண்டும் வகைக்கு பலம்2. இவை யாவையும் சுத்தி செய்து முதலில் கல்வத்தில் ரசத்தையும் கெந்தகத்தையும் சேர்த்து அரைத்துபின் சுக்குதூளை போட்டு அரைத்து பின் தாளகத்தை பொடித்து அத்துடன் சேர்த்து செல்லத்தக்க அளவு தேன் சேர்த்து மெழுகுப் பதம் காண அரைத்து ஜாடியில் பதனப்படுத்தவும்.

தீரும் வியாதி : மிளகு அளவு காலை மாலை சாப்பிடலாம் சூலை-19. வாதம்-80 சிலேத்துமம்-96ம் குணமாகும். கரனை கண்டமாலை அரையாப்பு புணைபுரை வெள்ளை வெட்டை முதலானதும் தீராதெனப்பட்ட பல பெரிய நோய்களும் குணம் செய்யும்.

வீர மெழுகு

(வாயு சம்மந்தப்பட்ட வாதரோகங்கள் தீரும்)

சரக்கு : வீரம் இரசம் பூரம் லிங்கம் வகைக்கு 1-விராகனிடை பளிங்கு சாம்பிராணி வெடியுப்பு கற்பூரம் பொரித்த வெங்காரம் நவாச்சாரம் வகைக்கு 2-விராகனிடை.

பச்சைப் கற்பூரம் கோரோசனை வகைக்கு ½ விராகனிடை குரோசாணி ஓமம் சூரணம் தோலா-3 தாளிசபத்திரி சூரணம் தோலா-4½ இவைகளை கல்வத்திலிட்டு சிறிது சிறிதாக முலைப்பால் விட்டு 4. 5-மணி நேரத்திற்கு குறைவின்றி கை ஓயாமல் பத்திரப்படுத்துக.

அளவு : காலை மாலை 7-அல்லது 10-நாள் வரை ஒரு முறையாக உட்கொள்க.

தீரும் நோய்கள் : மேகவாய்வு கைகால் குடைச்சல் கைகால்பிடிப்பு கீல்வாயு மார்நோய் முழுங்கால் கணுக்கால் வாதம் பாரிசவாதம் அண்டவாதம் குடல்வாதம் நரித்தலைவாதம் வாதபிடிப்புகள் தேகத்தை அசைக்கவும் முடியாது படுக்கையில் வீழ்ந்து சர்வாங்கவலி ஸ்திரீகளுக்கு உண்டாகும்.

குறிப்பு : இம்மெழுகை கொடுப்பதற்கு முன் உடம்பின் நிலைமையைக் கேற்றவாறு பேதிமெழுகை 3-நாள் ஒழுங்காக வேணும் அல்லது இரண்டு நாட்களுக்கொரு முறையாக வேணும் 4. 5 முறைமலம் போகும்படி கொடுத்து விட்டுப் பின்னர் இதனைக் கொடுத்து வருக முதன்முறையில் குணம் தெரியாவிடின் இரண்டாமுறை உட்கொள்க கண்டிப்பாய் பிணி அகலும் ஆராய்ந்து மருந்தளிக்கும் காலம் வரையறுத்து கொள்ளல் வேண்டும் இந்த மெழுகை உட்கொள்ளுவதால் உஷ்ணம் அதிகரிப்பின் அடியில் கூறப்பட்ட கியாழத்தை அருந்த உடனே சாந்தியாகும்.

பத்தியம் : இச்சாபத்தியத்தோடு எத்தனை நாள் புளி தள்ளி ஆகாரம் கொள்ளவேண்டுமோ அத்தனை நாள் கொள்க முடியாதவர்கள் புளி சேர்த்துக் கொள்ளலாம் மருந்து வீரு ஏற்படின் அருந்த கியாழம் ½ பலம் மிளகை புதுசட்டியிலிட்டு சாம்பலாக்கி அதில் ½ தோலா சீரகத்தை இட்டு வறுக்க வெடிக்கும்போது ½ படி நீர்விட்டு பறங்கி சக்கை சுக்கு வகைக்கு ¼ தோலா நறுக்கிபோட்டு அரைக்கால் படியாக வற்றவைத்து வடிகட்டி அதில் பனங்கல் கண்டும் நெய்யும் கூட்டியேனும் பாலும் பனங்கல்கண்டும் சேர்த்தேனும் தினம் இருமுறை பருகின 3-நாட்களில் மருந்தின் வெப்பத்தால் உண்டான இருமல். வயிற்றுபோக்கு குணமாகும்.

திரிசூத மெழுகு

(வாத ரோகங்களை குணம் செய்யும்)

சரக்கு : வீரம். பூரம். லிங்கம். கிராம்பு. சுக்கு வாளம் வகைக்கு 1-விராகனிடை. சித்ரமூல வேர்பட்டை 1 பலம்.

செய்பாகம் : மேற்கூறப்பட்ட 8-சரக்குகளில் சுத்தி செய்ய வேண்டியவைகளைச் சுத்திசெய்து இடித்து சூரணம் செய்ய வேண்டியவைகளை சூரணித்தும் ஒருமிக்க கல்வத்தில் போட்டு தேன்விட்டு 2. 3 சாமம் நன்கு அரைத்து மெழுகுபதத்தில் வாயகன்ற சீசாவில் பத்திரப்படுத்துக.

பிரயோகம் : இந்தமெழுகில் வேளைக்கு 1½ மிளகு அளவு காலைமாலை பனை வெல்லத்தில் வைத்து 5-நாள் கொடுக்கவும். மலப்போக்கு அதிகமாக இருப்பின் ஒருவேளை மெழுகே போதுமானதாகும்.

திரிசூத மெழுகினால் தீரும் நோய்கள் : வாயு சன்னி பக்க சூலை. விரைவாதம். தேகவலி இடுப்புவலி கபாலசூலை. வயிற்று பொருமல் நீடித்து கொடுத்தால் பாரிசவாதம் தீரும் இந்த மெழுகை 3. 4 மிளகளவு பனை வெல்லத்தில் வைத்து தினந்தோறும் காலையின் ஒரே வேளையாக கொடுத்து பசுவின் பாலில் எலுமிச்சம் பழரசம் விட்டு முறியாததற்கு முன் அருந்த

கொடுக்க இப்படி 7 நாள் கொடுக்க மகோதரம் குணமாகும். இரண்டு மிளகு அளவு வெல்லத்தில் வைத்து காலை வேளையில் ஒரேவேளை கொடுக்க வயிற்றுபொருமல் குணமாகும் 3 நாள் கொடுக்க வயிற்றுநோய் குன்மம் குணமாகும். மற்றும் பிரசவஜன்னி அழுக்கு தங்குதலால் உண்டான சூதகஜன்னி தமரகவாயுமேல் சுவாசம் குணமாகும். இந்த மெழுகை கடுகுபயரளவு பாலாடையின் முனையில் வைத்து முலைப்பால் விட்டு கை குழந்தைகளுக்கு புகட்ட அல்லுமாந்தம் கெர்ப்ப வாயுவலி முதலியவைகள் குணமாகும். நோய்குணப்பட்டு இரண்டொருநாள் ஆனபின் ஓமத்தைப் பால் விட்டரைத்து சிசுவுக்கு இட்டு ஸ்நானம் செய்து அன்று இரவு படுக்கைக்கு போகும்போது ½ பலம் மிளகை ஒரு பாண்டத்தில் போட்டுக் கருக்கி ½ படி ஜலம் விட்டு 1/8 அல்லது வீசம்படியாகச் சுண்டக்காய்ச்சி வடிகட்டி சிறிது சர்க்கரை கூட்டிச் சாப்பிடவும் பின் இஷ்ட பொஜனம் செய்யலாம்.

பத்தியம் : மருந்து சாப்பிடும்போது முருங்கைப் பிஞ்சு துவரம் பருப்பு. பச்சைப்பயறு. மிளகு. சீரகம். வெள்ளாட்டு இறைச்சி. நெய் சாப்பிடலாம். கடுகு. நல்லெண்ணை. புளி கூடாது பாலுண்ணும் குழந்தைகளுக்கு கொடுக்கும்போது தாய் இப்பத்தியத்தை அனுசரிக்கவும்.

குறிப்பு : இந்த மெழுகு கபவாத ஜுரம். இரைப்பு. இருமல். ஆறாதரணம். தலைநோய் முதலியவைகளுக்கு முக்கிய குணமானதாகும் திரிகடுகு கிஷாயத்தில் தரவும்.

மேகநாதி மெழுகு

தேகவலி குத்தல். குடச்சல். கைகால்பிடிப்பு கிரந்தி. புண் சொறி சிரங்கு தீரும்.

சரக்கு : பூரம். ரசசெந்தூரம் வகைக்கு ½ பலம் ஓமம் 8-பலம்.

செய்பாகம் : ஓமத்தை தண்ணீரிலிட்டு ஊரவைத்து நிழலில் துணியின் மீதுபரப்பு ஈரம் உலர்ந்ததும் காரமில்லாத அம்மியைச் சுத்தப்படுத்தி அதனில் இவ்வோம அரிசியையிட்டுக் கைஒயாமல் வலிவாய் அரைக்க மெழுகு போலாகும். அத்தருணம் முன் சுத்தப்படுத்தியுள்ள பூரம் · இரச செந்தூரத்தையும் நன்றாக சேர்த்து அரைத்தபின் ஓமமெழுகையும் சேர்த்து சுமார் 2-சாம நேரம் வரையில் நன்றாக அரைத்து கொம்பு சிமிளிலாவது ஒருவாயகன்ற கண்ணாடி அல்லது பீங்கானிலாவது இட்டுமூடி பதனப்படுத்த ஒருவேளைக்கு மிளகு அளவுபனை வெல்லத்தில் சாப்பிட கிரந்தி புண் கைகால் பிடிப்பு தேகவலி குத்தல் குடச்சல் வலி முதலிய நோய்கள் தீரும்.

திரிவிக்ரம மெழுகு மை

சரக்கு : ரசம் கெந்தகம் வெள்ளைப்பாஷாணம் அரிதாரம் நாபிவாளம் கொட்டாங்குச்சி சுட்டக்கரி இவையாவும் வகைக்கு 2-விராகனிடை.

செய்பாகம் : இவ்வேமுசரக்கையும் கல்வத்திலிட்டு தேங்காய்பபால் விட்டு 4-சாமம் அரைத்து மெழுகு பதத்தில் எடுத்து வாயகன்ற கண்ணாடி அல்லது பீங்கான் டப்பியிலிட்டு பதனப்படுத்தவும்.

தீரும்நோய் : நான்காம் முறை எட்டாம் முறை முப்பதாம் முறையாய் வருகின்ற மாறல் சுரங்களும் வயிற்றில் ஏற்படுகின்ற வாயு நோய்களும் தேகபலத்துக்கு ஏற்றபடி 8-நாளைக்கு ஒருதடவை குன்றிமணியளவு எடுத்து சர்க்கரையிலிட்டு தண்ணீரில் கலக்கி காலையில் கொடுத்துப் பத்தியம் வைக்கவும். ஷை நோய்கள் குணமாகும். நன்றாக மல சுத்தியாகும்.

பஞ்சசூத மெழுகு

(சுரம். இசிவுமாந்தம் இளம்பிள்ளை வாதம் தீரும்)

சரக்கு : வாலைரசம். லிங்கம். பூரம். வீரம். இரச செந்தூரம் இவையாவையும் வகைக்கு ¼ -பலம்.

செய்பாகம் : இவற்றை ஒன்றிரண்டாக பெருந்துண்டுகளாக நறுக்கி ஒரு புதுஓட்டில் வைத்துச் சிறுதீயிலெரித்துச் சேங்கோட்டைத் தயிலம் வெள்ளைபூண்டுத் தைலம் சிற்றண்டைத்தையிலம் இம்மூன்றையுமீ சமனெடையாக கலந்து 2½ பலத்துக்கு குறைவின்றி 2-சாமம் சுருக்கு கொடுத்து அவைகளை சிதறாமல் கல்வத்திலிட்டு மிகுந்த ஷை கலவைத் தைலத்தால் மெழுகு பதத்திலேயே தினம் 3-மணி நேரத்திற்கு குறைவின்றி 5-நாள் அரைத்து பத்திரப்படுத்துக.

குழந்தைகளுக்கு பிரயோகம் : குழந்தைகளுக்கு பருவத்துக்கேற்றபடி பயறு பிரமாணம் பாலாடையில் முலைப்பால் விட்டு முனையில் மெழுகை வைத்து கொடுக்க இவ்வாறு நாளொன்றுக்கு இருமுறை மூன்று நாள் கொடுக்க ஜ்வரம். இசிவு. மாந்ததோஷம். வயிறுஉப்பிசம். கைகால் பிடிப்பு. இளம்பிள்ளைவாதம் வாயு முதலிய கடும்பிணிகள் தீரும்.

குழந்தைகட்கு பத்தியம் : பால் உண்ணும் குழந்தையின் தாய் இச்சாபத்தியத்துடன் சீதன பதார்த் தங்களையும் புளியையும் தள்ளி பக்குவமாய் ஆகாரம் செய்ய வேண்டும்.

பெரியோர்களுக்கு மிளகு அல்லது குன்றி பிரமாணம் கருப்பட்டியில்வைத்துள்ள 3-நாள் 6-வேளைக்கு பாரிசவாதம் முகவாதம் பிடிப்பு குடச்சல் முதலியவைகள் குணமாகும்.

பத்தியம் : பிணி கடுமையாகயிருப்பின் புளி வருத்த உப்பு கூட்டலாம்.

குறிப்பு : இம்மெழுகை நீண்டநாள் உண்ணக் கூடாது. குணம் காணாவிடில் சிலநாள் விட்டு பின்சாப்பிட நீங்கும்.

முறையில் : பூண்டு தைலத்துக்கு பதில் பூண்டு சாறு சேர்த்து சுருக்கு கொடுக்கலாம்.

அக்கிரகார மெழுகு

எரிகுன்மம் வலிகுன்மம் நாவின் சுரசுரப்பு சகலவித சுரங்கள்

சரக்கு : அக்கிராகார்ரம் 10-கழஞ்சு திப்பிலி 7 கழஞ்சு கோஷ்டம் 4-கழஞ்சு, சித்ரத்தை 8-கழஞ்சு, கிராம்பு ஏழு கழஞ்சு.

செய்பாகம் : இவைகளை தனித்தனியே சூரணம் செய்து கல்வத்திலிட்டு அதனுடன் நன்றாய் அரைத்துச் சுத்திசெய்த பூரம் 2-கழஞ்சு. சேர்த்துத் தேன்விட்டுக் கைஓயாமல் இரண்டு போர்கல்வத்தில் உஷ்ணம் பிறக்க மாற்றி மாற்றி அரைக்க இங்கனம் தினமிரண்டு ஜாமம் இரண்டு மூன்றுநாள் அரைத்து பத்திரப்படுத்துக.

பிரயோகம் : இதனை தூதுளங்காய் பிரமாணம் மூன்றுநாள் ஆறுவேளை உட்கொள்ளின் எரிகுன்மம் வலி குன்மம் நாவின் சுரசுரப்பு சகலவித சுரங்கள் தீரும்.

குறிப்பு : இதனை நீடித்து உண்ணக்கூடாது. குணம் தெரியாவிடில் இடைவிட்டு மறுமுறை உட்கொள்க. எத்தகைய கடும்பிணியும் குணப்படும் என்பதற்கு ஐயமில்லை.

பத்தியம் : பிணியின்வன்மை மென்மைக்கேற்றபடி அறிந்து ஆவன உண்டு ஆகாதவற்றை நீக்கவேண்டும்.

இரச மெழுகு

கிரந்தி வெள்ளை கைகால் முடக்கு சூலை தீரும்

சரக்கு : வாலைரசம் பறங்கிப்பட்டை சூரணம் இவையாவும் வகைக்கு 2-விராகனிடை திப்பிலி சூரணம் 4-விராகணிடை, லவங்கசூரணம் 4-விராகனிடை, நல்ல வெல்லம் 12-விராகனிடை.

செய்பாகம் : இவைகளை கல்வத்திலிட்டு இரசம்மடியும்படி நன்றாய் கலந்து அரைத்து பத்திரப்படுத்தவும். ஒருமாதம் பழகின பிறகுபயன் படுத்தல்வேண்டும்.

அளவு : மிளகு அளவு பனைவெல்லத்தில் காலை மாலை இருவேளையாக ஏழுநாட்கள் கொடுத்து மறுபத்தியம் ஏழு நாட்கள் வைக்கலாம்.

பத்தியம் : உப்பில்லாபத்தியம். பால்சாதம் 5-நாள் தலைமுழுவதும் தலை முழுக்கன்றைக்கு கோழிச்சாறு சேர்க்கவும்.

தீரும் நோய் : மேகவெள்ளை, தடிப்பு புண்கள், அழிகிரந்தி, குழிகிரந்தி, கைகால் முடக்கு, மேகசூலை, அரையாப்பு இவைகள் தீரும்.

கெந்தக மெழுகு

கரப்பான் படை கிரந்தி, தோல் சம்மந்தப்பட்ட பிணி, புண், சொறி, சிரங்கு தீரும்.

ஒருபலம் கெந்தகத்தை சுத்திசெய்து கல்வத்திலிட்டு வெள்ளை வெங்காயச் சாறுவிட்டு ஏழுநாள் அரைக்கவும் அதன்பின் சுண்ணாம்பு இது மெழுகு பதத்திற்கு வந்த சமயம் 1-அல்லது 1½ பலம் நல்லவெல்லத்தை சிறிகு சிறிதாகப் போட்டு அரைத்து மெழுகு பதத்துக்கு வந்தவுடன் வழித்து வாயகன்ற சீசாவிலாவது கோப்பையிலாவது போட்டு மூடிபத்திரப்படுத்துக.

பிரயோகம் : வேளைக்கு கடலை அளவு அந்தி சந்தி 10, 15-நாள் கொடுக்கவும்.

தீரும் வியாதி : புண்சொறி, சிரங்கு, கரப்பான், படை, கிரந்தி மேகப்புண் முதலிய தோல் சம்மந்தப்பட்ட பிணிகள் நீங்கும்.

பத்தியம் : புளிப்பு கைப்பு நீக்கி இச்சாபத்தியமாக அன்னம் உட்கொள்ளவேண்டும்.

சார மெழுகு

கால்வீக்கம், அண்டவீக்கம், பாண்டு, ஈரல், குலைக்கட்டு குணமாகும்.

சரக்கு : சாரம் 3-பலம், கொம்புக்கள்ளி மரப்பால்-1பலம், சுத்தித்த வாளம் 1-பலம், சிற்றாமணக்கு 3 பலம்.

செய்பாகம் : சாரத்தை கல்வத்திலிட்டு ஷெ கள்ளிப் பாலைவிட்டு அரைத்து பின் வாளமும் ஆமணக்கு பருப்பும் கூட்டி அரைத்து மெழுகு பதத்தில் வழித்து பதனப்படுத்துக.

தேக திடத்திற்கு தக்கவாறு 1. 2 மிளகு அளவு பனைவெல்லத்தில் வைத்து காலைநேரத்தில் கொடுக்க ஏழுஎட்டு தடவை பேதியாகும் பேதி அதிகமானால் மறுநாள் அளவை குறைத்துக்கொள்க. பேதி சரியாக ஆகாவிடின் அளவை அதிகப்படுத்திக் கொள்க. இப்படி பேதி ஆவதினால் வாதநீரை வெளிப்படுத்தி கால்வீக்கம் அண்டவாதம் வயிற்றிலுள்ள கட்டி முதலியவைகளை கரைத்துவிடும். பாண்டு. மகோதரம். சூதகவாயுவு முதலிய ரோகத்துக்கு அதிக நன்மையைத் தரும்.

பத்தியம் : இச்சாபத்தியம்.

மூசாம்பர மெழுகு

(சூதகத்தை சரிசெய்து கற்பம் உண்டாகும்)

சரக்கு : கரியபோளம் 1விராகனிடை பாலேந்திர போளம் 1-விராகனிடை. மிளகு ¼ பலம். கறிமஞ்சள் ¼ பலம். கருஞ்சீரகம் 1 பலம். கடுகு 1பலம். பனைவெல்லம் 4-பலம்.

செய்பாகம் : பனைவெல்லம் நீங்கலாக மற்றசரக்குகளை ஒருசட்டியிலிட்டு இளஞ்சூட்டில் வெதுப்பி ஆறவிட்டு இடித்து கல்வத்திலிட்டு அதனுடன் பனைவெல்லம் கூட்டி அரைக்கவும். மெழுகுபதம் இல்லாது இருப்பின் தேனை துளித்துளியாக விட்டு 2-மணிநேரமரைத்து வழித்து சீசாவில் பத்திரப்படுத்தவும் வேளைக்கு 2-கடலை அளவு காலை மாலை 5-நாள் கொடுக்கவும்.

தீரும் வியாதிகள் : ஸ்திரீகளுக்கு மாதவிலக்கு காலத்தில் உண்டாகும் வயிற்றுவலி அழுக்குசரியாக வெளிகாணாமல் இருப்பது குணமாகும். இந்தபிரயோகம் 5-மாதம் வரையில் வீட்டு விலக்கத்தில் கொடுக்கவும். சந்தான சித்தியுண்டாகும்.

ஸஞ்ஜியாமிர்த மெழுகு

சுகர்லெட்டு (வங்க உப்பு) பலம் 1 இதனை நாயுருவி சார்விட்டு அரைத்து வெய்யிலில் நன்றாக காயவைத்து கல்வத்திலிட்டு அதில் மிருதார்சிங்கி பலம் 1 வெள்ளை குங்கிலியம் பலம் 1. பூரம் விராகனிடை 1¼. இவைகளை அரைத்துபின் விளக்கெண்ணை சேர்த்து அரைத்து இளகல் பதமாக எடுத்து வைத்துக்கொள்ளலாம். அல்லது மேற்படி சரக்குகளை மேற்கூறப்பட்டது போல் செய்துகொண்டு தேன்மெழுகு 3-பலம் இதை உருக்கி சேர்த்து தண்ணீராய் இருக்கும் சமயம் ஒரு வாயகன்ற கண்ணாடியில் விட்டு மூடிவைக்கவும்.

உபயோகம் :- புண்புரை சொறி சிரங்கு அடிபட்ட வீக்கம் இவைகளுக்கு மேல் போட்டுவர நோய்குணமாகும் மற்றும் இதனை மார்சளிக்கட்டுக்கு நெஞ்சில் தட்வ சளிகட்டு விலகி பூரண குணம் தரும்.

மூசாம்பர மெழுகு

சூதககட்டை வெளியாக்கி ஒழுங்குக்கு வரும்

சரக்கு :- சீமை மூசாம்பரம் 1 பலம். பாலேந்திரபோலம் 4-பலம் குங்குமப்பூ 1 பலம் பழையபனை வெல்லம்-4 பலம் கற்பூரம் 1-பலம் பெருங்காயம் 2 பலம்.

செய்பாகம் :- இலை யாவையும் இடித்து கல்வத்தில் இட்டு அரைத்து தேன்விட்டு அரைக்க மெழுகுபதம் வந்ததும் எடுத்து பதனப்படுத்தவும்.

பிரயோகம் :- வேளைக்கு மணிபுங்கன் கொட்டை அளவு எடுத்து பனைவெல்லத்தில் வைத்து தினம் இருவேளை உட்கொண்டு உடனே சோம்பு கியாழம் அருந்தவும். இதுபிரசவித்த ஸ்திரீகளின் அழுக்கைத் தட்டுதடங்களின்றி வெளிப்படும். பிறகு மாதவிடாய் நாள்தவறி வருபவர்கட்கு மாதமாதம் சரியான ஒழுங்குக்கு வரும் அழுக்கு வெளிப்பட்டவுடன் மருந்தை நிறுத்தி விடவும்.

காய மெழுகு

சரக்கு :- காயம். நீர்முள்ளிவிரை. வகைக்கு 1-பலம் அபினி 1-தோலா

செய்பாகம் :- இம்மூன்றையும் ஒன்றாய் இடித்து மெருகன் கிழங்கை குடைந்து அதில் மேற்படி மருந்தை வைத்து அழுத்தி மேற்படி கிழங்கினால் துவார்த்தை அடைத்து மூடி எருமை சாணியால் கவசம் செய்து முழு புடமிட்டு மருந்து வெந்திருக்கும் சமயம் பார்த்து புடத்தையெடுத்து உரலிலிட்டு கடப்பாறையில் கொண்டு இடித்து மெழுகு பதத்தில் குன்றிபோல் உருண்டை செய்து வைத்துக் கொண்டு காலை மாலை ஒரு உருண்டை சாப்பிட்டு பால்சாதம் சாப்பிடவும் தாதுகட்டும் விந்து தன்பனமாகும்.

சங்கு பாஷாண மெழுகு

(அல்லது வெள்ளை பாஷாண மெழுகு)

சரக்கு : வெள்ளை பாஷாணம் அல்லது சங்குபாஷாணம் 1-பலம் தாளகம் ரசம் வெண்காரம் வகைக்கு ½ பலம்.

செய்பாகம் :- இவை நான்கையும் எருக்கம்பால் விட்டரைத்து மெழுகு பதமாக்கி வெள்ளைத் துணியில் முடிந்து ஒரு கலயத்தில் திருகுகள்ளி பால் ½ படிவிட்டு மேல்படி மருந்தை மேலாந்திரமாக கட்டிபால் சுண்ட எரிக்கவும் மேற்படி மெழுகை பிரித்து எடுத்து கல்வத்திலிட்டு சுத்தமான தேன்விட்டு அரைத்துக் கொள்ளவும் இந்தமெழுகு மிகுந்தசக்தி வாய்ந்ததாகும் 448 வியாதிகளுக்கு தக்கபடியாக கியாழங்களில் உதாரணமாக தேன் பனைவெல்லம் இஞ்சிகியாழம் சுக்கு கியாழம் சித்தரத்தை கியாழம் இவைகளில் அனுபானித்து கொடுக்க எத்தகைய கொடிய ரோகங்களையும் குணம் செய்விக்கும்.

பத்தியம் :- பச்சரிசி நெய் பாசிப்பயறு பால் சேர்க்கவும் உப்பு சேர்க்கக்கூடாது.

மருந்தின் அளவு :- பார்சிப்பயறு அளவு கொடுக்கவும் சகல வித மேக ரோகங்களுக்கும் காலை மாலை 2-வேளையும் கொடுத்துவரவும் கண்சிவப்பேறி தினவெடுக்கும் சமயம் மருந்து கொடுப்பதை நிறுத்திக்கொள்ளவும்.

படிகார மெழுகு

வெட்டை ரத்தவெட்டை குணமாகும்

படிகாரம் பலம் 2-பூரா சர்க்கரை பலம் 2-நெய் பலம் 1-இம்மூன்றையும் சேர்த்து கல்வத்திலிட்டு நன்றாக 4-மணிநேரம் அரைத்து எடுத்த மெழுகை ஒருவாய் அகன்ற பாட்டிலில் பதனப்படுத்தவும்.

உபயோகம் :- தேத்தான் கொட்டை பிரமாணம் காலை மாலை சாப்பிட வெட்டை. இரத்தவெட்டை. இந்திரியம். ஒழுக்கு குணமாகும்.

லிங்க மெழுகு

சரக்கு :- சிவனார்வேம்பு சமூல்ம். நொச்சிவேர். பூவரசம்பட்டை. வெள்ளறுகு சமூலம். வேலி பருத்திவேர் வகைக்கு ½ வீசை.

இவை யாவையும் இடித்து குளித்தைல விதிப்படி தயிலம் இரக்கி கொள்ளவும்.

சரக்கு :- ரசம் லிங்கம் கெந்தகம் அரிதாரம் பொரிகாரம் வகைக்கு 2-பலம். (சுத்தி இல்லை)

வேப்பெண்ணையில் சுருக்கு கொடுக்கவும் 3-ம் தனித்தனியே ஒருபலம் எண்ணையில் சுருக்கு கொடுத்து எடுக்க சுத்தியாகும்.

மேற்படி தைலத்தில் 2 பலம் நிறுத்தெடுத்து மேற்படி 5 சரக்குகளையும் கல்வத்திலிட்டு மெழுகு பதம்வரை அரைத்தெடுத்துக் கொள்ளவும்.

அளவு :- உளுந்து பிரமாணம் நோய் கடுமையாக இருப்பின் இரண்டு வேளை கொடுக்கலாம் சாதாரண படைபத்து தோல் சம்மந்தப்பட்ட நோய்தீரும். ஒருவேளை போதுமானத 7 நாள்வரை கொடுக்கலாம். ஒருவாரம் மறுவாரம் கொடுக்கலாம்.

தீரும் நோய் :- கருமேகம். செம்மேகம். கிரந்தி. புண்புரை 18-குஷ்டரோகங்கள் குணமாகும். தாமரைக் கிரந்தி செம்மேகம் கருமேகம் தடிப்பு குணமாகும்.

குறிப்பு :- செங்கப்பொடி ஒட்ட்டை சர்க்கரை திருபலாதி கஷாயம் முதலானவைகளில் சுத்தி செய்யப்பட்ட ரசம்.

பஞ்சபாண மெழுகு

சரக்கு :- ரசம் வீரம் பூரம் கெந்தகம் மனோசீலை வகைக்கு ½ பலம் தேன் 1-பலம்.

செய்பாகம் :- இவையாவையும் தூள்செய்து கல்வத்திலிட்டு தேன்விட்டு கிண்டி மெழுகு பதத்தில் எடுக்கவும் முறுகல் பதத்தில் எடுக்க இன்னும் விசேஷம் பின்தேன் விட்டு அரைத்து கொள்ளவும்.

அளவு :- மிளகு அல்லது உழுந்து அளவு காலைவேளை மட்டும் அதிக நீண்டநாள் தூரமாகாது இருப்பின் காலை மாலை இருநேரம் 3-நாள் போதும் கற்பிணிகளுக்கு கொடுக்கக்கூடாது.

எப்பேர்பட்ட சூதகதடையை நீக்கி உடனே குணம் செய்யும்.

அனுபானம் :- மோரில் கொடுக்கவும்.

குறிப்பு :- சூதம் அதிகமாக வெளியேறுமானால் யூனானி செந்தூரம் அல்லது அகில்கட்டை தூள் தரிகடுகு அளவு மோரில் கொடுக்க வெளியாவதை தடைசெய்யும்.

கெந்தக மெழுகு

சுத்திசெய்த கெந்தகத்தை ஒரு பலம் எடுத்து பொடி செய்து ஒருவாயகன்ற பழகின் மண்பாண்டத்தில் போட்டு பேயன் அல்லது ரஸ்தாளி வாழைபழம் ஏதேனும் மொன்றில் இருந்து எடுத்து சாற்றை கொஞ்ச கொஞ்சமாக 1/4 படி அளவிற்கு சுருக்கு கொடுத்து ஒருமூங்கில் குச்சியால் கிளரிகொண்டுவர மெழுகாகும். இதனை எடுத்து வாயகன்ற சீசாவில் பத்திரப்படுத்தவும்.

உபயோகம் :- வேளைக்கு துவரை கடலை பிரமாணம் எடுத்து இரண்டு வேளையாக 7-நாள் கொடுக்கவும்.

தீரும் வியாதிகள் :- கருமேகம் செம்மேகம் தோல் சம்பந்தப்பட்ட படைகள் யாவும் தீரும்.

பத்தியம் :- கடுகு புளி நல்லெண்ணை நீக்கவும்.

குறிப்பு :- மேற்படி வாழைப்பழம் 45-க்கு 1 அல்லது 1½-பலம் அத்திப்பட்டை தூளாவது அல்லது பச்சை நெல் உமியாவது போட்டு பிசைந்து 2-அல்லது 3-மணி நேரம் சென்றபின் பிழிந்து எடுக்கவும் அல்லது பேயன் வாழைப்பழத்தையுரித்து அம்மான் பச்சரிசியிலை யரைத்துஅத்துடன் பிசிரிவைக்க ஜெயநிராகும் இதுவே சிறந்த ஜெயநீராகும்.

வாத மாருத மெழுகு

சரக்கு : பறங்கிச் சக்கை கடுக்காய்தோல் சித்துளாப் பட்டை சுக்கு மிளகு திப்பிலி சித்ரமூலம் வகைக்கு 2-பலம் 1/2 பலம் கார்போகரிசி விழுலையரிசி சாதிக்காய் சாதிபத்திரி ஏலம் லவங்கம் சித்தரத்தை வால்மிளகு அதிமதுரம் இவை [illegible] வகைக்கு [illegible]கால் பலம்வீதம் எடைசெய்து சூரணம் செய்து கொள்ளவும் கோரோசனை குங்குமப்பூ தாளகம் வீரம் லிங்கம் ரசசெந்தூரம் இவை ஆறும் வகைக்கு ¼ பலம் வீதம் நிறுத்தெடுத்து சுத்திகிரமப்படி சுத்திசெய்து கல்வத்திலிட்டு அரைத்து முன்முடித்துள்ள

சூரணத்தையும் இத்துடன் கலந்து கல்வத்திலிட்டு திருபலாதி கிஷாயத்தினால் 4-சாமம் அரைத்து உலர்த்திபின் தேன்விட்டு மூன்றுசாமம் அரைத்தெடுத்து பதனப்படுத்தவும்.

பிரமாணம் : மிளகு அளவு எடுத்துப் பனைவெல்லத்தில் வைத்து காலை மாலை இருநேரமும் சாப்பிட்டு வரவும்.

தீரும் வியாதிகள் : முடக்கு வாதம் சூலை பாண்டு தேகவலி மேகவாயு குடல்வாயு சூலைவாயு சூதகவாயு மண்டைவாயு முசல்வாயு மூர்ச்சைவாயு பித்தவாயு பார்சவாயு அற்புதவாயு திமிர்வாயு முதலிய சகலவித வாதரோகங்களும் தீரும்.

பத்தியம் : புளிநீக்கி. நெய் வெள்ளாட்டு வத்தல் சேர்த்துக் கொள்க விளக்கெண்ணை இட்டு ஸ்நானம் செய்யவும்.

வாயுவுக்கு லேகியம்

வயிற்று உப்பிசம் வாய்வு கொண்ட உப்பிசம் தீரும்.

சரக்கு :- கடுக்காய்தோல் பறங்கி பட்டை தாளிசபத்திரி சுக்கு திப்பிலி மிளகு ஏலரிசி சூரதவரை கண்டத்திப்பிலி சீரகம் ஓமம் அதிமதுரம் அமுக்கிராகிழங்கு வாலுளுவை குரோசானி ஓமம் கொத்தமல்லி விதை மேற்படி சரக்குகள் யாவும் ஒவ்வொன்றும் ½ பலம் எடுத்துக்கொள்க.

செய்பாகம் :- இஞ்சிபலம் 5-தோல்சீவி சிறுக நறுக்கி நெய்யில் வறுத்துப்பொடி செய்துக்கொண்டு ¾ வீசை நல்ல வெல்லத்தைக் கரைத்து வடிகட்டி பாகுவைத்து முன்பாக மருந்துகளை வெய்யலில் காயவைத்து தூள்செய்து போட்டு இஞ்சி தூளையும்போட்டு 6-பலம் நெய் சேர்த்து கிளரி எடுக்கவும்.

உபயோகம் அளவு :- கழஞ்சி அள்வு காலை மாலை சாப்பிடவும் பத்தியமில்லை.

தீரும் நோய்கள் :- வாயுதொல்லை தீரும் தேகம் குத்தல்வலி வயிற்றுவலி மார்வலி வயிற்று உப்பிசம் வீக்கம்

சொறி சிரங்கு கொல்லை தீரும். இருமல் இளைப்பு. சுவம் தீரும். பசி அதிகரிக்கும் பொய்பசி போக்கும் இன்னும் பலநோய்களை குணம் செய்யும்.

நெல்லிக்காய் லேகியம்

நெல்லிவற்றல் ஒன்றரை வீசை இதனை தண்ணீர்விட்டு 8-ல் ஒரு பாகமாக வற்றவைத்து எடுத்த கியாழத்தில் திப்பிலி மிளகு ஓமம் சுக்கு கிராம்பு ஏலம் தக்கோலம் வாய்விளங்கம் குக்கில் கொத்தமல்லி சீரகம் கூகைநீர் அதிமதுரம் சித்ரமூலவேர் பட்டை இவை வகைக்கு பலம் 1 இவைகளை சூரணம் செய்து மேற்படி நெல்லிக்காய் கியாழத்தில் போட்டு மெழுகுபதம் வரும் வரை எரித்தெடுத்து 15 பலம் சர்க்கரையை பாகுவைத்து அதில் மெழுகையிட்டு நன்றாக கிண்டி அதில் நெய்படி விட்டு கிண்டி எடுக்கவும்.

அளவு :- பாக்களவு காலைமாலை 20-நாள் சாப்பிட மேகசூடு அஸ்திசுரம் அழலைகாந்தன். ஈளை இருமல் க்ஷயம் காசம். கிராணி. மந்தம். வாயுபொருமல் இவைகளை போக்கி உடலை நன்றாக போஷித்து பாதுகாக்கும்.

குளிர்ச்சி லேகியம் அல்லது பித்தவாயு லேகியம்

சரக்குகள் :- சுக்கு மிளகு அதிமதுரம் தாளிசபத்திரி கிராம்பு கடுக்காய் தான்றிக்காய் நெல்லிவத்தல் இவைகள் வகைக்கு 1-பலம். அரிசிதிப்பிலி. லவங்கபத்திரி ஏலரிசி இவை 8-ம் வகைக்கு அரைபலம் பனைவெல்லம் 1/2 வீசை. நெய்பலம் 5-அல்லது 4-பலம்.

செய்பாகம் :- பனைவெல்லத்தை தண்ணீர்விட்டு கரைத்து மண்தூசிப் போக்கி வடிகட்டி எடுத்து சட்டியிலிட்டு பாகுகாய்ச்சி பாகுபதத்தில் மேற்படி 11-சரக்குகளை இடித்துசலித்து சூரணத்தைக் கொட்டிக் கிளரி நெய்பலம் 5-விட்டு இறக்கி பதனப்படுத்தவும்.

இந்த லேகியத்துக்கு குளுமை லேகியம் அல்லது பித்தவாயுவுக்கு லேகியம் என்ற பெயரும் உண்டு. பிரதானமாகு தேகத்தில் அதிகபடியாய் உள்ள உஷ்ணசக்தியைப் போக்கி குளிர்ச்சியைத் தந்து பித்தம் சம்பந்தப்பட்ட நோய்களையும் போக்கச்சீர் செய்து வைப்பதில் நிகரற்றது. மற்றும் பசிதீபனம் உண்டாகும் பொய் பசியைப் போக்குவிக்கும் மலசிக்கல் ஏற்படாது மலத்தை அன்றாடம் போக்கித் தேகத்தைப் பாதுகாக்கும். இது உயர்ந்த அனுபவ முறையாகும்.

குறிப்பு :- பெண்களுக்கு மாதாந்திர சூதகம் சரிவர உண்டாகி சூதகசம்பந்தமான கோளாரைப் போக்கி ரக்ஷிக்கும்.

அஸ்வகந்தி லேகியம்

சரக்கு :- அஸ்வகந்தி 20 பலம் பால் 2 படி நெய் 1 படி சீனி சர்க்கரை ஒன்றரைவீசை. திராட்சை பேரிச்சங்காய் சந்தனம் ஜாதிக்காய் கோரைக்கிழங்கு கடுக்காய்ப்பூ கூகைநீர் சுக்கு மிளகு திப்பிலி விலாமிச்சவேர் கிராம்பு கண்டதிப்பிலி செவ்வியம் சித்ரமூலம் இளவங்கப்பட்டை ஏலம் நாகேசுவரம் பச்சிலை இவை 19-வகைக்கு ¼ பலம்.

செய்பாகம் :- சர்க்கரையில் பாலைவிட்டு கந்துப்பதம் வரக்காய்ச்சி மேற்கூறிய சரக்குகளின் சூரணங்களில் கொஞ்சம் கொஞ்சமாகப் போட்டு கிளரி ஆறியபின் நெய்விட்டு பிசறிவேண்டிய அளவிற்கு தேணையுஞ் சேர்த்து வைத்துக்கொள்க.

பிரயோகம் :- தினம் காலைமாலை சுண்டைக்காய் பிரமாணம் சாப்பிட்டுவர கூஷயகாசம் சோகை பாண்டு காமாலை முதலிய ரோகங்கள் பரிகரிக்கப்படும். தேகபுஷ்டி உண்டாகும். இதை கர்பிணி முதல் குழந்தைகள் வரைக் கொடுக்கலாம்.

தேத்தான் கொட்டை லேகியம்

சரக்கு :- தேத்தான் கொட்டை முருங்கைப்பூ முருங்கைவித்து முருங்கைப் பட்டை முருங்கைப்பிசின் சுரை

விரையின் பருப்பு கருவேலம் பிசின் துத்திவிதை அதிமதுரம் திப்பிலி சுக்கு வகைக்கு பலம்-1.

செய்பாகம் :- மேற்படி சரக்குகளை இடித்து சூரணம் செய்துபின் தேங்காய்ப்பால் அரைபடி பசும்பால் 1-படி தண்ணீர்விட்டான் கிழங்குசார் அரைப்படி இந்த சார்வகையில் 20-பலம் சீனாகல்கண்டு சேர்த்து காய்ச்சின பதத்தில் மேற்படி சூரணவகைகளைப் போட்டு கிண்டி அதில் நெய் 15-பலம் தேன் 5-பலம் விட்டு கிளரி எடுக்கவும்.

உபயோகம் :- தினம் காலை மாலை பாக்களவு சாப்பிட்டு வரவும்.

தீரும் நோய் :- இந்திரியஸ்கலிதம் குணமாகும். விந்து கட்டி நரம்புகளுக்கு பலத்தைக் கொடுத்து. போகத்தில் திருப்தியை கொடுக்கக்கூடிய லேகியமாகும்.

கண்டங்கத்திரி லேகியம்

சரக்கு :- சுக்கு மிளகு திப்பிலி ஏலம் கிராம்பு சீரகம் தாளிசபத்திரி வாய்விளங்கம் இவையாவும் வகைக்கு 1-பலம் இஞ்சிச்சார் முள்ளங்கிசார் நெருஞ்சிசார் எலுமிச்சம்பழம்சார் கண்டங்கத்திரிசார் வகைக்கு ¼ படி பனைவெல்லம் ¼ வீசை நெய் 1 சேர் பசும்பால் 1 படி லேகிய முறைப்படி செய்து வைத்துக்கொண்டு காலை மாலை சுண்டைக்காய் அளவு சாப்பிட்டு வரவும்.

தீரும் நோய்கள் :- கூஷயம் காசம் இருமல் இளைப்பு முதலான ரோகங்களை குணம்செய்து பசிதீபனத்தை அதிகரித்து தேகத்துக்கு பலத்தை உண்டாக்கும்.

கண்டங்கத்திரி லேகியம்

சரக்கு :- கண்டங்கத்திரி சாறு 1½ பலம். துளசிசாறு 2½ பலம். ஆடாதோடை சாறு 3¾ பலம் சத்தமான தேன் 7¼ பலம் சுக்குமிளகு திப்பிலி கடுக்காய் நெல்லிக்காய் தான்றிக்காய் ஏலம்

அதிமதுரம் லவங்கம் லவங்கப்பட்டை சிற்றரத்தை பேரத்தை ஜாதிக்காய் ஜாதிபத்திரி தாளிசபத்திரி இவையாவும் வகைக்கு அரை விராகனிடை.

செய்பாகம் :- மேற்கூறப்பட்ட 15-வித கடைச்சரக்குகளை இடித்துதூள் செய்து வஸ்திரகாயம் செய்து வைத்துக் கொள்க. பிறகு இத்துடன் மூலிகைசாறுதேன் முதலியவைகளை யொன்று சேர்த்து ஓர் புது சட்டியில் அடுப்பிலேற்றிச் சிறுதீயாக எரித்து துழவிக் கொடுத்து கொண்டே வரவும் விரலழுந்தும் பாகு பதத்தில் கீழிறக்கி பதஞ்செய்க இதில் வேளைக்குச் சுண்டைக்காய்ப் பிரமாணம் தினம் 3-வேளை அருந்தி வர ஈளை இருமல் சுவாசகாசம் கபக்கட்டு முதலியன குணமாகும் குழந்தைகட்டு அதில் சிறிதளவு விரலால் தொட்டு அடிக்கடி நாவில் தடவிவர கக்குவா இருமல் கபக்கட்டு முதலியன குணமாகும்.

பெருங்காயம் லேகியம்

சரக்குகள் :- பொரித்தகாயம் கிராம்பு வால்மிளகு சிற்றரத்தை கோஷ்டம் லவங்கப்பட்டை லவங்கப்பத்திரி ஏலம் செவ்வியம் கண்டுபாரங்கி சடாமாஞ்சில் வாய்விளங்கம் கருஞ்சீரகம் சோம்பு சதகுப்பை அதிமதுரம் இவைகள் வகைக்கு அரைபலம் சுக்கு திப்பிலி மிளகு திப்பிலிமூலம் தாளிசபத்திரி கசகசா இவை வகைக்கு ¼ பலம், பறங்கிச்சக்கை 1 பலம் ஓமம் 2½ பலம், சாதிக்காய் அரைக்கால்பலம்.

செய்பாகம் :- இவைகளை இளம் வறுப்பாய் வறுத்து இடித்துச் சூரணம் செய்து வைத்துக்கொள்க. பின்பு 20-பலம் பனைவெல்லத்தை ஜலம்விட்டு கரைத்து வடிகட்டி ஓர்கடாயிலிட்டு அடுப்பிலேற்றி எரித்துப் பாகுபதத்தில் முன்தயார் செய்து வைத்துள்ள சூரணத்தை கொட்டி கிளரி 5-பலம் நெய் சேர்த்து கிண்டி இறக்குக.

இதில் வேளைக்கு அரைதோலா வீதம்தினம் இரு வேளையாக கொடுத்துவர பிரசவித்த ஸ்த்ரீகளுக்கு காணும்

உதிரச்சிக்கலை நீக்கிசூதக தண்டயினால் ஏற்படக்கூடிய நோய்கள் யாவும் வராதபடி தடுக்கும். மற்றும் வயிற்றில் தங்கிய வாயுவை வெளியேற்றி வயிறு உப்பிசத்தை நீக்கும் பசிதீபனம் தூண்டும் அஜீரணத்தை போக்கி நன்கு ஜீரணசக்தி தரும். மற்றுமுள்ள வாயு தொந்தரவை நீக்கும்.

சுக பேதி லேகியம்

சரக்குகள் :- சூரத்து நிலாவரை 1/2 சேர். நயம்ரோஜா மொட்டு ½ சேர். குல்கந்து 1 சேர். பாதம்பருப்பு ¼ சேர். கடுக்காய்ப்பூ. 1 பலம் இவையாவையும் அரைத்து லேகியமாக்கிக் கொள்ளவும்.

உபயோகம் :- மலச்சிக்கல். இடுப்பு முழுங்கால். குதிக்கால். நீர். வலி. மூலச்சூடு. வயிர்கடுப்பு. வயிற்றுப் புண் இவைகுணமாகும் இதுகற்பிணிகளும் உபயோகப்படுத்துவது நலம்.

தாதுபுஷ்டி லேகியம்

சரக்கு :- நீர்முள்ளி விதை 4-பலம். எள்ளு 1-பலம் கடலைமாவு 2-பலம். சாதிக்காய் 1 விராகனிடை. சாதிபத்திரி 1-விராகனிடை. கிராம்பு 1-விராகனிடை புரசன் பிசின் 3-விராகனிடை நிலக்கடம்பு 1-விராகனிடை.

செய்பாகம் :- இவையாவையும் சூரணித்து ஒரு முற்றின தேங்காயில் ஒருகண் திறந்துயாவும் உள்செலுத்தி வாயைமூடி ¼ விரக்கடை கனத்தில் அதற்கு சாணியால் கவசம்செய்து புடம்போட்டு தேங்காய் வெடித்த உடனே எடுத்து அதனுள் இருப்பவை யாவையும் 5-பலம் வெல்லமும் சேர்த்து லேகியமாக்கி தினம் 2-வேளை பாக்களவு சாப்பிட வீரிய விருத்தியுண்டாகும் இடுப்பு வலி தீரும் இதுவெகு நல்லலேகியம்.

அதிமதுரம் லவங்கம் லவங்கப்பட்டை சிற்றரத்தை பேரத்தை ஜாதிக்காய் ஜாதிபத்திரி தாளிசபத்திரி இவையாவும் வகைக்கு அரை விராகனிடை.

செய்பாகம் :- மேற்கூறப்பட்ட 15-வித கடைச்சரக்குகளை இடித்துதூள் செய்து வஸ்திரகாயம் செய்து வைத்துக் கொள்க. பிறகு இத்துடன் மூலிகைசாறுதேன் முதலியவைகளை யொன்று சேர்த்து ஓர் புது சட்டியில் அடுப்பிலேற்றிச் சிறுதீயாக எரித்து துழவிக் கொடுத்து கொண்டே வரவும் விரலழுந்தும் பாகு பதத்தில் கீழிறக்கி பதஞ்செய்க இதில் வேளைக்குச் சுண்டைக்காய்ப் பிரமாணம் தினம் 3-வேளை அருந்தி வர ஈளை இருமல் சுவாசகாசம் கபக்கட்டு முதலியன குணமாகும் குழந்தைகட்டு அதில் சிறிதளவு விரலால் தொட்டு அடிக்கடி நாவில் தடவிவர கக்குவா இருமல் கபக்கட்டு முதலியன குணமாகும்.

பெருங்காயம் லேகியம்

சரக்குகள் :- பொரித்தகாயம் கிராம்பு வால்மிளகு சிற்றரத்தை கோஷ்டம் லவங்கப்பட்டை லவங்கப்பத்திரி ஏலம் செவ்வியம் கண்டுப்பாரங்கி சடாமாஞ்சில் வாய்விளங்கம் கருஞ்சீரகம் சோம்பு சதகுப்பை அதிமதுரம் இவைகள் வகைக்கு அரைபலம் சுக்கு திப்பிலி மிளகு திப்பிலிமூலம் தாளிசபத்திரி கசகசா இவை வகைக்கு ¼ பலம். பறங்கிச்சக்கை 1 பலம் ஓமம் 2½ பலம். சாதிக்காய் அரைக்கால்பலம்.

செய்பாகம் :- இவைகளை இளம் வறுப்பாய் வறுத்து இடித்துச் சூரணம் செய்து வைத்துக்கொள்க. பின்பு 20-பலம் பனைவெல்லத்தை ஜலம்விட்டு கரைத்து வடிகட்டி ஓர்கடாயிலிட்டு அடுப்பிலேற்றி எரித்துப் பாகுபதத்தில் முன்தயார் செய்து வைத்துள்ள சூரணத்தை கொட்டி கிளரி 5-பலம் நெய் சேர்த்து கிண்டி இறக்குக.

இதில் வேளைக்கு அரைதோலா வீதம்தினம் இரு வேளையாக கொடுத்துவர பிரசவித்த ஸ்த்ரீகளுக்கு காணும்

உதிரச்சிக்கலை நீக்கிசூதக தடையினால் ஏற்படக்கூடிய நோய்கள் யாவும் வராதபடி தடுக்கும். மற்றும் வயிற்றில் தங்கிய வாயுவை வெளியேற்றி வயிறு உப்பிசத்தை நீக்கும் பசிதீபனம் தூண்டும் அஜீரணத்தை போக்கி நன்கு ஜீரணசக்தி தரும். மற்றுமுள்ள வாயு தொந்தரவை நீக்கும்.

சுக பேதி லேகியம்

சரக்குகள் :- சூரத்து நிலாவரை 1/2 சேர். நயம்ரோஜா மொட்டு ½ சேர். குல்கந்து 1 சேர். பாதம்பருப்பு ¼ சேர். கடுக்காய்ப்பூ. 1 பலம் இவையாவையும் அரைத்து லேகியமாக்கிக் கொள்ளவும்.

உபயோகம் :- மலச்சிக்கல். இடுப்பு முழங்கால். குதிக்கால். நீர். வலி. மூலச்சூடு. வயிர்கடுப்பு. வயிற்றுப் புண் இவைகுணமாகும் இதுகற்பிணிகளும் உபயோகப்படுத்துவது நலம்.

தாதுபுஷ்டி லேகியம்

சரக்கு :- நீர்முள்ளி விதை 4-பலம். எள்ளு 1-பலம் கடலைமாவு 2-பலம். சாதிக்காய் 1 விராகனிடை. சாதிபத்திரி 1-விராகனிடை. கிராம்பு 1-விராகனிடை புரசன் பிசின் 3-விராகனிடை நிலக்கடம்பு 1-விராகனிடை.

செய்பாகம் :- இவையாவையும் சூரணித்து ஒரு முற்றின தேங்காயில் ஒருகண் திறந்துயாவும் உள்செலுத்தி வாயைமூடி ¼ விரக்கடை கனத்தில் அதற்கு சாணியால் கவசம்செய்து புடம்போட்டு தேங்காய் வெடித்த உடனே எடுத்து அதனுள் இருப்பவை யாவையும் 5-பலம் வெல்லமும் சேர்த்து லேகியமாக்கி தினம் 2-வேளை பாக்களவு சாப்பிட வீரிய விருத்தியுண்டாகும் இடுப்பு வலி தீரும் இதுவெகு நல்லலேகியம்.

பெருங்காயம் லேகியம்

அசல் கடாமார்க்கு பெருங்காயம் 1 பலம் சுத்தமான தண்ணீரில் போட்டுக் கரைத்து 8-ல் ஓர் பாகமாக வற்றவைத்து பத்துபலம் ஜீனியைப்போட்டுப் பாகுசெய்து அதில் வெள்ளைப்பூண்டு. கடுகு மிளகு சுக்கு வகைக்குபலம் ஒன்றைப் பொடித்துப் போட்டு 5 பலம் நெய்விட்டு கிண்டிமெழுகு பதத்தில் இறக்கி வைத்துக்கொண்டு காலைமாலை இருபோது சுண்டைக்காய் அளவு சாப்பிட்டுவர வாயுசம்பந்தமான தொல்லைகள் தீரும்.

குறிப்பு :- மேற்படி லேகியத்தில் வெள்ளை பூண்டு 5-பலம் சேர்க்கவும் நெய்கால்படி சேர்க்கவும்.

திரிதோஷ லேகியம்

சரக்கு :- சடாமாஞ்சில். சூதேபல்சான். பெரிய லவங்கப்பட்டை. அசாரூன். சிறுலவங்கப்பட்டை. கோஷ்டம் சித்தரத்தை. சராயித்தா. திரிகடுகு. குங்குமப்பூ. கோரைக்கிழங்கு மவரீத் இவையாவும் வகைக்கு 1-பலம். ரூமஸ்தகி பலம் ½.

செய்பாகம் :- இவை யாவையும் தனித்தனியே சூரணம் செய்துபின் எடைபடி எடைபோட்டு வொன்று கலந்து வெள்ளை சர்க்கரை பலம் 46½ யை பாகுசெய்து பதத்தில்கீழ் இறக்கி சூரணங்களை கொட்டிக் கிண்டி எடுத்து வேறு ஜாடியில் பத்திரப்படுத்துக.

திரிதோஷ லேகியத்தின் குணம்

உபயோகம் :- இரவில் போஜனம் செய்யும் முன்பாவது அல்லது போஜனம் செய்த பின்பாவது இந்த லேகியத்தில் 2-விராகனிடை வீதம் அல்லது 3-விராகனெடை வீதம் எடுத்து சாப்பிட்டுவரவும். இதனால் சரீரத்தின் உள் உருப்புகளுக்கு நல்லமுறையில் பலன் தரும். குளிர்ச்சியை உண்டாக்கும் சிறுநீர் அதிகமாக போவதை குறைக்கும் தாதுகளுக்கு பலமும்

புஷ்டியும் கொடுக்கும். பயித்திய ரோகங்கள் தீரும். இருமல். மூலநோய். பாதநோய். கால்விரல்களின் இசிவுபடைகள். கல்லடைப்பு. நீர்தாரை ரோகங்கள் தீரும் ரோமங்கள் கருக்கும்.

இத்திரிப்பல் லேகியம்

சரக்கு :- கடுக்காய். உஸ்தகதூஸ். நெல்லிக்கர்ய் சக்மூனியா. தான்றிக்காய். கத்தீரா (பாதம்பிசின்) இவை வகைக்கு பலம் 1. நாட்டுசிவதைவேர். காவஜ்பான். குலேபனப்ஷா குலேபாபூனா. குலேகாஜ்பான். பாஸ்பாயீஞ்சு. கர்பஸ். (ஓமம்) இவை 6-ம் வகைக்கு பலம் ½ தருணஸ் அகாபி அப்திமூன். காரீகூன் இவை 3-ம் வகைக்கு பலம் ¼ தேன் 1 வீசை பாதாம் எண்ணெய் 5-பலம்.

செய்பாகம் :- மேற்கூறுப்பட்ட சரக்குகளை தனித்தனியே இடித்து சலித்து மேற்கண்டபடி எடை செய்துபின் எல்லாவகை சூரணங்களையும் ஒன்று கலந்து வைத்துக்கொண்டு தேனை ஒரு சட்டியிலிட்டு காய்ச்சும் பொழுது (நன்றாக சூடேறின பின்) ஒரு கோழிமுட்டையின் வெண்கருவை உடைத்து மஞ்சள் கருவை அப்புறப்படுத்திவிட்டு நன்றாக காய்ச்ச தேன் மீது அழுக்கு நுரையாக தல்லும் அதனை வழித்து அப்புறப்படுத்தி பின்முன் கலந்து வைத்துள்ள தூள்யாவும் சிறிது சிறிதாக தூவி கொண்டே கிண்டி கீழ் இறக்கி பின்பாதாம் எண்ணெயும் விட்டு கிண்டி பிசிரி ஆறியபின் லேகியம் செய்யப்பட்ட தேதியையும் குறித்து வைக்கவும்.

உபயோகம் :- பிளட்பெஷர் என்னும் ரத்தக்கொதிப்பு அல்லது ரத்த அமுக்கம். ரத்தபித்தம் எனக்கூடிய வியாதிகளுக்கு மிகசிறந்த லேகியமாகும் மற்றும் தலைவலி மயக்கம் திக்பிரமை. தலைசுற்றல். பேசமுடியாத நிலையில். முச்சுதிணரல். சுவாசபந்தனம் போல் இருத்தல் தேகபடபடப்பு முதலிய வியாதிகளை குணமாக்கி ரத்த ஓட்டத்தையும் சீறாக்கி முளையிலுள்ள அசுத்த மாசுக்களை வெளிப்படுத்தி சரீரசுகம் தரும்.

அளவு :- சுண்டைக்கர்ய் அளவுதினம் ஒருவேளையே போதுமானது. தேவையிருப்பின் இருவேளை கொடுக்கலாம்.

குறிப்பு :- சிரசை பற்றிய எல்லா விதமான வியாதிகளுக்கும் இந்த லேகியத்தை கையாளலாம்.

நரசிங்க லேகியம்

சரக்கு :- தண்ணீர்விட்டான் கிழங்கு 10 பலம், எள்ளு 20 பலம், நெருஞ்சிமுள்ளு 20 பலம், சீந்தில் உப்பு 20 பலம் பால்மொதுக்கன் கிழங்குதூள் ½ பலம், ஊமத்தன் விதைபடி ½ பலம் சிகப்பு சித்ர மூலம் 10 பலம் சேங்கொட்டை 32 பலம் சுக்கு 8 பலம், மிளகு 8 பலம் திப்பிலி 8 பலம்.

செய்பாகம் :- இந்த சரக்குகள் யாவும் சூரணமாக செய்து கொண்டு கல்வத்திலிட்டு சீனிபலம் 70, தேன்பலம் 35 பசும் நெய்பலம் 17½ விட்டு நன்றாக அரைத்து அரைத்துவிட்டு பின் சாதிக்காய், சாதிபத்திரி கிராம்பு, அதிமதுரம், பீதரோகணி ஏலம் இந்தவகைக்கு பலம் 4 நிறுத்தெடுத்து சூரணம் செய்து முன்முடித்துள்ள லேகியத்தில் தூவி ஒரு துடுப்பால் கிளரி யெடுத்து ஒரு மாதகாலம் நெல்லுக்குள் வைத்து பின் எடுத்துக்கொள்ளவும்.

உபயோகமும் குணமும் :- மேற்படி லேகியத்தில் சுண்டைக்காய் அளவு எடுத்து காலைமாலை இருநேரம் சாப்பிடவேண்டும். இவ்வாறு 30-நாள் சாப்பிடவும்.

தீரும் நோய்கள் :- நரைதிரைப் போகும் வாதபித்த சிலேத்துமத்தால் வந்தநோய்கள் அனைத்தும் தீரும். வாதபித்த சிலேத்துமத்தை சமநிலைப்படுத்தி தேகத்தை வஜ்ரகாயமாக்கும். இந்த லேகியத்தை சாப்பிட்டு வருபவர்கள் பெண்களிடம் சேர்க்கை இல்லாது இருந்தால் வயது 200 வருடம் வாழவைக்கும் பெண்களிடம் போகிக்க வேண்டுமானாலும் போகிக்கலாம் தாதுவைக்கட்டிப் போகத்தை வெகுநேரம் நீடிக்கச் செய்யும். மற்றும் 18-வித குஷ்டரோகங்களுக்கும் வெண் குஷ்டரோகமும்

புண்புரை, கிரந்திரோகம், க்ஷயம், இருமல், விக்கல், வாந்தி, நாக்கில் வரும் நோய் பல் சம்பந்தமான பல் அசைவு பல்சொத்தை பல்வலிகுத்தல் பீனிசங்கள் நாற்றம், சிரோரோகம், கண்ரோகம், பவுத்திரம், மூலரோகம், மூலநோய் 6-ம் தீரும். மற்றும் நீராம்பல் கவுசி, காந்தல், ஜலமகோதரம், ஜன்னி, பீடை, தோஷம், நீரிழிவு, மேகவாயு புத்தியை மயக்கும் பித்த ரோகமும் தீரும் மற்றும் பிறமிக்கும் தன்மைநீக்கி புத்திக்கு தெளிவு தரும். மற்றும் இந்த லேகியத்தில் அயச்செந்தூரம், காந்தசெந்தூரம், அப்ரேகபற்பம், தங்கபற்பம், வங்கபற்பம், இதுகளில் ஏதேனும் மொன்றை அனுபானம்போல் வியாதிகள் அரிந்து கொடுத்துவர அந்நோய்கள் தீருவதுமன்றி தேகம் பலக்கும் இதுமகத்தான காயகற்பமாகும். ஒவ்வொன்றிலும் தனித்து சாப்பிடவும்.

குறிப்பு :- இல்லறத்தில் இருக்கும் சதிபதி இருவரும் லேகியத்தை சாப்பிட வேண்டும். ஒருவர் மட்டும் தனித்து சாப்பிடுவது தீங்கை விளைவிக்கும். பிரமச் சாரிகள் சாப்பிடலாம் பெண்மலடுக்கு இந்த லேகியத்தை கொடுத்தால் மலடு நீங்கி அழகான குழந்தைகளை பெற்றெடுப்பாள். குழந்தை மன்மதன் போல் கலையுள்ளவனாகவும் பராக்கிரமசாலியாகவும் அறிவோடு கூடியவனாகவும் அவதரிப்பான். இந்த லேகியம் அருந்துபவர்கள் பத்தியம் இருக்க வேண்டியதில்லை.

இஞ்சி கண்டாத்திரி லேகியம்

இஞ்சி ½ வீசை கொண்டுவந்து மேற்பரணையை சீவிப்போட்டு மெல்லியதாய் குண்டுமணிப்பிரமாணம் ஓரேவிதமாய் அறுத்து நிலவில் உலர்த்தி இதனுடன் சேரும் வகைகள் மிளகு பலம் ½ சடாமாஞ்சிபலம் ½, எட்டி மதுக்கம் பலம் ½, கோஷ்டம் பலம் ½ மஞ்ஜிஸ்டி பலம் ½, ஓமம்பலம் ½ திப்பிலி பலம் ½ மிளகு பலம் ½ சுக்குபலம் ¾, வெட்டிவேர் ¼ பலம் வால்மிளகு ¼, இலவங்கம் ¼ பலம், கடுக்காய் 1/4 பலம்,

நெல்லிப்பருப்பு ¼ பலம். தான்றிக்காய் 1/4 பலம். கடுக்காய் ¼ பலம் வால்மிளகு ¼ பலம். கொத்தமல்லி விதை ¼ பலம். சாதிக்காய் விராகனிடை 1. மூங்கில் உப்புபலம் ¼ பலம். சாதிபத்திரி விராகனிடை 1. சந்தனக்கட்டை 4 பலம் 1/4. கருங்காலிப்பட்டை ¼ பலம். கற்கண்டு ½ பலம். திராட்சைப்பழம் 1/2 பலம். பேரிச்சங்காய் ½ பலம். தேன் 3 பலம். நெய் 6 பலம். சர்க்கரை ½ வீசை மேற்கண்டவைகளில் மூங்கிலுப்பு. சாதிபத்திரி. சாதிக்காய். லவங்கம். திராட்சைப்பழம். கற்கண்டு. பேரிச்சங்காய் இவைகளை பிரித்து மற்றவைகளை இடித்து வஸ்திரகாயம் செய்து மேற்பிரித்து வைத்தவைகளை கல்வத்திலிட்டு பொடிசெய்து மேலே அறுத்து உலர்த்தி வைத்திருக்கிற இஞ்சியை அடுப்பின்மீது இரும்பு பாணாசட்டியை வைத்து அதில் போட்டு நெய்விட்டு பொன் வர்ணமாக வறுத்து உரலிலிட்டு சூரணமாய் இடித்து அதில் மேல் எழுதிய சூரணங்களையும் சர்க்கரையும் கூடசேர்த்து தேன்விட்டுக் கலக்கி மர்த்தனம் செய்து நெய்கலசத்தில் போட்டு வைத்துக்கொண்டு காலை மாலை இரண்டு வேளைகளிலும் இரண்டு விராகனிடை பிரமாணம் சாப்பிடவும்.

பத்தியம் :- இச்சாபத்தியம். புளியேப்பம். சோகை. காமாலை. காசம். சுவாசகாசம். அக்கினிமந்தம். குன்மம். லகு அக்கினி மந்து. மலக்கட்டு முதலாவது நிவர்த்தியாகும்

சிவசக்தி லேகியம்

(குஷ்டம் கிரந்திகளுக்கு நலம்)

சரக்குகள் :- சுத்திசெய்த நெல்லிக்கா கெந்தி 8 பலம் வாலைரசம் 4 பலம்.

செய்பாகம் :- இவை இரண்டையும் கூட்டி 2-சாமம் அரைத்து எடுத்து சீனிசர்க்கரை பலம்-34 ஏலம். கிராம்பு ஜாதிபத்திரி அதிமதுரம். ஓமம் சித்தரத்தை மிளகு. வாலுவை அரிசி. சுக்கு. சித்ரமூலப் பட்டை. திப்பிலி வகைக்கு 1 பலம் பொன்வறுவலாக வறுத்து சூரணம் செய்து கூட்டி நல்ல

தேனைவிட்டுக் காய்ச்சி. அழுக்கை நீக்கி கடுகையில் தானே முன்தினுசுகளை இட்டுப் பிசைந்து லேகியபதமாக செய்து கொண்டு வேளைக்கு ½ தோலா வீதம் இருவேளையாக ரோக நிதானத்துக்கேற்றவாறு ½ அல்லது ¼ அல்லது ஒரு மண்டலம் கொடுக்க உப்பு. புளிப்பு. கரப்பான். நீக்கிய ஆகாரம் கொடுக்கவும். குட்டம். கெற்பநோய் கிரந்தி. பக்கபவுத்திரம். பொடிபவுத்திரம் கண்டமாலை வாதநோய்கள் தீர்ந்து தாது வலிமை உண்டாகும். பின் முத்தெண்ணை ஸ்நானம் செய்யவும்.

பருத்திக்கொட்டை லேகியம்

பருத்திக்கொட்டை 1 வீசை மல்லி. நீர்முள்ளி வித்து நிலப்பனை கிழங்கு. பஞ்சாப்சாலே மிசிரி அரிசிதிப்பிலி. பூமிசர்க்கரைக்கிழங்கு. நெல்லிமுள்ளி. அதிவிடயம். கடுக்காய்த்தோல். பூனைக்காணிவிதை. துத்திவிதை. லவங்கப்பட்டை. கசகசா சாதிபத்திரி. பிஸ்தாபருப்பு. சுக்கு. சாரைபருப்பு. வால்மிளகு. சிறுநாகப்பூ. சீரகம். ஜாதிக்காய். வெண்கோஷ்டம். முருங்கைவிதை. ஆலம்விதை. எலவம் பிசின். கருவபிசின். முருங்கபிசின் இவைகள் வகைக்கு 1 பலம் பாதாம்பருப்பு 2½ பலம் பசுவின்பால் ½ படி பேரிச்சங்காய் 5-பலம். இளநீர் ½ படி. காரட்டு 10 பலம் உருண்டை வெல்லம் 2 வீசை நெய் ½ வீசை.

செய்பாகம் :- முதல்நாள் பருத்திக் கொட்டையை ஜலத்தில் ஊரவைத்து மறுநாள் ஆட்டுரலில் ஆட்டி பால்பிழிந்து அத்துடன் பாதாம்பருப்பு. கசகசா. பிஸ்தாபருப்பு சாரைபருப்பு. பூனைகாலிவிதை இவைகளையும் ஆட்டுரலில் தனித்தனியே ஆட்டி அல்லது அம்மியில் ஊரவைத்து அரைத்தெடுத்து அத்துடன் பசும் பாலும் சேர்த்து இளநீர் சேர்த்து அடுப்பிலிட்டு சிறுதீயாக எரித்து குழம்புபதமாய் திக்கானவுடன் வறுத்து இடித்த சூரணமும் சாதாவாக இடித்த சூரணமும் போட்டுகிண்டி உறவானதும் உருண்டை வெல்லத்தை பாகுகாய்ச்சி அத்துடன் இந்த குழம்பை விட்டு கிண்டிகீழ் இறக்கிவைத்து நீர்முள்ளி

விதையை சூரணம் செய்த்தை தூவிபிரட்டி ஒன்று கலந்த்தும் ஜாடியில் பதனப்படுத்துக.

குறிப்பு :- சூரண வகைகளோடு நீர்முள்ளி வித்தைக் கலக்கக்கூடாது. அப்படி கலந்தால் பிசறிக்கொண்டு கிண்டவோ சரக்குகள் ஒன்று கலக்கவோ செய்யாது இந்தநீர் முள்ளியை கடைசியாக லேகியத்தை கீழ் இறக்கியபின் தான் கலக்க வேண்டும்.

உபயோகம் :- இந்த லேகியத்தை காலை மாலை கழற்சி கொட்டை பிராணம் சாப்பிட தேகபுஷ்டியும் விந்து அதிகரித்தலும், விந்துகட்டும். போகத்தில் இன்பம் காணுதலும் உண்டாகும்.

சேங்கொட்டை லேகியம்

சரக்கு :- சேங்கொட்டை பலம் 2, எட்டிக்கொட்டை பலம் 1, தேத்தான்கொட்டை பலம் 1, சித்ரமூலவேர்ப்பட்டை பலம் 1, பரங்கிப்பட்டை பலம் 1, கருஞ்சீரகம் பலம் ½, நெய்பலம் 8, நாட்டுச்சர்க்கரை பலம் 16.

செய்பாகம் :- தேத்தான் கொட்டை எட்டி கொட்டை இவைகளின் மேல்தோல் சீவி தண்ணீரில் 3-நாள் ஊறப்போட்டு எடுத்துபின் எட்டிக்கொட்டையை நாவல்பட்டைச்சாற்றில் வேகவைத்து எடுத்துக்கொண்டு பின் சேங்கொட்டையின் மூக்கை வெட்டி எடுத்து 2-பலம் நெய்விட்டு வறுத்தெடுத்து பழைய துணியில் நெய்போக துடைத்து. மேற்படி 3-சரக்கையும் ஆட்டு உரலிலிட்டு ஆட்டிவழித்து கடைசரக்குகளை இடித்து சூரணித்து சர்க்கரைபாகு செய்து அதில் ஆட்டி எடுத்த விழுதையும் சூரணத்தையும் பிசரிபாட்டிலிலிட்டு கிளரி நெய்விட்டு இறக்கவும்.

உபயோகம் :- மேகம், மேகத்தடிப்பு, மதமதப்பு, வெண்குஷ்டம், வெள்ளைவெட்டை, காணாகடிகூஷயம், கீல்பிடிப்பு, சூலை, சிரங்கு, கருமேகம், செம்மேகம், கிரந்தி,

கைகால்வெடிப்பு, அண்டவாதம், கைகருப்பு, முகம்கருப்பு, கால்கருப்பு குணமாகும்.

வில்வாதி லேகியம்

சரக்கு :- வில்வவேர் 5 பலம், வில்வப்பழம்-10

செய்பாகம் :- 12-படி தண்ணீர் விட்டு 3 படியாக வற்றவைத்து எடுத்துகொள்ளவும் வெல்லம் பலம் 10 பாகுசெய்து இதில்போட வேண்டியசரக்கின் சூரணங்களாவது திப்பிலிமூலம், அதிமதுரம், செவியம் கூகை நீர், சித்திரமூலம், வாலுளுவை அரிசி, மிளகு, சடாமாஞ்சில், நற்சிரகம், ஆனைகொம்பு அதிவிடயம், ஏலம், அகில், லவங்கம், இந்துப்பு, சிறுநாகப்பூ, தாளிசபத்திரி இவை வகைக்கு பலம் 2 கிராம்பு சாதிக்காய் சாதிபத்திரி இவை வகைக்கு விராகனிடை 2 நெய் காலே அரைக்கால்படி, தேன்முக்கால்படி, இவைகளை முறைப்படி செய்து வைக்கவும் இதனை ஒரு கொட்டைப்பாக்கு அளவுகாலை மாலை சாப்பிட்டுவர குன்மம், சத்திவிக்கல், நெஞ்சுவலி, அரோசகம், மூக்கு நீர்பாச்சல், சூலைளரிவு, காமாலை, கிராணி, இளை, இருமல், வயிற்றுவலி கிருமி மூலம் தீரும்.

விரோசனத்திரிபலாதி லேகியம்

சரக்குகள் :- மஞ்சள் கடுக்காய்தோல், சூரத்துக் கடுக்காய்தோல், கற்கடகசிங்கி, தான்றிக்காய்தோல், நெல்லி முள்ளி, பஸ் பாயிஜ் உஸ்தூகுதூஸ் கவுஜீரான் சுத்தி செய்யப்பட்ட காரிகியூன் சோம்பு இவைவகைக்கு 2-வராகனிடை இவற்றின் சூரணம் ஒன்றுக்கு வராகனிடை விதை நீக்கப் பட்டதிராகஷப் பழம் சூரத்து நிலாவாரைச் சூரணம் இவை வகை ஒன்றுக்கு விராகனிடை 3-சுத்தி செய்யப்பட்ட.சீமைசிவதை வேர்ப்பட்டை சூரணம் மேல்தோல் நீக்கப்பட்ட வாதுமைப்பருப்பு இவைவகை ஒன்றுக்கு வராகனிடை 3-வாதுமை நெய் அல்லது பசுவின்நெய் செல்லத்தக்க அளவு காய்ச்சி நுரை நீக்கப்பட்ட சுத்தமான தேன் பலம் 18.

செய்முன்ற :- வாதுமை பருப்பையும் திராட்சைப் பழத்தையும் கல்வத்திலிட்டு மைபோல் அரைத்து மற்றசூரணங்களை எல்லாம் ஒன்றாய் கலந்து தேன்விட்டு நன்றாய் மத்தித்துக் கொள்ளவேண்டும்.

பிரமாணம் :- வராகனிடை 2.4. இதனை அசுத்த சத்துக்களைப் பக்குவப்படுத்திய பின் உபயோகிக்க வேண்டும்.

உபயோகம்:- மூளையிலுள்ள அசுத்த மாசுக்களை நீக்கி சுத்தி செய்து நாள்பட்ட தீராத தலைநோய் தலைவலியை போக்கி குணம் தரும் மற்றும் பித்தமயக்கம் தலை சற்றல் ரெத்தமுக்கம் (பிளட்பெஷர்) வியாதிக்கு மிக்க உப்யோகமான லேகியமாகும் நல்ல முறையில் மலசுத்தியாகும்.

தேன் சுத்தி செய்யும் விதமானது :- சட்டியிலிட்டு தேன் காய்ச்சும் பொழுது கோழிமுட்டை வெண்கருவை மட்டும் பொத்து ஊத்தநுரை திரண்டுவரும். அதனை சட்டுவத்தால் வழித்து தூரபோடவும்.

சன்மார்க்கி மதுபானம்

செம்பரத்தம் பூக்கள் 100 இவற்றின் இதழ்களை மாத்திரம் எடுத்து 6-பலம் எலுமிச்சம்பழம் சாறுவிட்டு பிசைந்து ஒரு பீங்கான் பாத்திரத்தில் போட்டு பனியில் அல்லது வெய்யலில் ஆகாயத்தின் கீழ் ஒரு இரவுவைத்து 2-4-பலம் சீனிசர்க்கரையுடன் ¼ படி மழை தண்ணீரைச்சேர்த்துக் காய்ச்சின சர்பத்தைச் சேர்த்து ஒருபெரிய சீசாவில் பாதியிருக்கும்படியாக வார்த்து தண்ணீரில் சீசாவின் கழுத்து வரையில் அழுத்தி வைத்து 3-அல்லது 4-நாள் சென்றபின் எடுக்கப் புளிப்பேறி நுரைத்திருக்கும். அதையெடுத்து வடிகட்டிப் பத்திரப்படுத்தவும்.

பிரமாணம் :- 1, 3 வரை பலம் உபயோகிக்கலாம்.

உபயோகம் :- உஷ்ணசம்பந்த மார்பு அதிர்ச்சி சீதள சம்பந்த மார்பு அதிர்ச்சி, இரப்பை, உதரம், கருப்பை

ஆகியவைகளிலிருந்தெழும் ஆவியாலுண்டாகும் வியாதிகள் மனகிலேசம் பைத்திய ரோகங்கள் முதலியவைத்தீரும். முகமானது ரோஜாப்பூவர்ணமாம் மனக்களிப்பை உண்டாக்கும். ஆனந்தமான போதைத்தரும்.

குறிப்பு :- போதை அதிகமாக வேண்டுமானால் சீசாவின் மருந்துடன் 4. 5. விராகனிடை குருசானி ஓமத்தையும் சேர்க்கவேண்டும். உஷ்ணசுப்பாவ ஈரளையும் பலப்படுத்த வேண்டுமானால் .மழைதண்ணீருக்குப் பதில்மாதுளப் பழச்சாற்றை சேர்க்கவும் மேற்கண்ட சன்மார்க்கி மதுபிளட்பெஷர் என்று கூறப்படும் ரத்தகொதிப்பு வியாதிக்கு கொடுத்து குணம் காணப்பட்டிருக்கிறது.

பல்லாதகி ஜவாரீஷ்

மூக்கு நறுக்கப்பட்ட சேங்கொட்டை, பசுவின் நெய்தேன் நாட்டு வெல்லம் இவைவகைக்கு பலம் 24-பசுவின் பால்படி 2½ மேல்தோல் போக்கின சுக்கு, அரிசிதிப்பிலி, தாளிசபத்திரி இவற்றின் சூரணம் வகைக்கு வராகனிடை 3½.

செய்முறை :- இவற்றுள் சேங்கொட்டைப் பாலில் போட்டுக்காய்ச்சி தையிலம் வெளிப்பட்ட பின் கீழிறக்கி ஜாக்கிரதையாய்ப் பிழிந்துவடிகட்டி நெய், தேன், வெல்லம் ஆகியவைகளையும் சேர்த்துக் காய்ச்சி ஹல்வா பதத்திறக்கியாறவிட்டு சூரணங்களை யொன்றாய் கலந்து நன்றாய்க்கிண்டி கிளரிப் பத்திரப்படுத்த வேண்டும்.

அளவு :- வராகனிடை 5, 6½ சாப்பிடலாம்.

உபயோகம் :- முகவாதம், பக்ஷவாதம், நடுக்கல்ரோகம், இசிவுரோகம், விசைநரம்புத் தளர்ச்சி, நரம்பு தளர்ச்சி பால்யசேஷ்டையால் உண்டான நரம்பு தளர்ச்சி முதலியவைகள் தீரும், தாருட்டிய விருத்தி உண்டாகும்.

பிரபலத்திரிபலாதி

சரக்குகள் :- சூரத்துக்கடுக்காய்த்தோல் தான்றிக் காய்தோல் நெல்லிமுள்ளி சுத்திசெய்யப்பட்ட சிவதைவேர்ப்பட்டை கர்கடக சிங்கி இவற்றின் சூரணம் வகைக்கு 1-பலம் சோம்பு. சூமஸ்திகி. உலிதுகுதூஸ் சுத்தி செய்யப்பட்ட மகமூதா நேவல்சீனி இவற்றின் சூரணம் வகை ஒன்றுக்கு வராகனிடை 1 தேன் 22½ பலம்.

செய்முறை :- சூரணங்கள் யாவும் யொன்றாய் மிஸ்ரமித்து தேன்விட்டு பிசைந்துப்பீங்கான் பாத்திரத்தில் பத்திரப்படுத்தவும்.

பிரமாணம் :- 2½ முதல் 4 வரை கொடுக்கலாம்.

உபயோகம் :- நாட்பட்ட தலைநோய் மூளையைச் சார்ந்த இதரரோகங்கள் ஆகியவைகள் தீரும். கண்நோய் காதுநோய் இரப்பைநோய் ஆகியவைகளை போக்கு விக்கும். சிரசிலுள்ள தடிப்பான பித்ததோஷத்தைச் சுத்தி செய்யும். இரப்பையினின்றெழுங்கெட்ட ஆவியாலுண்டாகும் கண்நோய் காதுநோய் ஆகியவைகளையும் கண்டிக்கும். இது உஷ்ணதேகிகளுக்கு அதிகம் பொருந்தினதாகும்.

குறிப்ப :- சீதள சம்பந்த வியாதிகளை உஷ்ணமருந்துகளைக் கொடுத்து நிவர்த்திக்க வேண்டியது முறை ஆனால் உஷ்ண தேகிகளுக்கு சீதளசம்பந்த வியாதிகண்டால் உஷ்ணமருந்துகள் பொருத்தாமல் அதிக மேற்படும் அந்த சமயங்களில் ஒரு வித விகற்பமின்றி உபயோகிக்க ஏற்றதாம்.

சாம்பற் பூசனிக்காய் லேகியம்

சாம்பற் பூசனிக்காய் ஒன்றைத்திருகி எடுத்துக்கொண்டு பிழிந்து திப்பியை நெய்யில் வதக்கி எடுத்துக்கொண்ட பின் இரண்டு வீசை எடை எடுத்துக் கொண்டு அதனுடன் திப்பிலி

சுக்கு அதிமதுரம். லவங்கம். ஏலரிசி. கொத்தமல்லி. கடுக்காய் தான்றிக்காய் நெல்லிக்காய் லவங்கப்பட்டை லவங்கப் பத்திரி மிளகு சீரகம் ஆக இவைகளை தூள்செய்து வஸ்திரகாயம் செய்தபின் வகைக்குபலம் 1 சர்க்கரை 2 வீசை நெய் 15 பலம் சேர்த்து லேகியமாக கிளரிக்கொள்ளவும்.

குறிப்பு :- பூசணிக்காயை திருகினபின் திப்பியைப் பிழிந்து இரசத்தை அடுப்பில் வைத்து வதக்கிய் திப்பியை கொட்டி வேகவைத்து நீர்சுண்டியபின் தூள் வகைகளைக் கொட்டி சர்க்கரை நெய்சேர்த்து லேகியத்தில் எடுத்துக்கொள்ள வேண்டும்.

லேகியபதமாவது :- கிளரும்போது எடுத்துப்பார்க்க லேகியபசை கையால் ஒட்டாமல் இருப்பது என்று உணரவும் சற்று முன் எடுத்தால் லேகியம் சிலநாளில் பாக பிடித்துவிடும் சற்றுநேரம் கழித்து எடுத்து முறிந்து கெட்டிப்பட்டு விடும் இதை யாதொரு பத்தியமின்றி சிறுவர்களுக்கு சதாகாலமும் கொடுத்துவரலாம் எலும்புருக்கிநோய் போக்கி உடம்பைத் தேற்றும் பலன் வரும்.

அளவு :- கழச்சிக்காய் அளவு சாப்பிடவும்.

பூண்டு லேகியம்

சரக்கு :- ஒருதலைப்பூண்டு பலம் 10 பனைவெல்லம் பலம் 10 சுக்கு 1 வெண்ணை பலம் 3. பசும்பால் படி ½

செய்பாகம் :- பசும்பாலை அடுப்பிலிட்டுக் காய்ச்சி அதில் பூண்டை உறித்துப்போட்டு வேகவைத்து மத்தால் கடைந்துபின் வெல்லத்தை தட்டிபோட்டு வெண்ணையும் அதிலிட்டு லேகியபதம் வந்ததும் இறக்கி பதனப்படுத்தவும்.

உபயோகம் :- காலை மாலை நெல்லிக்காய் அளவு சாப்பிட்டுவர வயிறு உப்பிசம் வாயு சம்மந்தப்பட்ட தொல்லை நீங்கும் க்ஷயம் இருமல் இவற்றிற்கு நல்லது வாயு பிரியும்.

சுகபேதி லேகியம்

சரக்குகள் :- சூரத்து நிலாவரை ½ சேர்பாதம்பருப்பு ¼ சேர் ரோஜாமொட்டு ½ சேர் கடுக்காய்பூ 1 பலம் குல்கந்து ¼ பலம் சூரத்துநிலாவரை ரோஜாபூ இவை வகைக்கு 1 வீசைதனியாக எடுத்து கிஷாயம் வைத்து சுண்டவைத்து அதில்மேற்படி மருந்துகளை அரைத்து வைக்கவும்.

தீரும் வியாதிகள் :- மல்ச்சிக்கல் இடுப்பு முழங்கால் குதிக்கால் நீர்வலி மூலச்சூடு வயிற்றுகடுப்பு வாய். வயிர் குடல்புண் தீரும். சுகமாக மலங்கழியும் பூரணகெற்ப ஸ்திரீகளுக்கு கொடுக்கலாம் குற்றம் காணாது சுகமுண்டாகும்.

கொழஞ்சிபழ லேகியம்

சரக்குகள் :- 25 கொழஞ்சி பழத்தின்சரர் சுக்கு 1 பலம். தானிசபத்திரி 1 பலம். மிளகு 1 பலம். சீரகம் 1 பலம். மல்லி விதை 1½ பலம் ஓமம் 1½ பலம். தேன் 3-பலம். பசும்நெய் 10 பலம் கருவேப்பிலை 1/2 வீசை.

செய்பாகம் :- இதனை கியாழம்வைத்து இதில் மேற்படி சார்சேர்த்து சர்க்கரை ½ வீசையில் பாகுசெய்து சூரணம்சேர்த்து கிளரிவைத்துக் கொள்ளலாம்.

தீரும் நோய் :- பித்தம் பசிமந்தம். அரோசிகம் மயக்கம் தலைசுற்றல் கிருகிருப்பு 40வகை பித்தம் ரோகம் தீரும்.

எலுமிச்சம்பழ லேகியம்

சரக்குகள் :- 25 எலுமிச்சம் பழத்தின் சார்எடுத்து 10 பலம் சீனி 12 பலம். சீரகம் 2 பலம் கசகசா 2 பலம் சுக்கு 1 பலம். திப்பிலி 1 பலம். தாளிசம் 1 பலம். ஜாதிக்காய் 1 பலம். கோஷ்டம் 1 பலம். நெய் 5 பலம். தேன் 5 பலம். சர்க்கரை இடை அளவு லேகியம்.

தீரும் நோய்கள் :- பித்தவாயு நெஞ்செறிவு தலைசுற்றல் மயக்கம். கைகால் எரிவு குன்மம் வயிற்றுவலி எரிகுன்மம் சத்திகுன்மம் தீரும்.

தாதுபுஷ்டி லேகியம்

சரக்கு :- திரிகடுகு 2 பலம் கசகசா 2 பலம் சாதிக்காய் 2 பலம் சாதிபத்திரி 2 பலம் நிலப்பானை கிழங்கு 2 பலம் வால்மிளகு 1 பலம். நீர்முள்ளிவிதை 10 பலம். பூனைக்காலி விதை 1 பலம். வெள்ளரிவிதை 1 பலம் வாய்விளங்கம் 1 பலம். கிராம்பு 1 பலம் தாமரைக்கிழங்கு 1 பலம் கருப்பு திராட்சை வத்தல் 10 பலம் பாதம்பருப்பு 10 பலம் ஜப்ஜாவிதை 2 பலம் பேரிச்சங்காய் 2 பலம் ஸ்கல்விதை 2 பலம் பூமி சர்க்கரை கிழங்கு 2 பலம் அஸ்வகெந்தி 2 பலம் முந்திரிபருப்பு 1 பலம் அதிமதுரம் 1 பலம் அத்திவிதை அரசம்விதை ஆலம்விதை தாமரைவிதை முருங்கவிதை ஆவாரம்பிசின் சோம்பு லவங்கப்பத்திரி சாரப்பருப்பு லவங்கப்பட்டை காமச்சர்க்கரை கருவேலன் பிசின் முருங்கைப்பிசின் கன்ன லவங்கப்பட்டை இவை வகைக்கு 1 பலம் அஸ்கா 1½ வீசை தேன் படி 1.

செய்பாகம் :- இதனை லேகிய முறைப்படி செய்யவும். இது நல்ல லேகியம் மூளை இருதயம் நரம்பு முதலிய ராஜ கருவிகளுக்கும் புஷ்டிதரும் விந்து கட்டும் விந்து ஊறும் பலம்தரும்.

கபரோக லேகியம்

சரக்குகள் :- தேத்தான் கொட்டை 3 பலம் தாளிசபத்திரி கருப்புகோஷ்டம். அரிசிதிப்பிலி அக்கிரகாரம் பூநீக்கிய லவங்கம் சுக்கு மிளகு சிறுதிப்பிலி இவைவகைக்கு 1 பலம் குங்குமப்பூ 1 கழஞ்சி கோரோசனை 1 கழஞ்சி.

செய்பாகம் :- இவை யாவையும் சூரணம் செய்து சமஎடை பனைவெல்லம் சேர்த்து நன்றாய் அரைக்கவும். இதனை காலை மாலை சாப்பிட்டு தூதுவிளங்காய்ப் பிரமாணம்

சாப்பிடவும் பின்சாப்பிட்டதும் பால்சாப்பிட வும் இதனால் கபரோகம் தீருமாயினும் இதனோடு பவளம் தாளகபற்பம் போன்ற செந்தூரபற்பங்களை கொடுக்க நல்லபலனைத் தரும்.

வல்லாரை லேகியம்

(அல்லல் கபரோக லேகியம் சிறந்த பாகம்)

சரக்கு :- திரிகடுகு வாய்விளங்கம் அரத்தை வெண்கோஷ்டம் அக்கிரகாரம் கிராம்பு ஜாதிபத்திரி தாளிசபத்திரி வர்ல்மிளகு ஏலம் இவையாவையும் வகைக்கு 1 பலம் வல்லாரை சார்படி ½ ஆடாதோடை ¼ படி துளசி இலைச்சார் ¼ படி மிளகரனை சார் ¼ படி வொற்றிலைச் சார் ¼ படி முசுமுசுக்கைசார் ¼ படி இஞ்சிசார் ½ படி கண்டங்கத்திரிசார் ¼ படி பசுவின் பால் ½ படி.

செய்பாகம் :- சூரணத்தின் எடைக்கு இரண்டு பங்கு பனைவெல்லம் நெய் தேன் செல்லத்தக்க அளவு லேகியவிதிப்படி லேகியம் செய்தபின் குங்குமப்பூ கோரோசனை கஸ்தூரி பவளபற்பம் இவைகளை வகைக்கு சிறிது சேர்த்துக்கொள்ளவும் இதனால் கபரோகம் தீரும் இந்த லேகியத்தில் முகம் கோணல் நிவர்த்திக்கப்பட்டிருக்கிறது சுவாசகாசம் க்ஷயம் தேகபலவீனம் கணைச்சூடு குணமாகும்.

வெள்ளைத்தாமரைப்பூ லேகியம்

சரக்கு :- வெள்ளைத்தாமரைப்பூ உலர்ந்தது 1-பலம் காசினிவிதை 1-பலம் திராட்சை பழம் 1-பலம் சீந்தில் கொடி 1 பலம் சுக்கு ½ பலம் திப்பிலி ¼ பலம் நெல்லி 1 பலம்.

செய்பாகம் :- இவைகளை ஒரு பசும்பாலில் வேகவைத்து சர்க்கரைபலம் 12 நெய் 7½ பலம் சேர்த்து லேகியபதமாகக் கிளரிக்கொண்டு காலை மாலைகளில் ஒரு தெச்சக்காய் அளவு சாப்பிட்டு வர இருதயவியாதி குணமாவதுடன் மூளைக்குபலம் தரும் மூளைபலப்பட்டால்

அறிவு விசாலப்படும் மற்றும் சுவாசகாச ரோகத்துக்கு சிறந்த சுவாசகுழாய் ரணத்தையும் ஆற்றும்.

குறிப்பு :- மேற்படி லேகியத்துக்கு சிகப்பு பூவும் வெள்ளை பூவும் கலந்து சாப்பிடவும்.

சுவாசகாசம், க்ஷயம், இருமல் முதலிய 96 கபரோகங்களுக்கு லேகியம்

சரக்குகள் :- திப்பிலி 10 பலம் மிளகு 5 பலம் சுக்கு 5 பலம் குரோசாணி கமபாரஷ்டகம் தாளிசபத்திரி லவங்கப்பத்திரி லவங்கப்பட்டை கடுக்காய் நெல்லிமுள்ளி லவங்கம் ஏலம் சித்திரமூலம் இவையாவும் 1 பலம்.

செய்பாகம் :- இவைகளைத் தனித்தனியே இளவறுப்பாய் வறுத்து சூரணித்து அத்துடன் சீனி 4-சேர் சேர்த்து தேன் விட்டுப் பிசைந்து கொட்டைப் பாக்களவு அந்திசந்தி சாப்பிட்டுவர சகல க்ஷயரோகங்களும் திருவருளால் குணம் உண்டாகும்.

வில்லாதி லேகியம்

சரக்கு :- வில்வ இலை உலர்த்தி தூள்செய்து 4 பலம் வஸ்திரகாயம் செய்தது மிளகுதூள் 1 பலம் சுக்குத் தூள் 1 பலம் திப்பிலித்தூள் 1 பலம் மூங்கிலுப்பு ¼ பலம் பனைவெல்லம் 13 பலம் பசுவின்பால் ½ படி.

செய்பாகம் :- சேர்த்துக்காய்ச்சி நெய் சேர்த்து லேகியமாய் கிளரிவைத்து கொண்டு காலை மாலை இருவேளையும் கழற்சிக்காய் அளவு சாப்பிட்டு வர வயிற்று வலி அஜீரணம் குன்மம் பசிமந்தம் உஷ்ணபேதி பித்தவாயு இவைகள் குணமாகும் மற்றும் தேககாந்தல் கைகால் எரிச்சல் சீதபேதி இரத்தபேதி இவைகளையும் குணம் செய்யும்.

புருஷரெத்தின லேகியம்

நிலவில் உலர்த்திய ஓரிதழ் தாமரை பலம் 4 பொட்டு போக தேய்த்து எடுத்த சீரகத்தை எலுமிச்சம்பழ சாற்றிலூரப்போட்டு இரவியில் உலர்த்தி எடுத்து 4 பலம் நறுத்தாழிக்கீரை நிழலிலுளர்த்தியது 2 பலம் பசும்பாலில் வேகப்போட்டு உலர்த்தி எடுத்து நிலப்பனைக்கிழங்கு 2 பலம் இவைகளெல்லாம் ஒருமிக்கச் சேர்த்து இடித்து சூரணம் செய்துவைத்துக் கொள்க ஒருாயம் பூசிய பாத்திரத்தில் 5 கோழிமுட்டையின் வெண்கருவை விட்டு அதனுடன் 10 பலம் வெள்ளைவெங்காயச் சாறுவிட்டு நன்றாய் மத்திக்கவும் இவைகள் நன்றாய் உறவான பதத்தைக் கண்டுணர்ந்து மீண்டும் அதனுடன் 5 பலம் பசும் வெண்ணையை யாவது அல்லது எருமையின் வெண்ணையையாவது கூட்டி நன்றாய் மத்திக்கவும் இவைகள் யாவும் கலந்து நன்றாய் உறவான பதத்தில் முன் சுத்தப்படுத்தியுள்ளச் சூரணத்தைக் கொட்டிக்கிளரி நன்றாய் உறவானபின் 15 பலம் சுத்தமான தேனை விட்டுப் பிசைந்து லேகியமாகச் செய்துக் கொள்க இதனை தினந்தோறும் இரவியில் வைத்துக் கொண்டு வரக்கெடுதல் அடையாது.

உபயோகம் :- இந்த லேகியத்தை தினம் இருவேளை அந்தி சந்திக்கொட்டைப்பாக்கு பிரமாணம் உட்கொள்ளச் சொர்பணஸ்கலிதம் நிவர்த்தியாகும் சரீரத்திலுள்ள துர்பலத்தை போக்கி தாதுவை விர்த்திசெய்து போக இச்சையை அதிகப்படுத்தி இந்திரியத்தைக் கட்டி தேககாந்தியை உண்டாக்கும்.

மதுமேக லேகியம்

எள்ளுப்பிண்ணாக்கு ½ பலம் ஆவிரம்பட்டை 1/2 பலம் பருத்தி பருப்பு 4 தோலா வால்மிளகு 2 தோலா இலவங்கப்பட்டை 2-தோலா மாசிக்காய் 1 தோலா சிறுநாகப்பூ 1 தோலா பறங்கிப்பட்டை 2 தோலா பசுவின்பால் ½ தோலா நல்லெண்ணெய் 6 தோலா பழைய வெல்லம் 7½ தோலா.

செய்பாகம் :- இக்கூறப்பட்ட சரக்குக்ளைச் சூரணித்துப் போதிய அளவு பால்விட்டு அரைத்து வைத்து கொள்க பால்மிகுந்திருப்பின் அதனோடு தண்ணீர் கலந்து வெல்லத்தை அதிற்கரைத்து வடிகட்டித் தந்து பாகம் வரும்வரை காய்ச்சிமுன் சுத்தப்படுத்தியதை போட்டுக் கிளரி இலேகியபதத்தில் இறக்கி நல்லெண்ணை விட்டுப் பிசைந்து பத்திரப்படுத்துக.

பிரயோகம் :- வேளைக்கு ½ தோலா வீதம் இருவேளை சாப்பிட வெகுமூத்திரம் மதுமேகம் இந்திரிய நஷ்டம் முதலிய பிணிகள் தீரும்

குறிப்பு :- இந்தலேகியத்துடன் அடியில் கூறப்பட்ட இலிங்க மாத்திரையைக் கூட்டிச்சாப்பிட்டுக் கொண்டு வர மேற் கூறிய பிணிகள் தீவிரத்தில் குணம்காணலாம்.

லிங்க மாத்திரை

சரக்கு :- இலிங்கம் 1 பலம் சிவனார் வேம்பு 5 பலம் நாவி 1 பலம் நல்லெண்ணை 5 பலம்.

செய்பாகம் :- மேற்கூறப்பட்ட நான்கு சரக்கில் நாவியைச் சுத்த நீர்விட்டு நெகிழ அரைத்து லிங்கத்துக்கு கவசமிட்டு அதன்பின் சிவனார்வேம்பின் வேரைச்சுத்த நீரால் அரைத்து முன்போலவே மற்றொருமுறைக் கவசமிட்டு இரண்டு மணி நேரம் கடும் வெய்யலில் உலர்த்தி அதன்மேல் பட்டுத்துணியாற் சுற்றி வைத்துகொள்க பின் ஒரு இரும்புக்கரண்டியில் நல்லெண்ணை விட்டு நெருப்பின்மீது வைத்து சூடேறியவுடன் முன்சுத்தப்படுத்திய இலிங்க உருண்டையை அதில் போட்டு எண்ணை எல்லாம் சுண்டச்சுண்டப் பிரட்டிக் கொண்டுவருக மேல்கவசம் கருகினபதத்தில் உள்ளிருக்கும் இலிங்கத்தை வெளிப்படுத்திக் கல்வத்திலிட்டு அரிசி வெந்த கொதிநீரில் இரண்டுமூன்று மணிநேரம் மெழுகு பதம்வர அரைத்து மிளகு பிரமாணம் மாத்திரைகள் செய்து நிழலிலுர்த்தி வைத்துக் கொள்க

பிரயோகம் :- ஆவாரம் இலைச்சாற்றிலேனும் ஆவாரம் கொழுந்தை அரைத்து சம அளவு பசுவெண்ணைக் கூட்டியேனும் சுமார் புன்னக்காய் பிரமாணத்தில் வேளைக்கொரு மாத்திரை விகிதம் தினம் இரண்டு வேளையாக ஏழுநாள் அல்லது பத்துநாள் உட்கொள்க வெகுமூத்திரம் மதுமேகம் முதலியபிணிகள் நீங்கும்.

கொடிவேலிவேர் மாத்திரை

கொடிவேலிவேரின் பட்டையை சிறுசிறு துண்டுகளாக நறுக்கிப் பீங்கானில் போட்டு நல்ல சங்கு இலைச்சார் மிதக்கும் படிவிட்டு வெய்யிலில் வைத்துசார் சுண்டியபின் மறுபடியும் கிண்டி அதில் சங்கு இலைச்சார் விட்டு முன் போல் வெய்யலில் மொத்தம் 5 தடவை சார்விட்டு பாவனைசெய்து உலர்த்தி சூரணித்து கல்வத்திலிட்டு அதில் பூரம் 1/8 பலம் (அதாவது கொடிவேலிவேரின் எடைக்கு எட்டில் ஓர்பாகம்) சேர்த்து வெள்ளாட்டின்பால் செல்வத்தக்க அளவுவிட்டு நன்றாக அரைத்து குண்டுமணி அளவாய் உருட்டி உவர்த்திபாட்டிலில் பதனப்படுத்தவும்.

உபயோகம் :- காலை மாலை பாலில் 1 மாததிரை முதல் 2. 3. வரையில் வியாதி தேகபலம் தக்கபடி 7 நாள் சாப்பிட கிரந்தி புண்கள். சூலைநீர். ஸ்திரீகள் சம்மந்தத்தினால் உண்டான நோய்கள் குணமாகும்.

பத்தியம் :- சமயம் போல்

ஆகாசத் தாமரைத் தைலம்

ஆகாசத்தாமரை இலைச்சாறு ¼ படி நல்லெண்ணை படி ½ இரண்டையும் ஒருதைல பாத்திரத்திலிட்டு அடுப்பிலேற்றிச் சிறுதீயாக எரித்து வண்டல்மெழுகு பதம்வரும்போது கஸ்தூரிமஞ்சள் பச்சைகிச்சிலிக் கிழங்கு சந்தனத்தூள் வெட்டிவேர் சாம்பிராணி வகைக்கு பலம் ¼ ஆக இடித்துப் போட்டுக்கீழ் இறக்கி ஆறவிட்டு வடித்து புட்டியில்

பத்திரப்படுத்துக இத்தைலத்தை வாரமொருமுறை ஸ்நானம் செய்து வர உட்சூடு. கண்ணெரிச்சல். மூல உபத்திரவம் தீரும்.

அகத்திக்கீரை தைலம்

கீரையை மட்டும் சுத்தமாக ஆய்ந்து இடித்தசார் படி ½ (வடிகட்டவும்) நல்லெண்ணை படி ½ இவை இரண்டையும் பழகின தைல மண்பாண்டத்திலிட்டு அடுப்பிலிட்டுச் சிறுதீயாக எரித்து சாறுசுண்டித்து தைலபதம் (மெழுகுபதம்) வரும்போது கஸ்தூரி மஞ்சள் பளிங்கு சாம்பிராணி பச்சைக்கிச்சலிக் கிழங்கு வகைக்கு பலம் ½ ¼ விலாமிச்சம்வேர் பலம் 1/2 வீதம் வாங்கி இடித்து தூள் செய்துப்போட்டு தைலத்தை கீழே இறக்கி ஆறினதும் புட்டியில் பதனப்படுத்தவும். வாரமொருமுறை தலையில்தேய்த்து நீராடிவர பித்தம் தணியும் கண்குளிர்ச்சி பெறும் பித்தத் தலைவலி போக்கும்.

பத்தியம் :- ஸ்தானதினத்தில் பகல் நித்திரை அலைச்சல் திரிச்சல் கூடாது.

அறுகம்வேர்த் தைலம்

(ஒரு தலைவலிக்கு சிறந்தது ஸ்திரீதோஷம் நீங்கும்)

சிறுதுண்டுகளாக நறுக்கப்பட்ட ஒரு வீசை அறுகம் வேரை ஒருமண்பாண்டத்தில் போட்டு 8 படி சுத்த ஜலம்விட்டு அடுப்பில்வைத்து சிறுதீயாக எரித்து ஒருபடியாகச் சுண்டக்காய்ச்சி வடித்து வைத்துக் கொள்க. பின்னால் முன்காய்ச்சிய பாண்டத்தை சுத்தம் செய்து அதனில் முன்சுத்தப்படுத்திய கியாழத்தைவிட்டு அதனுடன் ஒருபடி நல்லெண்ணைவிட்டு அடுப்பில்வைத்து எரிக்கும் தருவாயில் கோரைக்கிழங்கு பூமிச்சர்க்ககரைக் கிழங்கு அமுக்கிறாங் கிழங்கு வகைக்கு 1 பலம் ஆக அம்மியிலிட்டு பசும்பால் விட்டரைத்து கலக்கிபதமுறக் காய்ச்சிவடித்து சீசாவில் பத்திரப்படுத்துக இத்தைலத்தை வாரம் இருமுறை தேய்த்து ஸ்நானம் செய்து வா

ஒருதலைவலி மண்டை-யிடி மூலச்சூடு கபாலச்சூடு மேக்காங்கை பித்தம் வாதம் அரிகிரந்தி சூலை வயிற்றெரிவு நெஞ்சு நோய்தேக வறட்சி நீர்க்கடுப்பு நீங்கும் தேகம் குளிரும்.

அறைக்கீரை விதைத் தைலம்

ஒரு முற்றின தேங்காயை கொண்டு வந்து கண் திறந்து நீரைப் போக்கி அதனுள் கொள்ளும்வரையில் அறைகீரை விதையை அடைத்து வாய்க்கு ஆப்பிட்டு மெழுகுதடவி சதுப்பு நிலத்தில் ஒருமண்டலம் புதைத்துவைத்து எடுத்து உடைத்து ஓட்டை நீக்கி நன்றாய் அரைத்து ஒருவீசை நல்லெண்ணையில் கலக்கிப் பதமுற காய்ச்சி வடித்து பத்திரப்படுத்துக இத்தைலத்தை வாரத்துக்கு ஒருமுறை சிரசில்தேய்த்து ஸ்நானம் செய்துவா தலைவலி நீங்கும் தலைமயிர் கருக்கும்.

இஞ்சித் தைலம்

(கபால நோய் தீரும்)

நன்றாய்த் தேறின இஞ்சியைக் கொண்டுவந்து மேற்றோலை நீக்கி அம்மியில் வைத்து அரைத்து பிழிந்து சாறெடுத்து தெளிய வைத்து கலக்காமல் வடித்து அதற்கு சமனளவு பசும்பால் கூட்டி இவ்விரண்டும் சேர்ந்த எடைக்கு நல்லெண்ணெய் கூட்டி சேர்த்து ஓர் பழகின மண்பாண்டத்தில் விட்டு அடுப்பிலேற்றிச் சிறுதீயாக எரித்து வண்டல் மெழுகுபதம் ஆகும் போது கீழிறக்கி ஆறவிட்டு வடித்து பத்திரப்படுத்தவும். இத்தைலத்தை வாரமிருமுறை ஸ்நானம் செய்துவர நீர்பீனிசம் ஜலதோஷம். தலைவலி, கழுத்து நரம்பு இசிவு. சிரசுபாரம் அடுத்து அடுத்து வரும் தும்மல் முதலிய பிணிகள் போக்கும். பித்தமயக்கம். தலைசுற்றல். சூலைவாயு, சன்னிமண்டை பருத்து நீங்கும்.

கரசனர்ங்கன்னித் தைலம்

கரசனாங்கன்னிச்சாறு. நல்லெண்ணெய் வகைக்கு படி 1. குமரிச்சாறு நெல்லிக்காய்ச்சார் வகைக்கு படி ¼ ஆக இத்திரவங்களை தையில பாத்திரத்திலிட்டு அதில் கஸ்தூரி மஞ்சள். சாதிக்காய். வகைக்கு பலம் 1 ஆக நிறுத்து தட்டை அம்மியில் இட்டு பசுவின் பால் விட்டு வெண்ணெய் போலரைத்து போட்டுக்கலக்கி பதமுறக் காய்ச்சிவடித்துச் சீசாவில் அடைத்து 10. 15 தினத்துக்கு கேழ்வரகு அல்லது நெல்லு முதலிய தானியத்துக்குள் வைத்து எடுத்துவாரத்துக்கு ஒருமுறை ஸ்நானம் செய்துவரக் கண்நோய். தலைவலி. செவிநோய். பித்தக்கிருகிருப்பு. தேகவெப்பு பீனிசம் முதலிய ரோகங்கள் தீரும்.

கீழ்வாய் நெல்லித் தைலம்

ஒருவீசை உலர்ந்த கீழ்வாய் நெல்லி சமூலத்தை சிறுதுண்டுகளாக நறுக்கி ஒருபெரிய மண்கடத்தில் போட்டு 8 பலம் சுத்தஜலம் விட்டு அடுப்பிலேற்றி ஒரு படியாக சுண்டக்காய்ச்சி வடிகட்டி வைத்துக்கொள்க பின்கடுக்காய்த்தோல் வேப்பின் பிசின் வகைக்கு ½ பலம் வீதம் அம்மியில் வைத்து பசும்பால் விட்டரைத்து முன் சுத்தப்படுத்தியுள்ள கியாழத்தில் கலக்கி அதனுடன் ஒருபடி நல்லெண்ணெய் கூட்டி அடுப்பிலேற்றி சிறுதீயாக யெரித்து பதம் வரும் சமயம் ½ பலம் நாட்டுச் சர்க்கரைத்தூவி கிளரிக்கீழ் இரக்கி ஆறவிடவும் தைலம் நன்றாய் ஆறினபின் வடித்து சீசாவில் பத்திரப்படுத்துக வாரம் ஒருமுலை சிரசில்வைத்து ஸ்நானம் செய்து வர பித்தக்கிருகிருப்பு வாய்நீர் ஊரல் எரிபித்தம் கைகால் எரிச்சல் கண்ணெரிச்சல் பித்தபயித்தியம் எல்லாம் குணமாகும்.

குமரி எண்ணெய்

ஒரு வீசை சோற்றுக் கற்றாழை மடல்களை கொண்டு வந்து மேற்றோல் சீவிக்கழித்து உள்ளிருக்கும் சோற்றைச் சிறுதுண்டுகளாக நறுக்கி ஒரு மண்பாண்டத்தில்போட்டு ஜலம்விட்டு 7 முறை கழுவியெடுத்து ஒரு சுத்தமான பழகின மண்பாண்டத்திலிட்டு அதனுள் 5பலம் கடுக்காய் தோலைக்கொட்டி கூட்டிப் பிசைந்தும் பிசைந்து கிடைக்கும் வரையில் அதனுள் உள்ளச்சாற்றை வாங்கி வடிகட்டி ஒருதைல மண்பாண்டத்தில் விட்டு ஒருபடி சித்தாமணக்கெண்ணெய் கூட்டி அடுப்பிலேற்றிச் சிறுதீயாக எரித்துப் பதமுறக் காய்ச்சி வடிகட்டிச் சீசாவை பத்திரப்படுத்துக.

வேண்டும்போது 2 அல்லது 3 பலம் யெண்ணெயைக் கல்வத்திலிட்டு குழம்பு பதத்துக்கு தேவையான உயர்ந்த பனங்கற்கண்டை கூட்டி அரைத்து கோப்பையில் பத்திரப்படுத்துக. தினந்தோறும் இரவு படுக்கைக்கு போகும்பொழுது ஒரு ரஸ்தாளி அல்லதுபேயன் வாழைப்பழத்தை சிறு துண்டுகளாக அறிந்து இரண்டொரு துண்டுகளைச் சுத்தப்படுத்தியுள்ள எண்ணெயில் தோய்த்து சாப்பிட்டு மிகுதியுள்ள பழத்தையும் சாப்பிடவும் இப்படி ½ அல்லது 1 மண்டலம் சாப்பிட்டுவர வெட்டை சூடு தணித்து தேகம் பெருக்கும் மலச்சிக்கல் நீங்கும் தற்காலத்தில் பெருமையாக மதிக்கக் கூடிய 'காட்லீவர் ஆயில்' இதற்கு நிகராகாது.

சவுரித் தைலம்

100 பலம் சவுரிக்கொடியை இடித்து ஒருகியாழ பாண்டத்தில் போட்டு 8 படி ஜலம்விட்டு ஒருபடியாக சுண்டக்காய்ச்சி வடிகட்டி ஒருதைல பாண்டத்தில் விட்டு வைத்துக்கொள்க அப்பால் கருஞ்சீரகம் பலம் 1 அதிவிடயம் மரமஞ்சள் வகைக்கு 1/2 பலம். இவற்றை இடித்து சூரணமாக்கி

அம்மிக்கல்லில் வைத்து ஆவின்பால் விட்டரைத்து முன்சுத்தப்படுத்தியுள்ள கியாழத்தில் போட்டுக் கலக்கி அதனுடன் ஒருபடி நல்லெண்ணெய் விட்டு அடுப்பிலேற்றிச் சிறு தீயாக எரித்துபதமுறக் காய்ச்சி வடித்து பத்திரப்படுத்துக இந்த தைலத்தை சிரசிலிட்டு ஸ்நானம் செய்துவர குஷ்டம், வாதக்கரப்பான், கண்டவீக்கம், சிரோபாரம், மண்டையிடி தீரும் பீனாசமும் சிரா நோயும் தீரும்.

பிருங்காமலகத தைலம்

கரிசாலைச்சாறு படி 1, நெல்லிக்காய்ச்சாறு படி 1 பொன்னாங்கானிச்சாறு படி 1, பசுவின்பால் படி 1, நல்லெண்ணெய்படி 1, சந்தனம், கோஷ்டம், அதிமதுரம், அரத்தை, வெட்டிவேர், விலாமிச்சவேர், கடுகுரோகினி, வகைக்கு 1 பலம்.

செய்பாகம் :- மேற்கூறப்பட்ட ஐந்து திரவங்களையும் ஒருபழகின மண்பாண்டத்திலிட்டு அதனில் பின் கூறப்பட்டுள்ள ஏழுகங்கங்களையும் இடித்துச் சூரணித்து அம்மிக்கல்லில் வைத்து பால்விட்டு அரைத்து கலக்கி மூன்றுநாள் ரவிமுகத்தில் வைத்து நான்காவது நாள் அடுப்பிலேற்றி சிறுதீயாக எரித்து வண்டல் மெழுகு பதம்வரச் சமயம் உடனே வடித்து ஆறவிட்டு குப்பியில் விட்டு வாய்வடித்து ஆறவிட்டு குப்பியிலிட்டு தாணியபுடம் வைத்தெடுக்கவும்.

பிரயோகம் :- இந்த தைலத்தால் வாரம் ஒருமுறை ஸ்நானம் செய்துவர பித்தரோகம், சிரோரோகம், நேத்திரரோகம் முதலியவற்றை நிவர்த்தி செய்யும், கண்களுக்கு குளிர்ச்சியைத் தரும்.

பத்தியம் :- அன்றுபகல் நித்திரையும் அலைச்சல், திரிச்சல் முதலியவற்றையும் தடுப்பதுடன் புளிதள்ளிபத்தியமாக ஆகாரம் செய்க.

ஒரு தலைவலிக்கு தைலம்

4 பலம் பச்சை கொடிவேலி வேர்ப்பட்டையைக் கற்றாழைச் சாற்றில் அரைத்து 1 படி நல்லெண்ணெய் போட்டுக் காய்ச்சி முழுகிவர தலை நோய் தீரும்.

குமரிவேர் தைலம்

நன்றாக முதிர்ந்த சோற்றுகற்றாழை வேரை கொண்டுவந்து மண்போக தண்ணீர்விட்டு தேய்த்து அலம்பி கல்லுரலில் போட்டு இடித்து பிழிந்தசார் படி 1. சுத்தமான நல்லெண்ணை 1 படி இவை இரண்டையும் கலந்து கூட்டிதைல மண்பாண்டத்திலிட்டு பதமுறக்காய்ச்சி இரக்கும் தருவாயில் பச்சிலை. பூலாங்கிழங்கு. கஸ்தூரி மஞ்சள் வகைக்கு ½ பலம் நிறுத்துதூள் செய்து பொடியை தைலத்தில் போட்டுச் சிறிதுநேரம் சென்றதும் கீழே இரக்கவும் ஆறினபின் வடிகட்டி பாட்டிலில் பதனப்படுத்தவும் இத்தைலத்தை வாரமொரு முறை தேய்த்து ஸ்நானம் செயீதுவர கபாலச்சூடு கண்ணெரிச்சல். தேகவெப்பம். கண்வலி முதலியவை நீங்கி கண்ணுக்கு குளிர்ச்சியைத் தரும்.

குமரித் தைலம்

சோத்துகற்றாழை சார்படி 1 வெள்ளாட்டுபால் படி 1 நல்லெண்ணெய் படி 1. சுக்கு. மிளகு. கோஷ்டம். பீதரோகிணி. தான்றிக்காய் நெல்லிக்காய் கடுக்காய் லவுங்கப்பத்திரி லவுங்கப்பட்டை அக்கிராகாரம் கஸ்தூரிமஞ்சள் இலவங்கம் சந்தனம் கடுகுரோகினி செண்பகமொட்டு யானை திப்பிலி மஞ்ஜிஷ்டி சோம்பு மஞ்சள் வகையொன்றுக்கு பலம் 1/4 இந்த கடைச்சரக்குகளை பசுவின் பால் ½ படிவிட்டு அரைத்து மேற்படி சார்யெண்ணெயில் கரைத்து தைலபாண்டத்தில் விட்டு அடுப்பேற்றிச் சிறுதீயாக எரித்து மெழுகு பதத்தில் இறக்கி ஆறினபின் வடித்து பாட்டிலில்விட்டு நெல்தானியத்தில் நாற்பது நாள்வைத்து எடுத்துபின் ஸ்நானம் செய்து வர மேகம்

அஸ்திசுரம். வெட்டை. பித்தம். சரீரவரட்சி. குன்மம். பாண்டு ரோகங்கள் தீரும் தேகம் கருக்கும்.

பொன்னாங்கன்னித் தைலம்

பொன்னாங்கன்னிச் சார் படி 1. கரிசலாங்கன்னி சார் படி ½ நெல்லிக்காய் சார்படி ½. சுத்தமான நல்லெண்ணை 1 படி. பசும்பால் படி 1. இந்த ஐந்து இனங்களையும் கூட்டி கலந்து பின் அதிமதுரம் பலம் ஒன்றை முலைப்பால்விட்டரைத்து மேற்கூறிய சாறு எண்ணெயோடுக் கூட்டிக்கலந்து மண்தைல பாத்திரத்திலிட்டு சிறு தீயாக மெழுகுபதம் வர எரித்து எடுத்து ஆறினபின் வடித்து பாட்டிலில் பத்திரப்படுத்தவும் இத்தைலத்தை வாரம் ஒருமுறை தேய்த்து ஸ்நானம் செய்து வர கண்ணோய் 96-ம் காசரோகமும். பித்தரோகங்களும் தீர்ந்து கண்களுக்கு ஒளியையும் குளிர்ச்சியையும் தரும்.

பேயத்தி தைலம்

10 பலம் பேயத்திக் கொழுந்திலையை அம்மிக் கல்லில் வைத்து நெகிழ அரைத்து 10 வடையாக தட்டி ¾ வீசை நல்லெண்ணையில் சிவக்கசுட்டு முதிராத பதத்திலிறக்கி ஆறவிட்டு வடைகளை நீக்கிச்சீசாவில் பத்திரப்படுத்துக வாரம் ஒருமுறை ஸ்நானம் செய்து வரப்பித்தமயக்கம் நீங்கும் நித்திரை யுண்டாகும்.

வெள்ளறுகு தைலம்

வெள்ளறுகை கொண்டு வந்து அரைத்து வடைபோல் தட்டி எள்ளெண்ணையில் போட்டு சிவக்க பதமுடன் காய்ச்சி ஸ்நானம் செய்யமயக்கம். கிருகிருப்பு தீரும் குளிர்ச்சியுண்டாக்கும்.

மிள்காய்த் தைலம்

இரண்டு படி சலத்தை ஒரு மண்பாண்டத்திலிட்டு அதனில் மிளகாய் பலம் 5 மிளகுபலம் 2½ இவைகளை ஒன்றிரண்டாக இடித்துப் போட்டு அடுப்பிலேற்றிச் சிறுதீயாக எரித்து வடிகட்டித் தைலம் காய்ச்சும்படியான பாண்டத்தில் விட்டு அதனுடன் ¼ படி நல்லெண்ணையும் ¼ படி பசும்பாலும் விட்டு பதமுறக் காய்ச்சி வடித்து வைத்துக்கொண்டு வாரம் ஒருமுறை ஸ்நானம் செய்துகொண்டு வர சகலவிதமான தலைவலிகளும் குணமாகும்.

சகாதேலித் தைலம்

நெய்சட்டிப் பூண்டு எனக் கூடிய சகாதேலிச்சாறு பசுவின்நெய் வகைக்கு 1 படி ஆகத்தைல பாண்டத்திலிட்டு வைத்துக்கொள்ளவும் அதன்பின் ஏலம், அதிமதுரம் சந்தனம் சிறுநாகப்பூ விலாமிச்சம்வேர் சீதாசெங்கழுநீர் கோஷ்டம் கடுகுரோகினி லவங்கபட்டை வகைக்கு விராகனிடை 2 வீதம் மேற்படி சீதா செங்கழுநீர்ச் சாற்றால் அரைத்து முன்சித்தப்படுத்தியுள்ள பாண்டத்தில் கலக்கிபதமுறக் காய்ச்சி ஸ்நானம் செய்ய தேகவலி சிரோபாரம் பாண்டு காமாலை அஸ்திசுரம் கைகால் எரிவு கண்ரோகம் தீரும்.

குறிப்பு :- நெய்சட்டி பூண்டு என்னும் சகாதேலிச் சாற்றால் வேப்பெண்ணையை காய்ச்ச கசப்பு நீங்கும். நெய்போல இருக்கும்.

நெய்சட்டி பூண்டு எனும் சகாதேலியின் குணங்களாவன - வீரியவிருத்தி, நேத்திரத்துக்கு ஒளி, பசி, அழகு இவைகளை யுண்டாக்கும் பித்தமேகம் வெட்டை உட்சூடு தாகம் பித்தகோரசகெந்த முதலியவற்றால் பிறந்தவாய்புண் அழற்சி கிரந்தி வாந்தி இவைகளை நீக்கும். வேப்பெண்ணைக்கு கூறியகசப்பை விலக்கும் காம விர்த்தினி, சுவேதகாரி.

தாது க்ஷீணரோதி முறை வியாதிரோதி, வலிப்புக்கு எண்ணெய் உருண்டை கடுக்காய், வெள்ளைப் பூண்டு, வகைக்கு விராகனிடை 1 கழற்சிப்பருப்பு விராகனிடை 4 ஒட்டடைவிராகனிடை 8 இவைகளை ஜலம்விட்டரைத்து சிறுகொட்டை அளவு எடுத்து வேப்பெண்ணையில் கொடுக்க 5 விதமான வலிப்பு ரோகம் தீரும்.

நீர்முள்ளி எண்ணெய்

நீர்முள்ளி சமூலச்சாறு பலம் 10 சிற்றாமணக்கெண்ணெய் பலம் 10 நாட்டு நவாச்சாரம் பலம் 10 இவைகளில் முதலில் நீர்முள்ளிச்சாற்றை வடிகட்டி ஒருதைல பாண்டத்தில்விட்டு நவாச்சாரத்தைப் பொடித்து மேற்படி சாற்றில்போட்டுக் கலக்கி அதன்பின் சிற்றாமணக்கெண்ணெயைவிட்டு அடுப்பிலேற்றி பதமுறக்காய்ச்சி வடித்து வைத்துக்கொள்க இந்த எண்ணையில் வேளைக்கு 1 அவுன்ஸ் காலை மாலைகொடுத்துவர 2, 3 தடவை பேதியாகும் இப்படி 3 தினத்துக்கு குறையாமல் 5 அல்லது 7 அல்லது 9 நாள் வரையிலும் கொடுத்துக் கொண்டுவரப்பாண்டு. சோகை, காமாலை, மகோதரம், வயிற்றிலுண்டான பலவிதமான கட்டிகள் சதை அடைப்பு கைகால் பிடிப்பு மூலம் வெள்ளை குன்மம் முதலிய பலரோகங்கள் போகும்.

பத்தியம் :- புளிதள்ளி இச்சாபத்தியமாக இருத்தல் அவசியமாகும் மருத்துண்ணும் காலங்களில் ஆட்டுமாமிசம் வேண்டுமாயின் சேர்த்து கொள்ளலாம்.

நீரடிமுத்து எண்ணெய்

வேப்பம்பட்டை வீசை 1½, பூவரம்பட்டை வீசை 1½, சிவனார்வேம்பு வீசை 1½ இவைகளை ஒன்றிரண்டாகயிடித்து ஒரு பாண்டத்தில் போட்டு 8-படி சலம்விட்டு ½ படியாகச் சுண்டக் காய்ச்சி வடித்து அதனுடன் 10 பலம் நீரடிமுத்து

எண்ணெய் கூட்டிப்பதமுறக் காய்ச்சி வடித்து சீசாவில் பத்திரப்படுத்துக இந்த நெய்யைத் தினம் ஒருவேளை 5-நாள் ஒருகாசு அளவுபரவும் படியாகக் கையில்விட்டு சிறிது சர்க்கரைக்கூட்டிச் சாப்பிட்டுவரத் தோல் சம்பந்தமான வியாதிகள் அனைத்தும் குணமாகும்.

நிலக்கடம்புத் தைலம்

நிலக்கடம்பு இலைச்சாறு படி ¼ எலுமிச்சம்பழச்சாறு படி ¼ நல்லெண்ணெய் படி ½ இம்மூன்றையும் ஒரு தைல பாண்டத்திலிட்டு அடுப்பிலேற்றிச் சிறுதீயாகயெரித்து பதமுறக்காய்ச்சி. வடித்து வைத்துக்கொண்டு வாரமொரு முறை ஸ்நானம் செய்விக்க பைத்தியரோகம் குணமாகும். தலைவலி போக்கும் மேகப்புண்கள் போக்குவிக்கும்.

குறிப்பு :- நிலக்கடம்புக்கு யுனானியில் அசாரூன் என்று பெயர்.

குருந்தொட்டித் தைலம்

குருந்தொட்டிவேர் ஒருவீசை நிறுத்தெடுத்து இடித்து 8 படி தண்ணீர்போட்டு எட்டில் ஒரு பாகமாக வற்றவைத்த கிஷாயத்தை எடுத்து நல்லெண்ணெய் 1 படியில் கலந்து அடுப்பேற்றி சிறுதீயாக எரிக்கவும் தைலபதம் வருவதற்குள் முன்னதாக அதில் சுக்கு, ஏலம், மிளகு வகைக்கு பலம் 1 நிறுத்தெடுத்து அரைத்து போடவும். பதமுறக் காய்ச்சி வடித்து முழுகிவர வாதரோகம் 80-ம் தீரும்.

பினிசங்களுக்கு நெய்

வதக்கிய நொச்சி தழைச்சார் படி 1, முற்றின தேங்காய் திருவல், புளியங்கொட்டை மேல்தோல் போட்டு பிசைந்து பால்படி 1, பசுவின்பால் ¼ படி, பச்சைக்கற்பூரம் விராகனிடை 1, மாச்சக்காய் 3 காய், காசிக்கட்டி 1 பலம், ஓமம் 1 பலம், கடுக்காய்த்தோல் 1 பலம்.

செய்பாகம் :- மருந்து செய்யும் பொழுது நெய் ஜல ஜலவென்று தெளித்தபின் இரக்கிவடித்து வைத்துக் கொள்ளவும். இல்லையேல் கடக்கம் நெய்யைக்குடித்துவிடும் ஜாக்கிரதையாக செய்யவும் தலையில் தேய்த்து ஸ்நானம் செய்யவும் நசியமாக மூக்கில் தடவி விடவும்.

சம்பீரத் தைலம்

எலுமிச்சம் பழச்சாறுபடி 1½ நல்லெண்ணை படி 1, கற்பூர சிலாசத்து கல்நார், அதிமதுரம், அக்ராகாரம் லவுங்கப்பத்திரி, சாஸ்திரபேதி, கோஷ்டம், வாய் விளங்கம், சாதிக்காய், லவுங்கப்பட்டை, கருஞ்சீரகம், நற்சீரகம், கோரோசனை, பூலாங்கிழங்கு, மரமஞ்சள் வகைக்கு பலம் ¼ இவைகளை அரைத்துப் போட்டுக் காய்ச்சி வடித்துஸ்நானம் செய்தும் உள்ளுக்கும் சாப்பிட்டுவர மேகம், பித்தம், நெஞ்சுவலி நீங்கி சுகந்தரும்.

சித்திரமூல நெய்

சுத்திசெய்த சித்திரமூல வேர்ப்பட்டை பலம் 1 நல்லெண்ணெய் படி ½ பசும்நெய் ½ படி பசும்பால் ½ படி.

செய்பாகம் :- முதலில் சித்திரமூலம் வேர்ப்பட்டையை யெடுத்து குளிர்ந்த பச்சை தண்ணீரில் 2 மணிநேரம் ஊரவைத்து எடுத்துக்கொள்வதே மிக உயர்தரமான சுத்தியாகும் வேறுசுத்தி செய்ய வேண்டியதில்லை. இங்ஙனம் எடுத்தபட்டை ஒருபலத்தை பசும்பால் விட்டு நன்றாக அரைத்து எண்ணைநெய் சேர்த்ததில் குழப்பி எரித்து மெழுகுபதத்தில் வடித்துக் கொள்ள வேண்டும்.

உபயோகமும் அளவும் :- காலை மாலை சின்னபொட்டு கரண்டி அளவு 40-நாள் வரை சாப்பிட்டு வரலாம்.

இதன் குணம் :- பெண்களுக்கு ஏற்படும் சூதக வயிற்றுவலி கெற்பம் உண்டாகாமல் தடுக்கும் பூச்சிபுழுசாகும் சூதகவாயுவினால் ஏற்படும் உபாதை குணமாகும் வாயுசூலை

தடிப்புகுத்துவலி விப்ருதி சூதககட்டி விழும் வெள்ளைவெட்டை பெண்களுக்கு ஏற்படுவதை குணமாக்குகிறது. அதற்கு 10-நாள் மருந்துகொடுத்து 3. 7 நாள்விட்டு பின்கொடுக்க குணமாகிறது. மற்றும் அதிசூட்டைத் தனிக்கிறது அதிமூத்திரத்தை குணமாக்குகிறது சொரி சிறங்கு அரிப்பு வாய்நாற்றம் குணமாக்குகிறது மலட்டு நோய்கள் தீரும் கற்பம் தரிக்கும்.

பத்தியம் :- பத்தியம் இல்லை.

லவணகுணாதி எண்ணெய்

தேங்காய்ப்பால் படி 3 விளக்கெண்ணை ½ படி சோற்றுப்பு வளையலுப்பு வெடியுப்பு இந்துப்பு சவுக்காரம் அக்கிரகாரம் சுத்தித்த வாளம் இவை வகைக்கு பலம் நவாச்சாரம் ¾ தோலா.

செய்பாகம் :- உப்பு இனங்களையும் அக்கிராகாரம் யாவையும் அரைத்து தூள்செய்து தேங்காய்ப்பாலில் கரைத்து யெண்ணையில் கலந்து - தைலபாண்டத்திலிட்டு இத்தைலம் அடிக்கடி பொங்கும் தன்மை இருப்பதால் சிறுதீயாக யெரிப்பதோடு அல்லது தைல பாண்டமும் பெரிதாகவைத்தல் நல்லது கடகம் மணல் தன்மை ஆனதும் கீழ் இறக்கி வடித்து பீங்கான் ஜாடியில் வைத்துக்கொள்ளவும். இந்த எண்ணையை ஆண் பெண் இருபாலரும் சாப்பிடலாம்.

எண்ணையின் அளவு :- 15 சொட்டு சாப்பிடலாம். பேதியாகும் கெற்பிணி ஸ்திரீகள் சாப்பிடக் கூடாது முன்றுநாள் அல்லது 5 நாள் வரை கொடுக்கலாம் பத்தியமிருக்கவும் பின் 5 நாள் மறுபத்தியமிருந்து நோய் இருப்பின் மறுபடியும் 5 நாள் கொடுக்கவும்.

இதனால் தீரும் வியாதிகளாவது :- குன்மரோகங்கள் குணமாகும் பெண்களுக்கு ஏற்படும் சூதக சம்பந்தமான சூதக வாயு, பக்கசூலை, வயிற்றுவலி, கைகால்வலி, கைகால் பிடிப்பு, வெள்ளை வெட்டை தடித்த புண் மேகரோகங்கள் குணமாகும்

நாள்பட்ட குன்மரோகங்களுக்கு சுமார் 10 சொட்டு வீதம் 20 நாள் 2 வேளை சாப்பிட சகல குன்மரோகங்கள் விலகும் பெண்களுக்கு ஏற்படும் சூதகவாயுவுக்கு மூன்றுநாள் வயிற்றுவலிக்கு 7 நாள் சாப்பிட விலகும் பக்கவாதம் பக்கசூலை கைகால்கணமான பிடிப்புகளுக்கு 7 நாள் சாப்பிட குணமாகும் குன்மக்கட்டிகள் இதனால் கரைகின்றது பெண்களுக்கு சூதககட்டி வெளியாகின்றது பெண்களுக்கு இந்த எண்ணெய் இன்றியமையாததாகும்.

குழந்தைகளுக்கு ஏற்படும் தெக்கித்திக்கணை இழுப்பு கண்சொருகல் மாந்தம் இவை ஏற்பட்டால் தாயின் ஸ்தன்யத்தில் ஒரு சொட்டு தடவி பால் அருந்தச் செய்ய மேற்கண்ட நோய்கள் குணமாகும்.

குறிப்பு :- எண்ணை சாப்பிடுபவர்களுக்கு மூத்திரத்தில் எரிச்சலோ சூடோ கண்டால் மருந்தை 4. 5 தினம் நிறுத்தி பின் தொடர்ந்து சாப்பிடவும்.

இந்த மருந்தில் சேரும் நேர்வாளத்தை, சுத்தி செய்யும் விதமாவது : செம்மண்ணை தண்ணீர்விட்டு பிசைந்து பூமியில் போட்டு அதில் நேர்வாளக் கொட்டைகளை ஊன்றி தண்ணீர் தெளித்து வரவும் இதுமுளை கிளம்பின உடனே எடுத்து முளையைப் போக்கி நன்றாக அலம்பி பசும்பாலில் வேகவைத்து பின்நெய்யில் வறத்தெடுக்க நல்லமுறையில் சுத்தியாகும் இதனையே இந்த எண்ணையில் சேர்க்க மிக நன்று மற்ற ஏனை பாகங்களிலும் இம்மாதிரியாக சுத்திசெய்ததை உபயோகிக்கலாம்.

இந்த எண்ணையில் சேரும் பஞ்சலவணங்களையும் சங்கு இலையிட்டு வறுத்து தூள் செய்து எண்ணையிலிட்டு காய்ச்சவும்.

இதுபோல் வறுத்து சேர்க்கும் இதர பானங்களிலும் இம்மாதிரி சங்கு இலையிட்டு வறுத்தெடுத்து உப்புக் கூட்ட மிகசிலாக்கியம், காரணம் உப்புக்களை கட்டும் தன்மை இந்த சங்கு இலைக்கு இருப்பதால் குணம் அதிகம் குண்டிக்காய்

கெடாது பாதுகாக்கும் இந்த எண்ணைசூடு செய்யுந் தன்மை உண்டாவதால் மருந்து எத்தனை நாள் சாப்பிட்டார்களோ அத்தனைநாள் மறுபத்தியமிருந்து கடைசிநாள் விளக் கெண்ணெய் தலைக்கு தேய்த்து சீயக்காய் பொடியிட்டு அலம்பி ஸ்நானம் செய்ய வேண்டியது.

முன்கூறப்பட்ட நோய்கள் குணமாகும் பின்பும் நோய் இருப்பதாக உணரின் மீண்டும் எண்ணையில் கொடுத்து பத்தியமிருக்க திருவருளால் குணமாகும்.

குறிப்பு :- மருந்து சாப்பிடுபவர்கள் சாப்பாட்டில் சங்கிலையில் வறுத்தெடுத்த உப்பைக்கூட்ட சிலாக்கியமாகும்.

சிறுசந்தனாதி தைலம்

சந்தனம், விலாமிச்சவேர், ஆவாரைபட்டை வகைக்குபலம் 10 இடித்து தண்ணீரில் போட்டு எட்டில் ஒரு பாகமாக சுண்ட கிஷாயமிட்டு வடித்த கிஷாயத்தில் நல்லண்ணை 1 படி கூடவிட்டு அதில் நன்னாரிவேர்ப்பட்டை பலம் 1 அரைத்துப்போட்டு காய்ச்சிவடித்து ஸ்நானம் செய்துவர மேகரோகம் தீரும் தேகம் இருகும் கண்களுக்கு குளிர்ச்சி தரும்.

கபாலவலிக்கு தைலம்

(ஒருதைலவலி, மண்டையிடி, கபாலவாயு தீரும்)

மலைவேம்பு செவ்வலரி ஆதண்டை கருநொச்சி இவைகளின் சாறு வகைக்குபடி அரைக்கால் நல்லெண்ணை படி ¼ ஒன்றாய்க் கலந்து அதில் கருஞ்சீரகம் வால் மிளகு ஒரு தலைப்பூண்டு வகைக்கு 1 பலம் அரைத்துப் போட்டு காய்ச்சி வடித்து முழுகிவர ஒரு தலைவலி மண்டையிடி கபாலவாயு கபாலவலி குத்துதீரும்.

ஏகமூலித் தைலம்

(என்னும் செம்பைத் தைலம்)

கருஞ்செம்பைப்பூ, இலை, வேர் முதலியவைகளை இடித்து பசுவின் பாலில் போட்டுப் பிசைந்து நன்றாக பிழிந்தெடுத்து சார்படி 1 இவை இரண்டையும் கலந்து தயில பாண்டத்திலிட்டு அடுப்பேற்றி எரித்து காய்ச்சி மெழுபதத்தில் இறக்கி வைத்து வடித்துக்கொண்டு நான்கு தினத்துக்கு ஒருமுறையாக விட்டு ஸ்நானம் செய்து வரவும்.

இதனால் தீரும் வியாதிகளாவது மேகத்தினால் உதித்த தேககாங்கை அஸ்தி வெட்டை அஸ்திசூடு கண் எரிச்சல் சதாகாந்தல் ஒருதலைவலி மண்டைகுத்து பீனிசம் இரத்த பீணிசம் தீரும் முகரலாம்.

பீனிசங்களுக்குத் தைலம்

விழுதி இலைச்சார்படி 1, பசும்பால் படி 1, விழுதி வேர் 1, எண்ணை படி 1.

செய்பாகம்:- விழுதிவேரை மட்டும் பால்விட்டரைத்து எண்ணைசார் இவைகளோடு கலந்து அடுப்பிலிட்டு எரித்து மெழுகு பதத்தில் இறக்கிவைத்துக் கொண்டு 4- தினத்துக்கு ஒருமுறை ஸ்நானம் செய்யும் பொழுது பாசிப்பயிர் சீயக்காய் மிளகு அரைத்து ஸ்நானம் செய்யவும்.

தலைவலி பிடரிவலிக்குத் தைலம்

நொச்சிலைக் கொழுந்து பூநாகம் வகைக்கு ஒருபலமாகவும் மிளகு அரைப்பலமாகவும் பசுவின்பால் விட்டரைத்து ஆழாக்கு சுத்தமான நல்லெண்ணெயில் சேர்த்து கலக்கி மெழுகுபதமாக காய்ச்சி ஸ்நானம் செய்ய இரண்டு மூன்று ஸ்நானத்தில் தலையிடி கழுத்துவலி முதலியவைகளை நிவர்த்தி செய்யும் அன்று ஆகாரம் செய்வதில் புளிதள்ளியும் பகல்

நித்திரை அலைச்சல் திரிச்சல் முதலியவற்றை நீக்கியுமிருத்தல் வேண்டும் இத்தைலம் அனுபவத்தில் மிக்க குணம் காணப்பட்டிருக்கிறது.

குறிப்பு :- பூநாகம் என்பது பூமியில் உண்டாகும் நாக்காம் பூச்சியாகும்.

கருஞ்செம்பைத் தைலம்

கருஞ்செப்பை இலைச்சாறு வெள்ளுள்ளிச்சாறு வகைக்குபடி ¼ நல்லெண்ணெய் படி 1 இவைகளை ஒரு பழகின தைலபாண்டத்திலிட்டு அதில்மிளகு சீரகம் கருஞ்சீரகம் சாம்பிராணி வகைக்கு பலம் 1/8 கால்விதம் வாங்கிதட்டை அம்மியிலிட்டுப் போதிய அளவு பசும் பால்விட்டு மெழுகுபதமாக அரைத்துப்போட்டு அடுப்பிலேற்றிச் சிறுதீயாக எரித்து வண்டல் திரளும் பதத்தில் வடித்து பத்திரப்படுத்துக இந்ததைலத்தை வாரமொருமுறை தேய்த்து ஸ்நானம் செய்துவர சகல பீனிசமும் மண்டடைக்குத்து தலைபாரம் கபாலநீர் கோர்வை வாயுவினால் நேர்ந்த காதுமந்தம் இவைகள் போகும்.

சொரி சிரங்கு புண்களுக்கு எண்ணை

சுகர்லெட்டு பலம் 1 இதனை நாயுருவி சார்விட்டு அரைத்து வெய்யிலில் காயவைத்து கல்வத்திலிட்டு அதில்மிருதார்சிங்கு பலம் 1 வெள்ளை குங்கிலியம் பலம் 1 பூரம் விராகனிடை 1¼ இவைகளைப் பொடித்து அரைத்து விளக்கெண்ணெய் சேர்த்து அரைத்துக்கொள்ளவும் அல்லது மேற்படி சரக்குகளை மேற்கூறப் பட்டதுபோல் செய்துக்கொண்டு தேன் மெழுகு பலம் 3 இதை உருக்கி தண்ணீர்போல் இருக்கும் சமயம் மேற்படி அரைத்த சரக்கை கலந்து ஆயிண்மெண் டாகவும் உபயோகிக்கலாம்.

உபயோகம் :- புண்புரை சிரங்கு அடிபட்ட வீக்கம் இவைகளுக்கு மேல்போட்டுவர குணமாகும் மற்றும் இதனை மார்சளிக்கு நெஞ்சில் தடவசளிசுட்டு விலகிகுணம் தரும்.

கர்னாசுரத் தைலம்

சுக்கு. இந்துப்பு. திப்பிலி, கோரைக்கிழங்கு. செங்கழுநீர் கிழங்கு. வாசனைக்கோஷ்டம். வசம்பு. வெள்ளை வெங்காயம் வகைக்கு விராகனிடை 4-இவைகளின் சூரணங்களைக் கல்வத்திலிட்டு 24 தோலா எருக்கிலைப் பழுப்புச் சாறுவிட்டு நன்றாய் அரைத்து ½ படி சுத்தமான எள்ளெண்ணெயில் கலக்கிப் பதமாகக் காய்ச்சி வடித்துக்கொள்க.

உபயோகம் :- இதனை தினம். இருவேளை மும்மூன்று துளிகாதில் விட்டுக்கொண்டுவர காதுநோய். காதில் சீழ்வருதல் ஜலம்வருதல் முதலியவை குணமாகும்.

வேறு முறை

¼ படி சுத்தமான எள்ளெண்ணையில் 2½ பலம் பெருமரத்துப்பட்டை (பீநாரிமரப்பட்டை) சூரணத்தைப்போட்டு சூரணம் சிவக்க காய்ச்சி வடித்துக்கொள்க. இதனையும் முன்மாதிரியே காதில் உண்டாகும் பலவித நோய்களுக்கும் காதுக்கு விட்டுக்கொண்டுவர விரைவில் குணமாகும்.

வேறு முறை

மாட்டு சாணத்தில் உண்டாகும் புழுபலம் 1 சேர்த்து எள்ளெண்ணையில் இட்டுக்காய்ச்சி வடித்துக்கொள்க இதனையும் முன்மாதிரியே காதுக்கு விட்டுக்கொண்டு வர காதில் சீழ் வருவது நின்று குணமாகும்.

குறிப்பு :- காதில் எண்ணெய் விடும் முன்னதாக காதை பஞ்சினால் சுத்தம் செய்தபின்னர் மருந்தை விடவும்

வசந்த மாலதி தைலம்

சரக்கு :- சுக்கு மிளகு அரிசி திப்பிலி. கோஷ்டம் சீடாமாஞ்சில். கடுக்காய். நெல்லிவத்தல். சீரகம். அதிமதுரம்

பூஞ்சார்ந்துப்பட்டை. ஏலம். பச்சிலை. புலாங்கிழங்கு. லவங்கம் பத்திரி. லவங்கப்பட்டை. அக்கிராகாரம். கஸ்தூரி. மஞ்சள் கிராம்பு. சந்தனம். பீதரோகினி. செண்பகப்பூ. யானைத்திப்பிலி. மஞ்சிஷ்டி. சோம்புமஞ்சள். கால்பாசி. குன்ரோசனைக் கிழங்கு. கோரைக்கிழங்கு. கருஞ்சீரகம் கிலியூரம்பட்டை. கருப்பு அகில். மகிழம்பூ. விலாமிச்சம்வேர் வெட்டிவேர். நன்னாரிவேர். பற்பாடகம். செண்பகமொக்கு. அகிற்கட்டை. வாலுளுவை அரிசி வெட்பாலை. செங்கழுநீர்க்கிழங்கு தாமரைக்கிழங்கு. மருவு மாரிக்கொழுந்து கதிர்ப்பச்சை இந்த வகை 45 வகைக்கு ஒருபலம் செவ்வல்லிக்கொடி வேம்பாடம் பட்டை இவை இரண்டும் வகைக்கு பலம் 2 நல்லெண்ணை சோம்பு 6.

செய்பாகம் :- மேற்படி சரக்குயாவையும் ஒன்றிரண்டாக இடித்து அதில்சோற்றுக் கற்றாழை பெரியமடலாக 15 முதல் 20 வரை எடுத்துமேல் தோல் சீவிமேற்படி சூரணத்தில் விட்டுப்பின் ரவிமுகத்தில் ஒருநாள் வைத்திருந்து மறுநாள் சட்டியிலிட்டு யாவையும் ஒன்று கலந்து அடுப்பிலேற்றி சிறுதீயாக எரித்து சோற்றுக்கற்றாழை நல்ல சிவந்தநிறம் வந்ததும் அரித்து எடுத்து விட்டு சிறுதீயாக பதம்வரக் காய்ச்சி வடிக்கவும்.

இதன் குணம் :- இதனை சிரசிலிட்டு ஸ்நானம் செய்தால் சிரோரோகம் அனைத்தும் தீரும். திரேகம் முழுதும் தேய்த்து ஸ்நானம் செய்தால் சர்மரோகம் யாவும் தீரும். கண்ணுக்கு களிக்கமாக ஒரு சொட்டு தினம் விட்டு வர கண் ரோகம் குணமாகும். பிரதானமாக மஞ்சள் காமாலை தீரும். பசும் பாலில் மேற்படி தைலத்தை கால் அவுன்ஸ் விட்டு சாப்பிட்டால் பலநோய்கள் குணமாகும்.

குறிப்பு :- இந்த தைலத்தை தேய்த்து ஸ்நானம் செய்து தலை துவட்டினவுடனே ரசம் சாதம் சாப்பிட்டால் மிக்க நலம்.

குளிமை எண்ணெய்

சித்தாமணக்கெண்ணை படி ½. வெங்காயச்சாறு படி ¼ வெள்ளாட்டின் பால் படி ¼ மணக்கத்தக்காளி சார்படி ¼ ஓணான் கொடியின் கொழுந்து பலம் 2 கிளுஞ்சள் சுண்ணாம்பு பலம் ½ இவையாவையும் கலந்து பதமுறக் காய்ச்சி வடித்து எடுத்து வைத்துக் கொள்ளவும்.

உபயோகம் :- சீதபேதி. ரத்தபேதி. வாய்வேக்காளம். மூலக்கடுப்பு ஆசனவாய் எரிச்சல் மலத்துடன் இரத்தம் போதல் முதலான நோய்கள் குணம்செய்யும்.

அளவு சிறுவர் முதல் பெரியவர் வரை அருந்தலாம். தேக்கரண்டி ¼ முதல் 3 கரண்டி வரை தேகநிலைக்குத் தக்கவாறு 3 நாள் 6 வேளைகொடுக்க குணமாகும் முற்றும் குணம் காணாவிடில் மீண்டும் 6 வேளை கொடுக்கபூரண குணம் கிடைக்கும்.

பத்தியம் :- உரைப்பு நீக்கி பால் சாதம். வெந்நீர் சாதம் சாப்பிடவும்.

பிரலி எண்ணெய்

வல்லாரைச்சாறு கோழி ஆவாரைசாறு. கஞ்சாங் கோரைச்சாறு ஜனகிப்பூண்டு. வேப்பிலை ஒற்றை பேய்மிரட்டி. இரட்டை பேய்மிரட்டி. சிறுப்புள்ளடி இவைகளின் சாறுவகைகள் சம அளவாக எடுத்து இதற்கு சம அளவு சித்தாமணக் கெண்ணெய் சேர்த்து வெள்ளுள்ளி கருஞ்சீரகம் வசம்பு வகைக்கு பலம் 1/2 பொடித்து போட்டு மெழுகுபதம் வரக்காய்ச்சி வடித்துக்கொள்ளவும்.

சிறு குழந்தைகளுக்கு ஒருகாசு எடை உள்ளுக்கு கொடுக்க பிரலிகனம். இழுப்பு. கண்சொருகல். மிரல மிரல விழித்தல். வாய்கோணி கோணி இழுத்தல் முதலிய சேட்டைகளை உடன்குணம் செய்யும்.

தாய் பத்தியம் இருக்கவும்.

முசுறுமுட்டை தைலம்

வசம்பு. வெள்ளைபூண்டு. அவுரிவேர்பட்டை. முசுறுமுட்டை ஒருகால் நண்டு கோழிமுட்டை மஞ்சள் கரு வகைக்கு பலம் 1 வேப்பெண்ணெய் பசுநெய் சிற்றாமணக் கெண்ணெய் இவையாவும் வகைக்கு அரைக்கால்படி இம்மூன்றையும் சட்டியிலிட்டு சரக்குகளை பஞ்சுபோல் தட்டி எண்ணெயில் போட்டு கருவையும் நண்டு முசுறுமுட்டையும் கூட்டிப்போட்டு காய்ச்சி பதத்தில் வடித்து வைக்கவும் குழந்தைகளுக்கு உண்டாகின்ற சகலவிதமான மாந்தம் இழுப்பு முதலான கணைரோகங்கள் அனைத்துக்கும் உள்ளுக்கும் வெளிபிரயோகத்துக்கும் உபயோகிக்க பூரணகுணமாகும்.

அளவு :- குழந்தைகளுக்கு தக்கபடி ஒருதுட்டு இடைமுதல் உள்ளுக்கு கொடுக்கலாம்.

தலையிடிக்கு ஸ்நான தைலம்

நொச்சிலை கொழுந்து பூநாசம் வகைக்கு 1 பலமாகவும் மிளகு 1/8 பலமாகவும் பசுவின்பால் விட்டு அரைத்து ஆழாக்கு சுத்தமான நல்லெண்ணை சேர்த்துக்கலக்கி மெழுகுபதமாக காய்ச்சி ஸ்நானம் செய்ய இரண்டு மூன்று ஸ்நானத்தில் தலையிடி கழுத்துவலி முதலியவைகளை நிவர்த்திசெய்யும் அன்று ஆகாரம் செய்வதில் புளிதள்ளியும் பகல் நித்திரை அலைச்சல் திரிச்சல் முதலியவற்றை நீக்கியும் இருத்தல் அவசியம்.

வதனகாந்தி தைலம் (முகப்பருவுக்கு)

சுத்தமான 50-கெட்டிமிளகு 1 பலம் எண்ணையில் போட்டு சிறுதீயில் காய்ச்சி அவை சிவந்து வரும் சமயம் வடித்து எண்ணையைப் பத்திரப்படுத்தவும். இதனை முகத்தில் உண்டாகும் பருக்களுக்குத் தினம் இருவேளை

தடவிக்கொண்டுவர ஒருவாரத்துக்குள் இருந்த இடம் தெரியாமல் ஒழியும்.

சீரகத் தைலம்

2 பலம் சீரகத்தை இடித்தெடுத்து பதக்குநீரில் போட்டு அடுப்பேற்றி எட்டொன்றாய் காய்ச்சி வடித்துக் கொண்டு அதில் ஒருபடி நல்லெண்ணை விட்டு 1 பலம் கார்போக அரிசியை மேற்படி கியாழம்விட்டு அரைத்து கலக்கி அடுப்பேற்றி மெழுகுபதமாய் காய்ச்சி வைத்துக்கொண்டு மூழ்கிவர சுரம் 8-ம், வாய்வு 10-ம் மேக தடியும் மூலமும் தீரும். வாந்திபித்தம் அதனால் ஏற்படும் மயக்கம் கிருகிருப்பு கபால்சூடு கபநீர்கட்டு இவை முதலானது தீரும்.

பத்தியம் :- மீன் கருவாடு நீக்கவும்.

பிரம்மி ஹேர் ஆயில்

வல்லாரை இடித்துப்பிழிந்த சாறும் சுத்தமான நல்லெண்ணை அல்லது தேங்காய் எண்ணை சம அளவு எடுத்து காய்ச்சி சார் சுண்டியபின் பதமாகும் தருணத்தில் இறக்கி ஆறியபின் வடிகட்டி வைத்துக்கொள்ளவும். தலைக்கு தடவிவர உஷ்ணந்தணிந்து மயிர் அடர்த்தியாகவும் நீண்டும் வளரும் ஞாபகசக்தியை உண்டாக்கும் பள்ளி சிறுவர் முதல் ஆண்பெண் இருவரும் உபயோகிக்கலாம்.

வேப்பம்பட்டைத் தைலம்

வேப்பம்பட்டை 1 வீசை எடுத்து இடித்து 8 படி தண்ணீர்விட்டு 1 படியாக வற்றவைத்தெடுத்து அதில் நல்லெண்ணெய் படி 1 விட்டு ஏலக்காய்பலம் 2 மேற்படி கியாழத்தால் அரைத்து கலந்து எரித்து மெழுகு பதமாய் வடித்துவாரம் இருமுறை மூழ்கிக்கொண்டு வர வாத சூலை

குஷ்டம் தழுதணை செங்கரப்பின் புண்புரைகள் இவை முதலானது தீரும்.

குறிப்பு :- பதக்கு என்பது 2 படி என அறியவும்.

நீர்வெட்டித் தைலம்

மரவெட்டி எண்ணைபடி 1 சந்தனதூள் கஸ்தூரி மஞ்சள் பூலாங்கிழங்கு கார்போக அரிசி வெட்டிவேர் விலாமிச்சம் வேர் வேம்பாடம் பட்டைவகைக்கு பலம் ¼ இவைகளை இடித்து எண்ணையிலிட்டு பதமுறக் காய்ச்சி வைத்துக்கொள்ளவும்.

உபயோகம் :- வாரம் இருமுறை. மேலுக்கும் தலைக்கும் தேய்த்துஸ்நானம் செய்துவர தேகத்தைப்பற்றிய சருமபடை சொறிசிரங்கு அரிப்பு. தடிப்பு. பத்துபடை முதலியன குணம் செய்யும்.

குறிப்பு :- மரவெட்டி எண்ணை என்பது நிரடிமுத்தெண்ணெய்.

வெட்டிவேர் தைலம்

புதிதான வெட்டிவேர் பலம் 10 நிறுத்தெடுத்து இடித்து பதக்குநீரில் போட்டு எட்டில் ஒன்றாய் காய்ச்சி வடித்து அதில் நல்லெண்ணை 1 படி விட்டு 1 பலம் அதிமதுரம் அரைத்து கலக்கி மெழுகுப்தமாய்க் காய்ச்சி 1 மண்டலம் ஒன்றுவிட்டு ஒருநாள் ஸ்நானம் செய்துவர பீனிசம். மண்டை சூலை. குட்டம். சோகை கண்புகைச்சல். காதுமந்தம். வெப்பம்பிளப்பி. கைகால். ஓய்ச்சல் இவைகள் முதலானது தீரும்.

பத்தியம் :- பகல் தூக்கம் ஸ்திரி போகம் நீக்கவும்.

நீர்வெட்டித் தைலம் (வேறுமுறை)

மரவெட்டி எண்ணைபடி 1 ஊமத்தங்காய் 4 கார்போக அரிசி பலம் ½ இவை இரண்டையும் அரைத்து எண்ணையில்

கலந்து காய்ச்சிவடித்து சிரங்கு கரப்பான் புண் அரிப்பு இவைகளுக்கு தேய்த்து 4-மணிநேரம் வைத்திருந்து அறப்பு பொடிபோட்டு கழுவிவர குணமாகும்.

வில்வவேர் தைலம்

வில்வவேர் பலம் 10 நிறுத்தெடுத்து உரலிலிட்டு இடித்து ஒரு பாண்டத்தில் பதக்குநீர்விட்டு அதில் இந்தவேரைப்போட்டு அடுப்பேற்றி எட்டில் ஒருபாகமாக வற்றவைத்து அதில் நல்லெண்ணை 1 படிவிட்டு 10 பலம் சந்தனத்தை அரைத்து அதில்போட்டு மெழுகுபதமாய் காய்ச்சி வடித்து வைத்துக்கொண்டு மூழ்கவேண்டும் வாரம் இருமுறை கிரமமாய் மூழ்கிவர கபாலத்தில் ஏற்பட்ட வெட்டை தீரும் நேத்திரம் நன்றாக தெளிவு தரும் பித்தமயக்கம் தீரும். உட்சுரம் தீரும் பித்தம் தீரும்.

சொரி சிரங்குக்குத் தைலம்

தேங்காய் எண்ணை சேர் 2½ கருஞ்சீரகம் கார்போக அரிசி வாய்விளங்கம் வாலுழுவை அரிசி ஓமம் வேம்பாடம்பட்டை இவை வகைக்குத் தோலா ½ இவைகளை ஒன்று இரண்டாக இடித்துப்போட்டு எண்ணையிலிட்டுக்காய்ச்சி வடித்துப்பதனப் படுத்தவும் இதனை சொறிசிரங்கு கரப்பான் புண்தலையில் வரும் பொடுகு இவைகளுக்கு தடவிவர யாவும்குணம் செய்யும்.

பீநச நாச கணபதித் தைலம்

இஞ்சிசாறுபடி ½ நல்லெண்ணைபடி ½ பசும்பால் படி ¼ நொச்சிச்சாறுபடி ¼ இவைகளை சேர்த்து ஏடுத்து வடித்து ஸ்நானம் செய்துவர பீனிசரோகம். மண்டையிடி கபாலசூலை குணமாகும்.

காளித் தைலம்

2 சேர் நல்லெண்ணையில் அதிமதுரம் பலம் 2 மிளகு பலம் 1/8 இவைகளை பசும்பாலில் அரைத்து கரைத்து எரித்து வடித்து ஸ்நானம் செய்துவர நேத்திரத்தில் இரங்கிய மேகநீர் குணமாகும்.

சீரகத் தைலம்

1½ சேர் நல்லெண்ணையைக் காய்ச்சி அதில் 2 பலம் நற்சீரகத்தைப்போட்டு சீரகம் உடையும் பதத்தில் வடித்து ஸ்நானம் செய்ய தலைசுற்றல், ஒற்றைத் தலைவலி சிரோரோகம் 19-ம் குணமாகும்.

புழுவெட்டுக்கு தைலம்

அரசம்வேர்பட்டை, அத்திவேர்ப்பட்டை, எட்டிவேர்ப் பட்டை, மேற்படி மூன்றுபட்டைகளையும் எடுத்து நிழலில் 4, 5 நாள் உலர்த்தி சிறு துண்டுகளாக நறுக்கிவகைக்கு ஒரு மண்பாண்டத்திலிட்டு முறைப்படி குழித்தைலம் இரக்கவும். இத்தைலத்தை ஆறாதரணங்களுக்கு தடவ ரணம் ஆறும் புழுவெட்டு உள்ள இடங்களில் தடவ புழுவெட்டு நீங்கி மயிர் முளைக்கும் வளரும்.

வெண்குட்டத்துக்கு லேபனத்தைலம்

ஜெதூன் எண்ணை படி ¼ கண்டங்கத்திரி பழம் சேர் 1 இதனை எண்ணையிலிட்டு பிசைந்து ரவி முகத்தில் 3 தினங்கள் வைத்திருந்து 4-வது நாள் நீர்சுண்ட எரித்து வைத்துக் கொள்ளவும்.

உபயோகம்:- வெளுத்து காணப்படும் இடங்களில் பூசிவர வெண்மை நிறம்மாறும்.

புத்திரோற்பத்திக்கு எள்ணெய்

(1) சித்தாமணக்கெண்ணை பசுவின்நெய் விழுதி இலைச்சார் இந்த வகைக்கு மூன்றும் வகைக்கு படி 1 ஒன்றாகச் சேர்த்துக்கொள்க.

(2) சுக்குமிளகு திப்பிலி வசம்பு, வெங்காயம் கோஷ்டம், லவங்கம் ஏலம் வகைக்கு பலம் ¼.

செய்முறை:- 2ல் கூறிய சரக்குகளை பசுவின்பால் விட்டு அரைத்து 1ல் கூறிய வகையோடு சேர்த்து நன்றாக கலந்து ஒன்றுசேர்த்து அடுப்பேற்றி மெழுகு பதமாக எரித்து வடித்து வைத்துக்கொள்க.

சாப்பிடும் முறை:- கால்சேர் வீதம் 3 நாள் காலையில் மட்டும் சாப்பிட்டு உப்புப்புளி தள்ளவும்.

இதன்குணம்:- கருப்பகழிவு சூதகவயிற்றுவலி கர்ப்பத்தில் உண்டாகும் புழுக்கள் கர்ப்பசூலை முதலான சகல கர்ப்பரோகங்களும் தீர்ந்து கர்ப்பம் உண்டாகும்.

தலைவலிக்குத் தைலம்

வெள்ளருகு - ஆடுதின்னாப்பாளை கீழாநெல்லி பொன்னாங்கன்னி வேலிப்பருத்தி பொற்றலைக் கையான் எருக்கன் பருப்பு கருஞ்செம்பை இலை நன்னாரி வகைக்கு சார் அரைப்படி நல்லெண்ணெய் 2 படி பசும்பால் 1 படி கருஞ்சீரகம் கார் போக அரிசி பீனிசக் கிழங்கு கருஞ் செம்பகப்பூ அதிமதுரம் கிரம்பு வெள்ளை மிளகு சீரகம் வெட்பாலை அரிசி வகைக்கு 1 பலம் பச்சிலை பூலாங்கிழங்கு செண்பக மொட்டு கஸ்தூரி மஞ்சள் சித்திர வேர் மூலப்பட்டை வகைக்கு 2 பலம்.

செய்பாகம்: சாரு வகை பால் எண்ணை இவைகளை கூட்டி அடுப்பேற்றி எரித்து மற்ற கடை சரக்குகளை சூரணம் செய்து தைலம் இறக்குவதற்கு ஒரு மணிநேரம் முன்னதாக

இருக்கும் சமயத்தில் போடவும். மெழுகு பதம் காணும் ச்மயம் தைலத்தை இறக்கி விடவும்.

உபயோகம் : நீண்ட வருஷங்களான ஒரு தலைவலி நோய்க்கு இரண்டொரு முறை தேய்த்து ஸ்நானம் செய்ய நீங்கும்.

ஆனந்த சேகரி தைலம்

முசு முசுக்கை பொன்னாங்கண்ணி துளசி கையான் தகரை கீழாநெல்லி ஆதண்டம் ஆகிய இலையின் சார் வகைக்கு அரைபடி நல்லெண்ணை 3 படி பசும் பால் 3 படி சுக்கு மிளகு திப்பிலி தான்றிக்காய் நெல்லி வற்றல் கடிக்காய் க்ஞ்ஷிஷ்டி தேவாரம் கஸ்தூரி மஞ்சள் பூலாங்கிழங்கு பச்சிலை கருஞ்சீரகம் கார்போக அரிசி ஏலம் வெட்டிவேர் சந்தனம் விலாமிச்சவேர் வெண் கோஷ்டம் கோரைக்கிழங்கு அகில் நயம் சாம்பிராணி தகரவிதை வகைக்கு 1 தோலா இடித்து தூள் செய்து பசும் பால் விட்டு அரைத்து அரைத்ததில் மெழுகு பதம் காய்ச்சி வடிக்கும் போது வடிகலத்தில் பச்சை கற்பூம் சந்தனம் போட்டு வடிக்கவும்.

தீரும் நோய் : இதனை தலைக்கு தேய்த்து ஸ்நானம் செய்து வர தலைவலி ஒரு பக்க தலைவலி பீனிசம் மண்டை கரப்பான் செவிநோய் வாதக்குடைச்சல் அஸ்திசுரம் கபாலதிக்கம் சகலவிதமான கண்ணோய் தேகசூடு காமாலை சூதகக்கட்டு சூதகவாயு வாதநீர் கிறுகிறுப்பு மயக்கம் அசதி சோம்பல் யாவும் குணம் செய்யும்.

வேம்பாடம்பட்டை எண்ணெய்

சரக்கு 2 படி சிற்றாமணக்கெண்ணையில் வேம்பாடம் பட்டை கழற்சிவேர் கண்டங்கத்திரிவேர் நன்னாரிவேர் வேலி பருத்தி வேர் சிரத்திநாயகம் பூதகரப்பான் பட்டை சுக்குதிப்பிலி மிளகு கடுக்காய் வகைக்கு 4 விராகனிடை எடை செய்து பொடித்து பசும்பால் விட்டு அரைத்து எண்ணையில் கலந்து எரித்து பதத்தில் வடித்து சீசாலில் பதனப்படுத்தவும்.

உபயோகம் தினம் காலை மாலை 2 விராகனிடை எண்ணையை சாப்பிட்டுவர வாய் நாக்கு தொண்டை இவைகளில் உண்டாகும் புற்று நோய் வாய்சிரத்தி வாய் நாற்றம் நாக்கு வெடிப்பு ஜீக்குவாரோகம் 6 உதட்டு வெடிப்பு உதட்டு ரோகம் 11 நாக்கு கொப்பளம் உள் நாக்கு வளர்ச்சி அது சம்மந்தப்பட்ட நோய்கள் பல்லெகிற்கட்டி வீக்கம் புண் சீழ் வருதல் முதலிய பயங்கரமான நோய் குணமாகும்.

பத்தியம் : வாயு பதார்த்தங்கள் நீக்கவும்.

முகவாத ஜன்னிக்கு தைலம்

சரக்கு : எருக்கம்பால் அரைக்கால் படி நல்லெண்ணை கால்படி நாசக்சம்பூச்சி 1 பலம் இவை யாவும் ஒன்றுகூட்டி எரித்து வறுத்து கொள்ளவும்.

உபயோகம் : ஒரு காச எடை உள்ளுக்கு கொடுத்து மேலுக்கும் பூசி வர வேண்டும். இவ்விதம் 4 நாள் ஒரே வேளை காலையில் மட்டும் கொடுக்கவும் 5 நாள் உப்பு இல்லா பத்தியம் வைக்க குணமாகும்.

ஜன்னி எண்ணெய்

சரக்கு : வேப்பெண்ணை 1 படி உள்ளிப் பூண்டு (மலைப் பூண்டு) 1 விசை வேலிப்பருத்தி சார் 1 படி எரிக்கிலைச் சார் 1 படி.

செய்பாகம் : முதலில் பூண்டை இடித்து ஆட்டி விழுதாக உருட்டிக் கொண்டு வேலிப்பருத்தி எருக்கிலை இவைகளின் இடிக்கெடுத்த சாற்றில் மேற்படி பூண்டு விழுதைக் கரைத்து பின் வேப்பெண்ணையில் கலந்து சிறு தணல் உள்ள அடுப்பில் வைத்து ஒரு நாள் மட்டும் வைத்திருந்து மறுநாள் சிறு தீயாக மெழுகு வண்டல் பலம் வரும்படிக் காய்ச்சி வடித்தெடுத்துப் பத்திரப்படுத்தவும்.

இதன் உபயோகம் : இந்த எண்ணெய்யை மேலுக்கும் உள்ளுக்கும் சாப்பிடவும். உபயோகம் படுத்தால் ஜன்னி, கண்டவர்களுக்கு அரை சங்கு முதல்1 அவுன்ஸ் வரை உள்ளுக்கு அருந்த கொடுக்கலாம் உடனே ஜன்னி விலக வியக்கதக்கபடி உடலில் உஷ்ணமுண்டாக்கி விடும் மற்றும் பார்சவாதம் இளம்பிள்ளை வாதம் சூலை முழங்கால் வீக்கம் முதலியவை களைக் குணமாக்கும் குழந்தைகளுக்கு காணும் தெக்கித்திகனை அல்லுமாந்தம் இழுப்பு இசிவு குணமாகும் இவை யாவற்றிற்கும் உள்ளுக்கும் வெளிப்பிரயோகம் இரண்டும் செய்ய சாலச் சிறந்ததாகும்.

பிண்டத்தைலம்

தேன் மெழுகு மஞ்சிஷ்டி நன்னர்ரி சாம்பிராணி இவை வகைக்கு 4 தோலா இவைகளைப் பொடி செய்த சின்ன படிக்கு 1 படி நல்லெண்ணையிலிட்டு அதில் சின்ன படிக்குப்படி தண்ணீர் கலந்து பதமாய் காய்ச்சி வைக்கவும்.

உபயோகம் : வாதரத்தம் கைகால் மூட்டு வீக்கம் வலி குணமாகம்.

மயனத்தைலம்

சரக்கு மஞ்சள் மெழுகு 14 பலம் சக்கிக்கல் 1 வீசை சோத்துப்பு அரை வீசை ஆற்று மணல் அரைக்கால் வீசைஓமம் அரைக்கால் வீசை மஞ்சள் வீசம் வீசை.

செய்பாகம் : மெழுகை துண்டுகளாக வெட்டி மற்ற சரக்குகளை ஒன்றிரண்டாகி இடித்து தைலக் குடத்திலிட்டு விதிப்படி தைலம் வடிக்கவும்.

இதன் குணம் பட்சவாதம் வாதரோகங்கள் குழந்தைகளுக்கு காணுகின்ற இசிவு ரோகங்கள் வீக்கங்கள் ரெத்தம் வடிவும் வெட்டுக்காயங்கள் நோயோடும் கூடிய

ஆண்குறி வீக்கம் நரித்தலை வாதம் சன்னிபாதம் பெண்குறி தளர்ச்சி ஆண்குறி துவளல் கீழ் எலும்பு மாமிசம் நரம்பு இதுபற்றிய வாய்வு நோய்கள் நீங்கும் நோயுள்ள இடங்களில் ஒரு துணியில் தைலத்தை நனைத்துக் கட்ட உடனே குணம் தரும் ஜன்னி கண்டவர்களுக்கு சர்க்கரையில் ஒரு சொட்டு தைலத்தை விட்டு உண்ண செய்தால் வியக்கத்தக்க அளவில் உடல் உஷ்ணம் ஏற்பட்டு மரண அவஸ்தையில் மீள வழி பிறக்கும்.

மயனத்தைலம் (வேறுமுறை)

சரக்கு மஞ்சள் மெழுகு 10 பலம் வெள்ளை குங்கிலியம் 10 பலம் ரூம்ஸ்த்தி 1 பலம் ஜடாமாஞ்சில் வாலுலுவை அரிசி கிராம்பு நவாச்சாரம் நாய்கடுகு ஓமம் திப்பிலி சுக்கு மிளகு கற்பூரம் பளிங்கு சாம்பிராணி இலிங்கம் வெள்ளை பாஷாணம் குரோசாணி ஓமம் வீரம் பூரம் தாளகம் இவைகள் வகைக்கு 1 தோலா.

செய்பாகம் : மேற்கூறப்பட்ட சரக்குகளையெல்லாம் ஒன்றிரண்டாக இடித்துப்போட்டு மெழுகை சிறுசிறு துண்டுகளாக நறுக்கி மேற்படி சூரணத்தோடு பிசரி தைல குடத்திலிட்டு முறைப்படி தைலமிறக்கவும்.

பிரயோகம் : வேளைக்கு ஒரு துளியாக தினம் இரு வேளை சர்க்கரையுடன் கலந்துண்ண மூன்று அல்லது ஏழு நாட்களில் ஜன்னி பாரிசவாயு முதலிய கடும்பிணிகள் குணம் செய்யும்.

இத்தைலத்தை மேல் தேய்ப்பதினால் அர்த்தாங்க வாதம் பாரிசவாதம் வாதப் பிடிப்பு குடச்சல் குழந்தைகளுக்கு உண்டாகும் இசிவு இளம்பிள்ளை வாதம் வீக்கங்கள் வெட்டுக் காணங்கள் நோயோடு கூடிய பீஜத்தின் வீக்கங்கள் நரித்தலை வாதம் எலும்பு மாமிசம் நரம்பு இன்னும் இவைகளைப்பற்றி அதிகரித்த வாயுவும் நீங்கும் இத்தனை மெல்லிய துணியில்

தைலத்தை நனைத்து நோயுள்ள இடங்களில் சுற்றினால் கைகால் தளர்ச்சி நீங்கும் ஆண் குறி துவளல், பெண்களின் குறி தளர்ச்சி நீங்கி உறுப்புகளுக்கு பலத்தை தரும்.

பாஷாண அண்டத் தைலம்

கோழி முட்டையின் சிதறாத மஞ்சள் கரு 25 எடுத்து ஒரு இரும்பு கடாயில் விட்டுக் கரிநெருப்பின் மேல் வைத்து வறுத்துக்கொண்டு வந்து வறுத்த எண்ணை சோறு பதத்தில் ஒரு பலம் வெள்ளை பாஷாணத்தைத் தூள் செய்து போட்டுக் கிளரி உடனே தீயை விட்டுயிறக்கி ஒரு ஜாரணிக் கரண்டியில் கருகியிருக்கும் முட்டைக் கருவை ஒன்று சேர்த்து அதன் மீது ஜாரணியாவாது மத்தையாவது வைத்து அழுத்தி சாய்க்க ஒருவர் தைலத்தை சிறு கரண்டியால் முகத்துக் கண்ணாடி ஜாடியில் விடவேண்டும் மருந்து முடிந்து விட்டதும் பத்திரப்படுத்தவும்

உபயோகம் : இதனை மேல் தேய்ப்பதினால் ஒருவாரத்துக்குள் பாரிசவாதத்தால் சுவாதீனமற்ற கால் கைகள் ஒழுங்குற்றுவரும்.

குறிப்பு : இத்தைலம் செய்யுமிடம் காற்றோட்டத்தை நன்குணர்ந்து புகை உட்கொள்ளாதபடி முகராதபடி வாய் மூக்கு செவி ஜாக்கிரதையாக எரித்து தைலம் வாங்கவும்.

நறம்பிசிவிற்கு லேபனத்தைலம்

வேப்பெண்ணெய் கால்படி சீமெண்ணெய் 1 பாட்டில் சூடம் சாம்பிராணி காயம் வகைக்கு அரைபலம் கிராம்பு ஓமம் லவங்கப்பட்டை கடுகு சுக்கு வகைக்கு அரைபரம் மஞ்சள் அரை பலம் கெந்தகம் 1 விராகனிடை பூண்டு 1 பலம் யாவும் பொடி செய்து எண்ணெயிவிட்டு காய்ச்சி பூண்டு வெந்த வடிகட்டிய பதத்தில் பாட்டிலில் பதனப்படுத்தவும்.

தீரும் நோய் : வலியுள்ள இடத்தை தேய்க்க இசிவு பீடிப்பு வலி குத்தல் முடக்கு கைகால் நீட்ட முடியாமை நரம்பு இசிவு முதலிய வியாதிகள் குணமாகும் வீக்கம் வடியும்.

சத்தித்தைலம்

சரக்கு : வேப்பெண்ணெய் அரைப்படி கோழி முட்டையின் மஞ்சள் கரு 25 வெள்ளைப் பூண்டு 5 பலம் சுக்கு 5 பலம் வாள்மிளகு அரிசி திப்பிலி தேசாவரம் அரத்தை சகுப்பை இவை ஐந்தும் வகைக்கு இரண்டரை பலம்.

செய்பாகம் : சுக்கு முதல் உள்ள சாமான்கள் ஆறு சர்க்கரையும் இளவருப்பாய் வருத்து இடித்து அத்துடன் கோழி முட்டையை வேகவைத்து மஞ்சள் கருவை மட்டும் எடுத்து சூரணத்துக்குள் பிசரி வேப்பெண்ணெயில் சேர்த்து காய்ச்சிபதத்தில் வடிக்கவும்.

உபயோகம் : காலைமாலை இருவேளை ஒரு டியூஸ்பூன் அளவு நோய்க்குத்தக்கபடி உள்ளுக்கு கொடுக்கலாம்.

பச்சோந்தி தைலம்

தீரும் வியாதி பஞ்சை வாதம் பாரிச வாயு ஜன்னி முதலானவை குணமாகும் குழந்தைகளுக்கு வரும் இளம் பிள்ளைவாதம் தெக்கத்தீக்கணை இழப்பு இசிவு மாந்தம் தீரும்.

ஒரு பச்சோந்தியைக் கொண்டு வந்து கால் குடல்வால் முதலியவைகளை நீக்கி நடுக்கண்டத்தை மட்டும் எடுத்து முன் கூறப்பட்ட சத்தி தைலத்தில் கால் எடுத்து இதில் போட்டு பின் முசுருமுட்டை கால் அல்லது வீசும்படி போட்டு வலம் புரிக்காய் இடம் புரிக்காய் வகைக்கு அரை பலம் எடுத்து தூள் செய்து போட்டுக் காய்ச்சி வடிகட்டாமல் வைத்துகொண்டு பச்சவாதம் பாரிசவாயு இளம்பிள்ளைவாதம் முதலிய வாதரோகங்களுக்கு மேலுக்கு மட்டும் பூசி துவளப்போட்டுவற பூரண குணம் உண்டாகும்.

குறிப்பு : சத்திதைலம் உள்ளுக்கு பச்சோந்தி தைலத்தை வெளி உபயோகத்துக்கும் உரித்தாகும்.

ஓணான் தைலம்

சரக்கு வீரம் கந்தகம் இலிங்கம் தாளகம் மனோசிலை பால்துத்தம் துருசு வெள்ளைப்பாஷாணம் பொரித்த வெங்காரம் நவாச்சாரம் படிக்காரம் வகைக்கு 1 விராகனிடை.

செய்பாகம் : இவைகளை நன்றாய் அரைத்து ஐந்து பலம் உரித்தவெள்ளுளியைக்கொஞ்சம் கொஞ்சமாகபோட்டு மெழுகு ஆகும் வண்ணம் நன்றாக அரைத்து வெண்மையான துணியில் தடவி இரண்டு மூன்று ஓணானைக் கொண்டு வந்து தளை தோல் கால் முதலியவைகளை போக்கி அவைகளை ஒருங்கு சேர்த்து கம்பியால் இரண்டொரு இடங்களில் கூட்டி அதன்மேல் மேற்படி சீளையை சுற்றி 15 பலம் வேப்பெண்ணைய் விட்டு சுடர் தைல விதிப்படி தைலம் வாங்கவும் இப்படி வாங்கிய தைலத்தை மீண்டும் அதன் பேரிலேயே விட்டு எரித்து மடக்கவும் இங்ஙனம் மூன்று முறை செய்து சீலையில் வடித்து அதனில் இரண்டு விராகனிடை சுத்திசெய்த வாளத்தைக்கல்வத்தி விட்டு இச்சுடர் தைலம்விட்டு நன்றாய் அரைத்து மிகுதியுள்ள எண்ணையில் கலக்கி வைத்துக் கொள்ளவும்..

பிரயோகம் : தினம் ஒரு நேரம் காலையில் வயதுகுக தக்கபடி 3 முதல் 6 வரையில் முலைப்பாலில் சேர்த்துக் குலுக்கிக் கொடுக்கவும் ஒரு மாதம் இரண்டு மாதக் குழந்தைகளுக்கு ஒன்று முதல் மூன்று துளிவரையிலும் நாவில் தடவவும் பெரியவர் கட்கு 12 துளிக்கு மேல் கொடுக்க வேண்டிய அவசியமில்லை இதனால் காக்கை வலி முயல் வலி குமர கண்டவலி பாரிசவாதம் குழந்தைகளுக்கு உண்டாகும் இசிவு இளம்பிள்ளை வாதம் மாந்தம் முதலியவை குணம் செய்விக்கும்.

பத்தியம் : குழந்தைகளுக்கு கொடுக்கும் போது தாய் புளி சுட்டும் உப்பு வருத்தும் கத்திரி, பிஞ்சு முருங்கை பிஞ்சு

அத்திக்காய் பெருவாட்டின் உப்புக்கண்டம் கோழி புறா முதலியவைகளை கூட்டிக்கொள்ளவும்.

பெரியவர்களுக்கு இச்சாபத்தியம் இருக்கவும்

குறிப்பு : இத்தைலத்தை ஒரு முறை 5 நாள் வரையிலும் கொடுக்கலாம் மீண்டும் அவஸ்யமாயின் 2 வாரம் கழித்து 3நாள் கொடுக்கவும் இப்படி குணமாகும் பிறகு இரண்டு வாரத்துக்கு ஒரு முறை 3 நாள் கொடுத்துக் கொண்டு வரவும்.

இசிவு முதலியவை உட்கொண்ட இரண்டு மணிநேரத்தில் குணமாகும் தைல வகைகளில் இதுவும் சக்தி வாய்ந்த தைலமாகும்.

அரணைவால் தைலம்

பகன்றெய் அரைபடி பாம்பரணையின் வால்மட்டும் 3 இதை நெய்யிலிட்டு கொதிவரக் காய்சி வடித்து வைத்துக் கொள்ளவும்

உபயோகம் : பாரிசவாதம் இளம்பிள்ளை வாதம் தேகத்தின எப்பாகத்திலேயும் துவண்ட பாகத்தில் மேற்படி நெய்யைத தடவி அழுக்கி பிடித்து தேய்க்க துவண்ட பாகம் சரியாகிவிடும்.

குறிப்பு : இந்த தைலத்தை சோதனை செய்து பார்க்க வேண்டுமானால் காய்ந்துபோன எருக்கன் குச்சிக்கு இந்த நெய்யைத் தடவி ஒரு நாழிகை கழித்து ஒடிக்க வளையும்.

கருங்கோழி தைலம்

முதல் முட்டையிடும் கன்னிப்பருவத்துக் கருங் கோழியைத் தோலுரித்த தலை குடல் கால் முதலியவற்றைக்

களைத்தொழித்து வயிற்றின் நிறையக்கடுக்கைக் செலுத்திக் கல்லுரலில் போட்டு இடித்து நன்றாக மகிழ்ந்தபின் ஒரு மண்டலத்திலிட்டு கால்படி வேப்பெண்ணையும் கரல்படிதனி தெங்காய்ப்பாலும் சேர்ந்துக் காய்ச்சி கரி சிவந்து எண்ணெய் பிரியும் அச்சமயம் கருகட்டுவத்தால் சட்டையழுத்தித் தைலத்தை வடித்துக்கொள்க.

பிரயோகம் : பாரிசவாயு முடக்குவாதம்கைகால் குடச்சல் முதலியவைகட்டு தேய்க்க இரண்டொரு வேளை குணப்படும்.

நவபாஷாணத் தைலம்

வீரம் பூரம் இலிங்கம் தாளகம் இரசம் கந்தகம் வெள்ளைப்பாஷாணம் மனோசிலை நாபி இவை வகைக்கு விராகனிடை நன்றாகக் கல்வத்திலிட்டு அரைத்து அதனுடன் 3 பலம் எருக்கம் பூவையும் 5 பலம் பூநாகத்தையும் சேர்த்தரைத்து மெழுகு பதமாயிருக்கும் சமயம் சீலையில் சன்னமாகத் தடவி திரிபோல் திரட்டி அரைக்கால்படி வேப்பெண்ணெயில் துவைத்து திரட்டி அரைக்கால்படி வேப்பெண்ணெயில் துவைத்து ஒரு வறட்டினால் பற்றிக்கொண்டு ஒரு முனையைக் கொளத்தி மற்றொரு முனையிற் சிறிது சிறிதாக மிகுந்த வேப்பெண்ணையை வார்த்துச் சுடர் தைலம் வாங்குக. இது சென்னிறமாக விருக்கும் இதை மேலுக்குத் தேய்ப்பதினால் கைகால் பிடிப்பு. குடைச்சல். முதலான சகல வாதரோகமும் தீரும்

விரண் சஞ்சீவித் தைலம்

சரக்கு : ரசம் கெந்தகம். பூரம். பால்துத்தம். துருசு. மிருதார்சிங்கு. ஏலம். கற்பூரம். கார்போக அரிசி கஸ்தூரி மஞ்சள். நீரடிமுத்து. காட்டுசீரகம் (காட்டு சீரகம் என்பது விஷசீரக மென்றும் கசப்பு சீரகம் என்றும் பெயர்) வகைக்கு விராகனிடை ½ தேங்காய் பால்படி 1.

செய்பாகம் : முதலில் கெந்தகத்தையும். ரசத்தையும் அரைத்துபபின் முறையே ஒன்றின் பின் ஒன்றாகச் சகல சரக்கின் சூரணங்களையும் சேர்த்து அரைத்துக் தேங்காய்பாலில் குழைப்பி கும்பபதமாக அரைத்து மிகுதியுள்ள பாலில் கலக்கி நீர் சுண்டி நெய்பிரியக்காய்ச்சி வடித்துப் பத்திரப்படுத்தவும்.

பிரயோகம் : குஷ்ட விரணம் முதல் ஆறாத எல்லாதமான மேகரணங்களுக்கும் பூசிக்கொண்டுவர சில் தினங்களில் ஆறிவிடும்.

ரெணத் தைலம்

பூண்டு பலம் 1. விரலிமஞ்சள் பலம் 1. இவை இரண்டையும் சேர்த்து இடித்து 1¼ படி. வேப்பெண்ணையிலிட்டு காய்ச்சி வடித்து புண்புரை சிரங்கு முதலியவைகளுக்கு பூசிவர சகலரணமும் ஆற்றும்.

நாரிகேளத் தைலம் (அல்லது) கொட்டாங்கச்சி தைலம்

தேங்காய் ஒருபலம். 20 வெள்ளை வாதுமைக் கொட்டை ஓடுபலம் 10 காய்ச்சுக்கட்டி பலம் ¼. வெள்ளைபாஷாணம் தோலா அரைக்கால். நாவித்தோலா 1. கொட்டைப்பாக்கு பலம் ½சுண்ணாம்பு சோப்பு பலம்.

செய்பாகம் : ஓடுகளைச் சிறுதுண்டுகளாக நறுக்கி மற்றவற்றை அரைத்து ஓட்டுடன் கலந்து ஒருபழகிய குடுவையில் போட்டுக் குழித்தைல விதிப்படி தைல மிறக்குக தீமிகின் தைலம் குழம்பாகவும் தீ அளவாக இருப்பின் தைல ரூபமாகவுமிருக்கும்.

பிரயோகம் : இதனை மேல் தடவும் மருந்தாக உபயோகித்தால் ஊறலெடுத்துச் சொறியின் நீர்வரும் படைகளும் கஜசருமம் படைகளும் தீரும் மற்றும் கன்னத்தில் உண்டாகும். வங்கு என்னும் தேமல் குணப்படும். இவ் உபயோகத்தால்

தைலத்தை மிக லேசாகபட்டதும் படாததுமாகத் தடவவேண்டும் அதனோடு மருந்தின் வெப்பம் கண்களிலுரைக்காத படி ¼ மணி நேரம் கண்களின் இரப்பையைத் திறவாமல் மூடிக்கொண்டிருந்து தைலத்தின் காரமெல்லாம் தனிந்தபின் திறக்கவும் ஒருவார உபயோகத்துக்குள் ஒருசிறிதும் இன்பமும் விரணமுமின்றித் தோலுரியும் பின்னர் சிலநாளில் இருந்த இடந்தெரியாமல் மறையும்.

அஞ்செண்ணைத் தைலம்

புங்கெண்ணை. வேப்பெண்ணெய். விளக்கெண்ணெய். இலுப்பை எண்ணை. நல்லெண்ணை வகைக்கு படி ½ வெள்ளைப் பூண்டு. வசம்பு. சுக்கு. பெருங்காயம் மிளகு. திப்பிலி. ஓமம். சதகுப்பை. கிராம்பு. கடுகுரோகினி சித்திரமூலம் வகைகுபபலம் ½ காடிபடி 2 சரக்குகளைக் காடிவிட்டு அரைத்து எண்ணெய் வகைகளைகூட்டி அதில் கலந்து சிறுதீயாக எரித்து நீர் சுண்டியபின் வடிகட்டி எடுத்து பதனப்படுத்தவும்.

உபயோகம் : தேகத்தில் எப்பாரிசத்தில் வலி இருப்பினும் இத்தைலத்தை சிறிது எடுத்து தேய்க்க வலி உடனே குணம்செய்யும் எத்தகைய வாதரோகங்களையும் குணம் செய்யும்

சித்தாதி எண்ணெய்

பெருங்காயம். வெங்காரம். காட்டெருமைப்பால். இந்துப்பு. கருஞ்சீரகம். திப்பிலி. இவைவகைக்கு 1¼. விராகனிடை. சுத்திசெய்த நேர்வாளம் பலம் 1 வெள்ளை பூண்டு சேர் 1. கடுக்காய்சேர். சிற்றாமணக்கெண்ணை தேங்காய்ப்பால். வேலிப்பருத்திச்சாறு. இவை வகைக்கு சேர் 8. சரக்குகளை கல்வத்திலிட்டு மேற்படி சாற்றால் நன்றாக அரைத்துக் கலக்கிச் சிறுதீயில் காய்ச்சி இறக்கவும்.

3 முதல் 5 துளி நீசித்தண்ணீரிலேனும் சோம்ட கிஷாயத்திலேனும் கொடுக்க பேதியாகும் மிகுதியாகப்போயின்

தீரகக்குடிநீர். பழரசம். மோர் இவை கொடுக்க பேதி நின்றுவிடும் அதிலும் பேதி நிற்காவிடில் வசம்பை சாம்பல் செய்து சீரக கியாழுதத்தில் கலந்து கொடுக்க பேதிநின்று விடும்.

தீரும் நோய் : கவிசை. தலைநோய். நீராம்பல். கட்டி மலக்கட்டு சொறி. ரிணம். பெரும்பாடு. நாவடைப்பு கிரந்தி. மேகம் வாய்புண். சுண்ணொவு ஊதுவாய்வு தாகம். விக்கல் சதந்திருன்மம். அரையாப்பு பொருமல் பைத்தியம். பறங்கிப்புண். கூதகவாய்வு. வலிப்பு. வாய்வு. காதடைப்பு. வயிற்றுநோய். பூச்சிவெட்டு 8-வித கன்மம் சூதகவெட்டை நெரிவீக்கங்கள் பவுத்திரம் இவைகள் தீரும்.

பத்தியம் : மோரும் சோறும்.

மார்க்கண்டன் நெய்

பசுவின் நெய் சேர் 4. நாயுருவிசார் கற்பூர வல்லியின் சார். புளியாரையின் சார் துளசி இலையின் சார் பிறமி இலையின் சார் சோற்றுக் கற்றாழையின் சார். வில்வ இலையின் சார் தகர இலையின் சார். வல்லாரை இலையின் சார் மாதுளம் பழத்தின் சார். வரட்பூலாவின் சார். தக்காளிசார். பொடுதலைசார் பூம்பாளைச்சார். கதலிபூவின் சர்ர் குப்பைமேனியின் சார் இந்த பதினாறு மூலிகையின் சார்கள் வகைக்கு ¼ படி சார் எடுத்து மேற்படி நெய்யில் விட்டு. பின் சுக்கு மிளகு சீரகம். தேவதாரம். கடுக்காய்பூ சாதிபத்திரி. சடாமஞ்சில். கிராம்பு. கஸ்தூரி மஞ்சள் ஜாதிக்காய். ஏலம் தாளிசபத்திரி விசுவாசி சென்னக்கரப்பான் பட்டை மகட் கோஷ்டம் இந்த பதினாறு வகை கடை சரக்குகள் வகைக்கு கழஞ்சு ஒன்று வீதம் நிறுத்தெடுத்து பசுவின்பால் விட்டு அரைத்தெடுத்து மேற்படி நெய் கலப்பிலிட்டு கலக்கிபின் பசுவின் பால் படி 4 செவ்விளநீர் படி 2 இவ்விரண்டையும் மேற்படி நெய் கலப்பிலிட்டு நன்றாக கலந்து அடுப்பில் வைத்து ஆவாரை விரகால் கமலம்போல் எரித்து பதமான பின் நெய்யை வடித்து ரவியில் மூன்றுநாள் வைத்தெடுத்து வினாயகர் முன்வைத்து பூசைசெய்து தியானித்து நெய்யை பதனப்படுத்தவும்.

உபயோகம் : காலைவேளை மட்டும் 1/2 ஸ்பூன் அளவு தினம் சாப்பிட்டு வரவும் காலவரையின்றி தினம் சாப்பிட்டு வரலாம். இங்ஙனம் சாப்பிட்டுவர எமபயமில்லை வியாதி இல்லாதவர்களும் சாப்பிட்டு வரலாம் இந்த நெய்யினால் தீராத நோய்கள் இல்லை சிகிச்சைக்கு அப்பாற்பட்ட புத்துநோய் நாள்சென்ற கூஷயம். காசநோய் முதலானநோய்களும் சரும சம்பந்தப்பட்ட நோய்களும் குணம் செய்யும் சந்தான பாக்கிய மில்லாதவர்கள் இருவரும் சாப்பிட புத்திர சந்தானம் உண்டாகும் கிருத வகையில் மிகச் சிறந்த பாகமாகும் இதனை வைத்தியர்களை சாப்பிட்டுவர கூறுகிறார். அவர்கள் சாப்பிட்டு நீண்டகாலம் வாழ்ந்தால் தான் நோயாளிகளுக்கு சிகிச்சைக்கு உதவமுடியும் என போதிக்கிறார் ஆகவே இது பாலர் முதல் விருத்தர்வரை சாப்பிடதேகம் காயகற்பமாகும்.

தேங்காய் நெய்

சரக்கு : முற்றின தேங்காய். வெள்ளைப்பூண்டு 10 பலம் வெடியுப்பு நவாச்சாரம் சவர்காரம் பெருங்காயம் வளையலுப்பு கல்லுப்பு கரியுப்பு இந்துப்பு சீனாக்காரம் சுத்தித்தவாளம் இவை யாவும் வகைக்கு 3 விராகனெடை.

செய்பாகம் : மேற்படி தேங்காயைத்திருகி 12 சரக்குகளையும் மயனமாய் அரைத்து ஒரு தாழியில் 4 படி தண்ணீரில்விட்டு வேடுகட்டி அந்த வேட்டின் மேல் தேங்காய் பூவில்போர்பாதி வைத்து அதன்மேல் அரைத்த மருந்தை வைத்து அதன்மேல் பாதிதேங்காய் திருவிய பூவைப் போட்டுமேல் சட்டிமூடி மேற்படி பூசிவைக்கும் படி எரித்து எடுத்து எல்லா மருந்தையும் மேற்படி ஜலத்தில் விட்டு நன்றாய் பிசைந்து பாலெல்லாம் பிழிந்து சட்டியிலிட்டு காய்ச்சி எண்ணெயை வடித்துக் கொண்டு கட்கத்தை தனியாக வைத்துக்கொள்ளவும்.

உபயோகம் : மேற்படி தைலம் விராகனிடை 2. கட்கம் கழஞ்சு 1 விதம் 3 நாள் சாப்பிடவும்.

பத்தியம் : உப்பு. புளிப்பு நீக்கவும் மறுபடியும் இடைவிட்டு மூன்று நாள் சாப்பிடவும்.

தீரும் நோய் : வாய்வு ரோகங்கள் உதிரகுன்மம் மகோதரம். பித்தபாண்டு. உதிரசிக்கல் கட்டி முதலிய குணம் செய்யும்.

குருசஞ்சீவித் தைலம்

நல்லெண்ணைபடி 8. பொன்னாங்காணிசார் படி 8. ஆவின்பால் படி 4. மிளகு. சீரகம். வேப்பம்பருப்பு. கடுக்காய்தோல் நெல்லிவத்தல். சன்னலவுங்கம் பட்டை. பூலாங்கிழங்கு கஸ்தூரி மஞ்சள் வகைக்கு 4 பலம் கார்போகரிசி பலம் 2. கசகசா பலம் 4. கோரைக்கிழங்கு பலம் 4. வாசனை கோஷ்டம் பலம் 1. வங்காளப்பச்சை விலாமிச்சம்வேர். வெட்டிவேர். சந்தனம் மகிழம்பூ. செண்பகப்பூ. சம்பங்கிப்பூ இவைவகைக்கு பலம் 4. புனுகு விராகனிடை 2. பச்சைகற்பூரம் விராகனிடை 2½. குங்குமப்பூ விராகனிடை 1.

தைல முறைப்படி எரித்து கீழ் இறக்கி வாசனை சரக்குகளை ஒரு துணியில் முடிந்து தைலத்தில் போடவும் தயிலம் எரித்து யெடுத்து கீழ் இறக்கியதும் இரண்டு நத்தையை தட்டி யெண்ணையில் போடவும் ஒருவாரம் சென்றபின் தைலத்தை வடிகட்டவும். இந்ததைலம் சர்மரோகம். சாலேஸ்வரம் அந்திமாலை தேமல்சொறி சிரங்கு முதலானவைகளை போக்கி குணம்தரும்.

கருடன் கிழங்கு எண்ணெய்

கருடன் கிழங்கு பலம் 12. வாய்விளங்கம். வாலுளுவை அரிசி. கருஞ்சீரகம். சுக்கு. மிளகு. திப்பிலி வகைக்குபலம் 1 இவைகளை இடித்து 4 படி சுத்த ஜலத்திலிட்டு ½ படியாய் சுண்டக்காய்ச்சி வடிகட்டிய கியாழத்துடன் ஒருபடி சித்தாமணக்கெண்ணெயும் சிறுதுண்டுகளாக அரிந்த

வெங்காயத்தையும் சேர்த்துக்கல்ந்து ஒருதைல மண் பாண்டத்திலிட்டு அடுப்பேற்றி சிறுதீயாய் எரித்துவெங்காயம் வெந்துமிதந்து தைலப்பதம் வரும் போது வடித்து பத்திரப்படித்தி இதில் வேளைக்கு ½ முதல் 1 அவுன்ஸ் வீதம் தேகதிடத்திற்கு நோயின் வன்மைக்கும் ஏற்றவாறு தினம் ஒரு வேளை வீதம் காலையில் கொடுக்கவும் இப்படி 2 3 முறை கொடுத்து வர வெள்ளை. அரையாப்பு குஷ்டம். கொருக்கு. கிரந்தி. மேகரணம் முதலியன குணமாகும்.

சித்திர மூல நெய்

சித்திரமூல வேர்ப்பட்டை பலம் 2. ஆவின்நெய்படி 1 சித்திரமூலவேர் பட்டையை பசும்பால் விட்டரைத்து எண்ணெய் நெய் முதலியவற்றுடன் கலந்து பதமுறக் காய்ச்சி வடித்துக்கொள்க.

வேளைக்கு 1. 2 தேக்கரண்டி வீதம் தினம் ஒரு வேளை காலையில் அருந்தவும். இப்படி ½ முதல் 1 மண்டலம் அருந்த கிரந்தி. மேகரணம். வெடியுப்புள்ள ரணங்கள். மேகசூலை. கொருக்கு. உள்ளழலை முதலியனவு குணமாகும்.

தூதுவேளைக் கிருதம்

தூதுவேளை சமூலத்தின் பலம் 100. கண்டங்கத்திரி சமூலம் பலம் 25. ஆடாதோடை சமூலம் பலம் 25. சீந்தில்கொடி சமூலம்பலம் 25. இவைகளை துண்டு துண்டாக நறுக்கி ஒரு கியாழ பாண்டத்திலிட்டு 10 படி தண்ணீர்விட்டு 2 படியாக வற்றக்காய்ச்சி வடிகட்டி எடுத்துக்கொள்ளவும் சுக்கு திப்பிலி மிளகு சதகுப்பை ஓமம் சிற்றரத்தை அதிமதுரம் கோஷ்டம் வெள்ளிலோத்திரம் கருஞ்சீரகம் குரோசாணி ஓமம் குக்கில் சன்ன லவங்கப்பட்டை சிறுதேக்கு ஏலம் கிராம்பு அக்கிராகாரம் கோரைக்கிழங்கு இவையாவும் வகைக்கு பலம் ½ எடுத்து இடித்து வஸ்திரகாயம் செய்து பசும்பால்விட்டு அரைத்து 2

படிபசும் நெய் கலந்து கஷாயத்தையும் அத்துடன் கூட்டி காய்ச்சி பதமாய் வடித்து ஆறவைத்து புட்டியில் பதனப் படுத்தவும்.

உபயோகம் : காலை மாலை ஒரு டீஸ்பூன் அளவு சாப்பிட்டு வரவும்.

இதன் குணம் சுவாசகாச ரோகங்களும். எலும்புருக்கி ரோகங்களும். க்ஷயம். ரெத்தகாசம் முதலிய கொடிய ரோகங்களும் சூட்டினால் ஏற்பட்ட இருமலும் குணம் செய்யும் இளைத்துப்போய் இருக்கும் உடல் புஷ்டியை உண்டாக்கும் சிறுகுழந்தைகளுக்கு உபயோகிக்க. கணைச்சூடு நீங்கி பெருத்து வளரும்.

பத்தியம் : புளி. கடுகு. நல்லெண்ணை. மீன். கருவாடு புகை போகம் இவைகளை நீக்கி மருந்து சாப்பிடவும்.

வல்லாரை கிருதம்

வல்லாரைச்சார் படி அரைக்கால். பொன்னாங்காணி சார்வீசம். பொடுதலைசார்படி ½ வீசம். பசும்நெய்படி ½. சாதிக்காய். சாதிபத்திரி. ஏலம். கிராம்பு. வால்மிளகு. அதிமதுரம். மாச்சக்காய். கடுக்காய்ப்பூ இவை 8-ம் வகைக்கு விராகனிடை 1 வீதம் நிறுத்தெடுத்து சூரணித்துக் கல்வத்திலிட்டு 4-எலுமிச்சம் பழத்தின் சார் விட்டரைத்து .மேற்கூறப்பட்ட முன்றுசார் வகைகளோடு கலந்து நெய்சேர்த்து பதமுறுக்காய்ச்சி உடன்வடித்து அதில் ஒருபலம் கல்கண்டைப் பொடிசெய்து போட்டு கலக்கி கண்ணாடிசீசாவில் பதனப்படுத்தவும்.

அளவு :- ஒரு ஸ்பூன் பெரியவர்களுக்கும் ¼. ½ சிறியவர்களுக்கும் காலை மாலை கொடுத்தவரவும்.

தீரும் நோய் :- அஸ்திசூடு. அஸ்திசுரம். அஸ்திவெட்டை. மூலசூடு. நீர்கடுப்பு. குழந்தைகளுக்கு காணுகின்ற மாந்தம். சுரம். ஈரல்குலைக்கட்டி. கணைச்சூடு குணமாகும். (குழந்தைப் பருவத்தில் கணைசூட்டை கவனிக்காமல்விடுவதால் முதிர்ந்த வயதில் க்ஷயரோக நோய் பீடிக்க ஏதுவாகிறது)

க்ஷயரோக நோய்க்கு கொடுத்து வர குணம் செய்யும்.

மேகராஜ எண்ணெய்

பூவரசு பட்டை சார் அத்திப்பட்டைசார் வெள்ளறுகு சார் கோவை இலைச்சார். பீச்சங்கன் இலைச்சார் வகைக்குப்படி ¼. விளக்கெண்ணை (சித்தாமணக்கெண்ணை) படி ¼ அமுக்குராங்கிழங்கு பலம் 2½. பரங்கிசக்கை பலம் 3. லவங்கப்பட்டை கார்போகரிசி. கடுகரோகினி வாய்விளங்கம். திப்பிலி வகைக்குப்பலம் 1 மிளகு பலம் ½ பூரம் பலம் ¼. இவைகளைதூள் செய்து மேற்படி சாறு வகைகளை எண்ணையில் கலந்து அடுப்பேற்றி சலங்கை கொதி பக்குவத்தில் தூள்செய்த மருந்துகளைப் போட்டு கலக்கி வடித்தெடுத்துக் கொள்ளவும்.

அளவும் உபயோகமும் :- வேளைக்கு ½ பலம் வீதம் காலை வேளையில் மட்டும் சாப்பிடவும் இவ்விதம் 3-தடவை சாப்பிட்டு 7-தினங்கள் விட்டு சாப்பிடவும். இவ்விதம் 2 அல்லது 3 முறை சாப்பிட உடலில் உண்டாகி இருக்கும் குஷ்டம் குஷ்டரணம். திமிர் தடிப்பு. மதமதப்பு. கருமேகப்பட்டை. ஊறல் எடுத்து பரவுகின்ற மேகப்படை. யானைக்கண் சிரங்கு. சொறிசிரங்கு. அரிகிரந்தி. கால்களில் வீக்கம். ரணம் ஏற்பட்டு நீர்வடியும் புண்கள் முதலான தோலைப்பற்றிய சர்மவியாதிகள் அனைத்தும் நீங்கும்.

பத்தியம் :- பீர்க்கங்காய் அரைக்கீரை. முருங்கக்காய். துவரம் பருப்பு. உப்பு சேர்த்துக் கொள்ளலாம்.

நரசிங்க எண்ணெய்

வெள்ளை கலியாண முருக்கன்பட்டை. பூவரசன்பட்டை. இலவன்பட்டை. தனித்தனி இளநீர் விட்டிடித்து பிழிந்தரசம் வகைக்குப்படி ¼ கத்தாழைச்சாதம் தேங்காய் பிரமாணம்- வெந்தியம் பலம் ½ தூள்செய்து. 6 பலம் சித்தாமணி யெண்ணையை அடுப்பிலேற்றி வெந்தியத்தூளைப் போட்டு கத்தாழை சாதத்தையும் போட்டு மேற்படி பிழிந்து வைத்திருக்கும்

ரசங்களையும் ஊற்றிகாய்ச்சி பதத்தில் வடித்துக்கொண்டு பூரம் ½ பலம் மேற்படி எண்ணை விட்டரைத்து அதில் கலந்து வைத்துக் கொள்ளவும்.

அளவும் உபயோகமும் :- காலையில் ஒரு சூபாய் எடை எண்ணெய் புசித்த வென்னீர் சாதம் சாப்பிடவும் 5 நாள் அல்லது 8 நாள் சாப்பிடவும்.

மறுபத்தியம் :- அரை உப்பு அரைபுளி சேர்த்துக் கொள்ளவும். போக்கும் நோய் சர்வமேகபட்டை குட்டரிணங் களைப் போக்கும் மற்றும் சருமத்தை விகாரப்படுத்தும் சகல தொற்றுநோய்களைப் போக்கும்.

கரப்பான் எண்ணெய்

வசம்பு. கருஞ்சீரகம். கார்போகரிசி. நீரடிமுத்து வெங்காயம் சங்கம்பட்டை. மிளகரணை. சங்கம்குப்பி இலை. செங்கத்தாரி இலை வகைக்கு பலம் 1 சித்தாமணக்கெண்ணை படி 6 மேற்கூறப்பட்ட சரக்கினங்களை பஞ்சுபோல் தட்டி எண்ணெயில் போட்டு அடுப்பேற்றி சிறுதீயாக கடுகு திரல் பதமாகக் காய்ச்சி வடித்தெடுத்துக் கொள்ளவும்.

உபயோகம் :- காலை வேளையில் ஒரு சிறு கரண்டி வீதம் 3 முதல் 5 நாள் வரை உள்ளுக்கு சாப்பிட கொடுக்கவும்.

குறிப்பு :- மேற்படி எண்ணை காய்ச்சி வடிகட்டிய பின் இருக்கும் கடுகையெடுத்து அத்துடன் கெந்தகம் சேர்த்து அரைத்து கரப்பான் ரிணத்தில் பூச ரிணம் சீக்கிரத்தில் ஆறிவிடும் கால்கடுவன் கைகடுவன் காதுகடுவன் அரைகடுவன் வெப்புகடுவன் மண்டை கரப்பான் முதலிய சகல கரப்பான் ரோகங்களும் குணம் செய்யும் மற்றும் பாலர்களுக்கு ஏற்படும் சச்சரரோகமும் குணம் செய்யும்.

சந்திரா லேபம்

கந்தகம் பலம் 1. சுண்ணாம்பு பலம் 1. கிளிசரின் அல்லது மஞ்சள் மெழுகு பலம் 2. இவைகளைக் கல்வத்திலிட்டு அரைத்தெடுத்து வைத்துக்கொண்டு புண்புரை அழுகியபுண் கட்டி, சொறி சிரங்கு முதலியவற்றுக்கு பூச குணம்செய்யும் ஆண்களுக்கு மலரில் ஏற்படும் கொருக்கை புண்ணிற்கு மேற்கூறப்பட்ட மருந்தில் சிறிது சுத்தி செய்த பூரம் கலந்து அரைத்து அத்துடன் சந்தன அத்தர் கலந்து பூச உடன் குணம் தரும்.

நாரத்தை லேகியம்

நாரத்தம் பழச்சாறுபடி 1. இஞ்சிச்சாறு படி ½ நாட்டுச் சர்க்கரை 1½ வீசை. சுக்கு. மிளகு. திப்பிலி. கடுக்காய் தோல். நெல்லிவத்தல் தான்றிக்காய் தோல். இலவங்கப்பத்திரி. இலவங்கப்பட்டை. ஏலரிசி. இந்துப்பு. வகைக்கு 2. சீரகம் பலம் 6 நெய்பலம் 12. தேன்பலம் 5.

செய்பாகம் :- இரண்டு வகை சாற்றுடன் கல்மண் நீக்கிய சர்க்கரையை சேர்த்து பாகுகாய்ச்சி இரக்கி இதர 11 வகை சாமான்களை இடித்து சலித்துச் சேர்த்துக் கிண்டியபின் நெய்விட்டுக் கிளரியபின் தேன் விட்டுப் பத்திரப்படுத்தவும்

உபயோகம் :- அளவுப்படி காலை மாலை 1 மண்டலம் சாப்பிட்டு வர பித்த வயிற்றுவலி (குன்மம்) நெஞ்செரிச்சல். புளித்தேப்பம். அசீரணம். வாந்தி தாபசுரம். பித்தம். உட்சூடு மயக்கம். கிறுகிறுப்பு. வாயு. தலைவ்லி. அக்கினிமந்தம் மலக்கட்டு நீர்க்கட்டு எப்பொழுதும் உடலிலிருக்கும் தேககாந்தல் முதலியன குணமாகும்.

மூலக்குடோரி லேகியம்

பிஞ்சு கடுக்காய் பலம் 5 இதனை ஒரு சட்டியிலிட்டு சுத்திமான சித்தாமணக்கெண்ணெய் விட்டு வருத்தெடுத்து இடித்து தூள் செய்து 5 பலம் பனைவெல்லம் 2 பலம் பனங்கல்கண்டு

பொடித்து கலவத்து வடிகட்டி தந்து பதம் வர காய்ச்சி அதற்கேற்றபடி சூரணத்தை யிட்டுக் கிண்டி அதில் சுத்தமான சித்தாமணக்கெண்ணைவிட்டு பிசரி பஞ்சாமிர்தம் பதத்தில் பெடுத்து பதனப்படுத்தவும்.

உபயோகம் :- காலை மாலை ஒரு டீஸ்பூன் அளவு காலம் 40 வரை சுகமாக மலம் இரங்கும் மூலசம்மந்தமான முளைகளையும் வீக்கம வடியும் ரணம் ஆறும் எரிச்சல் குணமாகும்

இருமலுக்கு லேகியம்

மிளகு பலம் 1. திப்பிலி பலம் 1. இவை இரண்டையும் சூரணித்து இரண்டு பலம் பசும் வெண்ணெயை ஒரு சட்டியில் போட்டு உருக்கி வெண்ணெய் உருகிய உடன் மேற்படி சூரணத்தையும் 2 பலம் சீனா கற்கண்டையும் போட்டு சிவந்து வரும்வரைக்கும் கிளரி லேகியமாக்கி வைத்துக் கொள்ளவும்.

உபயோகம் :- காலை மாலை கழற்சிக்காய் வீதம் காலம் முவை வரைக்கு இருமல். கோழையோடு கூடிய இருமல் இவைகளை குணம் செய்யும்.

சித்தர் வல்லாரை லேகியம்

வல்லாரையைக் கொண்டுவந்து பசுவின் பால் அவித்து உலர்த்தி இடித்து வடிகட்டிய சூரணம் பலம் 10. கிராம்பு. ஏலம். சாதிக்காய் சாதிபத்திரி மாசிக்காய் தாளிசபத்திரி தான்றிக்காய் பெருவிலாமிச்சை வகைக்கு பலம். பனைவெல்லம் வீசை 1. நெய் பலம் 15 தேன்பலம் 5. இவைகளை லேகிய முறைப்படி வெல்லத்தை தண்ணீர்விட்டுக் கரைத்து பாகுகாய்ச்சி அதில் இரக்கி நெய்தேன் விட்டுக் கிளரி எடுத்துப் பத்திரபடுத்தவும்.

தீரும் நோய்கள் :- மூலச்சூடு. மேககாங்கை உடல் எரிவு. குடல் புண். உஷ்ணவாயு. மயக்கம். நீர்தாமரை. புண்கருங் குஷ்டம் வெள்ளை யாவும் குணமாகும்.

சுகபேதி லேகியம்.

சிமை நிலாவிரை பலம் 5. திராட்சை பலம் 3 பாதாம்பருப்பு பலம் 1. பிஸ்தாபருப்பு பலம் 1. தேன் பலம் 3.

செய்முறை :- முதலிய சீமை நிலாவிரையை இடித்து சலித்தெடுத்து மற்றவைகளையும் ஒன்றின்பின் ஒன்றாக சேர்த்தரைத்து பின்தேன் விட்டு அரைத்து அத்துடன் 24 பலம் ரோஜாப்பூ குல்கந்தை சேர்த்து நன்றாக கலந்து ஜாடியில் வைத்துக் கொண்டு காலை காலை சாப்பிட்டு வரவும். மலம் நீர் நன்றாக சுகமாக வெளியாக்கும் உஷ்ணம் தணியும்.

சுக்கு லேகியம்

மேல்தோல் நீக்கிய சுக்கு பலம் 25. இதனை நன்றாக தட்டி 2½ படி தண்ணீர்விட்டு எட்டில் ஒரு பாகமாக வற்றகாய்ச்சி வடிகட்டி எடுத்த கியாழத்தில் பனை வெல்லம் பலம் 2½ ஓமம்படி ¼. கரிவேப்பிலை ½ பலம் இடித்து சூரணித்து போட்டு நெய் அரைக்கால் படி சேர்த்து லேகியமாக கிளரி புன்னைக்காய் அளவு காலை மாலை சாப்பிட்டுவர கிராணி. மூலம் சகலவாய்வும் மாந்தம் புளித்தேப்பம் முதலியவைகள் குணமாகும்.

நம் நாட்டு வைத்தியம்
இரண்டு பாகங்கள் முற்றிற்று.

◆◆◆◆◆◆◆

சீனிவாச அச்சகம். சூளை. சென்னை - 112.

சுவாச குடோரி தைலம் - P. 326.
தூணைவலி நிவாரணி - P. 220.
கூனகுலிங்க கற்பூரமாத்திரை - P. 354.
சஞ்சீவி அமிர்தமாத்திரை —
லிங்க மாத்திரை pg: 216.